9

# சித்தாந்தம்

மலர். 9

இதழ். 7. முதல் 1௨ வரை

1936

JL
R673
1.36.9.7-12
162332

# சமாஜ அறிக்கைகள்

1. சமாஜத்தின் ஆனிமாதக் கூட்டம் மிகச் சிறப்பாகத் திருக்கழுக்குன்றத்தில் சங்குதீர்த்த வடகரையிலுள்ள இரத்தின செட்டியார் சத்திரத்தில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையில் 5-7-36-ல் நடைபெற்றது. திருவாளர்கள் - காவித்தண்டலம் வேதாசல முதலியார், C. M. எதிராஜனார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, தானப்ப முதலியார் ஆகிய அன்பர்கள் முறையே பிறவிப் பயன், அன்பு, சைவசமயசாரம், வளர்ச்சி முறைகள் என்பனபற்றிப் பேசினார்கள். மூன்று பேட்டையினரும் திரு. வே. நடேச முதலியாரும் திருமறை ஓதினர். தலைவர் முடிபுரையில் ஒரு கிளைச்சபை நிறுவவேண்டுமென்று வற்புறுத்தினர். திரு. K. C. துரைசுவாமி அனைவர்க்கும் நன்றி கூறினார். இக்கூட்டத்தைச் செம்மையாக நடத்திக்கொடுத்த கானகோயில் பேட்டை திரு. தி. கா. மு. முத்து முனியப்ப முதலியார், தேசுமுகிப்பேட்டை திரு. K. C. துரைசாமி முதலியார் ஆகிய இருவருக்கும் நமது சமாஜத்தின் நன்றி பெரிதும் உரித்தாகின்றது.

2. இச்சமாஜத்தின் ஆடிமாதக் கூட்டம் கொச்சி ராஜ்யத்திலுள்ள திரு அஞ்சைக்களத்தில் சுந்தரர் திருநாளாகிய சுத்தமாம் சுவாதிநாளில் (26-7-1936) நடைபெறும். இந்தத் தலம் செல்வதற்குச் சென்னையிலிருந்து புறப்படும் West Coast Mail வண்டியிலேறி 360-வது மைலில் சோரனூர் ஜங்ஷனில் மாறிக் கொச்சி ரயிலிலேறி 395-வது மைலிலுள்ள இருஞாலக்கடை ஸ்டேஷனில் இறங்கிப் போகவேண்டும். கோயன்புத்தூரிலிருந்து திருவாளர்கள் C. K. சுப்பிரமணிய முதலியார், C. M. இராமச்சந்திர செட்டியார் முதலிய நண்பர்களும், சென்னையிலிருந்து திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை முதலிய பலரும் இக்கூட்டத்தை நடத்திவைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.

---

## மதிப்புரை

**திருக்கைலாய ஞானவுலாவும் விருத்தியுரையும் :—** திருக்கைலாய ஞானவுலா சேரமான்பெருமாள் நாயனார் இயற்றியருளியது; பதினொராந் திருமுறையிலுள்ளது; உலகிற்குத் தலைவனாய சிவபெருமான் உலாவருஞ் சிறப்பை எடுத்துரைப்பது; அவனை அடைய ஏங்கியிருக்கும் உயிர்கள் அவ்வுலாச் சிறப்பைக் கண்டு மகிழ்ந்து மயங்குந் தன்மையைப் படம் பிடித்தாற்போல காட்டுவது. பதினொராந் திருமுறையிலுள்ள நூல்கள் பல மிகுதியும் கையாளப்படாமைக்கு அவற்றிற்குத் தக்க உரையின்மையும் ஒரு காரணமாம். இதுபோது அக்குறையை நீக்கவேண்டி, சைவத் திருவாளர் பிரசங்க பூஷணம் பு. பா. இரத்தினசபாபதி நாயகர் அவர்கள் இஞ்ஞானவுலாவிற்குப் பொருந்திய உரையொன்று கண்டது போற்றத்தக்கது. அவர் இந்நூலின் உட்கிடை முதலியவற்றை முகவுரையில் விளக்கி

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| மலர் கூ | தாது ஆண்டு ஆடித் திங்கள் 1936௵ ஜூலை௴ | இதழ் எ |
| --- | --- | --- |

## "நாமார்க்குங் குடியல்லோம்"

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
'நவசக்தி'யில் எழுதியது]

"நாமார்க்குங் குடியல்லோம்" என்பது அப்பர் திருவாக்கு. இத்திருப்பாடல் 'நவசக்தி'யின் தலைப்பில் அணிபெற விளங்குவது; தமிழ் நாட்டின் நான்கு பக்கங்களிலும் ஓதப்பெறுவது. "நாமார்க்குங் குடியல்லோம்" என்று ஓதல் எளிது; அதன்படி நடத்தல் அரிது. "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ் - சொல்லிய வண்ணஞ் செயல்" எனவரூஉந் திருக்குறளை நோக்குக. "நாமார்க்குங் குடியல்லோம்' என்று அருளிய பெரியார் தாம் அருளியவாறே நடந்துங் காட்டினார். அதனை அவர்தம் வரலாற்றிற் காண்க.

* * *

"நாமார்க்குங் குடியல்லோம்" என்பதில் செறிந்து கிடக்கின்ற பொருள்கள் பல. பெரியோர் திருவாக்குகளில் பல விதப் பொருள்கள் செறிதல் இயல்பு. அவைகளை உணர

முயல்வது அறிவுடைமை. "நாமார்க்குங் குடியல்லோம்" என்னுந் திருவாக்கில் மிளிரும் பொருள்களையெல்லாம் விளக்குதற்கு யான் அருகனல்லன். எனது சிற்றறிவிற்கு இவ்வேளையில் தோன்றுவதைச் சுருங்கச் சொல்ல முயல்கிறேன். பாட்டில் செறிந்துள்ள பொருள்களை இரு விதமாகத் தொகுத்துக் கொள்ளலாம். ஒன்று அகப்பொருள்; மற்றொன்று புறப்பொருள்.

* * *

மனிதப் பிறவிக்கு உயிரணியாயிருப்பது உரிமை. அவ்வுரிமையைப் பாதுகாக்க வேண்டுவது ஒவ்வொருவருடைய கடமையாகும். உரிமை காவாத பிறவி பிறவியாகாது. உரிமைக்காக உலகில் எவ்வளவு போராட்டங்கள் நடைபெறுகின்றன! அவ்வளவு போராட்டங்கள் நடைபெற்றும் உலகம் உரிமை இன்பம் துய்க்கிறதா என்பது கூர்ந்து சிந்திக்கற்பாலது. உரிமை இன்பந் துய்க்கும் நிலைமையை இன்னும் உலகம் அடையவில்லை. இதற்குக் கவலையைச் சிறந்த காரணமாகக் கூறலாம். 'உரிமை பெற்ற நாடுகள்' என்று சொல்லப்படும் நாடுகளிலாதல் கவலை இல்லாமலிருக்கிறதா? இல்லையே! அவைகளும் கவலைக்கு இரையாகியே வருகின்றன. ஐரோப்பிய அமெரிக்கத் தேசங்களெல்லாம் 'சுயராஜ்யம்' பெற்றன என்று உலகங் கருதுகிறது. அவ்விடங்களிலாதல் கவலையில்லாமலிருக்கிறதா? இதாலி அபிஸினியாவைப்பற்றிய நாள்முதல் மேல்நாடு உற்றுவருங் கவலைக்கோர் அளவுமுண்டோ?

* * *

இன்பத்துக்கும் துன்பத்துக்கும் மனிதனே காரணன். மனிதன் இவ்வுலகிலேயே எந்நாளும் இன்பத்தை நுகர்ந்து வாழ்தல்கூடும். இஃது இயலாத தொன்று என்று பலர் நினைக்கலாம். அவ்வாறு நினைப்பது தவறு. "நாமார்க்குங்



குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை இல்லோம் - ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று பாடியவரும் மனிதரே. அவர் இவ்வுலகிலிருந்தே இப்பாட்டை அருளினார். அவர் இவ்வாறு இறுமாந்து கூறுதற்குத் தம்மைப் பண்படுத்திக்கொண்டார். அதனால் அவர் பெரியவரானார்.

* * *

எந்நாளும் இன்பமாய் வாழ்தற்கு என் செய்தல் வேண்டும்? முதலாவது மனிதன் தன்பாலுள்ள அகக்குற்றங்களைக் களைய முயலல் வேண்டும். அகக்குற்றங்களின் பரிணாமமே புறக்குற்றங்கள். அகமே புறம். அகம் தூய்மையுற்றால் புறந்தானே தூய்மையுறும்.

* * *

மனிதப் பிறவி எல்லாப் பிறவிகளினும் விழுமியது. மற்றப் பிறவிகளில் விளங்காத ஓர் அறிவு மனிதப் பிறவியில் விளங்குகிறது. அதுவே பகுத்தறிவு என்பது. அவ்வறிவு விளங்குதற்குரிய வாய்ப்பு மனிதப் பிறவிக்கு உண்டு. அவ்வறிவை மேன்மேலும் வளர்த்து வளர்த்து, அதன் மயமாக மனிதன் ஆதல்வேண்டும். அப்பேரறிவு வளர வளர மனிதனிடத்துள்ள அகக்குற்றங்களும் முறைமுறையே தேய்ந்து தேய்ந்து போகும். மனிதன், தன்பால் விளங்கியுள்ள பேரறிவென்னும் தெய்வ அறிவை வளர்க்க முயல்கிறானா? அல்லது அதைத் தேய்க்க முயல்கிறானா?

* * *

மனிதன் விலங்குக்கும் தெய்வத்துக்கும் இடைப்பட்டவன். அவனிடத்தில் விலங்கியல்பும் உண்டு; தெய்வ இயல்பும் உண்டு. தெய்வ இயல்பைப் பெருக்குதற்குத் துணை புரிவதே பகுத்தறிவு என்பது. மனிதனிடத்தில் அழுக்காறு,

பொறாமை முதலிய அகக்குற்றமற்றவர் பிறரை வேறாகக்கருதார்; பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கொள்வர்; எவர்க்குந் தீங்கு நினையார்; செய்யார். பிறர் கொலை அவருக்குத் தங்கொலையாகத் தோன்றும். தம்முயிரில் விளங்கும் ஈசனே பிறவுயிரில் விளங்குதலும் அவருக்குப் புலனாகும். அவர் எவர்க்கும் எதற்கும் அஞ்சாதவர்; எவர்க்கும் அடிமையாகாத பெருவாழ்வினர். அவர் தம் பெருமை பேச ஒண்ணாதது. "பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார் - ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார் - அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார் - இருமையுங் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய் * * *" என வரூஉம் பெரிய புராணப் பாடலைப் பார்க்க.

* * *

அகக்குற்றங்களைந்து ஆருயிர்க்கு அன்பராய்வாழ்வாரே சத்தியாக்கிரகிகள் எனப்படுவர். பிரகலாதன், அப்பர், கிறிஸ்து முதலிய பெரியோர் வரலாற்றைக் கூர்ந்து ஆராய்க. மகாத்மா காந்தி இப்பெருந் துறையில் நின்றே இந்தியா வாயிலாக உலகுக்கு நலஞ்செய விரும்புகிறார். அவர் தம் விருப்பத்துக்கு உண்மைவழியில் துணைபோக இந்தியா இன்னும் முன்வர வில்லை. காந்தியடிகள் சலிப்பின்றித் தமது தொண்டை ஆற்றி வருகிறார். என்றாதல் அவர் தங்கொள்கை ஆக்கம் பெற்றேதீரும். இந்தியா சத்தியத்துக்கு உரியதே. ஆனால் இப்பொழுது அது தன்னிலையினின்றும் பிறழ்ந்து வீழ்ந்து கிடக்கிறது. இதற்குக் காரணம் மேல்நாட்டுக் கூட்டுறவேயாகும்.

* * *

மேல் நாட்டிலிருப்பது 'கிறிஸ்துவராஜ்யம்' என்றுசொல்லப்படுகிறது. கிறிஸ்து ராஜ்யம் அங்கே இருக்கிறதா? இன்



னும் கிறிஸ்து ராஜ்யம் அங்கே வரவில்லை. கிறிஸ்துவின் பெயரால் அரசுகளிருக்கின்றன; கோயில்களிருக்கின்றன; சபைகளிருக்கின்றன; பாதிரிமார் இருக்கிறார்; கோடிக் கணக்கில் பைபில் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. கிறிஸ்து நாமம் முழங்கப்படுகிறது. இவ்வளவிருந்தும் கிறிஸ்து ராஜ்யம் ஆங்கில்லை என்று சொல்லப் பெரிதும் வருந்துகிறேன்.

* * *

கிறிஸ்துவச் சாம்ராஜ்யங்களுக்குத் தலை நகர் எது? ரோமாபுரி. ரோமாபுரி எங்கே இருக்கிறது? இதாலியிலிருக்கிறது. இதாலி எந்நிலையிலிருக்கிறது? சொல்லவும் வேண்டுமோ? அங்கே கிறிஸ்துவத் தலைவர் போப் இருக்கிறார்; கிறிஸ்துவ மன்னர் இருக்கிறார்; கிறிஸ்துவ முஸோலினி இருக்கிறார். இதாலி, மற்றொரு கிறிஸ்துவ ராஜ்யமாகிய அபிஸினியாவை வதைத்து வதைத்து வேட்டையாடி யாடியன்றோ பிடித்திருக்கிறது? இதுவரை நடந்த யுத்தங்களுக்குள் இதாலி அபிஸினியாவில் நிகழ்த்திய யுத்தமே அநாகரிகமானது என்று கூறலாம். இத்தாலி மூர்க்க மயமாயிருக்கிறது. இங்ஙனமாக, இதாலியில் கிறிஸ்துவ ராஜ்யம் எங்ஙனம் இருக்கும்?

* * *

கிறிஸ்து பெருமான் எதைப் போதித்தார்? எதைச் சாதித்தார்? அன்பை - சகோதர நேயத்தை - சாமாதானத்தை அல்லவோ அவர் போதித்தார்? சாதித்தார்? கிறிஸ்துவின் ஜெப மொழியை நோக்குவோம். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்குவேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளி

களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை ரக்ஷித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும், என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்''—இந்த ஜெபம் நாடோறும் மேல்நாடு முழுவதுஞ் செய்யப்படுகிறது. ஆனால் அங்கே நாளுக்கு நாள் போர்க் கருவிகளும், போரிடுதலும், போர் முழக்கமும் பெருகிக்கொண்டே வருகின்றன. அங்கே கிரிஸ்துவ ராஜ்யம் எங்ஙனம் கால்கொள்ளும்? பயங்கர யுத்த ராஜ்யம் கால் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை.

* * *

கிறிஸ்து மலை மீது செய்த பிரசங்கத்திலுள்ள ஜெபமொழியின் பெற்றியை என்னென்று கூறுவேன்! அம்மொழியி லில்லாதது என்ன? அதில் எல்லா மிருக்கின்றன; சகல சமயக் கருத்துகளு மிருக்கின்றன; சகல வேதக் கருத்துக்களு மிருக்கின்றன; அன்பு வாழ்வுக்குரிய எல்லாம் அதன்கண் மிளிர்கின்றன. ''உம்முடைய ராஜ்யம் வருவதாக'' என்பது சிறப்பாகக் கவனிக்கத் தக்கது. எங்கே தெய்வ ராஜ்யம்? எங்கே கிறிஸ்து ராஜ்யம்? கருணை ராஜ்யம் வாராமைக்குக் காரணம் என்ன? ''எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்'' என்னும் உபதேசத்தை மேல்நாட்டு ராஜ்யங்கள் கைவிட்டதேயாகும். இயந்திரப் பெருக்கிலும் - தொழிற்சாலை நெருக்கிலும்-செல்வச் செருக்கிலும் மூழ்கிக் கிடக்கும் ராஜ்யங்கள் கிறிஸ்துவின் சமதர்ம மொழிக்குச் செவி சாய்க்குமோ? கிறிஸ்துவின் செம்மொழி - அழுக்காறு, அவா, வெகுளி முதலிய அகக் குற்றங்களைக் களைய வல்லது; ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்று அன்பில் இறுமாக்கச் செய்வது; சமதர்மத்துக்கு ஆக்கந் தேடுவது.



'' தீமையை எதிர்த்து நில்லாதே '' என்பது கிறிஸ்துவின் திருவாக்குகளுள் ஒன்று. இது மக்கள் வாழ்வில் ஒன்றினால் உலகம் ஆனந்த மயமாகும்; எங்குங் கிறிஸ்துவ ராஜ்யம் - எந்நாளும் துன்பமில்லாத இன்ப மயமான அப்பர் ராஜ்யம் - சத்தியாக்கிரகக் காந்தி ராஜ்யம் மலரும். இந்த ராஜ்யத்தை உண்டாக்கவே அறிஞர் முயலல் வேண்டும். இதற்கு என்செய்வது? '' தீமையை எதிர்த்து நில்லாதே '' என்னும் பொய்யாமொழியை ஒவ்வொருவர்வாழ்விலும் நுழையச் செய்தல் வேண்டும். அம்மொழி வாழ்வில் நுழைந்து ஒன்றினால் அகக் குற்றங்களின் எழுச்சிக்கு இடமிராது. அகக் குற்றங்கள் ஒடுங்கும். ஆகவே கிறிஸ்துவின் உபதேசம் ஒவ்வொரு குழந்தைக்கும் போதிக்கப் பெறுதல் வேண்டும். சத்தியாக்கிரகம், கொல்லாமை, சகோதர நேயம், எல்லா உயிரிலும் ஈசன் இருக்கும் உண்மை, பிறர்க்குத் தீங்கிழைப்பது தமக்குத் தீங்கிழைப்பது என்னும் நுட்பம், பிறவுயிர்கள் தம்முறுப்பு என்னும் உண்மை முதலிய சீரிய தர்மங்கள் உயிர்கட்குக் குழந்தைப் பருவத்திலேயே போதிக்கப் பெற்றால், உலகம் நன்னிலை எய்தல் ஒருதலை. இம்முறையில் குழந்தைகள் பயிற்சி பெறின், அவர்கள் உற்றவயதில் சேனைகளில் சேரவோ, பிறவுயிர்களைச் சுட்டுக் கொல்லவோ, கொலை அரசுகளுக்குத் துணை நிற்கவோ ஒருப்பட மாட்டார்கள். இந்நிலை மன்பதையில் நேர்ந்தால் உலகில் அன்பு ராஜ்யம் மலர்ந்தே தீரும்.

* * *

அகக் குற்றங்களைக் களையக் களையச் சகோதர நேயம் பெருகுதல் இயல்பு. இதற்குப் போதனை அவசியம். போதனையுடன் சாதனையும்வேண்டும். என்ன சாதனை செய்வது? எவர்க்குங்குடியாகாது, பொறாமைமுதலிய குற்றங்கட்கு ஆளாகாது, இயல்பிலேயே அன்புவண்ணமாயுள்ள இறைவனைத்தியானிப்

துவாவும், பிரணவத்திலே நிவர்த்தியாதி கலைகளும் ஆக அத்துவாக்கள் ஆறும், சதாசிவதேவர்க்குத் திருமேனியாகவும், சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியஞ் செய்து கிரியாபாவத்துக்குத் தெய்வமாக இருக்கவும் பெறும்.

சதாசிவதேவர் திருமேனியானதற்குப் பிரமாணம்:—

அவயவங் கலைக ளாகு மாயின புவன ரோமஞ்
சுவையுடன் வன்னந் தொக்குச் சோரிமந் திரமே யாகுந்
தவபத மிரச மாகுந் தத்துவந் தாது வாகுஞ்
சிவமுயிர் சதாசி வர்க்குச் சிறந்ததோ ருருப்புத் தானே.

[இனி] பஞ்சகலைகளும் புவனங்களும் நின்ற முறைமை [யாவது]:—குதத்துக்கும் குய்யத்துக்கும் நடு முக்கோணம், நிறம் வெள்ளை, அதுக்கு நடுவே அசபை மின்னொளி, பிரணவம் சொரிதழல் நாவியளவும் நிற்கும். அதற்கு மந்திரம் அ. ஆதாரம் தழற்கொழுந்து, வன்னம் தாது, தெய்வம் பிரமன், சத்தி சரசோதி, வர்ணம் பீதவர்ணம், ஆதாரம் பிருதுவி, வேதம் இருக்குவேதம், ரிஷி வசிட்டன், திசை மேற்கு, திருமுகம் சத்தியோசாதம், ஆயுதம் வச்சிரம், கலை நிவர்த்திகலை, குணம் கடினம், சக்கரம் சதுரம், பிரகாசம் தூலாக்கினி, கரணம் மனம், வாயு பிராணன், இந்திரியம் கந்தம், பீஜாட்சரம் லகாரம், மாத்திரை ௩, மந்திரம் ௨, *வன்னம் ௪, தத்துவம் ௬, புவனம் ௧௦௮, பதம் ௨௮ இவைஐந்தும், நிவர்த்திகலையிலே ஒடுங்கும். இவ்விடம் பிரமபதம், இப்படியறிந்து சொல்லுமளவிலே தாபரம் என்கின்ற சனனமும் மாறும்.

*வன்னபத மந்திரங்களில் இங்குக் கூறப்பட்டதற்கும் அகோர சிவாசாரியார் பத்ததிக்கும் மாறுபாடு இருப்பினும் பஞ்சகலைகளும் சேர்ந்து வருப்போது வன்னபத மந்திர முதலானவை சரிக்கட்டி விடுகின்றன.



சாக்கர மெனப்பெறும் பிரமபதம் சாலோகம் தரும். அது ஈசனுலகத் திருக்கை.*

இப்பால் சுவாதிட்டானம் பிரமபதத்துக்குமேல் அ விரல் நிற்கும். அட்சரம் உகாரம், பிரகாசம் வெண்மை, வன்னம் இரசம், தெய்வம் விட்டுணு; சத்தி இலக்குமி, வர்ணம் சுப்ரவர்ணம், ஆதாரம் அப்பு ; வேதம் எசுர்வேதம், ரிஷி விசுவாமித்திரன், திசை வடக்கு, திருமுகம் வாமம், ஆயுதம் பாசுபதம், கலை பிரதிட்டாகலை, குணம் குளிர்ச்சி, சக்கரம் அர்த்தசந்திரன், பிரகாசம் வாரொளி, கரணம் புத்தி, வாயு அபானன், இந்திரியம் இரதம், பீசாக்கரம் வகாரம், மாத்திரை ௨., மந்திரம் ௨, பதம் ௨௧ வன்னம் ௬ புவனம் ௫௬ தத்துவம் ௭ இவை ஐந்தும் பிரதிட்டாதி கலையிலொடுங்கும். இவ்விடம் விண்டு பதம். ஊர்வன என்கின்ற சனனம் மாறும், சொப்பனவவஸ்தையும் மாறும். மாளய மென்கின்ற நலமும் மாறும். விண்டுபத மடைவார்க்குச் சாமீபம் வரும். சாமீபமாவது ஈசனிருக்கை.

விஷ்ணுபதத்துக்குமேல் நாதத்தடியனவாய் நிற்கும் மணிபூரகம். இது மேல் நாலங்குலம் நிற்கும். அட்சரம் மகாரம், பிரகாசம் உபாய மின்னொளி, வன்னம் சோரி, தெய்வம் உருத்திரன், சத்தி கவுரி, வர்ணம் இரத்தவர்ணம், ஆதாரம் தேயு, வேதம் சாமவேதம், ரிஷி மேதாக்கினி மகாருஷி, திசை தெற்கு, திருமுகம் அகோரம், ஆயுதம் வாள், கலை வித்தியாகலை, குணம் உட்டினம், சக்கரம் திரிகோணம், கரணம் அகங்காரம், வாயு வியானன், இந்திரியம் ரூபம், பீசாக்கரம் ரகாரம், மாத்திரை ௧, மந்திரம் ௨-பதம் ௨௦ வன்னம் ௧௦ புவனம் ௨௭ தத்துவம் ௫ இவையைந்தும் வித்தியா கலையிலே யொடுங்கும். இவ்விடம் உருத்திரபதம். சுழுத்திய

*இங்குக்கூறிய மூலாதார வொடுக்கத்தைப் போன்று பிராசாத தீபத்தில் 2 - 5 செய்யுளிலும் ஒருவாறு கூறப்பட்டுளது.

வத்தை விளங்கப்பெறும். இதிற்செல்லு மளவிற் பறப்பன வென்கின்ற சனனம் மாறும். ஆணவமலமும் மாறும். சாரூபம்வரும். சாரூபமாவது சிவனுடைய ரூபம் பெறுகை.

இதற்குமேற் புருவமளவாக நிற்கும் அநாகதம், அட்சரம் விந்து, பிரகாசம் விளக்கு நிற்குமொளி, வன்னம் தொக்கு, தெய்வம் மகேசுரன், சத்தி அம்பிகை, வர்ணம் கறுப்பு, ஆதாரம் வாயு, வேதம் அதர்வணம், ரிஷி.............. திசை கிழக்கு, திருமுகம் தத்புருடம், ஆயுதம் ஷடபிந்து, கலை சாந்தி, குணம் சலித்தல், சக்கரம் அறுகோணம், கரணம் சித்தம், வாயு உதானன், இந்திரியம் பரிசம், பீசாக்கரம் யகாரம், மாத்திரை ஒ, மந்திரம் உ பதம் கக வன்னம் கஉ புவனம் கஅ தத்துவம் உ இவை யைந்தும் சாந்திகலையி லொடுங்கும். இவ்விடம் மகேசுரபதம். அதிலே செல்லுமளவில் இருப்பனவென்கின்ற சனனம் மாறும். திரோதான மலமும் மாறும். பதம் சாயுச்சியம். துரியாவஸ்தையும் மாறும்.

இதன்மேல் புருவமத்தியின் மேல் மூன்றங்குலவளவும் விசுத்தி நிற்கும். அட்சரம் நாதம், வன்னம் ரோமம், தெய்வம் சதாசிவம், சத்தி மனோன்மணி, வர்ணம் சிதவர்ணம், ஆதாரம் ஆகாசம், வேதம் இதிகாச புராணம், ரிஷி பாரத்துவாசன், திசை ஊர்த்துவம், திருமுகம் ஈசானம், ஆயுதம் திரிசூலம், கலை சாந்தியதீதம், குணம் சூனியம், சக்கரம் வட்டம், பிரகாசம் வாளொளி, கரணம் பிருகிருதி, வாயு சமானன், இந்திரியம் சத்தம், பீசாக்கரம் அகாரம், மாதிரை $\frac{1}{4}$, மந்திரம் ங பதம் க வன்னம் ககூ புவனம் கரு தத்துவம் ங இவையைந்தும் சாந்தியதீத கலையில் ஒடுங்கும்.

இதன்மேல் மூவிரல் நிற்கும் அக்கினிப் பிரகாசம் புகை, உச விரல் நிற்கும் நாதம், பிரகாசம் மாணிக்கவொளி, மாத்திரை ஒருமாமுக்காணி, பிரமரந்திர மள



வாக நிற்கும் நாதாந்தம், பிரகாசம் மின்னொளி, சத்தி நிட்களம், மாத்திரை நாலுமா. இதன்மேல் நாதாந்தம் நூறாயிரங்கோடி யாதித்த பிரகாசம். மாத்திரை அரைக்காணிமுந்திரி, சத்தி நூறாயிரங்கோடி யாதித்த வட்டத்தொளி. இதன் மேல் மூவிரல் நிற்கும் வியாபினி, முத்திரை தங்கத்திலொளி, மாத்திரை யரைக்காணிமுந்திரி. இதன்மேல் மாத்திரை முந்திரிக்கு இதன்மேல் உயிர் நிற்கும். சமனை நூறாயிரங்கோடி சந்திரோதயம். இதன்மேற் பரமசிவம் ஒருவிரல்நிற்கும். பிரகாசம் இன்னதென்று சொல்லப் படாப் பேரொளியால் நிவர்த்திக்குக் கீழ்மேல் சூழவெரிக்கும் ஒளிபோல நிறைந்து போக்குவரவின்றி, புகுவரை அழிவின்றி யாக்க மின்றி அணுவிலணுவாய் அறிவிலரிதாய்க் கண்டமுந்தானாய் நிற்கும். அது அறிக.

# தமிழர் மத வளர்ச்சி

[வித்வான்: அ. மு. பரமசிவானந்தம்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

கி. பி. மூன்றாவது நூற்றாண்டின் இறுதியில் தமிழகமானது யோக மார்க்கத்தில் பழக ஆரம்பித்தது. சிதம்பரத்தில் பதஞ்சலி என்னும் முனிவர் இருந்தார். அவர் பாணினி இலக்கணத்திற்கு உரையும், வைத்திய நூல் ஒன்றும், யோகத்திற்குத் தக்க நூல் ஒன்றும், நடராஜனைத் தோத்திரித்தற்குரிய இனிய நூல் ஒன்றும் இயற்றினார் என்று கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. அவர் நூல் ஒன்றிற்குப் பதஞ்சலி வியாகரணம் என்ற பெயர் இன்றளவும் வழக்கில் இருக்கின்றது. அவர் ஒரு நாகர் என்றும் சஸ்சநாகருடைய பற்றற்ற தன்மையுள்ள வழியிற் றோன்றினாரென்றும் சொல்

1936 - ஜூலை.

லப்படுகின்றது. இதிலிருந்து யோகத்தின் சொல்லும் செயலும் பழைய நாகர் மத்தியில் பரவி இருந்தனவென்று தெரிகின்றது. சிதம்பரத்தில் இவருக்கு முன் வந்த வியாக்கிரபாதர் என்னும் ஒரு முனிவரும் இவருடன் சேர்த்து எண்ணப்படுகின்றார். இவர், தம் பாதங்களில் கண்களை உடையவராகக் கருதப்படுகின்றார். புலியினுடைய பாதத்தை உடையவர் என்றும் அதனால் தான் வியாக்கிரபாதர் என்ற காரணப் பெயர் பெற்றார் என்றும் கூறுப. நடராஜருடைய விநோத நடனத்தை முதலில் இவ்விரு தபசிகளுமே காண வேண்டியவர் எனக் கூறப்படுகின்றது. இது சைவ மதத்தினுடைய உண்மை நிலையை அடைதற்கு யோகமும் நியாயமும் இரு கண்கள் என்பதற்கு ஒரு குறியாக இருக்கலாம். எனினும் இவ்விருவருடைய சரிதங்கள் இன்னும் ஆராய்ச்சிக்கு உரியவைகளாகவே இருக்கின்றனவாதலால் அவைகளை நான் இப்பொழுது மறுப்பதாக எண்ணவில்லை. ஆதிகாலந் தொட்டு மறை பொருளாக இருந்த ஆகம பூசை இக்காலத்தில் மறுபடியும் தோன்ற ஆரம்பித்தது. அதுவும் வடநாட்டிலிருந்து வந்த ஒருவிதத் தன்மையினாலேயே ஒளிவிட்டது. யானை முகமுள்ள விநாயகக் கடவுளுடைய பிரவணரூபத் தோத்திரமும் யோகத்தில் கண்டு கொள்ளப்பட்டது.

சித்தர்களும் தவசிகளும் யோகத்தையும் தந்திரங்களையும் அனுசரித்து வந்தனர்.

இக்காலத்திற்கு ஒப்ப (சற்று ஏறக்குறைய) காரைக்காலம்மையார் ஒரு சிறந்த நடன மறைப் பொருளை விளக்கிக் காட்ட ஆதாரமாக இருந்தார்; திருவாலங்காட்டிற் செய்த ஒரு மறைபொருளான நடனத்திற்காக ஆசீர்வதிக்கப்பட்டார். தவிர அவருக்கு அருள் புரிந்த இறைவன் மீது பாசுரங்கள் பாடும் பாக்கியத்தைப் பெற்றார். இறைவனை 'அப்பா' என்று அழைத்தார். இறைவரும் 'அம்மையே!'



என்று அழைத்தார். அதனாலேயே பதினோராந் திருமுறையில் இறைவனாது திருமுகப் பாசுரத்திற்குப் பிறகு அம்மையாருடைய பதிகங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அம்மையார்,

> "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
> சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
> மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
> எஞ்ஞான்று தீர்ப்ப திடர்."

என்று தாம் அனுபவித்த விதத்தை அப்படியே பாடினர்.

அம்மையார் காலத்திற்குச் சிறிது காலங் கழித்தே தமிழகத்தில் சமயக்கிளர்ச்சி தோன்றலாயிற்று என்னலாம். 7-ம் நூற்றாண்டின் தொடக்கமே சமயம் வளர்வுற்றகாலம். அதிலிருந்துதொடர்ந்த இரண்டல்லது மூன்று நூற்றாண்டுகளில், சமயகுரவர்களும், பலநாயன்மார்களும், ஆழ்வார்களும் இருந்து சமயத்தை வளர்த்தார்கள். பலஅரசர்களும் (சிங்கணன் என்னும் சோழ அரசன் முதலியோர்) சமயத் திருப்பணிகள் செய்து சிறப்புற்ற காலமும் இதுவே யாகும். வைணவ ஆழ்வார்கள் முதன் மூவரும் இருந்தனர். காழிப் பதியில் வந்துதித்து இறைவனது அருளால் மூன்றாம் வயதிலேயே ஆசீர்வதிக்கப் பெற்று, தேவாரமாகிய இனிய மொழிகளால் அவ்விறைவனை யேத்தித் துதித்த திருஞான சம்பந்தர் 7-ம் நூற்றாண்டின் முதற் பாகத்தில் இருந்தார். அவர், தம் காலத்திலிருந்த கூன்பாண்டியனது கூனைப்போக்கி, நீற்றைத் தடவி அப்பாண்டியனை நின்ற சீர் நெடுமாறனாக்கினார். அவர் பாடிய பாடல்களில் [1]இயற்கை வர்ணனைகளும், இறைவனது

---

குறிப்பு:—அவர் பலபாடி இருப்பினும் ஈண்டு உதாரணத்திற்காக இரண்டு தருகிறேன்.

[1](க) ஆறாடு சடைமுடியன் அனலாடு மலர்க்கையன் இமயப்பாவை [ல்
கூறாடு திருஉருவன் கூத்தாடுங் குணமுடையோன்குளிருங்கோயி

தோற்றப்பாடுகளும் அப்படியே நிகழ்ந்திருக்கும். அன்பு கனிந்த உளத்தால் உவந்துவந்து பாடி, முத்துச்சின்னம், முத்துப் பந்தர், முத்துக்குடை, பொற்கிழி முதலிய பெற்ற பெரியார் இவர். [1]இவரது முதற் பாடலிலேயே இறைவனது உருவத் திருமேனியின் ஒளி பிரகாசிக்கின்றது. இவர் குமரி முதல் வட இமயம் வரையில் உள்ள பல தலங்களையும் பிற நாட்டுத் தலங்கள் சிலவற்றையும் தரிசித்துத் தமிழையும் சைவத்தையும் ஒருங்கு வளர்த்தார்.

இவருடன் ஒருங்கிருந்து பல தலங்களைத் தரிசித்தவரும், இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவரும், சிறந்த அடியாருமாகிய திருநாவுக்கரசரது பாடல்களும் உளங் கனிந்து உண்மை நிலையை அடையச் செய்விக்கும் தன்மை வாய்ந்தனவாகும். அவர் மனிதப்பிறவி எடுத்தபயன் மாபெருந் தலைவனும் மன்ற வாணனைக் கண்டு தரிசிக்க வேண்டுவதே[2] என்று கூறியுள்ள செய்யுள் நோக்கற்பாலதாகும். தாம்,

சேருடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு திரிந்த வண்டு
வேறாய வடிவாகி செவ்வழியிற் பண்பாடும் மிழலையாமே.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே.

[1]தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனம் நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

[2]குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.



'பொத்தித்தம் மயிர் பறிக்கும் சமணர் பொய்யிற் புக்கழுந்தி' வீழ்ந்ததையும், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதையும் ஆங்காங்கே வைத்துப்பாடியுள்ளார். தற்போதுபெயர்மாத்திரத்தில் நிற்கும் பலசைவக் கொள்கைகள் அப்பர் காலத்தில் தமிழகத்தில் விரவிக் காணப்பட்டன.[1] மண்டை ஓடுகளைப் பிட்சாபாத்திரமாக வைத்துக்கொண்டு திரிந்த காபாலிகளும், நீண்ட சடை மயிரோடு எலும்பு மாலையும் உள்ள விரதிகளும், பாசுபதர்களும் மற்றும் பலரும் காஞ்சி, திருவாரூர் முதலிய வீதிகளில் திரிந்து கொண்டிருந்தனர். ஸ்ரீரங்கநாதர் தமக்கு உகந்தவளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டாளும், அவர் தகப்பனார் பெரியாழ்வாரும் இக்காலத்தில் இருந்தனர்.

இவ்வரலாற்றின் பின் இரண்டு நூற்றாண்டுகள் கழித்துக் கடைசியாக சுந்தரர் தோன்றித் தேவாரத்தைப் பாடி முடித்தனர். இவர் கயிலாயத்தே இறைவருக்குப் பணியாற்றி வந்தவரெனக் கூறப்படுகின்றது. இவர் உலக இல்லறத்தில் மூழ்காமல் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டவர். இவர் பாடிய பாடல்கள் ஏழாந்திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர் இறைவனைத் தோழர் முறையில் வேண்டிப் பெற்ற பலபொருள்களைத் திருநாகைக்காரோணத் தேவாரத்திலும் மற்றும் பல பதிகங்களிலும் ஒரு சிறிது காணலாம். கயிலையில் தாம் காதலித்த இருமங்கையரே இவ்வுலகில் பரவையார், சங்கிலியார் என்ற பெயர்களுடன் தோன்றி இவருக்கு இன்பம் ஈந்தார்கள். வைணவ ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமங்கை ஆழ்வார் சுந்தரர் காலத்தில் இருந்தவரென்ப. ஆழ்வார்கள் திருவாய்மொழி யென்னும் தமிழ் மொழி வைணவ நூலை எழுதி வைத்தார்கள். சம்பந்தர்,

[1]அப்பர் தேவாரம் திருவாதிரைப் பதிகம்.

அப்பர், சுந்தரர் ஆகிய இம்மூவர் எழுதிய இன்னிசைப் பதிகங்கள் தேவாரம் எனப் பெயர் பெற்றுச் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் முதல் ஏழு திருமுறைகளாகத் திகழ்கின்றன. நெக்குநெக்குருகி இறைவனைப் பாடிய மாணிக்கவாசகர் திருவாசகம் எட்டாந்திருமுறையாகத் திகழ்கின்றது.

புத்த மதம் தென்னிந்தியாவை விட்டு விலகும் காலம் நெருங்கிற்று. ஆனால் உயிர்களிடத்தில் புத்தபிரான் காட்டிய உயர்ந்த ஜீவகாருண்யமும், அவருடைய மிக உயர்ந்த நெறிகளும் தமிழர் மதத்தில் வேரூன்றி முக்கியமானவைகளாக நிலைத்து விட்டன. ஜைன மதம் சிறிது காலந்தாழ்த்து வந்ததாயினும் அதுவும் சந்யாசிகளால் மத சம்பந்தமான இடங்களிலெல்லாம் இலக்கண பாடசாலைகள் போன்று அமைக்கப்பட்டது. தற்போது தமிழகத்திற் காணப்படும் இலக்கணங்களும், நிகண்டு முதலியவைகளும் பெரும்பாலும் ஜைன சன்யாசிகள் இயற்றியவைகளே யாகும்.

(தொடரும்)

# வேத நெறி

[இளஞ்சைவப் புலவர் - மணிவாசகம்]

வேத நெறி என்பது வேதம் நெறி என்னும் இரு சொற்களால் ஆயது. வேதம் வேத சம்பந்தம் என்னும் பொருளைத்தரும். நெறி என்பது வழி. வேதசம்பந்தமான வழி என்னும் பொருளது. இதுவே மறைநெறி, பொதுநெறி, மறைவழக்கு, ஞானநெறி, ஒளிநெறி என்றும் கூறப்படும்.



வேத மென்பது யாது? ஆரியவேதமா? அன்று. ஏன்? *ஞானசம்பந்தர், வேதம் சொற்பிரிவிலாதது, மாறாதது என்று கூறுகிறார். தெய்வச்சேக்கிழார் எல்லையிலாதது என்றுரைக்கிறார். ஆரியவேதமோ சொற்பிரிவுடையதாய் முன்னர் மூன்றாகிப் பின்னர் தைத்திரியமாதி நான்காகி, தற்போது இருக்காதி நான்காய்மாறி இலங்குவதோடு, இருக்குமுதல் அதர்வணம் ஈறும் எல்லையுடைத்தாயிருக்கிறது.

பின்னர், மறையாதெனில் இறையேயா மென்க. "பல வேதமங்கமாறும் மறைநான்கவையுமானார்" "அங்கமாய் ஆதியாய் வேதமாகி அருமறையோ டைம்பூதந்தானேயாகி" "நால்வேதமாறங்கமானாய் போற்றி" என்னும் அருளுரைகள் இதனை வலியுறுத்தும். மாதவச்சிவஞானமுனிவரும் "மகாசங்கார காலமுடிவின்கண் உலகங்களை மீளப்படைத்தற் பொருட்டுப் பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியவழி வேதாகமங்கள் குடிலையினின்று நாத வடிவமாயும் அதன்பின் விந்துவடிவமாயும் தோன்றின" என்று அருளியுள்ளார். இதுவும் இதனை ஆதரிக்கின்றது காண்க.

இறைவன் மறை வடிவினன் என்றால் உலகம் மறைநெறியை யாங்ஙனம் உணர்ந்தது எனிற் கூறுதும். தொன்மைத் தென்றமிழ் நாட்டிலே,

"ஓரால் நீழல் ஒண்கழலிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க்கு
ஒளிநெறி காட்டினை"

என ஆளுடையபிள்ளையார் அருளுவதாலும்,

---

*"சொற்பிரிவிலாத மறைபாடி நடமாடுவர்" திருவேதிகுடி-திருவிராகம்-பண் சாதாரி (2). 'மாறுமறைநான்காய்........வேறாயுடனானான்" நட்டபாடை. திருவீழிமிழலை (2) "எல்லையிலா மறைமுதல்" திருஞா. ச. பு. 75.

தொடர்புகளையும் திருக்கடைக்காப்புகளில் சொல்பவர், 'சுந்தரர்' என்ற தம்பெயரைவிட்டுவிட யாதொரு காரணமுமில்லை. ஆனால் சுந்தரர் என்னும் பெயரே இப்பொழுது யாவரும் அறிந்த பெயராக நிலைத்து நிற்கிறது.

2. இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர்தான் என்னோவெனில் 'திருவாரூரன்' என்னும் திருப் பெயராகும். இப்பொழுதும் சிவனார்க்கு உகந்த ஊர்களின் பெயர்களை மக்கள் தம் குழந்தைகளுக்குச் சூட்டுகிறார்கள். எடுத்துக் காட்டாகச் சிதம்பரம் அண்ணாமலை பாவநாசம் முதலிய பெயர்களைச் சொல்லலாம். நெல்லையப்பன், பழனியப்பன், செங்கோட்டையன் என்றும் சில பெயர்கள் வழங்குகின்றன. அதுபோலவே 'திருவாரூரன்' என்ற பெயர் முந்நாளில் ஆரூரில் கோவில் கொண்டருளியிருக்கும் தியாகராயப் பெருமானைப் பல நாட்டினரும் வந்து வணங்கினதாலும் அந்நாளில் அக்கோயில் சோழமன்னர் ஆதரவில் இருந்து மிகச்சிறப்புற்றுவிளங்கினதாலும் அப்பெருமான் பெயரைச் சைவமக்கள், அதிலும் குருக்கள் என்று கூறப்படும் பழஞ்சைவர் புனைந்து கொள்ளல் இயற்கையே. சுந்தரருடைய பாட்டனாரே ஆரூரர் என்னும் பெயரோடு வழங்கினார் என்ற வரலாறும் இருக்கிறது. மேற்கூறியபடி இப்பெயர் அந்நாளில் பலரும் புனைந்து வந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது அப்பெயர் புனைந்த ஆடவர் ஒருவரையும் காணாமல் இருப்பது வருந்தத்தக்கது.

3. சுந்தரர்க்குத் "திருவாரூரன்" என்றுதான் பிள்ளைத் திருப்பெயர் வைக்கப்பட்டதென்பது அவர் பாடல்களிலிருந்தே காணக்கிடக்கிறது. 15-ம்பதிகத்தின் திருக்கடைக்காப்பில்,

"சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூரன் உரைத்த"

என்று தம் முழுப்பெயரையும் குறிக்கின்றார். 41-ம் பதிகத்தில்,



"ஆரூரன் பேர்முடி வைத்த மன்னு புலவன்"

என்றும், 59-ல்

"அம்மான்றன் திருப்பேர் கொண்ட தொண்டன் ஆரூரன்"

என்றும், 86-ல்

"சீரூருந் திருவாரூர்ச் சிவன் பெயர் சென்னியில்வைத்த ஆரூரன்"

என்றும், 89-ல்

"சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த ஆரூரன்"

என்றும், 95-ல்

"ஆரூர்த் திருமூலட் டானத்தே யடிப்பே ராரூரன்"

என்றும் குறிப்பதிலிருந்து திருவாரூர்ப் பெருமானை இற்றை நாட்போலத் தியாகராஜர், என்னாது ஆரூரன் என்று அழைத்தார்கள் என்பதும், அப்பெயரே தமக்குப் பிள்ளைப் பெயராக வைக்கப்பட்டதென்றும் தெளிவாகச் சொல்லுகிறார். முதலாம் பதிகத்திலேயே.

"ஆரூரன் எம்பெருமாற்காள் அல்லேனெனலாமே"

எனத் தம்பெயரை வெளியிட்டார். இன்னும் 3, 5, 9, 14, 16, 17, 18, 19, 21, 22, 23, 24, 25, 26, 28, 29, 32, 38, 39, 40, 46, 51, 53, 56, 61, 62, 67, 69, 71, 73, 74, 76, 82, 84, 90, 92, 93, -ம் பதிகங்களிலும் ஆரூரன் என்று சொல்லிக் கொள்கிறார். இப்பெயரே சுந்தரரை ஆரூர் கோயில் கொண்ட பெருமானுக்கு ஆளாக்கி விட்டது போலும். இதனால்தான் நமது பெரியோர்கள் சிவபிரான் திருப்பெயர்களையும் அவன் கோயில் கொண்ட இடப் பெயர்களையும் பிள்ளைகளுக்கு இட நேருகிறது.

4. சுந்தரர் பல திருப்பதிகங்களில் தம் பெயரைக் குறுக்கியும் கூறுவர். திருஞானசம்பந்தர்க்கு இவ்வழக்க

## வால்மீகி இராமாயணப் பிரசங்கம்

கும்பகோணத்தில் இதனைப் பிரசங்கித்துவந்த சிறுகுடி பண்டிதர் சீதாராம சாஸ்திரியார் தமக்குத் தோற்றிய புதிய கருத்துக்கள் சிலவற்றை வெளியிட்டார். அது காரணமாகப் பிற பண்டிதர்கள் அவரை வாதத்திற் கழைத்து ஒரு கூட்டமுங் கூட்டினர். வாதத்திற் கெடுத்துக் கொண்ட இரண்டு பொருள்களுள் ஒன்று : இராமாயணத்தில் இராமனைக் கடவுளாகவா மனிதனாகவா மதிக்கப் பெறுகிறதென்பது; மற்றொன்று இராமரும் வாலியும் நேர் நின்று சண்டை செய்தார்களா அல்லது இராமர் மறைந்து நின்று சண்டை செய்தாரா? என்பதாம். திவான்பகதூர் கே. எஸ். இராமசாமி சாஸ்திரியார் பி.ஏ., பி.எல். வாதத்தைக் கேட்டு நியாயங் கூற வேண்டப்பட்டார். ஆனால், அவர் அக்கூட்டத்தை நடத்துவதாகவும் முடிவான கருத்தொன்றும் தெரிவிக்கத் தாம் விரும்பவில்லையென்றும்கூறிக் கூட்டத்தைத் தொடங்கினர். இதற்குள், பண்டிதர் சீதாராம சாஸ்திரியார், 'தோல்வி யுறுவோர் பூணூலைக் கழற்றிவிட்டுத் தீயில் குதித்தல் வேண்டுமென்றும், தாம் அந்நிபந்தனைக்கு ஒப்புக் கொள்வதாகவும், எதிரிகள் அதற்கு உடன்படாவிடின் தாம் வாதிக்க முடியா'தென்றும் கூறினர். உடனே பெருங் குழப்பம் நேர்ந்து கூட்டங் கலைந்ததாம்.

இராமாயணத்தில் இராமர் கடவுளாக மதிக்கப் பெறுவதினும் மனிதனாகவே மதிக்கப் பெறுகிறாரென்பதும், அவர் வாலியோடு நேர் நின்று போர் புரிந்தாரென்பதுமே சாஸ்திரியார் கருத்தாம்.



மிரண்டுங் குறுகிடாவண்ணம் இன்பமாயென்பாற் கூத்தையுங் கொண்ட தெப்படி" என வியந்து கூறியதூஉம் இவ்வுண்மை நோக்கியென்க. இப்பெற்றித்தாகிய சுத்தாத்துவிதவுண்மை யுணரமாட்டாதார், ஒருபொருள் மற்றொரு பொருளாதல் யாண்டுமின்மையின் அதுநானேனென் என்னும் ஒருவார்த்தைப்பொருள் படுமாறு யாங்ஙனமென்றாசங்கித்தார்க்கு, ஒன்றுகெட்டு ஒன்றாமெனக்கொண்டு பரிணாமங் கூறுவாரும், அது நானென்னும் இருபெயரும் விட்டும் விடாத ஆகுபெயரெனக்கொண்டு கேவலாத்துவிதங் கூறுவாரும், அவற்றுள் ஒன்றனைமாத்திரம் ஆகுபெயரெனக்கொண்டு விசிட்டாத்துவிதங் கூறுவாருமாய் இடர்ப்படுவர். அங்ஙனம் இடர்ப்பட்டு உரைப்பனவெல்லாம் பொருளல்லவென்பார், 'பண்டைமறைகளும் இதுநானேனென்என்று பாவிக்கச்சொல்லுவதிப் பாவகத்தைக்காணே' என்றார். எனவே, வேதாந்த மகாவாக்கியமுஞ் சித்தாந்த மகாவாக்கியமும்பொருளான் ஒன்றென்பதூஉம் பெறப்பட்டது. ஈண்டுக் கருடனென்றது கருடனுக் கதிதெய்வமாகிய மந்திரசொரூபத்தையாகலின், அப்பாவனை மெய்யாதற்கிழுக்கின்மையுணர்க. இதனானே திருவஞ்செழுத்தை விதிப்படி உச்சரிப்பார்க்கு வேண்டப்படும் பாவனை கூறப்பட்டது. ௭

அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
 அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்(டு)
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
 ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத்தர்ச் சித்(து)
அஞ்செழுத்தாற் குண்டலியின் அனலை யோம்பி
 அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்(று)
அஞ்செழுத்தை விதிப்படிஉச் சரிக்கமதி யருக்கன்
 அணையரவம் போற்றோன்றும் ஆன்மாவில் அரனே.

**(உரை)** கசிந்ததொண்டினொடும் உளத்தவன்றான் நின்றகலப்பாலே சோகமெனப் பாவித்தற்கண் ஆன்மாவுஞ் சிவமும் அங்ஙனம் உடைமையும் உடையானுமாய் நிற்கும் பரிசை ஐந்தெழுத்தோது முறையின் வைத்துணர்ந்து, †"ஆடும்படிகேள்" எனவும் *"சேர்க்குந்

* உண்மை விளக்கம் - ௩௩.

† ௸ - ௩௪.

துடிசிகரம்" எனவும் ஓதியவாறே அவன் திருமேனி அஞ்செழுத்தால் அமைந்த பரிசும் உணர்ந்து, அம்முறையே அங்கநியாச கரநியாசங்களும் அவ்வைந்தெழுத்தாற் செய்துகொண்டு, இதயம் உந்தி புருவநடுவென்னும் மூன்றும் பூசைத்தானம் ஓமத்தானந் தியானத்தானமாகக் கற்பித்துக்கொண்டு, அங்ஙனம் வழிபட்டு நின்றுகொண்டு அவ்வஞ்செழுத்தை விதிப்படியேமாறி நெஞ்சழுத்தி உச்சரித்தல் செய்க. இவ்வாறு சிவோகம்பாவனையுந் திருவஞ்செழுத்து மந்திரமும் அந்தரியாகக் கிரியையுமென்னும் இம்மூன்றனும் ஒருவழிப்பட நின்றுகொண்டு அதனைக் கணிக்கப்பெறுவார்க்கு, நவக்கோள்களுள் ஏனை ஏழும்போலக் காண்டல்செல்லாத ராகுகேதுக்கள் உபராகத்திற் சந்திராதித்தர்மாட்டுக் காணப்படுமாறுபோல, முப்பொருள்களுள் யான் இதனையறிந்தேன் அறிகின்றிலேன்என்னும் அறிவிற்கு விடயமாய்த் தோன்றும் ஏனைப் பசுபாசங்கள்போலப் புலனாகாதவழிப் பதிப்பொருள் அவ்வுச்சரிப்பில் ஆன்மாவின்மாட்டு விளங்கித் தோன்றும்.

அறிந்திட்டென்பதனை மேலுங் கூட்டுக. ஆன்மாவை அரனுடைய பரிசுமென்றஉம்மையால் ஆன்மா அரனுக்குடைமையாம்பரிசும் அறிதலினாலறிந்திட்டென்பதூஉம் பெற்றாம். அரனுருவுமென்ற உம்மை சிறப்பு. அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையுமறிதல் இதயத்தில்ஆன்மாவில் அவ்வாறுகண்டு அர்ச்சித்தற் பொருட்டென்க. இனி உம்மையை எண்ணும்மையாக்கி, அஞ்செழுத்தால் ஆன்மாவையானுடைய பரிசும் அரனுருவும் அறிந்திட்டெனக் கண்ணழித்து, ஆன்மாவையும் அரனுடைய பரிசாகிய திருவருளையுஞ் சிவசொரூபத்தையும் அஞ்செழுத்தால் உணர்ந்தென்றும், அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டென்பது அமைந்தொழிந்த மலங்களையும் ஐந்தெழுத்தில் உணர்ந்தென்றும் உண்மை விளக்கஞ் சிவப்பிரகாச முதலியவற்றுள் ஓதியவாறுபற்றி உரைத்தலுமொன்று. இப்பொருட்குக் *"கற்பனவும் இனியமையும்" என்றாற்போல அமைதல் வேண்டாதொழிதன்மேற்று. மை, அஞ்சனம், மலம் என்பன ஒரு பொருட்கிளவி. ஈண்டு மலமென்றது ஆணவ திரோதங்களை. இவை கழிந்தொழிந்தமைபற்றி வேறுவைத் தெண்ணப்பட்டன. அணைந்து தியானித்தெனற்பாலது அணைந்தென்று உபசரிக்கப்பட்டது. அல்

* திருவாசகம் - திருப்புலம்பல் - ௩.



லுழிப் பயன்படாமை யுணர்த்துவார், விதிப்படியென ஈண்டுங் கூறினார். இதனானே ஆண்டைக்கு வேண்டப்படும் மந்திரமுங் கிரியையுங் கூறப்பட்டன.

நாட்டுமித யந்தானும் நாபியினில் அடியாய்
ஞாலமுதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்
மூட்டுமோ கினிசுத்த வித்தைமல ரெட்டாய் [தாய்க்
முழுவிதழ்எட் டக்கரங்கள் முறைமையினின் உடைத்
காட்டுகம லாசனமேல் ஈசர்சதா சிவமும்
கலாமூர்த்த மாம்இவற்றின் கண்ணாகுஞ் சத்தி
வீட்டைஅருள் சிவன்மூர்த்தி மானாகிச் சத்தி
மேலாகி நிற்பன்இந்த விளைவறிந்து போற்றே. ௩௦௦

(உரை) இதயத்தர்ச்சித்தற்கு, நிலமுதற் சத்திதத்துவம் ஈறாகிய முப்பத்தைந்தினையுங் கிழங்குமுதற் பீசமீறாகிய அவயவங்களாகவுடைய இதயகமலம் ஆசனமும், அதன்மேற் சத்தி மூர்த்தியும், சிவன் மூர்த்தி மானுமாம்.

சிவதத்துவஞ் சத்தி தத்துவங்கட்குத் தம்முள் வேறுபாடு சிறிதாதல்பற்றிச் சிவதத்துவத்தை வேறெண்ணாது சத்திதத்துவத்துள் அடக்கிக் கூறினார். சத்தி மேலாகியென்றதனாற் சத்தி மூர்த்தியென்பதூஉம் பெறப்பட்டது. அற்றேல், மேல் ஐந்தெழுத்தால் அமைந்தவுருவெனக் கூறி அதன்பின் ஆன்மாவில் அர்ச்சித்தெனவுங் கூறி ஈண்டுச் சத்தி மூர்த்தியென்றல் மலைவாம்போலுமெனின்,— ஆகாது; அம்மூன்றும் முதல்வனுக்கு முறையே தூலவடிவுஞ் சூக்குமவடிவும் அதிசூக்குமவடிவுமெனக் கோடலாலென்பது. அண்டமோரணுவாம் பெருமைகொண்டு கரணங்களெல்லாங் கடந்து நின்ற அவ்விறைவனே அணுவோரண்டமாஞ் சிறுமைகொண்டு ஆன்மாக்கள் உய்தற்பொருட்டு உடம்பினுள்ளும் அவ்வாறு நிற்கின்றான். அதனையறிந்து செய்யாதவழிப் பூசையாற் பயனில்லையென்பார், 'இந்த விளைவறிந்து போற்றே' என்றார். தன்னினமுடித்தலால் ஓமித்தல் தியானித்தல்களினும் இவ்வாறேயுணர்ந்து செய்யப்படுமெனக் கொள்க.

வண்ணமாக்கித் தனது பேரானந்தப் பெருஞ்செல்வமுழுவதும் இவனதாகச் செய்தற்கும் உரிமையுடைய விசேட இயைபு ஆண்டையதாகலான்.

இந்தனத்தினெரி உலகத்தார்க்குச் சிறிதுந் தோன்றாதவாறு மறைந்து உடனாய் நிற்றற்கும், பாலினெய் மந்ததரமலபாகமுடையார்க்கு ஒருவாற்றாற் றோன்றியுந் தோன்றாதும் மறைந்து உடனாய் நிற்றற்கும், பழத்தினிரதம் மந்தமலபாகமுடையார்க்கு உய்த்துணரும் வழி விளங்கித் தோன்றுவதாய் உடனாய் நிற்றற்கும், எள்ளின்கண் எண்ணெய் தீவிரமலபாகமுடையார்க்கு இனிது விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாது உடனாய் நிற்றற்கும் உவமையாயின. எங்குமுளனிறைவனென்றது எவ்விடத்தும் வழிபடவே அருளுதற்குரிய இயைபு விளங்குதற்கும், மலமறப்போரென்றதுந் தோன்றியறுத்தாக்கிப் பதிப்பனென்றதும் ஆன்மாவிற் சிந்தனைசெய் தர்ச்சித்தற்குரிய விசேட இயைபு விளங்குதற்கும் ஏதுவாய் நின்றன. தன்னுருவப்பரப்பெல்லாம் இவன்பாலே பதிதலாவது, தீ இரும்பைச் செய்வதுபோல இறைவனுக்குரிய முற்றுணர்வு முதலிய எண்குணங்களும் படிகம்போலச் சார்ந்ததின் வண்ணமாம் இயல்புடைய ஆன்மாவுக்குரிய குணமாம்படி அத்துவித இயைபானே இவன்மாட்டு விளங்கித் தோன்றுதல். அதுவே சிவானந்த மேலிடுதலென்பது. அர்ச்சிக்கவென்றது வியங்கோள்; முடிபு வேறாகலிற் பால் வழுவின்மையுணர்க. அர்ச்சிக்க என்பதனை எச்சமாகக்கொண்டு பாடமோதுவார் பால் வழுவாதலையும் நோக்கிற்றிலர்போலும். மேல் அந்தரியாகந் தன்னையென்ற செய்யுளிற் பெறப்பட்டதனை ஈண்டுங் கூறுதல் கூறியது கூறலாம்போலுமென மலையற்க. வேண்டாது கூறி வேண்டியது முடித்தற்கெழுந்தது இச்செய்யுளாகலின். இதனானே அப்புறப்பூசையில் அகப்பூசை விசேடமுடைத்தென அதன் பெருமை கூறப்பட்டது. இவை ஆறு செய்யுளானும் மூன்றாங்கூற்றின் பொருளைத் தெரித்துணர்த்தியவாறு.

௧௨

---

## பயனியல்—பத்தாஞ் சூத்திரம்

இங்ஙனம் வேண்டுஞ் செய்திமுறைமைகள் மூன்று சூத்திரத்தால் வகுத்தோதிய ஆசிரியர், நிறுத்தமுறையானே அச்சாதனத்தாற் பெறப்படும் பெத்தநீக்கமும் முத்திப்பேறுமாகிய பயனியல்பு மூன்று சூத்திரத்தாற் கூறுவான் தொடங்கினார். அவ்விருவகைப் பயனுள் அப்பெத்தநீக்கமாமாறு கூறுதற்கெழுந்தது பத்தாஞ் சூத்திரம்.

இவனுலகில் இதமகிதம் செய்த வெல்லாம்
இதமகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்
அவனிவனாய் நின்றமுறை ஏக னாகி
அரன்பணியின் நின்றிடவும் அகலுங் குற்றம்
சிவனும்இவன் செய்தியெலாம் என்செய்தி யென்றும்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல உடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே. ௯௰௪

**(உரை)** பதிஞானத்தால் அங்ஙனங் காணப்பட்ட இறைவன் பெத்தநிலையிலுடனாய் நிற்பினும் வேறு காணப்படுமாறின்றி ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழிநின்ற முறைமைபோல, ஈண்டான்மா அம்முதல்வனோடுடனாய் நின்றறியினுந் தானென வேறு காணப்படாதவாறு அவனோடொற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்கப்பெறின், அங்ஙனம் ஏகனாகிநிற்றலான், யானெனதென்னுஞ் செருக்கறுதலின் அவ்விறைவனும் இவன் செய்யும் இதமகிதங்களெல்லாம் யான் செய்யும் இதமகிதங்களென உடனாய்நின்று ஏன்றுகொள்வன். அரன்பணியின் நிற்றலான், இந்திரியங்களின் வசமாய் நிற்கும் பாதந்திரியமொழிதலின், அவ்விறைவனும் இவனுக்கின்பத்துன்ப நுகர்ச்சியாமாறு பிறர் செய்யும் இதமகிதங்களெல்லாம் எனக்கு நுகர்ச்சியாமாறு செய்தனவேயாமென உடனாய் நின்று ஏன்றுகொள்வன். இவ்விருதிறத்தானும் முறையே, இவன் செய்யும்இதமகிதங்கள் இவனுக்குப் பணியாய் முடியும். இவனுக்கு இதமகிதஞ் செய்தார்மாட்டு அவ்வித

மகிதங்கள் அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்கு முறையே துணைக் காரணமாயியையும். இங்ஙனம் ஆர்ச்சிப்பும் நுகர்ச்சியும் இவனைப் பந்தியாதொழியவே, ஏனைச் சஞ்சிதவினையும் மாயையும் ஆணவமு மாகிய குற்றங்கள் மூன்றும் இவனைப் பந்திக்கமாட்டாவாய் விண் டொழியும்.

நின்றிட என்பதனை ஈரிடத்துங் கூட்டி நிரனிறையாக வைத்து, என்றென்னும் எச்சங்களைக் கொள்வனென்பதனோடுந் தனித்தனி கூட்டி, இவனுலகிலென்னும் முதலடியைப் பாதகத்தைச் செய்திடி னும் பணியாக்கிவிடுமே என்றதன் பின்னாக வைத்துரைத்துக்கொள்க. நின்றிடவுமென்றவும்மை சிறப்பு. பாதகத்தைச் செய்திடினுமென்ற உம்மையாற் புண்ணியத்தைச் செய்திடிற் பணியாக்கிவிடுதல் கூற வேண்டாவாயிற்று. அவை மிகுதிப்படுதற்குத் துணைக்காரண மாயியையுமென்பது ஆற்றலாற்பெற்றாம். அது அவர்தாஞ் செய்வினை தன்னால் நலமுடனே பிறர்செய்வினையூட்டி யொழிப்பானெனவென முன் வருகின்றவாற்றான் அறிக. அச்செய்யுளின் கருத்தும் உணராது இவன்செய்த இதமகிதங்களே இவன்மாட்டுச் செய்தார்க்கியையு மென்றுரைப்பின், இவன்மாட்டுச் செய்தவவருடைய இதமகிதங்கள் வேறென்னாய் முடியுமெனக் கடாயினார்க்கு விடையின்மையும், நியதி தப்புதலும், சிவஞானச் செயலுடையோர் கையிற்றானங் திலமளவே செய்திடினுமத்தானமே நிலமலைபோற்றிகழுமென்றாற்போல்வன வற்றோடு முரணுதலுமாகிய குற்றங்களுளவாமாறுணர்க. உலகத்தார் பார்வைக்கு இவன் செய்தனவாகவும் அச்செயல் இதமகிதமாகவுந் தோன்றப்படுவனமாத்திரையேயன்றிப் பிறிதில்லையென்பார், உலகி லென்றார். அவனென்பதும் இவனென்பதும் மகாவாக்கிய வழக்கு. இவ்வாறன்றி, நின்றிடவென்னும் எச்சத்தை அகலுமென்பதனோடு முடிய வைத்துரைப்பார்க்கு, ஏனையன தம்முளவாய் நின்று ஒரு பொருண்மேல் வருவனவல்லவாய் முடிதலின், முதல் நூலோ டொத்து ஒரு பொருணுதலிய சூத்திரமாதற்கேலாமை யறிக. இச் செய்யுளிற் கூறப்படும் முக்கூற்றுள், ஒருவாற்றான் ஈண்டு வலியுறுக் கப்படும் இறுதிக்கூறு பதினொராஞ் சூத்திரத்தில் இயைபுபற்றி எடுத் துக்கொண்டு தடைவிடைகளாற் சாதிக்க நின்றமையின், முன்னே இரு கூறுமே வேறெடுத்துக்கொண்டோதப்படுவனவெனக் கொள்க.



யான்செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடஅத் தத்துவன்தான் நேரே
தனையளித்து முன்நிற்கும் வினையொளித்திட் டோடும்
நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே. ௩௦௫

(உரை) யானெனதென்னுஞ் செருக்கற்றாலன்றி, இறைவனுட னாய் நின்று கோடலும் அதுபற்றி வினை நுகர்ச்சியும் ஆர்ச்சிப்பும் இவனுக்கில்லாதாதலும் அதுபற்றிக் குற்றமகலுதலுமாகிய இவை முறையே நிகழ்தல் செல்லாமையால், அச்செருக்கறுதியைப் பயப் பதூஉம் அவனிவனாய் நின்றமுறை ஏகனாகி நிற்கும் ஞானமொன்றே யன்றிப் பிறிதின்மையின், அச்செருக்கறுதியின்பொருட்டு அவ்வாறு நிற்கும் ஞானம் ஒருதலையான் வேண்டற்பாற்று.

வலியுறுத்தற்பொருட்டு உடம்பாட்டுமுகத்தானும் எதிர்மறை முகத்தானுங் கூறினார். உருவகஞ் செய்ததும் அதனையின்றி அமை யாமை விளக்குதற்பொருட்டு. ஞானமென்றது ஈண்டேற்புழிக்கோட லால் ஏகனாகி நிற்கு ஞானத்தின் மேற்றாயிற்று. இதனானே, மேலைச் சூத்திரத்தோதியவாறு ஞாதிருவு ஞானமு ஞேயமுமாக நின்று காணுங் காட்சியே அமையும், அதன்மேலும் ஏகனாகிநிற்றல் எற்றுக் கென்பாரை நோக்கி, அவ்வாறு நின்றாலன்றி யானெனதென்னுஞ் செருக்கறுதல் முதலியனமுறையே நிகழ்ந்து முத்தியைத் தலைக் கூடுதல் செல்லாதென முதற்கூறு வலியுறுத்தப்பட்டது. உ

இந்திரிய மெனைப்பற்றி நின்றேஎன் வசத்தின்
இசையாதே தன்வசத்தே எனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற னணைவழி நின்றிடலால் என்றும்
தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் தாள்கள்
வந்தனைசெய் திவற்றின்வலி அருளினால் வாட்டி
வாட்டமின்றி இருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேல்
முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள்
மூளாஅங் காளாகி மீளா னன்றே. ௩௦௬

ணழிப்புரையானுமுணர்க. காட்டுமுபகாரமாத்திரையேயன்றி அதன் பின்னாக வுடனின்று காணுமுபகாரமும் வேண்டப்படுமென்பது எவ் விடத்துமென்னுஞ் செய்யுளின் விளங்கக் காட்டுதும்; ஆண்டுக் காண்க. காயமொழிந்தாற் சுத்தனாகியான்மா இத்தையாயுமறிவுடை யனாயென இயையும். ஆகியென்றது பெயர். அந்நிலையென்பதற்கு வேறுவேறுரைப்பாருமுளர். அகரச்சுட்டு அடுக்கநின்றதனையொழி த்து வேறொன்றனைச் சுட்டுதல் செல்லாமையும் பிறவும் அவர் நோக் கிலர். இருவகைப்பயனுமொருங்கே சேரவைத்து விளக்குவாராய், மேலைச்சூத்திரத்து வேறுகூறாக வையாது, ஒருவாறு வலியுறுக்கப்படு மூன்றுங்கூற்றைக் காயமொழிந்தாற் சுத்தனாகியெனவும், அந்நிலைமை இந்நிலையிலடைந்த முறையாலே மாயமெலா நீங்கியெனவும், அத னொழிபாக ஈண்டெடுத்துக்கொண்டாராகலின், அதனோடுளப்பட இச்செய்யுள் முக்கூற்றதாயவாறு கண்டுகொள்க. ௧

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
 பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
 வாச்சியவா சகஞானம் வைந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞா திருஞான ஞேயம்
 தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞானம் இவையெலாங் கடந்தசிவ ஞானம்
 ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர். ௩௧௧

(உரை) இத்தையாயுமறி வெனப்பட்ட பரஞானத்தால் அத னைத் தெளிய நோக்கி அன்பு செய்யப்பெற்றார், அவ்வொன்றனையே யுணர்ந்துகொண்டு நிற்பரன்றி மேற்கூறிய பிராரத்தவாதனை தாக்கு தற்குரிய ஏனைப் பதார்த்தங்களைச் சிறிதுங் காண்பாரல்லர்; அவற் றைக் காணவரு ஞானங்களாவன: கருவிகளைப் பற்றிநின்றறியுங் காட்சி யனுமான முறையெனப் பலவகைப்பட்ட அளவை ஞானங் கள்; அவையெல்லாஞ் சுட்டுணர்வின் பேதமாகலானும், ஏனைக் கேட்டலின்கண்ணதாகிய சாத்திரஞானம் நால்வகை வாக்கைப் பற்றி நிகழும் விந்துஞானமேயாகலானும், சிந்தித்துத் தெளிதற் கண்ணதாகிய பேதஞானமும் பாவனைஞானமாதலேயன்றி அனுபூதி ஞானமாகாமையானும், இவையனைத்திற்கும் மேலாய் ஈண்டுக் கூறப்



பட்ட இச்சிவஞானமொன்றே பதார்த்தங்களைப் பார்க்கவாராத சிறப் புடைய ஞானமாகலான், இதனைப் பெற்ற சீவன்முத்தர் சிவ மொன்றே கண்டிருப்பான்றி ஏனைப் பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்தவாதனையிற் படுவாரல்லர்.

சிவமே கண்டிருப்பரென்றது முடிந்தது முடித்தல். ஏகாரம் பிரி நிலை. ஈண்டு அஞ்ஞானமென்றது சுட்டுணர்வின் மேற்று. கலக்கம் ஐயம். கேட்டலறிவு மேற்சிந்தித்துத் தெளியும்படி ஐயத்தை விளைத் தல்பற்றி, அதனைக் கலக்கந்தருஞானமென்றார். போகந்தங்கிய ஞான மென்றது அக்கலக்கந்தருஞானம் போம்படி அவ்வாறு தங்கிய ஞான மென்றவாறு. சீவன்முத்தர் பிறிதொன்றனைப் பாராரென வற்புறுத் தோதிய இதனானே, பிராரத்தவினை மங்கிப்போயவழியும் மங்காது நின்றுழல்விப்பதாகிய அதன் வாதனை பற்றறக்கழியுமாறு சாதிக்கப் பட்டது. ௨

அநாதிஉடல் ஒன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மால்
 ஆயழிந்து வருதலால் அந்த மில்லை
பினாதியருள் பெற்றவர்கள் நித்தவுரு வத்தைப்
 பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே இதுவும்
இனாதுநிலை இதுதானுங் காயமுண்டேல்
 இருங்கன்ம மாயைமல மெல்லா முண்டாம்
மனாதிதரு முடலாதி காரியத்தால் அநாதி
 மலம்அறுக்கும் மருந்தற்றால் உடன்மாயுங் காணே. ௩௧௨

(உரை) உடம்பாவது அநாதியாயுயிரைப்பற்றி நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய் வருவதாகலான், அதற்கொரு முடிபு கூறு தல் பொருந்தாமையின், முத்தியினும் இவைபோலன்றி நித்திய சுத்தமங்களமயமான திப்பிய சரீரமுண்டென்னும் உருவசிவசமவாதி கள் மதமடாது. உடம்புளதாகவே அதற்குக் காரணமாகிய மாயை யும் அதன்கண் நிகழும் உண்டிவினைகட் கேதுவாகிய கன்மமும் அதனை இயைவிப்பதாகிய ஆணவமலமும் விட்டு நீங்குதலின்மையின் அதுவும் இன்னாமையைப் பயக்குநிலையேயாகலானும், ஆகவே, அதனை முத்தியென்பதற்குத் தாற்பரியம் பதமுத்தியென்பதேயாமாகலானும், மனமுதலிய புரியட்டக உடம்பினின்றுந் தோன்றுவதாகிய இவ் உடம்பு அக்காரியப்பாட்டால் ஆதியாய் அநாதியாகிய மலநோய் தீர்

அவன்றானே அறியுஞ்சித் தாதலினா லிரண்டும்
அணைந்தாலு மொன்றாகா தநந்நியமா யிருக்கும்
இவன்றானும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி
இதுஅசித்தென் றிடில்அவனுக் கிவனும்அசித் தாமே. ௬௨௦

**(உரை)** இருபொருளுஞ் சித்தேயாகலான் ஒத்தொன்றுமென்றலே யமைவுடைத்தன்றி, உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்குமுரித்தேயென வேற்றுமைப்படுத்துக் கூறுதல் ஆண்டைக்கமையாதாலெனின்,—அற்றன்று; ஒளியென்னும் பொதுமையால் ஒத்தொன்றுமாயினும் வியஞ்சகத்தை இன்றியமையாதாய் அதுவதுவாய் முந்திக் காணுங் கண்ணொளிக்கும் அதுபோலத் தனக்கொரு வியஞ்சகம் வேண்டாது தானே வியஞ்சகமாய் எல்லாவற்றையு மொருங்கே விளக்கிநிற்கும் ஞாயிற்றினொளிக்குந் தம்முள் வேற்றுமை பெரிதாயினாற்போல, சித்திரண்டற்குந் தம்முள் அந்தரங்க வேற்றுமை பெரிதுமுண்மையான், அவ்விருபொருளுந் தம்முட் கூடியவழியும் அத்துவிதமாய் நிற்றலேயன்றி ஒன்றாய்ப் போமாறில்லை.

நீருநீரும்போல ஒத்தொன்றாய் நிற்குமென்னும் ஐக்கவாதிகளை மறுத்தற்கெழுந்தவிவ் விரண்டுசெய்யுளும், ஒத்து வேறாய்நிற்குமென்னும் அருவசிவசமவாதிகளை மறுத்தற்குமுரியவாறு காண்க. ௧௧

இரும்பைக்காந்தம் வலித்தாற்போல் இயைந்தங் குயிரை
எரியிரும்பைச் செய்வதுபோல் இவனைத்தா னாக்கி
அரும்பித்திந் தனத்தைஅன லழிப்பதுபோல் மலத்தை
அறுத்தமலன் அப்பணைந்த உப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோல் அடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியைஒத் திருப்பன்அந்த முத்தியினிற் கலந்தே. ௬௨௧

**(உரை)** காந்தம் விகாரமின்றி நின்றே இரும்பை வலிப்பவுங் கண்டாம்; அதுபோல இறைவனும் விகாரமின்றியே உயிரைத் தன்வழிப்படுத்து நிற்பனாகலாற் சென்றணையுநிழல்போலச் சிவனில்லாமைபற்றிச் சிவன் நிருவிகாரியாதற் கிழுக்கில்லை. எரி இரும்பைக் கெடுத்தலின்றித் தன்வண்ணமாக்கித் தன்வண்ணமாக்குதற்குரித்தாகாது இவ்விரும்பின்கணுடன் தோன்றி நிற்குங் கறைமாத்திரங் கெடச் செய்யும்; அதுபோல இறைவனும் உயிரைத் தன்வண்ணமாகச் செய்து தன்வண்ணமாக்குதற் குரித்தாகாது அவ்வுயிரின்கண்ணுடன்றோன்றி நிற்கு மலமாத்திரங் கெடச் செய்யுமாகலால், பொன்றுகை முத்தியாகாமைபற்றி யொன்றாதற் கிழுக்கில்லை. நீரோடு சேர்ந்தவுப்புத் தன் சுவைமுழுவதுமந் நீர்க்காக்கித் தன்னோடொப்பச் சமஞ்செய்து நிற்கும்; அதுபோல உயிரைச் சேர்ந்த இறைவனுந் தனக்குரிய எண்குணங்களையும் அவ்வுயிரின்கட் பதிப்பித்துத் தன்னோடொப்பச் செய்துநிற்பானாகலான், நீரொடுநீர் சேர்ந்தாற்போலல்லாமைபற்றிச் சிவசமமாதற்கிழுக்கில்லை. இரதகுளிகை செம்பையுருக்கித் தன்னொடு கூட்டி வேதித்துப் பொன்னாகச்செய்தும் பொன்னியல்பைக் காட்டாது தன்னுளடக்கி நிற்குமாறுபோல, இறைவன் உயிரை அவ்வாறெல்லாஞ் செய்தும் அதனியல்பு சிறிதுந் தோன்றா தறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துளடக்கி நிற்குமாகலான், அப்பணைந்த உப்பேபோலணைந்து ஒப்பச் செய்தமைபற்றி உம்பர்பிரானொருவனே உற்பத்தியாதிகளுக் குரியனாதற் கிழுக்கில்லை. கருப்பஞ்சாறு முதலிய சுவைப் பொருளெல்லாம் ஒன்றாகக் கலந்தவழி யுளதாகிய சுவை இவ்வியல்பிற்றெனப் பிரித்தறியவாராமைபோல, இறைவனும் உயிரின்கண் அங்ஙனங் கலந்தவழி இவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராது ஆனந்த சொரூபமாய் நிற்பனாகலான், அறிவிறந்து நிற்றல்பற்றி உயிர்தானுஞ் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தாதற்கு இழுக்கில்லை.



சென்றணையும் நிழல்போலச் சிவன் நிற்பனென்பது முதலாகக் கூறும் அவ்வாதிகளை மேலே மறுத்தவழி அவர் கூறும் ஆசங்கைகளை முறையே பரிகரித்துச் சித்தாந்தம் வலியுறுத்தற்பொருட்டு, இங்ஙனம் வெவ்வே றுவமைகளின் வைத்துக் காட்டி ஒருங்கு கூறியவாறு. மலரடிக்கீழ் வைப்பனெனவும், பாதநிழற்கீழ் இருவெனவும், ஏகனாகி நின்றிடவெனவும், அரன் மலரடிக்கீழ் இருப்பனெனவுங் கூறிய இந்நான்கு சூத்திரங்கட்குந் தம்முட் பொருள்வேற்றுமை இல்லைப்போலுமென மயங்காமைப்பொருட்டு இறுதிக்கண் அவற்றைத் தொகுத்தெடுத்துக்கொண்டு சிவரூபமுதலிய நான்காக வகுத்துணர்த்தியவாறுமாம். நின்மலசாக்கிர முதலிய ஐந்தவத்தையுந் தெரித்துக் கூறியவாறென்றலும் ஒன்று. மதங்கத்துட் கூறப்படும் எழுவகை முத்தி

அவன்றானே அறியுஞ்சித் தாதலினு லிரண்டும்
அணைந்தாலு மொன்றாகா தநந்நியமா யிருக்கும்
இவன்றானும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி
இதுஅசித்தென் றிடில்அவனுக் கிவனும்அசித் தாமே. ௩௨௦

(உரை) இருபொருளுஞ் சித்தேயாகலான் ஒத்தொன்றாமென்றலே யமைவுடைத்தன்றி, உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்குமுரித்தேயென வேற்றுமைப்படுத்துக் கூறுதல் ஆண்டைக்கமையாதாலெனின்,—அற்றன்று; ஒளியென்னும் பொதுமையால் ஒத்தொன்றாமாயினும் வியஞ்சகத்தை இன்றியமையாதாய் அதுவதுவாய் முந்திக் காணுங் கண்ணொளிக்கும் அதுபோலத் தனக்கொரு வியஞ்சகம் வேண்டாது தானே வியஞ்சகமாய் எல்லாவற்றையு மொருங்கே விளக்கிநிற்கும் ஞாயிற்றினொளிக்குந் தம்முள் வேற்றுமை பெரிதாயினாற்போல, சித்திரண்டற்குந் தம்முள் அந்தரங்க வேற்றுமை பெரிதுமுண்மையான், அவ்விருபொருளுந் தம்முட் கூடியவழியும் அத்துவிதமாய் நிற்றலேயன்றி ஒன்றாய்ப் போமாறில்லை.

நீருநீரும்போல ஒத்தொன்றாய் நிற்குமென்னும் ஐக்கவாதிகளை மறுத்தற்கெழுந்தவிவ் விரண்டுசெய்யுளும், ஒத்து வேறாய்நிற்குமென்னும் அருவசிவசமவாதிகளை மறுத்தற்குமுரியவாறு காண்க. ௧௧

இரும்பைக்காந்தம் வலித்தாற்போல் இயைந்தங் குயிரை
எரியிரும்பைச் செய்வதுபோல் இவனைத்தா னாக்கி
அரும்பித்திந் தனத்தைஅன லழிப்பதுபோல் மலத்தை
அறுத்தமலன் அப்பணைந்த உப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோல் அடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியைஒத் திருப்பன்அந்த முத்தியினிற் கலந்தே. ௩௨௧

(உரை) காந்தம் விகாரமின்றி நின்றே இரும்பை வலிப்பவுங் கண்டாம்; அதுபோல இறைவனும் விகாரமின்றியே உயிரைத் தன்வழிப்படுத்து நிற்பனாகலாற் சென்றணையுநிழல்போலச் சிவனில்லாமைபற்றிச் சிவன் நிருவிகாரியாதற் கிழுக்கில்லை. எரி இரும்பைக் கெடுத்தலின்றித் தன்வண்ணமாக்கித் தன்வண்ணமாக்குதற்குரித்தாகாது இவ்விரும்பின்கணுடன் தோன்றி நிற்குங் கறைமாத்திரங் கெடச் செய்யும்; அதுபோல இறைவனும் உயிரைத் தன்வண்ணமாகச் செய்து தன்வண்ணமாக்குதற் குரித்தாகாது அவ்வுயிரின்கணுடன்றோன்றி நிற்கு மலமாத்திரங் கெடச் செய்யுமாகலால், பொன்றுகை முத்தியாகாமைபற்றி யொன்றாதற் கிழுக்கில்லை. நீரோடு சேர்ந்தவுப்புத் தன் சுவைமுழுவதுமந் நீர்க்காக்கித் தன்னோடொப்பச் சமஞ்செய்து நிற்கும்; அதுபோல உயிரைச் சேர்ந்த இறைவனுந் தனக்குரிய எண்குணங்களையும் அவ்வுயிரின்கட் பதிப்பித்துத் தன்னோடொப்பச் செய்துநிற்பானாகலான், நீரொடுநீர் சேர்ந்தாற்போலல்லாமைபற்றிச் சிவசமமாதற்கிழுக்கில்லை. இரதகுளிகை செம்பையுருக்கித் தன்னொடு கூட்டி வேதித்துப் பொன்னாகச்செய்தும் பொன்னியல்பைக் காட்டாது தன்னுளடக்கி நிற்குமாறுபோல, இறைவன் உயிரை அவ்வாறெல்லாஞ் செய்தும் அதனியல்பு சிறிதுந் தோன்றா தறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துளடக்கி நிற்குமாகலான், அப்பணைந்த உப்பேபோலணைந்து ஒப்பச் செய்தமைபற்றி உம்பர்பிரானொருவனே உற்பத்தியாதிகளுக் குரியனாதற் கிழுக்கில்லை. கருப்பஞ்சாறு முதலிய சுவைப் பொருளெல்லாம் ஒன்றாகக் கலந்தவழி யுளதாகிய சுவை இவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராமைபோல, இறைவனும் உயிரின்கண் அங்ஙனங் கலந்தவழி இவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராது ஆனந்த சொரூபமாய் நிற்பனாகலான், அறிவிறந்து நிற்றல்பற்றி உயிர்தானுஞ் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தாதற்கு இழுக்கில்லை.

சென்றணையும் நிழல்போலச் சிவன் நிற்பனென்பது முதலாகக் கூறும் அவ்வாதிகளை மேலே மறுத்தவழி அவர் கூறும் ஆசங்கைகளை முறையே பரிகரித்துச் சித்தாந்தம் வலியுறுத்தற்பொருட்டு, இங்ஙனம் வெவ்வே றுவமைகளின் வைத்துக் காட்டி ஒருங்கு கூறியவாறு. மலரடிக்கீழ் வைப்பனெனவும், பாதநிழற்கீழ் இருவெனவும், ஏகனாகி நின்றிடவெனவும், அரன் மலரடிக்கீழ் இருப்பனெனவுங் கூறிய இந்நான்கு சூத்திரங்கட்குந் தம்முட் பொருள்வேற்றுமை இல்லைப்போலுமென மயங்காமைப்பொருட்டு இறுதிக்கண் அவற்றைத் தொகுத்தெடுத்துக்கொண்டு சிவரூபமுதலிய நான்காக வகுத்துணர்த்தியவாறுமாம். நின்மலசாக்கிர முதலிய ஐந்தவத்தையுந் தெரித்துக் கூறியவாறென்றலும் ஒன்று. மதங்கத்துட் கூறப்படும் எழுவகை முத்தி

பரப்பிரமம் இவனென்றும் பரசிவன்தா னென்றும்
பரஞானம் இவனென்றும் பராபரன்தா னென்றும்
அரன்தருஞ்சிற் நிலையெல்லாம் இவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே அவனிவன்தா னாகி
இரங்கியவா ரணம்பாவை மீன்அண்டம் சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போல்சிவமே யாக்கும்
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந் தானே. ௬௨-அ

(உரை) சிவோகமெனத் தகுங் குருமூர்த்தியைத் தெளிந்து ஞானாசாரியனை வழிபடுக; அங்ஙனம் வழிபட்டவழி, அவன் இக்குருவை பாவித்து நின்று நோக்கிச் செய்யும் பரிசமுதலிய மூன்றானும் அவ்வுயிரைத் தன்மயமாகச் செய்தருளுவன்.

அவ்வாசிரியர்க்கு வரும் பயன் கூறியவாறு. பரப்பிரமமென்றது சொரூபசிவத்தையெனவும், பரசிவனென்றது தடத்த சிவத்தையெனவும், பரஞானமென்றது அருளையாதல் அதனையுடையானையெனவும், பராபரனென்றது விளங்காபரமூர்த்தத்தையெனவும், அரன்றருஞ் சிற்நிலையென்றது அறுபத்துமூவரை நாயன்மார் முதலிய மெய்யன்பர் பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளிய மூர்த்திகள் எல்லாவற்றினையுமெனவுங் கொள்க. பரஞானமிவனென்றும் பராபரன்றானென்றும் வழிபடுதலிற்றாப் பட்டமையின் விரைவுடன் கூறினர். ள

புள்ளார். நாயனர் இயற்றியருளிய மற்றைய இரண்டு நூல்களுங்கூட நாயகர் உரையோடு வெளிவரும் நிலையிலிருப்பதறிந்து மகிழ்கிறோம். இதனைச் சைவப் பெருமக்கள் விரைந்து பெறுதலே இதன் உரையாசிரியர்க்கும் இதனை வெளியிட்ட செல்வர்க்கும் செய்யும் நன்றியறிதலாகும். இதன் விலை அணா 6. கிடைக்குமிடம் :—அ. ப. எல்லப்ப நாயகர், 11, கொல்லவார் அக்ராரம் ரோட்டு, பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை.

---

உ

சிவமயம்

# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில் விருத்தம், வேல்விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெயரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக்குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு 1361 பாடல்களும் 1108 பக்கமுங்கொண்ட ஒரே நூலாக நல்ல கிளேஸ் காகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பட்டு முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணாமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள்புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூ. 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூ. 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 2½.

உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-எ, கல்லுக்காரத் தெரு
மயிலாப்பூர், சென்னை

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜத்தின் ஆடி மாதக் கூட்டம் திருவஞ்சைக் களத்தைச் சார்ந்த கொடுங்கோளூரில் கொச்சி அரசாங்கத்து உத்தியோகஸ்தர் திரு. கணபதி ஐயரவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக சுந்தரர் திருநாளன்று (26-7-36) நடைபெற்றது. திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், செறியன் அச்சன் ஆகிய மூவரும், சுந்தரர் சேரமான் பெருமாள் வாழ்க்கை, நட்பு, திருவாக்கு முதலியனபற்றி விரிவுரையாற்றினார்கள். சமாஜ அங்கத்தினர்கள் ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான், திருவாளர்கள் சச்சிதாநந்தம் பிள்ளை, சி. கே. சுப்பிரமணியமுதலியார், ஆர். சதாசிவம்பிள்ளை, எம். ஆர். காளஹஸ்தி முதலியார், பி. தியாகராஜ பிள்ளை, ச. நடேச முதலியார், ம. பாலசுப்பிரமணியம், ஆர். சண்முகசுந்தரம் செட்டியார் முதலிய பலர் ஆடவரும் பெண்டிருமாக ஏறக்குறைய ஐம்பதின்மர் இம்மலைநாட்டுத் தலத்துக்குச் சென்று வழிபாடு செய்தது மிகவும் பாராட்டத் தக்கது. அடுத்த ஆண்டில் இத்திருநாளுக்கு நூற்றுக்கணக்கானவர்கள் வருவார்களென்று எதிர்பார்க்கிறோம். ஏனைய வழிபாட்டு விவரங்களையும் கூட்ட விவரங்களையும் மற்றோரிடத்திற் காண்க.

2. இச் சமாஜத்தின் ஆவணி மாதக் கூட்டம் திருவள்ளூர் என வழங்கும் திருஎவ்வுளூரில் ஆவணிமீ ௧௨ ஞாயிற்றுக்கிழமை (16-8-36) மாலை 3 மணிக்கு நடைபெறும். திருவாளர்கள். அ. சோமசுந்தரம் செட்டியார், புரிசை முருகேச முதலியார், ஜி. கலியாணம் பிள்ளை முதலிய பல அன்பர்கள் பேசுவார்கள்.

3. இச்சமாஜத்தின் புரட்டாசி மாதக் கூட்டம் புரட்டாசிமீ ௧௨ ஞாயிற்றுக்கிழமை (27-9-36) திவான்பகதூர் ஜீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமையில் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் நடைபெறும். திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலிய பல அன்பர்கள் பேசுவார்கள்.

---

## சமாஜம் நடத்தும் சைவத் தேர்வுகள்

1. இவை 1936௵ நவம்பர்மீ 22௳ ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை, தஞ்சை, திருப்பாதிரிப்புலியூர், திருப்பாண்டிக்கொடுமுடி முதலிய பல இடங்களில் பல பேரறிஞர்கள் கண்காணிப்பில் நடைபெறும். மனுத்தாளனுப்புவதற்குக் கடைசி தேதி 30-8-1936. கட்டணம் இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபா ஒன்று; சைவப் புலவர் தேர்வுக்கு ரூபா இரண்டு. பாடங்கள் சென்ற இரண்டு ஆண்டுகளில் விதிக்கப்பட்டவைகளே. எல்லா விவரங்கட்கும் ஒரு அணா தபால் பில்லை வைத்து விண்ணப்பம் செய்க.

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

| மலர் ௯ | தாது ஆண்டு ஆவணித் திங்கள் 1936௵ ஆகஸ்டுமீ | இதழ் ௨ |
| --- | --- | --- |

## சைவர்முன் நிற்கும் பணி*

[சி. எம். இராமச்சந்திர செட்டியார், பி. ஏ., பி. எல்.]

சைவர்களாகிய நம் முன்னர் நாம் செய்ய வேண்டியதாய் நிற்கிற பணி இன்னது என்று அறிவதன் முன் சைவம் என்பதை நாம் எந்த நோக்கத்தில் கொள்ள வேண்டும் என்பதை அறிய வேண்டும். தற்காலத்தில் நம் சைவப் பெரியோர்கள் ஆலயந்தொழுவது, வீடுகளில் பூஜை செய்வது, சபைகளில் சைவத்தைப்பற்றிப் பேசுவது ஆகிய இம்மூன்று பணிகளையே கைக்கொண்டிருக்கிறார்கள். இவைகளில் முதல் இரண்டு பணிகளும் தம் நலமாக, அதாவது, தம் ஆன்ம ஈடேற்றமடைதற்காக ஏற்பட்டவைகள். மூன்றாவது பணி ஒருவாறு தம் இனத்தார்க்கு நன்மை ஏற்படுவதற்காக

* இது திரிசிராப்பள்ளி சைவசித்தாந்த சபையின் பொன்விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு.

ஆகும். இப்பணிகள் மட்டில் நாம் அடங்கி இருந்தால், நாம் சைவத் திருப்பணியில் முற்பட்டவர்கள் ஆகோம்.

தற்காலத்தில் நமது பெரியோர்கள் சைவத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் நோக்கங்களைச் சிறிது மாற்றிக் கொள்ளவேண்டும். இன்று காலை இங்கே பேசிய அந்தணப் பெரியார், "சைவம் என்பது சாத்வீகமானது; அது பிறரிடம் வலிந்து செல்லாது; அதன் சாத்வீகத்தை அறிந்து அதன் பெருமையை உணர்ந்து பிறர் தாமாகவே அதற்கு ஈடுபடுவர்" என்று கூறினர். இந்தக் கொள்கை எத்துணைப் பெருமை உடைத்தாயினும், நமது சமயாசாரியர்கள் நடத்திக் காட்டிய கொள்கை எனக் கூறல் முடியாது. திருஞானசம்பந்தர் முதலான சைவசமயாசாரியர்கள் சைவத்தை முற்படு சைவமாகக் (ஆக்கிரக சைவம்) கொண்டார்கள். அச்சமயம் தன் பெருமையால் தானே வளரட்டும் என்று சும்மா இருக்கவில்லை. அக்காலத்தில் நாட்டில் ஆழ்ந்துகிடந்த புத்த சமணப் புன்சமயங்களைத் தாக்கி அழித்து மக்களை எல்லாம் சைவசமயத்துக்குத் திருப்பினார்கள். அறிவின்மையிலும் மூட பழக்கங்களிலும் ஆழ்ந்து கிடந்துள்ள மக்களை ஈடேற்றுவதற்காக வலிய முறைகளையே கைக்கொண்டார்கள். எந்தச்சமயமும் தான் பெருகுவதற்கு இம்முறையையே கொண்டிருந்ததல்லவா? சரித்திரம் ஆராய்வோர்கள் இதன் உண்மையை அறிவார்கள். தற்காலத்தில் சாத்வீகப் பிரசாரம் மேன்மையானதென்று பேசுகிற சில சமயத்தார்கள் முற்காலத்தில் தம் மத சரித்திரம் எவ்விதமாய் ஏற்பட்டதென்பதை மறைத்து வைக்க வந்தவர்களேயாவார்கள். ஆகவே, நம் சைவர்களும் சைவ சமயம் முன்னடைய வேண்டும் என்றால் நமது சமயாசாரியர்கள் காட்டிய முறைகளைப் பின்பற்றுவதே வெற்றிக்கு உகந்ததாகும்.



மேலும், சைவசமயம் ஆதிகாலத்தில் ஏனைய மக்களை உட்கொள்ளும் (ஆகர்ஷண) சமயமாக இருந்தது. சமண சமயத்தில் இருந்த பாண்டிய மன்னரைச் சம்பந்தப் பெருந்தகையார் திருநீறு கொடுத்துச் சைவத்தில் ஏற்றுக்கொண்டார். தருமசேனராயிருந்த மருள்நீக்கியார் சைவராகித் திருநாவுக்கரசரானார். மதுரையைச் சுற்றிலும் எண்பெருங்குன்றங்களில் இருந்த பல சமணாசாரியர்கள் திருநீறு பெற்றுச் சைவரானார்கள். இன்னும் ஹூணர்கள் முதலிய பல மிலேச்சர்கள் இந்நாட்டுச் சமயங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். நமது சமயாசாரியர்கள் இக்கொள்கைக்குப் புறம்பாக இருக்கவில்லை. இக்காலத்தில் மட்டும் இக்கொள்கையை ஏன் கைக்கொள்ளக்கூடாதோ?

மேலும் சைவசமயம் பரவும் சமயமாயிருந்தது. அப் பரப்புக்குத் தகுந்தபடி பிரசாரம் செய்யப்பட்டது. தேவாரத் திருப்பதிகங்கள் மூலமாக நாடெங்கும் சமயக் கொள்கைகள் பரப்பப்பட்டன. ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்கே சமய போதனைகளும் பதிகம் ஓதுதலும் ஏற்படுத்தப்பட்டன. சித்தாந்த போதனைகள் மக்களுக்குப் பதிகங்கள் மூலமாகப் போதிக்கப்பட்டன. சைவசமயம் இயற்கைச் சமயம் என்பது எடுத்துக் காட்டப்பட்டது. தேவாராதிகளில் புதைந்து கிடக்கும் சுவைகளும் சரித்திர ஞானமும் சமய ஞானமும் எப்படிப்பட்டவர்களையும் இழுத்துத் தூய நன்மக்கள் ஆக்கிவிடும். இத்தகைய சமயப் பிரசாரத்துடன் சமூக வாழ்வில் சீர்திருத்தமும் ஏற்படும்படி சமயாசாரியர்கள் தம் வாழ்வுகளில் நடத்தியும் காட்டியிருக்கிறார்கள். திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர், அப்பூதியடிகள், பாணபத்திரர் முதலிய பெரியார்களின் சரிதங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் தற்காலத்திலுள்ள பிறவி வேற்றுமைகள் முற்

காலச் சைவர்களிடத்தில் இருந்திருக்க வில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

ஆனால், நாம் என்ன செய்கின்றோம்? நமது நாட்டுச் சமயங்கள் "சனாதனம்" (நிரந்தரமானவை) என்றுசொல்லிப் பெருமை பேசிக் கொண்டிருக்கின்றோம். பல்லாயிரக்கணக்கான தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள் கிறிஸ்துவ முகம்மதிய மதங்களுக்குச் சென்று கொண்டிருக்கையில், "போகட்டும், எத்தனைபேர் போனாலும் நமது சமயம் தொலையாது" என்று சொல்லிக் கொள்ளுகிறோம். இவ்வாறு கண் மூடிக்கொண்டு வேதாந்தம் பேசுவதினால் ஒரு பலனும் இல்லை. நம் சமயங்களைவிடப் பெரும்படியான எண்ணம் கொண்ட பல சமயங்கள் முற்காலத்தில் அழிந்துவிட்டன. நாமும் நம் மக்களைப் புறம்பே தள்ளிக்கொண்டிருந்தால் சமயச் செல்வாக்குக் குறையுமேயன்றி முன்னேற்ற மடையாது.

தற்காலத்தில் முன்னேற்றமடைந்துவரும் கிறிஸ்தவ முகமதிய சகோதரர்கள் எவ்வாறு தம் சமயங்களைப் பரப்பிக்கொண்டு வருகிறார்கள் என்பதைச் சற்று ஆராய்வோம். நாடுமுழுவதும் பாடசாலைகள் வைத்துத் தம் மக்களுக்கேயன்றிப் பிற மக்களுக்கும் சமய போதனை செய்கிறார்கள். போதனை செய்யத்தகுந்த உபாத்தியாயர்களையும் பயிற்றுகிறார்கள். பிள்ளைகள் தங்கள் சமயங்களைச் செவ்வையாய் அறிந்துகொள்வதற்காகத் தெளிவாக நூல்களையும் இயற்றி மிகக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். இவை முதலான செய்கைகளினால் மதப் பிரசாரம் வெற்றியுடன் நடைபெறுகிறது. நமது சைவ மக்கள் இவைகள், எல்லாவற்றிலும் எதிர்நோக்கான நிலையில் இருப்பதைக் காண்கிறோம்.

சைவ மக்கள் பெரும்பான்மையோர் கிறிஸ்தவப் பாடசாலைகளில் பயிற்சி பெறுகிறார்கள். அவர்கள் இளவயதிலேயே கிறிஸ்தவ சமய பாடபோதனை பெறுகிறபடியால்



சைவம் இன்னதென்று அறியாததற்கு முந்தியே கிறிஸ்தவக் கொள்கைகளை அறிந்துகொள்ளுகிறார்கள். இக்காரணத்தினால் பெரியவர்களான பிறகும் கூட சைவசமயக் கொள்கை அவர்கள் நெஞ்சில் புகுவது அரிது. பெரும்பான்மையோர் யாதொரு சமயத்திலும் பற்றில்லாதவர்களாகி உலகாயதத்திலேயே மூழ்கிவிடுகின்றனர். இளமையில் பாடசாலைகளில் பெறும் சமய ஞானமே மிகச் சிறந்தது எனக் கொள்ளல் வேண்டும். அதனை அறிந்து நமது சைவர்கள் ஏதாவது பலன்தரும் பணி ஏற்றுவருகிறார்களா?

படிப்பு முதிர்ந்தால்தான் சமய ஞானமும் முதிரும். எந்தச் சமயிகள் அதிகமாகப் படித்திருக்கிறார்களோ அவர்களிடமே சமயத்தின் பெருமையை அறியலாம். நமது தென்னாட்டின் தற்காலப் படிப்புக் கணக்குகளை ஆராய்ந்தால், எந்தச் சமயிகள் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள் என்று அறியக்கூடும். இதை அறிவதற்காகப் படிப்பு நிலைப் புள்ளிகளை இங்கே எடுத்துக் காட்டுவோம். (கூறும் புள்ளிகளெல்லாம் 1934-35 ஆண்டு புள்ளிகளாகும்.)

| | | ஜனத்தொகை | மாணாக்கர்கள். | நூற்று விகிதம் | உபாத்தியாயர்கள் |
|---|---|---|---|---|---|
| கிறிஸ்தவர். | ஆண் | 863,647 | 153,749 | 17·8 | 2497 |
| | பெண் | 880,261 | 103,559 | 11·8 | 2497 |
| முகம்மதியர். | ஆண் | 16,31,716 | 24,3,661 | 14·9 | |
| | பெண் | 16,74,221 | 960,82 | 5·7 | |
| பிராமணர். | ஆண் | 663,178 | 16,2,285 | 24·5 | 2183 |
| | பெண் | 688,636 | 83,624 | 12·1 | 128 |
| பிராமணரல்லாதார். | ஆண் | 16,216,598 | 13,88,313 | 8·6 | 4394 |
| | பெண் | 16,590,971 | 481,671 | 3·9 | 772 |
| தாழ்ந்த வகுப்பார். | ஆண் | 35,00,481 | 263 829 | 7·5 | 557 |
| | பெண் | 36,17,506 | 76,167 | 2·1 | 122 |
| மொத்தம் : | ஆண் | 23,082,99 | 922,42,745 | 9·7 | 10529 |
| | பெண் | 23,657,108 | 8,51,458 | 3·6 | 3258 |

மேலே காட்டிய பாகுபாட்டில், சைவர்கள் பெரும்பான்மையோர் பிராமணரல்லாதார் என்ற வகுப்பில் சேர்ந்தவர்கள். இவர்களில் ஆண்மக்களில் நூற்றுக்கு 8·6 பேரும், பெண்மக்களில் 2·9 பேரும் படித்தவர்களாயிருந்தால் சைவ சமயம் எவ்வாறு முன்னேற்றமடையும்?

சமயப் பிரசாரமே நோக்கமாகக் கொண்ட கிறிஸ்தவ சங்கத்தார்கள் நாடுமுழுவதும் பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அப்பாடசாலைகள் ஆரம்பக்கல்வி முதற் கொண்டு பல்கலைக்கழகப் படிப்புவரையில் போதிக்கின்றன. நமது நாட்டிலுள்ள பல சமயத்தார்களின் பாடசாலைகளின் கணக்குகளை எடுத்தாராய்ந்து பார்த்தால் கிறிஸ்தவ சங்கப் பாடசாலைகளே பெரும்பான்மையானவைகள் என்பது அறியலாகும். அக் கணக்குகளை இனிக் குறிப்போம்.

| | | கிறிஸ்தவர். | | கிறிஸ்தவரல்லாதவர். | |
|---|---|---|---|---|---|
| | | பாடசாலை. | மாணாக்கர்கள். | பாடசாலை. | மாணாக்கர்கள். |
| கலாசாலை— | ஆண் | 12 | 4439 | 17 | 3570 |
| | பெண் | 4 | 329 | | |
| தொழில் பாடசாலை | ஆண் | | | | 20 |
| | பெண் | 1 | 35 | | |
| மொழிப் பாடசாலை | ஆண் | | | 17 | 556 |
| | பெண் | | | 1 | 14 |
| நடுத்தரம் | ஆண் | 102 | 40,855 | 153 | 60011 |
| | பெண் | 43 | 11,654 | 4 | 1011 |
| ஆரம்பபாடசாலை | ஆண் | 6775 | 31,1373 | 17756 | 98,1,418 |
| | பெண் | 629 | 66060 | 1051 | 78,378 |
| மொத்தம் | | 7733 | 4,52,049 | 19063 | 11,30,297 |

மேலே காட்டிய கணக்கில் ஆரம்ப கல்விப் பாடசாலைகளே சமயப் பிரசாரத்தில் முக்கியமானவைகள். ஆரம்ப கல்வியில் கிறிஸ்தவ சங்கத்தார்கள் நடத்திவரும்



6775 ஆண் பாடசாலைகளில் 3,11,373 ஆண் பிள்ளைகளும் 629 பெண் பாடசாலைகளில் 66,060 பெண் பிள்ளைகளும் வாசித்தால், சமயப் பிரசாரம் எவ்வளவு அதிகமாகும் பாருங்கள். இப்பிள்ளைகளில் பெரும்பான்மையோர் இந்து மக்களே. இவர்கள் சின்னஞ் சிறு வயதிலேயே கிறிஸ்தவ ஞானம் பெறுகிறார்கள். சைவப் பெற்றோர்களோ தம் மக்களின் படிப்பையாவது அவர்களின் சமயப் படிப்பையாவது சிறிதேனும் கவனிக்கிறார்களில்லை. தற்கால வாழ்க்கைப் போரிலே வயிற்றுப்பாட்டிற்கு அலைவதைத் தவிர தம் மக்களின் படிப்பைக் குறித்து சிறிது நேரமாவது ஆலோசிக்கப் பெற்றோர்களுக்குப் பொழுதும் மனோ நிலையும் இருக்கின்றனவா? மேலும் பெண்பிள்ளைகள் விஷயத்தில் அதிகமான கவலை இருக்கவேண்டும். ஏனெனில் அவர்களாலன்றோ அவர்களுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் குண நிலைமை பெறுகிறார்கள்? ஆகவே 66,060 இளம் பெண்பிள்ளைகளை ஏனைய சமயப் பாடசாலைகளில் வைத்துவிட்டால் நம் சமயபோதனை அவர்களுக்கு எவ்விதம் கிடைக்கும்?

பாடசாலைகள் வைப்பது மாத்திரமேயன்றி, அவைகளில் போதிக்கக்கூடிய உபாத்தியாயர்களும் தகுந்த பயிற்சி பெறல் வேண்டாமா? கிறிஸ்தவ பாடசாலைகளில் தகுந்த பயிற்சி தருவதற்காகத் தனிக் கிறிஸ்தவ போதனாமுறைப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பாடசாலைகளில் பாடம் கற்பிக்கும் நேரம் போக மற்ற ஓய்வு நேரங்களில் இவ்வுபாத்தியாயர்கள் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களுக்குப் பிரசங்கம், பஜனை முதலியவை மூலமாகச் சமயப் பிரசாரம் செய்கிறார்கள். சைவர்களில் இவ்வித போதனாமுறைப் பாடசாலை ஒன்றேனும் உண்டா? கிராமங்களில் சென்று எந்த ஆசிரியராவது சமய

போதனை செய்துவருகிறாரா? ஓர் உதாரணம் கூறுங்கள் பார்ப்போம். போதனாமுறைபெறும் உபாத்திமைப் பிள்ளைகளின் கணக்கை எடுத்துக் காட்டுவோம்.

| | ஆண்பாடசாலைகளில். | | பெண்பாடசாலைகளில். | |
|---|---|---|---|---|
| இந்து:— | ஆண் | 63,200 | ஆண் | 3900 |
| | பெண் | 600 | பெண் | 3000 |
| முகமதியர்:— | ஆண் | 3,800 | ஆண் | 76 |
| | பெண் | 10 | பெண் | 600 |
| கிறிஸ்தவர்:— | ஆண் | 14,300 | ஆண் | 450 |
| | பெண் | 2,800 | பெண் | 5000 |
| ஆதிதிராவிடர்:— | ஆண் | 1100 | ஆண் | 26 |
| | பெண் | 23 | பெண் | 50 |

மேற்சொல்லிய பள்ளிகளிலிருந்து 14,750 ஆண் பிள்ளைகளும் 8,400 பெண் பிள்ளைகளும் கிறிஸ்தவர்களில் போதனாமுறை பெறுகிறார்கள். மேலே காட்டிய பள்ளிகளில் இந்துக்கள் பலபேர் இருந்தபோதிலும் இவர்கள் சமயப் படிப்பைப் பெறுவதில்லை என்பதை அறியவேண்டும். நமது தென்னாட்டில் ஒன்றிரண்டு சைவப் பாடசாலைகள் இருப்பதை அறிவோம். ஆனால் அவைகளில் வாசிக்கும் பிள்ளைகள் எத்தனைபேர்? அவர்கள் வாசித்த பிறகு என்ன செய்கிறார்கள்? அப்பாடசாலைகளும் நிரந்தரமாக இருக்கின்றனவா? சிறிது யோசியுங்கள்.

மேலும், சமய போதனைக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் வேறொரு சாதனம் சாப்பாட்டு விடுதியே. பாடசாலைகளுக்கு அடுத்தாற்போல பிள்ளைகள் வசிக்கவும், வாசிக்கவும் விடுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடுதிகள் இரண்டு விதமானவை. இடத்திற்கும் சாப்பாட்டிற்கும் பணம் கொடுத்து வசித்துவரும் விடுதிகள் பல உண்டு. அவ்விதம் கொடுக்கமுடியாத ஏழைப் பிள்ளைகளின் விடுதி



களும் உண்டு. இவைகளை அனாதை விடுதிகள் என்பார்கள். கிறிஸ்தவ சங்கத்தார்கள் பின்கூறிய விடுதிகளை அதிகமாக ஏற்படுத்தி அவைகள் மூலமாக சமயப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அடியில்கண்ட கணக்கு நம் நாட்டு விடுதிகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் காட்டும்.

| | விடுதிகள். | | | மாணவர். | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். | ஆண். | பெண். |
| ஐரோப்பியர் | 16 | 32 | 48 | 1453 | 2039 |
| கிறிஸ்தவர் | 198 | 187 | 385 | 12056 | 11227 |
| ஆதிதிராவிடர் | 39 | 19 | 58 | 2358 | 1098 |
| இந்து | 208 | 24 | 232 | பிரா. 3209 | 394 |
| | | | | பி.அ. 4700 | 1088 |
| முகம்மதியர் | 18 | 4 | 22 | 1313 | 103 |
| | 519 | 265 | 745 | 26035 | 16268 |

மேற்கூறிய கணக்கில் 385 கிறிஸ்தவ விடுதிகளில் 23,283 கிறிஸ்தவப் பிள்ளைகள் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சமயபோதனை கிடைக்கும். சாப்பாட்டுக்கில்லாத அனாதைகளான பல இந்துக்கள் இவ்விடுதிகளில் சேர்ந்து பின்னர்க் கிறிஸ்தவர்கள் ஆகிவிடுவது சகஜமே. சைவர்களுக்கு எத்தனை விடுதிகள் உண்டு? எந்த சைவப் பெரியார் இவ்வித விடுதிகளைக் காண்கிறார்? சமய போதனை செய்து வருகிறார்?

இவ்வித கேள்விகளைக் கிளப்பிவிட்டால் நமது பெரியார்கள் "கிறிஸ்தவர்களுக்குப் பண வருவாய் உண்டு; நமக்கு இல்லை; என்ன செய்வது?" என்பார்கள். உண்மையை ஆராய்ந்தால், இவ்வித ஏக்கம் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. நம்மவர்களுக்கு ஊக்கம்தான் இல்லை என்று சொல்லவேண்டும். கிறிஸ்தவ சங்கத்தார்களுக்கு

பொழுதும் அலைந்து புலம்புமாறு, அந்த நாளில் அதன்கண் அமுதம் பிறந்தது என்று கூறுவர்.

மத்தென நாணென நின்ற எனவெனெச்சங்கள் முறையே, நிறுவி சுற்றி என்னும் வினைகொண்டன. நஞ்சும் மணியும் பிதுங்கினவாயினும், அவற்றுள் நஞ்செழுந்து, கடைந்தார்க்குப் பெருந் துன்பத்தைச் செய்தமையின் அதனை "நஞ்சொடு" என விதந்தார். பணாமணி, வடநூல் முடிபு. மெய்வலி மிக்கவராதல்பற்றி, "அவுணரோடு" என்றார். இயக்கலாற்று என்பது ஒரு சொல்லாய், காரணப் பொருட்டாகிய பெயரெச்சமாகி, நாள் என்னும் பெயர் கொண்டது. இயக்கவாற்று என்ற பாடத்துக்கு, அவுணரும் தேவரும் இயக்கவும், ஆற்றாமையால் என்று உரைக்க. முழுவலி, எறுழ் என்பன ஒரு பொருட் பன்மொழியாய் வலிமையின் மிகுதி புணர நின்றன. கடைந்தவழி எழுந்த வோசை, வாய்விட் டலறுவது போன்றமையின், "வாய்விட் டலறி" என்றார். வாய் திறந்து அலறுவது கூறினமையின், அதற்கேற்பத் தலைவிரித்தலும், கையெடுத்தலும் கூறினார். இதனாற்பயன், கடலாகிய பெண், அவர்கள் கடைதலால் ஆற்றாது இவ்வாறு புலம்பினள் என்பது. அலைகடல் இன்றும் ஒலமிட்டுத் திரிதற்குக் காரணம் அதுவே என்றற்கு, "இன்றும் கூப்பிட" என்றார். கூப்பிட வென்றது கடைந்தது போதும்; யான் இனி ஆற்றேன் என்று கூறி இரங்கி நிற்கும் பொருண்மை தோன்ற நின்றது. கடைதலாற் பிறந்து எழும் இயல்பிற்றாகலின், "வந்து எழுந்தது" என்றார். சாவாமருந்தாயினும், உவரியிற் பிறந்தமை பற்றி, "உவரியமிழ்தம்" என விசேடித்தார். மேலே, அஞ்ஞானக் கடலினின்று, ஞானாமிருதம் பிறத்தல் கூறுகின்றாராகலின், ஈண்டு உவர்க்கடலினின்றும் இன்னமுதம் பிறத்தல் கூறுகின்றார். "அப்புறத்த கடல்நஞ்சம் உண்



டான் றன்னை" என்ற திருநாவுக்கரசரும். "அமிர்தம் வந்தது பாற்கடலி லல்ல; அமிர்து கடைந்தது லவண சமுத்திரத் தெனவுணர்க" (தா. 284) எனத் தக்க யாகப் பரணியுரைகாரரும் கூறுதல் காண்க. அலறி, விரித்து எடுத்து என நின்ற வினையெச்சங்கள் கூப்பிட என்னும் வினைகொண்டன.

மந்தரம் என்பது மேரு மலையின் ஒரு சிகரம். வடமுகச் சிகரமெனத் தக்கயாகப் பரணியுரைகாரரும், கீழ்த் திசையிலுள்ளதெனக் கந்தபுராணமுடையாரும் கூறுப. ஐந்து தலை நாகம் என்றது வாசுகியென்னும் பாம்பினை. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி, கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே" (சிலப். ஆய்ச்சி) என்றும், "நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கு மத்தாகப், பாகந் தேவரோ டசுரர் படுகடல் அளறெழக் கடைய" (திருநா. மறைக்காடு. எ) என்றும் வருவனவற்றால் இவ்வரலாறு அறியப்படும்.

இதுகாறும் கூறியவற்றால், தேவரும் அவுணரும் அமுதம் வேண்டி, மந்தரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு, கடலைக் கடைந்தும், முயற்சி முற்றாது தளர, முகுந்தன், தன் முழுவலி எறுழ்த் தோளால் அதுசெய்ய, அதற்கு ஆற்றாத கடல், அவ்வமுதம் தோன்றுமாறு, நுரைத்துக் கலக்குண்டு ஒலிட்டு நிற்ப, உவரி அமுதம்எழுந்தது என்பது கூறியவாறு.

௯ .........................தமிழ் வளர்
குமுதச் செவ்வாய்க் கோமள வல்லி,
இமய வல்லி எழில்பெற விளங்கிய
நுதல்விழி நாட்டத் தொருதனிக் கடவுள்,
அருளின் கொம்பரோ(டு) அமரரும் முனிவரும்
"வெருளின் பிறவி வேர்தணி விமல!"என்று

(21) என்றது, "உறவுகோல்நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" (தனி. குறுந். மாசில். 10) என்னும் திருநெறித் தமிழின் நிறைமொழியை நினைப்பிக்கின்றது.

அஞ்ஞானமாகிய கருங்கடல் இவ்வாறு கடையப்பட்ட வழி, பேரொளியொடு கூடியஞானம் தோன்றுதலின், அதன் முன் நிற்றலாற்றாத இவ்வஞ்ஞானம் கெடுவதன்றிப் பிறிது செய்தற் கின்மையின், "மறுகுபு கலுழ்ந்து" என்றார். செய்பு என்னும் வினையெச்சம் கலுழ்ந்தென்னும் வினைகொண்டது. வினை, நல்வினை தீவினை யென்ற இருவினையுமாம். இவ் வினைகள் தாமும், செய்தானது உடம் பழியினும், அவன் உயிரின் கட் கிடந்து, அது புக்குழிப்புக்குத் தம்பயனை ஊட்டாது கழியாத வன்மை யுடையவாகலின், "வல்வினை" யென்றதனோடு அமையாது "திண்கை" என்றார். எனவே, இவையும் அறியாமை காரணமாகப் பிறத்தலும் கூறியவாறாயிற்று. இதுகாறும் அறியாமையால் உடன் கிடந்த வினைகள், ஞானத் தோற்றத்தின் கண் நீங்குதல் வேண்டுமாகலின் "மேலெடுத்து" என்றார்.

வினைநீக்கமும், அறியாமையழிவும் எய்தியவழி அவற்றின் உடன்நின்று முடியும் அறுவகைக் குற்றமும், தாமே நீங்கல் வேண்டுதலின், "அறுவகைப்பித்தை சிறுபுறத் தலைய" என்றார். பித்தை, தலைமயிர். அறுவகைக் குற்றமாவன: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. இவை நீங்கியவழி பிறவிப் பிணியும் கெட்டழிதலின், "பிறவிப் பேரிடர் அலமந்து ஒலமிட்டு இரியல் போக" என்றார். அஞ்ஞானக் கடலில் எழும் வினையலைகளின் வன்மை மென்மைகட் கேற்ப, பிறவிப் பேரிடர் முழக்கம் அமைந்துவரும் அமைதி குறித்து, "பிறவிப் பேரிடர்" என விசேடித்தும், பற்றுக்கோ டின்மையின், அலைந்து நீங்குதல் பற்றி, "அலமந்து ஒலிட்டு இரியல்போக" என்றும் கூறினர். பிறாண்டும் "தண்டாப் பிறவிப்பேரிடர்" (அகவ. 32 : 3) என்றே கூறுப. காரண காரியமாய்த் தொடர்வதாகலின் "பேரிடர்" எனப்பட்டது. இரியல்போக என்பன "அரிபுகு பொழுதின் இரியல் போகி" (பெரும்பாண். 202) "இரியற் போக்கும்" (புறம். 135) என இணைந்து நின்றே நீங்கல், கெடுதல் முதலிய பொருள் குறித்து வருகின்றன. அஞ்ஞானம் என்பது அச்சானம் என நின்று அச்சான ஆழி எனற்பாலது அச்சாணாழி என முடிந்தது. ஆழி என்றவிடத்து எழனுருபு தொக்கது. என்றும் நின்று நிலவுதலின், "ஆணச் செவ்வி" என்றார்.

எல், ஒளி. படுதல், தோன்றுதல். "எற்படக் கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்" (முருகு. 74-5) என்று நக்கீரனார் கூறுதல் காண்க. சுட்டு வருவிக்கப்பட்டது. விறகுந்தீயும் போல உயிர்களிடத்து அஞ்ஞானமும் ஞானமும்விரவிநின்று, விறகைக் கடைந்தவழித் தீப்பிறத்தல்போல, தீக்கையால் உயிரிடத்து ஞானம் பிரகாசிக்குமாறு அமைந்திருத்தலின், "அச்சாணாழி எற்பட எழுதலின், ஞானமிருதம்" என்றார். இதனை, "பொடியாப்புடைபடவுயர்ந்த, இந்தனக் குழுவைக் கொந்தழலடூஉம், கூடநின்றும் பீடுதருபாயம், செல்லாக்காலை மெல்லெனவிளங்க, ஒல்லா வல்லழல் போலநல்லோய், ஞானமும்இன்மையும் நலமிக்கு ஆனுயிர்கட் குணர்வனைவகையே" (அகவ. 70) என்பதனாலறிக. இந்நூற்கு இப்பெயர் தேசிகனாலிடப்பட்டதாகலின், "என்ப" என்றார்.

இதுகாறும் கூறியவாற்றால், மந்தரமலையை மத்தாகவும், ஐந்தலை யரவினை நாணாகவும் கொண்டு தேவரும் அவுணரும் அமுதம்வேண்டிக் கடலைக்கடைய மாட்டாமையால், நாள்பல செல்ல, முடிவில் முகுந்தன் அந்நாணைப்பற்றிக் கடைதலும்,

பொழுதும் அலைந்து புலம்புமாறு, அந்த நாளில் அதன்கண் அமுதம் பிறந்தது என்று கூறுவர்.

மத்தென நாணென நின்ற எனவெனெச்சங்கள் முறையே, நிறுவி சுற்றி என்னும் வினைகொண்டன. நஞ்சும் மணியும் பிதுங்கினவாயினும், அவற்றுள் நஞ்செழுந்து, கடைந்தார்க்குப் பெருந் துன்பத்தைச் செய்தமையின் அதனை "நஞ்சொடு" என விதந்தார். பணுமணி, வடநூல் முடிபு. மெய்வலி மிக்கவராதல்பற்றி, "அவுணரோடு" என்றார். இயக்கலாற்று என்பது ஒரு சொல்லாய், காரணப் பொருட்டாகிய பெயரெச்சமாகி, நாள் என்னும் பெயர் கொண்டது. இயக்கவாற்று என்ற பாடத்துக்கு, அவுணரும் தேவரும் இயக்கவும், ஆற்றாமையால் என்று உரைக்க. முழுவலி, எறுழ் என்பன ஒரு பொருட் பன்மொழியாய் வலிமையின் மிகுதி யுணர நின்றன. கடைந்தவழி எழுந்தவோசை, வாய்விட் டலறுவது போன்றமையின், "வாய்விட் டலறி" என்றார். வாய் திறந்து அலறுவது கூறினமையின், அதற்கேற்பத் தலைவிரித்தலும், கையெடுத்தலும் கூறினார். இதனாற்பயன், கடலாகிய பெண், அவர்கள் கடைதலால் ஆற்றாது இவ்வாறு புலம்பினள் என்பது. அலைகடல் இன்றும் ஓலமிட்டுத் திரிதற்குக் காரணம் அதுவே என்றற்கு, "இன்றும் கூப்பிட" என்றார். கூப்பிட வென்றது கடைந்தது போதும்; யான் இனி ஆற்றேன் என்று கூறி இரங்கி நிற்கும் பொருண்மை தோன்ற நின்றது. கடைதலாற் பிறந்து எழும் இயல்பிற்றாகலின், "வந்து எழுந்தது" என்றார். சாவாமருந்தாயினும், உவரியிற் பிறந்தமை பற்றி, "உவரியமிழ்தம்" என விசேடித்தார். மேலே, அஞ்ஞானக் கடலினின்று, ஞானமிருதம் பிறத்தல் கூறுகின்றாராகலின், ஈண்டு உவர்க்கடலினின்றும் இன்னமுதம் பிறத்தல் கூறுகின்றார். "அப்புறத்த கடல்நஞ்சம் உண்



டான் றன்னை" என்ற திருநாவுக்கரசரும். "அமிர்தம் வந்தது பாற்கடலி லல்ல; அமிர்து கடைந்தது லவண சமுத்திரத் தெனவுணர்க" (தா. 284) எனத் தக்க யாகப் பரணியுரைகாரரும் கூறுதல் காண்க. அலறி, விரித்து எடுத்து என நின்ற வினையெச்சங்கள் கூப்பிட என்னும் வினைகொண்டன.

மந்தரம் என்பது மேரு மலையின் ஒரு சிகரம். வடமுகச் சிகரமெனத் தக்கயாகப் பரணியுரைகாரரும், கீழ்த் திசையிலுள்ளதெனக் கந்தபுராணமுடையாரும் கூறுப. ஐந்து தலை நாகம் என்றது வாசுகியென்னும் பாம்பினை. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி, கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே" (சிலப். ஆய்ச்சி) என்றும், "நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கு மத்தாகப், பாகந் தேவரோ டசுரர் படுகடல் அளறெழக் கடைய" (திருநா. மறைக்காடு. எ) என்றும் வருவனவற்றால் இவ்வரலாறு அறியப்படும்.

இதுகாறும் கூறியவற்றால், தேவரும் அவுணரும் அமுதம் வேண்டி, மந்தரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு, கடலைக் கடைந்தும், முயற்சி முற்றாது தளர, முகுந்தன், தன் முழுவலி எறுழ்த் தோளால் அதுசெய்ய, அதற்கு ஆற்றாத கடல், அவ்வமுதம் தோன்றுமாறு, நுரைத்துக் கலக்குண்டு ஓலிட்டு நிற்ப, உவரி அமுதம்எழுந்தது என்பது கூறியவாறு.

9 ......................தமிழ் வளர்
குமுதச் செவ்வாய்க் கோமள வல்லி,
இமய வல்லி எழில்பெற விளங்கிய
நுதல்விழி நாட்டத் தொருதனிக் கடவுள்,
அருளின் கொம்பரோ(டு) அமரரும் முனிவரும்
"வெருளின் பிறவி வேர்தணி விமல!" என்று

போதனை செய்துவருகிறாரா? ஓர் உதாரணம் கூறுங்கள் பார்ப்போம். போதனாமுறைபெறும் உபாத்திமைப் பிள்ளைகளின் கணக்கை எடுத்துக் காட்டுவோம்.

| | ஆண்பாடசாலைகளில். | | பெண்பாடசாலைகளில். | |
|---|---|---|---|---|
| இந்து:— | ஆண் | 63,200 | ஆண் | 3900 |
| | பெண் | 600 | பெண் | 3000 |
| முகமதியர்:— | ஆண் | 3,800 | ஆண் | 76 |
| | பெண் | 10 | பெண் | 600 |
| கிறிஸ்தவர்:— | ஆண் | 14,300 | ஆண் | 450 |
| | பெண் | 2,800 | பெண் | 5000 |
| ஆதிதிராவிடர்:— | ஆண் | 1100 | ஆண் | 26 |
| | பெண் | 23 | பெண் | 50 |

மேற்சொல்லிய புள்ளிகளிலிருந்து 14,750 ஆண் பிள்ளைகளும் 8,400 பெண் பிள்ளைகளும் கிறிஸ்தவர்களில் போதனாமுறை பெறுகிறார்கள். மேலே காட்டிய புள்ளிகளில் இந்துக்கள் பலபேர் இருந்தபோதிலும் இவர்கள் சமயப் படிப்பைப் பெறுவதில்லை என்பதை அறியவேண்டும். நமது தென்னாட்டில் ஒன்றிரண்டு சைவப் பாடசாலைகள் இருப்பதை அறிவோம். ஆனால் அவைகளில் வாசிக்கும் பிள்ளைகள் எத்தனைபேர்? அவர்கள் வாசித்த பிறகு என்ன செய்கிறார்கள்? அப்பாடசாலைகளும் நிரந்தரமாக இருக்கின்றனவா? சிறிது யோசியுங்கள்.

மேலும், சமய போதனைக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் வேறொரு சாதனம் சாப்பாட்டு விடுதியே. பாடசாலைகளுக்கு அடுத்தாற்போல பிள்ளைகள் வசிக்கவும், வாசிக்கவும் விடுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடுதிகள் இரண்டு விதமானவை. இடத்திற்கும் சாப்பாட்டிற்கும் பணம் கொடுத்து வசித்துவரும் விடுதிகள் பல உண்டு. அவ்விதம் கொடுக்கமுடியாத ஏழைப் பிள்ளைகளின் விடுதிகளும் உண்டு. இவைகளை அனாதை விடுதிகள் என்பார்கள். கிறிஸ்தவ சங்கத்தார்கள் பின்கூறிய விடுதிகளை அதிகமாக ஏற்படுத்தி அவைகள் மூலமாக சமயப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அடியில்கண்ட கணக்கு நம் நாட்டு விடுதிகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் காட்டும்.



| | விடுதிகள். | | | மாணவர். | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். | ஆண். | பெண். |
| ஐரோப்பியர் | 16 | 32 | 48 | 1453 | 2039 |
| கிறிஸ்தவர் | 198 | 187 | 385 | 12056 | 11227 |
| ஆதிதிராவிடர் | 39 | 19 | 58 | 2358 | 1098 |
| இந்து | 208 | 24 | 232 | பிரா. 3209 | 394 |
| | | | | பி.அ. 4700 | 1088 |
| முகம்மதியர் | 18 | 4 | 22 | 1313 | 103 |
| | 519 | 265 | 745 | 26035 | 16268 |

மேற்கூறிய கணக்கில் 385 கிறிஸ்தவ விடுதிகளில் 23,283 கிறிஸ்தவப் பிள்ளைகள் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சமயபோதனை கிடைக்கும். சாப்பாட்டுக்கில்லாத அனாதைகளான பல இந்துக்கள் இவ்விடுதிகளில் சேர்ந்து பின்னர்க் கிறிஸ்தவர்கள் ஆகிவிடுவது சகஜமே. சைவர்களுக்கு எத்தனை விடுதிகள் உண்டு? எந்த சைவப் பெரியார் இவ்வித விடுதிகளைக் காண்கிறார்? சமய போதனை செய்து வருகிறார்?

இவ்வித கேள்விகளைக் கிளப்பிவிட்டால் நமது பெரியார்கள் "கிறிஸ்தவர்களுக்குப் பண வருவாய் உண்டு; நமக்கு இல்லை; என்ன செய்வது?" என்பார்கள். உண்மையை ஆராய்ந்தால், இவ்வித ஏக்கம் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. நம்மவர்களுக்கு ஊக்கம்தான் இல்லை என்று சொல்லல்வேண்டும். கிறிஸ்தவ சங்கத்தார்களுக்கு

மேலே காட்டிய பாகுபாட்டில், சைவர்கள் பெரும் பான்மையோர் பிராமணரல்லாதார் என்ற வகுப்பில் சேர்ந்தவர்கள். இவர்களில் ஆண்மக்களில் நூற்றுக்கு 8·6 பேரும், பெண்மக்களில் 2·9 பேரும் படித்தவர்களாயிருந்தால் சைவ சமயம் எவ்வாறு முன்னேற்றமடையும்?

சமயப் பிரசாரமே நோக்கமாகக் கொண்ட கிறிஸ்தவ சங்கத்தார்கள் நாடுமுழுவதும் பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அப்பாடசாலைகள் ஆரம்பக்கல்வி முதற்கொண்டு பல்கலைக்கழகப் படிப்புவரையில் போதிக்கின்றன. நமது நாட்டிலுள்ள பல சமயத்தார்களின் பாடசாலைகளின் கணக்குகளை எடுத்தாராய்ந்து பார்த்தால் கிறிஸ்தவ சங்கப் பாடசாலைகளே பெரும்பான்மையானவைகள் என்பது அறியலாகும். அக் கணக்குகளை இனிக் குறிப்போம்.

| | | கிறிஸ்தவர். | | கிறிஸ்தவரல்லாதவர். | |
|---|---|---|---|---|---|
| | | பாடசாலை. | மாணாக்கர்கள். | பாடசாலை. | மாணாக்கர்கள். |
| கலாசாலை— | ஆண் | 12 | 4439 | 17 | 3570 |
| | பெண் | 4 | 329 | | |
| தொழில் பாடசாலை | ஆண் | | | | |
| | பெண் | 1 | 35 | | 20 |
| மொழிப் பாடசாலை | ஆண் | | | 17 | 556 |
| | பெண் | | | 1 | 14 |
| நடுத்தரம் | ஆண் | 102 | 40,855 | 153 | 60011 |
| | பெண் | 43 | 11,654 | 4 | 1011 |
| ஆரம்பபாடசாலை | ஆண் | 6775 | 31,1373 | 17756 | 98,1,418 |
| | பெண் | 629 | 66060 | 1051 | 78,378 |
| மொத்தம் | | 7733 | 4,52,049 | 19063 | 11,30,297 |

மேலே காட்டிய கணக்கில் ஆரம்ப கல்விப் பாடசாலைகளே சமயப் பிரசாரத்தில் முக்கியமானவைகள். ஆரம்ப கல்வியில் கிறிஸ்தவ சங்கத்தார்கள் நடத்திவரும்



6775 ஆண் பாடசாலைகளில் 3,11,373 ஆண் பிள்ளைகளும் 629 பெண் பாடசாலைகளில் 66,060 பெண் பிள்ளைகளும் வாசித்தால், சமயப் பிரசாரம் எவ்வளவு அதிகமாகும் பாருங்கள். இப்பிள்ளைகளில் பெரும்பான்மையோர் இந்து மக்களே. இவர்கள் சின்னஞ் சிறு வயதிலேயே கிறிஸ்தவ ஞானம் பெறுகிறார்கள். சைவப் பெற்றோர்களோ தம் மக்களின் படிப்பையாவது அவர்களின் சமயப் படிப்பையாவது சிறிதேனும் கவனிக்கிறார்களில்லை. தற்கால வாழ்க்கைப் போரிலே வயிற்றுப்பாட்டிற்கு அலைவதைத் தவிர தம் மக்களின் படிப்பைக் குறித்து சிறிது நேரமாவது ஆலோசிக்கப் பெற்றோர்களுக்குப் பொழுதும் மனோ நிலையும் இருக்கின்றனவா? மேலும் பெண்பிள்ளைகள் விஷயத்தில் அதிகமான கவலை இருக்கவேண்டும். ஏனெனில் அவர்களாலன்றோ அவர்களுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் குண நிலைமை பெறுகிறார்கள்? ஆகவே 66,060 இளம் பெண்பிள்ளைகளை ஏனைய சமயப் பாடசாலைகளில் வைத்துவிட்டால் நம் சமயபோதனை அவர்களுக்கு எவ்விதம் கிடைக்கும்?

பாடசாலைகள் வைப்பது மாத்திரமேயன்றி, அவைகளில் போதிக்கக்கூடிய உபாத்தியாயர்களும் தகுந்த பயிற்சி பெறல் வேண்டாமா? கிறிஸ்தவ பாடசாலைகளில் தகுந்த பயிற்சி தருவதற்காகத் தனிக் கிறிஸ்தவ போதனாமுறைப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பாடசாலைகளில் பாடம் கற்பிக்கும் நேரம் போக மற்ற ஒய்வு நேரங்களில் இவ்வுபாத்தியாயர்கள் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களுக்குப் பிரசங்கம், பஜனை முதலியவை மூலமாகச் சமயப் பிரசாரம் செய்கிறார்கள். சைவர்களில் இவ்வித போதனாமுறைப் பாடசாலை ஒன்றேனும் உண்டா? கிராமங்களில் சென்று எந்த ஆசிரியராவது சமய

போதனை செய்துவருகிறாரா? ஓர் உதாரணம் கூறுங்கள் பார்ப்போம். போதனாமுறைபெறும் உபாத்திமைப் பிள்ளைகளின் கணக்கை எடுத்துக் காட்டுவோம்.

| | | ஆண்பாடசாலைகளில். | | பெண்பாடசாலைகளில். |
|---|---|---|---|---|
| இந்து:— | ஆண் | 63,200 | ஆண் | 3900 |
| | பெண் | 600 | பெண் | 3000 |
| முகமதியர்:— | ஆண் | 3,800 | ஆண் | 76 |
| | பெண் | 10 | பெண் | 600 |
| கிறிஸ்தவர்:— | ஆண் | 14,300 | ஆண் | 450 |
| | பெண் | 2,800 | பெண் | 5000 |
| ஆதிதிராவிடர்:— | ஆண் | 1100 | ஆண் | 26 |
| | பெண் | 23 | பெண் | 50 |

மேற்சொல்லிய புள்ளிகளிலிருந்து 14,750 ஆண் பிள்ளைகளும் 8,400 பெண் பிள்ளைகளும் கிறிஸ்தவர்களில் போதனாமுறை பெறுகிறார்கள். மேலே காட்டிய புள்ளிகளில் இந்துக்கள் பலபேர் இருந்தபோதிலும் இவர்கள் சமயப் படிப்பைப் பெறுவதில்லை என்பதை அறியவேண்டும். நமது தென்னாட்டில் ஒன்றிரண்டு சைவப் பாடசாலைகள் இருப்பதை அறிவோம். ஆனால் அவைகளில் வாசிக்கும் பிள்ளைகள் எத்தனைபேர்? அவர்கள் வாசித்த பிறகு என்ன செய்கிறார்கள்? அப்பாடசாலைகளும் நிரந்தரமாக இருக்கின்றனவா? சிறிது யோசியுங்கள்.

மேலும், சமய போதனைக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் வேறொரு சாதனம் சாப்பாட்டு விடுதியே. பாடசாலைகளுக்கு அடுத்தாற்போல பிள்ளைகள் வசிக்கவும், வாசிக்கவும் விடுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடுதிகள் இரண்டு விதமானவை. இடத்திற்கும் சாப்பாட்டிற்கும் பணம் கொடுத்து வசித்துவரும் விடுதிகள் பல உண்டு. அவ்விதம் கொடுக்கமுடியாத ஏழைப் பிள்ளைகளின் விடுதி



களும் உண்டு. இவைகளை அனாதை விடுதிகள் என்பார்கள். கிறிஸ்தவ சங்கத்தார்கள் பின்கூறிய விடுதிகளை அதிகமாக ஏற்படுத்தி அவைகள் மூலமாக சமயப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அடியில்கண்ட கணக்கு நம் நாட்டு விடுதிகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் காட்டும்.

| | விடுதிகள். | | | மாணவர். | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். | ஆண். | பெண். |
| ஐரோப்பியர் | 16 | 32 | 48 | 1453 | 2039 |
| கிறிஸ்தவர் | 198 | 187 | 385 | 12056 | 11227 |
| ஆதிதிராவிடர் | 39 | 19 | 58 | 2358 | 1098 |
| இந்து | 208 | 24 | 232 | பிரா. 3209 | 394 |
| | | | | பி.அ. 4700 | 1088 |
| முகம்மதியர் | 18 | 4 | 22 | 1313 | 103 |
| | 519 | 265 | 745 | 26035 | 16268 |

மேற்கூறிய கணக்கில் 385 கிறிஸ்தவ விடுதிகளில் 23,283 கிறிஸ்தவப் பிள்ளைகள் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சமயபோதனை கிடைக்கும். சாப்பாட்டுக்கில்லாத அனாதைகளான பல இந்துக்கள் இவ்விடுதிகளில் சேர்ந்து பின்னர்க் கிறிஸ்தவர்கள் ஆகிவிடுவது சகஜமே. சைவர்களுக்கு எத்தனை விடுதிகள் உண்டு? எந்த சைவப் பெரியார் இவ்வித விடுதிகளைக் காண்கிறார்? சமய போதனை செய்து வருகிறார்?

இவ்வித கேள்விகளைக் கிளப்பிவிட்டால் நமது பெரியார்கள் "கிறிஸ்தவர்களுக்குப் பண வருவாய் உண்டு; நமக்கு இல்லை; என்ன செய்வது?" என்பார்கள். உண்மையை ஆராய்ந்தால், இவ்வித ஏக்கம் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. நம்மவர்களுக்கு ஊக்கம்தான் இல்லை என்று சொல்லல்வேண்டும். கிறிஸ்தவ சங்கத்தார்களுக்கு

பொழுதும் அலைந்து புலம்புமாறு, அந்த நாளில் அதன்கண் அமுதம் பிறந்தது என்று கூறுவர்.

மத்தென நாணென நின்ற எனவென்னெச்சங்கள் முறையே, நிறுவி சுற்றி என்னும் வினைகொண்டன. நஞ்சும் மணியும் பிதுங்கினவாயினும், அவற்றுள் நஞ்செழுந்து, கடைந்தார்க்குப் பெருந் துன்பத்தைச் செய்தமையின் அதனை "நஞ்சொடு" என விதந்தார். பணுமணி, வடநூல் முடிபு. மெய்வலி மிக்கவராதல்பற்றி, "அவுணரோடு" என்றார். இயக்கலாற்ற என்பது ஒரு சொல்லாய், காரணப் பொருட்டாகிய பெயரெச்சமாகி, நாள் என்னும் பெயர் கொண்டது. இயக்கவாற்ற என்ற பாடத்துக்கு, அவுணரும் தேவரும் இயக்கவும், ஆற்றாமையால் என்று உரைக்க. முழுவலி, எறுழ் என்பன ஒரு பொருட் பன்மொழியாய் வலிமையின் மிகுதி யுணர நின்றன. கடைந்தவழி எழுந்தவோசை, வாய்விட் டலறுவது போன்றமையின், "வாய்விட் டலறி" என்றார். வாய் திறந்து அலறுவது கூறினமையின், அதற்கேற்பத் தலைவிரித்தலும், கையெடுத்தலும் கூறினார். இதனாற்பயன், கடலாகிய பெண், அவர்கள் கடைதலால் ஆற்றாது இவ்வாறு புலம்பினள் என்பது. அலைகடல் இன்றும் ஓலமிட்டுத் திரிதற்குக் காரணம் அதுவே என்றற்கு, "இன்றும் கூப்பிட" என்றார். கூப்பிட வென்றது கடைந்தது போதும்; யான் இனி ஆற்றேன் என்று கூறி இரங்கி நிற்கும் பொருண்மை தோன்ற நின்றது. கடைதலாற் பிறந்து எழும் இயல்பிற்றாகலின், "வந்து எழுந்தது" என்றார். சாவாமருந்தாயினும், உவரியிற் பிறந்தமை பற்றி, "உவரியமிழ்தம்" என விசேடித்தார். மேலே, அஞ்ஞானக் கடலினின்று, ஞானமிருதம் பிறத்தல் கூறுகின்றாராகலின், ஈண்டு உவர்க்கடலினின்றும் இன்னமுதம் பிறத்தல் கூறுகின்றார். "அப்புறத்த கடல்நஞ்சம் உண்டான் றன்னை" என்ற திருநாவுக்கரசரும். "அமிர்தம் வந்தது பாற்கடலி லல்ல; அமிர்து கடைந்தது லவண சமுத்திரத் தெனவுணர்க" (தா. 284) எனத் தக்க யாகப் பரணியுரைகாரரும் கூறுதல் காண்க. அலறி, விரித்து எடுத்து என நின்ற வினையெச்சங்கள் கூப்பிட என்னும் வினைகொண்டன.



மந்தரம் என்பது மேரு மலையின் ஒரு சிகரம். வடமுகச் சிகரமெனத் தக்கயாகப் பரணியுரைகாரரும், கீழ்த் திசையிலுள்ளதெனக் கந்தபுராணமுடையாரும் கூறுப. ஐந்து தலை நாகம் என்றது வாசுகியென்னும் பாம்பினை. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி, கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே" (சிலப். ஆய்ச்சி) என்றும், "நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கு மத்தாகப், பாகந் தேவரோ டசுரர் படுகடல் அளறெழக் கடைய" (திருநா. மறைக்காடு. ௭) என்றும் வருவனவற்றால் இவ்வரலாறு அறியப்படும்.

இதுகாறும் கூறியவற்றால், தேவரும் அவுணரும் அமுதம் வேண்டி, மந்தரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு, கடலைக் கடைந்தும், முயற்சி முற்றாது தளர, முகுந்தன், தன் முழுவலி எறுழ்த் தோளால் அதுசெய்ய, அதற்கு ஆற்றாத கடல், அவ்வமுதம் தோன்றுமாறு, நுரைத்துக் கலக்குண்டு ஓலிட்டு நிற்ப, உவரி அமுதம்எழுந்தது என்பது கூறியவாறு.

9 ........................தமிழ் வளர்
குமுதச் செவ்வாய்க் கோமள வல்லி,
இமய வல்லி எழில்பெற விளங்கிய
நுதல்விழி நாட்டத் தொருதனிக் கடவுள்,
அருளின் கொம்பரோ(டு) அமரரும் முனிவரும்
"வெருளின் பிறவி வேர்தணி விமல!" என்று

(21) என்றது, "உறவுகோல்நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" (தனி. குறுந். மாசில். 10) என்னும் திருநெறித் தமிழின் நிறைமொழியை நினைப்பிக்கின்றது.

அஞ்ஞானமாகிய கருங்கடல் இவ்வாறு கடையப்பட்ட வழி, பேரொளியொடு கூடியஞானம் தோன்றுதலின், அதன் முன் நிற்றலாற்றாத இவ்வஞ்ஞானம் கெடுவதன்றிப் பிறிது செய்தற் கின்மையின், "மறுகுபு கலுழ்ந்து" என்றார். செய்பென்னும் வினையெச்சம் கலுழ்ந்தென்னும் வினைகொண்டது. வினை, நல்வினை தீவினை யென்ற இருவினையுமாம். இவ் வினைகள் தாமும், செய்தானது உடம் பழியினும், அவன் உயிரின்கட் கிடந்து, அது புக்குழிப்புக்குத் தம்பயனை ஊட்டாது கழியாத வன்மை யுடையவாகலின், "வல்வினை" யென்றதனோடு அமையாது "திண்கை" என்றார். எனவே, இவையும் அறியாமை காரணமாகப் பிறத்தலும் கூறியவாறாயிற்று. இதுகாறும் அறியாமையால் உடன் கிடந்த வினைகள், ஞானத் தோற்றத்தின் கண் நீங்குதல் வேண்டுமாகலின் "மேலெடுத்து" என்றார்.

வினைநீக்கமும், அறியாமையழிவும் எய்தியவழி அவற்றின் உடன்நின்று முடியும் அறுவகைக் குற்றமும், தாமே நீங்கல் வேண்டுதலின், "அறுவகைப்பித்தை சிறுபுறத் தலைய" என்றார். பித்தை, தலைமயிர். அறுவகைக் குற்றமாவன: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. இவை நீங்கியவழி பிறவிப் பிணியும் கெட்டழிதலின், "பிறவிப் பேரிடர் அலமந்து ஓலமிட்டு இரியல் போக" என்றார். அஞ்ஞானக் கடலில் எழும் வினையலைகளின் வன்மை மென்மைகட் கேற்ப, பிறவிப் பேரிடர் முழக்கம் அமைந்துவரும் அமைதி குறித்து, "பிறவிப் பேரிடர்" என விசேடித்தும், பற்றுக்கோ டின்மையின், அலைந்து நீங்குதல் பற்றி, "அலமந்து ஓலிட்டு இரியல்போக" என்றும் கூறினர். பிறாண்டும் "தண்டாப் பிறவிப்பேரிடர்" (அகவ. 32 : 3) என்றே கூறுப. காரண காரியமாய்த் தொடர்வதாகலின் "பேரிடர்" எனப்பட்டது. இரியல்போக என்பன "அரிபுகு பொழுதின் இரியல் போகி" (பெரும்பாண். 202) "இரியற் போக்கும்" (புறம். 135) என இணைந்து நின்றே நீங்கல், கெடுதல் முதலிய பொருள் குறித்து வருகின்றன. அஞ்ஞானம் என்பது அச்சானம் என நின்று அச்சான ஆழி எனற்பாலது அச்சானாழி என முடிந்தது. ஆழி என்றவிடத்து எழனுருபு தொக்கது. என்றும் நின்று நிலவுதலின், "ஆனாச் செவ்வி" என்றார்.

எல், ஒளி. படுதல், தோன்றுதல். "எற்படக் கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்" (முருகு. 74-5) என்று நக்கீரனார் கூறுதல் காண்க. சுட்டு வருவிக்கப்பட்டது. விறகும்தீயும் போல உயிர்களிடத்து அஞ்ஞானமும் ஞானமும்விரவிநின்று, விறகைக் கடைந்தவழித் தீப்பிறத்தல்போல, தீக்கையால் உயிரிடத்து ஞானம் பிரகாசிக்குமாறு அமைந்திருத்தலின், "அச்சானாழி எற்பட எழுதலின், ஞானாமிருதம்" என்றார். இதனை, "பொடியாப்புடைபடவுயர்ந்த, இந்தனக் குழுவைக் கொந்தழலடூஉம், கூடநின்றும் பீடுதருபாயம், செல்லாக்காலை மெல்லெனவிளங்க, ஒல்லா வல்லழல் போலநல்லோய், ஞானமும்இன்மையும் நலமிக்கு ஆனாவுயிர்கட் குணர்வனைவகையே" (அகவ. 70) என்பதனாலறிக. இந்நூற்கு இப்பெயர் தேசிகனாலிடப்பட்டதாகலின், "என்ப" என்றார்.

இதுகாறும் கூறியவாற்றால், மந்தரமலையை மத்தாகவும், ஐந்தலை யரவினை நாணாகவும் கொண்டு தேவரும் அவுணரும் அமுதம்வேண்டிக் கடலைக்கடைய மாட்டாமையால், நாள்பல செல்ல, முடிவில் முகுந்தன் அந்நாணைப்பற்றிக் கடைதலும்,

## பாம்பன் சுவாமிகள் பகர்ந்த மணிகள்

"இறைவன்பால் எத்துணைத் தூய்மையுளதோ அத்துணைத் தூய்மை யெய்துதலே வீடுபே றென்றல் சாலும்."

* * *

"உடம்பின் ஓரமிசத்திலே தூர்மாமிசம் வளர்வது போலவே தூர்மதியும் சிலர்பால் வளர்கின்றது."

* * *

"மாட்டை மருப்பாட்டைக் கண்ணுறுபோது குழந்தைகள் அஞ்சுவதுபோல முரணூர் மூர்க்கரைச் சாந்த குணசீலர் காணின் அஞ்சவேண்டியவரே; விளையும்வில் இழிவுடைத் தன்றே."

* * *

"புறங்காடு புறங்காடாகப் புத்தியுடையார் புத்தியைச் செலுத்துகிறூர். அஃறிணை யெனப்படு தாவர மினைத்தும் மேனோக்கி வளர உயர்திணை மக்களுட் சிலரன்றோ கீழ் நோக்கி நிற்கின்றனர்."

* * *

"எட்டிப் பழத்திற்கு அதியழகிய செவ்வண்ணத் திண்மை வாய்ந்தாங்குச் சில மனிதர்க்கு இரத்தினவேல், தங்கவேல், சித்திரவேல், வச்சிரவேல், குமரன், குமாரன், கந்தன் முதலிய திவ்விய நாமங்கள் வாய்ந்திருக்கும். அவர்கள் வளவிய சிவசின்னங்களோடுங் காணப்படல் கூடும். அவர்களை நம்பி மோசப் போதல் கூடாது."

* * *

"புறங்கூறலும், பொருமையும், வஞ்சகமும், கபடமும், நஞ்சினுங் கொடுமையவாகலின் அவற்றை யுடையோன் தன்னையுஞ் சார்ந்துள்ளனவற்றையுங் கெடுக்கும் மூரி மூங்கிலாக வெண்ணப்படுகிறுன். இவன் வாழ்நாளும் வாழ்நாளாய் மதிக்கப்படுமோ? நாகபடம் நாகவுருவின் மறைந்தாங்குச் சீவான்மாவும் பரமான்மாவும் உடம்பிலுமுலகிலும் மறைந்துள்ளன வென்பதை நன்குணராமையினுலேயே அப்புறங்கூறன் முதலிய காரியங்களிலே மனிதன் தலைப்படுவானுகின்றனன்."

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருணந்திசிவாசாரியர்

அருளிச்செய்த

# இருபாவிருபஃது மூலமும்

திருவாவடுதுறையாதீனம்

# நமச்சிவாயத்தம்பிரான் உரையும்

### இந்நூலுக்கு வரலாறவது :—

பூரண கர்த்தாவா யிருக்கப்பட்ட சீகண்டபரமேசுர னருளிச் செய்யப்பட்ட சிவாகமத்தில் ஞானகாண்டமா யிருக்கப்பட்டதைச் சிறீநந்திதேவ தம்பிரானுர்க்குக் கடாட்சித்தருள, சிறீநந்திதேவ தம்பிரானுர் சனற்குமார பகவானுக்குக் கடாட்சித்தருள, சனற்குமார பகவான் சத்தியஞான தெரிசனிகளுக்குக் கடாட்சித்தருள, சத்தியஞான தம்பிரானுர் பரஞ்சோதிமாமுனிக்குக் கடாட்சித்தருள, பரஞ்சோதிமாமுனிகள் திருவெண்ணெய்நல்லூரே திருப்படைவீடாகவுடைய மெய்கண்டதேவ தம்பிரானுர்க்குக் கடாட்சித்தருள, அந்த மெய்கண்டதேவ தம்பிரானுர் தமது திருவடியைப் பெற்ற அருணந்திதேவ தம்பிரானுக்குக் கடாட்சித்தருள, அவர் அந்த உபதேசத்தின் பயனைச் சிவஞானசித்தி யென்னுந் திருநாமத்தினையுஞ் சாத்தி, வழிநூலாகச் செய்தருளி, அதுவன்றியும் அந்நூலி லத்தங்கள் விளங்குகை நிமித்தமாக அந்த உபதேச சம்பிரதாயங்களை யெல்லாம் ஆசாரியனை முன்னிலைக் கர்த்தாவாக நாட்டி வினுவாக வெடுத்துக்கொண்டு பத்து வெண்பாவும் பத்தகவலும் இரண்டு பாவாகக்கொண்டு இருபாவிருபது வென்னுந் திருநாமத்தினையுஞ் சாத்தி இந்நூலருளிச்செய்ததென வறிக.

ஒராலினையுணர்த்தும் - அடியேனை விட்டுத் தேவரீர் நீக்கமாக நின்றருளுமென்கின்றதை யுண்டாக்கும்,

விராய் நின்றனையேல் - அப்படி நம்மை நீக்கமாகச்சொல்லாது நாமும் உன்னோடு கூடியே நிற்போமென் றருளிச்செய்யில்.—அதற்கு உதாரணம் சிவஞானபோதத்தில் "மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்" [vii, 1] தென்ற பாடத்தில், 'தண்கடனீ ருப்புப் போற் றானே யுளவுளவாய்த் தா' னென்பது கண்டுகொள்க.

திப்பியமந்தோ - அப்படித் தேவரீரருளிச்செய்தது தெய்வீகமானதோர் ஆச்சரியமாகவிருந்தது. அதுவென்னென்று கேட்டருளுகில்,

பொய்ப்பகை யாகாய் - அப்படி அஞ்ஞானத்தோடும் கூடியிருக்கப்பட்ட அடியேனோடுந் தேவரீருங் கூடியிருக்குமாகில் பொய்யென்று சொல்லப்பட்டு வருகிற அஞ்ஞானத்தைச் சோதிக்கிறவனென்று தேவரீரைச் சொல்லவேண்டியதில்லையாம். அன்றியும்,

சுத்தனமலன் சோதிநாயகன் முத்தன் பரம்பரனெனும் பெயர் முடியா - சுத்தனாயிருக்கிறவனென்றும் நின்மலனென்றும் பேரொளியாயிருக்கப்பட்ட கத்தாவென்றுஞ் சர்வ வுபாதிகளையுங் கழன்று அப்பாற்பட்டவனென்றும் வத்துவென்று சொல்லப்பட்டதற்கெல்லா மப்பாற்பட்ட வத்துவென்றும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட திருநாமங்களுந் தேவரீருக்குண்டாகாது.—அதுவெப்படி யென்னில்,மலரகிதன் மலசம்பந்தியா யிருக்கிறவனோடுகூடி நில்லானென்று சீஷன் வினவ அப்படியல்ல,

வேறுநின் றுணர்த்தின் - அப்படியுன்னோடேகூடி நிற்பதில்லை உன்னறிவுக்கறிவாக நாம் வேறே நின்றே யுன்னையறிவித்து நிற்போமென்றருளிச்செய்யில்.—உதாரணம் சிவஞானபோதத்தில் "மன்னு சிவன் சன்னிதியின் மற்றுலகஞ் சேட்டித்த, தென்னு மறையினியல்மறந்தாய் - சொன்னசிவன், கண்ணா யுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா, ணெண்ணான் சிவனசத்தை யின்று" [v, 2] என்பது கண்டுகொள்க.

வியாபகமின்றாய்ப் பேறுமின்றா மெமக் கெம்பெரும - என்னுடைய பெருமானே அப்பொழுது தேவரீருக்குச் சர்வவியாபியென்கி



றது மில்லையாய் அடியேனுக்குச் சாயுச்சியமென்கிற பேறுமில்லையாம். அன்றியும்,

இருநிலந் தீநீரியமானன் காவெனும் பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கிலாதலின் - "இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமானனாயெறியுங் காற்று மாகி, யருநிலைய திங்களாய் ஞாயி றாகி யாகாய மாயட்ட மூர்த்தி யாகி" [அப்பர், நின்ற திருத்தாண்டகம், 1] என்ற தேவாரத்தின்படி பூரணநிலையாகிய திருக்கூத்துந் தேவரீர்க் கில்லையாம். ஆகையால்,

வேறாயுடனா விளம்பல் வேண்டும் - தேவரீர் அடியேனை யறிவிக்குமிடத்து வேறாகநின் றறிவிக்குமோ உடனா திருவுளம்பற்ற வேணும்,

சீறியருளல் - அப்படி யடியேன் கேட்ட வினாவுக்கு ஆசாரியரூற்று விடையமருளிச்செய்யாமற் றிருவுளக்கேடாக வேண்டுவதில்லை. அதுவேனென்று கேட்டருளுகில்,

சிறுமையுடைத்தால் - அடியேன் தற்போதனாகையினாலே தோன்றினதை விசாரியாமல் விண்ணப்பஞ்செய்தேன் அதற்குத்தரமருளிச்செய்து தெளிவிக்கையே வேண்டுவது.—சிறுமையுடைத்தாமென்பதற்கு ஆசாரியர்மேல் வைத்துப் பொருளுரைப்பாருமுளர். அது குருசீஷக் கிரமத்துக்குப் போதாதாகையால் அதுபொருளாகாதெனவறிக. இதல்லாமலுஞ் சீஷன் கேட்ட வினாவுக்கு ஆசாரியருத்தாஞ் சொல்லி வரையிலேயுஞ் சீஷனைக் கோபித்துக்கொண்டபடியினாலேயுஞ் சீஷன் வினாவறியாமற் கேட்கிறதும் ஆசாரியர் திருவுளம் பற்றினது சத்தியமென்றுங் கண்டுகொள்க. ஆசாரியர் திருவுளம் பற்றினதுக்குச் சாத்திரத்திலே யுதாரணமெழுதினதினாலு மாசாரியர் வாக்கியமே சத்தியமெனக் கண்டுகொள்க. மேற்பாடம்.

அறியாது கூறினை - அப்படி நீ கேட்ட வினாவுக்கு உத்தரஞ் சொல்லாமற் கோபித்துக்கொண்டோமென்று நீ அறியாமற்சொன்னாய் அப்படியானால் திருவுள்ளக்கேடாவானேனென்று நீ கேட்கில்,

அபக்குவ பக்குவக் குறிபார்த்தருளினங் குரு முதலாய் என்பதை குருமுதலாய் பக்குவாபக்குவக் குறிபார்த்தருளினமென்று பொருளுக்கேற்க மாறுக.பொருளாவது நாம் ஆசாரியமூர்த்த மாகையினாலே யபக்குவனைக் கண்டாற் கோபிக்கிறதும், பக்குவனைக் கண்டாற் பிரியப்படுகிறது மாசாரியனுக்கு முறைமையாகையாலே நாம்

செயலதனைச் சார்ந்திடும் - நீ யறிவாயுள்ளவனுகையாலே உன்னேடுங் கூடுகையால் அந்த மலங்களுஞ் சேட்டைப்பட்டதாயிருக்கும்.—உதாரணம் சிவப்பிரகாசத்தில் “அன்னியமா னவையுணர்த்தி அநன்னியமாய் நிறைந்த வறிவறியா மையினுலு மருணிலவுங் காலந், தன்னிலவ னேயாவு மாய்நின்ற தொன்மை தாமுணர்த லானுமுயிர் தானெனவொன் றிலதாய், மன்னியிடு மலம்” [ii, 18] என்பதுங் கண்டுகொள்க.

எனினே - என்று தேவரீ ரருளிச்செய்யில்,

கடம்பட மதனுட் கண்டிலம் - கடபடாதியாயுள்ள சால் குடம் புடைவை சீலை அடியேனேடுங் கூடின அவதரத்து அப்படிச் சேட்டைப்படக் கண்டேனில்லை யென்று நீ கேட்கில்,

விடம்படு மூன்றிரள் போன்றது - அந்த மலங்கள் இந்தக் கடபடாதிகள்போல அல்ல விடத்தையுடைய வச்சநாபி முதலாயுள்ள நஞ்சுகள் சடமாயிருந்தாலும் அறிவாயுள்ள ஆன்மாக்கள் புசித்த அவதரத்து அந்த அறிவை யழித்துத் தம்குண மேலிட்டு மயக்கினுற்போல அந்த மலங்களுஞ் சடமாயிருந்தாலும் அறிவாயுள்ள உன்னேடே சம்பந்தமான அவதரத்து அவையு மப்படியே மேலிட்டு மயக்கும்,

ஆயில் - அப்படியானுல்,

தோன்றி யணைந்தாங் ககறல்வேண்டும் - அந்த நஞ்சானது புசித்தவர்களை மேலிட்டு மறைத்து நின்று மீளவும் விட்டுப் போனுற்போல இந்த மலங்களும் அப்படிச் செய்யவேணும் அப்படிக் கண்டோமில்லையே, அன்றியும்,

குணங்களும் பன்மையின்றுகும் - இந்த மலங்களுக் குவமையாகச் சொல்லப்பட்ட நஞ்சுகளுக்கு இந்த மலங்களைப்போலப் பல குணங்களுஞ் செய்யக் கண்டதுமில்லை. ஆகையாலது திருட்டாந்த விரோதமென்று கொள்க, அதுவன்றியும் அந்த மலங்கள்தான்,

எம்மை வந்தணைதாத்தானே மாட்டாது - அவை சடமேயானுல் அடியேனை வந்து பொருந்துகைக்குத் தானுகமாட்டாது,

யானே செய்கிலன் - அடியேனுக்குக் குற்றமாயுள்ளது வேணுமென்று அடியேன் றுனே யுண்டாக்கிக்கொள்ளுவதுமில்லை,



நீயோ செய்யாய் நின்மலனுயிட்டு - தேவரீர் அமலனு யிருக்கையினுலே அஞ்ஞானமாகிய மலங்களை அடியேனுக் குண்டாக்கப் போகிறதுமில்லை, இவை மூன்றுவகையு மின்றி,

இயல்பெனில் - அந்த மலங்கள் ஆன்மாவுள்ளவன்றே சுபாவமாக வுள்ளதென் றருளிச்செய்யில்,

போகாதென்றும் - பாலில் வெளுப்பும் கரியிற் கறுப்பும்போல இயல்பாயுள்ள சுபாவத்தினுக்கு ஒருகாலத்தினும் அழிவில்லையாம்,

மயல்கெட - அடியேனுக்கு அந்தச் சந்தேகந் தீரத்தக்கதாக,

பந்தம் வந்தவாறிங் கந்தமாதி யில்லா யருளே - முடிவும் முதலுமில்லாத தம்பிரானே இந்தப் பாசபந்தங்கள் அடியேனேடு வந்து பொருந்தின முறைமை எப்படியென் றருளிச்செய்யவேணும்.

அதற்கு விடையம் நெல்லுக்கு உமிபோலவுஞ் செம்பிற் காளிதம் போலவும் அனுதிசையோகம். அதற்கு உதாரணம் சிவஞானபோதத்தில் “நெல்லுக்குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ், சொல்லிற் புதிதன்று தொன்மையே” [ii, 7] யென்றும், சித்தியாரில் “மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடு மிப்போ” [ii, 86] லென்றும், சிவப்பிரகாசத்தில் “நெல்லின்முளை தவிடுமிப்போ லனுதியாக, நிறுத்திடுவ” [ii, 7] ரென்றுஞ் சொன்ன முறை கண்டுகொள்க ச

இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்கள் அடியேனேடுந் தேவரீருங் கூடி நின்றறிவிக்குமிடத்தும் அடியேனை மயக்குகிற வழி எப்படியென்னும் வினு மேலருளிச்செய்கின்றது* என்று சொல்லுவாருளர். அது வினுவல்ல. பதியிலக்கணம் பசுவிலக்கணம் பாசவிலக்கணஞ் சொல்லிப் பாசதரிசனஞ் சொல்லி ஆன்மதரிசனஞ் சொல்லவேண்டுகையாலும் மல தரிசனம் வேறே சொல்லாதபடியினுலுந் தேவரீரருள்முன்னே பாசம் நில்லாது அடியேனுக்குச் சுதந்தரமாய்க் காண அறிவுமில்லை இந்த மலத்தைக் கண்ட முறைமை எப்படி யென்னும் வினு மேலருளிச்செய்கின்றது.

அருள்முன்பு நில்லா தடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறென்கொ லெந்தாய்—மருள்கொண்ட

* இது வரையே சிவப்பிரகாசருரையில் அவதாரிகையாகக் காணப்படுகிறது.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மா ஒன்றுண்டென்கிறதைத் தெரிசித்தவழி யேதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

தெரித்ததென் கொண்டனை யுருத்திர பசுபதி
செடிய னேனையு மடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவுகாட் டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணெய் மெய்ய
வவத்தையிற் றெரித்தன னாகி லவத்தை
தெரிந்தாங் கிரித்தலு மிலனே திருத்துங்
கால முதலிய கருவி யாயின்
மாலும் பிரமனும் வந்தெனை யடையா
ரோதுங் காலை யொன்றையொன் றுணரா
சேதந மன்றவை பேதைச் செயலிச்
சேதந மானாற் செயல்கொள வேண்டுநற்
போத மிவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ றொன்று
மொருவுவ தறியே னுணர்வில னாதலி
னிற்கொடு கண்டன னாயினெற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங் கேண்மோ மன்ன நின்னின்
முன்ன மென்ற னுணர்வில னாதலி
னென்னைக் காண்பினுங் காண்பல காணா
துன்னைக் காண்பினுங் காண்பல வுன்னோ
டொருங்கு காண்பினுங் காண்பல வருந்துணை
கண்ட வாறே தெனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே.

**மேலிதற்கு வியாக்கி.**

தெரித்ததென் கொண்டனை யுருத்திர பசுபதி செடியனேனையு மடிமைசெய்யப் படிவங்கொண்டு வடிவு காட்டில்லாப் பெண்ணை யாளும் வெண்ணை மெய்ய என்பதனை உருத்திரபசுபதி செடியனேனையு மடிமை செய்யப் படிவங்கொண்டு வடிவுகாட்டில்லாப் பெண்ணை



யாளும் வெண்ணெய்மெய்ய தெரித்ததென் கொண்டனை யென்று பொருளுக்கேற்க மாறுக. பொருளாவது:

உருத்திர பசுபதி உருத்திர மூர்த்தியுமாய் ஆன்மாக்களுக் கெல்லா முயிர்க்குயிராய் நின்று இரட்சித்தருளுகிற கத்தாவா யிருக்கப்பட்டவனே,

செடியனேனையும் - முடலை யாக்கையோடுங்கூடிச் செனன மரணத்திலே கிடந்தழுந்துகிற அடியேனையும்,

அடிமைசெய்யப் படிவங் கொண்டு - அடியேனைத் தேவரீர் திருவடிக் குரித்தாக்கிக் கொள்ளவேண்டி அடியேனைப்போல் வடிவை யெடுத்துக் கொண்டு,

வடிவு காட்டில்லாப் பெண்ணையாளும் - தேவரீர்க் குண்டாகிய தன்மை வடிவை யொருவற்குங் காட்டாத நீ பெண்ணைக்குக் கத்தாவாய்,

வெண்ணைமெய்ய - திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,

தெரித்ததென் கொண்டனை - அடியேனென் றொருமுதலுண் டென்கிறதை யறியப்பட்டது எது பிரகாரமாக வென்றருளிச் செய்தருள வேணும்,

அவத்தையிற் றெரித்தனனாகில் - அடியேன் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் துரியாதீதமென்று சொல்லப்பட்டு வருகிற பஞ்சவத்தையும்பட்டு வருகையினாலே அதுகொண்டே யவத்தைக்கு வேறா யடியேனென்றொரு முதலை அறியப்பட்டதென் றருளிச் செய்யுமாயின்.—அதற்கு உதாரணம் சித்தியாரில் "படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லிற்,கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்னை,யடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா, வுடலினி லைந்த வத்தை யுறுமுயிர் காவ லாக" [iv, 32] வென்று நாலாஞ் சூத்திரத்திலே அவத்தைப்பட்டு வருகிற ஏதுவினாலே ஆன்மாவுண்டென்று சாதித்ததுங் கண்டு கொள்க.

அவத்தை தெரிந்தாங் கிரித்தலு மிலனே - அடியேன் அப்படி யவத்தைப்பட்டுப்பட்டு வருகிறதேயுண்டாமாகில் அப்படி மறைக்கப்பட்டுவருகிற அந்த அவத்தையு மின்னதென்று கண்டு அவ்விடங்

இன்றமைந்த கருமத் தியைந்தவையல்லது சமைந்தன வில வெனச் சாற்றின் - இப்பொழுது அடியேனெடுத்த உடலுக்கமைத்த பிராரத்துவ மனுபவிக்கிற தொழிய மேலுட லெடுக்கைக்கு ஏதுவா யுள்ள ஆகாமிய கன்ம முண்டாகா தென்றருளிச் செய்யில்.—உதார ணம் திருவருட் பயனில் "என்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை, தோன்றி லருளே சுடு" [x, 8] மென்றும், சிவப்பிர காசத்தில் "தொல்லையில் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டே, லல்லொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே" [x, 10] என்றும், சிவஞான சித்தியாரில் "என்றவுடற் கன்மமனு பவத்தினு லறுத்திங் கினிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப் பன்" [viii, 10] என்றும், சிவஞானபோதத்தில் "பின்செய்வினை மாயையுட னில்லா" [x, 4] தென்றும் சொன்னது கண்டு கொள்க. பாடம்.

அமைந்த மாயேயங் கன்ம மாமல மூன்று மாயாது-அடியேனுக் கமைத்த பிராரத்துவத்துக் கீடாகத் தேகம் நிற்கவே அதற்குக் காரணமாகிய மாயை நீங்காது மாயை நிற்கவே கன்மமும் போகாது மாயையுங் கன்மமு முண்டாகவே ஆணவமலமும் உண்டெனப்படும்.

ஆகவே, ஆர்ச்சன மாயையி னுற்பவந் தீரா தொழுகும் - ஆக இங்ஙனம் மூன்று மலங்களுமுண்டாகவே ஆகாமியங்களை யார்ச்சித்து மாயையின் தோற்றமாயுள்ள சரீர தொந்தனை விடாமல் மேன் மேலுந் தொன்று தொட்டுவரும். அன்றியும்,

ஒன்றொன்றினிற் சமமாயினல்லது நிற்பெறலில்லெனமொழிந்த தொல்லறந் தனக்கு மேயாதாகும் - இருவினையாகிய புண்ணிய பாவங் கள் ஒன்றுக்கொன்று தன்னிற் சமமாகத் துலையொயத்தா லொழியத் தேவரீரை அடியார் பெறுகிறதில்லையென்று சொல்லப்பட்ட பழைய தாகிய சிவதன்மமாகிய திருவாக்கும் பொருந்தாதாகும். ஆகையால்,

நாயேனுளத்து நின்றனை யென்பெனோ நின்றிலை யென் பெனோ பொன்றிய பொன்றிற்றிலமல மென்பனோ வொன்றினை யுரைத்தருள் மன்ற - அடியேனுளத்திலே தேவரீர் கூடி நின்ற தென்று விண்ணப்பஞ் செய்வேனோ கூடி நின்றதில்லை யென்று விண்ணப்பஞ் செய்வேனோ அந்த மலங்கள் கெட்டுப்போன தென்று

2. சில அன்பர்கள் தங்கள் ஊரில் தேர்வு நடத்தினால் பல இளைஞர்களைத் தேர்வுக்கு அனுப்ப இயலும் என்று தெரிவிக்கிறார்கள். கூடியவரையில் இத்தகைய வேண்டுகோள்கள் கவனிக்கப்படும். ஆனால் உறுதியாக இப்போதே தேர்வு நடைபெறும் இடங்களைத் திட்டம் செய்ய இயலாது.

3. சென்ற ஆண்டில் நால்வர் இளஞ் சைவப் புலவர் பட்டமும் இருவர் பரிசுகளும் பெற்றனர். இவ்வாண்டில் தமிழ்ப் பண்டிதர்களும் மாணவர்களும் நிரம்பிய சைவப் பற்றைப் புலப்படுத்திப் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை இத்தேர்வுகட்கு அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

## சைவ சித்தாந்த இளைஞர் சங்கம், தஞ்சை

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சங்கத்தினர் அப்பர் சுவாமிகள் கைலாயக் காட்சிபெற்ற திருநாளன்று (ஆடி அமாவாசை 18-7-36) திருவையாற்றில் உயர்திரு - சிதம்பர சுவாமிகள் தலைமையில் ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். திருவாளர்கள் பா. சிவகுருநாதபிள்ளை, வைத்தியநாத சாஸ்திரியார், கோவிந்தசாமி பிள்ளை, சோமசுந்தர தேசிகர், சுப்பிரமணியன், சிவராஜன் ஆகிய அன்பர்கள் முறையே அப்பர் கட்டளை, அப்பரன்பு, அப்பர் நிலை, அப்பர், சண்டேசுவரர், சிவசின்னங்கள் என்பனபற்றிப் பேசினார்கள்.

---

## ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை
## இராயப்பேட்டை

இச்சபையின் நிர்வாக சபையினராக அன்பும் ஆர்வமும் உழைப்பும் ஊக்கமும் நிரம்பிய பல இளைஞர்களைச் சபையின் முழு உரிமைத் தலைவர் நியமித்திருப்பது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. சமாஜ உதவிக் காரியதரிசி திரு. ஜி. கலியாணம் பிள்ளை பி.ஏ.,டிப்.எக். இச்சபைக்குக் காரியதரிசியாகப் பணி புரிகின்றார். ஞாயிற்றுக் கிழமைதோறும் மாலை 3 மணி முதல் 5 மணி வரையில் சபா நிலையத்தில் பெரிய புராணப் பிரசங்கம் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களால் செய்யப்படுகிறது.

---

## உருவச்சிலைத் திறப்பு விழா

தமிழ்ப் பேரறிஞர் கோ. வடிவேல் செட்டியாரவர்களது உருவச்சிலைத் திறப்பு விழா மிகச் சிறப்பாக 2-8-1936ல் சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள வேதாந்த சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நமது சமாஜத்தினர் பலர் இவ்விழாவிற் கலந்து கொண்டனர். வேதாந்த உலகம், புலவர் உலகம், மாணவர் உலகம், இலக்கண உலகம், மகளிர் உலகம் முதலிய பல உலகங்கள் வாழ்த்துரைத்தன.

ஆகும். இப்பணிகள் மட்டில் நாம் அடங்கி இருந்தால், நாம் சைவத் திருப்பணியில் முற்பட்டவர்கள் ஆகோம்.

தற்காலத்தில் நமது பெரியோர்கள் சைவத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் நோக்கங்களைச் சிறிது மாற்றிக் கொள்ளவேண்டும். இன்று காலை இங்கே பேசிய அந்தணப் பெரியார், “சைவம் என்பது சாத்வீகமானது; அது பிறரிடம் வலிந்து செல்லாது; அதன் சாத்வீகத்தை அறிந்து அதன் பெருமையை உணர்ந்து பிறர் தாமாகவே அதற்கு ஈடுபடுவர்” என்று கூறினர். இந்தக் கொள்கை எத்துணைப் பெருமை உடைத்தாயினும், நமது சமயாசாரியர்கள் நடத்திக் காட்டிய கொள்கை எனக் கூறல் முடியாது. திருஞானசம்பந்தர் முதலான சைவசமயாசாரியர்கள் சைவத்தை முற்படு சைவமாகக் (ஆக்கிரக சைவம்) கொண்டார்கள். அச்சமயம் தன் பெருமையால் தானே வளரட்டும் என்று சும்மா இருக்கவில்லை. அக்காலத்தில் நாட்டில் ஆழ்ந்துகிடந்த புத்த சமணப் புன்சமயங்களைத் தாக்கி அழித்து மக்களை எல்லாம் சைவசமயத்துக்குத் திருப்பினார்கள். அறிவின்மையிலும் மூட பழக்கங்களிலும் ஆழ்ந்து கிடந்துள்ள மக்களை ஈடேற்றுவதற்காக வலிய முறைகளையே கைக்கொண்டார்கள். எந்தச்சமயமும் தான் பெருகுவதற்கு இம்முறையையே கொண்டிருந்ததல்லவா? சரித்திரம் ஆராய்வோர்கள் இதன் உண்மையை அறிவார்கள். தற்காலத்தில் சாத்வீகப் பிரசாரம் மேன்மையானதென்று பேசுகிற சில சமயத்தார்கள் முற்காலத்தில் தம் மத சரித்திரம் எவ்விதமாய் ஏற்பட்டதென்பதை மறைத்து வைக்க வந்தவர்களேயாவார்கள். ஆகவே, நம் சைவர்களும் சைவ சமயம் முன்னடைய வேண்டும் என்றால் நமது சமயாசாரியர்கள் காட்டிய முறைகளைப் பின்பற்றுவதே வெற்றிக்கு உகந்ததாகும்.



மேலும், சைவசமயம் ஆதிகாலத்தில் ஏனைய மக்களை
உட்கொள்ளும் (ஆகர்ஷண) சமயமாக இருந்தது. சமண
சமயத்தில் இருந்த பாண்டிய மன்னரைச் சம்பந்தப் பெருந்
தகையார் திருநீறு கொடுத்துச் சைவத்தில் ஏற்றுக்கொண்
டார். தருமசேனராயிருந்த மருள்நீக்கியார் சைவராகித்
திருநாவுக்கரசரானார். மதுரையைச் சுற்றிலும் எண்பெருங்
குன்றங்களில் இருந்த பல சமணாசாரியர்கள் திருநீறு பெற்
றுச் சைவரானார்கள். இன்னும் ஹூணர்கள் முதலிய பல
மிலேச்சர்கள் இந்நாட்டுச் சமயங்களில் சேர்த்துக்கொள்ளப்
பட்டார்கள். நமது சமயாசாரியர்கள் இக்கொள்கைக்குப்
புறம்பாக இருக்கவில்லை. இக்காலத்தில் மட்டும் இக்கொள்
கையை ஏன் கைக்கொள்ளக்கூடாதோ?

மேலும் சைவசமயம் பரவும் சமயமா யிருந்தது.
அப் பரப்புக்குத் தகுந்தபடி பிரசாரம் செய்யப்பட்
டது. தேவாரத் திருப்பதிகங்கள் மூலமாக நாடெங்
கும் சமயக் கொள்கைகள் பரப்பப்பட்டன. ஆலயங்
கள் நிர்மாணிக்கப்பட்டு அங்கே சமய போதனைகளும்
பதிகம் ஓதுதலும் ஏற்படுத்தப்பட்டன. சித்தாந்த
போதனைகள் மக்களுக்குப் பதிகங்கள் மூலமாகப் போதிக்
கப்பட்டன. சைவசமயம் இயற்கைச் சமயம் என்பது
எடுத்துக் காட்டப்பட்டது. தேவாராதிகளில் புதைந்து
கிடக்கும் சுவைகளும் சரித்திர ஞானமும் சமய ஞானமும்
எப்படிப்பட்டவர்களையும் இழுத்துத் தூய நன்மக்கள் ஆக்கி
விடும். இத்தகைய சமயப் பிரசாரத்துடன் சமூக வாழ்
வில் சீர்திருத்தமும் ஏற்படும்படி சமயாசாரியர்கள் தம்
வாழ்வுகளில் நடத்தியும் காட்டியிருக்கிறார்கள். திருநீல
கண்ட யாழ்ப்பாணர், திருநீல நக்கர், அப்பூதியடிகள், பாண
பத்திரர் முதலிய பெரியார்களின் சரிதங்களை நாம் ஆராய்ந்து
பார்த்தால் தற்காலத்திலுள்ள பிறவி வேற்றுமைகள் முற்

காலச் சைவர்களிடத்தில் இருந்திருக்க வில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

ஆனால், நாம் என்ன செய்கின்றோம்? நமது நாட்டுச் சமயங்கள் “சனாதனம்” (நிரந்தரமானவை) என்றுசொல்லிப் பெருமை பேசிக் கொண்டிருக்கின்றோம். பல்லாயிரக்கணக்கான தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள் கிறிஸ்துவ முகம்மதிய மதங்களுக்குச் சென்று கொண்டிருக்கையில், “போகட்டும், எத்தனைபேர் போனாலும் நமது சமயம் தொலையாது” என்று சொல்லிக் கொள்ளுகிறோம். இவ்வாறு கண் மூடிக்கொண்டு வேதாந்தம் பேசுவதினால் ஒரு பலனும் இல்லை. நம் சமயங்களைவிடப் பெரும்படியான எண்ணம் கொண்ட பல சமயங்கள் முற்காலத்தில் அழிந்துவிட்டன. நாமும் நம் மக்களைப் புறம்பே தள்ளிக்கொண்டிருந்தால் சமயச் செல்வாக்குக் குறையுமேயன்றி முன்னேறுக்க மடையாது.

தற்காலத்தில் முன்னேற்றமடைந்துவரும் கிறிஸ்தவ முகமதிய சகோதரர்கள் எவ்வாறு தம் சமயங்களைப் பரப்பிக்கொண்டு வருகிறார்கள் என்பதைச் சற்று ஆராய்வோம். நாடுமுழுவதும் பாடசாலைகள் வைத்துத் தம் மக்களுக்கேயன்றிப் பிற மக்களுக்கும் சமய போதனை செய்கிறார்கள். போதனை செய்யத்தகுந்த உபாத்தியாயர்களையும் பயிற்றுகிறார்கள். பிள்ளைகள் தங்கள் சமயங்களைச் செவ்வையாய் அறிந்துகொள்வதற்காகத் தெளிவாக நூல்களையும் இயற்றி மிகக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். இவை முதலான செய்கைகளினால் மதப் பிரசாரம் வெற்றியுடன் நடைபெறுகிறது. நமது சைவ மக்கள் இவைகள், எல்லாவற்றிலும் எதிர்நோக்கான நிலையில் இருப்பதைக் காண்கிறோம்.

சைவ மக்கள் பெரும்பான்மையோர் கிறிஸ்தவப் பாடசாலைகளில் பயிற்சி பெறுகிறார்கள். அவர்கள் இளவயதிலேயே கிறிஸ்தவ சமய பாடபோதனை பெறுகிறபடியால்



சைவம் இன்னதென்று அறியாததற்கு முந்தியே கிறிஸ்தவக் கொள்கைகளை அறிந்துகொள்ளுகிறார்கள். இக்காரணத்தினால் பெரியவர்களான பிறகும் கூட சைவசமயக் கொள்கை அவர்கள் நெஞ்சில் புகுவது அரிது. பெரும்பான்மையோர் யாதொரு சமயத்திலும் பற்றில்லாதவர்களாகி உலகாயதத்திலேயே மூழ்கிவிடுகின்றனர். இளமையில் பாடசாலைகளில் பெறும் சமய ஞானமே மிகச் சிறந்தது எனக் கொள்ளல் வேண்டும். அதனை அறிந்து நமது சைவர்கள் ஏதாவது பலன் தரும் பணி ஏற்றுவருகிறார்களா?

படிப்பு முதிர்ந்தால்தான் சமய ஞானமும் முதிரும். எந்தச் சமயிகள் அதிகமாகப் படித்திருக்கிறார்களோ அவர்களிடமே சமயத்தின் பெருமையை அறியலாம். நமது தென்னாட்டின் தற்காலப் படிப்புக் கணக்குகளை ஆராய்ந்தால், எந்தச் சமயிகள் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள் என்று அறியக்கூடும். இதை அறிவதற்காகப் படிப்பு நிலைப் புள்ளிகளை இங்கே எடுத்துக் காட்டுவோம். (கூறும் புள்ளிகளெல்லாம் 1934-35 ஆண்டு புள்ளிகளாகும்.)

| | | ஜனத்தொகை | மாணாக்கர்கள். | நூற்று விகிதம் | உபாத்தியாயர்கள் |
|---|---|---|---|---|---|
| கிறிஸ்தவர். | ஆண் | 863,647 | 153,749 | 17·8 | 2497 |
| | பெண் | 880,261 | 103,559 | 11·8 | 2497 |
| முகம்மதியர். | ஆண் | 16,31,716 | 24,3,661 | 14·9 | |
| | பெண் | 16,74,221 | 960,82 | 5·7 | |
| பிராமணர். | ஆண் | 663,178 | 16,2,285 | 24·5 | 2183 |
| | பெண் | 688,636 | 83,624 | 12·1 | 128 |
| பிராமணரல்லாதார். | ஆண் | 16,216,598 | 13,88,313 | 8·6 | 4394 |
| | பெண் | 16,590,971 | 481,671 | 3·9 | 772 |
| தாழ்ந்த வகுப்பார். | ஆண் | 35,00,481 | 263 829 | 7·5 | 557 |
| | பெண் | 36,17,506 | 76,167 | 2·1 | 122 |
| மொத்தம் : | ஆண் | 23,082,99 | 922,42,745 | 9·7 | 10529 |
| | பெண் | 23,657,108 | 8,51,458 | 3·6 | 3258 |

மேலே காட்டிய பாகுபாட்டில், சைவர்கள் பெரும்பான்மையோர் பிராமணரல்லாதார் என்ற வகுப்பில் சேர்ந்தவர்கள். இவர்களில் ஆண்மக்களில் நூற்றுக்கு 8·6 பேரும், பெண்மக்களில் 2·9 பேரும் படித்தவர்களாயிருந்தால் சைவ சமயம் எவ்வாறு முன்னேற்றமடையும்?

சமயப் பிரசாரமே நோக்கமாகக் கொண்ட கிறிஸ்தவ சங்கத்தார்கள் நாடுமுழுவதும் பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அப்பாடசாலைகள் ஆரம்பக்கல்வி முதற்கொண்டு பல்கலைக்கழகப் படிப்புவரையில் போதிக்கின்றன. நமது நாட்டிலுள்ள பல சமயத்தார்களின் பாடசாலைகளின் கணக்குகளை எடுத்தாராய்ந்து பார்த்தால் கிறிஸ்தவ சங்கப் பாடசாலைகளே பெரும்பான்மையானவைகள் என்பது அறியலாகும். அக் கணக்குகளை இனிக் குறிப்போம்.

| | | கிறிஸ்தவர். பாடசாலை. | மாணுக்கர்கள். | கிறிஸ்தவரல்லாதவர். பாடசாலை. | மாணுக்கர்கள். |
|---|---|---|---|---|---|
| கலாசாலை | ஆண் | 12 | 4439 | 17 | 3570 |
| | பெண் | 4 | 329 | | |
| தொழில் பாடசாலை | ஆண் | | | | |
| | பெண் | 1 | 35 | | 20 |
| மொழிப் பாடசாலை | ஆண் | | | | |
| | பெண் | | | 17 | 556 |
| நடுத்தரம் | ஆண் | 102 | 40,855 | 1 | 14 |
| | பெண் | 43 | 11,654 | 153 | 60011 |
| ஆரம்பபாடசாலை | ஆண் | 6775 | 31,1378 | 4 | 1011 |
| | பெண் | 629 | 66060 | 17756 | 98,1,418 |
| மொத்தம் | | 7733 | 4,52,049 | 1051 | 78,378 |
| | | | | 19063 | 11,30,297 |

மேலே காட்டிய கணக்கில் ஆரம்ப கல்விப் பாடசாலைகளே சமயப் பிரசாரத்தில் முக்கியமானவைகள். ஆரம்ப கல்வியில் கிறிஸ்தவ சங்கத்தார்கள் நடத்திவரும்



6775 ஆண் பாடசாலைகளில் 3,11,373 ஆண் பிள்ளைகளும் 629 பெண் பாடசாலைகளில் 66,060 பெண் பிள்ளைகளும் வாசித்தால், சமயப் பிரசாரம் எவ்வளவு அதிகமாகும் பாருங்கள். இப்பிள்ளைகளில் பெரும்பான்மையோர் இந்து மக்களே. இவர்கள் சின்னஞ் சிறு வயதிலேயே கிறிஸ்தவ ஞானம் பெறுகிறார்கள். சைவப் பெற்றோர்களோ தம் மக்களின் படிப்பையாவது அவர்களின் சமயப் படிப்பையாவது சிறிதேனும் கவனிக்கிறார்களில்லை. தற்கால வாழ்க்கைப் போரிலே வயிற்றுப்பாட்டிற்கு அலைவதைத் தவிர தம் மக்களின் படிப்பைக் குறித்து சிறிது நேரமாவது ஆலோசிக்கப் பெற்றோர்களுக்குப் பொழுதும் மனோ நிலையும் இருக்கின்றனவா? மேலும் பெண்பிள்ளைகள் விஷயத்தில் அதிகமான கவலை இருக்கவேண்டும். ஏனெனில் அவர்களாலன்றோ அவர்களுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் குண நிலைமை பெறுகிறார்கள்? ஆகவே 66,060 இளம் பெண்பிள்ளைகளை ஏனைய சமயப் பாடசாலைகளில் வைத்துவிட்டால் நம் சமயபோதனை அவர்களுக்கு எவ்விதம் கிடைக்கும்?

பாடசாலைகள் வைப்பது மாத்திரமேயன்றி, அவைகளில் போதிக்கக்கூடிய உபாத்தியாயர்களும் தகுந்த பயிற்சி பெறல் வேண்டாமா? கிறிஸ்தவ பாடசாலைகளில் தகுந்த பயிற்சி தருவதற்காகத் தனிக் கிறிஸ்தவ போதனுமுறைப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பாடசாலைகளில் பாடம் கற்பிக்கும் நேரம் போக மற்ற ஓய்வு நேரங்களில் இவ்வுபாத்தியாயர்கள் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களுக்குப் பிரசங்கம், பஜனை முதலியவை மூலமாகச் சமயப் பிரசாரம் செய்கிறார்கள். சைவர்களில் இவ்வித போதனுமுறைப் பாடசாலை ஒன்றேனும் உண்டா? கிராமங்களில் சென்று எந்த ஆசிரியராவது சமய

போதனை செய்துவருகிறாரா? ஓர் உதாரணம் கூறுங்கள் பார்ப்போம். போதனைமுறைபெறும் உபாத்திமைப் பிள்ளைகளின் கணக்கை எடுத்துக் காட்டுவோம்.

| | ஆண்பாடசாலைகளில். | | பெண்பாடசாலைகளில். | |
|---|---|---|---|---|
| இந்து:— | ஆண் | 63,200 | ஆண் | 3900 |
| | பெண் | 600 | பெண் | 3000 |
| முகமதியர்:— | ஆண் | 3,800 | ஆண் | 76 |
| | பெண் | 10 | பெண் | 600 |
| கிறிஸ்தவர்:— | ஆண் | 14,300 | ஆண் | 450 |
| | பெண் | 2,800 | பெண் | 5000 |
| ஆதிதிராவிடர்:— | ஆண் | 1100 | ஆண் | 26 |
| | பெண் | 23 | பெண் | 50 |

மேற்சொல்லிய புள்ளிகளிலிருந்து 14,750 ஆண் பிள்ளைகளும் 8,400 பெண் பிள்ளைகளும் கிறிஸ்தவர்களில் போதனைமுறை பெறுகிறார்கள். மேலே காட்டிய புள்ளிகளில் இந்துக்கள் பலபேர் இருந்தபோதிலும் இவர்கள் சமயப் படிப்பைப் பெறுவதில்லை என்பதை அறியவேண்டும். நமது தென்னாட்டில் ஒன்றிரண்டு சைவப் பாடசாலைகள் இருப்பதை அறிவோம். ஆனால் அவைகளில் வாசிக்கும் பிள்ளைகள் எத்தனைபேர்? அவர்கள் வாசித்த பிறகு என்ன செய்கிறார்கள்? அப்பாடசாலைகளும் நிரந்தரமாக இருக்கின்றனவா? சிறிது யோசியுங்கள்.

மேலும், சமய போதனைக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் வேறொரு சாதனம் சாப்பாட்டு விடுதியே. பாடசாலைகளுக்கு அடுத்தாற்போல பிள்ளைகள் வசிக்கவும், வாசிக்கவும் விடுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடுதிகள் இரண்டு விதமானவை. இடத்திற்கும் சாப்பாட்டிற்கும் பணம் கொடுத்து வசித்துவரும் விடுதிகள் பல உண்டு. அவ்விதம் கொடுக்கமுடியாத ஏழைப் பிள்ளைகளின் விடுதி



களும் உண்டு. இவைகளை அனாதை விடுதிகள் என்பார்கள். கிறிஸ்தவ சங்கத்தார்கள் பின்கூறிய விடுதிகளை அதிகமாக ஏற்படுத்தி அவைகள் மூலமாக சமயப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அடியில்கண்ட கணக்கு நம் நாட்டு விடுதிகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் காட்டும்.

| | விடுதிகள். | | | மாணவர். | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். | ஆண். | பெண். |
| ஐரோப்பியர் | 16 | 32 | 48 | 1453 | 2039 |
| கிறிஸ்தவர் | 198 | 187 | 385 | 12056 | 11227 |
| ஆதிதிராவிடர் | 39 | 19 | 58 | 2358 | 1098 |
| இந்து | 208 | 24 | 232 | பிரா. 3209 | 394 |
| | | | | பி.அ. 4700 | 1088 |
| முகம்மதியர் | 18 | 4 | 22 | 1313 | 103 |
| | 519 | 265 | 745 | 26035 | 16268 |

மேற்கூறிய கணக்கில் 385 கிறிஸ்தவ விடுதிகளில் 23,283 கிறிஸ்தவப் பிள்ளைகள் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சமயபோதனை கிடைக்கும். சாப்பாட்டுக்கில்லாத அனாதைகளான பல இந்துக்கள் இவ்விடுதிகளில் சேர்ந்து பின்னர்க் கிறிஸ்தவர்கள் ஆகிவிடுவது சகஜமே. சைவர்களுக்கு எத்தனை விடுதிகள் உண்டு? எந்த சைவப் பெரியார் இவ்வித விடுதிகளைக் காண்கிறார்? சமய போதனை செய்து வருகிறார்?

இவ்வித கேள்விகளைக் கிளப்பிவிட்டால் நமது பெரியார்கள் "கிறிஸ்தவர்களுக்குப் பண வருவாய் உண்டு; நமக்கு இல்லை; என்ன செய்வது?" என்பார்கள். உண்மையை ஆராய்ந்தால், இவ்வித ஏக்கம் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. நம்மவர்களுக்கு ஊக்கம்தான் இல்லை என்று சொல்லல்வேண்டும். கிறிஸ்தவ சங்கத்தார்களுக்கு

அதிகமாக வெளிநாடுகளிலிருந்து தற்காலம் பணம் வருவதில்லை. இந்நாட்டிலிருந்தே பலவித முறைகளிலும் பணங்களைச் சேர்த்துச் சிக்கனமாக வேலைசெய்துவருகிறார்கள். அதனால்தான் அவர்களுக்குக் காரியம் சித்தியாகின்றது. நாமும் ஏன் அவ்வித முறைகளைப் பின்பற்றக்கூடாது? நமது நாட்டில் செல்வர்கள், பணம்படைத்த மடாலயங்கள், விரயம் செய்யும் கோயில் சங்கங்கள் அளவுகடக்கக் கிடக்கின்றன. இவைகள் மூலமாகப் பெருத்த காரியங்களைக் கைக்கொண்டு வெற்றியடையலாம். துரைத்தனத்தார் ஆண்டு ஆண்டுதோறும் பெருத்த தொகைகளைக் கல்விக்குச் செலவழிக்கின்றனர். சைவர்களும் முயன்றால் பெரும் தொகைகளை உதவியாகப் பெறலாம்.

இனித் துரைத்தனத்தார் செலவிடும் தொகைகளைக் குறிப்போம்.

| | | |
|---|---|---|
| சர்வகலாசாலை | ரூ. | 43,70,205 |
| நடுத்தரப் பாடசாலை | ,, | 1,04,99,905 |
| ஆரம்ப பாடசாலை | ,, | 2,35,24,085 |
| போதனாமுறைப் பாடசாலை | ,, | 18,40,104 |
| இதர பாடசாலைகள் | ,, | 35,33,691 |
| மொத்தம் எல்லா வகைகளும் | | 5,40,94,044 |
| கல்விச் சங்கம்மூலம் கொடுத்த தொகை | ரூ. | 54,54,584 |
| பிள்ளைகளுக்கு உதவி:— | | |
| நடுத்தர பாடசாலை | ரூ. | 1,90,584 |
| ஆரம்ப பாடசாலை | ,, | 32,774 |

மேலே சொன்ன கணக்கின்படி ஆரம்ப கல்விப் பாடசாலைகளுக்காக ஜில்லாக் கல்விச் சங்கங்கள் மூலமாகத் துரைத்தனத்தார் ரூ. **54,54,584** செலவிடுகிறார். இத்



தொகையில் பெரும்பான்மையான பாகம் கிறிஸ்தவ பாடசாலைகளுக்குச் செல்கின்றது. அவர்களுடைய புத்திகூர்மையைப் பின்பற்றிச் சைவ சமயிகள் ஏன் அனேக பாடசாலைகளை வைத்துப் பெருந்தொகையைப் பெறக்கூடாது? முயற்சி செய்தால் அதன் பலன் தானே கிடைக்கும்.

சைவ சமயத்தோடு சேர்ந்து வருவது தமிழ் மொழியாகும். தமிழ் மொழியின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட பல சங்கங்கள் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகள் செய்யும் காரியம் மிகச் சிறியது. சில ஆண்டுகளுக்குமுன் சென்னைப் பல்கலைக் கழகத்தார் கீழ்நாட்டு மொழிகளுக்காகத் தனிப் பட்டங்கள் ஏற்படுத்தினார்கள். அதற்காகத் தனிக் கலாசாலைகளும் ஏற்படுத்துவதற்கு இடம் கொடுத்தார்கள். இம்முறைகளுக்குத் துரைத்தன உதவியும் உண்டு. மொழி முன்னேற்றத்திற்கு அனுகூலமான இவ்விதிகளைக் கையாண்டு பயன் பெற்றவர்கள் யார் என்று அடியிற் காட்டும் புள்ளிகள் விவரிக்கும்.

| | | சாலைகள். | மாணாக்கர்கள் | |
|---|---|---|---|---|
| சமஸ்கிருதம்:— | | | | |
| உயர்வு:— | ஆண் | 37 | 2402 | அங்கீகாரம்பெற்றவைகள் |
| | பெண் | 3 | 297 | |
| ,, ஆரம்பம்:— | ஆண் | 63 | 2256 | |
| | பெண் | 5 | 230 | |
| | | 108 | 5185 | |
| சமஸ்கிருதம்:— | | | | |
| உயர்வு:— | ஆண் | 99 | 1177 | அங்கீகாரம் பெறாதவைகள் |
| ,, ஆரம்பம்:— | பெண் | 2 | 31 | |
| | | 101 | 1208 | |

| | | | |
|---|---|---|---|
| அரபி, பாரசீகம்:-உயர்வு | ஆண் 215 | 7252 | } ஷை |
| குரான் பாடசாலை:— | ஆண் 305 | 13110 | |
| | 520 | 20362 | |

மேலே கூறியபடி வடமொழியும் அரபி மொழியும் பயன் பெற்றனவேயன்றித் தமிழ்மொழி ஒரு பயனும் பெறவில்லை. வடமொழி, அரபி முதலிய மொழிப் பாடசாலைகளைப் பரிசோதிக்க அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்குத் துரைத்தனச் சம்பளமும் உண்டு. தமிழ்மொழிக்கு ஏதேனும் உண்டா? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டிருக்கும் தமிழ்மொழி ஆதரவும், திருவையாற்று வடமொழிக் கலாசாலையில் தமிழுக்குக் கொடுத்திருக்கும் ஒரு சிறு ஆதரவும் தவிர வேறு தமிழ் மொழிக்குக் கலாசாலை தனியாக எங்கேயாவது உண்டா? மேடைகளில் வெறுங் கூச்சலிடும் நமது பெரியார்களின் காரியத்திறம் எங்கே?

இனித் தனிச்சமயக் கலாசாலைகளைப்பற்றி ஒரு வார்த்தை கூறுவோம். நமது தென்னாட்டில் 305 குரான் பாடசாலைகளும் அவைகளில் 13,110 பிள்ளைகளும் வாசிக்கின்றார்கள். சைவத்திற்குத் தனிப் பாடசாலைகள் உண்டா? சிதம்பரம், வேதாரண்யம், கோவை முதலிய சில இடங்களில் மாத்திரம் தேவார பாடசாலைகள் உண்டு. தேவக்கோட்டை முதலிய இடங்களில் இருந்த சிவாகமச் சாலைகளும் சித்தாந்தச் சாலைகளும் மறைய ஆரம்பிக்கின்றன. இவைகளின் கணக்கையும் ஒருதரம் விரல் விட்டால் எண்ணிவிடலாம். துரைத்தனத்தார் அறிக்கைகளிலும் இவைகளைப் பற்றிக் கூறும் பாக்கியம் இவைகளுக்கில்லை. ஆகவே இவைகளின் நிலைமை எவ்விதத் தாழ்மையில் இருக்கிறது பாருங்கள்!



இவ் வெண்ணிக்கைகளெல்லாம் பிறமதங்களைக் குறை கூறுவதற்காகச் சொன்னவைகளல்ல. அவைகளின் மேன்மையான செயல்களையும் உயர்ந்த கொள்கைகளையும் எடுத்துக் காட்டி, நம் சைவர்களும் அவைகளை ஏன் பின்பற்றக் கூடாது என்று வலியுறுத்தும் பொருட்டே சொல்லப்பட்டன. நாம் சைவர் என்று பெருமையுடன் பேசித் தன்னலத்திலேயே இருந்து கெடாமல், மன்னுயிர் எல்லாம் தன்னுயிர்போல எண்ணி, அன்னாருக்கெல்லாம் சைவ உயர்வை ஊட்டுவதே சிறந்த பணியாகக் கொள்ளல்வேண்டும். அப்பணிக்கு முன்காட்டிய முறைகளே தகுந்த முறைகளாகும். இவைகளே சைவர் முன் நிற்கும் பணிகள்.

# ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும்

[ஔவை - சு. துரைசாமிப் பிள்ளை]

## அகவல் 6

### நூற் பெயர்

மந்தர மத்தென விறுவி நாணென
ஐந்தலை யரவு சுற்றி நஞ்சொடு
பணாமணி பிதுங்கப் பற்றி அவுணரோ
டமரரு மியக்க* லாற்றா நாள்செல
முகுந்தன் றனாது முழுவலி ஃறுழ்த்தோன்
வருந்த வாங்க வாய்விட் டலறி

* இயக்க வாற்றா நாள்செல என்றும் வருந்த வாங்குபு என்றும் பாடம்.

நுரைத்தலை விரித்துத் திரைப்பெருங் கையெடுத்
தின்றுங் கூப்பிட அன்றுவந் தெழுந்த
துவரி யமிழ்த மென்ப தமிழ்வளர்
குமுதச் செவ்வாய் கோமள வல்லி
இமய வல்லி யெழில்பெற விளங்கிய
நுதல்விழி நாட்டத் தொருதனிக் கடவுள்
அருளின் கொம்பரோ டமாரு முனிவரும்
வெருளின் பிறவி வேர்தணி விமலவென்
றுணு தாற்றத் தானினி தருளிய
ஆகம மத்தின் அருளின் கோலத்
தாசிரி யமலன் பாத பங்கயப்
போதொளி யிலகப் புனைந்து மாதவன்
அருளுப தேச வரும்பெற னேன்ஞாண்
மதிமாத் தடக்கை கதுமெனப் பூட்டி
முறுக வாங்க மறுகுபு கலுழ்ந்து
வல்வினைத் திண்கை மேலெடுத் தொய்யென
வறுபகைப் பித்தை சிறுபுறத் தலையப்
பிறவிப் பேரிடர் அலமந் தோலமிட்
டிரியல் போக வரும்புல மடிய
அச்சா ஞழி யெற்பட வெழுதலின்
ஞானு மிருத மென்ப
வானுச் செவ்வி மானுற் பெயரே.

இது, மந்தரமலை, ஐந்து தலை நாகம் முதலியவற்றை முறையே மத்தும், நாணும் முதலியவாகக் கொண்டு, முகுந்தன் முதலியோர் கடலைக் கடைந்த வழி உவரியமிழ்தம் எழுந்தது என்று பெரியோர் கூறுவதுபோல ஆகமம், உபதேசம் முதலியவற்றை முறையே மத்தும், நாணும் முதலியவாகக்கொண்டு, அஞ்ஞானமாகிய கடல் கடைந்தவழி எய்திய ஞான வமுதமாகலின், அதனுற் சொல்லப்படும் இந்நூலும் ஞானமிருதம் எனக் கூறப்படுவதாம் என்கின்றது.



இதன்கண், "மந்தரம் மத்தென" (1) என்பது முதல், "உவரி யமிழ்தம் என்ப" (9) என்பதுவரை ஒரு தொடராகவும், "தமிழ்வளர்" (9) என்பது முதல், "மானுற் பெயரே" (28) என்பதுவரை ஒரு தொடராகவும் கொள்ளப்படும்.

மந்தரம் மத்தென நிறுவி, நாணென
ஐந்தலை அரவு சுற்றி, நஞ்சொடு
பணுமணி பிதுங்கப் பற்றி, அவுணரோ(டு)
அமரரும் இயக்க லாற்று நாள்செல,
முகுந்தன், தனுது முழுவலி யெறுழ்த்தோள்
வருந்த வாங்க வாய்விட்(டு) அலறி
நுரைத்தலை விரித்துத் திரைப்பெருங் கையெடுத்(து)
இன்றும் கூப்பிட அன்றுவந் தெழுந்த(து)
உவரி யமிழ்தம் என்ப;

இதன்கண், முகுந்தன் முதலியோர், மந்தரம், ஐந்தலையரவு முதலியவற்றைக் கொண்டு கடலைக் கடைய, அமிழ்தம் தோன்றிய வரலாற்றினை ஆசிரியர் கூறுகின்றார்.

உரைமுடிபு:—மந்தரம் நிறுவி அரவுசுற்றி பற்றி அவுணரும் அமரரும் இயக்கலாற்று நாள் செல்ல, முகுந்தன் தனுதுதோள் வருந்த வாங்க, அலறி தலைவிரித்து கையெடுத்து (உவரி) இன்றும் கூப்பிட, அன்று எழுந்தது அமிழ்தம் என்ப என்க.

உரை:—மந்தர மலையை மத்தாக நிறுத்தி, ஐந்து தலை நாகத்தைக் கயிருகச் சுற்றி, அதன் விடமும், அதன் படத்திலுள்ள மணியும் பிதுங்கி வெளிவருமாறு இறுகப் பற்றி அவுணரும் தேவரும் கடைய வியலாமையால் நாள்பல செல்ல, திருமால், தன்னுடைய வலிமிக்க தோள் வருந்த, அந்நாணைக் கையில் வாங்கிக் கடைதலும், கடல் வாய்விட்டலறுதல்போலப் பேரொலி செய்துகொண்டு, நுரையாகிய தலையை விரித்து, அலைகளாகிய பெரிய கைகளை நீட்டி, இப்

பொழுதும் அலைந்து புலம்புமாறு, அந்த நாளில் அதன்கண் அமுதம் பிறந்தது என்று கூறுவர்.

மத்தென நாணென நின்ற எனவெனெச்சங்கள் முறையே, நிறுவி சுற்றி என்னும் வினைகொண்டன. நஞ்சும் மணியும் பிதுங்கினவாயினும், அவற்றுள் நஞ்செழுந்து, கடைந்தார்க்குப் பெருந் துன்பத்தைச் செய்தமையின் அதனை "நஞ்சொடு" என விதந்தார். பணாமணி, வடநூல் முடிபு. மெய்வலி மிக்கவராதல்பற்றி, "அவுணரோடு" என்றார். இயக்கலாற்று என்பது ஒரு சொல்லாய், காரணப் பொருட்டாகிய பெயரெச்சமாகி, நாள் என்னும் பெயர் கொண்டது. இயக்கவாற்று என்ற பாடத்துக்கு, அவுணரும் தேவரும் இயக்கவும், ஆற்றுமையால் என்று உரைக்க. முழுவலி, எறுழ் என்பன ஒருபொருட் பன்மொழியாய் வலிமையின் மிகுதி புணர நின்றன. கடைந்தவழி எழுந்தவோசை, வாய்விட் டலறுவது போன்றமையின், "வாய்விட் டலறி" என்றார். வாய் திறந்து அலறுவது கூறினமையின், அதற்கேற்பத் தலைவிரித்தலும், கையெடுத்தலும் கூறினார். இதனாற்பயன், கடலாகிய பெண், அவர்கள் கடைதலால் ஆற்றாது இவ்வாறு புலம்பினள் என்பது. அலைகடல் இன்றும் ஓலமிட்டுத் திரிதற்குக் காரணம் அதுவே என்றற்கு, "இன்றும் கூப்பிட" என்றார். கூப்பிட வென்றது கடைந்தது போதும்; யான் இனி ஆற்றேன் என்று கூறி இரங்கி நிற்கும் பொருண்மை தோன்ற நின்றது. கடைதலாற் பிறந்து எழும் இயல்பிற்றாகலின், "வந்து எழுந்தது" என்றார். சாவாமருந்தாயினும், உவரியிற் பிறந்தமை பற்றி, "உவரியமிழ்தம்" என விசேடித்தார். மேலே, அஞ்ஞானக் கடலினின்று, ஞானமிருதம் பிறத்தல் கூறுகின்றாராகலின், ஈண்டு உவர்க்கடலினின்றும் இன்னமுதம் பிறத்தல் கூறுகின்றார். "அப்புறத்த கடல்நஞ்சம் உண்



அவனின் நீங்கி, அமரர் முனிவர் முதலியோர் பொருட்டு அவன்றாளை வணங்கி, அருள்ஞானப்பேறு வேண்டும்அமைதி குறித்து, "அருளின் கொம்பர்" என்றார். வல்லி பிறிதொன்றைப் பற்றியல்லது நில்லாமையும், கொம்பர் அன்ன தன்மையாதலையும் உணர்ந்து கொள்க. "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (சிவபு. 18) எனவரும் அருமறை நெறியால், அருட்சத்தியாகிய தேவியாரோடு சென்று பரவும் சீர்மை தோன்ற, "அருளின் கொம்பரொடு அமரரும் முனிவரும்" என்றார். ஒடு, உயிர்பின் வழித்தாகிய ஒருவினையொடு. அமரராயினும் முனிவராயினும் அவரைப் பிறவிப்பேரிடர் எளிதில் விட்டகல்வதன்று என்றற்கு, பிறசொற்களாற் கூறாது, "அமரரும் முனிவரும்" என்றே கூறியொழிந்தார். வெருள், மயக்கம்; அச்சமுமாம். வெருளின் என்புழி, இன் ஐந்துருபு ஏதுப்பொருட்டு. மெய்யுணர்வால் அவாவினையறுத்து, அமரரு முனிவருமாகிய வழியும், பழைய பயிற்சிவயத்தான் ஒரோவழி மயக்கஞ்செய்து பிறவிக்கட்புகுத்தும் வன்மை கருதி, "வெருளின்பிறவி" என்றார். செல்வச் செருக்கால் பிறவித் தொடர்பல்லது பிறஅருட்டொடர்பு பெறாத செல்வரை, "வெருளிமாந்தர்" என்றே திருத்தக்க தேவர் கூறியது (சீவகசிந் 73) காண்க. கட்புலனாகாது எத்துணை வன்மைப் பொருளையும் ஊடுருவிச் சென்று பற்றித் தொடர் புறுத்தும் இயல்பிற்றாதல் தோன்ற, "பிறவிவேர்" என்றும், அது தானும் காம வெருளி மயக்கங்களின் வடிவாய்த் தீப்போல உயிர்களை வெதுப்பும் தன்மையுடைமை சுட்டி, அதற்குரிய வினையால் "தணி" என்றும், தணித்தற்குரிய தலைவன்பால், மலமின்மை இன்றியமையாமையின், "விமல" என்றும் கூறினார். வறுமைப்பிணியால் வருந்துவோன், அஃதில்லாதசெல்வனையடைந்து இரத்தல்போல, மலத்தொடர்பால் பிறவிப் பிணியுற்று வருந்துவோர், அஃதில்லாதபரமனை யடைந்து

இரத்தல் அறிவு நெறியாகலின், "விமல" என்றார் எனினுமாம். "வெருளின் பிறவிவேர்தணி விமல" என்று பரவுந்தோறும் சிவானந்தச் செழுந்தேன் ஊறுதலால், அதனோடு அமைவதின்றி, அமையாது மேன் மேலும் பரவுகின்றமை தோன்ற, "ஆனாதரற்ற" என்றார். பிறவிப் பிணியை நினையுந் தோறும் நெஞ்சத்துக் கலுழ்ச்சி யெய்துதலின், "அரற்றுக்" கூறினார். இவ்வாறு அமையாது அரற்றுதல் கண்டு, அவரவர் தகுதி நோக்கி ஆகமங்கள் பலவும்* அருள் செய்தாராகலின், "தான் இனிதருளிய ஆகமம்,' என்றும், சில ஒன்றற் கொன்று முரணுவனபோலத் தோன்றினும் தாற்பரியத்தால் மலைவின்மையின், மந்தர மலையென்னும் உவமையோடு ஒப்ப நிறுத்தியும் கூறினார்.

தன்னை நாடிப் போந்த மாணாக்கனது வெருள் நீக்கி, அருள்செய்யும் மேலோனாகலின், ஞானதேசிகனை "அருளின் கோலத்து ஆசிரியமலன்" என்றார். எனவே, அருட்கோலமும், அமலனாதலும் ஆசிரியற்கு இலக்கணமாதலும், மாணாக்கனது ஆசுபோக்குதல் அவன் தொழிலாதலும் கூறியவாறு. பிறாண்டும், பாசச்சேதம் பெற்ற முத்தரை, "ஆசிரிமுத்தர்" (அக. 19: 20) என்றே கூறுதலின், ஆசு என்றது மலபந்தங்களை யென்றே கொள்க. பாத பங்கயம் என்றது வடநூன் முடிவு. தேசிகனது திருமேனி காண்டலும், திருநாமஞ் செப்பலும், திருவார்த்தை கேட்டலும், திருவுருவைச் சிந்தித்தலும் தெளிவு பெறுதற்கு ஏது என்பவாகலின், அவர் திருவடியைச் சென்னி சேர்த்தியவழி, ஞானவொளி பெருக விளங்குதல் சொல்லாமே எய்துதலின், "பாதபங்கயப்போது

*பரமன் ஆகமங்களை அருளுதற்கு அவன் திருவருள் ஏதுவாதலை, "அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்" (திருமந். 58, 64) "அண்ணல் அருளால் அருளும் திவ்யாகமம்" (திருமந். 60) எனவரும் திருவாக்குக்களா லுணர்க.



ஒளியிலகப்புனைந்து" என்றார். "தெளிவுகுருவின் திருமேனிகாண்டல், தெளிவுகுருவின் திருநாமம்செப்பல், தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல், தெளிவு குருவுருச் சிந்தித்தல்தானே" (திருமந். 139) எனவரும் திருவாக்கினைக்காண்க. மேற்கூறிய அமைதியும் தொழிலும் பெற்று ஆசிரியன், ஆசிரியமலனாதற்கு இன்றியமையாச் சிறப்பியல்பாகலின், "மாதவன்" என்றார். அருளுபதேசம், வினைத்தொகை. சத்தும் அசத்தும், சதசத்துமாகிய முப்பொருளின் இயல்புகளைத் தவத்தால் உள்ளவாறு அறிந்து, நெறியை உபதேசிக்கும் சற்குருவைப் பெறுதல் அரிதாகலின், அவ்வரிய சற்குருவின் உபதேசம் பெறுதற்கரிது என ஈண்டு விசேடிக்கப்பட்டது. "சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால், சித்தம் இறையே சிவகுருவாமே" (1573) என்பது திருமந்திரம். இவ்வுபதேசந்தானும் கேட்கும் மாணவன் உள்ளத்தே சிந்தித்தல்; தெளிதல் முதலியசெயல்களால் உண்மையுணர்வை எழுப்பி, ஆகமத்துட் கூறப்படும் உண்மைப்பொருளோடு பிணிக்கும் நோன்மையுடைத்தாதலின், அதனை "நோன் ஞாண்" என உருவகம் செய்தார். இனி, மந்தரத்திற்பூட்டிய ஐந்தலையரவு நோன்மையிழந்து, நஞ்சும் மணியும் கான்றது போலாது, கருதியபயன் இடையூறின்றியெய்துதற்குத்துணை செய்த நோன்மையுடைமைபற்றி, "அரும்பெறல் நோன் ஞாண்" என்றார் என்றலுமாம்.

கடலைக்கடைந்த முகுந்தனது தோளை "முழுவலியெறுழ்த் தோள்" (5) என்றதற்கேற்ப, ஈண்டு "மாத்தடக்கை" (20) என்றார். உபதேச நாணைப் பற்றிக் கடைதற்குரிய கருவி மதியல்லதின்மையின், மதிமாத்தடக்கை கூறப்பட்டது. கையென்புழி மூன்றனுருபு விகாரத்தால் தொக்கது. தாழ்த்தவழி இவையனைத்தும் அஞ்ஞானத்தால் மறைக்கப்படுமாகலின், "கதுமெனப் பூட்டி" (20) என்றார். "முறுகவாங்க"

(21) என்றது, "உறவுகோல்நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" (தனி. குறுந். மாசில். 10) என்னும் திருநெறித் தமிழின் நிறைமொழியை நினைப்பிக்கின்றது.

அஞ்ஞானமாகிய கருங்கடல் இவ்வாறு கடையப்பட்டவழி, பேரொளியொடு கூடியஞானம் தோன்றுதலின், அதன் முன் நிற்றலாற்றாத இவ்வஞ்ஞானம் கெடுவதன்றிப் பிறிது செய்தற் கின்மையின், "மறுகுபு கலுழ்ந்து" என்றார். செய்பெனும் வினையெச்சம் கலுழ்ந்தென்னும் வினைகொண்டது. வினை, நல்வினை தீவினை யென்ற இருவினையுமாம். இவ் வினைகள் தாமும், செய்தானது உடம் பழியினும், அவன் உயிரின்கட் கிடந்து,அது புக்குழிப்புக்குத் தம்பயனை ஊட்டாது கழியாத வன்மை யுடையவாகலின், "வல்வினை" யென்றதனோடு அமையாது "திண்கை" என்றார். எனவே, இவையும் அறியாமை காரணமாகப் பிறத்தலும் கூறியவாறாயிற்று. இதுகாறும் அறியாமையால் உடன் கிடந்த வினைகள், ஞானத் தோற்றத்தின் கண் நீங்குதல் வேண்டுமாகலின் "மேலெடுத்து" என்றார்.

வினைநீக்கமும், அறியாமையழிவும் எய்தியவழி அவற்றின் உடன்நின்று முடியும் அறுவகைக் குற்றமும், தாமே நீங்கல் வேண்டுதலின், "அறுவகைப்பித்தை சிறுபுறத் தலைய" என்றார். பித்தை, தலைமயிர். அறுவகைக் குற்றமாவன: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. இவை நீங்கியவழி பிறவிப் பிணியும் கெட்டழிதலின், "பிறவிப் பேரிடர் அலமந்து ஓலமிட்டு இரியல் போக" என்றார். அஞ்ஞானக் கடலில் எழும் வினையலைகளின் வன்மை மென்மைகட் கேற்ப, பிறவிப் பேரிடர் முழக்கம் அமைந்துவரும் அமைதி குறித்து, "பிறவிப் பேரிடர்" என விசேடித்தும், பற்றுக்கோ டின்மையின்



டான் றன்னை" என்ற திருநாவுக்கரசரும். "அமிர்தம் வந்தது பாற்கடலி லல்ல; அமிர்து கடைந்தது லவண சமுத்திரத் தெனவுணர்க" (தா. 284) எனத் தக்க யாகப் பரணியுரைகாரரும் கூறுதல் காண்க. அலறி, விரித்து எடுத்து என நின்ற வினையெச்சங்கள் கூப்பிட என்னும் வினைகொண்டன.

மந்தரம் என்பது மேரு மலையின் ஒரு சிகரம். வடமுகச் சிகரமெனத் தக்கயாகப் பரணியுரைகாரரும், கீழ்த் திசையிலுள்ளதெனக் கந்தபுராணமுடையாரும் கூறுப. ஐந்து தலை நாகம் என்றது வாசுகியென்னும் பாம்பினை. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி, கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே" (சிலப். ஆய்ச்சி) என்றும், "நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கு மத்தாகப், பாகந் தேவரோ டசுரர் படுகடல் அளறெழக் கடைய" (திருநா. மறைக்காடு. ௭) என்றும் வருவனவற்றால் இவ்வரலாறு அறியப்படும்.

இதுகாறும் கூறியவற்றால், தேவரும் அவுணரும் அமுதம் வேண்டி, மந்தரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு, கடலைக் கடைந்தும், முயற்சி முற்றாது தளர, முகுந்தன், தன் முழுவலி எறுழ்த் தோளால் அதுசெய்ய, அதற்கு ஆற்றாத கடல், அவ்வமுதம் தோன்றுமாறு, நுரைத்துக் கலக்குண்டு ஓலமிட்டு நிற்ப, உவரி அமுதம்எழுந்தது என்பது கூறியவாறு.

9 ........................தமிழ் வளர்
குமுதச் செவ்வாய்க் கோமள வல்லி,
இமய வல்லி எழில்பெற விளங்கிய
நுதல்விழி நாட்டத் தொருதனிக் கடவுள்,
அருளின் கொம்பரோ(டு) அமரரும் முனிவரும்
"மருளின் பிறவி வேர்தணி விமல!" என்று

ஆனா தாற்றத் தான் இனிதருளிய
**ஆகம மத்தின்** அருளின் கோலத்(து)
ஆசிரி யமலன் பாத பங்கயப்
போதொளி இலகப் புனைந்து, மாதவன்
அருளுப **தேச** அரும்பெறல் **நோன்ஞாண்**
மதிமாத் **தடக்கை** கதுமெனப் பூட்டி
முறுக வாங்க மறுகுபு கலுழ்ந்து
**வல்வினைத் திண்கை** மேலெடுத்(து) ஒய்யென
அறுபகைப் **பித்தை** சிறுபுறத் தலைய,
பிறவிப் பேரிடர் அலமந்(து) ஓலமிட்(டு)
இரியல் போக அரும்புலம் மடிய
**அச்சா ணாழி** எற்பட எழுதலின்
**ஞானா மிருதம்** என்ப
ஆனாச் செவ்வி மாநூற் பெயரே.

இஃது இந்நூற் பெயர் ஞானாமிருதம் என்பதற்குரிய முறைமையினை முன்பு கூறிய உவமையோடு ஒப்ப நிறுத்திக் கூறுகின்றது.

உரை முடிபு:—செவ்வாய், வல்லி, விளங்கிய, கடவுள், கொம்பரோடு, அமரரும் முனிவரும், ஆனாதாற்ற, அருளிய ஆகமமத்தின், அமலன் பாதபங்கயப்போது இலகப் புனைந்து உபதேச நோன்ஞாண், பூட்டி, மதிமாத் தடக்கை(யால்) முறுக வாங்க, மறுகுபுகலுழ்ந்து, திண்கை எடுத்து பித்தை சிறுபுறத்தலைய, இடர் அலமந்து ஓலமிட்டு இரியல்போக, புலம்மடிய அச்சாணாழிக் கண் எழுதலின், மாநூற்பெயர், தமிழ்வளர் ஞானாமிருதம் என்ப என்பது.

உரை:—குமுதம் போன்ற சிவந்த வாயினையுடைய இளங்கொடியாகிய இமயவல்லியாம் உமையம்மையார் எல்லா வுலகும் எழுச்சி பெறும் வண்ணம் ஒரு பாகத்தே விளங்குகின்ற, நெற்றியிற் கண்ணுடைய ஒப்பற்ற சிவபரம்பொருளை அருட்சத்தியாகிய பூங்கொம்பு போலும் அவ்வம்மையா



ரோடு தேவர்களும் முனிவர்களும் வணங்கி, "மயக்கத்தால் உளதாய்த் தொடரும் பிறவியினை வேரோடு தொலைத்தருளும் விமலனே!" என்று அமையாது துதிக்க, அத்தொலைவுக்குரிய கருவியெனத் தான், இனிது உரைத்தருளிய ஆகமமாகிய மத்தினோடு, அருளே திருமேனியாகவும், தன்னையடையும் மாணவரது மனக்கரிசு போக்கும் தூய்மையும் உடைய அமலனாகிய ஞானதேசிகனது திருவடித்தாமரையினை, ஞானவொளி விளங்க, சென்னியிற் புனைந்து, அம்மாதவன் அருளிச் செய்யும் உபதேசமாகிய பெறுதற்கரிய வலியநாணை, அறிவாகிய பெரிய கையினால், விரையப்பூட்டி, அஞ்ஞானமாகிய கடற்கண் நிறுத்தி, முறுகக் கடைந்தவழி, அக்கடல் கலங்கி, வருந்தி, வலியவினைகளாகிய இருகையினையும் எடுத்து, ஒய் யென்னும் ஓசையொடு, காலம் முதல் அறுவகைப்பட்ட குற்றங்களாகிய தலைமயிர் முதுகிலே கிடந்தலைய, பிறவியாகிய பெரிய துன்பம் நிலைகலங்கி அலமந்து ஓலமிட்டு அறக்கெட்டொழிய, அடக்குதற்கரிய புலன்களும் தம் சேட்டை அடங்கி மடிய ஞானமாகிய அமுதம் ஒளிவிட் டெழுதலின், அமையாத அழகினையுடைய இந்நூலின் பெயர் தமிழ் நலம் சிறப்ப வளரும் ஞானாமிருதம் என்று கூறுவர்.

தமிழ்வளர் என்பதனை ஞானாமிருதம் (27) என்பதனோடு கூட்டுக. இதனைக் கிடந்தபடியே குமுதத்தோடு கூட்டி, "தமிழுக்குப் பெருமை கொடுக்கிற குமுதம் போன்ற செய்யவாய்" என்று கூறுவர் பழைய வுரைகாரர். குமுதம், செவ்வல்லி, கோமளம், இளமை உமாதேவியை வல்லியென்றே வழங்குதற்கண் இந்நூலாசிரியர் பெருவிருப்பினராதலின், "கோமளவல்லி, இமையவல்லி" என்றனர். முன்பும், "மலர்ந்த மாதர் மரகதவல்லி" (அக. 1 : 12) என்றது காண்க. இமயவல்லி பரமனோடு கூடியிருத்தல்,

தன் பொருட்டன்றி, மன்னுயிர் பொருட்டாய், அவை முற்றும் போக நுகர்ச்சி யெய்தி வீடு பெறுதற்குரிய நெறியில் எழுச்சி பெறுவதாகிய நலம் கருதியதாகலின், அச்செய்தியினை "எழில்பெற விளங்கிய" என்றார். தன் பொருட்டாயின், அவள் பரமனைப் பிரிந்தவழி உயிர்கள் போக நுகர்ச்சி கருதாமை நிகழ்தல்கூடாதாகலினானும், போகம் வேண்டாது யோகம் வேண்டி நின்றவழி, உயிர்த்தொகை தாமும் அவ்வேண்டாமையினையே மேற்கொண்டிருந்தன வென்பதனை, கந்தபுராண முதலிய சைவபுராணங்கள் கூறுமாறு காண்க. மேலும், "கண்ணுதல் யோகிருப்பக் காமன் நின்றிட வேட்கைக்கு, விண்ணுறு தேவராதி மெலிந்தமை யோரார் மால்தான், எண்ணிவேள் மதனையேவ எரிவிழித்திடவான் பெற்ற, பெண்ணினைப் புணர்ந் துயிர்க்குப் பேரின்பமளித்த தோரார்" என்றும், "இடப்பாகம் மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும் அடைப்பானும்" என்றும் வரும் சிவஞானசித்தித் திருவாக்குக்களானும் இவ்வுண்மை துணியப்படும். உயிர்கள் போகநுகர்ச்சியெய்தியே வீடு பேற்றுக்குரிய நெறியறிந்தொழுகும் நலமுடைய என்பது "காமஞ் சான்ற கடைக் கோட்காலை, ஏமஞ்சான்ற மக்களொடுதுவன்றி, அறம்புரிசுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன்பயனே" (தொல். கற். பு.51) எனவரும் தொல்காப்பியனார் திருமொழியால் உணரப்படும். சருவசங்காரமூர்த்தி என்னும் குறிப்புத் தோன்றப் பரமனை, "நுதல் விழிநாட்டத் தொருதனிக் கடவுள்" என்றார். ஒப்பாரும் மிக்காருமில்லாத தனிநிலைப்பரம்பொருள் என்றற்கு, "ஒரு தனிக்கடவுள்" என விசேடித்தார். பரமனை இன்றியமையாது பிரிவின்றி இயைந்து நின்ற இயைபுகுறித்து, உமையம்மையைக் "கோமளவல்லி" யென்றும் "இமயவல்லி" யென்றும் "மரகதவல்லி" யென்றும் கூறிப்போந்த ஆசிரியர்



தால் பாழ்அடைந்தது போல் சிறப்புற்ற வாழ்வை உடையவர் ஆகமாட்டார்கள் என்றும், மலைநாட்டார் உறங்கும்போது தமிழ் நாடு அவரைத் தட்டி எழுப்புதலும், அப்படியே தமிழர் தூங்கிக் கிடக்கும்போது மலைநாடு எழுப்பிவிடுதலும் பழமையாக நடந்து வருகிறது என்றும், இப்பொழுது தமிழர் பல ஊர்களிலிருந்து வந்து சுந்தரர் சேரமான் இவர்களைக் கொண்டாடுதல் மலைநாட்டார் அவர் ஊரில் பிறந்த சேரமானை மறந்திருந்ததை நினைவுக்குக் கொண்டுவருவதற்கு ஒருதுணை என்றும், இந்துக்களாகிய நாம் மேல்நாட்டார் பட்டினமை (Civilisation) யைக் கைக்கொண்டு நம் உயிர் நிலையாகிய அன்பு நெறியைக் கைவிடலாகாது என்றும் சொன்மாரி பொழிந்தார்.

பின்பு கோவை வழக்கறிஞரும், இக் கொண்டாட்டத்திற்கு அடிப்படையாய் நின்று கொண்டிருக்கும் பெரியாருமாகிய திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மூன்று ஆண்டாக இத்திருநாளைக் கொண்டாடுவதற்காகத் தாம் கொச்சி நாட்டாண்மைக்காரரோடு எத்தனை தடவை மன்றாடி விண்ணப்பித்துக் கொண்டனர் என்றும், அதற்கு அந்நாட்டாண்மையாளர்கள் இணங்கி இத்திருநாளைத் தங்கள் பொருள்கொண்டு கொண்டாட உத்திரவு பிறப்பித்தனர் என்றும், திருநாளில் தமிழருக்கு வேண்டிய நலங்களைத் திருவஞ்சைக் களத்தில் செய்துகொடுக்கத் திட்டம் செய்தனர் என்றும் தெரிவித்தனர். பிறகு அவர் கொச்சிப் பெருமன்னரை வாழ்த்தி, அம்மன்னர் சார்பாக அந்நாட்டுக் கோவில் பிரிவினைத் தலைவர் அங்கு வந்திருந்து வழிபாடுகளைச் செவ்வையாய்ச் செய்ததற்காகவும், நாயன்மார்கள் வரலாறுகளை மலையாளர்கள் நன்றாய் அறியும் வண்ணம் பெரியபுராணத்திலுள்ள வரலாறுகளையும், சுந்தரர் சேரமான் நாயன்மார்கள் பாடிய புகழ்மாலைகளையும் மலையாளத்தில் வெளியிடச் செய்யும் முயற்சியைப் போற்றுவதாகச் சொன்னதற்காகவும் அவர்க்கு நன்றி கூறினர். பின்பு கூட்டம் கலைந்தது.

## பாம்பன் சுவாமிகள் பகர்ந்த மணிகள்

"இறைவன்பால் எத்துணைத் தூய்மையுளதோ அத்துணைத் தூய்மை யெய்துதலே வீடுபெறென்றல் சாலும்."

* * *

"உடம்பின் ஓரமிசத்திலே தூர்மாமிசம் வளர்வது போலவே தூர்மதியும் சிலர்பால் வளர்கின்றது."

* * *

"மாட்டை மருப்பாட்டைக் கண்ணுறுபோது குழந்தைகள் அஞ்சுவதுபோல முரணார் மூர்க்கரைச் சாந்த குணசிலர் காணின் அஞ்சவேண்டியவரே; வளையும்வில் இழிவுடைத் தன்றே."

* * *

"புறங்காடு புறங்காடாகப் புத்தியுடையார் புத்தியைச் செலுத்துகிறார். அஃறிணை யெனப்படு தாவர மனைத்தும் மேனோக்கி வளர உயர்திணை மக்களுட் சிலரன்றோ கீழ் நோக்கி நிற்கின்றனர்."

* * *

"எட்டிப் பழத்திற்கு அதியழகிய செவ்வண்ணத் திண்மை வாய்ந்தாங்குச் சில மனிதர்க்கு இரத்தினவேல், தங்கவேல், சித்திரவேல், வச்சிரவேல், குமரன், குமாரன், கந்தன் முதலிய திவ்விய நாமங்கள் வாய்ந்திருக்கும். அவர்கள் வளவிய சிவசின்னங்களோடுங் காணப்படல் கூடும். அவர்களை நம்பி மோசம் போதல் கூடாது."

* * *

"புறங்கூறலும், பொறாமையும், வஞ்சகமும், கபடமும், நஞ்சினுங் கொடுமையவாகலின் அவற்றை யுடையோன் தன்னையுஞ் சார்ந்துள்ளனவற்றையுங் கெடுக்கும் மூரி மூங்கிலாக வெண்ணப்படுகிறான். இவன் வாழ்நாளும் வாழ்நாளாய் மதிக்கப்படுமோ? நாகபடம் நாகவுருவின் மறைந்தாங்குச் சீவான்மாவும் பரமான்மாவும் உடம்பினுமுலகினும் மறைந்துள்ளன வென்பதை நன்குணராமையினாலேயே அப்புறங்கூறன் முதலிய காரியங்களிலே மனிதன் தலைப்படுவானாகின்றனன்.



குதல் பற்றி, "அலமந்து ஒலிட்டு இரியல்போக" என்றும் கூறினர். பிறாண்டும் "தண்டாப் பிறவிப்பேரிடர்" (அகவ. 32 : 3) என்றே கூறுப. காரண காரியமாய்த் தொடர்வதாகலின் "பேரிடர்" எனப்பட்டது. இரியல்போக என்பன "அரிபுகு பொழுதின் இரியல் போகி" (பெரும்பாண். 202) "இரியற் போக்கும்" (புறம். 135) என இணைந்து நின்றே நீங்கல், கெடுதல் முதலிய பொருள் குறித்து வருகின்றன. அஞ்ஞானம் என்பது அச்சானம் என நின்று அச்சான ஆழி எனற்பாலது அச்சாணழி என முடிந்தது. ஆழி என்றவிடத்து எழனுருபு தொக்கது. என்றும் நின்று நிலவுதலின், "ஆணச் செவ்வி" என்றார்.

எல், ஒளி. படுதல், தோன்றுதல். "எற்படக் கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்" (முருகு. 74-5) என்று நக்கீரனார் கூறுதல் காண்க. சுட்டு வருவிக்கப்பட்டது. விறகும்தீயும் போல உயிர்களிடத்து அஞ்ஞானமும் ஞானமும்விரவிநின்று, விறகைக் கடைந்தவழித் தீப்பிறத்தல்போல, தீக்கையால் உயிரிடத்து ஞானம் பிரகாசிக்குமாறு அமைந்திருத்தலின், "அச்சாணழி எற்பட எழுதலின், ஞானமிருதம்" என்றார். இதனை, "பொடியாப்புடைபடவுயர்ந்த, இந்தனக் குழுவைக் கொந்தழலடூஉம், கூடநின்றும் பீடுதருபாயம், செல்லாக்காலை மெல்லெனவிளங்க, ஒல்லா வல்லழல் போலநல்லோய், ஞானமும்இன்மையும் நலமிக்கு ஆணவுயிர்கட் குணர்வனைவகையே" (அகவ. 70) என்பதனாலறிக. இந்நூற்கு இப்பெயர் தேசிகனால் இடப்பட்டதாகலின், "என்ப" என்றார்.

இதுகாறும் கூறியவாற்றால், மந்தரமலையை மத்தாகவும், ஐந்தலை யரவினை நாணாகவும் கொண்டு தேவரும் அவுணரும் அமுதம்வேண்டிக் கடலைக்கடைய மாட்டாமையால், நாள்பல செல்ல, முடிவில் முகுந்தன் அந்நாணைப்பற்றிக் கடைதலும்,

நேரம் நிகழ்த்தினார்கள். திரு. பிள்ளை அவர்கள், சுந்தரர் வாழ்க்கையை ஆய்ந்து பார்ப்பதினால் நம்வாழ்க்கை எப்படி மேன்மையுறும் என்பதை எடுத்தெடுத்துக் காட்டி, மலைநாட்டார் வியப்படையச் செய்ததோடு, சுந்தரர் வாழ்நாள் எத்தனை பிரிவுகள்படும் என்றும், ஒவ்வொரு பகுதியிலும் அவரது உள்ளக்கிடக்கை எப்படியிருந்தது என்றும், அவர் இன்பத்தைக் கடவுள் வழியாகப் பெற்றும் துன்பத்தை அவரை வேண்டியே தீர்த்தும் அவனையே தமக்கு என்றும் பெருந்துணையாகக் கொண்டனர் என்றும், பெண்ணைப் பெரிதுவக்கும் அவர் சிவன் அருள்படி இரு மனைவியரை யேற்றுப் பொன்னும் பொருளும் வேண்டியபோதெல்லாம் சிவபிரானையே வேண்டிப் பெற்று வாழ்ந்த ஒரு யோகி என்றும், சொல் தவறுபவரைக் கடவுள் பேரன்புடையரேனும் பொறுத்தருளமாட்டார் என்பது சுந்தரர் சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சூளறவினைப் பிழைத்தற்காகக் கண்ணைக் கொண்டது காட்டுகிறதென்றும், மலைநாட்டினர் அன்பு நெறியைப் பெருக்குவது மிகத்தேவை யென்றும் பேசி அமர்ந்தனர். பின்பு கொடுங்கோளூர்க்கு அடுத்த ஊரில் உள்ள திருவாளர் சிறியன் அச்சன் (அச்சுதன் ?) என்னும் கல்வி நிறைந்த ஒரு மலைநாட்டினர் மிக ஊக்கத்தோடு மலையாளத்தில் சொற்பொழிவு செய்தனர். அவர்கள் மலையாளமானது தமிழ் மொழியினின்று வந்தது என்பதை இப்பொழுது எல்லா மலையாளப் புலவர்களும் ஒத்துக் கொண்டனர் என்றும், மலைநாடு இப்பொழுது சமயப்பற்றுக்குன்றி யிருப்பது உண்மையே என்றும், மலையாளர் இயற்கை வளங்கள் நிறைந்து கல்வியில் இப்பொழுது மேம்பட்டாலும் அன்பு நெறியில் நில்லாததினால், தக்கன் யாகத்தில் எல்லாத் தேவரும் வந்திருந்தாலும் முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் இல்லாத

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருணந்திசிவாசாரியர்

அருளிச்செய்த

# இருபாவிருபஃது மூலமும்

திருவாவடுதுறையாதீனம்

# நமச்சிவாயத்தம்பிரான் உரையும்

**இந்நூலுக்கு வரலாறாவது:—**

பூரண கர்த்தாவா யிருக்கப்பட்ட ஸ்ரீகண்டபரமேசுர னருளிச்செய்யப்பட்ட சிவாகமத்தில் ஞானகாண்டமா யிருக்கப்பட்டதைச் ஸ்ரீநந்திதேவ தம்பிரானார்க்குக் கடாட்சித்தருள, ஸ்ரீநந்திதேவ தம்பிரானார் சனற்குமார பகவானுக்குக் கடாட்சித்தருள, சனற்குமார பகவான் சத்தியஞான தெரிசனிகளுக்குக் கடாட்சித்தருள, சத்தியஞான தம்பிரானார் பரஞ்சோதிமாமுனிக்குக் கடாட்சித்தருள, பரஞ்சோதிமாமுனிகள் திருவெண்ணெய்நல்லூரே திருப்படை வீடாகவுடைய மெய்கண்டதேவ தம்பிரானார்க்குக் கடாட்சித்தருள, அந்த மெய்கண்டதேவ தம்பிரானார் தமது திருவடியைப் பெற்ற அருணந்திதேவ தம்பிரானுக்குக் கடாட்சித்தருள, அவர் அந்த உபதேசத்தின் பயனைச் சிவஞானசித்தி யென்னுந் திருநாமத்தினையுஞ் சாத்தி, வழிநூலாகச் செய்தருளி, அதுவன்றியும் அந்நூலி லத்தங்கள் விளங்குகை நிமித்தமாக அந்த உபதேச சம்பிரதாயங்களை யெல்லாம் ஆசாரியனை முன்னிலைக் கர்த்தாவாக நாட்டி வினாவாக வெடுத்துக்கொண்டு பத்து வெண்பாவும் பத்தகவலும் இரண்டு பாவாகக்கொண்டு இருபாவிருபஃது என்னுந் திருநாமத்தினையுஞ் சாத்தி இந்நூலருளிச்செய்ததென வறிக.

மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் - பூமியின்கண்ணே வியாபரிக்கப்பட்ட ஆன்மாக்களுக்குண்டாகிய பாசத்தைத் தீக்ஷைக் கிரமங்களினாலே போக்குகிற,

வெண்ணெய்நல்லூர் மெய்கண்டான் - திருவெண்ணெய் நல்லூரென்கிற திருப்படைவீட்டிலே திருவவதாரஞ் செய்து, மெய்கண்டதேவனென்கிற திருநாமத்தினையுந் தரித்தருளினவனாயிருக்கும்,

என்றொருகால் மேவுவரால்-என்று ஒருகாற்சென்று பொருந்தி நினைத்தவர்கள்,

வேறின்மை கைகண்டார் உள்ளத்திற்கண் - உயிர்க்குயிராய்நின்றறிவிக்கிற சிவனைத் தங்களிடத்திலே புலப்படக் கண்டவர்கள்.

எனவே, சிவனென்று மாசாரியரென்றும் வேறாயிரா திரண்டுமொருமுதலென்பது கண்டுகொள்க. அப்படியானால் அந்தச் சிவன் இப்படி மானிடவேஷமாக வரவேண்டுவானேனென்னில், அஃதாவது விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னப்பட்ட மூவகை யான்மாக்களையுஞ் சிவன் இரட்சிக்குமிடத்து யாதாமொரு பட்சிகளை மிருகங்களைப் பிடிக்கவேண்டினவர்க ளததற்கேற்ற பார்வைகளைக் காட்டிப் பிடித்தாற்போல, "எவ்வுலகத்து மூர்த்தி யேதுகொண் டிவணியங்கு, மவ்வுலகத்து மேனி யதுகொண்டிங் கமருமீசன்" என்னும் விதியைப் பற்றி யான்மாக்க ளெடுக்கப்பட்ட வுருவத்துக்குத் தக்க திருமேனி கொண்டருளி இரட்சிக்கை கடனாகையினால் சகலராயுள்ள மானிடரை யிரட்சிக்குமிடத்து அவர்களைப்போலே மானிடச் சட்டை சாத்தி ஆசாரிய விக்கிரகமாக வெழுந்தருளினதெனவறிக. என்றிங்ஙனம் பொருள் கூறியதற்குப் பிரமாணமாவது போற்றிப் பஃறொடை வெண்பாவில்,

"நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமல மொன்றினையு
மந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப்—பின்னன்பு
மேவா விளங்கும் பிரளயா கலருக்கு (மெய்காண)த்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப்—பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை—பன்னவனுக்
காதிகுண மாதலினா லாடுந் திருத்தொழிலுஞ்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும்—பாதியாம்



பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியு மதிக்கொழுந்து—மச்சமுற
வாடு மரவு மழகார் திருநுதன்மேல்
நீடுருவ வன்னி நெடுங்கண்ணுங்—கேடிலயங்
கூட்டுந் தமருகமுங் கோல வெரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும்—வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தா ளினுமடியார்
உள்ளத்தி னும்பிரியா வொண்சிலம்புங்—கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலு
மொன்றுமுருத் தோன்றாமல் உள்ளடக்கி—யென்று
மிறவாத வின்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து—நறவாருந்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதனொரு பேர்புனைந்து—பாரோர்த
மூண்டி யுறக்கம் பயமின்ப மொத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி" [119 - 142]

என்றும், திருவாசகத்தில்,

"அருபரத் தொருவ னவனியில் வந்து
குருபரனாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே" [போற்றித்திருவகவல், 75-77]

என்றும், சிவப்பிரகாசத்தில்,

"உணர்வாய் நின்ற ஞானக்
கூத்தனொரு மூர்த்திகொடு குறுகி" [ii, 31]

என்றும்,

"இறையருளுருவாய் வந்து கூட்டிடும்" [vi, 1]

என்றும் வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க. இந்த உதாரணங்கள் காட்டியது இந்நூலாசிரியனை முன்னிலைக் கர்த்தாவாக நாட்டிவருகையால் ஆசாரியனுக்குங் கர்த்தாவுக்கும் வேற்றுமை யில்லையென்னுங் கருத்தைப்பற்றி யெனவறிக.

இது கடவுள் வணக்கமாகிய குரு துதி.

இங்ஙனம் ஆசாரிய மூர்த்தியாகி வந்திரட்சிக்கிற தேவரீர் உயிர்க்குயிராய்நின் றறிவிக்கு மிடத்தும் அடியேனுக் கறியாமை யுண்டாவானே னென்னும் வினாவும் அதற்கு விடையும் மேலருளிச் சய்வா னெடுத்துக்கொண்டருளியது.

### அகவல்

கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் றானென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ
காரா கிருகக் கலியாழ் வேலைநின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லொன்றுடையே னெனதுள
நீங்கா நிலைமை யூங்கு முளையால்
அறிவின் மைமலம் பிறிவின் மையெனி
னோராவினை யுணர்த்தும் விராய்நின் றனையேற்
றிப்பிய மந்தோ பொய்ப்பகை யாகாய்
சுத்த னமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னெனும்பெயர் முடியா
வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றாய்ப்
பேறு மின்றா மெமக்கெம் பெரும
இருநிலந் தீநீ ரியமானன் காலெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கிலாதலின்
வேறா வுடனோ விளம்பல் வேண்டுஞ்
சீறி யருளல் சிறுமை யுடைத்தால்
அறியாது கூறினை யபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளினங் குருமுத லாயெனின்
அபக்குவ மருளினு மறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டிற் பயனிலை நின்றாற்
பக்குவ மதனாற் பயனீ வரினே
நின்னைப் பருவ நிகழ்த்தா தன்றோ
தன்னைப் பாரிலி யென்பதுந் தகுமே
மும்மலஞ் சடமணு மூப்பிள மையினீ
நின்மலன் பருவ நிகழ்த்திய தார்க்கோ
வுணர்வெழு நீக்கத்தை யோதிய தெனினே



இணையிலி யாயினை யென்பதை யறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டுங்
காண்பா ரார்கொல் காட்டாக் காலெனு
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கு மெய்ஞ்ஞா னத்தி
னாட்பா லவர்க்கரு ளென்பதை யறியே. ௨

### மேல் வியாக்கி.

கண்ணகன்ஞாலத்துக் கதிரவன்றானென வெண்ணெய்த்தோன்றிய மெய்கண்ட தேவ - இடவிதாகக்கொண்டகன்ற பூமியினிடத் துண்டாகிய இருளைக் கடிவது பொருட்டாக ஆகாசமார்க்கத்திலே தோன்றின ஆதித்தனைப்போல ஆன்மாக்களுக்குண்டாகிய அஞ்ஞானமாகிய இருளைக் கடிவது பொருட்டாகத் திருவெண்ணெய்நல் லூராகிய திருப்படைவீட்டிலே திருவவதாரஞ் செய்தருளின மெய் கண்ட நாதனே,

காராகிருகக் கலி யாழ்வேலை நின் பேராவின்பத் திருத்திய பெரும - அஞ்ஞானமாகிய சிறைச்சாலையிலே மிடிப்பட்டுக் கிடந் தழுந்துகிற அடியேனை நின்னுடைய அசைவற்ற பேரின்ப பரிபூர ணத்திலே யிருத்தின தம்பிரானே,

வினவலொன்றுடையேன் - அடியேனுக்கு ஒரு வினாத் தேவரீர் சந்நிதியிலே விண்ணப்பஞ் செய்யவேணுமென்று அனவரத முண்டாயிருந்தது ; அது ஏதென்று கேட்டருளுகில்,

எனதுளநீங்கா நிலைமை யூங்குமுளையால் - அடியேனுள்ளத்தை விட்டு நீங்காமல் நிற்கிற முறைமை அநாதியே தொடங்கி மிகவு முண் டாயிருக்குமிடத்தும்,

அறிவின்மை - அடியேனுக்கறியாமை வருவானேனென்று கேட்கில்,

மலம் பிறிவின்மையெனின்-அஃது ஆன்மாவினோடும் அநாதியே கூடி வரப்பட்ட ஆணவமலம் உன்னைவிட்டு நீங்காதபடியினாலே காண் உனக்கு அறியாமை யுண்டானது என்று தேவரீரருளிச்செய்யில்.— அதற்குதாரணம் சித்தியாரில் "அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்க ளோடு" [iv, 38] மென்கிற பாடங் கண்டுகொள்க.

ஒராவினையுணர்த்தும் - அடியேனை விட்டுத் தேவரீர் நீக்கமாக நின்றருளுமென்கின்றதை யுண்டாக்கும்,

விராய் நின்றனையேல் - அப்படி நம்மை நீக்கமாகச்சொல்லாது நாமும் உன்னோடு கூடியே நிற்போமென் றருளிச்செய்யில்.—அதற்கு உதாரணம் சிவஞானபோதத்தில் "மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்" [vii, 1] தென்ற பாடத்தில், 'தண்கடனீ ருப்புப் போற் றூனே யுளவுளவாய்த் தா' னென்பது கண்டுகொள்க.

திப்பியமந்தோ - அப்படித் தேவரீரருளிச்செய்தது தெய்வீகமானதோர் ஆச்சரியமாகவிருந்தது. அதுவென்னென்று கேட்டருளு கில்,

பொய்ப்பகை யாகாய் - அப்படி அஞ்ஞானத்தோடும் கூடியிருக்கப்பட்ட அடியேனோடுந் தேவரீருங் கூடியிருக்குமாகில் பொய்யென்று சொல்லப்பட்டு வருகிற அஞ்ஞானத்தைச் சோதிக்கிறவனென்று தேவரீரைச் சொல்லவேண்டியதில்லையாம். அன்றியும்,

சுத்தனமலன் சோதிநாயகன் முத்தன் பரம்பரனெனும் பெயர் முடியா - சுத்தனாயிருக்கிறவனென்றும் நின்மலனென்றும் பேரொளியாயிருக்கப்பட்ட கத்தாவென்றுஞ் சர்வ வுபாதிகளையுங் கழன்றுஅப்பாற்பட்டவனென்றும் வத்துவென்று சொல்லப்பட்டதற்கெல்லாமப்பாற்பட்ட வத்துவென்றும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட திருநாமங்களுந் தேவரீருக்குண்டாகாது.—அதுவெப்படி யென்னில், மலரகிதன் மலசம்பந்தியா யிருக்கிறவனோடுகூடி நில்லானென்று சீஷன் வினவ அப்படியல்ல,

வேறுநின் றுணர்த்தின் - அப்படியுன்னோடேகூடி நிற்பதில்லை உன்னறிவுக்கறிவாக நாம் வேறே நின்றே யுன்னையறிவித்து நிற்போமென் றருளிச்செய்யில்.—உதாரணம் சிவஞானபோதத்தில் " மன்னு சிவன் சன்னிதியின் மற்றுலகஞ் சேட்டித்த, தென்னு மறையினியல்மறந்தாய் - சொன்னசிவன், கண்ணு யுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா, ணெண்ணுன் சிவசத்தை யின்று " [v, 2] என்பது கண்டுகொள்க.

வியாபகமின்றாய்ப் பேறுமின்றா மெமக் கெம்பெரும - என்னுடைய பெருமானே அப்பொழுது தேவரீருக்குச் சர்வவியாபியென்கி



ரித்தறிய வேண்டும் பகுதிகளெல்லாம் விளக்கஞ் செய்யத்தக்கதாக அடியேனை மறைக்கப்பட்ட அஞ்ஞானமாகிய போர்வையை நீக்கி அடியே னிருதய கமலத்தினையு மலர்வித்து அனாதியாயிருக்கப்பட்ட திருவருளையும் அடியேனுக்குக் கடாட்சித்தருளிய,

மேதினி யுதய - பூமியிலே தோன்றியருளின ஞானவாதித் தனே,

மெய்கண்ட தேவ-மெய்கண்ட தேவனென்கிற திருநாமத்தினை யுடையவனே,

கோதி லமுத - குற்றமற்ற அமிர்தமா யிருக்கப்பட்டவனே,

குணப்பெருங்குன்ற - நற்குணங்க ளெல்லாமுடைய பெரிய மலையே. எனவே மலைபோலும் பெருமையை யுடையவனே யென்றதென வறிக.

என்னி னூர்தலு மகறலு மென்னைகொல் - எங்கும் பூரணமாய் நிற்கிற தேவரீர் அடியேனோடு ஓரவதாரத்திலே கூடியும் ஓரவதாரத்திலே பிரிந்தும் நிற்கிறது எது பிரகாரமென் றருளிச் செய்தருள். கொல் ஐயம்.

அது நீ நினைக்கும் பொழுது கூடியும் நினையாதபொழுது நீங்கியும் நிற்போம்.

உன்னிற் றுன்னியுனுவிடிற் பெயர்குவை யென்னு மதுவே கின்னியல் பெனினே - அப்படித் தேவரீர் கூடியும் பிரிந்தும் நிற்கிறதும் அடியே னினைக்கும் பொழுது கூடியும் நினையாத பொழுது நீங்கியும் வருகிறதே தேவரீர்க்கு முறைமையா மென்றருளிச் செயில்.—உதாரணம் தேவாரம், "பன்னிலூறும் பழத்தினி லின்சுவை, யென்னி லூறி யெனக்கே களிதரு, முன்னி லுன்னு முனுவிடில் விட்டிடு, மென்னு ளீச னிருந்த வியற்கையே" என்பது கண்டுகொள்க. பாடம்.

வியங்கோ ளாளனு மாகி யியங்கலு முண்டெனப் படுவது - அப்பொழுது தேவரீர் அடியேனுக்கு ஏவற்றொழிற் செய்கிறவனுமாய்ப் பூரணமில்லாத போக்கு வரவு செய்யப்பட்ட ஏகதேசி யென்று சொல்லவும் படும். அப்படி யல்ல நாம் அசைவற நிற்க நீதானே கூடியும் பிரிந்தும் வருவை,

எண்டோண் முக்க ணியாங்கணும் பிரியா தோங்குநின் னிலையில் யான்வந் தணைந்து மீள்குவ னாயின்-எட்டுத் திருப்புயமும் மூன்று

வறிவேயோ யாதென்று கூறுகே னாய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு. ௩

**மேல் வியாக்கி.**

அறிவறியாமை யிரண்டு மடியேன் செறிதலான் - அடியேன் ஒரு அவதாரத்திலே யறிந்தும் ஒரு அவதாரத்திலே அறியாமலுமாக இந்த இரண்டு பகுதியும் அடியேன் கூடிவருகையினாலே,

மெய்கண்டதேவே - மெய்கண்டதேவனே,

அறிவோ வறியேனோ யாதென்று கூறுகேன் - அடியேனை அறிவென்று சொல்லப்பட்டிருக்குமோ அறியாதவனென்று சொல்லப்பட்டிருக்குமோ இவையிரண்டினும் எதென்று விண்ணப்பஞ் செய்வேன்,

ஆய்ந்து - இவையிரண்டு பகுதியையுந் திருவுளத்திலே யாராய்ந்து பார்த்தருளி,

குறிமாறு கொள்ளாமற் கூறு - தேவரீரருளிச்செய்த அர்த்தத்தின் குறிப்புக்கு அடியேன் மறுத்து விண்ணப்பஞ் செய்யாமலருளிச்செய்தருள்.

அதற்கு விடையும் ஆன்மா அறிவித்தாலறிகிறவனென்றவாறு. உதாரணம் சித்தியாரில் "அறிவிக்கப் படுஞ்சித்து மிவ" [xi, 11] வென்றும், சிவஞானபோதத்தில் "அறிவிக்கவன்றி வறியா வுளங்க" [viii, 4] வென்றும், திருவாசகத்தில் "அறிவி லாமை யன்றே கண்டதாண்டநா" [திருச்சதகம், 50] வென்றும். கத்தா அறிவுடையவன் பாசம் அறிவித்தாலுமறியாது ஆத்மா அறிவித்தாலறிகிறவனென்பது கண்டுகொள்க. ௩

இங்ஙனம் பசுவிலக்கணங் கேட்ட மாணவகன் பாசவிலக்கணங் கேட்கும் வினா மேலருளிச் செய்கின்றது.

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோத மோகங் கொலையஞர் மதநகை
விராவென் குணனுமா ணவமென விளம்பினை
யஞ்ஞா னம்பொய் மயர்வே மோகம்
பைசா சூநிய மாச்சரி யம்பய
மாயவேழ் குணனு மாயைக் கருளினை



யிருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும்
விடுத்தலும் பாநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனுங் கருமத் தருளினை
யாங்கவை தானு நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானா
யென்வழி யென்பதொன் றின்றா மன்ன
ஆரும் பேரு முருவுங் கொண்டென்
னாரும் பேரு முருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதியிற்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய
மும்மலஞ் சடமென மொழிந்தனை யம்ம
மாறுகோள் கூறல் போலுந் தேறுஞ்
சடஞ்செய லதனைச் சார்ந்திடு மெனினே
கடம்பட மதனுட் கண்டிலம் விடம்படு
மூன்றிரள் போன்ற தாயிற் றோன்றி
யணைந்தாங் ககறல் வேண்டுங் குணங்களும்
பன்மையின் றொகு மெம்மைவந் தணைதரத்
தானோ மாட்டா தியானோ செய்கில
னீயோ செய்யாய் நின்மல னாயிட்
டியல்பெனிற் போகா தென்று மயல்கெடப்
பந்தம் வந்த வாறிங்
கந்த மாதி யில்லா யருளே. ௪

**மேல் வியாக்கி.**

கூறியமூன்று மலத்தின் குணக்குறி வேறுகிளக்கின் - அடியேனுக்கு முன்னே உபதேசக் கிரமமாகப் பதி பசு பாசமாகிய திரிபதார்த்தங்களையுந் தேவரீரருளிச்செய்கிற அவதாரத்து ஆணவ மாயை காமிய மென்னப்பட்ட மூன்று மலங்களினுடைய குணங்களையுங் குறிகளையும் வெவ்வேறாகச் சொல்லுமிடத்து,

விகற்பங் கற்பங் குரோதமோகங் கொலையஞர் மதநகை விராவென்குணனு மாணவமென விளம்பினை - ஆன்ம போதமானது

செயலதனைச் சார்ந்திடும் - நீயறிவாயுள்ளவனாகையாலே உன்னோடுங் கூடுகையால் அந்த மலங்களுஞ் சேட்டைப்பட்டதாயிருக்கும்.—உதாரணம் சிவப்பிரகாசத்தில் "அன்னியமா னவையுணர்த்தி அநன்னியமாய் நிறைந்த வறிவறியா மையினாலு மருணிலவுங் காலந், தன்னிலவ னேயாவு மாய்நின்ற தொன்மை தாமுணர்த லானுமுயிர் தானெனவொன் றிலதாய், மன்னியிடு மலம்" [ii, 18] என்பதுங் கண்டுகொள்க.

எனினே - என்று தேவரீ ரருளிச்செய்யில்,

கடம்பட மதனுட் கண்டிலம் - கடபடாதியாயுள்ள சால் குடம் புடைவை சீலை அடியேனோடுங் கூடினா அவதரத்து அப்படிச் சேட்டைப்படக் கண்டேனில்லை யென்று நீ கேட்கில்,

விடம்படு மூன்றிரள் போன்றது - அந்த மலங்கள் இந்தக் கடபடாதிகள்போல அல்ல விடத்தையுடைய வச்சநாபி முதலாயுள்ள நஞ்சுகள் சடமாயிருந்தாலும் அறிவாயுள்ள ஆன்மாக்கள் புசித்த அவதரத்து அந்த அறிவை யழித்துத் தம்குண மேலிட்டு மயக்கினாற்போல அந்த மலங்களுஞ் சடமாயிருந்தாலும் அறிவாயுள்ள உன்னோடே சம்பந்தமான அவதரத்து அவையு மப்படியே மேலிட்டு மயக்கும்,

ஆயில் - அப்படியானால்,

தோன்றி யணைந்தாங் ககறல்வேண்டும் - அந்த நஞ்சானது புசித்தவர்களை மேலிட்டு மறைத்து நின்று மீளவும் விட்டுப் போனாற்போல இந்த மலங்களும் அப்படிச் செய்யவேணும் அப்படிக் கண்டோமில்லையே, அன்றியும்,

குணங்களும் பன்மையின்றாகும் - இந்த மலங்களுக் குவமையாகச் சொல்லப்பட்ட நஞ்சுகளுக்கு இந்த மலங்களைப்போலப் பல குணங்களுஞ் செய்யக் கண்டதுமில்லை. ஆகையாலது திருட்டாந்த விரோதமென்று கொள்க, அதுவன்றியும் அந்த மலங்கள்தான்,

எம்மை வந்தணைதரத்தானே மாட்டாது - அவை சடமேயானால் அடியேனை வந்து பொருந்துகைக்குத் தானாகமாட்டாது,

யானோ செய்கிலன் - அடியேனுக்குக் குற்றமாயுள்ளது வேணுமென்று அடியேன் றானே யுண்டாக்கிக்கொள்ளுவதுமில்லை,



நீயோ செய்யாய் நின்மலனாயிட்டு - தேவரீர் அமலனா யிருக்கையினாலே அஞ்ஞானமாகிய மலங்களை அடியேனுக் குண்டாக்கப் போகிறதுமில்லை, இவை மூன்றுவகையு மின்றி,

இயல்பெனில் - அந்த மலங்கள் ஆன்மாவுள்ளவன்றே சுபாவமாக வுள்ளதென் றருளிச்செய்யில்,

போகாதென்றும் - பாலில் வெளுப்பும் கரியிற் கறுப்பும்போல இயல்பாயுள்ள சுபாவத்திணுக்கு ஒருகாலத்திலும் அழிவில்லையாம்,

மயல்கெட - அடியேனுக்கு அந்தச் சந்தேகந் தீரத்தக்கதாக,

பந்தம் வந்தவாறிங் கந்தமாதி யில்லா யருளே - முடிவும் முதலுமில்லாத தம்பிரானே இந்தப் பாசபந்தங்கள் அடியேனோடு வந்து பொருந்தின முறைமை எப்படியென் றருளிச்செய்யவேணும்.

அதற்கு விடையம் நெல்லுக்கு உமிபோலவுஞ் செம்பிற் காளிதம் போலவும் அநாதிசையோகம். அதற்கு உதாரணம் சிவஞானபோதத்தில் "நெல்லுக்குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ், சொல்லிற் புதிதன்று தொன்மையே" [ii, 7] யென்றும், சித்தியாரில் "மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடு மிப்போ" [ii, 86] லென்றும், சிவப்பிரகாசத்தில் "நெல்லின்முளை தவிடுமிப்போ லநாதியாக, நிறுத்திடுவ" [ii, 7] ரென்றுஞ் சொன்ன முறை கண்டுகொள்க ச

இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்கள் அடியேனோடுந் தேவரீருங் கூடி நின்றறிவிக்குமிடத்தும் அடியேனை மயக்குகிற வழி எப்படியென்னும் வினா மேலருளிச்செய்கின்றது* என்று சொல்லுவாருளர். அது வினாவல்ல. பதியிலக்கணம் பசுவிலக்கணம் பாசவிலக்கணஞ் சொல்லிப் பாசதரிசனஞ் சொல்லி ஆன்மதரிசனஞ் சொல்லவேண்டுகையாலும் மல தரிசனம் வேறே சொல்லாதபடியினாலுந் தேவரீரருள்முன்னே பாசம் நில்லாது அடியேனுக்குச் சுதந்தரமாய்க் காண அறிவுமில்லை இந்த மலத்தைக் கண்ட முறைமை எப்படி யென்னும் வினா மேலருளிச்செய்கின்றது.

அருள்முன்பு நில்லா தடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறென்கொ லெந்தாய்—மருள்கொண்ட

* இது வரையே சிவப்பிரகாசருரையில் அவதாரிகையாகக் காணப்படுகிறது..

மாலையா வெண்ணெய்வாழ் மன்னவா வென்னுடைய
மாலையா மாற்ற மதி. ௫

மேல் வியாக்கி.

அருள்முன்பு நில்லாது - அந்த மலங்கள் அஞ்ஞான மாகையாலே தேவரீர் சந்நிதியிலே நில்லாது,

அடியேற்குக் கண்ணின்று இருள்கண்டவா றென்கொ லெந்தாய் - அடியேனுக்குச் சுதந்தரமாகக் காணுமறிவில்லை தம்பிரானே இருளாகிய மலத்தைக் கண்ட முறைமை யெப்படி,

*மருள் கொண்ட மாலையா - மருளாகிய பண்ணை வண்டுகளிருந்து பாடப்பட்ட மாலையினையுடையானே,

வெண்ணெய்வாழ் மன்னவா - திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட தம்பிரானே,

என்னுடைய மால் - அடியேனுக் குண்டாயிருக்கப்பட்ட இந்த மயக்கத்தை,

ஐயா - அடியேனுக்குச் சுவாமியாயுள்ளவனே,

மாற்ற மதி - போகத்தக்கதாகத் திருவுளத்தடைத்தருள்.

விடையம் மலதரிசனம். பரமசுகத்திலே யழுந்துமிடத்து இது வரையும் மல சம்பந்தத்தினாலேயல்லவோ சுகத்தைப் பெறாதிருந்தோ மென் றனுமானத்தினாலே யறிக. உதாரணம் சிவப்பிரகாசத்தில் ‘அன்னியமா னவையுணர்த்தி யநந்நியமாய் நிறைந்த வறிவறியா மையினானு மருணிலவுங் காலந், தன்னிலவ னேயாவு மாய்நின்ற தொன்மை தாமுணர்த லானுமுயிர் தானெனவொன் றிலதாய், மன்னியிடுமல” [ii, 18]மென்பது கண்டுகொள்க. ௫

இனி இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மாவினியல்பு எப்படி யென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

மதிநுதல் பாக னாகிக் கதிதர
வெண்ணெய்த் தோன்றி நண்ணியுள் புகுந்தே
னுளம்வெளி செய்துன் னளவில் காட்சி
காட்டியெற் காட்டினை யெனினு நாட்டியெ
னுண்மையும் பெருமையு நுவலி னண்ணல்

* மருள் - குறிஞ்சியாழ்த்திறம்.



பாதாள சத்தி பரியந்த மாக
வோதி யுணர்ந்த நானே யேக
முழுத்து நின்றனனே முதல்வ முழுத்தும்
புலன்களைப் பூழை நுழைந்தனன் கலங்கி
யாங்கைந் நலத்தையு மடைந்தன னீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் றாக்கி
யெவ்விடத் துண்மையு மிவ்விடத் தார்தலுஞ்
செல்லிடத் தெய்தலுந் தெரித்த மூன்றினு
மொன்றெனக் கருளல் வேண்டு மென்று
மில்ல திலதா யுள்ள துளதெனுஞ்
சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலு மிலவே நிறுத்தி
யானை யெறும்பி னனது போலெனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவெனி னற்றன்று
விட்ட குறையி னறிந்து தொன்று
தொட்டுவந் தனவென வேண்டு நட்ட
பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு
முரியது நினக்கே யுண்மை பெரியோய்
எனக்கின் றுகு மென்று
மனக்கினி யாயினி மற்றது மொழியே. ௧

ல் வியாக்கி.

மதிநுதல் பாகனாகி - சந்திரனைப்போலத் திருநெற்றியினை டைய பரமேசுவரியை ஒருபாகத்திலே தரித்தருளியிருக்கப்பட்ட வரீர்,

கதிதர வெண்ணைத் தோன்றி - அடியேனுக்கு மோக்ஷத்தைத் வது பொருட்டாகத் திருவெண்ணெய் நல்லூரிலே திருவவதாரஞ் ய்தருளி,

நண்ணியுள் புகுந்து - அடியேனிடத்திலே வந்து பொருந்தி,

என்னுளம் வெளிசெய்து - அடியேனிடத்திலுண்டாகிய அஞ் ஞானத்தையும் நீக்கிச் சிவஞானத்தையும் பிரகாசிப்பித்து,

உன்னளவில் காட்சி காட்டி - ஆன்ம போதத்தால் அளவுபடுத்த வொண்ணாத உன்னுடைய இயல்பினையும் அடியேனுக்குத் தரிசனப் படுத்தி,

எற்காட்டினை - அடியேனுடைய இயல்பினையுந் தரிசனப் படுத்தினாய்,

எனினும் - அப்படித் தரிசனப்படுத்தினா யானாலும்,

நாட்டியென் னுண்மையும் பெருமையும் நுவலில் - தேவரீர் அறுதிப்படுத்தி யருளிச்செய்யப்பட்ட அடியேனுடைய நொய்மை யையும் வியாத்தத்தையும் விண்ணப்பஞ் செய்யுமிடத்து,

அண்ணல் பாதாள சத்தி பரியந்தமாக - தம்பிரானே பாதாள சத்தி முடிவாக,

ஓதியுணர்ந்த நானே யேக முழுத்து நின்றனனே - நூல்களைக் கற் றறிந்து அடியேனறிவுசென் றறியப்பட்டவிடமெல்லாம் அடியேன் தானே முழுதும் வியாத்தமாய் நின்றதுண்டே,

முதல்வ - சருவான்மாக்களுக்கும் ஒருமுதலாகி நின்றுணர்த்து கிற கத்தாவே,

முழுத்தும் - அப்படி யோதியுணர்ந்த விடமெங்கும் அடியேன் வியாத்தியா யிருக்குமிடத்தும்,

புலன்கடைப் பூழை நுழைந்தனன் - ஒன்றை யறியுமிடத்துச் சோத்திராதிகளாயுள்ள அற்பத் துவாரங்களாகிய புலன்களோடுங் கூடி யறிந்தேன்,

கலங்கி யாங்கைந் தவத்தையு மடைந்தனன் - அடியேனறிகிற அறிவையும் விட்டு மயங்கி அவ்விடத்திலே சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் அதீத மென்னப்பட்ட அஞ்சவத்தைகளும் பட்டு நின்றனன். அன்றியும்,

நீங்கிப் போக்குவரவு புரிந்தனன் - அப்படிக்கூடி வாதனைசெய்து நிற்கிற சரீரத்தையும் விட்டு நீங்கி மீளவுமொவ்வொரு சரீரங்களை வந்தெடுப்பதுஞ் செய்தேன்,

தூக்கி - இவையிற்றைத் திருவுள்ளத்திலே யாராய்ந்து பார்த் தருளி,

எவ்விடத்துண்மையும் - அடியேன் ஓதி யுணர்ந்த விடமெங் கும் அடியேன் வியாத்தமா யிருக்கிறதும்,



இவ்விடத்தார்தலும் - இப்பொழுதிந்தச் சரீரத்தோடுங் கூடி நின்று சீவிக்கிறதும் அவத்தைப்படுகிறதும்,

செல்லிடத்தெய்தலும் - இந்தச் சரீர தொந்தனைவிட்டுப் புண் ணிய பாவங்களுக் கீடான சுவர்க்க நரகங்களிலே சென்றனுபவிக் கிறதும்,

தெரித்த மூன்றினு ளொன்றெனக் கருளல்வேண்டும் - தேவரீர் இவை மூன்று பகுதியிலும் இதுவாயிருக்கும் ஆன்மாவி னுண்மை யென்று ஒன்றை அடியேனுக்குத் தெரிய அருளிச் செய்தருள வேணும். அப்படி ஒன்றைச் சொல்லுகிறதென்ன மரபு அவை மூன்று பகுதியும் ஆன்மாவுக் குடையதல்லவோ என்று திருவுளஞ் செய்யுமானால்.—அதற்கு உதாரணம் சித்தியாரில் "சூக்கும தேகி யாகித் தூலரு பத்தின் மன்னிச், சாக்கிர முதலா யுள்ள வவத்தை யுட் டங்கி யெங்கும், போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங் கள் பாவ, மாக்கியும் பலங்க ளெல்லா மருந்திய நிற்கு மான்மா" [iv,22] வென்பது கண்டுகொள்க.

என்று மில்ல திலதா யுள்ள துளதெனுஞ் சொல்லே சொல் லாய்ச் சொல்லுங்காலை - எக்காலத்து மொவ்வொன்றி னியல்புதனைச் சொல்லுமிடத்து இல்லாதது இல்லாததே உள்ளது உள்ளதே யென்று சொல்லுகிற சொல்லே அறுதிப்பட்ட சொல்லாகச் சொல்லுமிடத்து,

சிறுத்தலும் பெருத்தலு மிலவே - ஒரு முதலாயிருக்கப்பட்ட ஆன்மா ஓர் அவதாரத்திலே சிறுத்தும் ஓர் அவதாரத்திலே பெருத்தும் வர வழக்கில்லையே,

நிறுத்தி யானை யெறும்பி னனைது போல் - அது நிற்க அப்படிச் சிறுத்தும் பெருத்தும் வாராது எப்பொழுதும் ஒருதன்மையாய் வியாத்தமா யிருக்குமிடத்தும் யோனி சம்பந்தஞ்செய்து அது வதுவாய் நிற்கிறது ஆனையாய் நின்ற ஆன்மா எறும்பானாற்போ லிருக்கும்,

எனில் - என்று தேவரீ ரருளிச்செய்யில்.—உதாரணம் சிவஞான போதத்தில் "மாயா தனுவிளக்காய் மற்றுள்ளங் காணாதே, லாயாதா மொன்றை யதுவதுவாய்" [iv, 5] என்றது கண்டுகொள்க.

ஞானமன்றவை காய வாழ்க்கை - தேவரீ ரருளிச்செய்தது அடியேன் கேட்ட அறிவையல்ல சரீரத்தின் வழக்கைச் சொல்லலாம் அத்தனை,

மற்றவை யடைந்தனவுள - நாம் அப்படிச் சொன்னதும் அறிவாயுள்ள ஆன்மாக் கன்மத்துக்கேற்ற ஒவ்வொரு சரீரங்களோடுங் கூடி அதற்கேற்ற அறிவு சீவித்து நிற்குமென்று சொன்னோம்.—அதற்கு உதாரணம் சிவப்பிரகாசத்தில் "செறிந்திடு முடலுள் மன்னிச் சேர் புலன் வாயில் பற்றி, யறிந்ததி லழுந்து" [iii, 2] மென்பது கண்டுகொள்க.

எனில் - என்றருளிச் செய்யில்,

அற்றன்று - அது அப்படியன்று, அதுவென்னென்று கேட்டருளுகில்,

விட்ட குறையி னறிந்து தொன்று தொட்டு வந்தன வெனவேண்டும் - அப்படிக் கூடின கூடின யோனிக்குத் தக்க வறிவாயிருக்குமே யானால் முன்னெ யெடுத்தெடுத்து விட்டுவந்த யோனிகளை இன்னதின்னதல்லவோ வென்றறிய வேணும். அப்படியல்ல கூடின யோனிக்குத் தக்கதாக ஆன்மா அறிந்து சீவித்து நிற்குமென்று நாம் சொன்னது அந்தந்த அவதாரந்தோறும் எடுக்கப்பட்ட சிறிய யோனிக்கும் பெரிய யோனிக்குந் தக்க வறிவாக அறிந்து சீவிக்கிறதையாயிருக்கு மென்று தேவரீர் அருளிச் செய்யில்,

நட்ட பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு முரியது நினக்கே யுண்மை - தேவரீர் கூடினதின் தன்மையென்று நாட்டப்பட்ட பெரிய யோனிக்குத் தக்கதாகப் பெருத்தறிந்துஞ் சிறிய யோனிக்குத் தக்கதாகச் சிறுத்தறிந்தும் வருகிற சுதந்தரம் அணுவுக்கணு வாயும் மகத்துக்கு மகத்துமா யிருக்கிற தேவரீருக்கே யுள்ளது.

பெரியோய் - மகத்தாயிருக்கப்பட்ட தம்பிரானே,

எனக்கின்றாகும் - அந்த வழக்கு அடியேனுக் கில்லையாம்,

என்று மனக்கினியாய் இனி மற்றது மொழியே - எக்காலத்தும் எம்மனத்துக் கினிமையா யிருக்கப்பட்ட தம்பிரானே இன்னந்தானாகிலு முன்னே கேட்கப்பட்ட வினாவுக்கு விடையருளிச் செய்தருள வேணும்.—ஆத்மாவின் இயல்பு எப்படியென்னிற் படிகம்போல அடுத்ததின் றன்மையாக விருக்குமென்றும் வசித்தலைப்பற்றின வியாபகனென்றும் அதுவதுவாய் நிற்ப னென்றுஞ் சொல்லப்படும். உதாரணம் சிவப்பிரகாசத்தில் "ஓர்விடத்துணரு முண்மை யொளிதரு முவலம் போலு" [iii, 9] மென்றும், சித்தியாரில் "வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய னாகி" [iv, 20]யென்றும் வருவது கண்டுகொள்க. ரு

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மா அவத்தைப் படுமிடத்து ஒரு அவத்தை கண்டதொழிய மற்றுள்ள அவத்தை நாலும் அடியேனாலறியப்பட்ட தில்லையேயென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

மொழிந்த வவத்தை முதலடியே னின்றாங்
கொழிந்தன நான்கு முணரா—விழிந்தறிந்
தேறிற்றிங் கில்லை யெழில்வெண்ணெய் மெய்த்தேவே
தேறிற்றென் கொண்டு தெரித்து. எ

## மேல்வியாக்கி.

மொழிந்த வவத்தை - சொல்லப்பட்ட அவத்தைகளைந்திலும்,

முதலடியேனின்று - முதலவத்தையாகிய சாக்கிரத்திலே அடியேன் நின்றதுண்டு,

ஆங்கொழிந்தன நான்கும் - அந்த சாக்கிரத்தைத் தவிர மற்றுண்டான சொப்பனஞ் சுழுத்தி துரியம் அதீதம் என்னப்பட்ட நாலவத்தையும்,

உணராவிழிந் தறிந்தேறிற்றிங்கில்லை - அடியேனுக்கு நினைவுண்டாம்படி ஒவ்வொன்றாக இறங்கினது மில்லை அறிந்தேறினதும் இவ்விடத்திற் கண்டதில்லை,

எழில் வெண்ணெய் மெய்த்தேவே - அழகினையுடைய திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,

தேறிற்றென் கொண்டு தெரித்து - அந்த அவத்தைநாலு முண்டென்று தேவரீர்க்கு அறுதி வந்தது எது பிரமாணங் கொண்டறிந்தது.—உதாரணம்: "பிறிந்திடா வஞ்சவத்தை பெருகிய மலத்தாற் பேணி" யுறுமாகையாலே சுத்ததத்துவங்கள் நீங்கின விடத்திலே அஞ்சவத்தையும் படுமென்று அனுமானப் பிரமாணத்தினாலே யறிகவென்றவாறு.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மா ஒன்றுண்டென்கிறதைத் தெரிசித்தவழி யேதென்னும் வினு மேலருளிச் செய்கின்றது.

தெரித்ததென் கொண்டெனை யுருத்திர பசுபதி
செடிய னேனையு மடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவுகாட் டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணெய் மெய்ய
வவத்தையிற் றெரித்தன னுகி லவத்தை
தெரிந்தாங் கிரித்தலு மிலனே திருத்துங்
கால முதலிய கருவி யாயின்
மாலும் பிரமனும் வந்தெனை யடையா
ரோதுங் காலை யொன்றையொன் றுணரா
சேதந மன்றவை பேதைச் செயலிச்
சேதந மானுற் செயல்கொள வேண்டுநற்
போத மிவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்று
மொருவுவ தறியே னுணர்வில ஞதலி
னிற்கொடு கண்டன னுயினெற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங் கேண்மோ மன்ன நின்னின்
முன்ன மென்ற னுணர்வில ஞதலி
னென்னைக் காண்பினுங் காண்பல காணு
துன்னைக் காண்பினுங் காண்பல வுன்னு
டொருங்கு காண்பினுங் காண்பல வருந்துணை
கண்ட வாறே தெனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே. ௮

**மேலிதற்கு வியாக்கி.**

தெரித்ததென் கொண்டெனை யுருத்திர பசுபதி செடியனேனையு மடிமைசெய்யப் படிவங்கொண்டு வடிவு காட்டில்லாப் பெண்ணை யாளும் வெண்ணை மெய்ய என்பதனை உருத்திரபசுபதி செடியனேனையு மடிமை செய்யப் படிவங்கொண்டு வடிவுகாட்டில்லாப் பெண்ணை



யாளும் வெண்ணெய்மெய்ய தெரித்ததென் கொண்டெனை யென்று பொருளுக்கேற்க மாறுக. பொருளாவது:

உருத்திர பசுபதி உருத்திர மூர்த்தியுமாய் ஆன்மாக்களுக் கெல்லா முயிர்க்குயிராய் நின்று இரட்சித்தருளுகிற கத்தாவா யிருக்கப்பட்டவனே,

செடியனேனையும் - முடலை யாக்கையோடுங்கூடிச் செனன மரணத்திலே கிடந்தழுந்துகிற அடியேனையும்,

அடிமைசெய்யப் படிவங் கொண்டு - அடியேனைத் தேவரீர் திருவடிக் குரித்தாக்கிக் கொள்ளவேண்டி அடியேனைப்போல் வடிவை யெடுத்துக் கொண்டு,

வடிவு காட்டில்லாப் பெண்ணையாளும் - தேவரீர்க் குண்டாகிய தன்மை வடிவை யொருவற்குங் காட்டாத நீ பெண்ணைக்குக் கத்தாவாய்,

வெண்ணைமெய்ய - திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,

தெரித்ததென் கொண்டெனை - அடியேனென் றொருமுதலுண் டென்கிறதை யறியப்பட்டது ஏது பிரகாரமாக வென்றருளிச் செய்தருள வேணும்,

அவத்தையிற் றெரித்தனனுகில் - அடியேன் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் துரியாதீதமென்று சொல்லப்பட்டு வருகிற பஞ்சவத்தையும்பட்டு வருகையினுலே அதுகொண்டே யவத்தைக்கு வேறு யடியேனென்றொரு முதலை அறியப்பட்டதென் றருளிச் செயுமாயின்.—அதற்கு உதாரணம் சித்தியாரில் "படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லிற்,கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்னை,யடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா, வுடலினி லைந்த வத்தை யுறுமுயிர் காவ லாக" [iv, 32] வென்று நாலாஞ் சூத்திரத்திலே அவத்தைப்பட்டு வருகிற ஏதுவினுலே ஆன்மாவுண்டென்று சாதித்ததுங் கண்டு கொள்க.

அவத்தை தெரிந்தாங் கிரித்தலு மிலனே - அடியேன் அப்படி யவத்தைப்பட்டுப்பட்டு வருகிறதேயுண்டாமாகில் அப்படி மறைக்கப்பட்டுவருகிற அந்த அவத்தையு மின்னதென்று கண்டு அவ்விடங்

களிலே அவையிற்றை அடியேன் அறிந்து நீக்கிக் கொண்டேனு மில்லையே,

திருத்துங் காலமுதலிய கருவியாயின் - அப்படி யவத்தையின் மறைப்பை நீக்குகிறது கால நியதி கலை முதலாகச் சொல்லப்பட்டு வருகிற கருவிகளென் றருளிச்செய்யுமாகில்.—உதாரணம் "இத்தகைமை யிறையருளா லுயிரறியு மறிவுக் கீடாக வாடாதே யீரிரண்டா லுரைத்த, வித்தைமுத லைவரால் விளங்கு ஞான மேவியிடு மெனவுரைப் பாசுத்த மாயை, வைத்தகலை தான்மூலஞ் சிறிதே நீக்கி மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப், புத்திதா வித்தையிடை நின்றறிவை யுயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே" [சிவப்பிரகாசம், ii, 21] என்பது கண்டுகொள்க.

மாலும் பிரமனும் வந்தெனை யடையார்-அப்பொழுது சிருட்டிக்குந் திதிக்குங் கத்தாவாயிருக்கப்பட்ட பிரமா விட்டுணுக்கள் அடியேனைக் கூடி நின்றுணர்த்துகிற தில்லையாம். அன்றியும்,

ஓதுங்காலை யொன்றை யொன்றுணரா-அந்தக் கருவிகளி னியல்பைச் சொல்லுமிடத்து ஒரு கருவியை ஒரு கருவி யறியாது. அன்றியும்,

சேதனமன்றவை பேதைச்செயல்-அந்தக் கருவிகள் அறிவுள்ளதுமல்ல அறியாமையா யிருப்பதொன்று.—அப்படியல்ல ஆன்மா அறிவாயிருப்பதொன்று அந்தக் கருவிகளோடுங் கூடில் அவை சேட்டைப்படுமென் றருளிச் செய்யில். உதாரணம் "தனக்கெனவறிவிலாதான் றத்துவ வன்ன ரூபன், றனக்கென வறிவா னாவிச் சகலமு நுகருந் தானே" [சிவப்பிரகாசம், v, 2] என்பது கண்டுகொள்க.

இச்சேதன மானுற் செயல் கொள வேண்டு நற்போத மிவற்றைப் புணர்வதை யறியேன்-அப்படி அடியேன் அறியும் பகுதிக்குரியவனுமாய் அந்தக் கருவிகளின் பயனைக் கொள்ளத் தக்கவனுமாயிருக்கில் அடியேனுடைய அறிவு அந்தக் கருவிகளைக் கூடுகிறதை அறிகின்றேனில்லை. அன்றியும்,

கருவித்திரளினுங் காண்பதோ ரொன்றும் - அந்தக் கருவிகளெல்லாங் கூடின சாக்கிரத்தானத்திலுஞ் சத்தாதி விடையங்களை யறியுமிடத்து ஒவ்வொரு விடையங்களாக அறிகிற தொழிந்து ஐந்தையு மொக்க அறிந்ததில்லை. அன்றியும்,



ஒருவுவதறியே னுணர்வில னுதலின் - அப்படி நின்று சேவிக்கிற அவதாரத்து அந்தக் கருவிகள் நீங்குகிறதையு மறிகின்றேனில்லை அறிவிலாதவனுகையாலே.—அப்படி யொன்றுகளை யறியுமிடத்து நீயாகத் தனித் தொன்றையும் அறிய மாட்டாய். நாமறிவித்தானீயறிவை யத்தனை யென்றருளிச்செய்யில்.—உதாரணம் "இருணனி யிரவி தான்வந் திரித்தலு மிரவி லெண்ணும், பொருணிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறுபோல, மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்துயிர் தன்னுள் மன்னு, மருளையு மொழிய ஞாலத் தறிந்தவா றறியுமன்றே" [சிவப்பிரகாசம், v, 4] என்பது கண்டு கொள்க.

நிற்கொடு கண்டனனுயி னெற்குக் கருவியாயினை பெருமையுமிலவே-அப்படி அடியேன் அறிகிற தெல்லாந் தேவரீரறிவித்தாலறிவேனுமாகில் அப்பொழுது தேவரீரை யடியேனுக்குக் கருவியென்று சொல்லவும் படும் கத்தாவென்கிற பெருமையுந் தேவரீருக் கில்லையாம். ஆகையால்,

யானே பிரமங் கோனே வேண்டா - அடியேன் தானே கர்த்தாவென்று சொல்லப்படும் தேவரீரை யடியேனுக்குக் கத்தாவென்ன வேண்டுவதுமில்லை. அதுவன்றியும்,

இன்னுங் கேண்மோ மன்ன - அடியேன் விண்ணப்பஞ் செய்யத்தக்கது இன்னமு மொன்றுண்டு அது வேதென்று கேட்டருளில்,

நின்னின் முன்னமென்ற னுணர்வில னுதலின் - அப்படித் தேவரீர் அறிவிக்க அடியேனறிந்தேனுமாகில் அங்ஙனம் நின்றறிவிக்கிற தேவரீரை எதிர்ப்பட்டு நின்று இது வல்லவோ நம்மை யறிவிக்கிற முதலென்று அறிய மாட்டுகிறேனில்லை அடியேனறி வில்லாதவனுகையாலே,

என்னைக் காண்பினுங் காண்பல காணு தன்னைக் காண்பினுங் காண்பல வுன்னோ டொருங்கு காண்பினுங் காண்பல - அடியேனையறிய வென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை அதுவன்றியுந் தேவரீரை யறிய வேண்டிலு மறியப்படும் பகுதியுமில்லை அதுவன்றியுந் தேவரீரோடு மடியேன் கூடியறிய வென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை,

அருந்துணை கண்டவாறே தெனது கண்ணே யண்ட வாண வருட் பெருங் கடலே என்பதனை அருந்துணை யெனது கண்ணே யண்டவாண வருட்பெருங் கடலே கண்டவாறேது என்று பொருளுக் கேற்க மாறுக. பொருளாவது: அடியேனுக்கு அரிய துணையாயிருக்கப்பட்டவனே அடியேனுக்குக்கண்ணாகிய அறிவாயிருக்கப்பட்டவனே தேவர்களுக்குங் கத்தாவாயிருக்கப்பட்டவனே அருள் வெள்ளத்தை நின்னடியவர்க்குக் கொடுத்தருளுகிற சமுத்திரமாயிருக்கப் பட்டவனே அடியேன் என்னைத் தரிசிக்கப்பட்டது எது பிரகாரங் கொண்டு.

அதற்கு விடையம் ஆன்மாத் தனக்குச் சுதந்தரமில்லையென்கிறதை யறிந்து தான் அந்த ஞானமாய் நிற்கவே தன்னைத் தரிசிக்கலா மென்றவாறு. உதாரணம் சிவப்பிரகாசத்தில் "தன்னறி வதனாலேதுந் தனக்கறி வில்லை யெனுந், தன்னறி வாக வெல்லாந் தனித்தனி பயனருந்துந், தன்னறி வறியுந் தன்மை தன்னாலே தனையறிந்தாற், றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே" [viii, 2] என்றும், [திருவிடைமருதூர்] மும்மணிக்கோவையில் "மாயப் படலங் கீறித் தூய, ஞான காட்டம் பெற்றேன் பெற்றபின், றன்னையு மென்னையுங் கண்டேன்" [13] என்றும், சிவஞானசித்தியாரில் "அடிஞான மாண்மாவிற் றோன்றுந் தோன்றத், தாரியனுஞ் சிவந்தோன்றுந் தானுந் தோன்று" [viii, 28] மென்றும் கண்டு கொள்க. அ

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மா மூலாதாரத்திலே யொடுங்கி யதீதப்பட்டுக் கிடக்கு மவதாரத்து உணரு முறைமை யெப்படியென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

> கடலமுதே வெண்ணெய்க் கரும்பேயென் கண்ணே
> யுடலகத்து மூலத் தொடுங்கச்—சடலக்
> கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
> மருவியா தென்றுரைக்க மன்.

**மேல்வியாக்கி.**

கடலமுதே - சமுத்திரத்திலே யுண்டாகப்பட்ட அமிர்தம்போல இனியவனே,

வெண்ணெய்க் கரும்பே - திருவெண்ணெய்நல்லூரிலே யுண்டாகி யிருக்கப்பட்ட கரும்புபோல இனியவனே,



என்கண்ணே - அடியேனுக்குக் காட்டாயிருக்கப்பட்ட கண் போல உரியவனே,

உடலகத்து மூலத்தொடுங்க - அடியேன் அவத்தைப்படும் அவதரத்து தேகத்துக்குள்ளே மூலாதாரத்திலே ஒரு கருவிகளுங் கூடாதே யதீதப்பட்டுக் கிடக்கிற அவதாரத்து அடியேன் உணருகைக்கு,

சடலக் கருவி யாதாங்குணர்த்த - சரீரக் கூட்டமாக நின்றுணர்த்தின கருவி எது,

காண்பது தானென்னை மருவி - அடியேன் அறிகிறதுதான் எதோடுங் கூடி,

யாதென்றுரைக்க மன் - தேவரீர் அடியேன் விண்ணப்பஞ் செய்ததற்கு இதுவென்று விளங்க அருளிச் செய்தருளவேணும்.

விடையம் ஆன்மதத்துவம் உ௪ வித்தியாதத்துவம் எ சிவதத்துவம் ரு இதுக்குப் போககாண்டமென்றும் போக்கிய காண்டமென்றும் பிரேரகாண்ட மென்றும் பேர். ஆன்மதத்துவ மிருபத்து நாலு முட்கருவியும் புறக்கருவியுமாய்த் தேகமாய்ப் பொருந்திச் சிலதத்துவங்கள் சுவாதிகளைப் பிரேரித்து அறிவிக்கும் என்றவாறு. உதாரணம் சித்தியாரில் "வாயாதி சோத்திராதி புறத்துவாழ் கருவி யாகு, மோயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகு, மாய்வார்கட் காரகமாதி யவற்றினுட் கருவி யென்பர், மாயாடன் வயிற்றி லற்றுற் றுடக்குண்டு வாழு மான்மா" [ii, 63] வென்றும், போற்றிப் பஃறொடை வெண்பாவில் "மூலவருங் கட்டிலுயிர் மூடமா யுட்கிடப்பக், கால நியதி யது காட்டி மேலோங்கு, முந்திவியன் கட்டிலுயிர் சேர்த்துக் கலைவித்தை, யந்த வராக மவைமுன்பு - தந்த, தொழிலறி விச்சை துணையாக மானி, லெழிலுடைய முக்குணமு மெய்தி - மருளோடு, மன்னூ மிதையத்துச் சித்தத்தாற் கண்டபொரு, ளின்னபொரு ளென்றறிய வொண்ணா - வக்கிலைபோய்க், கண்டவியன் கட்டிற் கருவிகளி னாற்றொழியக், கொண்டுகிய மித்தற்றை நாள்கொடுப்பப் - பண்டை, இருவினையால் முன்புள்ள வின்பத்துன் பங்கள், மருவும்வகை யங்கே மருவி" [53-64] யென்றுஞ் சொன்னமுறைமை கண்டு கொள்க. ௯

இங்ஙனஞ் சரீர தொந்தனைப்பட்டு நிற்கிற அடியேனுக்குத் தேவரீர் தீக்கைக் கிரமங்களினாலே பாசமோசனம் பண்ணியிருக்கவும் அடியேன் மீளவும் மலமாயாதி கன்மங்களோடும் தொந்தித்து நிற்கைக்கு வழியேதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
யந்நிய மாக்கி யருள்வழி யதனா
லென்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக நின்னோ
டொருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டு மருவிடு
மும்மல மதனா லெம்முணின் றிலையெனி
னம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வில னாகும் பெரும நீர்வின்
றமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றி னமைந்த
மாயையங் கன்ம மாமல மூன்று
மாயா தாகவே யார்ச்சக மாயையி
னுற்பவந் தீரா தொழுகுமொன் றொன்றி
னிற்சம மாயி னல்லது நிற்பெற
லில்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகு நாயே னுளத்து
நின்றனை யென்பேனோ நின்றிலை யென்பேனோ
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பேனோ
வொன்றினை யுரைத்தருண் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி
கைகண் டலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேறப் பறித்த
மெய்கண்ட தேவே வினையிலி
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே. ௧௦

**மேல்வியாக்கி.**

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை யன்னியமாக்கி - அநாதியே அடியேனோடுங் கூடி நிலைபெற்று வருகிற கன்மமாகிய புண்ணிய பாவங்கள் தன்னிற் சமமாகத் துலையொத்த அவதரத்து அடியேனோடுங் கூடியிருக்கப்பட்ட மலங்களைத் தேவரீர் நிட்சாக்கிரமங்களினாலே வேறுபடுத்தி,



அருள்வழியதனா லென்னுள் புகுந்தனை யெனினே - தேவரீர் அனுக்கிரகத்தின் முறைமையாலே அடியேனுள்ளத்திலே யெழுந்தருளினதே யுண்டாமாகில்.—உதாரணம் முற்பதத்துக்கு கூட. “சகலர்க்குக் கன்மவொப்பில், தரையிலா சான்மூர்த்தி யாதார மாகித் தரித்தொழிப்பன் மலஞ்சஅர்த்தா சத்தினிபா தத்தால்” [சித்தியார், viii, 2] என்றும், “நிறுத்துவதோர் குணமில்லான் றன்னையொருவர்க்கு நினைப்பரியா னொன்றுமிலா னேர்படவந் தன்னே, பொறுப்பரிய பேரின்பை யருளியதன் வழியே புகுந்தளிப்ப னெங்குமிலாப் போகத்தைப் புரிந்தே” [சித்தியார், ix, 6] என்றுங் கண்டுகொள்க. பாடம்.

முன்னைத் திரிமலந் தீர்த்த தேசிக நின்னோ டொருவுதலின்றி யுடந்தையே யாகும் பெருநிலை யாகல் வேண்டும் - அடியேனுக்கு அநாதியாக இருக்கப்பட்ட மூன்று மலங்களையும் நீக்கிய ஆசாரிய மூர்த்தமே தேவரீரை அடியேன் விட்டு நீங்காமலிருக்கப்பட்ட பேரின்பமாகிய திருவருட் பிரகாச முண்டாக வேணும்.—அது நிற்கட்டும் முன்பு என்னிடத்திலே தேவரீரில்லையாம்,

மருவிடு மும்மல மதனா லெம்முணின்றிலை யெனில்-அடியேனோடுங் கூடிவரப்பட்ட ஆணவம் மாயை காமிய மென்கிற மூன்று மலங்களோடும் வாதனை செய்து நிற்கையினாலே அடியேனுள்ளத்திலே தேவரீரெழுந்தருளி நின்றதில்லையா மாகில்.—உதாரணம் சிவஞான போதத்தில் “அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க், கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்” [xi, 3] என்றும், “தன்னுணரு, நேசத்தர் தம்பா னிகழுந் ததிசெய்யோற், பாசத்தார்க் கின்றாம்பதி” [xii, 3] யென்றும், போற்றிப்பஃறொடை வெண்பாவில் “என்- . . . னுள்ள மென்று நீங்கா தொளித்திருந்து கள்ளமின்று காட்டும்” [166-168] என்றுஞ் சொன்ன முறைமையுங் கண்டு கொள்க. மேற்பாடம்.

அம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழல் சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப் பெயர்வில னாகும் பெரும நீர்வு-அந்த மலங்களைத் தேவரீர் போக்கினது மில்லையாய் அடியேனுஞ் சிவந்த தாமரை மலர் போன்ற ஸ்ரீபாதத்திலே வந்து பொருந்தினது மில்லையாய்ப் பிரவஞ்ச வாதனையாலே வந்து பொருந்தின கன்மங்களைப் புசித்ததினாலே புண்ணிய பாவங்கள் கட்டுப்பட்டுச் செனனமாண துக்கத்தை விட்டு நீங்குகைக்கு வழியில்லாதவனாகும் தம்பிரானே இது நிச்சயமே தப்பாது. அப்படியல்ல,

இன்றமைந்த கருமத் திலைந்தவையல்லது சமைந்தன விலவெனச் சாற்றின் - இப்பொழுது அடியேனெடுத்த உடலுக்கமைத்த பிராரத்துவ மனுபவிக்கிற தொழிய மேலுட லெடுக்கைக்கு ஏதுவாயுள்ள ஆகாமிய கன்ம முண்டாகா தென்றருளிச் செய்யில்.—உதாரணம் திருவருட் பயனில் "ஏன்ற வினையுடலோ டேகுமிடையேறும்வினை, தோன்றி லருளே சுடு" [x, 8] மென்றும், சிவப்பிரகாசத்தில் "தொல்லையில் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டே, லல்லொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே" [x, 10] என்றும், சிவஞான சித்தியாரில் "ஏன்றவுடற் கன்மமனுபவத்தினு லறுத்திங் கினிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்" [viii, 10] என்றும், சிவஞானபோதத்தில் "பின்செய்வினை மாயையுட னில்லா" [x, 4] தென்றும் சொன்னது கண்டு கொள்க.

பாடம்.

அமைந்த மாயயங் கன்ம மாமல மூன்று மாயாது - அடியேனுக்கமைத்த பிராரத்துவத்துக் கீடாகத் தேகம் நிற்கவே அதற்குக் காரணமாகிய மாயை நீங்காது மாயை நிற்கவே கன்மமும் போகாது மாயையுங் கன்மமு முண்டாகவே ஆணவமலமும் உண்டெனப்படும்.

ஆகவே, ஆர்ச்சன மாயையி னுற்பவந் தீரா தொழுகும் - ஆக இங்ஙனம் மூன்று மலங்களுமுண்டாகவே ஆகாமியங்களை யார்ச்சித்து மாயையின் தோற்றமாயுள்ள சரீர தொந்தனை விடாமல் மேன்மேலுந் தொன்று தொட்டுவரும். அன்றியும்,

ஒன்றொன்றினிற் சமமாயினல்லது நிற்பெறலில்லெனமொழிந்த தொல்லறந் தனக்கு மேயாதாகும் - இருவினையாகிய புண்ணிய பாவங்கள் ஒன்றுக்கொன்று தன்னிற் சமமாகத் துலையொத்தா லொழியத் தேவரீரை அடியார் பெறுகிறதில்லையென்று சொல்லப்பட்ட பழையதாகிய சிவதன்மமாகிய திருவாக்கும் பொருந்தாதாகும். ஆகையால்,

நாயேனுளத்து நின்றனை யென்பெனோ நின்றிலை யென்பெனோ பொன்றிய பொன்றிற்றிலமல மென்பனோ வொன்றினை யுரைத்தருள் மன்ற - அடியேனுளத்திலே தேவரீர் கூடி நின்ற தென்று விண்ணப்பஞ் செய்வேனோ கூடி நின்றதில்லை யென்று விண்ணப்பஞ் செய்வேனோ அந்த மலங்கள் கெட்டுப்போன தென்று

2. சில அன்பர்கள் தங்கள் ஊரில் தேர்வு நடத்தினால் பல இளைஞர்களைத் தேர்வுக்கு அனுப்ப இயலும் என்று தெரிவிக்கிறார்கள். கூடியவரையில் இத்தகைய வேண்டுகோள்கள் கவனிக்கப்படும். ஆனால் உறுதியாக இப்போதே தேர்வு நடை பெறும் இடங்களைத் திட்டம் செய்ய இயலாது.

3. சென்ற ஆண்டில் நால்வர் இளஞ் சைவப் புலவர் பட்டமும் இருவர் பரிசுகளும் பெற்றனர். இவ்வாண்டில் தமிழ்ப் பண்டிதர்களும் மாணவர்களும் நிரம்பிய சைவப் பற்றைப் புலப்படுத்திப் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை இத்தேர்வுகட்கு அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

## சைவ சித்தாந்த இளைஞர் சங்கம், தஞ்சை

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சங்கத்தினர் அப்பர் சுவாமிகள் கைலாயக் காட்சிபெற்ற திருநாளன்று (ஆடி அமாவாசை 18-7-36) திருவையாற்றில் உயர்திரு - சிதம்பர சுவாமிகள் தலைமையில் ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். திருவாளர்கள் பா. சிவகுருநாதபிள்ளை, வைத்தியநாத சாஸ்திரியார், கோவிந்தசாமி பிள்ளை, சோமசுந்தர தேசிகர், சுப்பிரமணியன், சிவராஜன் ஆகிய அன்பர்கள் முறையே அப்பர் கட்டளை, அப்பரன்பு, அப்பர் நிலை, அப்பர், சண்டேசுவரர், சிவசின்னங்கள் என்பனபற்றிப் பேசினார்கள்.

---

## ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை
## இராயப்பேட்டை

இச்சபையின் நிர்வாக சபையினராக அன்பும் ஆர்வமும் உழைப்பும் ஊக்கமும் நிரம்பிய பல இளைஞர்களைச் சபையின் முழு உரிமைத் தலைவர் நியமித்திருப்பது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. சமாஜ உதவிக் காரியதரிசி திரு. ஜி. கலியாணம் பிள்ளை பி எ.,டிப்.எக். இச்சபைக்குக் காரியதரிசியாகப் பணி புரிகின்றார். ஞாயிற்றுக் கிழமைதோறும் மாலை 3 மணி முதல் 5 மணி வரையில் சபா நிலையத்தில் பெரிய புராணப் பிரசங்கம் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களால் செய்யப்படுகிறது.

---

## உருவச்சிலைத் திறப்பு விழா

தமிழ்ப் பேரறிஞர் கோ. வடிவேல் செட்டியாரவர்களது உருவச்சிலைத் திறப்பு விழா மிகச் சிறப்பாக 2-8-1936ல் சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள வேதாந்த சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நமது சமாஜத்தினா பலர் இவ்விழாவிற் கலந்து கொண்டனர். வேதாந்த உலகம், புலவர் உலகம், மாணவர் உலகம், இலக்கண உலகம், மகளிர் உலகம் முதலிய பல உலகங்கள் வாழ்த்துரைத்தன.

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜத்தின் ஆவணிமாதக் கூட்டம், திருவள்ளூரில் சௌகார் தியேட்டரில் ஆவணி௴ கஉ (16-8-1936) ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணி முதல் 7 மணிவரை திவான்பகதூர் ஸ்ரீ. தெய்வ சிகாமணி முதலியார் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம்பிள்ளை, திரு.வி. கலியாண சுந்தர முதலியார், புரிசை - முருகேச முதலியார், அ. சோமசுந்தரம் செட்டியார் ஆகிய பேரன்பர்கள் முறையே, சமயத்தின் அவசியம், புராணபடனம், சுந்தரர் வாழ்க்கை என்பனபற்றிப் பேசினார்கள். தலைவரவர்கள் அரிய கருத்துக்கள் பலவற்றை வற்புறுத்தி முடிபு உரைத்தார்கள். காரியதரிசி அனைவருக்கும் நன்றி கூறினார்.

2. நமது சமாஜம், இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபை ஆகிய இவை இரண்டின் சார்பில் சைவத் திருவாளர்-பெருஞ்சொற் கொண்டல் - புரிசை - முருகேச முதலியார் அவர்கள், 11, 12, 13-8-36 ஆகிய மூன்று நாட்களிலும் இராயப்பேட்டை 'சுகாநந்த நிலை'யத்தில் அப்பூதியடிகள், முருகன் அவதாரம், கௌரி சரித்திரம் என்னும் பொருள்கள்பற்றி அரிய செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். கடைசிநாளன்று திருவாளர்கள் ம. பாலசுப்பிரமணிய முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ஸ்ரீ. தெய்வசிகாமணி முதலியார் ஆகிய நால்வரும் சொற்பொழிவாளருடைய கல்வித்திறம், நாவன்மை முதலியவற்றைப் பாராட்டிப் பேசினார்கள். இறுதியில் திருநீறு நிறைக்கப் பெற்றதொரு வெள்ளிக்கலன் பரிசிலாக வழங்கப்பெற்றது.

3. சமாஜம் நடத்தும் சைவத் தேர்வுகள் 1936ஸு நவம்பர்௴ 22உ ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை, தஞ்சை, திருப்பாதிரிப் புலியூர், திருப்பாண்டிக் கொடுமுடி, காஞ்சீபுரம் முதலிய பல இடங்களில் பல பேரறிஞர்கள் கண்காணிப்பில் நடைபெறும். மனுத்தாளனுப்புவதற்குக் கடைசித் தேதி 20-9-1936. கட்டணம் இளஞ் சைவப்புலவர் தேர்வுக்கு ரூபா ஒன்று ; சைவப்புலவர் தேர்வுக்கு ரூபா இரண்டு. பாடங்கள் சென்ற இரண்டு ஆண்டுகளில் விதிக்கப்பட்டவைகளே. எல்லா விவரங்கட்கும் ஒரு அணா தபால் பில்லை வைத்து விண்ணப்பஞ் செய்க.

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| மலர் ௯ | தாது ஆண்டு புரட்டாசித் திங்கள்<br>1936வரு செப்டம்பர்மீ | இதழ் ௯ |
|---|---|---|

## விரதங்களும் உத்ஸவங்களும்*

[திரு. ம. சுவாமிநாத சிவாசாரியார்]

சமாஜ ஆராய்ச்சிக் கழகத்தினர்

நம் நாட்டில் மக்கள் பற்பல விரதங்களை அநுஷ்டிக்கின்றனர். அவற்றுள், சைவர்களாகிய நாம் முக்கியமாக அநுஷ்டிப்பன விநாயக சதுர்த்தி, நவராத்திரி (ஸரஸ்வதி பூஜை), ஸ்கந்தசஷ்டி, சிவராத்திரி என்பவைகளாகும். இவ்விரதங்களை முன்னிட்டு நம் சிவாலயங்களில் முறையே, கணபதி - அம்பிகை - முருகன் - சிவபெருமான் முதலியவர்களுக்கு அபிஷேக நைவேத்தியங்களும் உத்ஸவங்களும் நடைபெறுகின்றன.

இவ்விரதங்களைப்பற்றி நம் தென்னாட்டில் மட்டும் சிறிதுகாலமாக அடிக்கடி ஒரு கிளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டு

*குறிப்பு :—சமாஜ ஆராய்ச்சிக் கழகத்தினர் பிறரும் தத்தம் கருத்துக்களை வெளியிட வேண்டுகிறோம்—பத்திராசிரியர்.

வருகிறது. அதாவது, எந்த வருஷத்தில் மலமாதம் ஏற்படுகின்றதோ அந்தவருஷத்தில் ஷை கிளர்ச்சியும் ஏற்பட்டு, அந்த வருஷ முடிவில் அதுவும் மறைந்துவிடுகிறது. இவ்வருஷம் ஆவணி மாதத்தில் அதிக பாத்ரபதமாகிய (இரண்டு அமாவாசை வருகிற) மலமாதம் ஏற்பட்டிருப்பதால் விரதங்களைச் சௌரமான மாதங்களில் செய்வதா, சாந்திரமான மாதங்களில் செய்வதா என்ற கிளர்ச்சி, தென்னாட்டில் தோன்றி, அதன் பயனாகப் பிள்ளையார் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, கந்தர்சஷ்டி, மகாசிவராத்திரி இவைகளை எப்போது கொண்டாடவேண்டும் என்றபெயருடைய ஒரு புத்தகத்தைத் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார் வெளியிட்டிருக்கின்றனர். அதில் சௌரமானமே உயர்ந்தது என்றும், சாந்திரமானம் மிகத் தாழ்ந்ததென்றும், சாந்திரமானம் ஸ்மார்த்தர்கட்கே உரியது என்றும், தமிழ் மக்கள் சௌரமானிகள் என்றும், ஆகமங்கள் எல்லாம் சௌரமானத்திலேயே எல்லாவிதமான விழாக்களும், சிறப்புக்களும் செய்யப்படவேண்டுமென விதிக்கின்றனவென்றும், ஆதலால் தமிழர்களுடைய எல்லாக் கோவில்களிலும், கிருகங்களிலும் இவ்வாண்டில் ஷை விரதங்களைச் சௌரமானப்படி செய்யும்படி கேட்டுக்கொள்வதாகவும் பலவாறு எழுதி இருக்கின்றனர். (இந்த வியாசமானது ஷை சங்கத்தார் வெளியிட்ட நூலைக் கண்டிப்பதற்கே ஏற்பட்டதாக நேயர்கள் நினைத்தல் கூடாது.) ஆகமங்களில் சாந்திரமானப்படி விழாக்களைச் செய்ய ஆதாரங்கள் இருக்கின்றனவா? மேற்கூறிய விரதங்களை எப்போதுசெய்யவேண்டும் என்பதை ஆராயவே இவ்வியாசம் தோன்றியிருக்கிறது.

### 1. சாந்திரமானம் சௌரமானம்

சூரியனுடைய கதியைக் கொண்டு அயனம் மாதம் வருஷம் இவைகளை அறிகின்றோம். அவ்விதமே சந்திரனுடைய



கதியினால் பக்ஷம் திதி என்பவைகளை உணர்கிறோம். சூரியனுடைய கதியின்றி, எப்படி மாதம் அயநம் இவைகளை அறிய முடியாதோ, அப்படியே சந்திரனின்றித் திதி, பக்ஷம், இவைகட்கு ஏதுவே இல்லாமற் போவதுடன் திதியைப் பிரதானமாகவுடைய விரதங்களும் இல்லாமற் போகும்.

சந்திர சூரியர்களைப் பற்றி ஆராய்ச்சிக்காரர்கள் எப்படி சொல்லிக்கொண்டபோதிலும் நம் சாஸ்திர முறைப்படி அவ்விருவரும் சிவபெருமானுடைய அஷ்ட மூர்த்தங்களில் சேர்ந்தவர்கள் என்றும், இரண்டு நேத்ரங்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் எவர் இல்லாவிடினும், நம் கால வியவஹாரம் நடைபெறாதாகையினால், அவ்விருவர்களுடைய கதிகளும் வேண்டற்பாலனவேயாகும். சௌரமானத்தில் செய்ய வேண்டிய சிரார்த்தங்கள்கூட சௌரமாதத்தில் குறிப்பிட்ட திதியானது ஏற்படாமற் போய்விடுமேயாகில், ஷை சிரார்த்தத்தை முன் மாதமாகிய சாந்திரமாதத் திதியில் செய்யும்படிக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஒரு மாதம் சுக்லபக்ஷப் பிரதமையில் ஆரம்பித்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியுடன் முடிவடைந்துவிடுமேயாகில் அந்த மாதத்திய அமாவாசைத் திதியை, அதற்கு முந்திய மாதத்தில் (சாந்திர மாதத்தில்) செய்துவிடவேண்டும். ஆகையினால், சாந்திரமானம் - சௌரமானம் - இரண்டும் நமக்கு வேண்டியவைகளே.

### 2. ஆகமங்களும் - சாந்திரமானமும்

ஆகமங்கட்குச் சாந்திரமானம் உடன்பாடில்லை என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. ஏனென்றால் காமிகாகமம் காலவிதிப்படலம் சென்னைப் பதிப்பு-பக்கம் 349-ல் "அதிமாஸம் த்யஜேத்தீமாந், தேசிகஸ்துவிசேஷத:" புத்திமானாகிய ஆசாரியன் அதிக மாசத்தை விசேஷமாக விடவேண்டும்

ஐம் முக்யமாகக் கொள்ளத் தகுந்ததென்பதைக் குறித்தே ஆச்வியுஜ மாதத்திலாவது சுக்லபக்ஷ அஷ்டமி மூலத்தோடு கூடியது மிகத் துர்லபம் என்றும், கன்யாமாதம் கலவாத ஆச்வியுஜ சுக்லபக்ஷ அஷ்டமியில் மூல நக்ஷத்திரம் சம்பவிக்காதபக்ஷத்தில் ஆச்வியுஜ அஷ்டமி நவமிகளில் பூஜிக்கவேண்டும் என்றும் பொருள் கிடைக்கின்றது. இதைத் தவிர்த்துக் கன்யா மாதத்தை விடுத்து ஆச்வியுஜத்தில் அஷ்டமி மூலத்தோடு ஒருபோதும் வராதாகையினால் கன்யாமாதமே கொள்ளத்தகுந்தது என்று பொருள்கொள்ளின், ஆச்வயுக் சுக்லபக்ஷத்திலாவது என்று விகல்பம் கூறி இருக்கின்றமையால் ௸ பொருள் கிடைக்காததுடன் ஆச்வியுஜ அஷ்டமி நவமிகளில் பூஜை செய்யவேண்டும் என்ற வாக்கியத்திற்கும் பயனில்லாதுபோய்விடும். ஆதலால், காமிகத்தில் கூறப்பட்ட மஹாநவமிக்குரிய காலம் சாந்திரமான ஆச்வியுஜம் என்பது விளங்குகின்றதல்லவா?

நவராத்திரியைப்பற்றிக் கூறும் பூர்வகாரணம்:—"ஆச்வயுக் சுக்லபக்ஷேவா பிரதிபந்நவமியந்தகே - பிரதிபத்திமார்ப்ய விருதோத்ஸவமதாசரேத்" ஆச்வியுஜ சுக்லபக்ஷ பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள நாள்களில் பிரதமை முதல் விரதம் உத்ஸவம் இவைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் கூறப்பெற்ற ஆச்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியேயாகும். ௸ ஆச்வயுக் என்பது சௌரமான மாதத்தையே குறிக்கும் எனில், துலாமாதத்தைக் குறிக்கும். சாந்திர ஐப்பசி கலவாத துலா மாதத்தில் நவராத்ரி செய்வது ஒருவருக்கும் உடன்பாடில்லை. தவிர ஆச்வயுக் என்பது கன்யா மாதத்தையே உணர்த்தும் என்பது பண்டிதர்கள் ஒத்துக்கொள்ளத்தக்கதன்று. காரணமத்திய, "ஸௌரமாசம்பிரசஸ்தம்ஹி சாந்தரமாஸோ ப்ரசஸ்தக?" என்ற வாக்கியமானது, த்வஜாரோஹண ஹோம பலிகளுடன் கூடிய உத்ஸவங்கட்கே உரியதாகையாலும் பூர்வ காரணத்தில், நவராத்ரிக்கு த்வஜாரோஹண பலிதீர்த்தங்கள் விதிக்கப்படாமையாலும், தற்காலத்தில் பெரும்பான்மையான ஆலயங்களில் நடைபெறும் நவராத்ரி உற்சவங்கள் த்வஜாரோஹண, பலி தீர்த்தம் இன்றியே நடைபெறுகின்றமையாலும் ௸ வாக்யங்கள் இதனைப் பாதிக்கமாட்டா. அகோரசிவாசார்யர் நவமிபூஜாவிதியில் பாத்ரபதம் என்று கூறுவதும் சாமானிய விதிபற்றியே யாகும். இல்லாவிட்டால் மூல ஆகமங்கட்கு விரோதம் ஸம்பவிக்கும். நிற்க, இவ்வுத்ஸவத்திற்கு ஆரம்பம் முக்கியமா அல்லதுமுடிவு முக்கியமா? என்று சந்தேகிக்கில் மற்றைய உத்ஸவங்களுக்குத் தீர்த்த தினத்தை நிச்சயித்துக்கொண்டு அதற்கு முந்திய 9, 7 முதலிய நாட்களில் த்வஜாரோகணம் செய்ய வேண்டும் என்றுவிதிப்பதுபோல் இவ்வுத்ஸவத்திற்குக்கூறாது பிரதமை முதல் நவமிவரை செய்ய வேண்டும் என்று கூறிஇருப்பதால், ஆரம்பம் முடிவு இரண்டுமே முக்கியங்களாகும். ஆதலால் இந்நவராத்ரி விரதோத்ஸவத்தைச் சாந்திரமான ஆச்வியுஜ சுக்லபக்ஷ பிரதமை முதல் நவமி ஈறாகச் செய்வதே உசிதம் என்று புலப்படுகின்றது.



## 5. ஸ்கந்த ஷஷ்டி

இனி ஸ்கந்தஷஷ்டியைப் பற்றி விசாரிப்போம். குகப்பெருமானுக்குச் செய்யும் பிரதிஷ்டை பூஜை உற்சவங்களை விளக்கிக் கூறும் குமார தந்திரத்தில் எல்லா மாதங்களிலும் அந்தந்த மாத நக்ஷத்திரத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு உற்சவம் நடத்த வேண்டும் என்று கூறியிருக்கின்றாரே யல்லது துலா மாதத்திய சுக்லபக்ஷ பிரதமையிலிருந்து சஷ்டி பரியந்தம் செய்ய வேண்டும் என்றாவது சஷ்டியில் ஸம்ஹார உற்சவம் முதலியன செய்யவேண்டுமென்றாவது கூறவில்லை.

கடிதத்தில் எனக்குத் தங்கள் ஏஜெண்டு குற்றம் செய்ததாக யான் எழுதவில்லை என்றும், சமாஜம் சமாஜ வெளியீடுகள் விஷயத்தில் தங்கள் ஏஜெண்டு செய்து வருவதைப்பற்றி அக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தங்கள் நிறைவேற்றற் கூட்டம் ஆக்ஷேபிக்காதது மகிழ்ச்சியைத் தருகிறதென்றும் தெரிவித்தேன். இதை 31-5-36-ல் நிறைவேறிய தங்கள் கழகத் தீர்மானம் "தங்கள் ஏஜெண்டு குற்றம் செய்ததாக எழுதியுள்ள பகுதியொன்றும் தோன்றவில்லை" என்று யான் எழுதிவிட்டதாகக் கருதுகின்றது. இவ்வாறு எனது 17-4-36 கடிதத்தைக் கருத இடமில்லை.

சமாஜம், சமாஜ வெளியீடுகள் விஷயத்தில் தங்கள் சென்னை ஏஜெண்டு செய்து வருவதைப்பற்றி எழுதப்பட்டவைகளை 31-5-36-ல் ஏற்பட்ட தீர்மானமும் ஆக்ஷேபிக்கவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. தங்கள் ஏஜெண்டை விசாரித்து வேண்டுவன செய்தீர்களோ இல்லையோ என்பதும் தெரியவில்லை. இதைப்பற்றி விரைவில் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன். தாங்கள் முன் அனுப்பியவற்றையும் இக்கடிதத்தையும் இதற்குத் தாங்களனுப்பும் பதிலையும் "சித்தாந்தம்" ஆகஸ்டுமாத இதழில் வெளியிடுதற்கு எனக்கு எவ்வித தடையுமில்லை.

இங்ஙனம்: தங்களன்புள்ள,

(Sd.) ம. பாலசுப்பிரமணியம்,

காரியதரிசி.

---

**குறிப்பு:**—இக்கடிதத்துக்கு நாளதுவரை பதிலில்லை—**பத்திராசிரியர்.**

# திருவடியும் திருமுடியும்

[திருவருள் நிலையம், பொன்னம்பலசிவம்]

சைவ சமயிகளுள் **எவரேனும்** உடல்நீத்தால் அச்செய்தியைக் குறித்துப் பிறர்க்குத் தெரிவிக்குங்கால் இன்னார் சிவபெருமான் திருவடியை யடைந்தனர் என்று கூறுதல் சைவ சமயிகளின் தொன்றுதொட்ட வழக்கமாய்ப் போதருகின்றது. புறப்புறம் முதலாக எண்ணப்பட்ட பல்வேறு சமயங்கள் பகரும் முத்திநிலைகள் எல்லாம் முற்றுப்பெறாத தாழ்ந்தபடியில் உள்ளன என்னுங் கருத்துப்பற்றி அவற்றைப் பழிசேர் முத்தியென மறுத்து "அடிசேர் முத்தியே முத்தி இதுமுத்தித் திறத்ததாமே" என்றும் "சிவனடியைச் சேருமுத்தி செப்புவ திங்கியாமே" என்றும் சித்தாந்த சாத்திரங்கள் தெளிவுறக் கூறுகின்றன. ஆதலால் வீடடைந்தாரைத் திருவடியடைந்தார் எனப் புகலும் வழக்கம் பொருத்தமானதேயாம்.

ஆனால் இங்ஙனம் வழக்கம்பற்றிச் சொல்லிவரும் சைவர்களிற் பெரும்பான்மையோர் தமது சமய நூல்கள் இவை, பரசமய நூல்கள் இவை என்று பகுத்தறிந்துகொள்ளாது பிறசமய நூல்களையுந் தம்முடையவெனக் கூட்டிக் குழப்பி அபிமானித்துக்கொண்டு தமக்கு மிகவும் உரிமையாகிய சித்தாந்தசாத்திர உண்மைகளைச் சிறிதுந் தேராது இருக்கின்றார்களாதலின் இத்தகையாரை நோக்கிப் புறச்சமயத்தவர்கள் :—"ஐயா சைவரே! நீவிர் முத்தியடைந்தாரைச் சிவபெருமான் திருவடியை யடைந்தார் எனக் கூறுகின்றீரே, அடைந்த அவர் சிவனார் திருவடியின் மேற்பக்கத்திருப்பாரா? அடியின் கீழ் ஒட்டிக்கொண்டிருப்பாரா? அல்லது கால்விரல்களின் இடுக்கில் ஒடுங்கி

யுறுவரா? அல்லது திருவடியில் தொங்கிக்கொண்டிருப்பரா? தொங்குவதானால் எத்தனைபேர்தாம் தொங்கக்கூடும்? ஏதோ ஒருவகையாகவோ பலவகையாகவோ அடியடைந்திருப்பது உண்மைதான் என்று வைத்துக்கொண்டாலும் அடியடைந்த அத்தனை பேரையுந் தூக்கிக்கொண்டு சிவபெருமான் நடக்கமுடியுமா? நடந்தால் அவ்வடிக்கீழுள்ளார் எல்லாரும் நசுங்குண்டுபோவதுடன் பெருந்துயரும் அடையமாட்டார்களா?'' என்று இன்னவாறெல்லாம் நகையாடற் கேதுவாகவும், அடியடைதல் விடயமாகக் கேட்ட இக்கேள்விகள் பொருத்தமாகவே யுள்ளன என்று சமய அறிவில்லாத மக்கள் நம்பும்படியாகவும் வினாக்களைக் கிளப்புவரேல் அப்போது அவற்றிற்குத் தக்க விடையிறுக்க இயலாது பரக்கப் பரக்க விழிப்பவராய் நிற்கின்றனர். சித்தாந்த உண்மை யறியாமையின் இவ்வாறுய வினாக்கள் நிகழ்தலும், அவற்றிற்கு விடைதராகாமையும் இயல்பே. ஆதலால் இங்ஙனம் கேட்போர் கேட்கப்படுவோராகிய இவ்விருபான்மையோரையும் முன்னிட்டுத் திருவடி யாது? திருமுடி யாது? என்று ஈண்டாராய்தல் இன்றியமையாததாகும்.

சைவ சித்தாந்தத்துட் கூறப்படும் முழுமுதற் கடவுளாய சிவபரம்பொருளின் இலக்கணத்தை இங்கு ஒருவாறுக வேனும் தெரிந்து கொண்டால் அப்பரம்பொருளின் அடிமுடிகளை யறிந்து கோடல் சிறிது எளிதாதல் கூடும். இறைவன் தடத்தம், சொரூபம் எனப்படும் இருவகை இலக்கணங்களையும் உடையன். ஐந்தொழில் நடாத்தற் பொருட்டு அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைப்பட்ட திருமேனிகள் கொண்டருளலுடன் "பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்'' "வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும் நூறு நூறுயிரம் இயல்பினதாகி'' என்று திருவாசகந் தெரிவித்தாங்கு அறிவாரறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும், புகழ்வார் புகழ்கின்ற வண்ணங்களும் ஆகியஎல்லாம் உள்ளானுய்த் தோன்றி நின்று மறைதல் யாவும் முதல்வனது தடத்த இலக்கண நிலையின் பாற்படும். இந்தனத்தின் எரிபாலினெய் பழத்தினிரதம் எள்ளின்கண் எண்ணெயும்போல் எங்கு முளனுய், என்றும் ஒரே பெற்றியனுய், பரஞானத்தாலன்றி வேறெத்திறத்தாலுங் காண்டற்கரியனுய், மாற்ற மனங்கழிய நிற்குந் தன்மை அவன்றன் சொரூப இலக்கண நிலையின்பாற்படும்.



"சுருதிவானவனுந் திருநெடுமாலுஞ் சுந்தர விசும்பிலிந்திரனும்
பருதிவானவனும் படர்சடைமுக்கட் பகவனு மகவுயிர்க்கமுதாம்
எருதுவாகனனும் எயில்கள்மூன்றெரித்த ஏறுசேவகனுமாம் பின்னுங்
கருதுவார்கருதும் உருவமாங்கங்கை கொண்ட சோளேச்சரத்தானே''

என்றும்,

"எங்ஙனிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ஙனிருந்ததென் றுந்தீபற
அறியு மறிவதன் றுந்தீபற''

என்றும் வரும் திருவிசைப்பாவும், திருவுந்தியாரும், முறையே இறைவனது தடத்த சொரூப, நிலைகளைக் குறித்துக் கூறியுள்ள தன்மைகள் ஈண்டுக் கூர்ந்து நோக்கிக் கொளற்பாலன.

தடத்தநிலை பொதுவியல்பென்றும், சொரூபநிலை உண்மையியல்பென்றும் உரைக்கப்படும்.

இனி இவ்விரு பெருநிலையிலும் நின்றருளும் ஒருதனி முதல்வனது அடிமுடிகள் ஆராய்தற்குரியன. நம்பெருமான் பொதுவியல்பெனப்படும் தடத்த நிலையில் நின்று காட்சி தருங்கால்,

"யானெனதென் றற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக"

என்று குமரகுருபர அடிகளும்,

"அடியெனுமதுவும் அருளெனுமதுவும் அறிந்திடிற் சிற்கன நிறைவு
முடியெனுமதுவும் பொருளெனுமதுவும் மொழிந்திடிற் சுகம்"

என்று தாயுமான அடிகளும் அருளியவாற்றானும் நன்குணரப்படும்.

சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவத்தைத் தேடிக் கண்டு கொள்ள வேண்டுமென்னுந் தீவிர வேட்கை கொண்டெழுந்த பக்குவிகளாயினார் அதனை முகத்துக் கண்கொண்டு பார்க்கமுடியாதென்று பொறிபுலக் காட்சியைப் போக்கித் தத்துவங்களை யெல்லாங் களைந்து தாண்டி ஆன்ம சொரூப மென்னுந் தம்முண்மை விளங்கப் பெற்று அதன்மேற் பரமான்மாவை நோக்கி உண்முகப்பட்டு நிற்குங்கால் யானென தென்றற்ற இடத்தே அவர்க்கு முதலாவது தோன்றுவது தடையிலா ஞானமென்னும் இத்திருவடியே. இவ்வடி யென்னும் அருளில் அழுந்தப் பெற்றார், பின் முடியென்னும் மோனபரானந்தம் வந்து தம்மை முற்றும் விழுங்க "யானாகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே" என்றபடி பேரின்பமயமாகவே நின்றிடுவர். எனவே வீடடைந்தாரைத் திருவடி யடைந்தார் என வழங்கும் வழக்கின் கருத்தை இந்நிலையில் நின்று நோக்குவார்க்கு என்ன பொருள் தோன்றும்? அடியடைந்தார் என்பதற்கு அறிவின்ப மயமானார் என்பதன்றோ? பொருளாகத் தோன்றும். அன்றியும் "எங்குமாம் அண்ணல்தாள்" என்புழி அண்ணலாய கடவுளின் தாளே எங்கும் நிறைந்துளதாம் என்றிடின் அவன்றன் கை, கழுத்து, காது, கண், மூக்கு, தலை முதலிய பிறவுறுப்புக்கள் யாண்டிருக்கும்? அவை இருத்தற்கு இடமே வேறு இன்றன்றோ? என்று கருத்தறியாதெழுங்கடா அடங்கற்கும் விடைதோன்றுமன்றோ? ஆதலால் அடிமுடிகளின் பொருளறியா தெழும் ஐயம் திரிபுகளைப் போக்கி "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே! தேசோமயானந்தமே! என்று மெய்யுணர்வுடையோரால் வியந்துருகி விளிக்கப்படுவன முறையே திருவடியும் திருமுடியுமாம் எனத் தெளிந்தின்புற நமக்கு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.



# ஒரு வேண்டுகோள்

## தமிழ்க் கலைச் சொல்லாக்க மகாநாடு, சென்னை

(திருநெல்வேலியிலுள்ள சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் ஆதரவில் கூட்டப்பெறுவது)

அன்பரீர்,

ஒவ்வொரு நாளும், அறிவியற் பகுதிகள் வெகு வேகமாய்ப் பல்குகின்றன; பலப்பல நாடுகள் நாகரிகத் துறைகளில் மிகப் பெருவளர்ச்சி யடைகின்றன; அரசியல் துறைகள் மாறுபாடுற்று காலத்தின் தேவைகளுக்கேற்ப வியக்கத் தகும் வகையில் முன்னேற்ற மடைகின்றன. இந்நிலைகளுக்குதவியாக மிகப் பல புதுச் செய்திகளும் அறிபொருள்களும், அவற்றை விளக்கும் கலைச் சொற்களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. நமது உறவு மொழிகளாய தெலுங்கும் மலையாளமும் வெகு விரைவாய் முன்னேற்றமடைந்து வர நம் தாய்மொழி மட்டும் தயங்கிக்கொண்டிருக்கிறது. நம் மொழி போதுமான ஆற்றல், பல அரிய காவியங்கள் முதலியவற்றை யுடையதே எனினும், அதன் தவக்குறைவால் அதன் மக்களிடையே நீண்டகாலப் புறக்கணிப்பும் கவலைக் குறைவும் உண்டாகிவிட்டது. இதனால் நாள்

தொறும் பொதுமக்கள் வழங்குகிற சில இன்றியமையாச் சொற்களையுங்கூட நம்மொழி தனதாக்கிக் கொள்ளாதிருக்கின்றது. தமிழைத் தனது பழைய பெருமையுடைய நிலையிலும், உலகமொழிகளின் முன்னணியிலும் கொண்டுவரப் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவையாவும் ஆதரவின்மையாலும் தாங்குவார் முன்வராமையாலும் தடையுற்றன. இப்பொழுது நம்மொழி முன்னேற்றத்திற்கென அரிதில் முயன்றுவருகிற சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரை அன்புடன் ஆதரிக்கும்படி தமிழ்மக்கள் ஒவ்வொருவரையும் மிகவும் வற்புறுத்தி வேண்டிக் கொள்ளுகிறோம்.

இச்சங்கத்தின் ஆதரவில் சில ஆழ்ந்த அறிவாளிகளால் கலைச் சொற்களும் அவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பும் தயாரிக்கப்பெற்றன. அவை ஓர் அறிஞர் கழகத்தால் செப்பனிடப்பெற்றன. இவை " கலைச் சொற்கள் " என்னும் பெயருடன் வெளியிடப்பட்டு சின்னூட்களாகப் பரப்பப்பெறுகின்றன. இச்சொற்கள், முழுமையும், அகற்சியும், அரங்கேற்றமும் அடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் இச்சங்கத்தார் இச்சொற்களை ஈரொட்டாகக் கொண்டு பலப்பல சங்கங்களையும் அறிவாளிகளையும் திருத்தங்கள் ஒத்த சொற்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இவ்வெளியீட்டின் பிரதிகள் இதில் ஈடுபடக் கூடியவர்களுக்கு வழங்கப்பெற்றன ; இன்னும் வழங்கப்பெறுகின்றன. இவற்றைச் செப்பம்செய்பவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதாக விளம்பரஞ் செய்யப்பெற்றிருக்கிறது. இதற்கேற்பச் சிலர் தங்கள் திருத்தங்களை அனுப்பியிருக்கின்றனர் ; இன்னும் பலர் அனுப்பக்கூடுமெனத் தெரிகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை மாகாண ஆசிரியர் சங்கம், கரந்தை



மதுரை, கோயம்புத்தூர், சாத்தூர் முதலிய விடங்களிலுள்ள தமிழ்ச் சங்கங்கள் முதலியவற்றின் பிரதிநிதிகளடங்கிய ஒரு பேரறிஞர் கழகம் அமைக்கப்பெறுகிறது. இக்கழகத்திற்குத் தலைமை தாங்க உயர்திரு - சாமி விபுலாநந்தர் அன்புடன் இசைந்திருக்கின்றனர். இக்கழகம் சென்னையில் பச்சையப்பன் கட்டிடத்தில் நாளது செப்டம்பர் மாதத்து விடுமுறையில் கூடி அறிஞர்கள் அனுப்பும் சொற்களுட் பெரிதும் பொருத்தமானவற்றைப் பொறுக்கிக்கொண்டு ஏனையவற்றையும் திருத்தஞ் செய்யும். இக்கழகத் திறப்பை வெகு சிறப்பாக நடத்த ஒரு பொதுக்கூட்டமும் கூடும். இவ்வேலையின் வெற்றி தமிழ்மக்கள் எடுத்துக்கொள்ளும் ஊக்கத்தைப் பொறுத்ததாகலின் தமிழன்பராகிய தாங்கள் இவ்வியக்கத்தில் ஈடுபடும்படிக்கும், தங்கள் பேராதரவை அளிக்கும்படிக்கும் வரவேற்புக்கழக உறுப்பினராகும்படிக்கும் தங்களாலான பொருளுதவி செய்யும்படிக்கும் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம் : தங்களன்புள்ள,

**டி. எஸ். நடராஜபிள்ளை**, பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர், தலைவர்,
பச்சையப்பன் அறநிலையம்.

வித்துவான் - **டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை**, எம். ஏ., பி. எல்.,
வழக்கறிஞர்.

**எஸ். கே. யக்ஞநாராயண ஐயர்**, எம். ஏ., தலைவர்,
சென்னை மாகாண ஆசிரியர் சங்கம்.

**எம். எஸ். கோடீசுரன்**, பி. ஏ., எல். டி., காரியதரிசி,
தலைமை ஆசிரியர் சங்கம்.

**எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை**, எம். ஏ., எல். டி.,
விடுதிபெற்ற ஆராய்ச்சியாளர், தமிழ் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

திவான்பகதூர் - **கே. தெய்வசிகாமணி முதலியார்**,
விடுதிபெற்ற கூட்டுப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள்,
சென்னை மாகாணம்.

**டி. என். சேஷாசலம் ஐயர்**, பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர்,
கலாநிலையத்தின் பத்திராசிரியர், சென்னை.

அப்பரமனுக்கு இன்பந்தரு மென்பதும், வேண்டுவன தருவான் என்பதும் யாவரானும் ஒப்புக்கொள்ளக் கூடிய தொன்று. வேதம் ருக், யசுர், சாமம் எனமூவகைப்படும்; அவற்றுள் நடுவணிருப்பது யஜுர் வேதம், அதன் காண்டங்கள் ஏழனுள் நான்காவது காண்டம் நடுவிலிருப்பது; அக்காண்டத்தின் ஏழு சங்கிதையுள் நடுவிலுள்ளது நான்காவது சங்கிதை; அதன் நடுவிலுள்ளது ஸ்ரீருத்ரம் எனப்படும்; அந்தருத்ரத்தின் நடுவிலுள்ளது "நமஃ சோமாயஸ" அதன் நடுவிலுள்ளது " நமசிவாயச " என்னும் வாக்கியம்; அவ்வாக்கியத்தின் நடுவிலுள்ளது 'சிவ' என்னு மெழுத்துகள். இவ்விரண்டெழுத்தே வேத இதயம் என்னும் ஆதிநாயகர்க்குத் தலைப்பெயராம். இத்தகைய பெருமை வாய்ந்த ஐந்தெழுத்தை வீடுபேற்றின்கண் விருப்புளார் யாவரும் தினமும் அன்பு பொருந்திய உளத்தராய் உச்சரித்தல் வேண்டும். சிவபெருமான் பாசத்தை விடுவிப்பவனாகலின் அவனது நாமமாகிய திருவைந்தெழுத்தும் பாசத்தினின்றும் விடுவிக்குமென்க. இவ்வைந்தோடு "ஓம்" எனும் பிரணவத்தைச் சேர்த்துரைப்பின் அது சடட்சர மெனப்படும்.

பரவுதற்குரித்தாம் பக்திப் பெருமையீர்!

நாடோறும் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி இருந்து மும்முறை பிராணாயாமம் செய்து, பதுமாசனமாகத் தக்கதோரிடத் தமர்ந்து, இஷ்டலிங்கப் பெருமானிடத்து நோக்கம் வைத்து, திருவைந்தெழுத்தைப் பத்து நிமிடங்களேனும் முறை வழுவாது செபித்தல் வேண்டும். அடியேன் கூறியனவற்றை அன்பர்கள் அகத்திலிருத்தி அரனடிமை பூண்பாராக.



விண்ணப்பஞ் செய்வேனே கெடாமல் நின்ற தென்று விண்ணப்பஞ் செய்வேனே இவையிற்றி லொன்றை அருளிச்செய்தருள் அடியேனுக்கு அறுதிப்பட,

குன்றாப் பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி - வளப்பங்கள் குறைவுபடாத பெண்ணையாற்று நீர் பாயப்பட்ட வயல்களையுடைய திருவெண்ணெய் நல்லூருக்குக் கர்த்தாவாக இருக்கப்பட்டவனே,

கைகண் டலைவாய் கால் செவி மூக்குயர் மெய்கொண் டென் வினை வேரறப் பறித்த மெய்கண்ட தேவே - கரசரணாதிகளாயுள்ள அவயவங்களோடுங் கூடியிருக்கப்பட்ட திருமேனி யெடுத்துக்கொண்டு அடியேனுக் குண்டான கன்மங்களைக் கிளைப்பறப் பறித்துப்போட்ட மெய்கண்ட நாதனே,

வினையிலி - அப்படி ரூபீகரித்திருக்கையிலேயுங் கன்ம தொந்தனை யில்லாதவனே,

மைகொண்ட கண்ட - நஞ்சமாகிய கறுப்பினைத் தரித்தருளின கறைமிடற்றனே,

வழுவிலென் மதியே - அடியேனுக்குக் குற்றமற்ற அறிவாயிருக்கப்பட்ட தம்பிரானே.

சேஷன் வினை பிராரத்த தேகம் நிற்கவே மூன்று மலங்களும் போகாதென்றதுக்குச் சம்மதி சித்தியாரில், "அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகு மவுடதமந் திரமுடையார்க் கருவிடங்களேறா, வெங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும் ஞானிக் கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத், தங்கிப் போம் பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த சக்காமுங் கந்தித் துச் சுழலு மாபோல், மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கு மெல்லா மலங்களும்பின் காயமொடு மாயு மன்றே" [x, 6] என்றும், வாதனை தோஷத்தினாலே அக்கினியைச் சேர்ந்த வித்தைப்போலவும், ஆயன் வெட்டின மாம்போலவும், புடம் பண்ணின பணம்போலவும், தத்த படம்போலவும் உருவமாத்திரமல்லாமல் பந்தமில்லை, காரண மலங்களுஞ் சரீரத்தோடு தேய்ந்தறு மென்றது. புண்ணிய பாவ மொன்றுக்கொன்று சமத்துவமானாலல்லவோ தேவரீரைப் பெறுவதென்று சொன்ன பழைய திருவாக்குப் புண்ணிய பாவத்துக்கேற்ற தேகம்

நிற்கவே வினையொத்ததென்று சீஷன் வினா, இருவினையொப்புக்குச் சரீரம் முன்னிலையல்ல புண்ணியத்திலேயும் பாவத்திலேயும் இரண்டிலேயும் சமமாக வெறுப்பு வந்ததே இருவினையொப்பு அப்போது ஆசாரிய மூர்த்தமாக வந்து ரட்சிப்பன். உதாரணம் போற்றிப் பஃறொடையில், "எல்லை யிரண்டு மிடையொக்கப்-பல்பிறவி, யத்தமதி லன்றோ வளவென்று பார்த்திருந்து, சத்தி பதிக்குந் தரம்போற்றி" [116-118] என்றும், அடியேனுள்ளத்திலே தேவரீர் அநுக்கிரகம் பண்ணுகிறதுக்கு முன் நின்றதென்று சொல்வேனோ நிற்கவில்லை யென்பேனோ என்ற வினாவுக்கு உதாரணம் சித்தியாரில், "எங்குந்தா மென்னில்நா மெய்த வேண்டா எங்குமில னென்னில்வே றிறையு மல்ல, னங்கஞ்சே ருயிர்போல்வ னெங்கு மங்கத் தவயவங்கள் கண்போலக் காணா தான்மா, விங்குநா மியம்புந்தத் துவங்களில்லைத் தறிவ திறைஞானந் தந்து தா னீதல்சுட ரிழந்த, துங்கவிழிச் சோதியுமுட் சோதியும்பெற் றூற் போற் சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே" [viii, 38] என்பது கண்டுகொள்க. தேவரீ ரனுக்கிரகம் பெற்ற பிறகு மலந்தான் நின்றதென்று விண்ணப்பஞ் செய்வேனோ, நிற்கவில்லை யென்பேனோ யென்னும் வினாவுக்குச் சித்தியாரில், "நெல்லினுக்குத் தவிடுமிக ளநாதியாயே நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர், சொல்லியிடிற் றுகளற்ற வரிசியின்பா லில்லை தொக்கிருந்து மற்றொருநெற் றோற்றிடாவா, மெல்லவிவை விடுமறவே யவைபோல வணுவை மேவுமல முடல்கன்ம மனாதிவிட்டே நீங்கும், நல்லசிவன் முத்தியின்கட் பெத்தான் மாவை நணுகிநிற்கு மாதவினால் நாசமுமின் றாமே" [xi,6] என்றும், சிவப்பிரகாசத்தில், "அழிந்திடும் பாச மென்னி னித்தமென் றுரைத்தல் வேண்டா, மழிந்திடா தென்னின் ஞான மடைவது கருத வேண்டா, மழிந்திடுஞ் சத்தி நித்த மகிழ்ந்திடா தொளியின் முன்ன, ரழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்தி டாவே" [x,9] என்றும் சொன்னது கண்டுகொள்க.
௧௦

அடியே னறிகிறதெல்லாந் தேவரீர் கூடி நின்றறிவிக்கிறதாயிருக்கவும் அடியேன் இந்த அஞ்ஞானத்தோடுங் கூடி மயங்கி நிற்கைக்கு வழியேதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

**மதிநின்பா லிந்த மலத்தின்பா னிற்க**
**விதியென்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய—பதிநின்பால்**



**வந்தா லிதில்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன்**
**எந்தா யிரண்டாமா றென்.** ௧௧

## மேலிதற்கு வியாக்கி.

மதிநின்பால் - அடியேனுக்குண்டா யிருக்கப்பட்ட அறிவு தேவரீர் பகுதியிலே யுண்டானது. அப்படி யிருக்கவும்,

இந்த மலத்தின்பா னிற்க விதியென்கொல் - அடியேன் இந்த மலத்தின் பகுதியிலே கூடி மயங்கி நிற்கைக்கு முறைமை ஏதுதான்.

வெண்ணெய்வாழ் மெய்ய - திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,

பதிநின்பால் வந்தால் - கர்த்தாவாயிருக்கிற தேவரீரை அடியேன் வந்து கூடினால்,

இதில் வரத்தில் - இந்த மலத்திலே மீள வருகைக்கு வழக்கில்லை,

வந்திரண்டும் பற்றுகிலேன் - தேவரீரை வந்து கூடினால் அந்த அருளோடும் இந்த மலத்தோடும் ஒக்க நிற்கிறது அடியேனுக்குண்டாகாது,

எந்தா யிரண்டாமா றென் - அடியேனுக்கு சுவாமியா யிருக்கப்பட்டவனே அடியே னொருத்தன் தேவரீரோடுங் கூடி யறிந்தும் இந்த மலத்தோடுங் கூடி யறியாமலுமா யிரண்டோடுங் கூடி யதுவதுவாய் நிற்கைக்கு வழக்கேது.

விடயம்: அறிவு மிகுத்தவனு மாகாமல் அறிவில்லாத மூடனுமாகாமல் கதிபெற வேணுமென்கிற நடுவாந்தன்மையாகிய அனுட்டான பரனுக்கு இரண்டினு மாசைபற்றி யதுவதுவாய் நிற்பன். உதாரணம் சித்தியாரில், "பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப் படும்பொழுது நீங்கியது விடும்பொழுது பாக்கு, மாசுபடு மலமாயை யருங்கன்ம மனைத்து மரனடியை யுணரும்போ தகலும்பின் னணையும், நேசமுடன் றிருவடிக்கீ ணீங்காதே தாங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாக, வாசையொடு மங்குமிங்கு மாகியலம் வருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்" [viii,39]. இவனுக்குள்ள வறிவு கத்தாவிடமாக வுண்டாகையிலேயும் மலத்திலே மயங்குவானேனென்ற வினாவுக்குக் கத்தா கன்மத்து வழியே நடத்துவ னென்பது கருத்து. சிவஞானபோதத்தில்,

திருநயனமு முடைத்தாய் எவ்விடமும் நீங்காம லுயர்ந்த நின்னுடைய பூரண நிலையிலே அடியேன் வந்து கூடி மீளவும் பிரிவேனுமாகில்.— உதாரணம் சிவஞானபோதத்தில், "ஐம்பொறியி னல்லையெனு மந்தரசிவனை, ஐம்பொறியை விட்டங் கணைசகல - னைம்பொறியி, னீங்கா னீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரி, னீங்கானை நீங்கு நினைந்து" [viii, 8] என்றும், "ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யா"மென்றுஞ் சொன்னது கண்டு கொள்க. என்றும் போத மடங்கின விடத்திலே சிவனைப் பொருந்துவ னென்றும், போத மேலிட்ட விடத்திலே சிவனையிழந் திருப்ப னென்றும், "போதம் பதைப்பறவே பூரணமாம் பூரணமும், போதம் பதைத்தளவே பொய்யாகு" [ஒழிவிலொடுக்கம், பொதுவி. 47] மென்றும் முன்னோர்கள் சொன்னதுங் கண்டுகொள்க. மேற்பாடம்.

ஆற்றுத்துய ருற்றோ ரணிநிழ னசைஇ வீற்றுவீற் றெழுதர வேண்டலும் வெறுத்தலு மின்றிச் சாயைக்கு நன்றுமன் னியல்பே- வழிநடக்கிறவர்கள் பொடிச் சூட்டினாலே வருத்தப்பட்ட அவதாரத்து அழகிதாகக் குளிர்ந்த நிழலுக்கு ஆசைப்பட்டுச் சென்று வேண்டத் தக்க இடங்களிலே யிருந்திருந்து போமிடத்து இவர்கள் இங்கனே வந்திருக்கப் பெற்றதே யென்கிற பிரியமும் நம்மை விட்டுப் போனார்களென்கிற அப்பிரியமும் அந்த விருட்சத்துக் கில்லையானாற் போல ஒப்புச் சொல்லலாம் தேவரீர்க் குண்டான முறைமையையும்,

எனையை யாகுவை நினைவருங் காலே - தேவரீர் சர்வஞ்ஞனென்றிருக்கு மவதாரத்தும் அங்ஙன மருளிச் செய்தது எதாம் விசாரிக்குமிடத்து. அப்படியல்ல நீயும் நாமும் போக்கு வரவின்றி நின்ற நிலைதன்னிலே நீ நினைக்கும் பொழுது நாம் பிரகாசித்தும் நீ நினையாத பொழுது நாம் மறைந்தும் நிற்போம்,

இந்நிலை யதனி னேழையேற் கிரங்கி நின்னை வெளிப்படுத் தொளிப்பை நீயேல் - இப்பொழுது இங்ஙனம் நின்ற நிலைதன்னிற் கொச்சையா யிருக்கப்பட்ட அடியேனுக்காக் கிருபை செனித்து அடியேனிடத்திலே யெழுந்தருளி மீளவும் மறைந்து நிற்குமாயின்.— உதாரணம் சித்தியாரில், "இருஞ்சுரவிக் கெங்கு, முருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே" [xii, 4] என்பது கண்டுகொள்க. மேற்பாடம்.



அருண்மா றாகும் பெரும - தம்பிரானே தேவரீர் அனுக்கிரகவானென்கிறதுக்கு மாறுபாடுண்டாம். அஃதன்றியும்,

நிற்பெற் றவர்க்கு மூற்பவ முண்டெனுஞ் சொற்பெறும் - அப்படி யனுக்கிரகவானல்லவென்கிற தன்றியுந் தேவரீர் திருவடியை அடைந்தவர்களுக்கு மீண்டுஞ் செனன முண்டென்கிற சொல்லையு முடைத்தாயிருக்கும்.

அஃதித் தொல்லுலகில்லை - அப்படியாகையால் அனாதியே தொடங்கித் தேவரீர் திருவடியைப் பெற்ற பெரியோரென்று சிலர் உண்டாகப் போகிறதுமில்லை. ஆகையால்,

அவ்வவ் வமைவுஞ் சார்பும் - அடியேன் விண்ணப்பஞ்செய்த அந்தந்த நிறைவும் சேர்ச்சியும்,

மயர்வற - அடியேனுக்கு மயக்கந் தீரத்தக்கதாக,

சொல்லில் - தேவரீ ரருளிச்செய்யில்,

சொல்லெதிர் சொல்லாச் சொல்லே சொல்லுக - அடியேன் மறுத்து எதிருத்தரம் விண்ணப்பஞ்செய்யாதபடி யருளிச்செய்தருள வேணும்,

சொல்லிறந்தோயே - வாக்கினா லுச்சரித்தற்கும் அப்பாற்பட்ட தம்பிரானே.

அவ்வவ்விடத்திலே சிவன் நிறைந்திருக்கிறதும் ஆன்மாப் பொருந்தியிருக்கிறதும் எப்படியென்னில் [முதலாவது] உடலு முயிரும்போலவுங் கண்ணு மாதித்தனும்போலவும் ஆன்மாவும் ஆன்ம ஞானமும்போலவும் விட்டு நீங்காமற் பொருந்தியிருக்கும், அப்படி யிருக்க விட்டும் பற்றியும் வருவானேனென்னில் அனாதியே மலசம்பந்தனாகையாலே நீ நினைத்தவிடத்திலே பிரகாசிப்போம் நினையாத விடத்திலே நீங்கி நிற்போமென்று திருவுளம்பற்றினது. இரண்டாவது விட்டு நீங்காத பரிபூரண நிலையிலே ஆன்மா வந்து பொருந்தி நீங்குவனென்று சொன்னது மலபோதம் நீங்கினவிடத்திலே சிவனைப் பொருந்துவனென்றும் போதமேலிட்ட காலத்திலே சிவனையிழந்து நிற்பனென்றுஞ் சொன்னது. மூன்றாவது ஏழையாயுள்ள அடிமைக்கிரங்கி யனுக்கிரகம்பண்ணி நிற்போமென்றது பத்தியினாலே வழிபடுகிற அடியார்களுக்கு மனதபீட்டந் தீர்த்து நீங்கி நிற்போமென்று திருவுளம்பற்றின[து. ஆகையாலே விட்டும் பற்றியும் வருகிறது மூன்று பிரகரணமாகத் திருவுளம் பற்றின]துங் கண்டுகொள்க. கஉ

இங்ஙனந் தத்துவாதீதனாயிருக்கிற தேவரீர்அடியேனுக்கு இந்த மாயா கருவிக[ளாகிய வுடம்புக]ளை யுண்டாக்க அடியேன் அதனோடுங் கூடி யிருந்தும்[அதனோடே] கூடாமனின்றும் வருகைக்கு [வழியே தென்னும்] வினா மேலருளிச்செய்கின்றது.

இறந்தோய் கரணங்க ளெல்லா மெனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே-பிறந்துடனாங்
காயங் கொளவுங் கொளாமலும் கண்டதுநீ
யாயன்கொல் பாதவத் தற்று. ௧௫

மேலிதற்கு வியாக்கி.

இறந்தோய் கரணங்களெல்லாம் - கருவி கரணாதிகளைக்கொண்டு அறியும் அறிவுக்கெட்டாமல் அகன்று நிற்கிற நீ,

எனக்குச் சிறந்தோய் - அவையிற்றை யெனக்குண்டாக்கினாய்,

எனினும் - அப்படி யுண்டாக்கி யிருக்கவும்,

மெய்த்தேவே பிறந்துடனாங் காயங் கொளவுங் கொளாமலுங் கண்டது நீ - மெய்கண்ட தேவனே பிறந்துடனாய் மெய்போலப் பொருந்தியிருக்கிற சரீர மிது பொய்யென்று பொருந்தாமலும் பண்ணினது தேவரீர்,

ஆயன் கொல் பாதவத் தற்று - இடையன் வெட்டின மாம் பாதி பச்சையும் பாதி யுலர்தலும்போல, மெய்யாயிருந்த சரீரம் பொய்யென் றறிவித்து நீங்கியும் நீங்காமலிருந்தது.

அன்றியும், காயங் கொளவுங் கொளாமலும் என்பதற்கு இந்த உடல் மெய்போலிருந்தும் உற்றுப்பார்த்தளவில் பொய்போலிருக்கிறதும் என்று பொருளுரைப்பினும் அமையும். அப்படி இந்த உடல் மெய்போலிருந்தும் பொய்யா யழியுமென்றதற்குப் பிரமாணம் சித்தியார்,

"மண்டலில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வு
மெண்டரு பூத பேத யோனிகள் வாழ்வு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் கனாக்கழு திரதங் காட்டி
யுண்டுபோ லின்றாம் பண்பி னுலகினை யசத்து மென்பர்" [vi,3]

என்றும்,



"கணத்திடைத் தோற்றி மாயுங் காயமென் றறிந்தொ ருக்கால்
வணக்குறீ ரானை யென்றும் வானவர் வணங்க வைப்பன்" [ii,96]

என்றும், தேவாரத்தில்,

"வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்"

[சுந்தரர், கேதாரம், 1] என்றும்,

"இன்றுளை நாளை யில்லை யெனன்செய்வான் றோன்றி னேனே"
[அப்பர், குறைந்த நேரிசை, i, 1]

என்றும் வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க. சரீரத்திலே பொருந்தியிருக்கையிலே காய நீக்க மெப்படியென்னின் சரீரம் பொய்யென் றறிவித்துத் தீட்சைக் கிரமங்களினாலே மலங்களைப் போக்கினபடியினாலேயும் அருளில் பொருந்தினபடியினாலேயுஞ் சிவனிடத்திலே சம்பந்தமல்லாமற் காயத்திலே சம்பந்தமில்லை. உதாரணம் சித்தியாரில், "தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே சிவன்பிரகாசிக்குமிங்கே சீவன்முத்த னுக்கு, முரியமல மவுடதத்தாற் றடைப்புண்ட விடமு மொள்ளெரியி னாளிமுன்ன ரிருளுந் தேற்றின், வரு பால்சேர் நீர்மருவு கலங்கலும்போ லாகி மாயாதே தான்சத்தி மாய்ந்து காயந், திரியுமள வும்முளதாய்ப் பின்பு காயஞ் சேராத வகைதானுந் தேயு மன்றே" [xi, 4] என்பது கண்டுகொள்க. ௧௫

அடியேனுக்குப் புண்ணிய பாவங்க ளென்கைக்கு வழி ஏதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

அற்றதென் பாச முற்றதுன் கழலே
யருட்டுறை யுறையும் பொருட்சுவை நாத
வேறென் றிருந்த வென்னை யான்பெற
வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ
விருவினை யென்ப தென்னைகொ லருளிய
மனமே காயம் வாக்கெனு மூன்றி
னிதமே யகித மெனுமிவை யாயிற்
கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா
காரணஞ் சடமதன் காரிய மஃதா
லாரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினுஞ் செயலே வாரா

சான்றோர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
யத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே யொத்தகன் மத்திடை
நீங்கின வென்னை யூங்கூழ் வினைகளு
மாங்கவை யருத்துவ தாரைகொ லதனாற்
கரும மருத்துங் கடனது வின்றாந்
தருமம் புரத்தல் பெருமைய தன்றே
கண்ணி னுண் மணிய கருத்தினுட் கருத்த
வெண்ணெய் வேந்த மெய்கண்ட தேவ
விடர்ப்படு குரம்பையு ளிருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சொல்லே. ௧௬

## மேலிதற்கு வியாக்கி

தேரா துரைப்பன் றெருமா லுளத்தொடு - தேவரீர் சன்னிதியிலே ஒரு வினை விசாரியாமல் விண்ணப்பஞ் செய்கிறேன் அடியேன் விதனத்தை யுற்றவனாகையாலே. அன்றியும்,

போரா தருளுதல் பெரியோர் கடனே - பேதையாயிருக்கப் பட்டவர்கள் தாகத்தின் மிகுதியாலே தங்களுக்கு வேண்டின தொன்றை யெழுந்தது புத்தியாக விண்ணப்பஞ்செய்தாலும் அவர்கள் தாகங் கண்டு உடனே கடாட்சித் தருளுகிறது பெரியோர்களுக்கு முறைமையாகையாலு மது விசாரியாமல் விண்ணப்பஞ் செய்தேன். அதுவே தென்று கேட்டருளுகில்,

நின்னைக் கலப்ப தென்னுண்மை யெனின் - தேவரீரைக் கூடி யனுபவிக்கிறது அடியேனுடைய அற்பபோதமா மென்று தேவரீர் திருவுளம் பற்றுகில்,

நின்னது நேர்மை சொன்மனத் தின்றே - தேவரீருடைய நுட் பத்தை விசாரிக்கு மிடத்து வாக்குக்கும் மனத்துக்கும் எட்டப்பட்ட தல்லவே. அப்படியிருக்கிற தேவரீருக்குள்ளே அடங்கி யிருக்கப் பட்ட அடியேனைத் தேவரீர்,

எழுவகைத் தாதுவி னெழுதுளை யிரண்டும் பெருமுழைக் குரம் பையிற் பெய்தகத் தடக்கி நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும் விச்சை சாலவும் வியப்பு - நரம்பு எலும்பு மூளை தசை தோல் இரத்தஞ் சுக்கில மென்னப்பட்ட தாதுக்களேழுங் கண் மூக்குச் செவி உபத்தம் என்னப்பட்ட அற்பத் துவாரங்களேழும் வாய் அபான மென்னப்பட்ட பெரிய துவார மிரண்டும் ஆகத் துவார மொன்பதுமா யிருக்கப்பட்ட சரீரத்திலே யிட்டு உள்ளே யொடுக்கி வைத்து,

'நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி' யென்பதனை 'என்றனைப் போக்கற நிறுத்தி நீக்கி' யென்று பொருளுக்கேற்க மாற்றுக. பொருளாவது அடியேன் அந்தச் சரீரத்தை விட்டுப் போகாமல் நிறுத்தி வைத்து அதனை விட்டுப் போமவதாரத்து விடுவிப்பதுஞ் செய்து,

இச்சை முதலிய வெழுப்பி நடத்திடும் விச்சை சாலவும் வியப்பு - அடியேனுக்கு உண்டாயிருக்கப்பட்ட இச்சாஞானக் கிரியைகளையும் பிரேரிப்பித்துக் காரியப்படுத்துகின்ற வித்தை மிகவுங் கொண்டாட்ட மா யிருந்தது,

அது நிற்க - இங்ஙனந் தேவரீர் செய்தருளின காரியம் அடியேனாலேயோ புகழப்பட்டிருப்பது அது நிற்கட்டும்,

வாக்கு மனமும் போக்குள தனுவுஞ் சொல்லு நினைவுஞ் செய்யுஞ் செயலும் நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து - அடியேன் வாக்கினாற் சொல்லுகிறதினாலும் மனத்தினால் நினைக்கிறதினாலும் காயத்தினாற் செய்கிற தொழில்களினாலு முண்டாகப்பட்ட நன்மை தீமைகளா யுள்ள புண்ணிய பாவங்க ளெல்லாந் தேவரீர் திருவுளத் தடைத்தருளி,

முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றாய்க் காலமுந் தேசமு மாலற வகுத்து நடுவுணின் றருத்தலி னடுவனு குதியே - அடியேன் செய்து வந்த அடைவுக்குத் தவறு வாராமல் அதற்கதற்கு ஏற்றக் குறைச்சலற அந்தப் புண்ணிய பாவங்களை யனுபவிக்கத் தக்க காலங் களையும் அவையிற்றைப் புசிக்கைக் கிருப்பிடமான தேசங்களையும் மயக்கமற வகுத்து அடியேனையும் அந்தக் கன்மங்களையுங் கூட்டித் தேவரீர் நடுவனாக நின்று புசிப்பிக்கையினாலே தேவரீரை நடுவனென் கிறது முண்டே. ஆகையினாலே,

சான்றோர் செய்தி மான்றிருப்பின்றே - நடுவாயிருக்கப்பட்ட பெரியோர்க ளியல்புக்கு மயக்க முண்டாகாதே,

பொய்யை மெய்யெனப் புகன்று - அசத்தியமா யிருக்கப்பட்ட தேகாதிப் பிரபஞ்சத்தைச் சத்தியமென்று சொல்லிக்கொண்டு,

வையத் தொடா பூட்கை நாடி நாடா வென்னுட் கரந்து - பிரபஞ்ச வியாத்தி பண்ணுகிறதே மேற்கோளாக விருப்பத்தைச் செய்து நமக்கொரு கர்த்தா உண்டென்று விசாரியாதபடி எனக்குள்ளே மறைந்து நின்று,

என் பின்வந் தருளி - யான் செய்யுஞ் செயலுக்கெல்லாம் ஒத் தொழுகி நின்று,

என்னையுந் தன்னையு மறிவின் றியற்றும் என்ன தியானெனு மகந்தையுங் கண்டு - நாம் ஒரு அடிமையென்றுந் தான் ஒரு நாயனென்றும் அறியாமற் செய்கிற யானெனதென்னும் அகந்தையுங் கண்டு,

யாவ ரியாவையு மியாக்கணுஞ் சென்று - உயர்திணை யஃறிணையாகிய யோனி பேதங்களினும் பூமி யந்தர சுவர்க்கமென்கிற உலகங்களிலும் என்னோடொக்கச் சென்று,

புக்குழிப் புக்கு - நான் சென்று சேனிக்கிற இடங்களிலே தானும் ஒக்கப் புகுந்து,

பெயர்த்துழிப் பெயர்த்து - நான் விட்டுப்போகிறவிடத்துத் தானும் ஒக்கப் பெயர்ந்து,

மிக்க போகம் விதியால் விளைத்து - வெகு வித போகங்களையும் எனக்குள்ள முறைமையின்படியே யுண்டாக்கி,

இங் கெற்பணி யாளாய்-இவ்விடத்து என்னை ஊட்டி யுறக்கி நிற்கிற பண்ணையாளுமாய்,

எனைப் பிரியாதே - என்னைவிட்டு நீங்குவதுஞ் செய்யாமல்,

ஓடி மீன்கொள வாடல் பார்த்திட் டடங்கழி நின்றனைத்தை யன்றே - நான் செனன மரணப்பட்டுப் போக்கு வரவு செய்கிற நாடகத்தையும் பார்த்துத் தன் முதன்மையும் விட்டு என் வசத்திலே நின்றான் எம்முடைய சுவாமியா யுள்ளவன் இது ஆச்சரியம்!—இந்த நிலை பெத்தம். மேல் முத்தி. அன்றே - ஐயோ என்பதாச்சரியம்.

அருள் மிக வுடைமையின் - தனக்குக் கிருபை மிகுந்திருக்கையினாலே,



அருட்டுறை வந்து - திருவெண்ணெய் நல்லூராகிய திருப்படை வீட்டிலே திருவவதாரஞ் செய்தருளி,

பொருள்மிக வருள்தலும் - சிவானுபவமாகிய பொருளானது மிகுதியாக நின்று அனுக்கிரகிக்கிறதையும்,

பொய்ப்பகை யாதலும்-அந்தப் பொருள் பிரபஞ்சமாகிய பொய்யைக் கடிந்து தீர்க்கிற வழக்கையும்,

கைகண்டு கொள்ளென-பிரத்தியட்சமாகக் கண்டுகொள்ளெனக் காட்டியருளி,

கடலுல கறிய மெய்கண்ட தேவ னெனப்பெயர் விரீஇ - சமுத்திரஞ் சூழ்ந்த வையகத்தா ரறியத்தக்கதாக மெய்கண்ட நாதனென்கிற திருநாமத்தினையும் பரப்பியருளி,

தன்னுட் கரந்து தான்முன் னாகி - தன்னுடைய பேரறிவினுள்ளே என்னுடைய சிற்றறிவை யடக்கிக்கொண்டு தன் செயலே மேலீடாக,

தன்னருந் தானுமா யென்னையின் றாக்கி - தன்னுடைய அருளுந் தானுமாய் என்னையும் என்னுடைய ஞானத் தோற்றத்தையும் அடக்கிப் போட்டு,

தன்னையு மென்னையுந் தந்து - தான் ஒரு முதலுண்டென்கிறதுங் கெடாமல் நானொரு முதலுண்டென்கிறதுங் கெடாமல் எனக்குப் புலப்பட அறிவித்து,

தனது செய்யா மையு மென்செய லின்மையும் - தான் சர்வமுங் காரியப்படுத்தி நிற்கச்செய்தே தானொன்றிலுஞ் சுட்டியறியாமல் தோய்வற நிற்கிற முறைமையினையும் நான் சர்வமுஞ் செய்து நிற்கச் செய்தே என்னால் ஒன்று முடியாதென்கிற செயலறுதியையும்,

எம்மான் காட்டி யெய்தல் - எம்முடைய சுவாமியா யிருக்கிறவன் எனக்குத் தரிசனப்படுத்திநின்ற முறைமையைப் பார்த்தவிடத்து,

அம்மா வெனக்கே அதிசயந் தருமே - மிகவுங் கொண்டாடப்பட்டு எனக்குத் தானே ஆச்சரியத்தையுந் தாராநிற்கும். ௧௮

இங்ஙனம் பாசக்ஷயம் பண்ணின ஆச்சரியத்தை மேலும் அருளிச்செய்கிறது.

வாய்ந்து, நின்றதோ ரலகை நேர்ந்தா னிகழ்வதெ னதுபோ லுள்ளத், தொன்றிய வுணர்வு தம்பா லுள்ளது நிகழ்த்து மீசன், தன்றொழில் நடத்து மேனி தனக்கெனக் கொண்டு தானே '' [ix, 2] என்றும், "உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" [சித்தியார், xi, 10] என்றும், "நாழிகொள்ளா தாழியி னலைபுன, லதனுற் கருத்து முதலுள தாக, வேண்டும்" [சங்கற்பநிராகரணம், சிவசமவாதி நிராகரணம், 65, 66] என்றும் வரும் எதுக்களைக் கண்டுகொள்க.

இனி, என்னது பெருமை யெல்லா மெய்தி யென்றதற்கு ஆன்மாவுக்குள்ள இச்சாஞானக் கிரியைகளையும் வியாத்தி வியாபகங் களையுஞ் சிவன் உள்ளே யடக்கிக்கொள்ளுவன் என்பதற்குப் பிரமா ணம் ஏதென்னில் சித்தியாரில், "இரும்பைக் காந்தம் வலித்தாற் போ" லென்னுஞ் செய்யுளிலே,

"விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடங்கி"

[xi, 12]

என்பது கண்டுகொள்க.

இனி, தன்னை யெனக்குத் தருவதை யன்றியும் என்றதற்குத் தன்னுடைய ஆனந்த சொரூபத்தை யெனக்குத் தருவதுமன்றியே என்று பொருள்கூறியதற்குப் பிரமாணம் சித்தியாரில், "இந்தனத்தி னெரிபாலினெய்" என்னுஞ் செய்யுளிலே, "தானுக்கித் தன்னுருவப் பரப்பெல்லாங் கொடுபுகுந்து பதிப்பனிவன் பாலே" [ix, 12] என்றும், திருவாசகத்தில்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுர்த்த
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதின் றென்பால் ''

[கோயிற்றிருப்பதிகம், 10]

என்பதுங் கண்டுகொள்க.

இனி, என்னையு மெனக்குத் தந்து என்றதற்கு அந்தச் சிவானுபவத்தை யனுபவிக்கிறது சிற்றறிவுங் கெடாமல் என்று பொருள் கூறிய தேதென்னில் சிற்றறிவு கெடாம லனுபவிப்பா ரில்லாதாகையால் அப்படிச் சொன்னதென வறிக.

# பிரிவாற்றாமை

நமது சமாஜத் தலைவர்களுள் ஒருவரும் சென்னை அரசாங்கத்து மாஜி மந்திரியும் ஆகிய சைவத் திருவாளர் திவான் பகதூர் சர். டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள் சிவபதமடைந்த செய்தியையும் சமாஜத்தின் பிரிவாற்றாமையையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

வெளிவந்துவிட்டது ! வெளிவந்துவிட்டது ! !

# சிவகுமாரர்கள் தேவாரம்

தேவாரத்துள் கணபதி, முருகர் பற்றிய குறிப்புக்கள் வந்துள்ள பாடல்கள் எல்லாம் அடங்கியுள்ள சமாஜத்தின் அடக்கவிலைப் பதிப்பு. தனிப் பிரதி மூன்று பை. பத்து பிரதிகள் விலை அணா இரண்டு. தபாற் கூலி வேறு. வேண்டுவோர் முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதுக.

---

## திருமுருகாற்றுப்படை

மூலமும் மிகத் தெளிவான பதம்மருவிய பொழிப்புரையும் பல புதிய திருத்தங்களோடு வெளிவந்தாயிற்று. தனிப்பிரதி விலை அணா ஒன்று. இருபது பிரதிகள் விலை ரூபாய் ஒன்று. · தபாற்கூலி வேறு.

---

## தேவை

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் வித்துவான்பட்டம் பெற்றவரும், தமிழிலும் சைவத்திலும் நிரம்பிய பற்றுள்ளவரும், தமிழ் நூல்களையும் சைவசமய நூல்களையும் உடனிருந்து படிக்க விரும்புபவருமாகிய ஒருவர், சைவத் திருவாளர் திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார் அவர்களுடன் நாடோறும் மூன்று மணி நேரம் சைவ நூல்கள், தமிழ் நூல்களைப் படிப்பதற்குத் தேவை. ஆங்கிலப் பயிற்சி, வடமொழிப் பயிற்சியுடைமை விசேடத் தகுதியாகக் கருதப்படும். இப்போது உள்ள உத்தியோகம், எதிர்பார்க்கும் ஊதியம் முதலிய எல்லா விபரங்களையும் திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார், கோபதி நாராயணசாமி செட்டி ரோட், தியாகராயநகர், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதி விண்ணப்பம் செய்க.

உன்னளவில் காட்சி காட்டி - ஆன்ம போதத்தால் அளவுபடுத்த வொண்ணாத உன்னுடைய இயல்பினையும் அடியேனுக்குத் தரிசனப் படுத்தி,

எற்காட்டினை - அடியேனுடைய இயல்பினையுந் தரிசனப் படுத்தினாய்,

எனினும் - அப்படித் தரிசனப்படுத்தினா யானாலும்,

காட்டியென் னுண்மையும் பெருமையும் நுவலில் - தேவரீர் அறுதிப்படுத்தி யருளிச்செய்யப்பட்ட அடியேனுடைய சொரூபத்தை யையும் வியாத்தத்தையும் விண்ணப்பஞ் செய்யுமிடத்து,

அண்ணல் பாதாள சத்தி பரியந்தமாக - தம்பிரானே பாதாள சத்தி முடிவாக,

ஓதியுணர்ந்த நானே யேக முழுத்து நின்றனனே - நூல்களைக் கற்றறிந்து அடியேனறிவுசென் றறியப்பட்டவிடமெல்லாம் அடியேன் தானே முழுதும் வியாத்தமாய் நின்றதுண்டே,

முதல்வ - சருவான்மாக்களுக்கும் ஒருமுதலாகி நின்றுணர்த்து கிற கத்தாவே,

முழுத்தும் - அப்படி யோதியுணர்ந்த விடமெங்கும் அடியேன் வியாத்தியா யிருக்குமிடத்தும்,

புலன்கடைப் பூழை நுழைந்தனன் - ஒன்றை யறியுமிடத்துச் சோத்திராதிகளாயுள்ள அற்பத் துவாரங்களாகிய புலன்களோடுங் கூடி யறிந்தேன்,

கலங்கி யாங்கைந் தவத்தையு மடைந்தனன் - அடியேனறிகிற அறிவையும் விட்டு மயங்கி அவ்விடத்திலே சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் அதீத மென்னப்பட்ட அஞ்சவத்தைகளும் பட்டு நின்றனன். அன்றியும்,

நீங்கிப் போக்குவரவு புரிந்தனன் - அப்படிக்கூடி வாதனைசெய்து நிற்கிற சரீரத்தையும் விட்டு நீங்கி மீளவுமொவ்வொரு சரீரங்களை வந்தெடுப்பதுஞ் செய்தேன்,

தூக்கி - இவையிற்றைத் திருவுள்ளத்திலே யாராய்ந்து பார்த் தருளி,

எவ்விடத்துண்மையும் - அடியேன் ஓதி யுணர்ந்த விடமெங் கும் அடியேன் வியாத்தமா யிருக்கிறதும்,



இவ்விடத்தார்தலும் - இப்பொழுதிந்தச் சரீரத்தோடுங் கூடி நின்று சீவிக்கிறதும் அவத்தைப்படுகிறதும்,

செல்விடத்தெய்தலும் - இந்தச் சரீர தொந்தனைவிட்டுப் புண் ணிய பாவங்களுக் கீடான சுவர்க்க நரகங்களிலே சென்றனுபவிக் கிறதும்,

தெரித்த மூன்றினு ளொன்றெனக் கருளல்வேண்டும் - தேவரீர் இவை மூன்று பகுதியிலும் இதுவாயிருக்கும் ஆன்மாவி னுண்மை யென்று ஒன்றை அடியேனுக்குத் தெரிய அருளிச் செய்தருள வேணும். அப்படி ஒன்றைச் சொல்லுகிறதென்ன மரபு அவை மூன்று பகுதியும் ஆன்மாவுக் குடையதல்லவோ என்று திருவுளஞ் செய்யுமானால்.—அதற்கு உதாரணம் சித்தியாரில் "சூக்கும தேகி யாகித் தூலரு பத்தின் மன்னிச், சாக்கிர முதலா யுள்ள வவத்தை யுட் டங்கி யெங்கும், போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங் கள் பாவ, மாக்கியும் பலங்க ளெல்லா மருந்தியு நிற்கு மான்மா" [iv,22] வென்பது கண்டுகொள்க.

என்று மில்ல திலதா யுள்ள துளதெனுஞ் சொல்லே சொல் லாய்ச் சொல்லுங்காலை - எக்காலத்து மொவ்வொன்றி னியல்புதனைச் சொல்லுமிடத்து இல்லாதது இல்லாததே உள்ளது உள்ளதே யென்று சொல்லுகிற சொல்லே அறுதிப்பட்ட சொல்லாகச் சொல்லுமிடத்து,

சிறுத்தலும் பெருத்தலு மிலவே - ஒரு முதலாயிருக்கப்பட்ட ஆன்மா ஓர் அவதரத்திலே சிறுத்தும் ஓர் அவதாரத்திலே பெருத்தும் வர வழக்கில்லையே,

நிறுத்தி யானை யெறும்பி னனது போல் - அது நிற்க அப்படிச் சிறுத்தும் பெருத்தும் வாராது எப்பொழுதும் ஒருதன்மையாய் வியாத்தமா யிருக்குமிடத்தும் யோனி சம்பந்தஞ்செய்து அது வதுவாய் நிற்கிறது ஆனையாய் நின்ற ஆன்மா எறும்பானாற்போ லிருக்கும்,

எனில் - என்று தேவரீ ரருளிச்செய்யில்.—உதாரணம் சிவஞான போதத்தில் "மாயா தனுவிளக்காய் மற்றுள்ளங் காணாதே, லாயாதா மொன்றை யதுவதுவாய்" [iv, 5] என்றது கண்டுகொள்க.

ஞானமன்றவை காய வாழ்க்கை - தேவரீ ரருளிச்செய்தது அடியேன் கேட்ட அறிவையல்ல சரீரத்தின் வழக்கைச் சொல்லலாம் அத்தனை,

மற்றவை யடைந்தனவுள - நாம் அப்படிச் சொன்னதும் அறிவாயுள்ள ஆன்மாக் கன்மத்துக்கேற்ற ஒவ்வொரு சரீரங்களோடுங் கூடி அதற்கேற்ற அறிவு சீவித்து நிற்குமென்று சொன்னோம்.—அதற்கு உதாரணம் சிவப்பிரகாசத்தில் "செறிந்திடு முடலுள் மன்னிச் சேர் புலன் வாயில் பற்றி, யறிந்ததி லழுந்து" [iii, 2] மென்பது கண்டு கொள்க.

எனில் - என்றருளிச் செய்யில்,

அற்றன்று - அது அப்படியன்று, அதுவென்னென்று கேட்டருளுகில்,

விட்ட குறையி னறிந்து தொன்று தொட்டு வந்தன வென வேண்டும் - அப்படிக் கூடின கூடின யோனிக்குத் தக்க வறிவாயிருக்குமே யானால் முன்னெ யெடுத்தெடுத்து விட்டுவந்த யோனிகளை இன்னதின்னதல்லவோ வென்றறிய வேணும். அப்படியல்ல கூடின யோனிக்குத் தக்கதாக ஆன்மா அறிந்து சீவித்து நிற்குமென்று நாம் சொன்னது அந்தந்த அவதாரந்தோறும் எடுக்கப்பட்ட சிறிய யோனிக்கும் பெரிய யோனிக்குந் தக்க வறிவாக அறிந்து சீவிக்கிறதையாயிருக்கு மென்று தேவரீர் அருளிச் செய்யில்,

நட்ட பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு முரியது நினக்கே யுண்மை - தேவரீர் கூடினதின் தன்மையென்று நாட்டப்பட்ட பெரிய யோனிக்குத் தக்கதாகப் பெருத்தறிந்துஞ் சிறிய யோனிக்குத் தக்கதாகச் சிறுத்தறிந்தும் வருகிற சுதந்தரம் அணுவுக்கணு வாயும் மகத்துக்கு மகத்துமா யிருக்கிற தேவரீருக்கே யுள்ளது.

பெரியோய் - மகத்தாயிருக்கப்பட்ட தம்பிரானே,

எனக்கின்றாகும் - அந்த வழக்கு அடியேனுக் கில்லையாம்,

என்று மனக்கினியாய் இனி மற்றது மொழியே - எக்காலத்தும் எம்மனத்துக் கினிமையா யிருக்கப்பட்ட தம்பிரானே இன்னந்தானாகிலு முன்னே கேட்கப்பட்ட வினாவுக்கு விடையருளிச் செய்தருள வேணும்.—ஆத்மாவின் இயல்பு எப்படியென்னிற் படிகம்போல அடுத்ததின் றன்மையாக விருக்குமென்றும் வசித்தலைப்பற்றின வியாபகனென்றும் அதுவதுவாய் நிற்ப னென்றுஞ் சொல்லப்படும். உதாரணம் சிவப்பிரகாசத்தில் "ஓர்விடத் துணரு முண்மை யொளிதரு முவலம் போலு" [iii, 9] மென்றும், சித்தியாரில் "வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய னாகி" [iv, 20] யென்றும் வருவது கண்டுகொள்க. ரு

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மா அவத்தைப் படுமிடத்து ஒரு அவத்தை கண்டொழிய மற்றுள்ள அவத்தை நாலும் அடியேனாலறியப்பட்ட தில்லையேயென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

மொழிந்த வவத்தை முதலடியே னின்றாங்
கொழிந்தன நான்கு முணர—விழிந்தறிந்
தேறிற்றிங் கில்லை யெழில்வெண்ணெய் மெய்த்தேவே
தேறிற்றென் கொண்டு தெரித்து. எ

## மேல்வியாக்கி.

மொழிந்த வவத்தை - சொல்லப்பட்ட அவத்தைகளைந்திலும்,

முதலடியேனின்று - முதலவத்தையாகிய சாக்கிரத்திலே அடியேன் நின்றதுண்டு,

ஆங்கொழிந்தன நான்கும் - அந்த சாக்கிரத்தைத் தவிர மற்றுண்டான சொப்பனஞ் சுழுத்தி துரியம் அதீதம் என்னப்பட்ட நாலவத்தையும்,

உணரவிழிந் தறிந்தேறிற்றிங்கில்லை - அடியேனுக்கு நினைவுண்டாம்படி ஒவ்வொன்றாக இறங்கினது மில்லை அறிந்தேறினதும் இவ்விடத்திற் கண்டதில்லை,

எழில் வெண்ணெய் மெய்த்தேவே - அழகினையுடைய திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்டநாதனே,

தேறிற்றென் கொண்டு தெரித்து - அந்த அவத்தைநாலு முண்டென்று தேவரீர்க்கு அறுதி வந்தது எது பிரமாணங் கொண்டறிந்தது.—உதாரணம்: "பிறிந்திடா வஞ்சவத்தை பெருகிய மலத்தாற் பேணி" யுறுமாகையாலே சுத்ததத்துவங்கள் நீங்கின விடத்திலே அஞ்சவத்தையும் படுமென்று அனுமானப் பிரமாணத்தினாலே யறிகவென்றவாறு. எ

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மா ஒன்றுண்டென்கிறதைத் தெரிசித்தவழி யேதென்னும் வினு மேலருளிச் செய்கின்றது.

தேரித்ததென் கொண்டனே யுருத்திர பசுபதி
செடிய னேனையு மடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவுகாட் டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணெய் மெய்ய
வவத்தையிற் றெரித்தன னுகி லவத்தை
தெரிந்தாங் கிரித்தலு மிலனே திருத்துங்
கால முதலிய கருவி யாயின்
மாலும் பிரமனும் வந்தெனை யடையா
ரோதுங் காலை யொன்றையொன் றுணரா
சேதந மன்றவை பேதைச் செயலிச்
சேதந மானுற் செயல்கொள வேண்டுநற்
போத மிவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்று
மொருவுவ தறியே னுணர்வில னுதலி
னிற்கொடு கண்டன னுயினெற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங் கேண்மோ மன்ன நின்னின்
முன்ன மென்ற னுணர்வில னுதலி
னென்னைக் காண்பினுங் காண்பல காணு
துன்னைக் காண்பினுங் காண்பல வுன்னே
டொருங்கு காண்பினுங் காண்பல வருந்துணை
கண்ட வாறே தெனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே. அ

**மேலிதற்கு வியாக்கி.**

தெரித்ததென் கொண்டனை யுருத்திர பசுபதி செடியனே னையு மடிமைசெய்யப் படிவங்கொண்டு வடிவு காட்டில்லாப் பெண்ணை யாளும் வெண்ணை மெய்ய என்பதனை உருத்திரபசுபதி செடியனே னையு மடிமை செய்யப் படிவங்கொண்டு வடிவுகாட்டில்லாப் பெண்ணை



யாளும் வெண்ணெய்மெய்ய தெரித்ததென் கொண்டனை யென்று பொருளுக்கேற்க மாறுக. பொருளாவது:

உருத்திர பசுபதி உருத்திர மூர்த்தியுமாய் ஆன்மாக்களுக் கெல்லா முயிர்க்குயிராய் நின்று இரட்சித்தருளுகிற கத்தாவா யிருக் கப்பட்டவனே,

செடியனேனையும் - முடலை யாக்கையோடுங்கூடிச் செனன மரணத்திலே கிடந்தழுந்துகிற அடியேனையும்,

அடிமைசெய்யப் படிவங் கொண்டு - அடியேனைத் தேவரீர் திரு வடிக் குரித்தாக்கிக் கொள்ளவேண்டி அடியேனைப்போல் வடிவை யெடுத்துக் கொண்டு,

வடிவு காட்டில்லாப் பெண்ணையாளும் - தேவரீர்க் குண்டா கிய தன்மை வடிவை யொருவற்குங் காட்டாத நீ பெண்ணைக்குக் கத்தாவாய்,

வெண்ணைமெய்ய - திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,

தெரித்ததென் கொண்டனை - அடியேனென் றொருமுதலுண் டென்கிறதை யறியப்பட்டது எது பிரகாரமாக வென்றருளிச் செய்த ருள வேணும்,

அவத்தையிற் றெரித்தனனுகில் - அடியேன் சாக்கிரஞ் சொப் பனஞ் சுழுத்தி துரியம் துரியாதீதமென்று சொல்லப்பட்டு வருகிற பஞ்சவத்தையும்பட்டு வருகையினுலே அதுகொண்டே யவத்தைக்கு வேறு யடியேனென்றொரு முதலை அறியப்பட்டதென் றருளிச் செய் யுமாயின்.—அதற்கு உதாரணம் சித்தியாரில் "படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லிற,கடைதொறும் விட்டு விட் டுக் காவலு மிட்டுப் பின்னை,யடைதருந் தனியே யந்தப் புரத்தினி லது போ லான்மா, வுடலினி லைந்த வத்தை யுறுமுயிர் காவ லாக" [iv, 32] வென்று நாலாஞ் சூத்திரத்திலே அவத்தைப்பட்டு வருகிற எதுவி னுலே ஆன்மாவுண்டென்று சாதித்ததுங் கண்டு கொள்க.

அவத்தை தெரிந்தாங் கிரித்தலு மிலனே - அடியேன் அப் படி யவத்தைப்பட்டுப்பட்டு வருகிறதேயுண்டாமாகில் அப்படி மறைக் கப்பட்டுவருகிற அந்த அவத்தையு மின்னதென்று கண்டு அவ்விடங்

களிலே அவையிற்றை அடியேன் அறிந்து நீக்கிக் கொண்டேனு மில்லையே,

திருத்துங் காலமுதலிய கருவியாயின் - அப்படி மலத்தையின் மறைப்பை நீக்குகிறது கால நியதி கலை முதலாகச் சொல்லப்பட்டு வருகிற கருவிகளென் றருளிச்செய்யுமாகில்.—உதாரணம் "இத்தகைமை யிறையருளா லுயிரறியு மறிவுக் கீடாக வாடாதே யீரிரண்டா லுரைத்த, வித்தைமுத லைவரால் விளங்கு ஞான மேவியிடு மெனவுரைப் பாசுத்த மாயை, வைத்தகலை தான்மூலஞ் சிறிதே நீக்கி மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப், புத்திதர வித்தையிடை நின்றறிவை யுயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே" [சிவப்பிரகாசம், ii, 21] என்பது கண்டுகொள்க.

மாலும் பிரமனும் வந்தெனை யடையார்-அப்பொழுது சிருட்டிக்குந் திதிக்குங் கத்தாவாயிருக்கப்பட்ட பிரமா விட்டுணுக்கள் அடியேனைக் கூடி நின்றுணர்த்துகிற தில்லையாம். அன்றியும்,

ஓதுங்காலை யொன்றை யொன்றுணரா-அந்தக் கருவிகளி னியல்பைச் சொல்லுமிடத்து ஒரு கருவியை ஒரு கருவி யறியாது. அன்றியும்,

சேதனமன்றவை பேதைச்செயல்-அந்தக் கருவிகள் அறிவுள்ளதுமல்ல அறியாமையா யிருப்பதொன்று.—அப்படியல்ல ஆன்மா அறிவாயிருப்பதொன்று அந்தக் கருவிகளோடுங் கூடில் அவை சேட்டைப் படுமென்றருளிச் செய்யில். உதாரணம் "தனக்கென வறிவிலா தான்றத்துவ வன்ன ரூபன், றனக்கென வறிவா னாவிச் சகலமு நுகருந் தானே" [சிவப்பிரகாசம், v, 2] என்பது கண்டுகொள்க.

இச்சேதன மானுற் செயல் கொள வேண்டு நற்போக மியற்றைப் புணர்வதை யறியேன்-அப்படி அடியேன் அறியும் பகுதிக்குரியவனுமாய் அந்தக் கருவிகளின் பயனைக் கொள்ளத் தக்கவனுமாயிருக்கில் அடியேனுடைய அறிவு அந்தக் கருவிகளைக் கூடுகிறதை அறிகின்றேனில்லை. அன்றியும்,

கருவித்திரளினுங் காண்பதோ ரொன்றும் - அந்தக் கருவிகளெல்லாங் கூடின சாக்கிரத்தானத்திலுஞ் சத்தாதி விடயங்களை யறியுமிடத்து ஒவ்வொரு விடையங்களாக அறிகிறதொழிந்து ஐந்தையு மொக்க அறிந்ததில்லை. அன்றியும்,



ஒருவுவதறியே னுணர்விலனாதலின் - அப்படி நின்று சீவிக்கிற அவதரத்து அந்தக்கருவிகள் நீங்குகிறதையு மறிகின்றேனில்லை அறிவிலாதவனாகையாலே.—அப்படி யொன்றுகளை யறியுமிடத்து நீயாகத் தனித் தொன்றையும் அறிய மாட்டாய். நாமறிவித்தானீயறிவை யத்தனை யென்றருளிச்செய்யில்.—உதாரணம் "இருணனி யிரவி தான்வந் திரித்தலு மிரவி யெண்ணும், பொருணிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறுபோல, மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்துயிர் தன்னுள் மன்னு, மருளையு மொழிய ஞாலத் தறிந்தவா றறியுமன்றே" [சிவப்பிரகாசம், v, 4] என்பது கண்டு கொள்க.

நிற்கொடு கண்டனனாயி னெற்குக் கருவியாயினை பெருமையுமிலவே-அப்படி அடியேன் அறிகிற தெல்லாந் தேவரீரறிவித்தாலறிவேனாமாகில் அப்பொழுது தேவரீரை யடியேனுக்குக் கருவியென்று சொல்லவும் படும் கத்தாவென்கிற பெருமையுந் தேவரீருக் கில்லையாம். ஆகையால்,

யானே பிரமங் கோனே வேண்டா - அடியேன் தானே கர்த்தாவென்று சொல்லப்படும் தேவரீரை யடியேனுக்குக் கத்தாவென்ன வேண்டுவதுமில்லை. அதுவன்றியும்,

இன்னுங் கேண்மோ மன்ன - அடியேன் விண்ணப்பஞ் செய்யத்தக்கது இன்னமு மொன்றுண்டு அது வேதென்று கேட்டருளுகில்,

நின்னின் முன்னமென்ற னுணர்விலனாதலின் - அப்படித் தேவரீர் அறிவிக்க அடியேனறிந்தேனாமாகில் அங்ஙனம் நின்றறிவிக்கிற தேவரீரை எதிர்ப்பட்டு நின்று இது வல்லவோ நம்மை யறிவிக்கிற முதலென்று அறிய மாட்டுகிறேனில்லை அடியேனறி வில்லாதவனாகையாலே,

என்னைக் காண்பினுங் காண்பல காணு தன்னைக் காண்பினுங் காண்பல வுன்னோ டொருங்கு காண்பினுங் காண்பல - அடியேனை யறிய வென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை அதுவன்றியுந் தேவரீரை யறிய வேண்டிலு மறியப்படும் பகுதியுமில்லை அதுவன்றியுந் தேவரீரோடு மடியேன் கூடியறிய வென்றாலு மறியப்படும் பகுதியுமில்லை,

அருந்துணை கண்டவாறே தெனது கண்ணே யண்ட வாணை வருட் பெருங் கடலே என்பதனை அருந்துணை யெனது கண்ணே யண்டவாண வருட்பெருங் கடலே கண்டவாறேது என்று பொருளுக் கேற்க மாறுக. பொருளாவது: அடியேனுக்கு அரிய துணையா யிருக்கப்பட்டவனே அடியேனுக்குக்கண்ணாகிய அறிவாயிருக்கப்பட்டவனே தேவர்களுக்குங் கத்தாவாயிருக்கப்பட்டவனே அருள் வெள்ளத்தை நின்னடியவர்க்குக் கொடுத்தருளுகிற சமுத்திரமாயிருக்கப் பட்டவனே அடியேன் என்னைத் தரிசிக்கப்பட்டது எது பிரகாரங் கொண்டு.

அதற்கு விடையம் ஆன்மாத் தனக்குச் சுதந்தரமில்லை யென்கிறதை யறிந்து தான் அந்த ஞானமாய் நிற்கவே தன்னைத் தரிசிக்கலா மென்றவாறு. உதாரணம் சிவப்பிரகாசத்தில் "தன் னறிவதனாலேதுந் தனக்கறி வில்லை யேனுந், தன்னறி வாக வெல்லாந் தனித்தனி பயன ருந்துந், தன்னறி வறியுந் தன்மை தன்னாலே தனை யறிந்தாற், றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே" [viii, 2] என்றும், [திருவிடைமருதூர்] மும்மணிக்கோவையில் "மாயப் படலங் கீறித் தூய, ஞான நாட்டம் பெற்றேன் பெற்றபின், றன்னையு மென்னையுங் கண்டேன்" [13] என்றும், சிவஞானசித்தியாரில் "அடி ஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத், தூரியனுஞ் சிவந்தோன் றுந் தானுந் தோன்று" [viii, 28] மென்றும் கண்டு கொள்க. ௮

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஆன்மா மூலாதாரத்திலே யொடுங்கி யதீதப்பட்டுக் கிடக்கு மவதரத்து உணரு முறைமை யெப்படியென் னும் வினா மேலருளிச் செய்கின்றது.

> கடலமுதே வெண்ணெய்க் கரும்பேயென் கண்ணே
> யுடலகத்து மூலத் தொடுங்கச்—சடலக்
> கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
> மருவியா தென்றுரைக்க மன்.

**மேல்வியாக்கி.** ௬

கடலமுதே - சமுத்திரத்திலே யுண்டாகப்பட்ட அமிர்தம்போல இனியவனே,

வெண்ணெய்க் கரும்பே-திருவெண்ணெய்நல்லூரிலே யுண்டாகி யிருக்கப்பட்ட கரும்புபோல இனியவனே,



என்கண்ணே - அடியேனுக்குக் காட்டாயிருக்கப்பட்ட கண் போல உரியவனே,

உடலகத்து மூலத்தொடுங்க - அடியேன் அவத்தைப்படும் அவதரத்து தேகத்துக்குள்ளே மூலாதாரத்திலே ஒரு கருவிகளுங் கூடாதே யதீதப்பட்டுக் கிடக்கிற அவதரத்து அடியேன் உணருகைக்கு,

சடலக் கருவி யாதாங்குணர்த்த-சரீரக் கூட்டமாக நின்றுணர்த் தின கருவி எது,

காண்பது தானென்னை மருவி - அடியேன் அறிகிறதுதான் எதோடுங் கூடி,

யாதென்றுரைக்க மன் - தேவரீர் அடியேன் விண்ணப்பஞ் செய்ததற்கு இதுவென்று விளங்க அருளிச் செய்தருளவேணும்.

விடையம் ஆன்மதத்துவம் ௨௪ வித்தியாதத்துவம் ௭ சிவதத்துவம் ௫ இதுக்குப் போககாண்டமென்றும் போக்கிய காண்டமென்றும் பிரேரகாண்ட மென்றும் பேர். ஆன்மதத்துவ மிருபத்து நாலு முட்கருவியும் புறக்கருவியுமாய்த் தேகமாய்ப் பொருந்திச் சிவதத்துவங்கள் கலாதிகளைப் பிரேரித்து அறிவிக்கும் என்றவாறு. உதாரணம் சித்தியாரில் "வாயாதி சோத்திராதி புறத்துவாழ் கருவி யாகு, மோ யாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகு, மாய்வார்கட் கராகமாதி யவற்றினுட் கருவி யென்பர், மாயாடன் வயிற்றி வற்றூற் றுடக்குண்டு வாழு மான்மா" [ii, 63] வென்றும், போற்றிப் பஃறொடை வெண்பாவில் "மூலவருங் கட்டிலுயிர் மூடமா யுட்கிடப்பக், கால நியதி யது காட்டி-மேலோங்கு, முந்திவியன் கட்டிலுயிர் சேர்த்துக் கலைவித்தை, யந்த வராக மவைமுன்பு-தந்த,தொழிலறி விச்சை துணையாக மாணி, னெழிலுடைய முக்குணமு மெய்தி-மருளோடு, மன்னு மிதையத்துச் சித்தத்தாற் கண்டபொரு, ளின்னபொரு ளென்றறிய வொண்ணா-வந்நிலைபோய்க், கண்டவியன் கட்டிற் கருவிகளீ ரைந்தொழியக், கொண்டுநிய மித்தற்றை நாள்கொடுப்பப் - பண்டை, இருவினையால் முன்புள்ள வின்பத்துன் பங்கள்,மருவும்வகை யங்கே மருவி" [53-64] யென்றுஞ் சொன்னமுறைமை கண்டு கொள்க. ௯

இங்ஙனஞ் சரீர தொந்தனைப்பட்டு நிற்கிற அடியேனுக்குத் தேவரீர் தீக்கைக் கிரமங்களினாலே பாசமோசனம் பண்ணியிருக்கவும் அடியேன் மீளவும் மலமாயாதி கன்மங்களோடும் தொந்தித்து நிற் கைக்கு வழியேதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
யந்நிய மாக்கி யருள்வழி யதனா
லென்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக நின்னோ
டொருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டு மருவிடு
மும்மல மதனா லெம்முணின் றிலையெனி
னம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வில னாகும் பெரும தீர்வின்
றமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றி னமைந்த
மாயையங் கன்ம மாமல மூன்று
மாயா தாகவே யார்ச்சந மாயையி
னாற்பவந் தீரா தொழுகுமொன் றொன்றி
னிற்சம மாயி னல்லது நிற்பெற
வில்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகு நாயே னுளத்து
நின்றனை யென்பெனோ நின்றிலை யென்பெனோ
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பெனோ
வொன்றினை யுரைத்தருள் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி
கைகண் டலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேரறப் பறித்த
மெய்கண்ட தேவே வினையிலி
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே. ௧௦

**மேல்வியாக்கி.**

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை யன்னியமாக்கி - அநாதியே அடியேனோடுங் கூடி நிலைபெற்று வருகிற கன்மமாகிய புண்ணிய பாவங்கள் தன்னிற் சமமாகத் துலையொத்த அவதரத்து அடியேனோடுங் கூடியிருக்கப்பட்ட மலங்களைத் தேவரீர் தீட்சாக்கிரமங்களினாலே வேறுபடுத்தி,



அருள்வழியதனா லென்னுள் புகுந்தனை யெனினே - தேவரீர் அனுக்கிரகத்தின் முறைமையாலே அடியேனுள்ளத்திலே யெழுந்தருளினதே யுண்டாமாகில்.—உதாரணம் முற்பதத்துக்கு கூட. "சகலர்க்குக் கன்மவொப்பில், தரையிலா சான்மூர்த்தி யாதார மாகித் தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்தினிபா தத்தால்" [சித்தியார், viii, 2] என்றும், "திருத்துவதோர் குணமில்லான் றன்னையொரு வர்க்கு தினைப்பரியா தென்றுமிலா னேர்படவந் துள்ளே, பொறுப்பரிய பேரின்மை யருளியதன் வழியே புகுந்தளிப்ப னெங்குமிலாப் போகத்தைப் புரிந்தே" [சித்தியார், ix, 6] என்றுங் கண்டுகொள்க. பாடம்.

முன்னைத் திரிமலந் தீர்த்த தேசிக நின்னோ டொருவுத லின்றி யுடந்தையே யாகும் பெருநிலை யாகல் வேண்டும் - அடியேனுக்கு அனாதியாக இருக்கப்பட்ட மூன்று மலங்களையும் நீக்கிய ஆசாரிய மூர்த்தமே தேவரீரை அடியேன் விட்டு நீங்காமலிருக்கப்பட்ட பேரின்பமாகிய திருவருட் பிரகாச முண்டாக வேணும்.—அது நிற்கட்டும் முன்பு என்னிடத்திலே தேவரீரில்லையாம்,

மருவிடு மும்மல மதனா லெம்முணின்றிலை யெனில்-அடியேனோடுங் கூடிவரப்பட்ட ஆணவம் மாயை காமிய மென்கிற மூன்று மலங்களோடும் வாதனை செய்து நிற்கையினாலே அடியேனுள்ளத்திலே தேவரீரெழுந்தருளி நின்றதில்லையா மாகில்.—உதாரணம் சிவஞான போதத்தில் "அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க், கிருட்கண்ணே பாசத்தார்க்கீசன்" [xi, 3] என்றும், "தன்னுணரு, நேசத்தர் தம்பா ணிகழுந் ததிநெய்போற், பாசத்தார்க் கின்றாம்பதி" [xii, 3] யென்றும், போற்றிப்பஃறொடை வெண்பாவில் "என்- . . . னுள்ள மென்று நீங்கா தொளித்திருந்து கள்ளமின்று காட்டுங்" [166-168] என்றுஞ் சொன்ன முறைமையுங் கண்டு கொள்க. மேற்பாடம்.

அம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழல் சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப் பெயர்விலனாகும் பெரும தீர்வு-அந்த மலங்களைத் தேவரீர் போக்கினது மில்லையாய் அடியேனுஞ் சிவந்த தாமரை மலர் போன்ற சீபாதத்திலே வந்து பொருந்தினது மில்லையாய்ப் பிரவஞ்ச வாதனையாலே வந்து பொருந்தின கன்மங்களைப் புசித்ததினாலே புண்ணிய பாவங்கள் கட்டுப்பட்டுச் செனனமரண துக்கத்தை விட்டு நீங்குகைக்கு வழியில்லாதவனாகும் தம்பிரானே இது நிச்சயமே தப்பாது. அப்படியல்ல,

வருகிறது. அதாவது, எந்த வருஷத்தில் மலமாதம் ஏற்படுகின்றதோ அந்தவருஷத்தில் ஷை கிளர்ச்சியும் ஏற்பட்டு, அந்த வருஷ முடிவில் அதுவும் மறைந்துவிடுகிறது. இவ்வருஷம் ஆவணி மாதத்தில் அதிக பாத்ரபதமாகிய (இரண்டு அமாவாசை வருகிற) மலமாதம் ஏற்பட்டிருப்பதால் விரதங்களைச் சௌரமான மாதங்களில் செய்வதா, சாந்திரமான மாதங்களில் செய்வதா என்ற கிளர்ச்சி, தென்னாட்டில் தோன்றி, அதன் பயனாகப் பிள்ளையார் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, கந்தர்சஷ்டி, மகாசிவராத்திரி இவைகளை எப்போது கொண்டாடவேண்டும் என்றபெயருடைய ஒரு புத்தகத்தைத் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார் வெளியிட்டிருக்கின்றனர். அதில் சௌரமானமே உயர்ந்தது என்றும், சாந்திரமானம் மிகத் தாழ்ந்ததென்றும், சாந்திரமானம் ஸ்மார்த்தர்கட்கே உரியது என்றும், தமிழ் மக்கள் சௌரமானிகள் என்றும், ஆகமங்கள் எல்லாம் சௌரமானத்திலேயே எல்லாவிதமான விழாக்களும், சிறப்புக்களும் செய்யப்படவேண்டுமென விதிக்கின்றனவென்றும், ஆதலால் தமிழர்களுடைய எல்லாக் கோவில்களிலும், கிருகங்களிலும் இவ்வாண்டில் ஷை விரதங்களைச் சௌரமானப்படி செய்யும்படி கேட்டுக்கொள்வதாகவும் பலவாறு எழுதி இருக்கின்றனர். (இந்த வியாசமானது ஷை சங்கத்தார் வெளியிட்ட நூலைக் கண்டிப்பதற்கே ஏற்பட்டதாக நேயர்கள் நினைத்தல் கூடாது.) ஆகமங்களில் சாந்திரமானப்படி விழாக்களைச் செய்ய ஆதாரங்கள் இருக்கின்றனவா? மேற்கூறிய விரதங்களை எப்போதுசெய்யவேண்டும் என்பதை ஆராயவே இவ்வியாசம் தோன்றியிருக்கிறது.

## 1. சாந்திரமானம் சௌரமானம்

சூரியனுடைய கதியைக் கொண்டு அயனம் மாதம் வருஷம் இவைகளை அறிகின்றோம். அவ்விதமே சந்திரனுடைய



கதியினால் பக்ஷம் திதி என்பவைகளை உணர்கிறோம். சூரியனுடைய கதியின்றி, எப்படி மாதம் அயநம் இவைகளை அறிய முடியாதோ, அப்படியே சந்திரனின்றித் திதி, பக்ஷம், இவைகட்கு ஏதுவே இல்லாமற் போவதுடன் திதியைப் பிரதானமாகவுடைய விரதங்களும் இல்லாமற் போகும்.

சந்திர சூரியர்களைப் பற்றி ஆராய்ச்சிக்காரர்கள் எப்படி சொல்லிக்கொண்டபோதிலும் நம் சாஸ்திர முறைப்படி அவ்விருவரும் சிவபெருமானுடைய அஷ்ட மூர்த்தங்களில் சேர்ந்தவர்கள் என்றும், இரண்டு நேத்ரங்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் எவர் இல்லாவிடினும், நம் கால வியவஹாரம் நடைபெறுதாகையினால், அவ்விருவர்களுடைய கதிகளும் வேண்டற்பாலனவேயாகும். சௌரமானத்தில் செய்ய வேண்டிய சிரார்த்தங்கள்கூட சௌரமாதத்தில் குறிப்பிட்ட திதியானது ஏற்படாமற் போய்விடுமேயாகில், ஷை சிரார்த்தத்தை முன் மாதமாகிய சாந்திரமாதத் திதியில் செய்யும்படிக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஒரு மாதம் சுக்லபக்ஷப் பிரதமையில் ஆரம்பித்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியுடன் முடிவடைந்துவிடுமேயாகில் அந்த மாதத்திய அமாவாஸைத் திதியை, அதற்கு முந்திய மாதத்தில் (சாந்திர மாதத்தில்) செய்துவிட வேண்டும். ஆகையினால், சாந்திரமானம் - சௌரமானம் - இரண்டும் நமக்கு வேண்டியவைகளே.

## 2. ஆகமங்களும் - சாந்திரமானமும்

ஆகமங்கட்குச் சாந்திரமானம் உடன்பாடில்லை என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. ஏனென்றால் காமிகாகமம் காலவிதிப்படலம் சென்னைப் பதிப்பு-பக்கம் 349-ல் "அதிமாஸம் த்யஜேத்தீமாந், தேசிகஸ்துவிசேஷத:" புத்திமானாகிய ஆசாரியன் அதிக மாசத்தை விசேஷமாக விடவேண்டும்

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஷை அதிகமாசம் என்பது
சாந்திரமானத்தில் வருமே யன்றிச் சௌரமானத்தில்
வராது. சாந்திரமானம் உடன்பாடில்லாத பக்ஷத்தில் சாந்திர
மானத்தினால் ஏற்படக் கூடிய அதிக மாதத்தை விலக்கிய
தென்னை? மேலும் பவித்ரோத்ஸவத்தை “ஆஷாடாதித்ர
யோமாஸா:, ஜேஷ்ட மத்யம கந்யஸா:” ஆஷாடம் முதலிய
மூன்று மாதங்களும் முறையே உத்தம மத்யம அதமங்கள்
என்று கூறப்பட்ட பிரமாணத்தைக் கொண்டு திரிலோசந
சிவாசார்யர் சித்தாந்தசாராவளியில் பவித்திர உற்சவத்திற்கு
“அர்கேயுக்மகதே” என்ற சுலோகத்தினால் காலத்தைக் கூறி
இருக்கின்றார். ஷை சுலோகத்திற்கு உரை எழுதியவர்
ஆஷாடாதி மாதங்கள் சாந்திரமான மாதங்கள் என்பதை
விளக்கி இருக்கின்றார். சித்தாந்தசாராவளி சென்னைப் பதிப்பு
பக்கம் 480 பார்க்க. காரணாகமத்தில் “சௌரமாசம் பிரசஸ்
தம்ஹி, சாந்திர மாஸோ பிரசஸ்தக:” சௌரமாசம் சிறந்
தது. சாந்திரமாசம் சிறந்ததல்லவென்று இகழ்ந்திருக்கின்
றதே எனில், உத்தரகாரணத்தில் மஹோத்ஸவ பேதங்களைச்
கூறுமிடத்து “ஸாகல்யம் பாவநம் சாந்தம், மாங்கள்யஞ்ச
சதுர்விதம்” ஸாகல்யம், பாவநம் சாந்தம், மாங்களியம், என
உற்சவங்கள் நான்கு வகைப்படும் என்றும், “ஸாவநம் சாந்
திர நக்ஷத்திரம் ஸௌரஞ் சைவ சதுர்விதம்” ஸாவநம் சாந்
திரம் நக்ஷத்திரம் சௌரம் எனக் காலங்கள் நான்கு வகைப்
படும், அவற்றுள் “சாகல்யம் ஸாவநம் த்வௌது சௌரமா
ஸேப்ர சஸ்யதே ஸாவநம் சாந்திர நாக்ஷத்ர மாஸேஷு சாந்தி
மங்களம்” ஸாகல்ய பாவநம் இரண்டும் சௌர மாசத்தில்
சிறந்தது, சாந்தி மாங்கள்யம் இரண்டும் சாவந சாந்திர
நக்ஷத்ர மாதங்களில் சிறந்தது என்று கூறி யிருக்கின்றமை
யால் ஷை வாக்யமானது மஹோத்ஸவங்களின் பேதங்களா
கிய ஸாகல்யம்பாவநம் என்று கூறப்பட்ட இருவித உத்ஸவங்



களைப் பற்றியதே யாகும். உத்தர காரணம் சென்னைப்
பதிப்பு பக்கம் 142 பார்க்கவும். ஆகையினால், சிவாகமங்கட்கு
சாந்திரமானம் உடன்பாடே யாகும்.

## 3. விநாயக சதுர்த்தி

விநாயக சதுர்த்தியைப் பற்றி, காமிகம் சுப்ர
பேதம் காரணம் முதலிய ஆகமங்களில் சொல்லப்
படவில்லை. தெ. சை. சி. சங்கத்தால் ஸ்வாயம்புவ ஆக
மத்திலிருப்பதாக எடுத்துக் காட்டப்பட்ட சுலோகங்
களும் விநாயகருக்கு மஹோத்ஸவம் செய்வதற்குரிய காலத்
தையும், முறையையுங் கூறுகின்றனவேயல்லது சதுர்த்தி
விரதத்தின் லக்ஷணத்தைப் பற்றியாகிலும், விரதம் அநுஷ்
டிக்கவேண்டிய முறைகளையாகிலும், விரதம் அநுஷ்டிப்பதி
னால் ஏற்படக்கூடிய பயனையாகிலும் கூறவில்லை. மேலும்,
ஷை சுலோகங்களின் கருத்தாவது முதலில் தீர்த்த
தினத்தை நிச்சயித்துக்கொண்டு, அதற்கு முன்பாக 5, 7,
9, 3 இந்த நாட்களில் த்வஜாரோகணம் செய்யவேண்டும்.
சிராவண மாத சதுர்த்தியில் விநாயகருக்கு ரதோத்ஸவம்
செய்யவேண்டும். அன்றைய தினமே தீர்த்தம் செய்யலாம்.
அல்லது பஞ்சமியிலாவது தீர்த்தம் கொடுக்கலாம் என்றிருக்
கிறது. மேற்கூறிய வாக்கியப்படிக்கு விநாயகருக்கு உற்சவம்
சதுர்த்தி ஈறாகச் செய்வதா? அல்லது பஞ்சமி இறுதியாகச்
செய்வதா? என்கிற சங்கை எழுகின்றது. சதுர்த்தி இறுதி
யாகச் செய்வது என்றால் பஞ்சமியிலாவது தீர்த்தம் செய்ய
லாம் என்பது பாதிக்கின்றது. பஞ்சமியை முடிவாகக் கொண்
டால், சதுர்த்தி உத்ஸவம் என்பது இல்லாது போய்விடு
கிறது.

இது நிற்க. ஷை விநாயக சதுர்த்தியைப்பற்றிய லக்ஷ
ணம் முறை முதலியவை புராணங்களில்தான் கூறப்பட்டிருக்

கின்றன. அதாவது தர்மபுத்ரர் தங்கள் சத்ருக்களை ஜெயித்து எவ்விதம் இராஜ்யத்தைப் பெறமுடியும் என்று வருந்துகிற சமயத்தில் கிருஷ்ணன் ‘நீ விநாயகரைப் பூஜித்தால் நிர்விக்னமாக இராஜ்யத்தை அடையலாம்’ என்று கூற, அதற்குத் தருமபுத்ரர் ‘எப்போது பூஜிப்பது?’ என்று கேட்க, ஸ்ரீ கிருஷ்ணன் “மாஸி பாத்ரபதே சுக்ல சதுர்த்யாம் கணநாயகம்” பாத்ரபத சுக்ல சதுர்த்தியில் கணநாயகனைப் பூஜிக்க வேண்டும் என்று கூறியதாக பவிஷ்யத் புராணமும், விநாயகருக்குரிய விரதத்தைக் கூறத் தொடங்கிய ஸ்காந்தபுராணம் “விக்னேச்வரஸ்யாபி விருதம் - சுக்ரவாரே ஸுபாவஹம் - சதுர்த்யாந்து விரதம் புண்யம் - ப்ரோஷ்டபங்மாஸி கேஸிதே” விக்னேச்வரரைக் குறித்து அநுஷ்டிக்கப்படும் விரதம் வெள்ளிக்கிழமையில் பரிசுத்தமானது; புரோஷ்டபத மாதத்திய சுக்லபக்ஷ சதுர்த்தியில் அநுஷ்டிக்கப்படுவது மிகப் புண்யமானது என்றும் கூறுகின்றன. ஆதலால், “சிங்கமா மதியிடைச் சேர்முன் பக்கத்து” என்ற தமிழ் விநாயக புராணச் செய்யுளுக்கு மூலபுராணங்கட்கேற்ப சாந்திரங் கலந்த ஆவணி மீ என்றுதான் பொருள்செய்யவேண்டும். இல்லாவிடில் மூல புராணங்கட்கு விரோதம் சம்பவிக்கும். சௌரமானமாகிய தைமீ அமாவாஸைத் திதியை, திதி ஸம்பவியாத சமயத்தில், சாந்திரபுஷ்யமாகிய மார்கழி மாதத்திலேயே செய்வது போல் ஆவணி மாதத்தில் பாத்ரபதம்வராவிட்டால் பாத்ரபதத்திலேயே செய்வதுதான் உசிதமாக விருக்கிறது. ஏனென்றால் நம்மை விரதம் அநுஷ்டிக்கும்படிச் சொல்வது புராணமேயாகையாலும், புராணங்கள் சாந்திரமானத்தையே சொல்லுகின்றமையாலும், ஷை பௌராணிக விரதங்களைச் சாந்திரமானப்படியே அநுஷ்டிப்பதுதான் சரியான முறையாகத் தோன்றுகிறது. ஷை விரதத்தை முன்னிட்டுச் செய்யும் உத்ஸவங்கள் சாந்திகம், மாங்களியம் என்னும் இரண்டு வகையுள் சேர்ந்திருப்பதாலும், சாந்திக மாங்களியத்தைச் சாந்திரமானத்தால் செய்ய விதி இருக்கின்றமையாலும் ஷை உற்சவங்களைச் சாந்திரமானத்தால் செய்வது சிவாகமங்களுக்கு விரோதமாகமாட்டாது.



## 4. நவராத்ரி - மஹாநவமி

நவராத்ரி என்பது, அம்பிகையை ஒன்பது நாள் வழிபடுவதாகிய ஒரு விரதம். மஹாநவமி என்பது ஷை விரதத்தின் கடைசி தினமாகிய நவமியாகும். இப்போது அச்சிடப்பட்ட காமிகாகமம் நவராத்ரியைப்பற்றிக் கூறவில்லை. ஆனால், உத்தரகாமிகம் துர்க்கா பூஜாவிதிப் படலத்தில், “கந்யாகதேஸவிதரி, சுக்லபக்ஷேஷ்டமீயுதா மூலாநக்ஷத்ர ஸம்யுக்தா ஸாமஹாநவமீ ஸ்மிருதா ஆச்வயுக் சுக்லபக்ஷேவா அஷ்டமீமூல ஸம்யுதா ஸாமஹாநவமீநாம்நா த்ரைலோக்யே யதிஸுதுர்லபா அஷ்டம்யாஞ்ச நவம்யாஞ்ச ஜகன்மாதரமம்பிகாம் பூஜயித்வா ச்வயுங்மாஸி விசோகோஜயதித்விஷ:” இதன் பொருள் : சூரியன் கன்யாராசியை அடைந்த காலத்தில், சுக்லபக்ஷ அஷ்டமி மூலத்தோடு கூடிய திதியானது மஹாநவமி எனப்படும். ஆச்வயுக் (சாந்திரமான ஐப்பசி) மாதத்திய சுக்லபக்ஷத்திலாவது அஷ்டமி மூலத்தோடுகூடிய திதியானது மூவுலகத்திலும், கிடைத்தற்கரிய மஹாநவமி எனப்படும் ஆச்வியுஜ மாதத்தில் அஷ்டமியிலும் நவமியிலும் அம்பிகையைப் பூஜித்துச் சோகமற்றவனாய்ச் சத்ருக்களை ஜயிக்கின்றான் என்றிருக்கிறது. மேற்கண்ட வாக்கியங்களைக் கவனித்துப் பார்த்தால், மஹாநவமிக்குரிய காலம் எது என்பது புலப்படும். அதாவது சாந்திரமான ஐப்பசியாகிய ஆச்வயுக்மாதம், அநேகமாக கன்யா மாதத்திலேயே வந்துவிடுமாதலால், பொதுவாகக் கன்யாமாதத்தைச் சொல்லிப் பின் அதிகமாதத்தினால் கன்னியில் ஆச்வியுஜம் வராவிட்டால், ஆச்வியு

ஜம் முக்யமாகக் கொள்ளத் தகுந்ததென்பதைக் குறித்தே ஆச்வியுஜ மாதத்திலாவது சுக்லபக்ஷ அஷ்டமி மூலத்தோடு கூடியது மிகத் துர்லபம் என்றும், கன்யாமாதம் கலவாத ஆச்வியுஜ சுக்லபக்ஷ அஷ்டமியில் மூல நக்ஷத்திரம் சம்பவிக்காதபக்ஷத்தில் ஆச்வியுஜ அஷ்டமி நவமிகளில் பூஜிக்கவேண்டும் என்றும் பொருள் கிடைக்கின்றது. இதைத் தவிர்த்துக் கன்யா மாதத்தை விடுத்து ஆச்வியுஜத்தில் அஷ்டமி மூலத்தோடு ஒருபோதும் வராதாகையினால் கன்யாமாதமே கொள்ளத்தகுந்தது என்று பொருள்கொள்ளின், ஆச்வயுக் சுக்லபக்ஷத்திலாவது என்று விகல்பம் கூறி இருக்கின்றமையால் ஷை பொருள் கிடைக்காததுடன் ஆச்வியுஜ அஷ்டமி நவமிகளில் பூஜை செய்யவேண்டும் என்ற வாக்கியத்திற்கும் பயனில்லாதுபோய்விடும். ஆதலால், காமிகத்தில் கூறப்பட்ட மஹாநவமிக்குரிய காலம் சாந்திரமான ஆச்வியுஜம் என்பது விளங்குகின்றதல்லவா ?

நவராத்திரியைப்பற்றிக் கூறும் பூர்வகாரணம்:—“ ஆச்வயுக் சுக்லபக்ஷேவா பிரதிபங்நவமியந்தகே - பிரதிபத்திநமார்ப்ய விருதோத்ஸவமதாசரேத் ” ஆச்வியுஜ சுக்லபக்ஷ பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள நாள்களில் பிரதமை முதல் விரதம் உத்ஸவம் இவைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் கூறப்பெற்ற ஆச்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியேயாகும். ஷை ஆச்வயுக் என்பது சௌரமான மாதத்தையே குறிக்கும் எனில், துலாமாதத்தைக் குறிக்கும். சாந்திர ஐப்பசி கலவாத துலா மாதத்தில் நவராத்ரி செய்வது ஒருவருக்கும் உடன்பாடில்லை. தவிர ஆச்வயுக் என்பது கன்யா மாதத்தையே உணர்த்தும் என்பது பண்டிதர்கள் ஒத்துக்கொள்ளத்தக்கதன்று. காரணாகமத்திய, “ஸௌரமாசம்பிரசஸ்தம்ஹி சாந்தரமாஸோ ப்ரசஸ்தக : ” என்ற வாக்கியமானது, த்வஜா



ரோஹண ஹோம பலிகளுடன் கூடிய உத்ஸவங்கட்கே உரியதாகையாலும் பூர்வ காரணத்தில், நவராத்ரிக்கு த்வஜாரோஹண பலிதீர்த்தங்கள் விதிக்கப்படாமையாலும், தற்காலத்தில் பெரும்பான்மையான ஆலயங்களில் நடைபெறும் நவராத்ரி உற்சவங்கள் த்வஜாரோஹண, பலி தீர்த்தம் இன்றியே நடைபெறுகின்றமையாலும் ஷை வாக்யங்கள் இதனைப் பாதிக்கமாட்டா. அகோரசிவாசார்யர் நவமிபூஜாவிதியில் பாத்ரபதம் என்று கூறுவதும் சாமானிய விதிபற்றியே யாகும். இல்லாவிட்டால் மூல ஆகமங்கட்கு விரோதம் ஸம்பவிக்கும். நிற்க, இவ்வுத்ஸவத்திற்கு ஆரம்பம் முக்கியமா அல்லது முடிவு முக்கியமா? என்று சந்தேகிக்கில் மற்றைய உத்ஸவங்களுக்குத் தீர்த்த தினத்தை நிச்சயித்துக்கொண்டு அதற்கு முந்திய 9, 7 முதலிய நாட்களில் த்வஜாரோகணம் செய்ய வேண்டும் என்று விதிப்பதுபோல் இவ்வுத்ஸவத்திற்குக்கூறாது பிரதமை முதல் நவமிவரை செய்ய வேண்டும் என்று கூறிஇருப்பதால், ஆரம்பம் முடிவு இரண்டுமே முக்கியங்களாகும். ஆதலால் இந்நவராத்ரி விரதோத்ஸவத்தைச் சாந்திரமான ஆச்வியுஜ சுக்லபக்ஷ பிரதமை முதல் நவமி ஈறாகச் செய்வதே உசிதம் என்று புலப்படுகின்றது.

## 5. ஸ்கந்த ஷஷ்டி

இனி ஸ்கந்தஷஷ்டியைப் பற்றி விசாரிப்போம். குக பெருமானுக்குச் செய்யும் பிரதிஷ்டை பூஜை உற்சவங்களை விளக்கிக் கூறும் குமார தந்திரத்தில் எல்லா மாதங்களிலு அந்தந்த மாத நக்ஷத்திரத்தைத் தீர்த்த தினமாகக் கொண் உற்சவம் நடத்த வேண்டும் என்று கூறியிருக்கின்றனரே ய லது துலா மாதத்திய சுக்லபக்ஷ பிரதமையிலிருந்து சஷ்டி பரியந்தம் செய்ய வேண்டும் என்றாவது சஷ்டியில் ஸம்ஹார உற்சவம் முதலியன செய்யவேண்டுமென்றாவது கூறவில்லை

௸ உற்சவம் ஸ்காந்த புராணத்தைக் கொண்டே ஆரம்பித்திருக்கிறது. ௸ புராணத்தில், முருகப் பெருமானுக்கு உரிய விரதங்களைக் கூறுமிடத்து சாந்திர கார்த்திகை, சுக்ல சஷ்டியை எடுத்திருக்கிறது. விநாயக விரதத்திற்குக் கூறிய படியே மொழி பெயர்ப்பாகிய, தமிழ் கந்தபுராணத்திற்குப் பொருள் கொள்ள வேண்டுமாதலால் ௸ஸ்கந்த சஷ்டியையும் சாந்திர கிருத்திகா சுக்ல பிரதமைமுதல் சஷ்டி இறுதியாகச் செய்வதே முருகக் கடவுளுக்கு உகந்ததாகும். சங்கத்தார் கௌசிக பிரச்ந குமார தந்திரத்தில் இருப்பதாகக் காட்டியுள்ள வசநங்கள், ௸ புத்தகத்தில், காணப்படாததுடன் மற்றைய ஆகமங்களில் கூறப்படும் உத்ஸவ விதிக்கு முரண்பாடாகவிருப்பதை அறிஞர்கள் கவனித்தால் தெற்றென விளங்கும்.

## 6. மஹா சிவராத்ரி

௸ விரதமானது அமாவாசையினது வேதையின்றி, த்ரயோதசி பூர்ணமாயும் ஒருகலை சதுர்த்தசியும் இருந்தாலும் அன்றே அநுஷ்டிக்கப்பட வேண்டும் என்று ஒரு பக்ஷமும், முக்ய காலமாகிய லிங்கோத்பவ காலத்தில் சதுர்த்தசி இல்லாவிடில், அதமசிவராத்திரியைப் போல், அமாவாசை சம்பந்தம் இருந்தாலும் பிராயச்சித்தபூர்வமாய் செய்யலாம் என்று (சைவகால விவேகம்) ஒரு பக்ஷமும் இருக்கின்றது. அது பற்றிப் பின்னால் விசாரிப்பாம்.

## முடிவுரை

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தவர்களும் மற்றும் சைவாபிமானிகளும் இத்தகைய விஷயங்களைச் சித்தாந்தஞ் செய்வதற்குப் பெரியதொரு கூட்டம்கூட்டி அதில் ஆகமங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இலக்கியங்கள், இலக்கணங்கள் இவைகளில் தேர்ச்சி பெற்ற பல வித்வான்களையும் வருவித்து, அவர்கள் மூலமாய்ச் சர்ச்சைசெய்து நிர்த்தாரணம் செய்ய வேண்டுகிறேன்.

சிவமயம்



# கடிதப் போக்கு வரவு

## திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்

1936-ம் வருடம் ஏப்ரல்மீ 5-ம் நாள் 1111-ம் ஆண்டு பங்குனித் திங்கள் 24-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்குக் கீழரதவீதி, கழக மேடையிற் கூடிய நிறைவேற்றக் கூட்ட நடவடிக்கைகள் :

### வந்திருந்தவர்கள்

(1) திருவாளர் T. S. கந்தசாமி முதலியார் அவர்கள்
ச. சிவகுருநாத பிள்ளை அவர்கள்
(2) ,, M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்
(3) ,, வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள்
(4) ,, பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள்
(5) ,, N. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.
(6) ,,

### தீர்மானங்கள்

(2) சித்தாந்தப் பத்திரிகையில் நமது சென்னைக்கழக ஏஜண்டைப்பற்றி வெளிவந்துள்ள கட்டுரை படிக்கப்பட்டது. சென்னை சைவசித்தாந்த மகா சமாஜக் காரியதரிசியவர்கட்கு சென்னை ஏஜண்டு அவர்கள் செய்த குற்றம் இன்ன என்று தெளிவாக எழுதியனுப்புமாறு கேட்டுத் தலைவரவர்கள் கடிதமெழுதவேண்டுமென்றும், நமது சென்னை ஏஜண்டு மீது குற்றம் சுமத்திப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு முன் நமது கழகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாததுபற்றி இக்கழகம் வருந்துகிறதென்றும் சர்வசம்மதமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

(Sd.) M. V. NELLIAPPA PILLAI,
*President.*

True Copy

## திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,

Press Letter. No. 371 கீழரத வீதி, திருநெல்வேலி,
5—4—36.

திருவாளர்
ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம்,
22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

அன்பார்ந்த ஐயா,

இன்று கழக நிறைவேற்றக் கூட்டத்தில் நடந்த 2-வது தீர்மானத்தின் நகலை இத்துடன் அனுப்பி யிருக்கிறேன். அன்புகூர்ந்து பெற்றுக்கொண்டதற்கு விடையளிக்க வேண்டுகிறேன்.

அன்புள்ள,
(Sgd.) வ. திருவரங்கம் பிள்ளை,
அமைச்சர்.

True Copy

---

Press Letter. No. 372 5—4—36.

திருவாளர்
ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம்,
22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் 'சித்தாந்தம்' மலர் 9 இதழ் 3-ல் எங்கள் சென்னை ஏஜண்டு திருவாளர் - வ. சுப்பையா பிள்ளையவர்களைக் குற்றம் சாட்டி எழுதியிருக்கிறீர்கள். அவ்வாறு எழுதுவதற்கு முன் தங்கள் சமாஜத்தோடு தொடர்புடைய



எங்களுக்கு அதுபற்றி எழுதியிருந்தால் நலமாயிருந்திருக்கும். தங்கள் கட்டுரையிலிருந்து, எங்கள் ஏஜண்டு என்ன குற்றம் செய்தாரென்று நாங்கள் அறிந்துகொள்ளக் கூடவில்லை. ஆதலின் எங்கள் ஏஜண்டு என்ன குற்றம் செய்தாரென்று தெளிவாக எழுதி யனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(Sgd.) M. V. NELLIAPPA PILLAI,
*President.*

True Copy

---

## The Saiva Siddhantha Maha Samajam

22, A. கல்லுக்காரத்தெரு, மயிலாப்பூர்.
*Madras, 17-4-1936*

சைவத் திருவாளர்,
மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் பி. ஏ.
தலைவர், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி.

அன்பு மிக்க ஐயா,

தாங்களும் கழக அமைச்சரும் 5-4-36-ல் அனுப்பிய கடிதங்களும் கழக நிறைவேற்றக் கூட்ட நடவடிக்கைகளும் கிடைத்தன. தங்கள் தீர்மானத்தின் காரணம் விளங்கவில்லை. "சென்னை சைவசித்தாந்த மகா சமாஜக் காரியதரிசியவர்கட்கு சென்னை ஏஜண்டு அவர்கள் செய்த குற்றம் இன்ன என்று தெளிவாக எழுதி யனுப்புமாறு" தங்கள் தீர்மானம் கேட்கிறது. சித்தாந்தத்தில் (௧0௪—௧௧௨ பக்கங்களில்) வெளிவந்துள்ள கட்டுரையைப் பலமுறை வாசித்துப் பார்த்தும் எனக்குத் தங்கள் ஏஜெண்டு குற்றம் செய்ததாக எழுதியுள்ள பகுதி யொன்றும் தோன்றவில்லை. எழுதப்படாததொன்றை எவ்வாறு தெளிவாக எழுதி யனுப்புவதென்பது விளங்கவில்லை.

சமாஜம், சமாஜ வெளியீடுகள் விஷயத்தில் தங்கள் ஏஜெண்டு செய்து வருவதைப்பற்றி அக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தங்கள் கழக நிறைவேற்றக் கூட்டம் ஆக்ஷேபிக்காதது மகிழ்ச்சியைத் தருகிறது.

இங்ஙனம்
தங்களன்புள்ள,
(Sgd.) ம. பாலசுப்பிரமணியம்,
காரியதரிசி

True Copy

---

## திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்

1936-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதி 1111-ம் ஆண்டு வைகாசிமீ 18-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்குக் கீழரத வீதி கழக மேடையிற் கூடிய நிறைவேற்றக் கூட்ட நடவடிக்கைகள்.

### வந்திருந்தவர்கள்

(1) திருவாளர் பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள்
(2) ,, M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்
(3) ,, ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள்
(4) ,, வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள்
(5) ,, S. T. பொன்னம்பலநாத முதலியார் அவர்கள்.

### தீர்மானங்கள்

(6) 5-4-36. தீர்மானப்படி சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி அவர்கட்கு எழுதி யனுப்பிய கடிதத்திற்கு, அவர்கள் 17-4-36-ல் எழுதி யனுப்பிய மறுமொழி வாசிக்கலாயிற்று. அவர்கள் மறுமொழியில் சென்னை "தங்கள் ஏஜண்டு குற்றம் செய்ததாக எழுதியுள்ள பகுதி



யொன்றும் தோன்றவில்லை" என்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, நமது கழக 5-4-36 தீர்மானத்தையும், அதன் பேரில் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி அவர்கள் எழுதிய பதில் கடிதத்தையும் "செந்தமிழ்ச் செல்வி"யில் வெளியிடுவதல்லாமல் சித்தாந்தத்திலும் வெளியிட வேண்டுமென்று மேற்படி பத்திராசிரியரவர்களை அமைச்சர் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் சர்வசம்மதமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

(Sgd.) M. V. நெல்லையப்ப பிள்ளை,
தலைவர்.

True Copy
V. TIRUVARANGAM PILLAI,
*Secretary.*

---

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
22-A, கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர். 15—7—36

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சரவர்கட்கு :—

அன்புள்ள ஐயா,

தாங்கள் சில நாட்களுக்கு முன்பு அனுப்பிய தீர்மானத்தின் பிரதியும் பிறவும் கிடைத்தன. தங்கள் கழக நிறைவேற்றக் கூட்டம் 31-5-36-ல் நிறைவேற்றிய ஆறுவது தீர்மானம் சிறிது வியப்பாயிருக்கிறது. 5-4-36-ல் ஏற்பட்ட தீர்மானத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசியவர்கட்குத் தங்கள் கழகத்துச் சென்னை ஏஜெண்டு செய்த குற்றம் இன்ன என்று தெளிவாக எழுதி யனுப்புமாறு என்னைக் கேட்டீர்கள். அதற்கு 17-4-36-ல் யான் எழுதிய

கடிதத்தில் எனக்குத் தங்கள் ஏஜெண்டு குற்றம் செய்ததாக யான் எழுதவில்லை என்றும், சமாஜம் சமாஜ வெளியீடுகள் விஷயத்தில் தங்கள் ஏஜெண்டு செய்து வருவதைப்பற்றி அக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தங்கள் நிறைவேற்றக் கூட்டம் ஆக்ஷேபிக்காதது மகிழ்ச்சியைத் தருகிறதென்றும் தெரிவித்தேன். இதை 31-5-36-ல் நிறைவேறிய தங்கள் கழகத் தீர்மானம் "தங்கள் ஏஜெண்டு குற்றம் செய்ததாக எழுதியுள்ள பகுதியொன்றும் தோன்றவில்லை" என்று யான் எழுதிவிட்டதாகக் கருதுகின்றது. இவ்வாறு எனது 17-4-36 கடிதத்தைக் கருத இடமில்லை.

சமாஜம், சமாஜ வெளியீடுகள் விஷயத்தில் தங்கள் சென்னை ஏஜெண்டு செய்து வருவதைப்பற்றி எழுதப்பட்டவைகளை 31-5-36-ல் ஏற்பட்ட தீர்மானமும் ஆக்ஷேபிக்கவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. தங்கள் ஏஜெண்டை விசாரித்து வேண்டுவன செய்தீர்களோ இல்லையோ என்பதும் தெரியவில்லை. இதைப்பற்றி விரைவில் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன். தாங்கள் முன் அனுப்பியவற்றையும் இக்கடிதத்தையும் இதற்குத் தாங்களனுப்பும் பதிலையும் "சித்தாந்தம்" ஆகஸ்டுமாத இதழில் வெளியிடுதற்கு எனக்கு எவ்வித தடையுமில்லை.

இங்ஙனம்: தங்களன்புள்ள,

(Sd.) ம. பாலசுப்பிரமணியம்,

காரியதரிசி.

குறிப்பு:—இக்கடிதத்துக்கு நாளதுவரை பதிலில்லை—பத்திராசிரியர்.

# திருவடியும் திருமுடியும்

[திருவருள் நிலையம், பொன்னம்பலசிவம்]

சைவ சமயிகளுள் எவரேனும் உடல்நீத்தால் அச்செய்தியைக் குறித்துப் பிறர்க்குத் தெரிவிக்குங்கால் இன்னார் சிவபெருமான் திருவடியை யடைந்தனர் என்று கூறுதல் சைவ சமயிகளின் தொன்றுதொட்ட வழக்கமாய்ப் போதருகின்றது. புறப்புறம் முதலாக எண்ணப்பட்ட பல்வேறு சமயங்கள் பகரும் முத்திநிலைகள் எல்லாம் முற்றுப்பெறாத தாழ்ந்தபடியில் உள்ளன என்னுங் கருத்துப்பற்றி அவற்றைப் பழிசேர் முத்தியென மறுத்து "அடிசேர் முத்தியே முத்தி இதுமுத்தித் திறத்ததாமே" என்றும் "சிவனடியைச் சேருமுத்தி செப்புவ திங்கியாமே" என்றும் சித்தாந்த சாத்திரங்கள் தெளிவுறக் கூறுகின்றன. ஆதலால் வீடடைந்தாரைத் திருவடியடைந்தார் எனப் புகலும் வழக்கம் பொருத்தமானதேயாம்.

ஆனால் இங்ஙனம் வழக்கம்பற்றிச் சொல்லிவரும் சைவர்களிற் பெரும்பான்மையோர் தமது சமய நூல்கள் இவை, பரசமய நூல்கள் இவை என்று பகுத்தறிந்துகொள்ளாது பிறசமய நூல்களையுந் தம்முடையவெனக் கூட்டிக் குழப்பி அபிமானித்துக்கொண்டு தமக்கு மிகவும் உரிமையாகிய சித்தாந்தசாத்திர உண்மைகளைச் சிறிதுந் தேராது இருக்கின்றார்களாதலின் இத்தகையாரை நோக்கிப் புறச்சமயத்தவர்கள் :—"ஐயா சைவரே! நீவிர் முத்தியடைந்தாரைச் சிவபெருமான் திருவடியை யடைந்தார் எனக் கூறுகின்றீரே, அடைந்த அவர் சிவனார் திருவடியின் மேற்பக்கத்திருப்பாரா? அடியின் கீழ் ஒட்டிக்கொண்டிருப்பாரா? அல்லது கால்விரல்களின் இடுக்கில் ஒடுங்கி

யுறுவரா? அல்லது திருவடியில் தொங்கிக்கொண்டிருப்பரா? தொங்குவதானால் எத்தனைபேர்தாம் தொங்கக்கூடும்? ஏதோ ஒருவகையாகவோ பலவகையாகவோ அடியடைந்திருப்பது உண்மைதான் என்று வைத்துக்கொண்டாலும் அடியடைந்த அத்தனை பேரையுந் தூக்கிக்கொண்டு சிவபெருமான் நடக்கமுடியுமா? நடந்தால் அவ்வடிக்கீழுள்ளார் எல்லாரும் நசுங்குண்டுபோவதுடன் பெருந்துயரும் அடையமாட்டார்களா?'' என்று இன்னவாறெல்லாம் நகையாடற்கேதுவாகவும், அடியடைதல் விடயமாகக் கேட்ட இக்கேள்விகள் பொருத்தமாகவே யுள்ளன என்று சமய அறிவில்லாத மக்கள் நம்பும்படியாகவும் வினாக்களைக் கிளப்புவரேல் அப்போது அவற்றிற்குத் தக்க விடையிறுக்க இயலாது பாக்கப் பாக்க விழிப்பவராய் நிற்கின்றனர். சித்தாந்த உண்மை யறியாமையின் இவ்வாறாய வினாக்கள் நிகழ்தலும், அவற்றிற்கு விடைதரலாகாமையும் இயல்பே. ஆதலால் இங்ஙனம் கேட்போர் கேட்கப்படுவோராகிய இவ்விருபான்மையோரையும் முன்னிட்டுத் திருவடி யாது? திருமுடி யாது? என்று ஈண்டாராய்தல் இன்றியமையாததாகும்.

சைவ சித்தாந்தத்துட் கூறப்படும் முழுமுதற் கடவுளாய சிவபரம்பொருளின் இலக்கணத்தை இங்கு ஒருவாறாக வேனும் தெரிந்து கொண்டால் அப்பரம்பொருளின் அடிமுடிகளை யறிந்து கோடல் சிறிது எளிதாதல் கூடும். இறைவன் தடத்தம், சொரூபம் எனப்படும் இருவகை இலக்கணங்களையும் உடையன். ஐந்தொழில் நடாத்தற் பொருட்டு அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைப்பட்ட திருமேனிகள் கொண்டருளலுடன் "பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்" "வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும் நூறு நூறாயிரம் இயல்பினதாகி" என்று திரு



வாசகந் தெரிவித்தாங்கு அறிவாரறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும், புகழ்வார் புகழ்கின்ற வண்ணங்களும் ஆகியஎல்லாம் உள்ளானாய்த் தோன்றி நின்று மறைதல் யாவும் முதல்வனது தடத்த இலக்கண நிலையின் பாற்படும். இந்தனத்தின் எரிபாலினெய் பழத்தினிரதம் எள்ளின்கண் எண்ணெயும்போல் எங்கு முளனாய், என்றும் ஒரே பெற்றியனாய், பரஞானத்தாலன்றி வேறெத்திறத்தாலுங் காண்டற்கரியனாய், மாற்ற மனங்கழிய நிற்குந் தன்மை அவன்றன் சொரூப இலக்கண நிலையின்பாற்படும்.

"சுருதிவானவனாந் திருநெடுமாலாஞ் சுந்தர விசும்பினிந்திரனும்
பருதிவானவனும் படர்சடைமுக்கட் பகவனு மகவுயிர்க்கமுதாம்
எருதுவாகனனும் எயில்கள்மூன்றெரித்த ஏறுசேவகனுமாம் பின்னுங்
கருதுவார்கருதும் உருவமாங்கங்கை கொண்ட சோளேச்சரத்தானே"

என்றும்,

"எங்ஙனிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ஙனிருந்ததென் றுந்தீபற
அறியு மறிவதன் றுந்தீபற"

என்றும் வரும் திருவிசைப்பாவும், திருவுந்தியாரும், முறையே இறைவனது தடத்த சொரூப, நிலைகளைக் குறித்துக் கூறியுள்ள தன்மைகள் ஈண்டுக் கூர்ந்து நோக்கிக் கொளற்பாலன.

தடத்தநிலை பொதுவியல்பென்றும், சொரூபநிலை உண்மையியல்பென்றும் உரைக்கப்படும்.

இனி இவ்விரு பெருநிலையிலும் நின்றருளும் ஒருதனி முதல்வனது அடிமுடிகள் ஆராய்தற்குரியன. நம்பெருமான் பொதுவியல்பெனப்படும் தடத்த நிலையில் நின்று காட்சி தருங்கால்,

"அஞ்சலென்ற கரதலமுங் கணைபணை கங்கணமும்
அரைக்கிசைந்த புலியுடையும் அம்புலிச் செஞ்சடையும்
நஞ்சமுண்ட மணிமிடறும் முந்நூலும் மார்பும்
நலந்திகழ் வெண்ணீற்றொளியும் மறிமானும் மழுவும்
கஞ்சமலர்ச் சேவடியுங் கருணைபொழி முகமுங்
காமனையன் றெரித்த திருக்கண்க ளொருமூன்றும்"

உடையனாய்க் காணப்படுவன். ஈண்டு அவனது திருவடி கஞ்சமலர்ச் சேவடியாகவும், திருமுடி அம்புலிச் செஞ்சடை முடியாகவும் தோன்றி அன்பர்களது உள்ளங் கவருந் தன்மையனவாய் மிளிரும். இன்னும் அத்திருவடிகள்,

"எம்பந்த மறஎமது சம்பந்த வள்ளல்மொழி
இயல்மணம் மணக்கும் பதம்
ஈவாசர் எம்முடைய நாவாசர் சொற்பதிக
இசைபரி மளிக்கும் பதம்
ஏவலார் புகழெமது நாவலா ரூரர்புகல்
இசைதிருப் பாட்டுப் பதம்
ஏதவூர் தங்காத வாதவூ ரெங்கோவின்
இன்சொல்மணி யணியும் பதம்
எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர்முடி
யிடைவைகி யருண்மென் பதம்
ஈடுமே லெனத்தொண்டர் முடிமேல் மறுத்திடவும்
இடைவலிந் தேறும் பதம்
எழில்பரவை யிசையஆ ரூர்மறுகின் அருள்கொண்
டிராமுழுதும் உலவும் பதம்
இன்றொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறும்
இரக்கநடை கொள்ளும் பதம்
இளைப்புற லறிந்தன்பர் பொதிசோ றருந்தமுன்
இருந்து பின்னடக்கும் பதம்
எறிவிறகு விற்கவளர் கூடற் றெருத்தொறும்
இயங்கிய இரக்கப் பதம்
இறுவைகை யங்கரையின் மண்படப் பல்கால்
எழுந்துவினை யாடும் பதம்



எங்கேமெய் யன்பருளர் அங்கே நலந்தா
எழுந்தருளும் வண்மைப் பதம்
எவ்வண்ணம் வேண்டினும் அவ்வண்ணம் அன்றே
இரங்கி யீந்தருளும் பதம்"

என்று இன்னவாறெல்லாம் எண்ணி யெண்ணி உருகுதற் கேதுவா யமைவனவாம்.

இனி உண்மை யியல்பெனப்படும் சொரூப நிலைக்கண் சிவமென்னுஞ் செம்பொருளின் அடிமுடிகள் எத்தகையன என ஆய்தற்பாலன. ஆனால் ஈண்டோர் ஆசங்கை நிகழ்தல் கூடும். எவ்வாறெனின் காலும், தலையும், (அடியும் முடியும்) காணப்படுவன உருவத் திருமேனியி னிடத்திலேயேயாம். அல்லது ஓர் எல்லைக்குட்பட்ட பொருளா யிருப்பின் அதன் கீழ்ப்பாகத்தை அடியென்றும் மேற் பாகத்தை முடியென்றும் மொழிந்திடலாம். சொரூப சிவமோ உருவ முதலிய மூவகைத் திருமேனி நிலைகளையுங் கடந்ததாயும் ஓர் எல்லைக் குட்படாததாயும் உள்ள ஒன்றாதலின் அதன்பாட்டு அடியும் முடியும் இருத்தல் பொருந்தாதன்றோ? என்பது. இங்கு இவ்வாசங்கை பொருந்துவதே யாயினும் அச்சொரூப சிவத்தின் வண்ணமாகவேயுள்ள இருபெருந் தன்மைகளையே அடியென்றும் முடியென்றுங் கூறுவாராயினர் அநுபவம் படைத்த ஆன்றோர் என்றறிவோமாயின் இவ்வாறாய ஆசங்கை நிகழ்தற்கு இடமிராது. அவ்விருபெருந் தன்மைகள்தாம் யாவையோ? எனின், ஒன்று பரிபூரண ஞானம், (எல்லையில் பேரறிவு) மற்றொன்று பரிபூரண ஆனந்தம் (எல்லையில் பேரின்பம்). முன்னையது அடி, அருள் முதலிய பெயர்களானும், பின்னையது முடி, பொருள் முதலிய பெயர்களானும் மொழியப்படும். எனவே, பரிபூரண ஞானமே திருவடியென்பதூஉம் பரிபூரண ஆனந்தமே திருமுடியென்பதூஉம் பெறப்பட்டன. இவ்வுண்மைகள்,

"யானெனதென் றற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக"

என்று குமரகுருபர அடிகளும்,

"அடியெனுமதுவும் அருளெனுமதுவும் அறிந்திடிற் சிற்கன நிறைவு
முடியெனுமதுவும் பொருளெனுமதுவும் மொழிந்திடிற் சுகம்"

என்று தாயுமான அடிகளும் அருளியவாற்றானும் நன்குணரப்படும்.

சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவத்தைத் தேடிக் கண்டு கொள்ள வேண்டுமென்னுந் தீவிர வேட்கை கொண்டெழுந்த பக்குவிகளாயினார் அதனை முகத்துக் கண்கொண்டு பார்க்கமுடியாதென்று பொறிபுலக் காட்சியைப் போக்கித் தத்துவங்களையெல்லாங் களைந்து தாண்டி ஆன்ம சொரூபமென்னுந் தம்முண்மை விளங்கப் பெற்று அதன்மேற் பரமான்மாவை நோக்கி உண்முகப்பட்டு நிற்குங்கால் யானெனதென்றற்ற இடத்தே அவர்க்கு முதலாவது தோன்றுவது தடையிலா ஞானமென்னும் இத்திருவடியே. இவ்வடியென்னும் அருளில் அழுந்தப் பெற்றார், பின் முடியென்னும் மோனபரானந்தம் வந்து தம்மை முற்றும் விழுங்க "யானாகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே" என்றபடி பேரின்பமயமாகவே நின்றிடுவர். எனவே வீடடைந்தாரைத் திருவடி யடைந்தார் என வழங்கும் வழக்கின் கருத்தை இந்நிலையில் நின்று நோக்குவார்க்கு என்ன பொருள் தோன்றும்? அடியடைந்தார் என்பதற்கு அறிவின்ப மயமானார் என்பதன்றோ? பொருளாகத் தோன்றும். அன்றியும் "எங்குமாம் அண்ணல்தாள்" என்புழி அண்ணலாய கடவுளின் தாளே எங்கும் நிறைந்துளதாம் என்றிடின் அவன்றன் கை, கழுத்து, காது, கண், மூக்கு, தலை முதலிய பிறவுறுப்புக்கள் யாண்டிருக்கும்? அவை இருக்



தற்கு இடமே வேறு இன்றன்றோ? என்று கருத்தறியாதெழுங்கடா அடங்கற்கும் விடைதோன்றுமன்றோ? ஆதலால் அடிமுடிகளின் பொருளறியாதெழும் ஐயம் திரிபுகளைப் போக்கி "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே! தேசோமயானந்தமே! என்று மெய்யுணர்வுடையோரால் வியந்துருகி விளிக்கப்படுவன முறையே திருவடியும் திருமுடியுமாம் எனத் தெளிந்தின்புற நமக்கு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

# ஒரு வேண்டுகோள்

## தமிழ்க் கலைச் சொல்லாக்க மகாநாடு, சென்னை

(திருநெல்வேலியிலுள்ள சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் ஆதரவில் கூட்டப்பெறுவது)

அன்பரீர்,

ஒவ்வொரு நாளும், அறிவியற் பகுதிகள் வெகு வேகமாய்ப் பல்குகின்றன; பலப்பல நாடுகள் நாகரிகத் துறைகளில் மிகப் பெருவளர்ச்சி யடைகின்றன; அரசியல் துறைகள் மாறுபாடுற்று காலத்தின் தேவைகளுக்கேற்ப வியக்கத்தகும் வகையில் முன்னேற்ற மடைகின்றன. இந்நிலைகளுக்குதவியாக மிகப் பல புதுச் செய்திகளும் அறிபொருள்களும், அவற்றை விளக்கும் கலைச் சொற்களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. நமது உறவு மொழிகளாய தெலுங்கும் மலையாளமும் வெகு விரைவாய் முன்னேற்றமடைந்துவர நம் தாய்மொழி மட்டும் தயங்கிக்கொண்டிருக்கிறது. நம் மொழி போதுமான ஆற்றல், பல அரிய காவியங்கள் முதலியவற்றை யுடையதே எனினும், அதன் தவக்குறைவால் அதன் மக்களிடையே நீண்டகாலப் புறக்கணிப்பும் கவலைக் குறைவும் உண்டாகிவிட்டது. இதனால் நாள்

தொறும் பொதுமக்கள் வழங்குகிற சில இன்றியமையாச் சொற்களையுங்கூட நம்மொழி தனதாக்கிக் கொள்ளாதிருக்கின்றது. தமிழைத் தனது பழைய பெருமையுடைய நிலையிலும், உலகமொழிகளின் முன்னணியிலும் கொண்டுவரப் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவையாவும் ஆதரவின்மையாலும் தாங்குவார் முன்வராமையாலும் தடையுற்றன. இப்பொழுது நம்மொழி முன்னேற்றத்திற்கென அரிதில் முயன்றுவருகிற சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரை அன்புடன் ஆதரிக்கும்படி தமிழ்மக்கள் ஒவ்வொருவரையும் மிகவும் வற்புறுத்தி வேண்டிக் கொள்ளுகிறோம்.

இச்சங்கத்தின் ஆதரவில் சில ஆழ்ந்த அறிவாளிகளால் கலைச் சொற்களும் அவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பும் தயாரிக்கப்பெற்றன. அவை ஓர் அறிஞர் கழகத்தால் செப்பனிடப்பெற்றன. இவை "கலைச் சொற்கள்" என்னும் பெயருடன் வெளியிடப்பட்டு சின்னூட்களாகப் பரப்பப்பெறுகின்றன. இச்சொற்கள், முழுமையும், அகற்சியும், அரங்கேற்றமும் அடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் இச்சங்கத்தார் இச்சொற்களை ஈரொட்டாகக் கொண்டு பலப்பல சங்கங்களையும் அறிவாளிகளையும் திருத்தங்கள் ஒத்த சொற்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இவ்வெளியீட்டின் பிரதிகள் இதில் ஈடுபடக் கூடியவர்களுக்கு வழங்கப்பெற்றன; இன்னும் வழங்கப்பெறுகின்றன. இவற்றைச் செப்பஞ்செய்பவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதாக விளம்பரஞ் செய்யப்பெற்றிருக்கிறது. இதற்கேற்பச் சிலர் தங்கள் திருத்தங்களை அனுப்பியிருக்கின்றனர்; இன்னும் பலர் அனுப்பக்கூடுமெனத் தெரிகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை மாகாண ஆசிரியர் சங்கம், கரந்தை



மதுரை, கோயம்புத்தூர், சாத்தூர் முதலிய விடங்களிலுள்ள தமிழ்ச் சங்கங்கள் முதலியவற்றின் பிரதிநிதிகளடங்கிய ஒரு பேரறிஞர் கழகம் அமைக்கப்பெறுகிறது. இக்கழகத்திற்குத் தலைமை தாங்க உயர்திரு - சாமி விபுலாநந்தர் அன்புடன் இசைந்திருக்கின்றனர். இக்கழகம் சென்னையில் பச்சையப்பன் கட்டிடத்தில் நாளது செப்டம்பர் மாதத்து விடுமுறையில் கூடி அறிஞர்கள் அனுப்பும் சொற்களுட் பெரிதும் பொருத்தமானவற்றைப் பொறுக்கிக்கொண்டு ஏனையவற்றையும் திருத்தஞ் செய்யும். இக்கழகத் திறப்பை வெகு சிறப்பாக நடத்த ஒரு பொதுக்கூட்டமும் கூடும். இவ்வேலையின் வெற்றி தமிழ்மக்கள் எடுத்துக்கொள்ளும் ஊக்கத்தைப் பொறுத்ததாகலின் தமிழன்பராகிய தாங்கள் இவ்வியக்கத்தில் ஈடுபடும்படிக்கும், தங்கள் பேராதரவை அளிக்கும்படிக்கும் வரவேற்புக்கழக உறுப்பினராகும்படிக்கும் தங்களாலான பொருளுதவி செய்யும்படிக்கும் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்: தங்களன்புள்ள,

**டி. எஸ். நடராஜபிள்ளை**, பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர், தலைவர்,
பச்சையப்பன் அறநிலையம்.

வித்துவான் - **டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை**, எம். ஏ., பி. எல்.,
வழக்கறிஞர்.

**எஸ். கே. யக்யநாராயண ஐயர்**, எம். ஏ., தலைவர்,
சென்னை மாகாண ஆசிரியர் சங்கம்.

**எம். எஸ். கோடீசுரன்**, பி. ஏ., எல். டி., காரியதரிசி,
தலைமை ஆசிரியர் சங்கம்.

**எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை**, எம். ஏ., எல். டி.,
விடுதிபெற்ற ஆராய்ச்சியாளர், தமிழ் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

திவான்பகதூர் - **கே. தெய்வசிகாமணி முதலியார்**,
விடுதிபெற்ற கூட்டுப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள்,
சென்னை மாகாணம்.

**டி. என். சேஷாசலம் ஐயர்**, பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர்,
கலாநிலையத்தின் பத்திராசிரியர், சென்னை.

# பஞ்சாட்சரத்தின் பெருமை

[வீரசைவத் திருவாளர் - K. V. சிவசுப்பிரமணியன், B.A., சிதம்பரம்]

இஃது பஞ்ச + அக்ஷரம் என்னும் வடசொற் புணர்மொழி. இதனையே தமிழ் நூலார் திருவைந்தெழுத்தென்பர். இம்மந்திரத்தில் நம:, சிவ, ஆய என்னும் மூன்று பதங்களுண்டு. நம என்பது அங்கத்தையும் சிவ என்பது லிங்கத்தையும், ஆய என்பது சம்பந்தத்தையும் போதிக்கும். வேதஞதியாம் விண்ணவர் குழாத்தினுள் விளங்கும் பரமனே போல், பேதமாம் ஏழுகோடி மந்திரங்களில் ஐந்தெழுத்தாகிய புனிதமந்திரமே பெரியதாம். அதுபற்றி இது இராஜமந்திர மெனப்படும். வியாசர் வேதங்களை ரிக், யசுர், சாமம், அதர்வணமென நான்காக அறுதியிட்டுரைத்த ஞான்று, இப்பஞ்சாட்சரத்தின் மகிமை நால்வகை வேதங்களிலும் பரவி இருத்தல் உலகத்தார்க்கு உணர்த்தப்பட்டது. இம்மந்திரம் அண்டபிண்ட மெங்கும் நிலை பெற்றுச் சிவ உருவாய் விளங்கும். இம்மந்திரத்தை ஓதுவானொருவன் மனதுங்கெட்டாத சிவபதத்தை யடையுந் தன்மையால் இம்மந்திரத்தின் பொருள் பரப்பிரமமே எனக் கூறுவர் சைவ சித்தாந்தப் பொருளுணர்ந்தோர். அதுவே சொல்லும் பொருளுமாயிருத்தலின் அதைச் செபிப்பவன் பரசிவ ரூபமாய் விளங்குவன். அவற்றுள்ளும் 'சிவ' என்பது மும்மலமறுத்த பரம்பொருளைத் தரும். இவ்வுலகில் பிறப்பினையுறும் ஒவ்வோர் ஆன்மாவும் இருவினை என்னும் வெம்பவக் கடலுட்படிந்து உய்வகை யறியாது இடர்ப்பட்டுழல்வது திண்ணம். அங்ஙனம் ஜனித்த உலககோடி ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுப் பரமசிவன் இம்மந்திரத்தை உலகில் பாவவிடுத்தனன். மனமென்



கிற நிலத்தில் பஞ்சாட்சர மென்கிற வித்தை விதைத்தால் மனத்தைப் பண்படுத்தி மோட்சமாகிய பயனைத்தரும். இது எளிதாகலின் வேள்வி புரிதல் எற்றுக்கு? சூரியன் இல்லா வழி இருள்படர்ந்திருத்தல்போல திருவைந்தெழுத்தை ஓதாதவரையில் பிறவிப் பிணித்துன்பம் அவ்வான்மாவை விட்டகலாது. எனவே, வீடுபேறெய்த ஐந்தெழுத்தோதலே நேர் வழி.

ஊனை நீங்கிய சிவமுன்னர் நம்வினை யுரைக்கின்
ஞான மெய்திடு மனைவர்க்கு நம்பனூர் நயக்குந்
தான மெய்திநற் குரவராற் பெற்றவர் தங்கட்
கான சித்தியு முத்தியு மக்கணத் தாமால்.

—பிரமோத்ரகாண்டம்.

இம்மந்திரத்தின் பெருமையை யுணர்த்தும் பாக்கள் ஒரு சிலவற்றை இங்கே தர விரும்புகிறேன்:—

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.—தேவாரம்.

அங்கலிங்க பீடமாய் ஐயிரண் டெழுத்திலும்
பொங்கு தாமரையிலும் பொருந்துவா ரகத்திலும்
பங்கு கொண்ட சோதியும் பரந்த வஞ்செழுத்துமே
சிங்கநாத வோசையுஞ் சிவாயமல்ல தில்லையே.—சிவவாக்கியர்.

ஒன்றுகண் டீருலகுக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீருட லுக்குயி ரானதும்
நன்றுகண் டீரிது நமச்சிவா யப்பழம்
தின்று கண்டார்க்கது தித்தித்த வாறே.—திருமந்திரம்.

இல்லக விளக்கது விருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது

பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.—அப்பர் தேவாரம்.

அஞ்செழுத்தறைந்து ஒருகால் சிவபூசை புரிபவன் பவகோடிகள் போக்குவன். நாடோறும் சிறிது நேரமேனும் இதை மனனம் செய்தால் அவன் செய்துள பாவம் பகலவன் முன் இருளென இரியும். இம்மந்திரவலியால் முன்னொருகால் சநந்தனர் நரகத்திலிருந்தோர் பலரை மீட்டனர் என்ப. பரந்த பாக்களால் பரமனைப் பரவுதலினும் வரந்தரவல்ல பஞ்சாட்சரத்தை எப்போதும் ஜெபிப்பவன் பரமுத்தியில் நிலைப்பான். மற்றும் வாகீசப்பெருமானைக் கல்லிற் பிணித்துக் கடலிற் பாய்ச்சிய ஞான்று "சொற்றுணை வேதியன்.......... நற்றுணையாவது நமச்சிவாயவே" எனக்கூறி வாளாவிருந்தாராகலின் அஃது அவரைக் காத்தது. இருவினைக் கயிற்றினால் ஆணவமலமென்னும் கல்லினொடு கட்டப்பட்டுப் பிறவிப் பெருங் கடல் வீழ்ந்திருப்பவர், வீடாகிய கரைக்கண் ஏறி உய்ந்திடுமாறு அருளவல்ல அஞ்செழுத்தை விடாது பற்றிய வாகீசரை, இந்நீர்க் கடலில் ஒரு கல்லிற் பிணித்த காலை அவர் உய்வது திண்ணமெனக் கூறவும் வேண்டுமோ? மந்திரங்களுக் கெல்லாம் இது இறைமை பூண்டிருத்தலின் மணிவாசகப் பெருமானும் "நமச்சிவாய வாழ்க" எனத் திருவாசகத்தை யாரம்பித்தனர்.

பஞ்சாக்ஷரம் ஐந்து வகைப்படும். அவைவகளாவன :—

(1) ந என்னும் அக்ஷரம் முதலிலும் ய எனும் அக்ஷரம் கடையிலும் பொருந்த உச்சரிப்பது (நமசிவய) இது ஸ்தூல பஞ்சாக்ஷர மெனப்படும்.

(2) சி எனு மெழுத்து முதலிலும் ம எனு மெழுத்து ஈற்றிலும் பொருந்த உச்சரிப்பது சூக்கும பஞ்சாட்சரம். (சிவாயநம) இது ஒரு தலை மாணிக்கமெனப்படும்.



(3) ந எனு மெழுத்தையும் ம எனு மெழுத்தையும் நீக்கி சி எனு மெழுத்தையும் வ எனு மெழுத்தையும் முன்னும் பின்னுமாக நிலைபெறச் செய்து ய எனு மெழுத்தை இடையிற் பொருந்த உச்சரிப்பது காரண பஞ்சாட்சரம். இது இரு தலை மாணிக்கமெனவும் படும்.

(4) வ எனு மெழுத்தையும் சி எனு மெழுத்தையும் சேர்த்து வ சி என உச்சரிப்பின் மகா காரண பஞ்சாட்சர மாம்.

(5) சி எனு மட்சரத்தை உளத்திற் பொருந்தச் செய்வது முத்தி பஞ்சாட்சர மெனப்படும்.

இவ்வைந்தனுள் நமசிவய எனும் ஸ்தூல பஞ்சாட்சரத்தையே ஆச்சாரியர் மாணாக்கர்களுக்கு உபதேசிப்பர். இத்தகைய மந்திரம் ஒரு குருவால் பிறர் கேளா வண்ணம் காதில் உபதேசிக்கப்பட வேண்டும். சிவபக்தனானவன் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி யிருந்து நாடோறும் முட்முறை பிராணாயாமம் செய்து அம்பிகைபாகனை அன்போடு அகத்திலிருத்தி ஒடுங்கிய மனத்தோடு அம்மந்திரத்தை ஜெபித்தல் வேண்டும்; அப்போது அலைகின்ற மனம் சிவனது திருவடிகளில் ஒன்றும். பலர் இம்மந்திரத்தைப் பிறர் கேட்கும் வண்ணம் உரத்துக் கூறுவதுண்டு. அங்ஙனம் செய்யின் மனதை ஒருவழிப்படுத்த முடியாதாகலின் அது தவறு. பூப் பெய்திய பெண் தன் கணவனது பெயரை வாய்விட்டுச் சொல்லாதிருத்தல் போல, நாமும் சிவமந்திரத்தை வாய்விட்டுரைக்கக் கூடாது. இம்மந்திரத்தைச் செபிக்கும் முறை மூவகைப்படுமென்ப.

(1) அருகிலுள்ளோர்க்குக் கேட்குமாறு செபித்தல் வாசிகமெனப்படும்.

(2) உதடுகள் பொருந்த மெல்ல உரைப்பது உபாஞ்சு எனப்படும்;

(3) இதழ் தீண்டாது ஒருமையுற்று உள்ளத்தில் உன்னுதல் மாநதம் எனப்படும். இம்மூவகை முறைகளிலும் மாநதமே தலைசிறந்தது.

"பரம னர்ச்சனை யஞ்செழுத் தறைந்து பத்தியினால்
ஒருபகற் புரிபவன் சிவகதியினை யுறுவான்
விரத நற்றவ மகமிவை வித்தை கொண்டியற்றும்
ஒருமை யர்ச்சனை தனிற்கோடி கூற்றினி லொன்றெவ்வா"

என்ற சித்தாந்த சிகாமணி வாக்யப்படி ஒருவன் பஞ்சாட்சரத்தை மாநத முறைப்படி ஒரு நாள் செபிப்பினும் அது பல கோடி யாகங்கள் செய்த புண்ணியத்தைக் காட்டினும் பன்மடங்கு பெரியது.

பஞ்சாக்ஷரம் உச்சரிக்கும் முறை சூதசங்கிதையில் பின்வருமாறு கூறப்பட்டிருத்தல் காண்க.

பிரணவ மெழுவா யதன்பினர் நகாரம் பேசிடு மதன்பினர் மகாரம்
வாமுறு மதன்பின் சிகாரமற் றதன்பின் வயங்கிடு வகர வாகார
மூரவுறு மதன்பின் யகாரம் சாபாலவுப நிடதஞ்சொலு மிவ்வா
றரவணி சடையார்க் கன்பர் காண்முறையி னறிகவிச் சடக்கர மநுவை.

தேவார ஆசிரியர் மூவரும் திருவைந்தெழுத்தின் பெருமையைப் பல்வேறிடங்களில் பரக்கக் கூறுகின்றனர். சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த சித்தாந்த சிகாமணியிலும் சிவவாக்கியம், நிஷ்டானுபூதி, திருமந்திரம், பிரமோத்தரகாண்டம், சூதசங்கிதை, உடலறி விளக்கம், சிவஞான வள்ளலார் முதலிய நூல்களிலும் பஞ்சாட்சரத்தின் பெருமையும், வகைகளும், உபதேசம் பெறும் முறையும், செபிக்கும் முறையும், செபிப்பதனாலுறும் பலனும், செபித்தற்குரியா ரின்னாரென்பதும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஜனன மரணப் பிணியை நீக்குவதற்கு சிவதீக்ஷையே உரிய வழியாம். அத்தகைய சிவதீக்ஷை வேதா தீக்ஷை



எனவும், மந்திர தீக்ஷை எனவும், கிரியா தீக்ஷை எனவும் மூவகைப்படும். சம்சார பயத்தை யொழிக்கின்ற சிவ பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தின் ரூபத்தை வேறொருவனுடைய செவியில் விழாதவாறு சீடனது வலது செவியில் உபதேசிப்பது மந்திர தீக்ஷை எனப்படும். அத்துடன் பஞ்சாக்ஷர மந்திரத்தின் தன்மையையும், சந்தஸ், ருஷி, தேவதை, பீஜாக்ஷரம், ந்யாசம், பத்ததி முதலியவைகளையும் உபதேசிக்கவேண்டும். இப்பஞ்சாக்ஷர மந்திரத்தை சிறுவர்களுக்கு உபதேசித்தல் கூடாது. அம்மந்திரத்தை தவறாது உச்சரிக்கும் தன்மையையும் எண்ணத்தையும் பெறும் பருவத்தில்தான் திருவைந்தெழுந்தை உபதேசிக்கவேண்டும். இங்ஙனம் பஞ்சாக்ஷர விதிகளை விரிக்கிற் பெருகுமாதலால் இத்தோடு விடுத்தனன். இதன் விரிவை மேற்கூறிய நூல்களிற் கண்டுகொள்க.

இதுகாறும் முப்புரமெரித்த முடிசடைக் கடவுளே முழுமுதற்றலைவனெனவும், பஞ்சாக்கரமே பரமனது நாமங்களில் சிறந்ததெனவும், அம்மந்திரமே முக்தியைத் தந்து முடிவிலா வின்பத்தை அளிக்கத்தக்கதெனவும் கூறினேன். இனி, மந்திரமென்பது சாதாரணமான எழுத்துக்களாலான ஒரு மொழியாயிருந்தும், அம்மொழிக்கு மட்டும் ஏனைய மொழிக்கில்லா ஆற்றல் உண்டென்பது பொருத்தமாகுமா என்பது பற்றிக் கவனிப்போம். இலக்கண வரம்பிற்குட்பட்ட ஒவ்வொரு மொழியும் தனிப்பட்ட பொருளைத் தருவதும், சில மொழிகள் துன்பத்தையும், சில மொழிகள் இன்பத்தையும், மற்றும் சில வெகுளியையும் தருவதும் யாவரும் அறிந்ததே. எனவே, இறைவனின் குணம், செயல், கருணைத்தன்மை, வழிபாட்டு முறை முதலியவற்றைக் குறிக்கும் சொற்கள் அவ்வப்பயனைத் தரும் என்பது பெறப்படும். ஆகையால் இறைவனது வழிபாட்டு முறைப்பொருளமைந்த சொற்கள்

அப்பரமனுக்கு இன்பந்தருமென்பதும், வேண்டுவன தருவான் என்பதும் யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய தொன்று. வேதம் ருக், யசுர், சாமம் எனமூவகைப்படும்; அவற்றுள் நடுவணிருப்பது யஜுர் வேதம், அதன் காண்டங்கள் எழனுள் நான்காவது காண்டம் நடுவிலிருப்பது; அக்காண்டத்தின் எழு சங்கிதையுள் நடுவிலுள்ளது நான்காவது சங்கிதை; அதன் நடுவிலுள்ளது ஸ்ரீருத்ரம் எனப்படும்; அந்தருத்ரத்தின் நடுவிலுள்ளது "நமஃ சோமாயஸ" அதன் நடுவிலுள்ளது "நமசிவாயச" என்னும் வாக்கியம்; அவ்வாக்கியத்தின் நடுவிலுள்ளது 'சிவ' என்னுமெழுத்துகள். இவ்விரண்டெழுத்தே வேத இதயம் என்னும் ஆதிநாயகர்க்குத் தலைப்பெயராம். இத்தகைய பெருமை வாய்ந்த ஐந்தெழுத்தை வீடுபேற்றின்கண் விருப்புளார் யாவரும் தினமும் அன்பு பொருந்திய உளத்தராய் உச்சரித்தல் வேண்டும். சிவபெருமான் பாசத்தை விடுவிப்பவனாகலின் அவனது நாமமாகிய திருவைந்தெழுத்தும் பாசத்தினின்றும் விடுவிக்குமென்க. இவ்வைந்தோடு "ஓம்" எனும் பிரணவத்தைச் சேர்த்துரைப்பின் அது சடட்சரமெனப்படும்.

பரவுதற்குரித்தாம் பக்திப் பெருமையீர்!

நாடோறும் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி இருந்து மும்முறை பிராணயாமம் செய்து, பதுமாசனமாகத் தக்கதோரிடத் தமர்ந்து, இஷ்டலிங்கப் பெருமானிடத்து நோக்கம் வைத்து, திருவைந்தெழுத்தைப் பத்து நிமிடங்களேனும் முறை வழுவாது செபித்தல் வேண்டும். அடியேன் கூறியனவற்றை அன்பர்கள் அகத்திலிருத்தி அரனடிமை பூண்பாராக.



விண்ணப்பஞ் செய்வேனோ கெடாமல் நின்றதென்று விண்ணப்பஞ் செய்வேனோ இவையிற்றி லொன்றை அருளிச்செய்தருள் அடியேனுக்கு அறுதிப்பட,

குன்றாப் பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி - வளப்பங்கள் குறைவுபடாத பெண்ணையாற்று நீர் பாயப்பட்ட வயல்களையுடைய திருவெண்ணெய் நல்லூருக்குக் கர்த்தாவாக இருக்கப்பட்டவனே,

கைகண் டலைவாய் கால் செவி மூக்குயர் மெய்கொண் டென் வினை வேரறப் பறித்த மெய்கண்ட தேவே - காசரணாதிகளாயுள்ள அவயவங்களோடுங் கூடியிருக்கப்பட்ட திருமேனி யெடுத்துக்கொண்டு அடியேனுக் குண்டான கன்மங்களைக் கிளைப்பறப் பறித்துப்போட்ட மெய்கண்ட நாதனே,

வினையிலி - அப்படி ரூபீகரித்திருக்கையிலேயுங் கன்ம தொந்தனை யில்லாதவனே,

மைகொண்ட கண்ட - நஞ்சமாகிய கறுப்பினைத் தரித்தருளின கறைமிடற்றனே,

வழுவிலென்மதியே - அடியேனுக்குக் குற்றமற்ற அறிவாயிருக்கப்பட்ட தம்பிரானே.

ஜீவன் முத்தனை விழ் பிராரத்த தேகம் நிற்கவே மூன்று மலங்களும் போகாதென்றதுக்குச் சம்மதி சித்தியாரில், "அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகு மவுடதமர் திரமுடையார்க் கருவிடங்களேறா, வெங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும் ஞானிக்கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத், தங்கிப் போம் பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த சக்கரமுங் கந்தித்துச் சுழலு மாபோல், மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கு மெல்லா மலங்களும்பின் காயமொடு மாயு மன்றே" [x, 6] என்றும், வாதனை தோஷத்தினாலே அக்கினியைச் சேர்ந்த வித்தைப்போலவும், ஆயன் வெட்டின மரம்போலவும், புடம் பண்ணின பணம்போலவும், தத்த படம்போலவும் உருவமாத்திரமல்லாமல் பந்தமில்லை, காரண மலங்களுஞ் சரீரத்தோடு தேய்ந்தறு மென்றது. புண்ணிய பாவ மொன்றுக்கொன்று சமத்துவமானாலல்லவோ தேவரீரைப் பெறுவதென்று சொன்ன பழைய திருவாக்குப் புண்ணிய பாவத்துக்கேற்ற தேகம்

நிற்கவே வினையொத்ததென்று சீஷன் வினா, இருவினையொப்புக்குச் சரீரம் முன்னிலையல்ல புண்ணியத்திலேயும் பாவத்திலேயும் இரண்டி லேயும் சமமாக வெறுப்பு வந்ததே இருவினையொப்பு அப்போது ஆசா ரிய மூர்த்தமாக வந்து ரட்சிப்பன். உதாரணம் போற்றிப் பஃறொடை யில், "எல்லை யிரண்டு மிடையொக்கப்-பல்பிறவி, யத்தமதி லன்றோ வளவென்று பார்த்திருந்து, சத்தி பதிக்குந் தரம்போற்றி" [116-118] என்றும், அடியேனுள்ளத்திலே தேவரீர் அநுக்கிரகம் பண்ணுகிறதுக்கு முன் நின்ற தென்று சொல்வேனோ நிற்கவில்லை யென்பேனோ என்ற வினாவுக்கு உதாரணம் சித்தியாரில், "எங்குந்தா மென்னில்நா மெய்த வேண்டா எங்குமில னென்னில்வே றிறையு மல்ல, னங்கஞ்சே ருயிர் போல்வ னெங்கு மங்கத் தவயவங்கள் கண்போலக் காணா தான்மா, விங்குநா மியம்புந்தத் துவங்களில்லைத் தறிவ திறைஞானந் தந்து தா னீதல்சுட ரிழந்த, துங்கவிழிச் சோதியுமுட் சோதியும்பெற் றாற் போற் சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே" [viii, 38] என்பது கண்டுகொள்க. தேவரீ ரனுக்கிரகம் பெற்ற பிறகு மலந்தான் நின்றதென்று விண்ணப்பஞ் செய்வேனோ, நிற்கவில்லை யென்பேனோ யென்னும் வினாவுக்குச் சித்தியாரில், "நெல்லினுக்குத் தவிடுமிக ளானா தியாயே நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர், சொல்லி யிடிற் றுகளற்ற வரிசியின்பா லில்லை தொக்கிருந்து மற்றொருநெற் றோற்றிடாவா, மெல்லவிவை விடுமறவே யவைபோல வணுவை மேவு மல முடல்கன்ம மறுதிவிட்டே நீங்கும், நல்லசிவன் முத்தியின்கட் பெத்தான் மாவை நணுகிநிற்கு மாதலினால் நாசமுமின் றாமே" [xi,6] என்றும், சிவப்பிரகாசத்தில், "அழிந்திடும் பாச மென்னி னித்தமென் றுரைத்தல் வேண்டா, மழிந்திடா தென்னின் ஞான மடைவது கருத வேண்டா, மழிந்திடுஞ் சத்தி நித்த மகிழ்ந்திடா தொளியின் முன்ன, ரழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்தி டாவே" [x,9] என்றும் சொன்னது கண்டுகொள்க.

௧௦

அடியே னறிகிறதெல்லாந் தேவரீர் கூடி நின்றறிவிக்கிறதா யிருக்கவும் அடியேன் இந்த அஞ்ஞானத்தோடுங் கூடி மயங்கி நிற் கைக்கு வழியேதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

**மதிநின்பா லிந்த மலத்தின்பா னிற்க**
**விதியென்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய—பதிநின்பால்**



**வந்தா லிதில்வாரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன்**
**எந்தா யிரண்டாமா றென்.** ௧௧

**மேலிதற்கு வியாக்கி.**

மதிநின்பால் - அடியேனுக்குண்டா யிருக்கப்பட்ட அறிவு தேவ ரீர் பகுதியிலே யுண்டானது. அப்படி யிருக்கவும்,

இந்த மலத்தின்பா னிற்க விதியென்கொல் - அடியேன் இந்த மலத்தின் பகுதியிலே கூடி மயங்கி நிற்கைக்கு முறைமை ஏது தான்.

வெண்ணெய்வாழ் மெய்ய - திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட மெய்கண்ட நாதனே,

பதிநின்பால் வந்தால் - கர்த்தாவாயிருக்கிற தேவரீரை அடியேன் வந்து கூடினால்,

இதில் வாரத்தில் - இந்த மலத்திலே மீள வருகைக்கு வழக்கில்லை,

வந்திரண்டும் பற்றுகிலேன் - தேவரீரை வந்து கூடினால் அந்த அருளோடும் இந்த மலத்தோடும் ஒக்க நிற்கிறது அடியேனுக்குண்டா காது,

எந்தா யிரண்டாமா றென் - அடியேனுக்கு சுவாமியா யிருக்கப் பட்டவனே அடியே னொருத்தன் தேவரீரோடுங் கூடி யறிந்தும் இந்த மலத்தோடுங் கூடி யறியாமலுமா யிரண்டோடுங் கூடி யதுவது வாய் நிற்கைக்கு வழக்கேது.

விடயம்: அறிவு மிகுத்தவனு மாகாமல் அறிவில்லாத மூடனுமாகாமல் கதிபெற வேணுமென்கிற நடுவாந்தன்மையாகிய அனுட்டான பரனுக்கு இரண்டினு மாசைபற்றி யதுவதுவாய் நிற் பன். உதாரணம் சித்தியாரில், "பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப் படும்பொழுது நீங்கியது விடும்பொழுது பரக்கு, மாசு படு மலமாயை யருங்கன்ம மனைத்து மரனடியை யுணரும்போ தக லும்பின் னணையும், நேசமுடன் றிருவடிக்கீ ணீங்காதே தாங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாக, வாசையொடு மங்கு மிங்கு மாகியலம் வருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்" [viii,39]. இவனுக்குள்ள வறிவு கத்தாவிடமாக வுண்டா கையிலேயும் மலத்திலே மயங்குவானேனென்ற வினாவுக்குக் கத்தா கன்மத்து வழியே நடத்துவ னென்பது கருத்து. சிவஞானபோதத்தில்,

"அவையேதானே யாயிருவினையிற், போக்கு வரவு புரிய வாணையி, னீக்க மின்றி நிற்கு மன்றே" [சூ. ௨] என்பது கண்டுகொள்க. ௧௧

தேவரீர் அனவாதமும் உயிர்க்குயிராய் நின்றறிவிக்கு மென் றிருக்கையிலே அடியேனோடும் ஒருகாற் கூடியும் ஒருகா னீங்கியும் வருகைக்கு வழியே தென்று மாணவகன் கேட்கும் வினா மேலருளிச் செய்கின்றது.

எண்டிசை விளங்க விருட்படாம் போக்கி
முண்டக மலர்த்தி மூதறி வருளு
மேதினி யுதய மெய்கண்ட தேவ
கோதி லமுத குணப்பெருங் குன்ற
வென்னி னூர்தலு மகறலு மென்னைகொ
*லுன்னிற் றுன்னி யுநுவிடிற் பெயர்குவை
யென்னு மதுவே நின்னியல் பெனினே
வியங்கோ ளாளனு மாகி யியங்கலு
முண்டெனப் படுவை யெண்டோண் முக்கண்
யாங்கணும் பிரியா தோங்குநின் னிலையின்
யான்வந் தணைந்து மீள்குவ னாயி
னாற்றுத்துய ருற்றோ ரணிநிழ லசைஇ
வீற்றுவீற் றெழுதர வேண்டலும் வெறுத்தலு
மின்றிச் சாயைக்கு நன்றுமன் னியல்பே
யனையை யாகுவை நினைவருங் காலை
யிந்நிலை யதனி னேழையேற் கிரங்கி
நின்னை வெளிப்படுத் தொளிப்பை நீயே
லருண்மா றுகும் பெருமவஃ தன்றியு
நிற்பெற் றவர்க்கு முற்பவ முண்டெனுஞ்
சொற்பெறு மஃதித் தொல்லுல கில்லை
யவ்வவ் வமைவுஞ் †சார்பு மயர்வறச்
சொல்லிற் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல்லிறந் தோயே. ௧௨

மேல் வியாக்கி.

எண்டிசை விளங்க விருட்படாம் போக்கி முண்டக மலர்த்தி மூதறிவருளும் - அடியேன் தேவரீரைப் பெறவேண்டுகைக்கு விசா

பா - ம்—*லுன்னி லுன்னி. †சோர்வு.



ரித்தறிய வேண்டும் பகுதிகளெல்லாம் விளக்கஞ் செய்யத்தக்கதாக அடியேனை மறைக்கப்பட்ட அஞ்ஞானமாகிய போர்வையை நீக்கி அடியே னிருதய கமலத்தினையு மலர்வித்து அறுதியாயிருக்கப்பட்ட திருவருளையும் அடியேனுக்குக் கடாட்சித்தருளிய,

மேதினி யுதய - பூமியிலே தோன்றியருளின ஞானவாதித் தனே,

மெய்கண்ட தேவ-மெய்கண்ட தேவனென்கிற திருநாமத்தினை யுடையவனே,

கோதி லமுத - குற்றமற்ற அமிர்தமா யிருக்கப்பட்டவனே,

குணப்பெருங்குன்ற - நற்குணங்க ளெல்லாமுடைய பெரிய மலையே. எனவே மலைபோலும் பெருமையை யுடையவனே யென்ற தென வறிக.

என்னி னூர்தலு மகறலு மென்னைகொல் - எங்கும் பூரணமாய் நிற்கிற தேவரீர் அடியேனோடு ஓரவதாரத்திலே கூடியும் ஓரவதாரத் திலே பிரிந்தும் நிற்கிறது எது பிரகாரமென் றருளிச் செய்தருள். கொல் ஐயம்.

அது நீ நினைக்கும் பொழுது கூடியும் நினையாதபொழுது நீங் கியும் நிற்போம்.

உன்னிற் றுன்னியுநுவிடிற் பெயர்குவை யென்னு மதுவே நின்னியல் பெனினே - அப்படித் தேவரீர் கூடியும் பிரிந்தும் நிற்கிற தும் அடியே னினைக்கும் பொழுது கூடியும் நினையாத பொழுது நீங்கியும் வருகிறதே தேவரீர்க்கு முறைமையா மென்றருளிச் செய் யில்.—உதாரணம் தேவாரம், "பன்னிலூறும் பழத்தினி லின்சுவை, யென்னி லூறி யெனக்கே களிதரு, முன்னி லுன்னு முநுவிடில் விட்டிடு, மென்னு னீச னிருந்த வியற்கையே" என்பது கண்டு கொள்க. பாடம்.

வியங்கோ ளாளனு மாகி யியங்கலு முண்டெனப் படுவது - அப் பொழுது தேவரீர் அடியேனுக்கு ஏவற்றொழிற் செய்கிறவனுமாய்ப் பூரணமில்லாத போக்கு வரவு செய்யப்பட்ட ஏகதேசி யென்று சொல்லவும் படும். அப்படி யல்ல நாம் அசைவற நிற்க நீதானே கூடி யும் பிரிந்தும் வருவை,

எண்டோண் முக்க ணியாங்கணும் பிரியா தோங்குநின் னிலை யில் யான்வந் தணைந்து மீள்குவ னாயின்-எட்டுத் திருப்புயமும் மூன்று

திருநயனமு முடைத்தாய் எவ்விடமும் நீங்காம லுயர்ந்த நின்னுடைய பூரண நிலையிலே அடியேன் வந்து கூடி மீளவும் பிரிவேனுமாகில்.—உதாரணம் சிவஞானபோதத்தில், "ஐம்பொறியி னல்லையெனு மந்தரசிவனை, ஐம்பொறியை விட்டங் கணைசகல - னைம்பொறியி, னீங்கா னீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரி, னீங்கானை நீங்கு நினைந்து" [viii, 8] என்றும், "ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யா"மென்றுஞ் சொன்னது கண்டு கொள்க. என்றும் போத மடங்கின விடத்திலே சிவனைப் பொருந்துவ னென்றும், போத மேலிட்ட விடத்திலே சிவனையிழந் திருப்ப னென்றும், "போதம் பதைப்பறவே பூரணமாம் பூரணமும், போதம் பதைத்தளவே பொய்யாகு" [ஒழிவிலொடுக்கம், பொதுவி. 47] மென்றும் முன்னோர்கள் சொன்னதுங் கண்டுகொள்க. மேற்பாடம்.

ஆற்றுத்துய ருற்றோ ரணிநிழ னசைஇ வீற்றுவீற் றெழுதா வேண்டலும் வெறுத்தலு மின்றிச் சாயைக்கு நன்றுமன் னியல்பே-வழிநடக்கிறவர்கள் பொடிச் சூட்டினாலே வருத்தப்பட்ட அவதாரத்து அழகிதாகக் குளிர்ந்த நிழலுக்கு ஆசைப்பட்டுச் சென்று வேண்டத் தக்க இடங்களிலே யிருந்திருந்து போமிடத்து இவர்கள் இங்கனே வந்திருக்கப் பெற்றதே யென்கிற பிரியமும் நம்மை விட்டுப் போனார்களென்கிற அப்பிரியமும் அந்த விருட்சத்துக் கில்லையானாற் போல ஒப்புச் சொல்லலாம் தேவரீர்க் குண்டான முறைமையையும்,

எனையை யாகுவை நினைவருங் காலை - தேவரீர் சர்வஞ்ஞனென்றிருக்கு மவதாரத்தும் அங்ஙன மருளிச் செய்தது எதாம் விசாரிக்குமிடத்து. அப்படியல்ல நீயும் நாமும் போக்கு வரவின்றி நின்ற நிலைதன்னிலே நீ நினைக்கும் பொழுது நாம் பிரகாசித்தும் நீ நினையாத பொழுதுநாம் மறைந்தும் நிற்போம்,

இந்நிலை யதனி னேழையேற் கிரங்கி நின்னை வெளிப்படுத் தொளிப்பை நீயேல் - இப்பொழுது இங்ஙனம் நின்ற நிலைதன்னிற் கொச்சையா யிருக்கப்பட்ட அடியேனுக்காக் கிருபை செனித்து அடியேனிடத்திலே யெழுந்தருளி மீளவும் மறைந்து நிற்குமாயின்.—உதாரணம் சித்தியாரில், "இருஞ்சுரவிக் கெங்கு, முருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே" [xii, 4] என்பது கண்டுகொள்க. மேற்பாடம்.



அருண்மா றாகும் பெரும - தம்பிரானே தேவரீர் அனுக்கிரகவானென்கிறதுக்கு மாறுபாடுண்டாம். அஃதன்றியும்,

நிற்பெற் றவர்க்கு றூற்பவ முண்டெனுஞ் சொற்பெறும் - அப்படி யனுக்கிரகவானல்லவென்கிற தன்றியுந் தேவரீர் திருவடியை அடைந்தவர்களுக்கு மீண்டுஞ் செனன முண்டென்கிற சொல்லையு முடைத்தாயிருக்கும்.

அஃதித் தொல்லுலகில்லை - அப்படியாகையால் அனாதியே தொடங்கித் தேவரீர் திருவடியைப் பெற்ற பெரியோரொன்று சிலர் உண்டாகப் போகிறதுமில்லை. ஆகையால்,

அவ்வவ் வமைவுஞ் சார்பும் - அடியேன் விண்ணப்பஞ்செய்த அந்தந்த நிறைவும் சேர்ச்சியும்,

மயர்வற - அடியேனுக்கு மயக்கந் தீரத்தக்கதாக,

சொல்வில் - தேவரீ ரருளிச்செய்யில்,

சொல்லெதிர் சொல்லாச் சொல்லே சொல்லுக - அடியேன் மறுத்து எதிருத்தரம் விண்ணப்பஞ்செய்யாதபடி யருளிச்செய்தருள வேணும்,

சொல்லிறந்தோயே - வாக்கினா லுச்சரித்தற்கும் அப்பாற்பட்ட தம்பிரானே.

அவ்வவ்விடத்திலே சிவன் நிறைந்திருக்கிறதும் ஆன்மாப் பொருந்தியிருக்கிறதும் எப்படியென்னில் [முதலாவது] உடலு முயிரும்போலவுங் கண்ணு மாதித்தனும்போலவும் ஆன்மாவும் ஆன்ம ஞானமும்போலவும் விட்டு நீங்காமற் பொருந்தியிருக்கும், அப்படியிருக்க விட்டும் பற்றியும் வருவானேனென்னில் அனாதியே மலசம்பந்தனாகையாலே நீ நினைத்தவிடத்திலே பிரகாசிப்போம் நினையாத விடத்திலே நீங்கி நிற்போமென்று திருவுளம்பற்றினது. இரண்டாவது விட்டு நீங்காத பரிபூரண நிலையிலே ஆன்மா வந்து பொருந்தி நீங்குவனென்று சொன்னது மலபோதம் நீங்கினவிடத்திலே சிவனைப் பொருந்துவனென்றும் போதமேலிட்ட காலத்திலே சிவனையிழந்து நிற்பனென்றுஞ் சொன்னது. மூன்றாவது ஏழையாயுள்ள அடிமைக் கிரங்கி யனுக்கிரகம்பண்ணி நிற்போமென்றது பத்தியினாலே வழிபடுகிற அடியார்களுக்கு மனதபீட்டந் தீர்த்து நீங்கி நிற்போமென்று திருவுளம்பற்றின[து. ஆகையாலே விட்டும் பற்றியும் வருகிறது மூன்று பிரகாரணமாகத் திருவுளம் பற்றின]துங் கண்டுகொள்க. கஉ

இங்ஙனந் தத்துவாதீதனாயிருக்கிற தேவரீர் அடியேனுக்கு இந்த மாயா கருவிக[ளாகிய வுடம்புக]ளை யுண்டாக்க அடியேன் அதனோடுங் கூடி யிருந்தும்[அதனோடே] கூடாமனின்றும் வருகைக்கு [வழியே தென்னும்] வினா மேலருளிச்செய்கின்றது.

> இறந்தோய் காரணங்க ளெல்லா மெனக்குச்
> சிறந்தோ யெனினுமெய்த் தேவே-பிறந்துடனாங்
> காயங் கொளவுங் கொளாமலுங் கண்டதுநீ
> யாயன்கொல் பாதவத் தற்று. ௧௫

**மேலிதற்கு வியாக்கி.**

இறந்தோய் காரணங்களெல்லாம் - கருவி கரணாதிகளைக்கொண்டு அறியும் அறிவுக்கெட்டாமல் அகன்று நிற்கிற நீ,

எனக்குச் சிறந்தோய் - அவையிற்றை யெனக்குண்டாக்கினாய்,

எனினும் - அப்படி யுண்டாக்கி யிருக்கவும்,

மெய்த்தேவே பிறந்துடனாங் காயங் கொளவுங் கொளாமலுங் கண்டது நீ - மெய்கண்ட தேவனே பிறந்துடனாய் மெய்போலப் பொருந்தியிருக்கிற சரீ மிது பொய்யென்று பொருந்தாமலும் பண்ணினது தேவரீர்,

ஆயன் கொல் பாதவத் தற்று - இடையன் வெட்டின மரம் பாதி பச்சையும் பாதி யுலர்தலும்போல, மெய்யாயிருந்த சரீரம் பொய்யென் றறிவித்து நீங்கியும் நீங்காமலிருந்தது.

அன்றியும், காயங் கொளவுங் கொளாமலும் என்பதற்கு இந்த உடல் மெய்போலிருந்தும் உற்றுப்பார்த்தளவில் பொய்போலிருக்கிறதும் என்று பொருளுரைப்பினும் அமையும். அப்படி இந்த உடல் மெய்போலிருந்தும் பொய்யா யழியுமென்றதற்குப் பிரமாணம் சித்தியார்,

> "மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வு
> மெண்டரு பூத பேத யோனிகள் வாழ்வு மெல்லாங்
> கண்டவிந் திரமா சாலங் கனாக்கழு திரதங் காட்டி
> யுண்டுபோ லின்றாம் பண்பி னுலகினை யசத்து மென்பர்" [vi,3]

என்றும்,



> "கணத்திடைத் தோற்றி மாயுங் காயமென் றறிந்தொ ருக்கால்
> வணக்குநீ ரனை யென்றும் வானவர் வணங்க வைப்பன்" [ii,96]

என்றும், தேவாரத்தில்,

> "வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்"

[சுந்தரர், கேதாரம், 1] என்றும்,

> "இன்றுளே னாளை யில்லே னென்செய்வான் றோன்றி னேனே"
> [அப்பர், குறைந்த நேரிசை, i, 1]

என்றும் வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க. சரீரத்திலே பொருந்தியிருக்கையிலே காய நீக்க மெப்படியென்னின் சரீரம் பொய்யென் றறிவித்துத் தீட்சைக் கிரமங்களினாலே மலங்களைப் போக்கினபடியினாலேயும் அருளில் பொருந்தினபடியினாலேயுஞ் சிவனிடத்திலே சம்பந்தமல்லாமற் காயத்திலே சம்பந்தமில்லை. உதாரணம் சித்தியாரில், "தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே சிவன்பிரகாசிக்குமிங்கே சீவன்முத்த னுக்கு, முரியமல மவுடதத்தாற் றடுப்புண்ட விடமு மொள்ளெரியி னொளிமுன்ன ரிருளுந் தேற்றின், வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போ லாகி மாயாதே தான்சத்தி மாய்ந்து காயந், திரியுமள வும்முளதாய்ப் பின்பு காயஞ் சோராத வகைதானுந் தேயு மன்றே" [xi, 4] என்பது கண்டுகொள்க. ௧௫

அடியேனுக்குப் புண்ணிய பாவங்க ளென்கைக்கு வழி ஏதென்னும் வினா மேலருளிச் செய்கின்றது.

> அற்றதென் பாச முற்றதுன் கழலே
> யருட்டுறை யுறையும் பொருட்சுவை நாத
> வேறென் றிருந்த வென்னை யான்பெற
> வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ
> விருவினை யென்ப தென்னைகொ லருளிய
> மனமே காயம் வாக்கெனு மூன்றி
> னிதமே யகித மெனுமிவை யாயிற்
> கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா
> காரணஞ் சடமதன் காரிய மஃதா
> லாரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
> செயலென தாயினுஞ் செயலே வாரா

இயமன் செய்தி யிதற்கெனின் னமைவும்
பின்னையின் றுகு மன்னது மிங்குச்
செய்திக் குள்ள செயலவை யருத்தின்
மையறீ ரியமற்கு வழக்கில்லை மன்ன
வொருவரே யமையு மொருவா வொருவற்
கிருவரும் வேண்டா விறைவனு நின்றனை
நின்னது கருணை சொல்லள வின்றே
யமைத்தது துய்ப்பி னெமக்கனை வின்று
முள்ளது போகா தில்லது வாரா
துள்ளதே யுள்ள தெனுமுறை யதனாற்
கொள்ளும் வகையாற் கொளுத்திடு மாயின்
வள்ளன் மையெலா முன்னிட வமையு
மீய வேண்டு மெனும்விதி யின்று
மாயினு மென்னை யருந்துயர்ப் படுத்த
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமுங் கரும பந்தமுந்
தெருள வருளுஞ் சிவபெரு மானே. கச

## மேலிதற்கு வியாக்கி.

அற்றதென் பாச முற்றதுன் கழலே-தேவரீர் அனுக்கிரகத்தாலே அடியேனுக்கு உண்டாயிருக்கப்பட்ட பாசபந்தங்கள் நீங்கினதுந் தப்பாது உன்னுடைய திருவடியிலே கூடினதுந் தப்பாது,

அருட்டுறை யுறையும் பொருட்சுவை நாத - திருவருட்டுறை யாகிய திருவெண்ணெய் நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட அடியேனுக் கினிமைப்பயனா யிருந்துள்ள தம்பிரானே,

வேறெனன் றிருந்த வென்னை யான்பெற வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ-தேவரீரை விட்டு அடியேன் அன்னியமா யிருப்ப னென்று கண்டிருந்த அடியேனை அடிமையென்கிற முதலுங்கெடாமற் றேவரீரைவிட் டன்னியமாகாத முறைமையைக் கடாட்சித்தருளின மெய்கண்ட நாதனே,

இருவினை யென்ப தென்னைகொல் - அடியேனுக்குப் புண்ணிய பாவங்கள் உண்டென்றது ஏதுகாரணங் கொண்டு. கொல் ஐயம்.



அருளிய மனமே காயம் வாக்கென மூன்றி னிதமே யகித மெனு மிவை யாயிற் - தேவரீரருளிச் செய்யப்பட்ட மனத்தி னினைவாலும் வாக்கின் சொல்லாலும் காயத்தின் றொழிலாலு முண்டாகப்பட்ட விருப்பு வெறுப்பினாலே இருவினையாகிய புண்ணிய பாவங்களுண்டா மாகில்.—உதாரணம் சிவப்பிரகாசத்தில், “உற்றதொழி னினைவுரையி னிருவினையு முளவா” [ii, 13] மென்பது கண்டுகொள்க. மேற்பாடம்.

கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா - அப்படி யுண்டாகப்பட்ட நினைவுஞ் சொல்லுந் தொழிலுந் தோன்றினவுடனே யழிந்துபோம் அவையிற்றுக்கு ஒரு தினையளவு கண்டிப்பு மில்லை யாம். அன்றியும்,

காரணஞ் சடமதன் காரிய மஃதால் - அந்த மன வாக்குக் காயங் களாகிய கன்மத்தின் காரணஞ் சடமா யிருப்பதொன்று அதன் காரி யங்களு மப்படிச் சடமேயானால்,

ஆரணங் காம்வழி யடியேற் கென்னைகொல் - அப்படிச் சடமா யிருக்கப்பட்ட கன்ம காரியங்கள் அடியேன் மேல் எடுக்கிற செனனங் களிலே வந்து பொருந்தி வருத்துகைக்குச் செயலுண்டாகைக்கு வழி யேதுதான். கொல் ஐயம். அப்படி அந்தக் கன்மங்கள் சடமா யிருந்தாலும் நீ யறிவுள்ளவனாகையாலே உன்னோடுங் கூடும் அவ தாத்து அதற்குச் செயலுண்டா யிருக்கும்,

செயலென தாயினுஞ் செயலே வாராது - அப்படி அடியேனுக் குச் செயலுண்டென்று சொல்லுகைக்கு வழியில்லை அப்படி யறி வுண்டாமாகில் அடியே னிச்சைப் படியே முடியக் கண்டது மில்லை, அன்றியும்,

இயமன் செய்தி இதற்கென்-அடியேனுக்கு அப்படி வேண்டின காரியங்கள் செய்துகொள்ளுகைக்குச் செயலுண்டாமாகில் அடியே னுக்கு இயமதண்டமுண்டாகத்தக்க பொல்லாங்குகள் செய்துகொள்வ தில்லை. அதுவுமன்றியும்,

தின் னமைவும் பின்னையின் றுகும் - அப்படி அடியேனுக்கு வேண்டத்தக்க காரியஞ் செய்துகொள்ளத்தக்க செயலுண்டாமாகில் தேவரீர் செய்விக்கிறது மில்லையாய் முடியும்,

அன்னது மிங்குச் செய்திக் குள்ள செயலவை யருத்தின் - அப் படித் தேவரீர் செய்விக்கிறதும் இப்பொழுது அடியேன் செய்த கன் மத்துக்குத் தக்கது மேலைக்குப் புசிப்பிக்குமாகில்,

மையற்றி னியமற்கு வழக்கில்லை யன்ன - தம்பிரானே மயக்க மற்ற இயமன் அடியேனைத் தண்டப்படுத்துகைக்கு வழக்கில்லையாம். அப்படியானாலும் நீ செய்ததற்குத் தக்கது நாமுஞ் செய்விப்போம் இயமனுந் தண்டப்படுத்துவன். அப்படியானால்,

ஒருவரோ யமையு; மொருவா யொருவற் கிருவரும் வேண்டா என்பதனை ஒருவரையொருவற் கொருவரே யமையு மிருவரும் வேண்டா என்று பொருந்தற்கேற்க மாறுக. பொருளாவது ஒப்பற்ற தனிமுதலான தேவரீர் அடியேனொருத்தனுக் கொருத்தரேயமையும் தேவரீரும் இயமனுங்கூடித் தண்டிக்க வேண்டுவதில்லை. ஆகையால்,

எம்மையுமை யின்றியமை - சர்வமுந் தேவரீர் செயற்படுத்துமென் றிருக்கும்படியும் யென்னை யொருவரைக் கூடித் தேவரீர் செயற்படுத்தில் தேவரீர் சர்வசுதந்தரரென்கிறதும் இன்றே நின்றது. அது வென்னென்று கேட்டருளுகில்,

நின்னது கருணை சொல்லா வின்றே - தேவரீர் காருண்ணியத்தின் பகுதியை யடியேனால் விண்ணப்பஞ்செய் தளவுபடுத்தத்தக்க தல்லவே.—அப்படியிருக்கச் சொன்ன இருவினையாகிய மனவாக்குக் காயங்களிலே தோன்றப்பட்ட கன்மமுஞ் சடம் அதன் காரணமுஞ் சடமாகையால் அந்தக் கன்மங்கள் செனனமரணத்திலே வந்து பொருந்துகைக்கு அறிவில்லையென்று கேட்க அதற்கறிவாயுள்ள ஆன்மாவோ பொருந்தினவிடத்திலே செயலுண்டென்ன அப்படிச் செயலுண்டானால் அப்படிக் கன்மம் வருவானேனென்ன அதுவும் நீ செய்த கன்மத்துக்கேற்றபடி செய்வோமென்ன அதுக்குத் தேவரீர் போதும் இயமனைக்கொண்டு தண்டிக்கவேணுமோவென்ன யமனுந் தண்டிப்பான் நாமுந்தண்டிப்போ மென்றதற்கு உதாரணம் சிவப்பிரகாசத்தில், "படைத்தவொரு படியன்றிப் படைவயக காரய்ப்பண்ணியதென் முன்னைவினைப் பான்மை யென்ப, நுகர்ந்தவினை யுளதாகி விளையே யெனென்னில் சேதனையற் றியைபாவிக் கமைத்த தாகு, மெடுத்தவினை யுருவமுயிர் தானே யிருவினைக்குத் தக்கவுடலெய்து மென்னிற், சடத்திரளு மகத்தாய வறிவொன் றில்லாத் தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே" [ii, 6] யென்றும், போற்றிப்பஃறொடையில், "தான்யாள, வெற்றிக் கடுந்தூதர் வேகத் திடன்வந்து, பற்றித்தம் வெங்குருவின் யாற்காட்ட - இற்றைக்கு, மில்லையோ பாவி பிறவாமை யென்றெடுத்து, நல்லதோ ரின்சொல் நடுவாகச்-சொல்லி யிவர், செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று, வெய்துற் றுரைக்க விடைகொண்டு - மையறுருஞ், செக்கி லிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்துந், தக்கதொருப் புத்தூண் டழுவவித்து - மிக்கோங்கு, நாராசங் காய்ச்சிச் செவிமடுத்து நாவரிந்து, பீராவுண் டூனத்தின் னென்றடித்தும் - போராம, லங்காழ் நரகத் தழுந்துவித்தும் பின்னுந்தம், வெங்கோப மாறாத வேட்கையரா - யங்கொருநா, ளெண்ணிமுதல் காணாத வின்னற் கடுநரகம், பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு - முன்னுடிக், கண்டு கடன் கழித்தல் காரியமா மென்றெண்ணிக், கொண்டு வருநோயின் குறிப்பறியார் - மண்டெரியிற், காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதிய, மீத்துத்தாய் தந்தை தமரின்புறுதல்" [82 - 100] போல அப்படிச் செய்கிறதுங் கருணையே. இப்படி வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க. மேற்பாடம்.



அமைத்தது துய்ப்பின் எமக்கனை வின்று முள்ளது போகா தில்லது வாரா துள்ளதே யுள்ள தெனுமுறை யதனால் என்பதனை உள்ளது போகா தில்லது வாரா துள்ளதே யுள்ள தெனுமுறை யதனா லமைத்தது துய்ப்பின் எமக்கனை வின்றும் என்று மாறுக. பொருளாவது அடியேனுக் குண்டாகிய கன்மம் யாதொன் றுண்டு அதுபோகாது இல்லாத கன்மங்கள் வாராது ஆகையால் யாதொன்றாழிலே யுண்டாகப்பட்டது அதுவே இப்பொழு துண்டா மத்தனை என்று தேவரீர் அருளிச் செய்த திருவாக்கினால் அடியேனுக்குண்டான பிராரத்துவம் புசிக்கிற தொழிய மேலைக்கு உற்பத்தியாக ஆகாமிய முண்டாகைக்கு வழக்கில்லையே,

கொள்ளும் வகையாற் கொளுத்திடு மாயின்-பிராரத்துவம் புசிக்குமிடத்து ஆகாமிய முண்டாமென்று அருளிச் செய்யில்.—உதாரணம்: "மேலைக்கு வருவினையே தென்னி லக்கண் விருப்புவெறுப் பெனவறியல் விளைவு மெல்லா, மூலத்து வினைப்பயனு மென்னி னுமேன் முற்றியதன் பயனுனக்கு முளைக்கு மென்பர்" [சிவப்பிரகாசம், ii, 12] என்று சொன்னது கண்டு கொள்க. மேற் பாடம்.

வள்ளன்மை யெல்லா முள்ளிட வமையும் - தேவரீருக்குண்டாகிய வளப்பாடுகளெல்லாம் நினைத்திருந்தாற் போதும். அன்றியும்,

ஈயவேண்டு மெனும் விதியின்றும் - அப்படிப் பிராரத்தம் புசிக்கு மிடத்து ஆகாமிய மேறுமாகில் கொடுத்துப் புண்ணியம் பெற வேணு மென்று நூல்களை விதிக்க வேண்டுவ தில்லையாம்,

ஆயினும் - அடியேன் கேட்ட வினவுக்குத் தேவரீர் அருளிச் செய்த தொன்றும் புலப்பட வருளிச்செய்த தில்லையாகிலும் இன்ன முந் தேவரீ ரருளிச்செய்யாமல் அடியேனறியும் பகுதியுமில்லை,

என்னை யருந்துயர்ப் படுத்த நாயினேற்கு நன்றுமன் மாயக் கருமமுங் கரும பந்தமுந் தெருள வருளுஞ் சிவபெருமானே என்பதனை என்னை யருந்துயர்ப்படுத்தக் கருமமுங் கருமபந்தமு நாயினேற்கு நன்றுமன் மாயத் தெருளவருளுஞ் சிவபெருமானே யென்று பொருளுக் கேற்க மாறுக. பொருளாவது அடியேனுக்கு அரிய துக்கங்களை யுண்டாக்கப்பட்ட கருமமாகிய புண்ணிய பாவங்களுண்டாகிறதும் அந்தப் புண்ணிய பாவங்க ளனுபவிக்கு மிடத்து மேலைக்குச் செனனத்துக் கேதுவாகிய ஆகாமிய கன்மமான கருமபந்தங்களுண்டாகிறதும் நாயாயிருக்கப்பட்ட அடியேனுக்குத் தேவரீர் திருவுள்ளம் வாழ்ந்தருளி விளங்க அருளிச் செய்தருள வேணும் சிவமுதலாயிருக்கப்பட்ட தம்பிரானே.

கச

இங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மங்களும் அடியேனுக்குக் கூடுகைக்கு வழி ஏதென்று கேட்கும் வினு மேலருளிச் செய்கின்றது.

மானமருஞ் செங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன
போன வினைதானே பொருந்துமோ-யான தனி
லாவனோ வாக்கா யமலனு நின்னருடான்
றேவனே யாதுக்கோ தேர்.

கரு

**மேலிதற்கு வியாக்கி.**

மானமருஞ் செங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன - செந்தாமரை மலர் போன்ற சீயத்தத்திலே மான்மறியைத் தரித்துக்கொண்டு திருமதிளி னுயர்ச்சியாலே சிறப்பினை யுடைத்தாகிய திருவெண்ணெய்நல்லூரிலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட தம்பிரானே,

போன வினை தானே பொருந்துமோ - முற்செனனத்திலே அடியேன் செய்த புண்ணிய பாவங்களான வினைகள் தானே வந்து அடியேனைக் கூடுமோ,



யானதனி லாவனோ - அடியேன்றான் அந்த வினைகளைக் கூடுவேனோ. இவை யிரண்டுமன்றித் தேவரீர் கூட்டிச் செய்விக்கு மென்னில்,

தேவரீர் நின்மல சொரூபியாய் மலாதீதனு யிருக்கையினலே இரண்டையுங் கூட்டி முடிக்கிறதுமில்லை.

நின்னருடான் றேவனே யாதுக்கோ தேர் - தேவரீரே கூட்டி முடியாதபோது உன்னுடைய அருளானதுதான் ஏதுக்குண்டானதென்று திருவுளத்திலே விசாரித் தருளிச்செய்தருள்.—எனவே, கன்மமும் அனுதி ஆன்மாவுஞ் சிவமும் அனுதி ஆகையினலே அவரவர் ஆர்ச்சித்த கன்மத்தைக் கர்த்தா கூட்டி முடிப்பன். உதாரணம் சிவஞானபோதத்தில், "அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தாஞ்சென்றங், கவ்வினையைக் காந்த பசாசம்போ - லவ்வினையைப், போரம லூட்டும் பிரானி னுகாரே, லார்தா மறிந்தணைப்பா ராங்கு" [ii, 6] என்பது கண்டுகொள்க. கரு

இங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மங்கள் தேவரீர் தீட்சைகளினலே சுத்திபண்ணி யிருக்கவும் மீளவும் புசிக்கைக்கு வழி யேதென்னும் வினு மேலருளிச் செய்கின்றது.

தேரா துரைப்பன் றெருமா லுளத்தொடு
போரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்ப தென்னுண் மையெனின்
நின்னது நேர்மை சொன்மனத் தின்றே
யெழுவகைத் தாதுவி னெழுதுளை யிரண்டும்
பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி
நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி
யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கு மனமும் போக்குள தநுவுஞ்
சொல்லு நினைவுஞ் செய்யுஞ் செயலு
நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றாய்க்
காலமுந் தேசமு மாலற வகுத்து
நடுவுநின் றருத்தலி னடுவனு குதியே

சான்றோர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குலைந்த
யந்தவா றெந்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே பொத்தகன் மத்திடை
நீங்கின வெவ்வினை யுங்கூழ் வினைகளு
பாங்கனை யருந்துமை தாரைகொ ளதனுந்
கருமா மருந்துங் கடனது வின்றுந்
தருமம் புரத்தல் பெருமைய தன்றே
கன்னி றுண் பனிய கருத்திலுட் கருத்த
வெண்ணெய் வைத்த மெய்கண்ட தேவ
விடர்ப்படு முழம்பையு விருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சொல்லே. கக.

## மேலிதற்கு வியாக்கி

தோரா துரைப்பன் றெருமா றுளத்தொடு - தேவரீர் சன்னிதியிலே ஒருவினை விசாரியாமல் விண்ணப்பஞ் செய்கிறேன் அடியேன் விதனத்தை யுற்றவனாகையாலே. அன்றியும்,

பேரா தருளுதல் பெரியோர் கடனே - பேதையாயிருக்கப் பட்டவர்கள் தாகத்தின் மிகுதியாலே தங்களுக்கு வேண்டின தொன்றை யெழுந்தது புத்தியாக விண்ணப்பஞ்செய்தாலும் அவர்கள் தாகங் கண்டு உடனே கடாட்சித் தருளுகிறது பெரியோர்களுக்கு முறைமையாகையாலு மது விசாரியாமல் விண்ணப்பஞ் செய்தேன். அதுவே தென்று கேட்டருளுகில்,

நின்னைக் கலப்ப தென்னுண்மை யெனின் - தேவரீரைக் கூடி யனுபவிக்கிறது அடியேனுடைய அற்பபோதமா மென்று தேவரீர் திருவுளம் பற்றுகில்,

நின்னது நேர்மை சொன்மனத் தின்றே - தேவரீருடைய நுட்பத்தை விசாரிக்கு மிடத்து வாக்குக்கும் மனத்துக்கும் எட்டப்பட்டதல்லவே. அப்படியிருக்கிற தேவரீருக்குள்ளே அடங்கி யிருக்கப் பட்ட அடியேனைத் தேவரீர்,

எழுவகைத் தாதுவி னெழுதுளை யிரண்டும் பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும் விச்சை சாலவும் வியப்பு -



ஏது : தேவரீரைக் கலந்திருக்கிறது என்னுண்மையானால் தேவரீருடைய நுட்பம் மனம்வாக்குக் கெட்டாதென்று சொல்ல வேண்டுவதில்லையாம் என்றதற்குச் சிவனும் ஆன்மாவும் எக்காலமும் இடைவிடாம லிருக்கையிலேயும் ஆன்மா மலத்திலே பற்றானபடியினாலே சிவனிடத்திலே கூடி நின்றும் பற்றில்லையாகையால் சிவன் பெத்தத்திலே யொளித்திருப்பா னென்பதற்கு உதாரணம் போற்றிப் பஃறொடையில், 'உள்ளமென்று நீங்கா தொளித்திருந்து தோன்றி நின்ற,கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி' [167,168] யென்பது கண்டு கொள்க. எழுவகைத் தாதுக்களினாலும் நவத்துவாரங்களினாலும் இந்த சரீரத்திலே பொருந்த வைத்துச் செனன மரணமும் படுத்தி அடியேனுக்குண்டான இச்சாஞானக் கிரியைகளையும் பிரேரிப்பித்து நடப்பித்ததுங் கொண்டாட்டமாயிருந்ததென்று சொல்லுவானேனென்னில் சிவனைப் பொருந்தியுஞ் சரீரபந்தத்திலே வைப்பானேனென்பது கருத்து. அது மல சம்பந்தமாகையாலே மலக்குருடனுக்கு மலம் நீங்கவேண்டி மாயையாகிய கோல் கொடுத்ததெனவறிக. உதாரணம் போற்றிப்பஃறொடையில், 'கட்புலனாற் காணார்தங் கைக்கொடுத்த கோலேபோற், பொற்புடை மாயைப் புணர்ப்பின்கண்' [21, 22] என்பது கண்டுகொள்க. மனம்வாக்குக் காயங்களினாலே யார்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களைத் தேவரீர் திருவுள்ளத் தடைத்தருளிக் கன்மங்களை நடுவாக நின்று புசிப்பிக்கையினாலே நடுவனென்று சொல்லப்பட்டிருக்கவும் பெரியோர்கள் செய்திக்கு மயக்கம் வாராதே ஆறத்துவாவுஞ் சுத்திபண்ணினதுண்டே கன்ம சமத்துவத்திலே போனதென்னவெனில் கன்ம சமத்துவமாவது புண்ணிய பாவங்களிரண்டிலேயு மொப்பு வந்தது கன்ம சமத்துவம். அப்படிக் கன்ம சமத்துவம் வந்தவிடத்துச் சத்திநிபாதமுண்டாயதினாலே கர்த்தா ஆசாரிய மூர்த்தமாகத் திருமேனி கொண்டுவந்து தீட்சாக்கிரமங்களினாலே அத்துவா சுத்திபண்ணி மலத்தைப் போக்கி ரட்சிப்பன். உதாரணம் சித்தியாரில், "அருண்முத்த னைப்பரனை யசலனை யெல்லா வறிவுதொழி லனுக்கிரக முடையவரன் கன்ம, மருணிசமற் றொத்தவிடத் தேசத்தி நிபாதம் நுழைவித்து மலங்களெலா நுங்க நோக்கி, மருணிகர ணங்களெலா மடக்கித் தன்னை வழிபடுநல் லறிவருளி மாக்கருணைக் கையா, லிருதயிறப் பிணிநின்று மெடுத்து மாறா வின்பமுத்திக் சேவைப்ப

னெங்கள்முத்தி யிதுவே” [பாபட்சம், சௌத்திராந்திகன் மத மறுதலை, 40] என்பதும், போற்றிப் பஃறொடையில், “நாடும்வினை, எல்லை இரண்டி னிடையொப்பிப் - பல்பிறவி, யத்தபதி வென்றே லளவென்று பார்த்திருந்து. சத்தி பதிக்குந் தாம்போற்றி - முத்தி தரு, நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலை மொன்றினைய, மன்னிலையே யுண்ணின் றறுத்தருளிப் - பின்னன்பு, மேலை விளங்கும் பிரளயா கலருக்கு (மெய்காணத்),தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப் - பூவலயந், தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல, முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை” [105-124] என்பது கண்டுகொள்க. இப்படிச் சுத்தி பண்ணியிருக்கச்செயும் பிராரத்தமாகிய வினை புசிக்க வந்ததாரை, சுத்திபண்ணின ஆன்மாக்களை யென்று ஆசாரியர் திருவுளம்பற்றினது. அதுவெப்படியென்னில், சஞ்சிதம் ஆசாரியருடைய ஞானதிட்டியினாலும் ஆகாமியம் ஆசாரியர் வைத்த ஞானத்தினாலும்நீங்கும் பிராரத்தஞ் சரீரத்துடனே நீங்கும். உதாரணம் சிவப்பிரகாசத்தில், ‘நீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தா, னீங்கிட’ [ix, 1] வென்றும், திருவாதவூரருக்கு அநுக்கிரகம் பண்ணினதில் “விரிந்த சஞ்சித வினைகளன் புடனும் விழிக்க வெந்தது விரும்புமூற் சென னம், புரிந்த வல்வினை யுடலுட னகலும் புந்தி சேருள் வருவினை போக்கும்” [திருவாதவூரர் புராணம், திருப்பெருந்துறைச் சருக்கம், 74] என்றும், ‘என்ற வினையுடலோ டேகும்இடை யேறும்வினை, தோன்றி லருளே சுடும்’ [திருவருட்பயன், x, 8] என்றும், சித்தியாரில், ‘என்றவுடற் கன்மமநு பவத்தினா லறுத்திங் கினிச்செய் கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்’ [viii, 10] என்றும் சொன்னது கண்டுகொள்க. ஆகையால் ஆசாரியர் கடாட்சத்தினாலே மோட்சத்தை யடைந்தாலும் பிராரத்துவம் புசிக்குமளவும் சரீரம் நிற்குமென்றது. ஆனால் ஞானவான்கள் புசிக்கிறது பிராரத்துவமுமாய் அவர்கள் தேகமும் பிராரத்துவதேகமானால் அவர்களை அர்ச்சனை பண்ணினதினாலேயும் நிவேதித்ததினாலேயும் ஆன்மாக்கள் கதியடைவார்களென்று சொல்லவேண்டுவதில்லை யென்னில் அவர்கள் போகஞ் சிவனே யேற்றுக்கொள்ளுகையினாலே சிவபோகமாச்சுது மாயா பதார்த்தஞ் சிவபோகமாமோவென்னில் மாயா பதார்த்தஞ் சுத்திப்பட்டு மந்திரமயமாய் மந்திரமும் ஞானதிருட்டியினாலே பார்க்கப்பட்டு



ஆன்மாவைச் சிவனுடலாகக் கொண்டு புசிக்கையினாலே சிவபோகமாச்சுது. உதாரணம் உண்மை நெறி விளக்கத்தில், “பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப் பயின்றிடினும் நெறியல்லா நெறி பயிற்றி வரினுஞ், சாதிநெறி தப்பிடினுந் தவறுகள்வந் திடினுந் தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கி, னாதனிவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து நானாபோ கங்களையுந் தானாகச் செய்து பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன் பெருஞ்சிவ யோகமெனப் பேசுநெறி யிதுவே” [6] என்பது கண்டுகொள்க. அவர்கள் திருமேனி பிராரத்துவ தேகமல்லவென்றதுக்குத் திட்டாந்தம் சம்பந்தமூர்த்தி கடாட்சம் பெற்ற கலியாணத்து வந்த சாதாக்கள் திருமேனி யடங்கலும் ஞானத்திலே பொருந்துகையினாலும் அப்ப பண்டாரத்தின் திருமேனி சர்வான்மாக்களுங் காண ஞானப் பிழம்பாகிய மகாலிங்கத்திலே யடைதலினாலும், பட்டணத்துப்பிள்ளை ஞானமாகிய லிங்கமாய் முளைக்கையினாலேயும், திருவாதவூரர் சர்வான்மாக்களுங் காணத் திருவாசகத்து உண்மைப் பொருளைக் கேட்கப் பொருளிதுவென்று ஞானாகாசத்திலே பொருந்தினபடியினாலேயும் பிராரத்துவ தேகமாகிய மாயாதேகத்துக்கும் ஞானத்துக்குஞ் சம்பந்தமில்லாதபடியினாலே அவர்கள் திருமேனியும் ஞானமென்றே கண்டுகொள்க. ௧௬

சர்வான்மாக்களும் தேவரீர்க் கடிமையாக இருக்கையிலேயுஞ் சிலர்க்குத் திருவருள் கடாட்சித்துஞ் சிலர்க்குக் கடாட்சியாமலு மிருப்பானேனென்று கேட்கும் வினா மேலருளிச் செய்கின்றது.

சோற்றொழும்பு கொள்ளாநீ சூழ்ந்ததுவு நிற்செயல்கண்
மற்றவர்க ணின்னோக்கின் மாய்ந்தவுயிர்க்—குற்றங்
கொளித்தியாங் கைய வுயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றையங்கோ. ௧௭

**மேலிதற்கு வியாக்கி.**

என்பதனை தொழும்பு கொள்ள நீ சூழ்ந்ததுவு நிற்செயல்கள் மற்றவர்கணின் னோக்கின் மாய்ந்தவுயிர்க் குற்றங் கொளித்தி யாங்கைய வுயர்வெண்ணெய் நல்லூர்க் குளித்தமதுக் கொன்றையங்கோ சொல் என்று பொருளுக்கேற்க மாறுக. பொருளாவது :

பொய்யை மெய்யெனப் புகன்று - அசத்தியமா யிருக்கப்பட்ட தேகாதிப் பிரபஞ்சத்தைச் சத்தியமென்று சொல்லிக்கொண்டு,

கையைத் தோடா பூட்கை நாடி நாடா வென்னுட் காந்து - பிரபஞ்ச வியாத்தி பண்ணுகிறதே யேற்சோனாக விருப்பத்தைச் செய்து நமக்கொரு கர்த்தா வுண்டென்று விசாரியாதபடி எனக்குள்ளே மறைந்து நின்று,

என் பின்வந் தருளி - யான் செய்யுஞ் செயலுக்கெல்லாம் ஒத்தொழுகி நின்று,

என்னையுந் தன்னையு மறிவின் றியற்றும் எனதி யானென்னு மகந்தையுங் கண்டு - நாம் ஒரு அடிமையென்றுந் தான் ஒரு நாயகனென்றும் அறியாமற் செய்கிற யானெனதென்னும் அகந்தையுங் கண்டு,

யாவ ரியாவையு மியாங்கணுஞ் சென்று - உயர்திணை யஃறிணையாகிய யோனி பேதங்களிலும் பூமி யந்தர சுவர்க்கமென்கிற உலகங்களிலும் என்னோடொக்கச் சென்று,

புக்குழிப் புக்கு - நான் சென்று செனிக்கிற இடங்களிலே தானும் ஒக்கப் புகுந்து,

பெயர்த்துழிப் பெயர்த்து - நான் விட்டுப்போமிடத்துத் தானும் ஒக்கப் பெயர்ந்து,

மிக்க போகம் விதியால் விளைத்து - வெகு வித போகங்களையும் எனக்குள்ள முறைமையின்படியே யுண்டாக்கி,

இங் கெற்பணி யானாய்-இவ்விடத்து என்னை ஊட்டி யுறக்கி நிற்கிற பண்ணையாளுமாய்,

எனைப் பிரியாதே - என்னை விட்டு நீங்குதலுஞ் செய்யாமல்,

ஓடி மீன்வழி யாடல் பார்த்திட் டென்வழி நின்றமை நின்றதை யன்றே - நான் செனன மரணப்பட்டுப் போக்கு வரவு செய்கிற நாடகத்தையும் பார்த்துத் தன் முதன்மையும் விட்டு என் வசத்திலே நின்றான் எம்முடைய சுவாமியா யுள்ளவன் இது ஆச்சரியம்!—இந்நிலை வேதம். மேல் முத்தி. அன்றே - ஐயோ என்பதாச்சரியம்.

அருள் மிக வுடைமையின் - தனக்குக் கிருபை மிகுந்திருக்கையி னாலே,



சாலார் செயலே மாலாகுவதே - சான்றோ ரல்லாத அறிவிலா யுள்ளவர்கள் செயல்களல்லவோ மயக்க முண்டாவது,

அத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ் சுத்திசெய் தனையே - மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் என்று சொல்லப்பட்ட அறு வகையாலும் நிரம்பி எஞ்சிக் கிடக்கிற கன்மங்களை யெல்லாந் தீட்சைகளினாலே தேவரீர் சோதனை செய்து அடியேனைச் சுத்தி யருத்தினதுண்டே.—அதுவுண்டென் றருளிச் செய்யில் அப்படி யிருக்கவும்,

ஒத்தகன் மத்திடை நீங்கின என்னை - அடியேனுக்கு இருவினை யொப்பிலே போனதென்ன.—அதுவன்றியும்,

ஊங்கூழ் வினைகளு மாங்கவை யருத்துவ தாரை - உவ்விடத் துண்டான ஊழ்வினைகள் தேவரீர் செய்யப்பட்ட தீட்சைகளினாலே சுத்தி செய்த விடத்து அந்தக் கன்மங்கள் புசிப்பிக்கிற தாரையாம்,

கொல் ஐயம்.

அதனாற் கரும மருத்துங் கடனது வின்றாம் - தேவரீர் சுத்தி செய்தவர்கள்தன்னை என்று அருளிச்செய்யில், தேவரீர் சுத்திசெய்த வழக்கினால் மீளவுங் கன்மங்கள் நின்று புசிப்பிக்கைக்குக் கடனில்லையாம்.—அப்படிப் புசிப்பிக்குமென்று அருளிச்செய்யில்,

தருமம் புரத்தல் பெருமைய தன்றே - தேவரீர் தருமகர்த்தாவென் றெழுந்தருளியிருக்கிறது பெருமைக்கதனை யென்று விண்ணப்பஞ் செய்யப்படும்,

கண்ணினுண் மணிய - கண்ணுக்கு மணிபோலக் காட்டாக உள்ளவனே,

கருத்தினுட் கருத்த - அறிவுக்கு அறிவாக உள்ளவனே,

வெண்ணெய் வேந்த - திருவெண்ணெய் நல்லூருக்குக் கர்த்தாவாக உள்ளவனே,

மெய்கண்ட தேவ - மெய்கண்ட நாதனே,

இடர்ப்படு குரம்பையு ளிருத்தித் துடைப்பதில் லாவருள் தோன்றிடச் சொல்லே-துக்கத்துக் கேதுவாயுள்ள சரீரத்துக்குள்ளே அடியேனை இருத்திவைத்து அடியேனுக்குண்டான கன்மங்களைத் தூய்தாகப் போக்காத அந்த அனுக்கிரகத்தை அடியேனுக்கு விளங்க அருளிச் செய்தருள்.

பொய்யை மெய்யெனப் புகன்று - அசத்தியமா யிருக்கப்பட்ட தேகாதிப் பிரபஞ்சத்தைச் சத்தியமென்று சொல்லிக்கொண்டு,

வையத் தோடா பூட்கை நாடி நாடா வென்னுட் கரந்து - பிரபஞ்ச வியாத்தி பண்ணுகிறதே மேற்கோளாக விருப்பத்தைச் செய்து நமக்கொரு கர்த்தா உண்டென்று விசாரியாதபடி எனக்குள்ளே மறைந்து நின்று,

என் பின்வந் தருளி - யான் செய்யுஞ் செயலுக்கெல்லாம் ஒத்தொழுகி நின்று,

என்னையுந் தன்னையு மறிவின் றியற்றும் என்ன தியானெனு மகந்தையுங் கண்டு - நாம் ஒரு அடிமையென்றுந் தான் ஒரு நாயனென்றும் அறியாமற் செய்கிற யானெனதென்னும் அகந்தையுங் கண்டு,

யாவ ரியாவையு மியாங்களுஞ் சென்று - உயர்திணை யஃறிணை யாகிய யோனி பேதங்களினும் பூமி யந்தர சுவர்க்கமென்கிற உலகங்களிலும் என்னோடொக்கச் சென்று,

புக்குழிப் புக்கு - நான் சென்று செனிக்கிற இடங்களிலே தானும் ஒக்கப் புகுந்து,

பெயர்த்துழிப் பெயர்த்து - நான் விட்டுப்போமிடத்துத் தானு ஒக்கப் பெயர்ந்து,

மிக்க போகம் விதியால் விளைத்து - பெருகு வித போகங்களையு மெனக்குள்ள முறைமையின்படியே யுண்டாக்கி,

இக் கற்பனி யாளாய்-இவ்விடத்து என்னை ஊட்டி யுறக்கி நிற்கிற பண்ணையாளுமாய்,

எனைப் பிரியாதே - என்னைவிட்டு நீங்குவதுஞ் செய்யாமல்,

ஓடி மீள்கென வாடல் பார்த்திட் டென்வழி நின்றனை யன்றே - நான் செனன மரணப்பட்டுப் போக்கு வரவு செய்கிற நாடகத்தையும் பார்த்துத் தன் முதன்மையும் விட்டு என் வசத்திலே நின்றான் எம்முடைய சுவாமியா யுள்ளவன் இது ஆச்சரியம்!—இந்த நிலை பெத்தம். மேல் முத்தி. அன்றே - ஐயோ என்பதாச்சரியம்.

அருள் மிக வுடைமையின் - தனக்குக் கிருபை மிகுந்திருக்கையினாலே,



அருட்டுறை வந்து - திருவெண்ணெய் நல்லூராகிய திருப்பதை வீட்டிலே திருவவதாரஞ் செய்தருளி,

பொருள்மிக வருள்தலும் - சொரூபமாகிய பொருளானது மிகுதியாக நின்று அனுக்கிரகிக்கிறதையும்,

பொய்ப்பகை யாதலும்-அந்தப் பொருள் பிரபஞ்சமாகிய பொய்யைக் கடிந்து நீக்கிற வழக்கையும்,

கைகண்டு கொள்ளென-பிரத்தியட்சமாகக் கண்டுகொள்ளெனக் காட்டியருளி,

கடலுல கறிய மெய்கண்ட தேவ னெனப்பெயர் விரீஇ - சமுத்திரஞ் சூழ்ந்த வையகத்தா ரறியத்தக்கதாக மெய்கண்ட நாதனென்கிற திருநாமத்தினையும் பரப்பியருளி,

தன்னுட் கரந்து தான்முன் னாகி - தன்னுடைய பேரறிவினுள்ளே என்னுடைய சிற்றறிவை யடக்கிக்கொண்டு தன் செயலே மேலீடாக,

தன்னருக் தானுமா யென்னையின் றாக்கி - தன்னுடைய அருளுந் தானுமாய் என்னையும் என்னுடைய ஞானத் தோற்றத்தையும் அடக்கிப் போட்டு,

தன்னையு மென்னையுந் தந்து - தான் ஒரு முதலுண்டென்கிறதுங் கெடாமல் நானொரு முதலுண்டென்கிறதுங் கெடாமல் எனக்குப் புலப்பட அறிவித்து,

தனது செய்யா மையு மென்செய வின்மையும் - தான் சர்வமுங் காரியப்படுத்தி நிற்கச்செய்தே தானொன்றிலுஞ் சுட்டியறியாமல் தோய்வற நிற்கிற முறைமையினையும் நான் சர்வமுஞ் செய்து நிற்கச் செய்தே என்னால் ஒன்று முடியாதென்கிற செயலறுதியையும்,

எம்மான் காட்டி யெய்தல் - எம்முடைய சுவாமியா யிருக்கிறவன் எனக்குத் தரிசனைப்படுத்துகின்ற முறைமையைப் பார்த்தவிடத்து,

அம்மா வெனக்கே அதிசயந் தருமே - மிகவுங் கொண்டாடப்பட்டு எனக்குத் தானே ஆச்சரியத்தையுந் தாராநிற்கும். கஅ

இங்ஙனம் பாசக்ஷயம் பண்ணின ஆச்சரியத்தை மேலும் அருளிச்செய்கிறது.

தருமா தருமத் தலைநின்றுழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப்—பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தா
னுருவென்ன வந்தெடுத்தா னுற்று. ௧௯

## மேலிதற்கு வியாக்கி.

தருமா தருமத் தலைநின்றுழ் வேனை - தன்மமாகிய பசு புண்ணியத்தையும் அதன்மமாகிய பாவத்தையுஞ் செய்து துக்க சாகரத்திலே கிடந்து அழுந்துகிற என்னை,

கருமா கடல்விடமுண் கண்டப் பெருமான் - கருமை பொருந்தின மகத்தான சமுத்திரத்திலே யுண்டாகப்பட்ட நஞ்சினை அமுது செய் தடக்கப்பட்ட கண்டத்தினையுடைய கர்த்தாவா யுள்ளவனே,

திருவெண்ணெய்நல்லூர்ச் சுவேதவனத்தான் - திருவெண்ணெய்நல்லூராகிய திருப்படை வீட்டிலே எழுந்தருளியிருக்கப்பட்ட சுவேதவனப் பெருமாளென்னும் பிள்ளைத் திருநாமத்தினை யுடையவன்,

உருவென்ன வந்தெடுத்தா னுற்று - சரீரதொந்தனைப்பட்டு நிற்கிற என்னைப்போல உருப்பட்டு வந்து நான் செனனக் குழியிலழுந்தாமல் எடுத்துத் தனது திருவடியிலே கூட்டிக்கொண்டருளினன். ௧௯

கர்த்தா இங்ஙனம் ஆசாரிய மூர்த்தியாகத் திருமேனி கொண்டு எழுந்தருளிப் பாசச்சேதனம் பண்ணித் தனது காருண்ணியமாகிய உண்மை ஞானத்தைக் கடாட்சித்த முறைமையை வியந்துரையாகப் புகழ்ந்த முறைமையை மேல் அருளிச் செய்கின்றது.

உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்று
மற்றவர்க் கற்றவ னல்லவர்க் கல்லவ
னந்த மாதி யில்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்
டிருள்வெளி யாகு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு
மின்றி யொன்றாய் நின்றஅந் நிலையி



லொன்று காம விரண்டா காம
லொன்று மிரண்டு மின்று காமற்
றன்னது பெருமை தாக்கா தாயினு
மென்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியு
மென்னையு மெனக்கே தந்து தன்னது
போரா நந்தப் பெருங்கட லதனு
ளாரா வின்ப மளித்துத் தீரா
வுள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்ன னெங்கோன் வார்புனற் பெண்ணை
வெண்ணெய்க் காவலன் மெய்கண்ட தேவ
னண்ண லருளா லயத்த னண்ணி
மலமுத லாயின மாய்க்கு
முலக வுயிர்க்கெல் லாமொரு கண்ணே. ௨0

## மேலிதற்கு வியாக்கி.

உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்று மற்றவர்க் கற்றவன் - தனது உறவின்முறையாரா யுள்ளவர்கள் மாதாபிதாக்கள் தனக்கு வேற்றுமை யற்றிருக்கப்பட்ட ஸ்திரீகள் மற்றுமுண்டான தனதானிய க்ஷேத்திரங்கள் முதலாயுள்ள சர்வவுபாதியா யிருக்கப்பட்ட தேகாதிப் பிரபஞ்சத்தை நீங்கினவர்களுக்கு இரண்டற்றுப் பிரிவற நிற்கிறவன்.

அல்லவர்க் கல்லவன் - அப்படிச் சர்வவுபாதிகளையும் நீங்காதவர்களுக்கு வேறாய் நிற்கப்பட்டவன்,

அந்த மாதி யில்லவன் - தனக்கு முடிவும் முதலுமில்லாதவன்,

வந்து - ஆசாரியமூர்த்தமாகத் திருமேனிகொண்டு எழுந்தருளி வந்து,

குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும் பரப்பைக் குவித்து - குரக்குப் போதம் போல ஒன்றிலுந் தரிப்பில்லாம லெழுந்தது புத்தியாகத் திரிகிற பாவியா யிருக்கிற என்னைப் பிரபஞ்சப் பரப்பில் திரிகிற வியாத்தியை ஒடுக்குவித்து,

நிறுத்திப் பிடித்திட் டிருள்வெளி யாகு மருளினை யறுத்து - தனது திருவடி ஞானத்திலே நிறுத்திப் பழைய பிரபஞ்ச வாதனை

யிலே போகாமற் பிடித்துக்கொண்டு கேவல சகல மென்கிற மயக்கத்தை நீக்கி,

வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு மின்றி - தான் வந்து எனது உள்ளத்திலே புகுதுகிறதும் நான் சென்று தன்னோடே கூடி எனக் குண்டான பாசங்கள் நீங்குகிறது மில்லாமல்,

ஒன்றாய் நின்றவந் நிலையில் - அநாதியே தானும் நானும் நீங்காமல் நின்ற நிலையிலே,

ஒன்றா காம லிரண்டா காமல் - ஒன்றுபடுவதுஞ் செய்யாமல் இரண்டு படுவதுஞ் செய்யாமல்,

ஒன்று மிரண்டு மின்றாகாமல் - தானும் நானும் ஒன்றுபட்டு நிற்கிறதும் பெறுவானும் பேறுமா யிரண்டுபட்டு நிற்கிறது மில்லையாகாமல்.—அன்றியும் ஒன்றாகாம லிரண்டாகாம லொன்று மிரண்டு மின்றாகாமல் என்பதற்கு பேதமும் அபேதமும் பேதாபேதமு மாகாமலென்று பொருளுரைப்பினுமாம்.

தன்னது பெருமை தாக்கா தொழியினு மென்னது பெருமை யெல்லா மெய்தி - தனக்குண்டான சர்வஞ்ஞத்துவமும் பஞ்ச கிருத்தியமும் எனக் குண்டாக்கினானில்லை யாயினும் எனக் குண்டாயிருக்கப்பட்ட இச்சா ஞானக்கிரியைகளும் வியாத்தி வியாபகங்களாகிய பெருமையு மிவைகளை யெல்லாந் தன்னுடைய பூரணத்திலே யடக்கிக் கொண்டு,

தன்னை யெனக்குத் தருவதை யன்றியு மென்னையு மெனக்குத் தந்து - தன்னுடைய ஆனந்த சொரூபத்தை எனக்குக் கடாட்சித்தது மன்றியே அந்தப் பேரின்பத்தோடுங் கூடி யனுபவித்திருக்கிற ஆன்மபோதமாகிய சிற்றறிவு கெடாமல் கெட்டு நிற்கிற முறைமையையும் எனக்குக் கடாட்சித்தருளி,

தன்னது பேரானந்தப் பெருங்கட லிதனுளாரா வின்ப மளித்து - தன்னுடைய பரிபூரணமான ஆனந்த வெள்ளமான பெரிய அருட் சமுத்திரத்திலே விளையப்பட்டிருப்பதாய் ஒரு காலத்திலும் உவட்டாத இன்பத்தை யெனக்குக் கடாட்சித்தருளி,

தீரா வுள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற வள்ளன்மை காட்டி - ஒரு காலத்திலும் விடப்படாமல் அகம்புற மெங்கும் பூரணமாய் நின்று அனவரதமும் அறிவித்து நிற்கிற வளப்பாட்டையுந் தரிசிப்பித்து,



மலரடி யருளிய மன்னன் - தாமரை மலர் போன்ற சீபாதத்தைக் கடாட்சித்தருளின தம்பிரான்,

எங்கோன் - எமக்குக் கர்த்தாவா யுள்ளவன்,

வார்புனற் பெண்ணை வெண்ணெய் காவலன் - மேன்மேலும் வருகிற புனலினாலே பெருகப்பட்ட பெண்ணையாற்றை யுடைய திருவெண்ணெய்நல்லூருக்குக் கர்த்தாவா யிருக்கப்பட்டவன்,

மெய்கண்ட தேவன் - மெய்கண்டதேவ னென்கிற திருநாமத்தினை யுடையவன்,

அண்ணல் - எனக்குச் சுவாமியா யிருக்கிறவன்,

அருளா லயத்தன் - தனது அருளே கோயிலாக எழுந்தருளி யிருக்கப்பட்டவன்,

நண்ணி - என்னை வந்து பொருந்தி,

மலமுதலாயின மாய்க்கும் - ஆணவ முதலாயுள்ள மலங்களை யெல்லாஞ் சேதனம் பண்ணினவன்,

உலக உயிர்க்கெல் லாமொரு கண்ணே - சர்வ லோகங்களிலுமுள்ள ஆன்மாக்களுக் கெல்லாம் ஓர் அறிவாக அறிவித்துநின் றனுக்கிரகஞ் செய்தருளுகிறவன். ௨௦

**மேல் நுட்பம்.**

முற்றும் அற்றவற் கற்றவன் என்ற பதத்துக்கு தேகாதிப் பிரபஞ்சங்களை நீங்கப்பட்ட தபோதனர்க்குக் கர்த்தா இரண்டற்று நிற்பனென்பதற்குப் பிரமாணம் தேவாரம்,

> "உலகினி லியற்கையை யொழிந்திட்
> டற்றவற் கற்ற சிவனுறை கின்ற வாலவா யாவது மிதுவே"
> [சம்பந்தர், "வெற்றவே"]

என்பது. தேகாதி யென்றது உடம்பு முதலாயுள்ளவையிற்றை நீங்கவே தவமாமென்பது கருத்தாகையால் என அறிக. இதற்குப் பிரமாணம் திருவாசகம்,

> "பாவி பேற்கு முண்டாமே பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
> தாவி யாக்கை யானெனதென் றியாது மின்றி யறுதலே"
> [பிரார்த்தனைப்பத்து, 5]

என்றும், திருவள்ளுவப் பயனில்,

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை" [345]

என்றும் வருவது கண்டுகொள்க.

இனி, அந்த மாதி யில்லவன் என்றதற்கு முதலும் முடிவு மில்லாதவனென்று பொருள் கூறிய தேதென்னில் சிவன் தோற்றமும் ஈறு மில்லாதவனாகையாலே அப்படிச் சொன்னதென அறிக. இதற்குப் பிரமாணம் [திருவாசகம்] திருவெம்பாவையில்,

"ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ் சோதியை" [1]

என்பது கண்டுகொள்க.

இனி, வந்து என்றதற்கு ஆசாரிய விக்கிரகமாக எழுந்தருளி என்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் [திருவாசகம்] திருவெம்பாவையில்,

"இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை" [17]

என்பது கண்டுகொள்க.

இனி, நாக்குமனத்துக் கொடியேன் பாக்கும் பாப்பைக் குவித்து என்றதற்கு பிரபஞ்ச வியாத்தியை யொடுக்குவித்து என்றதற்குப் பிரமாணம், ....

இனி, நிறுத்திப் பிடித்திட்டு என்றதற்குத் திருவடியிலே நிறுத்திப் பிரபஞ்சத்தில் மீளாமற் பிடித்து என்றதற்குப் பிரமாணம் சிவஞானபோதம்,

"சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோல் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று" [viii, 7]

என்பது கண்டு கொள்க.

இருள்வெளி யாகு மருளினை யறுத்து என்றதற்குக் கேவல சகல மிரண்டினையும் நீங்கி யென்று பொருள் கூறியதேதென்னில், கேவலத்தில் ஆணவத்தால் மறைப்புண்டு கிடக்கையால் இருளென்றதென அறிக; சகலத்திற் கலையாதி தத்துவங்களோடுங் கூடிச் சீவிக்



கையால் ஒளியென்றதென அறிக. இதற்குப் பிரமாணம் சிவப்பிரகாசத்தில், "புகலு மலமொழித்தற்" [ii, 19] கென்னுஞ் செய்யுளில்,

"இகலிவரு மிவையுணரி லிருள்வெளியாந் தன்மை யெய்தும்"

என்பது கண்டுகொள்க.

இனி, வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு மின்றி யொன்றாய் நின்றஅந் நிலையில் என்பதற்கு சிவன் ஆன்மாவை வந்து கூடவு மில்லை ஆன்மாச் சிவனைச் சென்று கூடவுமில்லை யென்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் ஏதென்னில் போற்றிப் பஃறொடையில்,

"உள்ளமென்று நீங்கா தொளித்திருந்து தோன்றிநின்ற
கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி" [167, 168]

யென்பது கண்டுகொள்க.

இனி, ஒன்றாகாம லிரண்டாகாம லொன்று மிரண்டு மின்றாகாமல் என்பதற்கு ஆன்மாவுஞ் சிவனும் இரண்டு முதலாயிருக்கச் செய்தே ஒன்றுபட்டு நில்லாதென்றும் இரண்டுபட்டு நில்லாதென்றும் ஒன்று மிரண்டுமில்லாம லிராதென்றும் பொருள் கூறியதற்குப் பிரமாணம் திருக்காளத்தியந்தாதியில்,

"உரையும் பொருளு முடலு முயிரும்
விரையு மலரும்போல் விம்மி—புரையின்றிச்
சென்றவா றெங்குந் திருக்கயிலை யெம்பெருமா
னின்றவா றெங்கு நிறைந்து"

[கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, 47]

என்றும், சிவப்பிரகாசத்தில், "உடலுயிர்கண் ணருக்கனறி வொளிபோற், பிறிவருமத் துவிதமாகுஞ், சிறப்பினதாய்" [பாயிரம், 7] என்றும் இப்படி வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க.

இனி, தன்னது பெருமை தாக்கா தாயினும் என்றதற்கு தனக்குண்டாயின சர்வஞ்ஞத்துவமும் பஞ்ச கிருத்தியமும் எனக்குண்டாக்கினா னில்லையாயினும் என்று பொருள் கூறிய தேதென்னில் ஆன்மா முத்தியைப் பெற்றவிடத்தும் சிவனுக்குண்டான தன்மை யுண்டாகாதென்பது கருத்து. என்பதற்குப் பிரமாணம் சிவப்பிரகாசத்தில், "இன்றுநோக் குரைந டக்கு மியல்பிலோர்க் கினைய

லாய்ந்து, நின்றதோ ரலகை நேர்ந்தா னிகழ்வதெ னதுபோ லுள்ளத், தொன்றிய வுணர்வு தம்பா லுள்ளது நிகழ்த்து மீசன், தன்னெறியில் நடத்து மேனி தனக்கெனக் கொண்டு தானே" [ix, 2] என்றும், "உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" [சித்தியார், xi, 10] என்றும், "காழிகொள்ளா தாழியி னலைபுன, லதனுற் கருத்து முதலுள தாக, வேண்டும்" [சங்கற்பநிராகரணம், சிவசமவாதி நிராகரணம், 65, 66] என்றும் வரும் எதுக்களைக் கண்டுகொள்க.

இனி, என்னது பெருமை யெல்லா மெய்தி யென்றதற்கு ஆன்மாவுக்குள்ள இச்சாஞானக் கிரியைகளையும் வியாத்தி வியாபகங் களையுஞ் சிவன் உள்ளே யடக்கிக்கொள்ளுவன் என்பதற்குப் பிரமாணம் எதென்னில் சித்தியாரில், "இரும்பைக் காந்தம் வலித்தாற் போ" லென்னுஞ் செய்யுளிலே,

"விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி"

[xi, 12]

என்பது கண்டுகொள்க.

இனி, தன்னை யெனக்குத் தருவதை யன்றியும் என்றதற்குத் தன்னுடைய ஆனந்த சொரூபத்தை யெனக்குத் தருவதுமன்றியே என்று பொருள்கூறியதற்குப் பிரமாணம் சித்தியாரில், "இந்தனத்தி னெரிபாலினெய்" என்னுஞ் செய்யுளிலே, "தானாக்கித் தன்னுருவப் பரப்பெல்லாங் கொடுபுகுந்து பதிப்பனிவன் பாலே" [ix, 12] என்னும், திருவாசகத்தில்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுர்த்த
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதின் றென்பால்"

[கோயிற்றிருப்பதிகம், 10]

என்பதுங் கண்டுகொள்க.

இனி, என்னையு மெனக்குத் தந்து என்றதற்கு அந்தச் சிவானுபவத்தை யனுபவிக்கிறது சிற்றறிவுங் கெடாமல் என்று பொருள் கூறிய தேதென்னில் சிற்றறிவு கெடாம லனுபவிப்பா ரில்லாதாகையால் அப்படிச் சொன்னதென வறிக.

## பிரிவாற்றாமை

நமது சமாஜத் தலைவர்களுள் ஒருவரும் சென்னை அரசாங்கத்து மாஜி மந்திரியும் ஆகிய சைவத் திருவாளர் திவான் பகதூர் சர். டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள் சிவபதமடைந்த செய்தியையும் சமாஜத்தின் பிரிவாற்றாமையையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

வெளிவந்துவிட்டது ! வெளிவந்துவிட்டது !!

## சிவகுமாரர்கள் தேவாரம்

தேவாரத்துள் கணபதி, முருகர் பற்றிய குறிப்புக்கள் வந்துள்ள பாடல்கள் எல்லாம் அடங்கியுள்ள சமாஜத்தின் அடக்கவிலைப் பதிப்பு. தனிப் பிரதி மூன்று பை. பத்து பிரதிகள் விலை அணா இரண்டு. தபாற் கூலி வேறு. வேண்டுவோர் முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதுக.

---

## திருமுருகாற்றுப்படை

மூலமும் மிகத் தெளிவான பதம்மருவிய பொழிப்புரையும் பல புதிய திருத்தங்களோடு வெளிவந்தாயிற்று. தனிப்பிரதி விலை அணா ஒன்று. இருபது பிரதிகள் விலை ரூபாய் ஒன்று. தபாற்கூலி வேறு.

---

## தேவை

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் வித்துவான்பட்டம் பெற்றவரும், தமிழிலும் சைவத்திலும் நிரம்பிய பற்றுள்ளவரும், தமிழ் நூல்களையும் சைவசமய நூல்களையும் உடனிருந்து படிக்க விரும்புபவருமாகிய ஒருவர், சைவத் திருவாளர் திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார் அவர்களுடன் நாடோறும் மூன்று மணி நேரம் சைவ நூல்கள், தமிழ் நூல்களைப் படிப்பதற்குத் தேவை. ஆங்கிலப் பயிற்சி, வடமொழிப் பயிற்சியுடைமை விசேடத் தகுதியாகக் கருதப்படும். இப்போது உள்ள உத்தியோகம், எதிர்பார்க்கும் ஊதியம் முதலிய எல்லா விபரங்களையும் திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார், கோபதி நாராயணசாமி செட்டி ரோட், தியாகராயநகர், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதி விண்ணப்பம் செய்க.

உங்கட்கு மிகுந்த நன்மையைப் பயந்திருக்கும். மிகுந்த குறைபாடுடைய நான் சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நேரிய கருத்துக்களை எடுத்துச் சொல்வேன் என்பது வீணாகும். என் அன்பை நினைந்து என் துணிவைப் பொறுக்கவேண்டுகிறேன்.

2. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டு இப்போது இரண்டாண்டுகளாகின்றன. இக்குறுகிய காலத்திற்குள், அது செய்து முடித்திருக்கிற செயல்கள் அதற்குப் பெருமையையே கொடுத்திருக்கின்றன. அதன் உறுப்பினர் கல்விச் செல்வத்தை மாத்திரம் மிகுதியும் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். பொருட்செல்வம் மிக்கார் அதில் போதிய அளவில் சேர்ந்திருந்தால், இவ்விரண்டாண்டுகளுக்குள் சங்கம் இன்னும் சிறப்புடைய பணிகள் பல ஆற்றியிருக்கக்கூடும். இதுவரையில் இரண்டு கலைச் சொல்லாக்க மகாநாட்டைக் கூட்டி, ஆராய்ந்த கலைச் சொற்களை வெளிப்படுத்தி, அவைகளைச் சீர்தூக்கி முடிவுகட்ட ஒரு சொல்லாக்க நிபுணர் கழகத்தையும் சேர்த்துச் சென்ற ஏழு நாட்களாக அல்லும் பகலும் உழைத்து ஒரு முடிபுக்குக் கொணர்ந்த பெருமை ஒன்றே சாலும். இதன்பொருட்டுப் பொதுவகையில் இச் சங்கத்தின் ஆட்சியாளர்களுக்கும் சிறப்புவகையில் உயர்திருவாளர்கள் - இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், சாமி வேலாயுதம் பிள்ளை அவர்கள் ஆகிய இவர்கட்கும் நந்தமிழ்நாடு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

3. இனி, இச்சங்கத்தின் நோக்கங்கள் யாவையெனவும் அவைகளை அடைவதற்கு யாது செய்யப்படல்வேண்டும் எனவும் ஆராய்வோம். சங்கத்தின் விதிகளில் மூன்றும் விதி சங்கத்தின் நோக்கங்கள் எவையெனக் கணக்கிட்டுச் சொல்லுகின்றது. தமிழின் தூய்மையைக் காத்து அதனை வளர்த்துப் பெருக்குதலே இச் சங்கத்தின் நோக்கமெனத் தொகுத்துச் சொல்லலாம். நோக்கங்களில் சேர்த்துக் குறிப்பிட்டிருக்கிற ஏனையவெல்லாம் இவ்வொரு எண்ணத்தை ஈடேற்றிக்கொள்ளக் கடைப்பிடிக்க வேண்டிய சாதனங்களே யாகும். மூன்றும் விதியில் எழுதியிருக்கின்ற கீழ்க்குறித்த சொற்றொடரை அயல்நாட்டானொருவன் படிப்பானானால், அவனுக்கு அது வியப்பைத் தராமல் போகாது. "தமிழிலேயே எண்ணவும், பேசவும், எழுதவும், பழகச் செய்தல்" என்னும் இச் சொற்றொடரை நான் படிக்கும்பொழுது எனக்கு வருத்தமும் வியப்பும் உண்டாகின்றன. நம் தாய்மொழி இந்நிலையிலுள்ளதே என்னும் வருத்தமும், அந்நிலையைக் கண்டும் அதனை நீக்க முயற்சியின்றி வாளா யிருக்கின்றதே நம் தாய்நாடு என்ற வியப்பும் அடைகிறேன். இந்தியாவில் ஏனைய பாகங்களில் உள்ளவர்களைப்போலல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள ஆங்கிலங் கற்ற நம்மனோர் ஒருவர்க்கொருவர் பேசும்போதும், எழுதும்போதும், ஆங்கில மொழியை உபயோகிக்கின்றனர். இது நம்மனோரை ஆங்கில மொழியில் முன்னணியில் நிற்கச் செய்திருக்கின்ற சூழ்ச்சிகளில் ஒன்றாய் நமக்கு ஒரு வழியில் பெருமையைத் தருவதாயினும் இந்தச் செய்கை நாம் வெறுக்கத்தக்கது.

4. உலகத்தில் அறிவு வளர்ந்துகொண்டே போகிறது. நேற்று வரையில் காணாத ஒரு புது அறிவு இன்று தோன்றுகிறது. இந்தப் புத்தறிவு ஏற்கனவே முன்னொரு காலத்தில் உலகிற்குத் தெரிந்திருந்து மறைவுபட்டதாகவுமிருக்கலாம். இருந்தாலும், தற்காலத்திற்கு அது புது அறிவே ஆகும். இப்படி உலகத்தில் அறிவு முதிர முதிர ஒரு நாட்டின் மொழி அதற்கு ஏற்ப வளர்ந்துகொண்டே போதல் வேண்டும். வளர்ச்சியின்றிக் குன்றிக் கிடக்கும் எம்மொழியும் தம் மக்களுக்கு உலகத்தின் அறிவு வளர்ச்சியைத் தர

தென்மொழி நூல்களிலும் எவ்வளவிற்குப் புகுந்திருக்கி றதோ அதைப் பற்றி யாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஒரு மொழியில் காணப்படும் உயரிய கருத்துக்கள் மற்றொரு மொழியில் நூலாக அமைந்திருக்கின்றனவா வென்று நாம் கவனிக்க வேண்டும். பெரும் சுமையைச் சுமக்கவேண்டி யிருக்கிற இந்நாளில் யாவரும் இருமொழி யையும் கற்பது முடியாது. இருமொழியையும் கற்பது நன் மையே. ஆனால் முடியாமல் போகிறவர்க்கு ஒரு மொழியி லேயே மற்றொரு மொழியி லிருக்கிற அறிவெல்லாம் கிடைத் தல் வேண்டும். தமிழ் மொழியை நோக்கும்போது, வட மொழியிலுள்ள உபநிடதங்களில் பல, தந்திர அல்லது மந் திர நூல்கள், சோதிட நூல்கள், கணித நூல்கள் முதலிய பல நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படாமலிருக்கக் காணலாம். மேற் சொன்ன கூற்று உண்மையாயின் வட மொழியாருடன் நெடுநாள் அன்பு கொண்ட நாம் அம் மொழியிலுள்ள சிறந்த நூல்களை இதுகாறும் மொழி பெயர்த்துக் கொண்டோமில்லை. சமீப காலத்தில்தான் வால்மீகி இராமாயணமும், வியாச பாரதமும் தமிழில்மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. கலைச்சொல்லாக்க மாநாட்டிற் குத் தலைமை வகித்த சுவாமி விபுலானந்தர் அவர்கள் தமது தலைமை யுரையில், நாடெங்கும் கோவில்கள் கட்டின தமிழர் கள் சிற்பநூலைத் தமிழில் எழுதிவைத்தார்களில்லையென்று சொன்னார்கள். இந்தவிதமாக வடமொழியிலிருந்தும் தமிழில் செய்யவேண்டிய நூல்கள் பல உள. அயல் நாட்டுமொழி களிலிருந்தும் நாம் எழுத வேண்டிய நூல்களும் மிகுந்திருக் கின்றன.

7. மேற் சொன்ன விதமாகப் புதுநூல்களை உண்டாக் கிக்கொள்ளப் போதுமான வசதி தமிழ் மொழியின் கண் இலது. ஆனதுபற்றி, அதன் எழுத்துக்களின் ஒலிக்குறையை



நிறைவு செய்யப் புது எழுத்துக்களைச் சேர்த்து, வேண்டப் பெறாத எழுத்துக்களை நீக்கி அதனை ஒரு புதுமொழியாக்கினா லொழிய இம் மொழியைச் செம்மைப் படுத்துதல் இயலாது என்று ஒரு சாரார் கூறுவர். இவர் கூற்றுப் பயனற்றது என்பது சில நாளைக்கு முன் "இந்து" பத்திரிகையில் திருவாளர் C. இராஜகோபாலாச்சாரியார் எழுதிய கட்டுரை களால் நன்குவிளங்கும். ஒரே எழுத்தானது இடத்தை அனுசரித்து ஓசையை அடைகிறது என்பது அவர் எடுத் துக்காட்டிய எடுத்துக்காட்டுகளால் விளங்கும். வடமொழியி னின்றும் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் தற்சம மாயோ, தற்பவமாயோ, வழங்கப்படல் வேண்டுமென்று வரையறுத்துக் கூறுகின்றன தமிழிலக்கண நூல்கள். இவை களைவிடுத்து, வேண்டாவிடத்து வடமொழிஎழுத்துக்களையும், சொற்களையும் அப்படியே பெயர்த்து எழுதுதல் சரியாகாது. இப்படியே அயல் மொழிகளில் காணப்படும் ஓசைகளை யெல்லாம் தமிழில் எழுத்தாக்குவது வேண்டப்படாத தொன்று. தமிழில் காணப்படுகின்ற 'ழகரம்' ஏனைய மொழிகளில் கொண்டு போகப்படாமற் போவதனால், அம் மொழிகள் அடையும் இழுக்கொன்றுமில்லை. ஆங்கிலத்திற் காணப்படுகின்ற 'எப்' (F) என்னும் ஒலிக்குறி தமிழில் கொள்ளப்படாமல் போவதனால் குறையொன்றுமில்லை. அந்த ஓசைதிரிந்து தமிழில் வருமானால் அதனால் தமிழுக்கு உண்டாகும் இழுக்கொன்றுமில்லை. நமது நாட்டின் இடு குறிப்பெயர்களைக் கூட ஆங்கில நாட்டானொருவன் தன் உச்சரிப்புக்குத் தகுந்தபடி மாற்றிக் கொள்கின்றான். ஒரு மொழியினின்று இன்னொருமொழியில் சொற்கள் சேர்க்கப்படும்போது பின்மொழியின் நடைக்கு ஏற்ப, ஓசை திரிந்தும் சொல்திரிந்தும் வருவது குறைவாகாது. தமிழின் கண் இப்போதிருக்கும் எழுத்துக்களைக் கொண்டே உலகத்தி

லிருக்கும் எம்மொழிகளையும் எழுதிவிடுதல் கூடுமென்று காலஞ்சென்ற பெரியார் மாணிக்கநாயக்கர் அவர்கள் எண்ணினார்கள். எழுத்துக்களைச் சேர்க்கவோ கழிக்கவோ வேண்டுவதில்லை. தமிழின் தூய்மையைக் காக்கத் தமிழ் மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

8. பொருளறிவு நூல்களை ஆக்குமிடத்துப் புதியசொற்களை ஆக்கிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும். இதுபற்றி இத்தமிழ்ச் சங்கத்தின் சார்பாகக் கூட்டப்பட்டிருக்கிற கலைச்சொல்லாக்கக் கழகம் ஒரு செம்மையான முறையைக் கைப்பற்றியிருக்கின்றது. ஒருகருத்தை வெளியிட வழக்கத்திலிருக்கிற தமிழ்ச் சொல்லையோ, வழக்கத்தி லிராவிட்டாலும் பண்டைய நூல்களில் காணப்படுகிற தமிழ்ச் சொல்லையோ கையாளுதல் வேண்டும். இப்படிச் சொற்கள் கிடைக்காதவழி ஒரு தமிழ்ச் சொல்லின் அடியாக ஒரு சொல்லை ஆக்க முடியுமானால் அதனைச் செய்து கொள்ளல் வேண்டும். இப்படியும் கிடைக்காத வழி, கருத்து ஆதியில் எம்மொழியிலிருந்து வெளிவந்ததோ அம்மொழியின் சொல்லையே கடன் கோடல் வேண்டும். இப்படி ஒரு புது மொழியை யுண்டாக்கும்போது அது அப்போது புதுமையாகத் தோற்றினாலும், வழக்கத்தில் வரவரப் புதுமை நீங்கிப்பழகின சொல்லாக ஆகிவிடும். கூட்டுறவுச் சட்டத்தை யனுசரித்து விதிகள் எழுத வேண்டியிருந்த நான் புதியனவாகப் புகுத்திய சொற்களை நாளடைவில் கிராமத்துச் சனங்களும் எளிதில் உணர்ந்து கொண்டனர்.

9. மேற்சொன்ன கலைச் சொல்லாக்க மகாநாடு சென்ற ஏழு நாட்களாகச் சென்னைமாநகரில்கூடி, சொற்களை ஆராய்ந்து ஒருமுடிபுக்கு வந்திருக்கிறது. முன் இரண்டுமுறை திருநெல்வேலியில்கூடி, ஆராய்ந்த நிபுணர்களேயல்லாமல் நாட்டின்கண்ணுள்ள திறமை வாய்ந்த மற்றும் பலரும் இம்மகா நாட்டில்



கூடி, முன் தொகுக்கப்பட்ட சொற்களையும் மற்றும் சேர்க்கப்பட்ட சொற்களையும் ஆராய்ந்து முடிவு கட்டியிருக்கின்றனர். இந்த முடிபானது, நுண்ணறிவோடும் கூடிய பெருமக்களால் நீண்ட உழைப்பின் பயனாக ஏற்பட்டிருப்பதனாலே அதை யாவரும் ஒப்புக்கொள்ளலாம். சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் அரசாங்கத்தாரும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்ப, அவர்கள் உடன்பாட்டுடன் இம்முடிபுகள் கட்டப்பட்டிருப்பதனாலே, பல்கலைக் கழகமும், அரசாங்கமும் இம்முடிபுகளை ஒப்புக்கொள்ளலாம். இம்முடிபுகளை அனுசரித்து, நூல் செய்வோர் தங்கள் நூல்களை இயற்றுவார்களானால், இச்சொற்கள் நாளடைவில் வழக்கத்தில் வந்துவிடும். இம்முடிபுகளினால் பயன் உடனே கிடைக்கவேண்டுமானால், இச்சொல்லாக்கத்தில் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் எல்லாம் குறைந்தது ஒரு நூலாவது எழுதி உதவ வேண்டும். பொருளறிவு நூல்கள் எழுதுவது உயர்தரப் பள்ளிக்கூட மாணவர்களுக்கேயல்லாமல் பொதுமக்கள் அறியும்படியும் அவர்களுக்கு உபயோகப்படும் வழியிலும் எழுதல்வேண்டும். ஆங்கிலம் முதலிய மொழிகளில், கற்பார்க்கு எழுதும் நூல்களைத் தவிர்த்துப் பொது மக்களுக்கும் “Popular Astronomy” என்று எழுதப்படும் புத்தகங்களைப் போலத் தமிழில் எழுதப்படல் வேண்டும். மேலும் பொருளறிவு நூல்களெல்லாம் கற்பார் எவர்க்கும் பயன்படும்படி விரிந்த வகையிலும் எழுதப்படல் வேண்டும். பள்ளி இறுதி வகுப்பு மாணாக்கர்களுக்கே யல்லாமல் பல்கலைக் கழக மாணாக்கர்களுக்குங்கூடப் பொருளறிவு நூல்கள் தமிழ்மொழியின் மூலமாய்க் கற்பிக்கப்படுமானால், இறுதித் தேர்வுமாணவர்கள் இவ்வறிவு நூல்களைத் தமிழில்கற்று மேல்வகுப்புக்களில் ஆங்கிலத்தில் கற்பதனால் உண்டாகும் சங்கடம் இல்லாதவர்களாவார்கள்.

# தமிழர் மத வளர்ச்சி

[வித்வான்: அ. மு. பரமசிவானந்தம்]

(மலர் - கூ, இதழ் - எ, உகசு-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயன்மார்களும் ஆழ்வார்களும் வாழ்ந்து தத்தம் மதங்களைப் பரப்பிச் சென்றபிறகு சிலகாலம் சமயக்கிளர்ச்சி இல்லாதிருந்தது. இரண்டொரு நூற்றாண்டுகள் கழித்து மறுபடியும் சமயம் தழைத்தோங்க ஆரம்பித்தது. காழிக்குழந்தையினிடமிருந்து எந்த அற்புத வார்த்தைகள் வெளியாகி உலகை உய்வித்தனவோ அத்தன்மையாகிய உண்மை வாக்குகளே திருவெண்ணெய்கல்லூர் குழந்தை வாக்கினும் குலவித் தோன்றின. இறைவனது அருட் பொலிவினாலே தோன்றிய மெய்கண்ட தேவர் திருவெண்ணெய்நல்லூரில் சிறந்த சைவப் பொலிவுடன் விளங்கினார். இவர் இயற்றிய சிவஞான போதமே இன்றளவும் சைவர்கள் மத்தியில் சிறந்த சித்தாந்த சாத்திரமெனப் போற்றிப் புகழப்படுகின்றது. பற்றற்ற பரம்பொருளினது பதித் தன்மையினையும், பற்றுள்ள ஆன்மாக்களது பசுத் தன்மையினையும், பாசத் தன்மைகளையும், அப்பாசம் அற்றுப் பரமனை அடையும் பரிசுத்தமான பண்பினையும் பன்னிரண்டு சூத்திரங்களால் விளக்கி உலகுக்குப் பயன் ஈந்த மெய்கண்டநாதன் தன்மையினாலன்றோ சித்தாந்த சாத்திரங்கள் அனைத்தும் மெய்கண்ட சாத்திரம் எனப் பெயர் பெற்றன. இவரது மாணாக்கராகிய அருணந்தி சிவாசாரியார் இருபா இருபஃது எனும் சித்தாந்த சாத்திரம் இயற்றிச் சிறப்புற்றனர்.

சில ஆண்டுகட்குப் பிறகு மற்றை இருசந்தான குரவர்களும் தோன்றினர். மறைஞான சம்பந்த சிவாசாரியரும், அவர் மாணாக்கராகிய உமாபதி சிவாசாரியரும் சைவ சித்தாந்தத் தன்மையினை உலகுக்கு நன்கு விளக்கிப் போந்தனர். இவர்களது குரு சீட சம்பந்தத்தைப் பற்றிப் பல் வேறு கதைகள் வழங்குகின்றன. அவை எவ்வாறாயினும் ஆகுக. அவர்கள் வானவர் கோனும் வளநடம் புரிவோன் வாழ்கின்ற தில்லைப் பதியிடத்தே பன்னாள் வதிந்து சித்தாந்த சாத்திரங்கள் இயற்றிச் சென்றார்கள் என்பது வெளிப்படை. கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் எட்டுச் சித்தாந்த சாத்திரங்களை இயற்றிப் புகழ் பெற்றார். இவரே திருவாவடுதுறை மடத்துத் தலைவர் எனவும் கூறப்படுகின்றார். திருவாவடுதுறை கயிலாய பரம்பரை என்பதில் இவர் எட்டாவதாக வைத்து எண்ணப்படுகின்றார்.

ஏறக்குறைய இக்காலத்திற்குப் பிறகு நம் தமிழ் நாட்டில் மடங்கள் சிறந்தோங்க ஆரம்பித்தன. முகம்மதிய மதமும் நம் மத்தியில் முற்படத் தலைப்பட்டது. அதற்கு முன்பே இது ஈண்டு புகுந்ததாயினும் பல்வேறு காரணங்களான் தற்போது அது அதிகமாகப் பரவியது. சைவமடங்களிலிருந்து பல் வேறு பண்பமை புலவர்கள் தோன்றினர். அன்னார் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்தவராவர். தலபுராணங்கள் இக்காலத்தில் பல எழுதப்பட்டன. பண்டைத் தமிழர்களது பெருமை குறைய ஆரம்பித்தது. தமிழ் நாட்டு மூவேந்தரும் பேரளவிலே நின்றனர். பிற நாட்டு மன்னர்கள் படையெடுப்பு நாட்டில் அதிகமாகக் கிளர்ந்தது. கிருஸ்தவ மதமும் கிளைத்தது. பல வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டன. எனவே தமிழர்களது நாகரிகத்திற்கும் அன்னார் மதத்திற்கும் ஒரு பெரு மாறுதல் ஏற்பட்ட காலமென்றே இதைச் சொல்லலாம்.

திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் ஆகிய மடங்கள் சிறந்தனவாகப் போற்றப்பட்டன. இவைகளில் சைவ பாடங்களைச் செவ்வனே, முறைப்படி பயில்வார்க்குக் கற்பிக்கப் பட்டன. இம் மடங்களிலிருந்து சிறந்த சைவத் தமிழறிஞர்கள் தழைத் தோங்கினர். சிவப்பிரகாசர், வேலையர், கருணைப் பிரகாசர் என்று சொல்லப்பட்ட மூன்று உடன்பிறப்பாளர்களும் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்து உலகுய்யச் செய்தனர். குமரகுருபரர் மூங்கைப் பிள்ளை எனப் பிறந்து செந்திற் செவ்வேள் திருவருள் பெற்று இனியதமிழ்ப் பாக்கள் பாடிய தன்மையினை வியவாதார் யார்? இன்னும் இவர்களைப் போன்ற பல வேறு அறிஞர்கள் இறைவன் நல்லருள் பெற்றவர்கள் இக்காலத்தே தோன்றினர்.

கடைசியாக நமக்கு ஒரு சிலஆண்டுகள் முன் சென்று நோக்குவோம். இக்காலத்தே கிருஸ்துவ மதமே நாட்டுப் பல அறிஞர்களால் போதிக்கப்பட்டுத் தமிழகத்தில் நிலைத்து நிற்கத் தலைப்பட்டது. சைவ பௌத்த மதங்கள் பெரும் பாலும் மறைந்து விட்டன. இடைக் காலத்தே முகலாயர்கள் கொணர்ந்த முகமதிய மதம் தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் அப்படியே நிலைத்து விட்டது. நம் சைவ நூல்களைச் சிலகாலம் சைவ மக்கள் காணாதிருந்த காலமென்றே இதைச் சொல்லலாம்.

இக்காலத்திற்குப் பிறகு யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்களும் வடலூர் இராமலிங்க அடிகளும் தோன்றி, மறைந்து கிடந்த பல்வேறு கொள்கைகளையும் சமயநூல்களையும் பரப்பலானார்கள். இராமலிங்க அடிகளது கனிந்த பாக்கள் கற்றோர்க்கு மாத்திரமன்றி மற்றெல்லா மக்களுக்கும் மனதிடையே புகுந்து ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும் என்பதிற் சந்தேகமில்லை. அவரது அருள் நலம் கனிந்த பாடல்கள் படிப்போர் மனதினைப் பண்புறச் செய்யும் என்பது நிச்சயம்.



தமிழகத்தில் இக்காலத்தில் அச்சு நிலையங்கள் வேரூன்ற ஆரம்பித்தன. ஏடுகளிலிருந்த அருந்தமிழ் நூல்களையெல்லாம் ஆறுமுக நாவலரும் பிறரும் நற்புத்தகமாக்கி விற்றுத் தத்தம் கொள்கைகளையும், மொழியையும் மதத்தையும் பரப்பினர். நாவலர் அச்சிட்ட நூல்கள் பல. அவை பெரும்பாலும் சைவ சமய நூல்களாகவே இருக்கின்றன.

இவர்களுக்குப் பிறகு திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் தோன்றித் திருவாவடுதுறை ஆதினத்தே கல்வி பயின்று பல்வேறு சைவசமய நூல்களையும் பிரபந்தங்களையும் இயற்றிச் சென்றார்.

இருபதாம் நூற்றாண்டின் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கிய சுப்பிரமணிய பாரதியாரை எம்மதத்தினரும் மறவாதிருக்கும் வகையில் அவர் பண்பார் பாடல்களைப் பாடிப் புகழ்பெற்றார். சமரசஞானந் ததும்பும் அவரது அரிய தோத்திரப் பாடல்கள் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். அவர் தனித்தனி ஒவ்வொரு மதச் சார்பிலும் நின்று இறைவனைப் பாடும் பாடல்கள் அவ்வம் மதவாதியின் உள்ளத்தைத் தட்டி எழுப்பும் என்பது திண்ணம். இத்தகைய உயர்ந்த கவியாரே நம் தமிழகத்தே கடைசியாக மறைந்த கவிவாணர்.

முடிவாகத் தற்போதுள்ள தமிழகத்தை ஆராய்வாம் எனின், அதுபரந்து விளங்கிக் கிடக்கின்ற தன்மைத் தாதலின் அதைப்பற்றி ஈண்டு உரைக்க வேண்டுவதில்லை.

நமக்குத் தெரிந்தவரை பாண்டியன் மாகீர்த்தியின் காலம் தொட்டு இன்றுகாறும் நம் தமிழகத்தே மதம் பரவி வந்த விதம் இதுவாகும். இத்துணைப் பல்வேறு மாறுதல்களுக் கிடையிலும், பல நாட்டு மன்னர்கள் படையெடுப்பின்

றையிலே ஆழப்புகுந்து ஆராய்ந்துகண்ட சிறந்த முடிவுகளை வடமொழியிலெழுதும் வழக்கம் தொன்று தொட்டு இந்த நாட்டிலே இருந்து வருகிறது. இதனால் வழக்கு மொழிகள் கலைத்துறைகளிலே பெருக்கமடையாது ஒழிந்தன. உதாரணமாகச் சிற்பக்கலையினை எடுத்துக் கொள்ளுவோம். தேவர் கோட்டம், மன்னன் கோயில், மக்களில்லம் என்னுமிவைதம்மை யமைக்கும் முறைகளையும் தெய்வச்சிலையுருவங்களை யமைக்கும் கணித நுட்பங்களையும் பண்டைய தமிழர் நன்குணர்ந் திருந்தன ரென்பதற்குத் தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களே சான்று பகருகின்றன. இவைதம்மையமைக்கும் ஆற்றல் வாய்ந்த சிற்பியர் தமிழ்நாட்டில் இன்னும் உளர். அங்ஙனமாயினும் இக்கலை நுட்பங்களனைத்தினையும் உணர்த்தும் ஆகம நூல்கள் வடமொழியிலே தான் எழுதப்பட்டிருக்கின்றன. அவை தம்மை வழக்கு மொழிகளிலே பெயர்த்தெழுதுதல் சாலவும் வாய்ப்புடைத்து. இம்முயற்சியிலேயே வடமொழி வல்ல தமிழறிஞர் இனிமேலாவது ஈடுபடுவாராக.

## இராஜயோக நூல்

சாங்கியம், யோகம், நியாயம் வைசேஷிகமாகிய நான்கு சாத்திரங்களிலும் கலைநூலுணர்ச்சிக்கு வேண்டிய பொருள் மலிந்து கிடக்கின்றது. பாரதநாடு செய்த அருந்தவப்பயனாகத் தோன்றிய சுவாமி விவேகானந்தரியற்றிய இராஜயோக நூலினை மொழிபெயர்க்குந் தொழிலில் யானீடுபட்டிருந்த காலத்திலே யோக சாஸ்திரத்திற்கு முதனூலாகிய பதஞ்சலி யோக சூத்திர நூலினைத் தமிழில் பெயர்த்தெழுத நேரிட்டது. அம் மொழிபெயர்ப்புச் சுவாமி விவேகானந்தரியற்றிய நூல்களின் தமிழ்மொழி பெயர்ப்பாகிய "விவேகானந்த ஞானதீப" முதற்றொகுதியிலே வெளியிடப்பட்



டிருக்கிறது. அதனைப் படித்த அன்பர் பலர் மிக உயர்ந்த நுண்ணிய கருத்துக்களைத் தூய தமிழிலே எழுதல் கூடும் என்னும் முடிவிற்கு வந்தனர்.

ஓரோவிடத்து ஆட்சிப்பட்ட தமிழ் மொழிப் பதங்களைத் தமிழில் வழங்குதல் குற்றமாகாது. பிங்கலந்தை, திவாகரம், சூடாமணிநிகண்டு என்னும் நிகண்டுகளிலே வந்த பதங்களை எடுத்தாள்வது எவ்வாற்றானும் பொருத்தமுடையதாகும்.

பிற மொழியிலிருந்து எடுத்த பதங்களைத் தமிழில் வழங்குமிடத்து அவைதம்மை எவ்வாறு தமிழாக்கிக்கொள்ளுதல் வேண்டும் என்பதைக் குறித்து ஒரு சில குறிப்புக் கூறுவாம். ஒவ்வொரு மொழிக்கும் சிற்சில சிறப்பியல்புகள் உள. அவை தம்மை மாறுபடாது பாதுகாத்தல் ஆன்றோருக் கியல்பு.

வாங்கு, மேசை, கதிரை என்னும் மொழிகள் ஆங்கிலச் சொற்களின் மொழிபெயர்ப்பாக ஈழநாட்டில் வழங்கப்படுகின்றது. இவைபோர்த்துக்கீச மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்குந் திசைமொழிகளா மென்பதைப் பெரும்பாலார் அறிந்து கொள்வதில்லை. இச் சொற்கள் தமிழுருவுடையவாதலின் வேறுபாடின்றி வழங்கப்படுகின்றன. ஓரேயினப் பொருள்களைக் குறிக்கும் சொற்கள் ஓரேவிகுதி பெற்று நிற்றலும், முரணிய இணைச் சொற்கள் ஓரே வாய்பாட்டால் நடந்து பெரும்பாலும் ஓரேயெதுகையாக நிற்றலும் தமிழ் வழக்கு. ஆம்பல், அலரி, குவளை, முல்லை, வெட்சி என்றித்தகைய பூப்பெயர்கள் இந்நாளில் ஒருமொழி நீர்மையவாக வழங்கப்படினும் இவைதாம் தொழிற் பெயர் விகுதி பெற்ற தொடர்மொழிகளாம் எனக் கொள்ளுதற்கிடமுண்டு. அறம், மறம் எனும் முரணிய வினைச்சொற்கள் ஓரேயெதுகையவாக அமைந்து நிற்றலை நோக்குக.

## இந்தியாவெங்கும் முயற்சி

கலை நூல்களை நாட்டு மொழியிலெழுதும் பெருமுயற்சி இந்தியாவின் பல பாகங்களிலும் நடந்துகொண்டிருக்கின்றது. ஐதராபாத் சமஸ்தானத்தி னுதரவிலே நடைபெறும் உஸ்மானியா சர்வகலாசாலையானது நாட்டு மொழியாகிய உருது பாஷையிலே எல்லாக் கலைத்துறைகளையும் பயிற்றுதற்கு ஏற்பாடுசெய்திருப்பது மிகச் சிறந்த முடிவாகும். இந்தியாவின் பல பாகங்களிலும் உயர்ந்த விஞ்ஞானக்கலை யாராய்ச்சிக்குப் பொதுமொழியாக ஆங்கில மொழியமைத்தலும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஏழைமக்கள்தாமும் எளிதிற் பயின்று கொள்ளவேண்டிய கலைத்துறைகளனைத்தும் நாட்டு மொழியிலமைந்து நிற்பதும் பொருத்தமாகும்.

தொகுத்துரைக்கு மிடத்துக் கலைநூல்கள் நாட்டிற் பரவுதற்கு எவ்வெச் சாதனங்கள் வேண்டப்படுமோ ஆங்கவற்றைத் தாமதமின்றி ஆக்கித்தருவது அறிஞரது கடனாகும்.

# பண்டைத் தமிழரும் முருகவேள் வழிபாடும்*

[G. கலியாணம், B. A.]

"தாமரை புரையும் காமற் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்

*இது, திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் செய்த ஒரு சொற்பொழிவைத் தழுவி எழுதப்பட்டது.



சேவலங் கொடியோன் காப்ப
ஏமவைகல் எய்தின்றால் உலகே"—குறுந் தொகை.

பண்டைத் தமிழர் முருகவேளை எங்ஙனம் வழிபட்டனர் என்பதைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். தமிழ் நாட்டிலே எக்காலத்திலேனும் தெய்வ வழிபாடு இல்லாமல் இருந்ததென்று சொல்வதற்கில்லை. இக் கூற்றிற்கு இலக்கிய இலக்கண நூல்களே சான்றாகும். மிகப்பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் நால்வகை நிலங்களுக்கும் தெய்வங்கள் கூறப்பட்டிருக்கின்றன. குறிஞ்சிக்குச் சேயோன், முல்லைக்கு மாயோன், நெய்தலுக்கு வேந்தன், மருதத்திற்கு வருணன் இவர்கள் தெய்வங்களாம். சங்கத் தமிழ் நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும், கீழ்க்கணக்கு நூல்களிலும் சிவபெருமான், கண்ணன், பலராமன், முருகவேள் முதலிய தெய்வங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், வால்வளை மேனி வாலியோன் கோயிலும், நீல மேனி நெடியோன் கோயிலும்" என்ற சிலப்பதிகார அடிகளை நோக்குக. மணிமேகலை யாசிரியர் "நுதல்விழிநாட்டத் திறையோன் முதலா" என்கிறார். கலித்தொகையில் "மழுவாள் நெடியோன் முதல்வனாக" என்று உரைக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் சிவபெருமானையே முதலில் கூறப்படுதல் கூர்ந்து கவனிக்கத் தக்கது. இடத்தில் முதன்மையாகக் கூறப்பட்டிருத்தலே யன்றித் தன்மையிலும் முதன்மையாகக் கூறப்பட்டிருப்பதூஉங் காண்க. அவருடைய அடையாளங்கள், பேர்கள் பல இருந்தும் "பிறவாயாக்கைப் பெரியோன்" என்றார் இளங்கோவடிகள். சங்க இலக்கியங்களில் 'சிவன்' என்ற பேர் காணப்படாவிடினும் அவனைக் குறித்து அநேக இடங்களில் விதந்தோதப் பெற்றிருக்கின்றது. அவைகளில் இன்னும் பல

ஒன்று சேர்ந்து ஆகாயவழியே ஒரு குறித்ததிசை நோக்கிப் பிரயாணம் செய்கின்றன. பெரிய அண்டத்திலிருந்து அணுவின் சிறிய பாகமாகிய நியூக்ளியஸ்வரையில் சுழற்சியே இருந்துவருகிறது.

மூன்றாவதாக அறிவியல் சாஸ்திரத்தில் நாம் என்ன உண்மைகளைக் காண்கிறோம் என்பதைக் கவனித்தல் அவசியமாகும். நாம் எங்கும் சட்டத்தையும் வரம்பையுமே காண்கிறோம். ஒரு கட்டுப்பாட்டுக் கடங்கியே எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இக்கட்டுப்பாடு சிறிய வஸ்துவிலிருந்து பெரிய அண்டம் வரை நிகழ்கிறது. ஆதலின் 'நெபுலா'வின் (Nebulae) அமைப்பிலிருந்து இவ்வண்ட சராசர இயக்கத்தையும், பாறைகளின் வளர்ச்சியைக் கொண்டு நமது பூமியின் சரித்திரத்தையும் கூறிவிடலாம்.

இறுதியாக நாம் அறியவேண்டுவது என்ன? கடவுளை மதத்தத்துவ நூல்களில் மட்டும் நாம் காண்கின்றோமில்லை. அறிவியல் நூல் வல்லார் இவ்வண்டப் பொருள்கள் ஒவ்வொன்றிலும் கடவுளின் அம்சத்தையும், ஆணையையும் காண்கிறார். இக் கண்கொண்டு கடவுளை நோக்கும் ஒருவன் கடவுளை எங்குங் காண்கிறான். இந்நோக்கோடேயே ஆன்றோர் கடவுள் எங்கும் இருக்கிறார் எனக்கூறினார்.

முடிவாக அறிவியல் நூல் ஆராய்ச்சி மதத்தின் உண்மைகளை உறுதிப் படுத்துகிறதென்பதோ டமையாது, அக்கண் கொண்டு பார்க்கும் போதே கடவுளின் முழுத் தோற்றத்தையும் நாம் காணக்கூடு மென்று கூறுவது சாலச் சிறந்ததாகும்.



முத்தியில் ஆன்மா நின்றனுபவிக்கு மென்பதற்குப் பிரமாணம் உண்மை விளக்கத்தில்,

“முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவணு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடன் கண்டுகொளப் பா” [51]

என்றும், சித்தியாரில், “உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே” [xi, 10] என்றுஞ் சொன்னது இப்பொருளைப் பற்றி யெனவறிக.

தன்னது போ ரனந்தப் பெருங்கட லதனு ளாரா வின்ப மளித்து என்றதற்கு அருட் சமுத்திரத்திலே விளையப்பட்ட இன்பத்தை எனக்குக் கடாட்சித்து அருளி என்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் ஏதென்னில் சித்தியாரில்,

“சித்தாந்தத் தேசிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து” [viii, 16]

என்பது கண்டுகொள்க.

உள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற வள்ளன்மை காட்டி என்றதற்குச் சிவன் உள்ளும் புறம்பும் நிறைந்து நிற்பனென்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் திருவாசகத்திலே,

“உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த யோகமே”
[பிடித்தபத்து, 1]

என்பது கண்டுகொள்க.

இனி, மலரடி யருளிய மன்ன னெங்கோன் என்றதற்குத் தாமரை மலர் போன்ற சீபாதத்தைக் கடாட்சித்தருளினவ னென்று பொருள் கூறியதற்குப் பிரமாணம்[திருவாசகம்]திருவெம்பாவையில்,

“செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை” [17]

என்பது கண்டுகொள்க.

இனி, அருளா லயத்தன் என்பதற்கு அருளே கோயிலாக எழுந்தருளி யிருக்கப்பட்டவனென்று பொருள் கூறியதேதென்னில்,சிவன்

மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமாம்
ஒண்கனல்சுட் டொன்றுவிக்கும் ஓவாமல்—வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கில் ஆகாயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து. கூ

(உரை) மண் கடினமாய்த் தரிக்கும் - பிருதிவியானது விடயங்களிலே கடினகுணத்தைக் கொடுத்துக்கொண்டு நிற்கும்,—வாரி குளிர்ந்தே பதமாம் - அப்புவானது விடயங்களிலே நெகிழ்ந்த குணத்தைக் கொடுத்துக்கொண்டு நிற்கும்,—ஒண்கனல் சுட்டொன்றுவிக்கும் - ஒள்ளிய தேயுவானது விடயங்களிலே சுட்டொன்றுதலைப் பண்ணிக்கொண்டு நிற்கும்,—வண் கால் ஓவாமற் பரந்து சலித்துத் திரட்டும் - வளப்பத்தையுடைய வாயுவானது நீங்காது பரந்து சலித்து விடயங்களைத் திரட்டும்,—பார்க்கில் ஆகாயம் நிரந்தரமாய் நிறைந்து நிற்கும் - விசாரிக்குமிடத்து ஆகாயம் நிரந்தரமாய் நிறைந்து விடயங்களுக்கெல்லாம் இடங்கொடுத்துக்கொண்டு நிற்கும். கூ

உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்றனக்குக்
கள்ளமிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில்—மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே யாம். க0

(உரை) உன்றனக்கு உள்ளபடி மா பூதம் ஓதினோம் - உனக்கு உண்மையாகப் பஞ்சமகா பூதங்களுஞ் சொன்னோம்,—கள்ளமிகும் ஐம்புலனும் மெள்ளவே கட்டுரைக்கில் - கள்ளமிகுந்த பஞ்சவிடயங்களை மெல்லச் சொல்லுமிடத்து, ஓசை பரிசம் உருவஞ் சுவை நாற்றம் ஆசை தரும் ஐம்புலனேயாம் - சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் ஆகிய இவை ஆசையைத் தருகின்ற அவ்வைம்புலன்களாம். க0

ஞானேந் திரியங்கள் நன்றா உரைக்கக்கேள்
ஊன மிகுபூதம் உற்றிடமா—ஈனமாம்
சத்தாதி யைஅறியும் தானம் செவிதோல்கண்
அத்தாலும் மூக்கென் றறி. கக

(உரை) ஞானேந்திரியங்கள் நன்றா உரைக்கக்கேள் - ஞானேந்திரியங்களை நன்றாகச் சொல்லுகிறோங்கேள்,—ஊனம் உற்று மிகு பூதம் இடமா - குறைவு பொருந்தி மிகுகின்ற பஞ்சபூதங்களிடமாக நின்று,—ஈனமாஞ் சத்தாதியை அறியும் - (அவை) தாழ்வாகிய சத்தாதி விடயங்களை அறியும்,—தானம் செவிதோல் கண் அத்தாலு மூக்கென்று அறி - (அவற்றிற்குத்) தானம் சுரோத்திரம் துவக்கு சட்சு அந்தச்சிகுவை ஆக்கிராணமென்று அறிவாய். கக



வானிடமா நின்றுசெவி மன்னும் ஒலியதனை
ஈனமிகுந் தோல்கால் இடமாக—ஊனப்
பரிசம் தனைஅறியும் பார்வையிற்கண் அங்கி
விரவிஉரு வங்காணு மே. கஉ

(உரை) வானிடமா நின்று செவி மன்னும் ஒலியதனை (அறியும்)—ஆகாயத்தினிடமாக நின்று சுரோத்திரம் பொருந்திய சத்தத்தை யறியும்,—காலிடமாக (நின்று) ஈனமிகுந் தோல் ஊனப் பரிசந்தனை அறியும்—வாயுவினிடமாக நின்று ஈனத்துவமிக்க தொக்கு குறைவுடைய பரிசத்தையறியும்,—அங்கி விரவிப் பார்வையிற்கண் உருவங்காணுமே - தேயுவினிடமாக நின்று பார்வையினையுடைய சட்சு உருவத்தை யறியும். கஉ

நன்றாக நீரிடமா நாஇரதந் தான்அறியும்
பொன்றா மணம்மூக்குப் பூவிடமா—நின்றறியும்
என்றோது மன்றே இறைஆ கமம்இதனை
வென்றார்சென் றாரின்ப வீடு. கங

(உரை) நன்றாக நீரிடமா (நின்று) நா இரதந்தான் அறியும் - நன்மையாக அப்புவினிடமாக நின்று சிகுவை இரசத்தையறியும்,—பொன்றாப் பூவிடமா நின்று மூக்கு மணம் அறியும் - கெடாத பிருதிவியினிடமாகநின்று ஆக்கிராணங் கந்தத்தையறியும்,—என்று இறை ஆகமம் அன்றே ஓதும் - என்று சிவாகமங்களிலே அநாதியே சொல்லும்,—இதனை வென்றார் இன்பவீடு சென்றார் - இந்தப் பஞ்சேந்திரியங்களை நிக்கிரகம் பண்ணினவர்களே ஆனந்த வீட்டினை அடைந்தார். கங

கண்ணுதல்நூ லோதியிடும் கன்மேந் திரியங்கள்
எண்ணும்வச னாதிக் கிடமாக—நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னு குதம்உபத்த
மாக்கருது நாளு மது. கச

நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றாடல் உள்ளபடி—பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணார் அருளாலே சாற்று. ௩௦

(உரை) நற்றவத்தோர் தாம் காண - நல்ல தவத்தையுடைய ஆன்மாக்கள் தரிசிக்கத் தக்கதாக,—நாதாந்தத்து அஞ்செழுத்தால் உருவாய் உற்று நின்றாடல் - நாதமுடிவிலே சிவபிரான் பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு நிருத்தஞ்செய்கிற முறைமையை,—உள்ளபடி நான் பெற்றிட - உண்மையாக அடியேன் தரிசிக்கத் தக்கதாக,—விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்டநாதனே - ஆகாயத்தை அளாவியிருக்கின்ற சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரே திருப்பதியாகக் கொண்டெழுந்தருளியிருக்கிற மெய் கண்ட தேவனே,—தண்ணார் அருளாலே சாற்று - குளிர்ந்த கிருபையினாலே அருளல் வேண்டும். ௩௦

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே
அவாயமற நின்றாடு வான். ௩௧

(உரை) எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே நட்டம்-எட்டு மிரண்டு முருவாயிருக்கிற யகாரமாகிய ஆன்மாவினிடத்திலே செய்யும் நடனத்தை,—புதல்வா நவிலக்கேள் - மாணவகனே சொல்லக் கேள்,—சிட்டன் - பரமசிவன்,—சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே அவாயம் அற நின்று ஆடுவான் - சிகாரமாதிபஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு ஆன்மாக்கள் பிறவியறத்தக்கதாக நிருத் தஞ் செய்வன். ௩௧

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். ௩௨

(உரை) ஐயனே நல் அம்பலத்தான் ஆடும் படிகேள் - மாணாக்கனே பொன்னம்பலமுடையான் நிருத்தஞ்செய்கிற முறைமையைச்



சொல்லுகிறோங் கேள்,—நாடுந் திருவடியிலே நகரம் - நாடாநின்ற ஸ்ரீபாதத்திலே நகாரமாகவும்,—கூடும் உதரம் மகரம் - பொருந்தப் பட்ட திருவுந்தியிலே மகாரமாகவும்,—வளர் தோள் சிகரம் - வளரா நின்ற திருத்தோளிலே சிகாரமாகவும்,—பகரு முகம் வா - சொல்லப் பட்ட திருமுகத்திலே வகாரமாகவும்,—முடியப்பார் - திருமுடியிலே யகாரமாகவும் கொண்டருளித் திருநிருத்தஞ் செய்வானென்று விசாரித்தறிவாயாக. ௩௨

சேர்க்கும் துடிசிரகஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். ௩௩

(உரை) ஆர்க்குந் துடி சேர்க்குங் (கரம்) சிகரம் - ஒலிக்கின்ற டமரகமேந்திய ஸ்ரீஅத்தத்திலே சிகாரமாகவும்,—சிக்கனவீசுகரம் வா - நன்றாக வீசிய ஸ்ரீஅத்தத்திலே வகாரமாகவும்,—அபயகரம் யகரம் - அமைத்த ஸ்ரீஅத்தத்திலே யகாரமாகவும்,—பார்க்கில் அங்கி இறைக்கு நகரம் - பார்க்குமிடத்து அக்கினியேந்திய ஸ்ரீஅத்தத்திலே நகாரமாகவும்,—முயலகனார் தங்கும் அடிக்கீழ் மகரமதுதான் - முயலகனை மிதித்த ஸ்ரீபாதத்திலே மகாரமாகவும் கொண்டருளித் திருநிருத்தஞ் செய்வானென்றறிவாயாக. ௩௩

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்—ஆங்காரம்
அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின். ௩௪

(உரை) ஓங்காரமே நற்றிருவாசி - பிரணவந்தானே நல்ல திருவாசியாகவும்,—உற்று அதனில் நீங்கா எழுத்தே நிறை சுடராம் - பொருந்தி அப்பிரணவத்தைவிட்டு நீங்காத பஞ்சாக்கரமே நிறைந்த உள்ளொளியாகவும்,—ஆங்காரம் அற்றார் அறிவர் - யானெனதென்னுஞ் செருக்கற்றவர்கள் அறிவார்கள்,—அணி அம்பலத்தான் ஆடல் இது பெற்றார் பின் பிறப்பு அற்றார் - அழகிய திருவம்பலத்தான் செய்யும் நிருத்தமாகிய இதனைத் தரிசித்தவர்களே பின்பு சநநமரண மற்றவர்கள். ௩௪

தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
யூன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. ௩௫

(உரை) துடியதனில் தோற்றம் - டமரகமேந்திய ஸ்ரீ அத்தத்திலே சிருஷ்டியாகவும்,—அமைப்பில் தோயும் திதி - அமைத்த ஸ்ரீ அத்தத்திலே ஆன்மாப் பொருந்தும் இரக்ஷையாகவும்,—சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - சொல்லப்பட்ட அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்திலே மலசங்காரமாகவும்,—ஊற்றமா யூன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் - உறுதியாக வூன்றிய மலர்போலும் பொருந்திய ஸ்ரீபாதத்திலே பிரபஞ்சத்தை மறைக்குந் திரோதமாகவும்,—நான்ற மலர்ப்பதத்தே முத்திகாடு-தூக்கியமலர்போலும் ஸ்ரீபாதத்திலே அநுக்கிரக முத்தியாகவும் திருக்கூத்துச் செய்வனென்று விசாரித்தறிவாயாக.

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதம் தான். ௩௬

(உரை) மாயைதனை உதறி-டமரகமேந்திய ஸ்ரீ அத்தத்தினாலே மாயையை நீக்கி,—வல்வினையைச் சுட்டு - அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்தினாலே கன்மமலத்தைச் சுட்டு,—மலஞ் சாய அமுக்கி-ஊன்றிய ஸ்ரீபாதத்தினாலே மலமேலிடாமல் அழுத்தி,—அருள்தான் எடுத்து தூக்கிய பாதத்தினாலே அருளே தனுவாகநிறுத்தி,—நேயத்தால் ஆநந்த வாரிதியில் ஆன்மாவைத்தான் அழுத்தல்தான் - கிருபையினாலே அமைத்த ஸ்ரீ அத்தத்தினாலே ஆநந்தவெள்ளத்திலே ஆன்மாவை அழுத்துவது தான்,—எந்தையார் பாதந்தான் - எம்முடைய பிதாவாகிய பரமேசுவரனுடைய திருக்கூத்து முறைமை. ௩௬

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும்—ஆநந்தம்
மொண்டருந்தி நின்றாடல் காணும்அருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து. ௩௭



(உரை) அந்தமோன மாமுனிவர் மும்மலத்தை மோசித்து - முடிவான மௌனமுடைய ஞானிகள் கர்த்தாவினுடைய கிருபையினாலே மூன்று மலங்களையு நீக்கி,—தான் அந்தமானஇடத்தே தங்கியிடும் - ஆன்மபோத முடிந்தவிடத்திலே உதயமாகும்,—ஆநந்தம் மொண்டு அருந்தி நின்று ஆடல்காணும் - ஆநந்தவெள்ளத்தை முகந்துகொண்டநுபவிப்பதுதான்,—அருள் மூர்த்தியாக்கொண்ட திருவம்பலத்தான்கூத்து - ஆன்மாக்களை இரக்ஷிக்கவேண்டுமென்னும் காருண்ணியமே திருமேனியாகக்கொண்ட திருவம்பலத்தான் திருநிருத்தஞ் செய்யும் முறைமையாம். ௩௭

உரைஉணர்வுக் கெட்டா ஒருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகள்தான் பாதி—பரையிடமாக்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு. ௩௮

(உரை) உரை உணர்வுக் கெட்டா ஒருவன் - மனவாக்குக் காயங்களுக்கெட்டாத ஒப்பற்ற பரமேசுவரன்,—மிகு பஞ்சாக்கரத்தால் கருணை உருக்கொண்டு - மேலான பஞ்சாக்கரத்தினாலும் கருணையினாலும் திருமேனிகொண்டு,—பரை இடமா - பராசத்தியாகிய திருவம்பலமிடமாகநின்று,—பாதி வரைமகடான் காணும்படியே - பாதியாகிய மலையரையன்மகள் காணும்படிக்கு,—ஆடல் பேணுமவர்க்குப் பிறப்பு உண்டோ-திருக்கூத்தை விரும்பினவர்களுக்குப் பின்பு பிறவியில்லையாம். ௩௮

நாதாந்த நாடகத்தை நன்றாய் அருள்செய்தீர்
ஓதீர் எழுத்தஞ்சும் உள்ளபடி—தீதறவே
அஞ்செழுத்தீ தாகில் அழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச அருட்குருவே சாற்று. ௩௯

(உரை) நாதாந்தநாடகத்தை நன்றாய் அருள்செய்தீர்-தத்துவாதீதமாயிருக்கிற திருக்கூத்து முறைமையை நன்றாய் அருள்செய்தீர்; அஞ்செழுத்தீதாகில் அழியுமெழுத்தாய்விடுமோ ஓதீர் - பஞ்சாக்கரமெழுத்துகளிலே யொன்றாயிருக்குமாகில் அழிகிற எழுத்துக்களாமோ, தஞ்ச அருட்குருவே-புகலிடமாயிருக்கிற கிருபையுடைய தேசிகனே, தீதறவே எழுத்தஞ்சும் உள்ளபடிசாற்று - குற்றமற்றபஞ்சாக்கரத்தினுண்மையை யுண்டானபடியே அடியேனுக் கருள்செய்யவேண்டும்.

**(உரை)** முந்து பழம் போது அங்கி வித்தகமாம் வீணை இவையிற்றின் ஒத்த இரதம் மணம் வெம்மை எழில் நாதம்போல . முதிய பழமும் மலரும் அக்கினியும் விசித்திரமாகிய வீணையும் ஆகிய இவற்றின் (முறையே) இணங்கிய இரதமும் மணமும் வெம்மையும் அழகிய ஓசையும் போல.—முத்திதனை அடைந்தோர் விரவுவர் என்று விதி ஓதும் - பரமுத்தியைப் பெற்றவர் இரண்டறச் சிவத்திற் கலந்திருப்பரென்று வேதாகமங்கள் விதியாகச் சொல்லும். ௪௫

தத்துவங்க ளெல்லாம் சகசமா ஆன்மாவிற்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல்—முத்திதனிற்
சித்தமல மற்றார் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமா ஓதியிடுந் தான். ௪௬

**(உரை)** பெத்தத்தில் தத்துவங்க ளெல்லாம் ஆன்மாவிற் சகசமா நிற்கின்ற பெற்றிபோல் - பெத்ததசையிலே தத்துவங்களெல்லாம் ஆன்மாவினிடத்திலே இரண்டறநிற்கு முறைமைபோல,—முத்திதனிற் சித்த மலம் அற்றார் செறிந்திடுவரென்று சத்தியமா மறை ஓதியிடுந் தான் - முத்திதசையிலே சகசமல மற்றவர்கள் சிவனிடத்திலே இரண்டறப் பொருந்தி நிற்பார்களென்று சத்தியமாக வேதாகமங்கள் சொல்லும்
௪௬

ஆதவன் தன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோல்—நாதாந்தத்(து)
அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்தின்பக்
கண்ணில் அழுந்தியிடும் காண். ௪௭

**(உரை)** ஆதவன்றன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி பேதம் அறநிற்கின்ற பெற்றிபோல் - ஆதித்தப்பிரகாசத்தின் முன்னே சந்திரப்பிரகாசமானது இரண்டறநிற்கு முறைமைபோல,—நாதாந்தத்து அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்து - தத்துவாதீதமாயிருக்கின்ற சிவபிரான் திருவடியிலே ஆன்மாப்பொருந்தி,—இன்பக் கண்ணில் அழுத்தியிடுங்காண் - பேரின்பத்திலே இரண்டறப் பொருந்துமென்றறிவாயாக.
௪௭

சென்றிவன்றான் ஒன்றில் சிவபூ ரணம்சிதையும்
அன்றவன்றான் ஒன்றும் எனில் அந்நியமாம்—இன்றிரண்டும்
அற்றநிலை யேதென்னில் ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கொள். ௪௮

**(உரை)** இவன்றான் சென்று ஒன்றில் சிவபூரணஞ் சிதையும் - ஆன்மா சிவனைச்சென்று பொருந்துவனாகில் சிவனுக்குப் பூரணத்துவமில்லையாக வேண்டும்,—அவன்றான் ஒன்றுமெனில் அன்று அந்நியமாம் - சிவன் ஆன்மாவைச்சென்று பொருந்துவனாகில் அப்போது ஆன்மா வேறாயிருக்கவேண்டும்,—இரண்டும் அற்ற நிலை ஏதென்னில், இரண்டு முறைமையுமல்லாமல் நின்ற நிலை எங்ஙனமெனில்,—இன்று ஆதித்தன் அந்தன் விழிக்குற்றம்அற நின்றதுபோற் கொள் - இப்போது அந்தகனுக்குப் படலநீங்கின காலத்து ஆதித்தனொளியுங் கண்ணொளியும் இரண்டறக் கலந்து நின்றாற்போலுமெனக் கொள்வாய்.
௪௮

வாக்கு மனமிறந்த வான்கருணை யாளன்உருத்
தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா—நீக்காப்
பதியினைப்போல் நித்தம் பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு. ௪௯

**(உரை)** வாக்கு மனம் இறந்த வான் கருணையாளன் உருத்தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா - மனவாக்குக்களுக் கெட்டாத அருளே வடிவாய் உலகத்திலே தாக்கற்று - நிற்கும் ஒப்பற்ற கர்த்தாவே,—நீக்காப்பதியினைப்போற் பசுபாசம் நித்தமென்றாய் - விட்டு நீங்காமலிருக்கும் பதியினைப்போற் பசுவும்பாசமு நித்தியமென் றருளிச்செய்தாய்,—கதியிடத்தும் மூன்றினையுங் காட்டு - முத்தியிலும் அம்மூன்று முதலும் அழியாமல் நிற்கிற முறைமையை அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும்.
௪௯

முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅநு போகத்தைத் துய்த்தல்அணு—மெத்தவே
இன்பங்கொ டுத்தல்இறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள்அப் பா. ௫௦

**(உரை)** முத்திதனில் மூன்றுமுதலும் மொழியக்கேளப்பா - அப்பனே முத்தியிலும் பதிபசுபாசமூன்று முதலுமழியாமல் நிற்கிற

முறைமையைச் சொல்லுகிறேன்கேள்,—சுத்தவநுபோகத்தைத் துய்த்தலனு - பேரின்பத்தைப் புசிக்கிற தான்மா,—மெத்தவேயின்பங் கொடுத்த விறை - பேரின்பத்தை மிகுதியுங் கொடுக்கிறது கத்தா, இத்தைவிளைவித்தல்மலம் - பேரின்பத்தை மேன்மேலும் விளைக்கிறது மலம்,—அன்புடனே கண்டுகொள் - அன்பினாலே யறிவாயாக.

அப்பாஇம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள்—ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறில்இவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண். ௫௧

(உரை) இம்முத்திக்கு அழியாத காரணந்தான் அருளாலே செப்பாய் அப்பா செப்பக்கேள் - இப்பாமுத்திக்கு அழியாத எதுவைக் கருணையினாலே அருளென்ற மாணவகனே சொல்லக்கேளாய்,—ஒப்பில் குருலிங்கவேடமெனக் கூறில் - (அக்காரணம்) ஒப்பில்லாத குருலிங்கசங்கம வழிபாடென்று (சிவாகமம்) செப்புமானால்,—இவை கொண்டார் - இம்முப்பொருளின் வழிபாட்டை உண்மையாகக் கொண்டவர்,—கரு ஒன்றி நில்லார்கள் காண் - கருப்பத்திலே பொருந்திப் பிறந்திறவார்களென்று அறிவாய். ௫௧

கற்றா மனம்போல் கசிந்து கசிந் தேஉருகி
உற்றாசான் லிங்கம் உயர்வேடம்—பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார். ௫௨

(உரை) கற்றா மனம்போற் கசிந்து கசிந்தே உருகி உற்று - ஈன்றண்ணியகன்றையுடைய பசுவைப்போலப் பெரிதுங் கசிந்துருகி அமைந்து,—ஆசான் லிங்கம் உயர் வேடம் பற்றாக - சிவதேசிகரையும் சிவலிங்கப்பெருமானையும் உயர்ந்த சிவவேடத்தாரையும் பொருளாகக்கொண்டு,—முத்தித்தலைவர் முழுமலத்தை மோசிக்கும் பத்திதனில் நின்றிடுவர் பார்-சீவன்முத்தியில்நிற்குந் தலைவரும் மலவாசனை முற்றும் ஒழித்தற் கேதுவாகிய அன்புசெய்யும்வழியே ஒழுகுவர் (ஆதலால் நீயும் அவ்வன்பின் வழியை) நோக்குவாய். ௫௨



வாழ்ந்தேன் அருட் கடலே வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதியினில்—சூழ்ந்து விடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே
உண்மைத் தவப்பயனே உற்று. ௫௩

(உரை) சூழ்ந்துவிடா வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்டநாதனே - (மெய்யன்பர்) சூழ்ந்துநீங்காத திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருக்கின்ற சுவேதவனப்பெருமானென்னும் பிள்ளைத் திருநாமத்தையுடைய மெய்கண்டதேவனே,—அருட்கடலே - கிருபாசமுத்திரமே,—உண்மைத் தவப்பயனே - உண்மையாகிய சரியை முதலிய தவத்தினர்க்குப் பயனாயுள்ளவனே,—வற்றாப் பவக்கடலில் வீழ்ந்தேமேதினியில் அலையாமல் உற்று வாழ்ந்தேன் - வற்றாதபிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து உலகவியலிற் சுழலாது (முத்திக்கரையாகிய உனது திருவடியை) அடைந்துவாழ்ந்தேன். ௫௩

உளமருவு சூரனுரம் எனதிடும்பை ஓங்கல்
ஒன்றிரண்டு கூறுபட ஒளிதிகழ்வே லுகந்த
களபமலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மல ரடியிணைகள் சிந்தை செய்வாம்.

இது சுப்பிரமணிய தோத்திரம். இதன் பொருள் வெளிப்படை.

(உரை) வளநிலவு குலவமரர் பதியாய் - புதுமை விளங்காநின்ற தேவர்கள் கூட்டத்துக்குக் கர்த்தாவுமாய்; நீலமயி . . . மதலை - நீலநிறத்தையுடைய மயில்வாகனத்திலே யெழுந்தருளி வாராநின்ற தம்பிரானுர் தந்தருளும் ஞான வடிவான பிள்ளை; அளவில்பல . . . மண்ணல் - எண்ணிறந்த பல கலை ஞானங்களையும் நாலு வேதங்களையும் ஓதியுணர்ந்த அகத்தியமாவிருஷிக்கு வேத வியாக்கியானத்தை அருளிச்செய்த சுவாமி; விறலெண்ணு . . . கந்தன் - தன்னுடைய வெற்றியை விசாரியாத மனத்தையுடைய சூரனது மார்பையும் என்னுடைய பிறவிக் கிலேசத்தையும் அசுரனொதுங்கின கிரவுஞ்சபர்வதத்தையும் இவை யொன்றிரண்டு கூறும்படி விளங்காநின்ற வேலைத் திருவுள்ளத்தடைத்துக் குறமகள்தனது களபம் பொருந்திய அழகிய முலைத்தளங்களிலே முயங்கியருளிய சுப்பிரமணியனுடைய; அடியிணைகள் சிந்தை செய்வாம்-செந்தாமரைமலர்போன்ற இரண்டு ஸ்ரீபாதங்களையும் நினையாநின்றேன்.

கந்தன் மலரடியிணைகள் சிந்தை செய்ததும் நலந்தரநூ விருந்தமிழின் செய்யுட்குற்ற நண்ணுமை யிடையூறு நயவாமை கருதியெனப் பொருள் கூட்டுக. இடும்பை யிரண்டுபட என்றது தம்மை விட்டு அன்னியமாக என்றதெனக் கொள்க. சுப்பிரமணியனென்றது வாலப்பிரமசாரியெனக் கொள்க. இதனுற் சொல்லியது இந்நூல் செய்து முடியுமளவும் இடையூறு வாராமலெனக் கொள்க. இவை இரண்டும் வழிபடு தெய்வ வணக்கம்.

### சந்தான பரம்பரை

5\. தேவர்பிரான் வளர்கயிலை காவல் பூண்ட
திருநந்தி அவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்

162552

திருவாளர் - ஆசிரியர், அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "தாயுமானவரும் சைவ சித்தாந்தமும்" என்ற தத்துவம்பற்றியும், திருவாளர் - கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியர் அவர்கள் "மன நலமும் மனித நிலையும்" என்பது பற்றியும், "கம்பனும் அநுமனும் என்பதுபற்றியும், குகஸ்ரீ கிருபானந்தவாரி அவர்கள் "திருப்புகழ்" என்ற பொருள் குறித்தும் அரிய விரிவுரைகளாற்றப் பொன்விழா இனிது நிறைவேறியது. இவற்றிற் கிடையே இரண்டாம் நாளில் பொன்விழா நினைவுக் குறியாகச் "சித்தாந்தப் பொன்மொழி" என்ற சீரிய நூல் சபை யமைச்சர் திருவாளர் வித்துவான் ம. பெரியசாமிப் பிள்ளையவர்களால் எழுதி வெளியிடப்பெற்றது.

பொன்விழா நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தபோதிலும் தலைமை தாங்கிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் மூன்று திங்கள் இத் திருச்சி நகரில் வதிந்தருளி, நகரின் பல்வேறிடங்களிலும், திருவானைக்கா, பூவாளூர் முதலிய வெளியூர்களிலும் அன்பர்களது வேண்டுகோட் கிணங்கி ஏறக்குறைய ஐம்பது பெருஞ் சொற்பொழிவுகளாற்றியது பெரிதும் போற்றத்தக்கதாகும். சபையின் பொன்விழா நிகழ்ச்சியாலும் சுவாமிகளது சைவ சமயம் பற்றிய பெருஞ் சொற்பொழிவுகளாலும் இந் நகரிலும் அதனை யடுத்துள்ள ஊர்களிலும் ஒரு புத்துணர்ச்சியும் சைவத்தின்பால் கரைகடந்த பற்றும் நிலவுகிறதென்பது மிகையாகாது. சைவ அன்பர்களே யன்றி வைணவ அடியவர்களும் சுவாமிகள் வாயால் நம்மாழ்வார் வைபவம், கம்ப ராமாயணம் முதலிய அரும்பொருள்களைக் கேட்டுப் பெருமகிழ் வெய்தினர்.

சென்ற 19-6-1936ல் பொன் விழாவின் பொருட்டு எழுந்தருளிய சுவாமிகள் மூன்று திங்களுக்குப் பிறகு 20-9-1936ல் விடியற் காலையில் திரிசிரபுரத்தை அரிதின் நீங்கித் திருப்பராய்த்துறை, குளித்தலை, கரூர் முதலிய பதிகளின் வழியாகப் பழனித் திருத் தலத்துக்கு எழுந்தருளியுள்ளார்கள்.

27—9—36

ம. பெரியசாமிப் பிள்ளை,
அமைச்சர்,
திரிசிரபுரஞ் சைவ சித்தாந்த சபை, திருச்சி

---

## சைவ சித்தாந்த இளைஞர் சங்கம் தஞ்சை

### அப்பர் படக் காட்சிக்கு ஆதரவு

இச்சங்கத்தின் வாராந்தரக் கூட்டமானது 19-9-36சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில் தேவார ஆசிரியர் முத்துக்குமாரசாமிப் பிள்ளை தலைமையில் கூடிற்று. அதுபோது தி. சு. சம்பந்தசாமி என்பவரால் அடியிற் கண்ட தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு அமைச்சர் S. சபாபதிப் பிள்ளை என்பவரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

"பல ஊர்களில் கூடிய ஜைனர்கள் கூட்டத்தில் அப்பர் படக் காட்சி பிடிப்பதைக் கண்டித்தும் திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் முதலியவைகளில் கூறுவது போன்ற சரிதங்கள் நடந்ததாக யாதொரு சான்றும் கிடைக்கவில்லை யெனப் பேசியிருக்கிறார்கள். இதைக் காண மிக வியப்பாகவே யிருக்கிறது. சேக்கிழார் அப்ப

பல. திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், நெற்றிக் கண்ணைக் காட்டியும் குற்றம் குற்றமே என்று வெற்றி பேசிய வீர சுதந்தரப் புலவர் நமது நக்கீரர். அப் புலவர் பெருமான், தனது அல்லலை அகற்ற அன்பு ததும்பப் பாடிய அருமை நூல் நம் திருமுருகாற்றுப்படை. அந் நூலில், ஆறு திருப்பதி அமர்ந்தவன் என்பதைக் குறிப்பதாக ஆறு பிரிவுசெய்து, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், ஆவினன்குடி, ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாய்க் குறிக்கப்படும் திருப்பரங்குன்றம், "கூடற் குடவயின் அமைந்த குன்றம்" என்று குறிக்கப்படுதல் கொண்டே திருப்பரங்குன்றம் எனக் கொள்ளுமாறு அமைத்தனர். அன்றி, நூலின் அகச்சான்றாக அக் குன்றப் பெயர் குறிக்கப்பெறவில்லை. இரண்டாம் பதியாகிய திருச்செந்தூரும் அலைவாய் எனக் குறிக்கப்படுகின்றது. அதனை, "நாமனூர் அலைவாய்" என உரைகாரர் ஆசிரியர் நச்சினார்க்கினியர் விளக்குகிறார். அதிலும் திருச்செந்தூர் எனக் குறிக்கப்படவில்லை. மூன்றாம் திருப்பதி திருஆவினன்குடி என்பது. அது திரு - இலக்குமி, ஆ - காமதேனு, இனன் - சூரியன், கு - பூமி, டி - இடி என்னும் இவர்களால் பூசிக்கப்பெற்றது இத்தலம். 'சித்தன்வாழ் வென்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடி என்று பெயர் பெற்றதென்றுமாம்' என்பது நச்சினார்க்கினியர் உரை. இப் பெயர் மட்டும் நக்கீரர் வாய்மொழியினாலே கிடைக்கின்றது. ஆனால், இத் தலம் பழனிமலை அடிவாரத்தில் அமைந்திருக்கின்றது. ஆவினன்குடியே முருகன் தலமாய் அன்று குறிக்கப்பட்டிருப்பினும், பழனிமலை மீதிருக்கும் ஆண்டவனுக்கே பல சிறப்புக்களும் இன்று நடைபெறுகின்றன. பழநியாண்டவனை வேண்டியே பத்தர்கள் வந்தாலும் அடி



வாரத்திருக்கும் ஆவினன்குடியானையும் அடிவணங்கிச் செல்வர். இப்பழநி என்பதைச் சிறப்பிக்கும் அத்தல புராண வரலாற்றில், பழம் நீ, என்பது மருவி, பழநியாயிற்று என்றனர். அவ்வரலாறு சிவபெருமான், தன்கையிலிருந்த மாங்கனியை விரும்பிய கந்தனையும், கணபதியையும் உலகை யார் விரைவில் வலம் வருபவரோ, அவரே இக்கனி பெறுதற்குரியர் என்றனர். கணபதியார் எல்லாவுலகங்களின் வடிவாயும் எழுந்தருளியிருக்கின்ற இறைவனையே சுற்றி மாங்கனியைப் பெற்றனர். இது கண்ட கந்தன் மனம் வருந்தி இம்மலையுற்றான். அப்போது சிவபிரான், குழந்தாய், "பழம் நீ அன்றி வேறு இல்லையே; ஏன் மன வருத்தம்" என்று இன்மொழி புகன்றார். அதுவே, பழநி என்று ஆயிற்று என்பர். ஆனால், ஆராய்ச்சி முறையில் ஆழ்ந்து காண்பார் அம்மலைக்குப் பெயர் பொதினி என்பதே பொருத்தம் என்றலை ஒப்புவர். ஆகவே, அப்பழநியே கந்தனது முக்கிய க்ஷேத்திரமாக வழங்கப்படுகின்றது. நான்காவதாக, ஏரகம் என்னும் பதி குறிக்கப்படுகிறது. அஃது இன்று சுவாமிமலை என வழங்கும் திருப்பதியே எனக் காணப்படுகின்றது. ஆனால், நச்சினார்க்கினியர் ஏரகம் என்பது மலைநாட்டகத்தொரு திருப்பதி எனக்குறித்தனர். நாம் ஏரகம் என்று வழங்கும் சுவாமிமலை இருக்கும் நாடோ மலைநாடன்று, சோணாடே என்பதை மறுத்தற்கில்லை. இந் நிலையில், மலைநாட்டில் ஏரகம் என்று ஒரு திருப்பதி உளதோ என ஆராய்வதும் ஐயம் தீர ஒரு வழியாகும். ஐந்தாவது, குன்றுதோறாடல் என்பது. இது பல மலைகளையும் குறிப்பதாய்க் காணப்படுகின்றது. இதில் ஆறு திருப்பதி எனக் கூறுமுறையை ஒப்பும் வகையில் ஐந்தாவதனை மட்டும் பல மலைகளாய்க் கூறினர் என்பது பொருத்தமாய்த் தோன்றவில்லை. அதுவும், ஒரு திருப்பதியாய்க் கூறியிருக்க வேண்டு

விண்ணுறுத கார்மேனியன் வீற்றிருப் பதுபூந்
தண்ண றுவுமிழ் பழமுதிர் சோலை வேதண்டம் ''

என்று பன்னிரு கண்களுடைய வேலாயுதமூர்த்தியும் மேகம் போல் மேனியுடைய மாயவனும் இப்பழமுதிர் சோலைமலையில் வீற்றிருக்கிறார்கள் என்றுஞ் சொல்லப்பட்டிருப்பது முன் கொண்ட கருத்துக் கியைபுடைத்தாயிற்று. ஆகவே, வேலவன் மாலவனுய் மாறிய நிலைமை 300 வருடத்துக்கு முன்னிருக்கவேண்டும். ஆயினும், ஆராய்ந்து உண்மையை உறுதிப்படுத்து முறையில் புராணிகர் நுழையாமல், இருந்த நிலைமையும் இப்போதிருக்கும் நிலைமையும் எடுத்துக் கூறும் வகையில் கவிராயர் நின்றுவிட்டார். பின்னும் திருவேங் கடத்தை,

'' தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவு மொன்ரு யிசைந்து ''

—இயற்பா 3-ம் திருவந்தாதி 63-ம் பாட்டு.

என்று பாடி யிருத்தலும் காண்க. திவ்வியப் பிரபந்தத்தில் பூதத்தாழ்வார் அருளிச் செய்த இயற்பா இரண்டாம் திரு அந்தாதியில்,

'' வெற்பென்றிருஞ் சோலை வேங்கட மென்றிவ் விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மையைப் போல் ''

எனப் பாடியிருக்கிறார். இதனால், திருவேங்கடமும் பழமுதிர்சோலை மலையும் (முருகனுக்குரியதாயினும்) தம்முடைய தென்று கோவிந்தப் பெருமாளும் மதிக்கிறார் என்று ஆழ்வார்கள் திருவாய் மொழியினின்றே ஏற்படுவதால் இவ்விரண்டு தலங்களிலுள்ள மூலவர்களுக்கு இரண்டு தேவர்களின் சின்னங்கள் அமைந்திருப்பதாகக் குறிக்கின்றது.



நம்மாழ்வாரும் வைகுந்தமடையத் திருவுளம் கொண்டு பாடிய கடைசித் திருவாய்மொழியில்,கோவிந்தரை,''முனியே நான்முகனே முக்கண்ணப்பா'' எனப் பாடியிருக்கிறார். இம் மாதிரி திரிமூர்த்தி சொரூபமாகவே அமைந்து பெருமாள் வீற்றிருக்கும் கோயில்கள் இருப்பதும் வெளிப்படை. இத் தலத்துச் சோமசுந்தர விமானம் தூலலிங்கமாகவும், எதிரில் விருஷபகிரி நந்தியாகவும் அமைந்து இருப்பதால் சிவதல இலக்கணங்கள் பொருந்தி யுள்ளன. ஆகையால் சேயவன் மாயவனுய் மாறியிருக்க வேண்டு மென்பதில் சந்தேகமில்லை. திருமாலிருஞ்சோலை மலைப்பெருமான் குறவர்களால் பூசிக்கப் பெறுவது காரணமாகவே அவருக்குக் ''கள்ளழகர்'' என்ற இழிசிறப்புப் பெயர் அமைந்திருக்கவும் காண்கிறோம். நம்மாழ்வாரும் தம் திருவாய் மொழிப் பிரபந்த முடித்த காலத்தில் தலங்கள் சம்பந்தப்பட்டமட்டில்,

'' திருப்பேர் நகரான் திருமா லிருஞ்சோலை
பொருப்பே யுறைகின்ற பிரா னின்று வந்து
இருப்பே னென்றென் னெஞ்சம் நிறையப்புகுந்தான்
விருப்பே பெற்றமுத முண்டு களித்தேனே''

என்று திருமாலிருஞ் சோலை மலையைத் துதித்துப் பாடினார். அவ்வண்ணம், திருமுருகாற்றுப்படையிலும் நக்கீரதேவர் அத்தலத்தையே முடிவாய் மோட்ச நிர்ணயம் பண்ணும் அமயத்துப் பாடியிருத்தலும் காண்க. ஆனால், மாலவன் வேலவனுய் மாறப் பொருத்தங்கள் மட்டும் பல. காட்டு நிலத்துக்குரியவன் கண்ணன்; மேட்டு நிலத்துக்குரியவன் முருகன். காடும் மலையும் நெருங்கியதொடர்புடையதே யன்றே ? வேலனும் கண்ணனும் பாலலீலையாளர்கள். இரு பால் தேவியரமைந்த ஒருபான்மையுடையார்கள். வானப் பறவையில் வன்னக் கருடனைவாகனமாய்க்கொண்டவன் கண்ணன். கானப்பறவையில் கவின் மிகுமயிலை வாகனமாய்க்

கொண்டவன் கந்தன். மாமனும் மருகனும் பெண்பால் நண்பு செய்வதில் பெருஞ் சரசசாமர்த்திய சாலிகள். வன மான் கருதி நடந்தவர் திருமால். புனமான் கருதித்தொடர்ந்தவர் குகப்பெருமான். இலங்கை வீரனைச் சங்கரித்த வந்தல் இராமன். கலங்கச் சூரனைச் சங்கரித்த அண்ணல் கந்தன். பெருமையுடைய குரிசில்களைச் சிறப்பிக்க உவமையாக இந்த இருவருமே புலவர்களால் எடுத்தாளப் பெறுவர். பெருமாள் என்ற பெயர் இருவர்க்கும் பொது. தேவர்கள் துயர் தீர்த்தவர் திருமால் - மூவர்கள் துயர் தீர்த்தவன் முருகன் என்பவை பல அமைந்த பொருத்தங்களாம். அது கொண்டே, உண்மைமறைய விட்டுவிடுதல் நலம் அன்று என்பது என் தாழ்ந்த எண்ணம். அன்பர்கள், ஆய்ந்து உண்மைகாண்பார்களாக.

வாகீச முனிவர் அருளிய

# ஞானமிர்த மூலமும் விளக்கவுரையும்

(திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவோத்தூர்)

### 7. அகவல்

கண்ணுதல் அண்ணல் விண்ணவர் பணியக்
காளம் ஆண்ட வாளவிர் அங்களத்(து)
எரிமருள் ஈர்ஞ்சடை மதிமுகிழ் அணிந்த
உம்ப ரீசர் உம்பன், "வெம்புறு
பிறவிப் பேரிடர்க் கறையுறு பகுவாய்
உரகத் தாரெயி றுறவீழ்ந்(து), அறவ!
அஞ்சினம், அளியம்," என அமாரும் முனிவரும்,



வெஞ்சினப் பிறவி நஞ்சுக அளித்த*
அருமறை யெவையும் திருமிகு ஞானம்,
இலங்கொளி யோகம், நலங்கிளர் கிரியை
சரியை யென்ற விரிதரு பாதம்†
கறையறு மறைமுறை நெறியின்
அறைய மற்றரோ அறிகதில் அமர்ந்தே.

இது, சிவபிரான் அருளிச்செய்த திவ்வியாகமங்கள் சதுர்ப்பாதமாயிருக்கும்; இவையிற்றைச் சொல்ல அறிக என்றது.

உரைப்பாடம் :—கண்ணுதலும், உம்பனுமாகிய பரமன் அமாரும் முனிவரும், "அறவ, பிறவியுரகத்து, பேரிடர்க்கறையுறு எயிறுஉற, வீழ்ந்து அஞ்சினம் அளியம்" என (வேண்ட), அளித்த அருமறை யெவையும், ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற பாதமாய். (இவற்றை) நெறியின், அறைய அமர்ந்து அறிக என்பது.

உரை :—நெற்றியிலே கண்ணையுடைய தலைவனும், தேவர்கள் பணிந்து வேண்டியதனால், கரிய விடத்தை யுண்டருளிய ஒளி விளங்கும் அழகிய கழுத்தினையும், நெருப்புப்போன்ற நிறத்தையுடைய குளிர்ந்த சடையின்கட் பிறைச் சந்திரனையும் உடைய, தேவர்கட்குத் தேவர்களாயுள்ளார்க்கும் மேம்பட்ட தேவதேவனுமாகிய பரமன், "வெதுப்புகின்ற பிறவியாகிய பாம்பு, பெரிய துன்பமாகிய நஞ்சு பொருந்திய அகன்ற வாயிற் பற்கள் அழுந்தக் கடிப்பதால் சோர்வுற்று, அறவோய்! யாம் பெரிதும் அஞ்சினேம்; அருள்பாலிக்க வேண்டும்" என்று வேண்ட, வெவ்விய சினத்தையுடைய பிறவிப் பாம்பின் விடமாகிய துன்பம்

*நஞ்சுக விரித்த என்றும், †சரியையென வுரை விரிதரு பாதம் என்றும் பாடம். தடித்த சொற்களை நிரலே கூட்டி அகவற் கருத்தினை அமைய அறிக.

பல திறத்தவாயினும் எல்லாம் அடங்க, "அருமறை யெவையும்" என்றும் கூறினர்.

எல்லையின்றிப் பெருகும் சிவபோகத்தைத் தரும் பெரும் பொருளாதலின், "திருமிகு ஞானம்" (9) என்றும், சிவ பரஞ்சுடரின் திவ்யமங்களச் செம்மை யொளியினை அகத்துக் கண்கொண்டு தரிசித்தனுபவிக்கும் அறிவுநெறியாகலின், "இலங்கொளி யோகம்" (10) என்றும், "பிறப்பிறப்புக்கட் கேதுவாகாது, அவற்றிற்கு மாறாய்ச் சிவபோக சிவ தரிசனச் செம்மை நெறியினை நல்கும் சீரிய செய்கைகளாகலின், "நலங்கிளர் கிரியை சரியை" (10-11) என்றும் கூறினர். இப்பாதங்கள் நான்கும் ஒவ்வொன்றும் தனித்தனி நந்நான்காக விரியும் சால்புடைய வென்றற்கு, தொகையும் முற்றும்மையுந்தாராது "விரிதருபாதம்" என விசேடித்தோதினார். அவை விரியுமிடத்து, சரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும், கிரியையிற் சரியை, கிரியை யோகம், ஞானம் எனவும், யோகத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும், ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞானம் எனவும் உண்மை நோக்கினவும், உலகப் பயன் நோக்கினவும் எனவிரியும். இனிச் சரியை முதலியவற்றின் இயல்பினை ஆசிரியர் ஸ்ரீமாதவச் சிவஞானமுனிவர் விளங்கவுரைத்திருக்கின்றனர். அது வருமாறு :—(மாபாடியம் : சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு : பக். 471).

"சரியை முதலியவற்றின் இயல்பு என்னையெனிற் கூறுதும். அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான் உயிர்கள் சோபான முறையான் உணர்ந்து உய்தற் பொருட்டுத் தூலமாகவும், சூக்குமமாகவும், அதிசூக்குமமாகவும் மூவடிவங் கொண்டருளும் முறைமையும் அவ்வடிவங்களின் வழிபடும் முறைமையும் வேதாகமங்களில் அவனால் வகுத்தருளிச் செய்யப்பட்டனவாகலான், அம்



மூவகை வடிவின் வைத்துப் பக்குவ முறைமையான் மேம்பட்டுநிகழும் நுண்ணுணர் வின்மையின் சகளமாகிய தூலவடிவமாத்திரத்தைப் பொருள் என்றுணர்ந்து காயத்தொழில் மாத்திரையான் ஆகமத்தின் விதித்தவாறு வழிபடுவது சரியை.

"அஃது அடிப்பட்டுவரவர நிகழும் பக்குவவிசேடத்தான், நுண்ணுணர் வுடையராய் சகள நிட்களமாகிய சூக்கும வடிவமே பொருள், சகளவடிவம் அதனைவழிபடுதற்கிடமாகிய திருமேனி என்று இவ்வாறுணர்ந்து, புறத்தொழிலானும் அகத்தொழிலானும் விதித்தவாறே வழிபடுவது கிரியை.

"அஃது அடிப்பட்டுவரவர நிகழும் பக்குவவிசேடத்தான், அதிநுட்பவுணர்வுடையராய், நிட்களமாகிய அதிசூக்குமவடிவமே பொருள், சகளமும் சகளநிட்களமும் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி என்று இவ்வாறுணர்ந்து, அகத்தொழில் மாத்திரையான், ஆண்டைக்கு விதித்தவாறே வழிபடுவது யோகம்.

"மூன்றும் இவ்வாறு முறையே அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ முதிர்ச்சியானே உள்ளவாறு உணர்வு விளங்கி, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பே சொரூபம், ஏனைச் சகள முதலிய மூன்றும் தூலாருந்ததி நியாயமாக அதனை யுணர்தற் பொருட்டும் வழிபடுதற் பொருட்டும் கொண்ட திருமேனி என்று இவ்வாறுணர்ந்து, காயத்தொழில், மனத்தொழில் இரண்டனையும் கைவிட்டு, கேட்டல் முதலிய அறிவுத் தொழில் மாத்திரையான் வழிபடுவது ஞானம்."

இம்மறைகள் கறையற்ற பரமனால் அருளப்பட்டனவாகலின், "கறையறு மறை" எனப்பட்டது. இனி, "பிறவி நஞ்சக அளித்த அருமறை" யென்று முற்கூறிய

தனையே வற்புறுத்துவார், "கறையறுமறை" யென்றார் என்றுமாம். இவை தாமும் உயிர்களின் பக்குவ விசேட நோக்கி உணர்த்தப்படும். இயல்புடைய வென்றதற்கு, "முறை நெறியின்" என்றும், கடாவிடை முகத்தால் இந்நெறியினை உணர்த்தும் குறிப்பினராயினமை தோன்ற, "அறைய" என்றும், யாவராலும் எளிதில் உணர்த்தவும், உணரவும் பெறாத அருமை தோன்ற, "அறிகதில் அமர்ந்தே" என்றும் கூறினர். அறிவிக்கின்ற காலத்து மனத்தைச் சிதறவிடாது ஒரு நெறிப்படுத்தி ஓர்ந்துணர்க என்பதுபட நிற்றலின், 'தில்லைச் சொல்' காலங் குறித்து வந்ததாம்; "பெற்றாங்கு அறிதில்லம்ம இவ்வூரே" (குறுந். 14) என்றாற் போல.

இனிப் பழைய வுரைகாரர், "அருமறை யெவையும்"(9) என்றதில் மறை யென்றது "மூலசிவாகமங்கள்" என்றும், "எவையும்" என்றது உபாகமங்கள் பலவற்றையும் என்றும், "இலங்கொளியோகம்" (10) என்றதற்கு, "மேதாதி யுன்மனாந்த தரிசனமாகிய பேரொளியையுடைய யோகபாதம் என்றும் கூறுவர். மேதாதி உன்மனாந்தமாவன, மேதா, ஆர்க்கீச, விஷ,விந்து அர்த்தசந்திர, நிரோதி, நாத, நாதாந்த, சத்தி, வியாபினி, வியோமரூபி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உந்மனை எனப்பதினாறும். இவற்றைத் தரிசிக்கும் யோகத்தைச் சோடசகலாப்பிராசாத யோகம் என்பர்; இவற்றின் விபரத்தைப் பௌஷ்கராகமத்திற் காண்க என்பர் சைவத் திரு. சேற்றூர் - ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள். மற்று, அரோ என்பன அசை. தில்லைச் சொல்லையும் பழைய வுரைகாரர் அசை யென்றே கொள்வர்.

### பாயிரத் திருவகவல் முதற்குறிப்பு

"வெண்டிரை திங்கள் விரிகதிர் அருளுரை
மந்தரம் கண்ணுதல் ஏழும் பாயிரம்."

### பாயிரம் முற்றும்

வாகீச முனிவன் திருவடி வாழ்க.

# இந்து மகா சபையில் சங்கராச்சாரியரின் தலைமையுரை

டாக்டர் குர்த்கோடி யென்னும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் லாகூரில் நிகழ்ந்த இந்துமகா சபையின் ஆண்டு விழாவில் தலைமை வகித்துக் கூறிய பேருரையிற் காணப் படும் சில குறிப்புக்கள் வருமாறு:—

### இந்துமதச் சிறப்பு

இந்து மதத்திற்குரிய சிறப்பு, அது ஒருவருடைய கொள்கையாக இல்லாமல் மிகப் பரந்து, எல்லாக் கொள்கைகளையும் தன்னிடத்தே சமரச நோக்கத்தோடு அடக்கிக் கொண்டிருப்பதே யாகும். மற்றைய மதக் கொள்கைகள் இத்தகைய பரந்த நோக்குடையனவல்ல. இந்து தருமம் ஒரு சட்ட திட்டத்திற்குட்படாது எல்லா மக்கட்கும் எல்லாக் காலத்தும் எவ்விடத்தும் பொருந்தக் கூடிய இயற்கையையுடையது. இம்மதத்திற் கூறப்பட்டுள்ள சீவான்ம பரமான்ம நிலைகளும் எல்லா அறிஞர்களாலும் ஒப்பத்தக்கனவாகும்.

### மதச் சண்டைகள்

கடவுள் உருவுடைப் பொருளுமன்று, அல்லாத பொருளுமன்று. இந்துக்களாகிய நாம் கடவுளிடத்தில் உருவ நிலையையும், உருவமில்லாத நிலையையும் காண்கிறோம். அப்பொருள் இவ்விரு நிலையையுங் கடந்தே விளங்குகிறது. இஃதறியாத பிறமதக் கொள்கையினர் கடவுளுக்கு உருவமுண்டென்னுங் கொள்கையை வெறுக்கிறார்கள். கடவுள் நாமரூபங்களைக் கடந்திருப்பினும், வழிபாடு செய்தற் பொருட்டுச் சில உருவங்களைக் கடவுளுக்கு அறிகுறியாக அமைத்துக் கொள்வது பகுத்தறிவுடையவர்களால் ஒப்பக் கூடியதாகும்.

உருவ நிலையை மறுத்துப் போராடும் பிற மதத்தினரும் ஒரு புத்தகம், மசூதி, மாதாகோயில், குரு என்று ஏதாவதொன்றைக் கொண்டே யிருக்கின்றார்கள். குற்றமற்ற இவ்வற்ப அபிப்பிராய பேதத்தை முன்னிட்டுச் சமயத்தின் பெயரால் போர் புரிந்து இரத்தத்தையுஞ் சிந்துவது மிகவும் பரிதபிக்கத்தக்கதாகும். இன்னும் தூய்மையுள்ள குரானில் மசூதியின் முன்னர் வாத்தியங்கள் வாசிக்கக் கூடாதென்னுங் கட்டளை யிருந்தால் அதைக் கொண்டுள்ள மதத்தினர் அதற்குக் கீழ்ப்படிய வேண்டியதே. ஆனால் அவர்கள் இந்துக்களை, இந்துஸ்தானமாகிய இந்நாட்டிலே, சந்தடி நிறைந்த தெருக்களிலே, இந்து மதக் கொள்கையின்படிச் செய்யப் பெறும் திருவிழாக் காலங்களிலே வாத்தியம் வாசிக்கக் கூடாதெனத் தடுத்துப் போர் புரிவதன் காரணத்தை அறியக் கூடவில்லை. அடிக்கடி ஏற்படும் இச்சச்சரவு நாணத்தக்கதே. மக்களெல்லோருக்கும் பொருத்தமுள்ள இந்து சமயக் கொள்கைகளைப் பிற மதத்தினரும் உணருமாறு செய்தால் மாத்திரமே இச்சச்சரவுகளுக்கு இடமில்லாம லிருக்கும். இந்நோக்கத்தை நிறைவேற்ற இந்துக்கள் விழித்தெழல் வேண்டும்.

## தீண்டாமை

தீண்டாமை இப்போது இருக்கக் காரணமில்லை. அஃது உண்டாவதற்குக் காரணமாக இருந்த நிலைமைகள் இப்போது இல்லை. மகா பாரதத்திலே "சமயம் பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும்; மற்றவர்கள் செய்வதையே நாமும் செய்வதென்பது அதன் பொருளன்று. காலத்திற்குத் தக்கவாறு சமயம் இருத்தல் வேண்டும்." என்றும், ஸ்ரீ சங்கரர் அருளிய கீதை பாஷியத்திலே "காரணங் காணமுடியா விடத்தேதான் சாஸ்திரத்தைக் கொள்ள வேண்டும்" என்றும் கூறும் அரிய உபதேசங்களை அறியாத சிறு கூட்டத்



தினரே தீண்டாமையை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாளுக்கு நாள் தம் தொகையில் குறைந்து கொண்டேதான் போகிறார்கள். தீண்டாமை சீவகாருண்யத்திற்கு விரோதமாக விருக்கிற தென்றும், அது கருதியாவது தீண்டாதார்க்கு அவர்களுடைய உரிமையை வழங்க வேண்டுமென்றும் சிலர் சொல்லுவதை யான் ஒப்புக் கொள்ளவில்லை. தீண்டாதாருடைய நிலைமைக்கு இரங்கி நான் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று கூறவில்லை; அவர்கள் இனிமேல் தீண்டாதாராக விருக்கக் காரணமில்லையென்றே அத்தீண்டாமையை ஒழிக்கச் சொல்லுகிறேன். ஆகலினாற்றான் 'ஹரி ஜனங்கள்' என்னும் பெயரை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அப்பெயர் தருமத்தையும் இரக்கத்தையுமே குறிக்கிறது. மேலும் பெயர் மாற்றத்தினாலேயே தீண்டாமை ஒழிந்து விடாது.

## மதமாற்றம்

தீண்டாதார் சீக்கியராகலா மென்னும் விடயம் யோசிக்கப்படுகிறது. தங்களுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவே சீக்கியர்களாக விரும்பும் தீண்டாதார் அவ்வாறே செய்யலாம். நாஸிக்கில் கோவில் நுழைவிற்காகச் சத்தியாக்கிரகம் நிகழ்ந்தபோது தீண்டாதாருடைய பொறுமையற்ற தன்மையையும், சனாதனிகளுடைய பிடிவாதத் தன்மையையுங் கண்டேன். ஆகலின் அத்தீண்டாதார் தங்களுக்குள்ளாகவே ஒரு பிரிவை அமைத்துக் கொள்ளலாமென்றும், இல்லாவிட்டால் இந்து மதத்தினரில் தீண்டாமையை ஒழித்த ஒரு பிரிவினரோடு சேர்ந்து விடலாமென்றும் டாக்டர் அம்பேத்காருக்குக் கூறினேன்.

இந்து மதத்திற் பிறந்தவர்களே இந்துவாகலின் பிற மதத்தினரை இம்மதத்தில் சேர்த்துக்கொள்ளல் கூடாதென

இந்துமதத் தலைவர்கள் சில நூற்றாண்டுகளாகக் கொண்டிருந்த தவறான கொள்கையினால் அவர்கள் இந்துசமூகத்திற்கே பெருநஷ்டத்தை விளைத்தார்கள். ஒரு பகுதியினர் இன்னும் அக்கொள்கையை விடவில்லை. இது பொருந்தாது. இந்து மதத்தில் ஒருவரை என்றும் வற்புறுத்திச் சேர்த்துக் கொள்ளவில்லை யென்பதுண்மையே. பண்டைக் காலத்திருந்த ஆரியர்கள் அன்னியரைத் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் அது ஆடம்பரச் சடங்குகளின்றியும் மெதுவாகவும் நிகழ்ந்ததாகலின் அதனைப் பலர் அறியவில்லை. இப்போது இந்துக்கள் பிறமதத்தினரைச் சேர்த்துக் கொள்ள முயல வேண்டாம். அவர்களே விரும்பி வருவார்களானால் அவர்களை மாத்திரம் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால், இந்துக்களாகப் பிறந்தும் அவர் தம் அறியாமையாலோ அல்லது நம் அசட்டையினாலோ பிற மதங்களைத் தழுவியவர்களைத் திரும்பவும் இந்துமதத்திற் சேர்த்துக் கொள்ள இடைவிடா முயற்சி செய்து உறுதியாக உழைக்க வேண்டுமென வற்புறுத்துகிறேன். இத்தொண்டை இந்து மஹா சபை கைக்கொள்ள வேண்டும். இன்னும், பிறப்பினால் மாத்திரமல்லாமல் பின்னர்த் தழுவிக்கொண்டதனாலும் இந்துவானவர்கள் யாவரும் சேர்ந்ததே இம் மஹா சபையாகு மென்பதைச் சபையார் நினைவு கூர்தல் வேண்டும்.

## இந்து மகா சபையின் கடமை

இந்து மதம் ஓர் உயிருள்ள பலமான மதமாகவிருந்து உலக முழுவதுமுள்ள மக்களுடைய நன்மைக்காக உழைக்க வேண்டுமானால், இந்து சமூகம் திருத்தி யமைக்கப்படல் வேண்டும். இந்து தருமத்தை உயிர் நிலையாகக் கொண்டும் அறிவியல் ஆராய்ச்சியை ஆதரித்தும் சொல்லிலும் செயலிலும் ஒத்துழைக்கப் போதிய மன வன்மையையும் உடல் வன்மையையும், மக்கள் பெறச் செய்தல் வேண்டும். இம்மாறுதலை உண்டாக்கவல்லது இந்துமகா சபையேயாம்.

மா. து.

# திருக்குறளுண்மை

[கா. ஆலாலசுந்தரம் பிள்ளை]

எழுத்துக்களைப்போல் உள்ளது உலகம். அஃதாவது உயிரெழுத்து மெய்யெழுத்து என இருவகை. அஃதேபோல் இயங்கியற் பொருள் நிலையியற் பொருள் எனவும், உயிருள் பொருள் உயிரில் பொருள் எனவும், அசையும் பொருள் அசையாப் பொருள் எனவும், தாபர சங்கமங்கள் எனவும் சொல்லப்படும் பெயருள்ளனவாய்க் காணப்படும் சராசரங்கள் இருவகைத்து.

இனி இயங்குந் தன்மையுடைய உயிரெழுத்தும் இயங்காத் தன்மையுடைய மெய்யெழுத்தும் அகரம் என்னும் ஓரெழுத்து அவற்றுடன் கலந்து இயங்கவும் அசங்கவும் செய்வதனால் அவ்விருவகை எழுத்தும் அவ்விரு தன்மையும் பெறுதல்போல் சரங்களாகிய ஆன்மாக்களும் அசரங்களாகிய மூவகை மாயைகளும் பகவனாகிய இறைவன் ஒருவன் கலந்து ஆன்மாக்களை அறியுஞ் செயலிலும் மாயைகளைத் தனுகரண புவனபோகங்களாகக் காரியப்படுஞ் செயலிலும் தலைப்படச் செய்வதனால் அவ்விருவகை உலகமும் அவ்விரு தன்மையையும் பெறுகின்றன. ஆகவே, இருவகை எழுத்தும் அகரத்தை முதலாகவுடையது போல் இருவகையுலகமும் ஆதிபகவனை முதலாகவுடைத்து என்று கூறிற்று.

அகரம் போன்ற ஆதிபகவன் என்ன இலக்கணமுடையவனெனின்,—வாலறிவன் (மெய்யறிவினை யுடையவன்), வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன், இருள் சேரா இருவினையும் சேராதவன், பொறி வாயில் ஐந்தவித்தவன், அறவாழியந்தணன், தனக்குவமையிலாதான், எண்குணத்தான்.

ஆதிபகவனாகிய இறைவனை அகரம் போன்றவனென்று முன்னர்க் கூறியிருத்தலால் 2-வது செய்புளில் மெய்யறிவன் என்றார். எனவே, அறிவுடை ஆன்மாக்களை (மெய் உறுப்பு

னான் மாணடி" என்றும், "வேண்டுதல் வேண்டாமையிலா னடி" என்றும் மூன்று குறளிற் கூறியுள்ளார்.

தாள் என்பது - முயற்சி என்னும் பொருளைத் தருதலால் கேட்டலாதி நான்கினையும் செய்ய வேண்டுமென்று குறித்தற்கு நான்கு திருக்குறளில் தாள் என்னும் பதத்தையும் அந்நால்வகை முயற்சியும் கைகூடினார்க்கு இறைவனடியானது நெஞ்சத்தின்கண் ஆதாரமாய் நின்று எங்கும் துன்பங்களை யொழித்துத் தன்னை வணங்கச் செய்யும் பயனைக் குறித்தற்கு மூன்று குறளில் அடி என்னும் பதத்தையும் அமைத்துக் கூறினார்.

---

## திருக்குறள்—கடவுள் வாழ்த்து

உலகிற்கு முதற்கடவுளாக வுள்ளவர் பகவான் என்னுந் திருநாமமுடையவர். அவர் எப்படி முதற்கடவுள் என்றால், எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலா யிருப்பதுபோல் முதற் கடவுளாக வுள்ளவர் என்று முதற் குறளிற் கூறினார்.

அக்கடவுள் ஞான சொரூபமாக இருப்பவர் என்பது தோன்ற வாலறிவன் என்றார் என்றும், அறிவினா யிருத்தலால் அம் மெய்யறிவினை யறிதற்குக் கல்வியறிவு வேண்டுமாதலால் கல்வியறிவைக் குறித்தும் அம் மெய்யறிவினைக் குறிக்கும் கல்வி ஆகம நூலேயாகலான் ஆகம அறிவென்றும், அவ்வாகம அறிவால் மெய்யறிவாய் விளங்குங் கடவுளை அறிந்தபின்னர் அவருடைய நற்றாளைத் தொழுதலே பயன் என்றும் இரண்டாவது குறளிற் கூறினார்.

மெய்யறிவினா யிருக்கும் அக்கடவுளுக்கு அறிவு வடிவாயிருக்கும் நெஞ்சமே இடமென்றும் அந்த நெஞ்சினிடமிருந்தும் அவன் காணப்படாமையால் அவனைக் காணும் பொருட்டு அவனை இடைவிடாது நினைத்தால் மலரின்கண் வெளிப்படும் மணமும் தேனும்போல் இனிமையுடன் வெளிப்படுவான் என்றும் இடைவிடாது நினையாமற்போனால் அரும்பினிடத்திருக்கும் மணமும் தேனும் வெளிப்படாதிருத்தல்போல் வெளிப்படாதிருப்பான் என்றும், ஆகலான் இடைவிடாது நினைத்தால் நெஞ்சமாகிய மலர் அன்பினால் மலருமென்றும், அங்ஙனம் மலருங்காலத்து அந் நெஞ்சினுள்ளிருக்கும் இறைவன் வெளிப்படுவானென்றும் மூன்றாவது குறளிற் கூறினார்.



இம்மூன்று பாட்டானும் உலகிற்கு முதற்கடவுள் ஒருவன் உண்டென்றும், அவன் மெய்யறிவாய் விளங்கும் ஞான சொரூபி என்றும், அவன் அறிவெனப்படும் உயிர்களது நெஞ்சத்தினிடத்து அரும்பின்கண் மணமும் தேனும் வெளிப்படாதிருத்தல்போல் வெளிப்படாதிருப்பன் என்றும், அப்படி வெளிப்படாதிருக்குங் கடவுளை இடைவிடாது நினைத்தால் அரும்பொழிந்த மலரின்கண் மணமும் தேனும் வெளிப்படுதல்போல் வெளிப்படுவனென்றும் கூறப்பட்டது.

ஈண்டு மணம் என்பது கடவுள்; தேன் என்பது அவனது நற்றாள்; அதாவது அவனது இனிய அருள்.

கடவுளது மாணடியை இடைவிடாது நினைப்பவர் எல்லா வுலகிற்கு மேலாகிய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வாரென்று கூறியதனால் அவ்வாழ்வினைக் கூட்டாது தடுப்பன மூன்று. அவை வேண்டுதல் வேண்டாமை, இருள்சேர் இருவினை, மெய்வாய்கண்மூக்குசெவி என்னும் பொறிகளை வாயிலாகவுடைய ஐந்தாசை இம்மூன்றுமேயாம். இம்மூன்றும் ஆணவம் கன்மம் மாயை என்னும் இம் மும்மலங்களும் உயிர்களிடத்து உண்மையால் ஆணவமலமானது வேண்டுதல் வேண்டாமையையும், கன்ம மலமானது நல்வினை தீவினை என்னும் இருவினைகளையும், மாயா மலமானது பொறிகளின் வழியே செல்லும் ஐந்து ஆசைகளையும் விளைவித்து மேனிலமாகிய வீட்டில் உயிர்களைச் செல்லவொட்டாது கீழ்நிலமாகிய இந் நிலவுலகிற் பிறப்பினின்றும் மாறாது வாழச் செய்யும்.

ஆகலான் நெஞ்சமென்னும் அரும்பில் மறைந்து நின்ற கடவுளை அன்பினாலே அந்நெஞ்சத்தினின்றும் வெளிப்படக் கண்டு அவ்வறிவாய் விளங்கும் ஞான சொரூபி எனப்படும் நிஷ்கள வடிவினையுடைய கடவுளை இடைவிடாது நினைக்கவே அக்கடவுள் மேலே சொல்லிய மும்மலங்களையும் ஒழித்தற்கு உயிர்கள் நினைக்கும் வடிவோடு வெளிவருவான். அங்ஙனம் வந்த அவனிடத்து வேண்டுதல் வேண்டாமையைச் செய்யும் ஆணவமலம் இல்லையாகையினால் அவனடியைச் சேர்ந்தால் (இடைவிடாது நினைத்தால்) எப்பிறவியிலும் வேண்டுதல் வேண்டாமையைச் செய்து துன்பப்படுத்துவதாகிய ஆணவ மலம் ஒழியும் என்று நான்காவது குறளிற் கூறினார்.

கடவுளுக்குரிய குணங்களில்லாதவர்களாகிய கடவுளரை முதற் கடவுளுக்குரிய குணங்கள் இவர்களும் உடையரெனக் கருதி அவர்களை வாயினாற்புகழாது முதற் கடவுளுக்குரிய குணங்கள் முற்றவுமுடைய முதற்கடவுளை வாயினால் இடைவிடாது புகழ்ந்து சொல்வாராயின் உயர்திணைப் பிறவிகளையும் அஃறிணைப் பிறவிகளையும் மாறிமாறி கொடுத்து வருவதாகிய நல்வினை தீவினைகளைச் செய்விப்பதாகிய கன்மமலம் ஒழியும் என்று ஐந்தாவது குறளிற் கூறினர்.

நெஞ்சமாகிய உள்ளத்தின்கண் நிஷ்களவடிவத்தையும் கட்புலனாற் காணப்படுவதாயிருக்கும் சகள வடிவத்தையும் இடைவிடாது நினைத்தும் அவ்விருவடிவாயிருக்கும் அம்முதற் கடவுளது பொருள் சேர்ந்தபுகழை இடைவிடாது வாழ்த்தியும் வருங்கால் நினைத்தலும் வாழ்த்தலுமாகிய இச் செயல் கூடுவதற்கு முன்னுள்ளதாகிய ஆசையானது ஐம்பொறி வழியிலே சென்று சென்று உயிர்கள் நிற்க வேண்டிய ஒழுக்கநெறியில் அவ்வுயிர்களை நிற்கவொட்டாது மயக்குவதாகிய மாயாமலமானது இம்மாயாமலமில்லாத முதற் கடவுளால் நியமிக்கப்பட்ட ஒழுக்கவழியில் நிற்கவரும். வருங்கால் ஐந்தாசையை விளைவிக்கு மாயாமலமானது ஒழியுமென்று ஆறுவது குறளிற் கூறினர்.



இம் மூன்றுபாட்டானும் முதற்கடவுள் ஆணவமுதலிய மும்மலங்களும் வேண்டுதல் வேண்டாமை முதலியனவாகக் கூறப்பட்ட அம்மும்மலங்களின் காரியங்களும் இல்லாதவனென்றும், அக்கடவுளால் விதிக்கப்பட்டநெறியே நல்லொழுக்க நெறி என்றும், உயிர்கள் மும்மலங்களையும் மும்மலங்களின் காரியங்களையும் உடையவரென்றும், அவற்றால் இடைவிடாது வேண்டுதல் வேண்டாமையினும் நல்வினை தீவினைகளினும் ஐந்தாசைகளினும் அலைந்துழன்று துன்பப்படுகின்றவர்களென்றும், அத்துன்பத்தை நீக்கிக் கொள்வதற்கு முதற் கடவுளை நெஞ்சத்தின்கண் இடைவிடாது நினைந்திருத்தல் போல் வெளியே ஆலய முதலியவற்றிற் காணப்படும் உருவங்களிடத்தில் அன்போடு இடைவிடாது நினைத்தால் ஆணவமலமும் அதன்காரியமாய் வருந் துன்பமும் ஒழியும் என்றும், கடவுளது பொருள் சேர்ந்த புகழை வாக்கினால் எப்பொழுதும் போற்றினால் கன்மமலமும் அதன்காரியமாகிய நல்வினை தீவினையான்வரும் துன்பங்களும் ஒழியும் என்றும், கடவுளது ஒழுக்க வழியில் மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும் நின்றால் மாயாமலமும் அதன் காரியமாய் வரும் துன்பங்களும் ஒழியுமென்றுங் கூறியவாறும்.

முதற் கடவுளல்லாத திருமால் முதலாகச் சொல்லப்பட்ட எல்லாக் கடவுளரும் வேண்டுதல் வேண்டாமையுடையராயும் நல்வினை தீவினைகளைச் செய்பவராயும் ஐந்தாசைகளை அழிக்காதவராயும் உள்ளவர் என்பதை அவரவர் புராணங்களினாலேயே அறியக்கிடத்தலான் அவர்களையெல்லாம் மும்மலங்களையும் அவற்றின் காரியங்களையும் இல்லாதவனாய் வால் அறிவனாய் மலர்மிசையேகினனாய் இருக்கும் முதற் கடவுளோடு ஒப்பாகச் சொல்வதற்கு ஓரிலக்கணமும் வெளிப்படாமையான் அம்முதற் கடவுளைத் தனக்குவமையில்லாதவனென்னும் மேலே சொல்லிய ஐந்தாசைகளிலும் தலைப்பட்டுழல்வதாகிய மனமானது காமம் வெகுளிமயக்கமென்னும் இம்மூன்றினுட்பட்டு கவலை யடைந்திருக்தலால்

பெறுவதற்காகவே எல்லாச் சமயப் பெரியோர்களும் துணை புரிய முயன்றார்கள். தெய்வானுபவம் அதனைப்பெற்ற எல்லார்க்கும் ஒரு படித்தாகவேயுள்ளது. இத் தெய்வ சம்பந்தத்தைப் பெறுதற்குரிய சாதனங்கள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்றை வற்புறுத்திச் சொல்லப்பெற்றாலும் கருமம், பக்தி, ஞானம் என்னும் அவை எல்லாம் ஒன்றே. சீவன் முக்தர்களுடைய தொடர்பு இதனை நன்கு விளக்கும். முக்தர்கள் தாம் பெற்ற தெய்வ இன்பத்தைப் பாவச்செய்து மக்களை உயர்த்தவே மக்களுக்கிடையில் வருகிறார்கள். கடவுளே படைத்துக் காத்து அருளுகிறார். மக்களை அறியாமையாகிய இருட்டினின்றும் கைதூக்கிவிடுவதே அவ்வருளாம். இது இடைவிடாது நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. இவ்வருள் நேராகவேனும் அல்லது வாழ்க்கையில் தான் பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெறுகவென உவர்ந்தளிக்கும் முக்தர்கள் மூலமாகவேனும் வரும். ஆகலின், எல்லாச் சமயங்களிலும் ஊடுருவியுள்ள தெய்வத்தன்மையை உணரப் பெறுதலே வாழ்க்கையின் முடிந்த நோக்கமாகும்.

## சந்தா அறிக்கை

1936ஆம் டிசம்பர்மீ 31உக்குள் தங்கள் சந்தாவை மணியார்டர் செய்யாதவர்கட்கு 1937ஆம் ஜனவரி இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும்.



மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறு
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவிலருள் மறைஞான சம்பந்தர் இவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே. ௫

இது குருபாரம்பரிய தோத்திரம். இதன் பொருள் வெளிப்படை.

(உரை) தேவர்பிரான் திருநந்தி - தேவர்களுக்குக் கர்த்தாவாகிய சிறீகண்ட பரமேசுரன் எழுந்தருளியிருந்துள்ள மிக்க கயிலாயத் திருமலையைக் காக்கிறது விரதமாகப் பூண்ட சிறீநந்திகேசுரதேவ நாயனார்; *அவர்கணத்தோர் . . . தரிசனிகள் - அவர் திருவடியைப் பெற்ற இருஷிகளில் ஒப்பில்லாத ஞானச்செல்வத்தையுடையராய்ப் பூமியிலே எழுந்தருளின சத்தியஞான தரிசனிகள்; அடிசேர் பரஞ்சோதி மாமுனிகள் - இவரது சீபாதத்தைப் பெற்ற இருஷிகள் பரஞ்சோதி மாமுனிகள்; பதியா . . . திறலார் - சிறப்புமிக்க திருவெண்ணெய் நல்லூரைத் திருப்பதியாகவுடைய மெய்கண்டதேவ நாயனார்; மாறு விரவுபுக ழருணந்தி - அவருடைய திருவடியைப் பெற்று ஒழியாத புகழைக் கலந்த அருணந்திதேவ நாயனார்; விறலார் . . . சம்பந்தர் - அவருடைய திருவடியைப் பெற்று முறைமையின்வரு நாயன்மாரில் இந்திரியங்களைச் செயித்த வெற்றியையும் ஞானச் செல்வத்தையுமுடையராய் நீங்காத அருளையும் பெற்ற மறைஞான சம்பந்த நாயனார்; இவரிச் . . . தன்மை யோரே - இவர்கள் இச் சந்தானத்து எம்மை யடிமையாக ஆளுந் தகுதியை யுடையோர்கள்.

மெய்கண்ட திறலாரென்பது சத்தியத்தைத் தரிசித்த சாமர்த்தியத்தை யுடையவரெனக் கொள்க. இதனாற் சொல்லியது இந்த அர்த்தம் பாரம்பரியமாக வந்ததென்னும் முறைமை அறிவித்தது.

---

* அவர் கணத்தோர் செல்வர் சனற்குமார முனிவர் என்று சில உரைகளில் காணப்படுவது சம்பிரதாயத்தை ஒட்டியுளது. குருமரபு கூறுவோர் நந்திகேசுரர்க்கும் சத்தியஞானதரிசனிகட்கும் இடையே சனற்குமார முனிவர் பெயரைக் கூறுதலே முறையாகக் கொள்வர்.

## குருவணக்கம்

6. பார்திகழ வளர்சாம வேதம் மல்கப்
பாராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை யாண்ட
சைவசிகா மணிமருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில்புடைசூழ் மதின்மீதே மதியம்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம். ௬

இது குரு தோத்திரம். இதன் பொருள் வெளிப்படை.

**(உரை)** பார்திகழ-பூமிவிளங்க ; வளர் சாமவேதம் மல்க-ஆயிரஞ் சாகைகளாக விரிந்த சாமவேத அத்தியாயம் நிற்க ; பாராசர மாமுனி மரபு பயில - பாராசரப் பிரமரிஷி கோத்திரந் தழைக்க ; ஞான . . . . . சைவசிகாமணி - ஞானவுரவைத் தர எழுந்தருளி ஒன்றுக்கும் பற்றாத என்னை அடிமையாகக் கொண்டருளின சைவசமயத்துக்கு ஓர் அபிஷேக மாணிக்கம் ; மருதத்தலைவன் - மருதூருக்குக் கத்தா ; அந்தண் . . . மறைஞான சம்பந்தன் - அழகினையும் குளிர்ச்சியினையும் மேகத்தினையும் பொருந்திய சோலைப்பக்கங்களிலே சூழ்போந்த பெரிய மதின்மீதே சந்திரனோடாமல் நெடிய கொடியினது கைகள் தகையுஞ் சிறப்பினையுடைய திருப்பெண்ணை கடத்துச் சிறப்பு விளங்காநின்ற மறைஞானசம்பந்த நாயனார் ; எந்தை-என்னுடைய சுவாமியுடைய; திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம் - அழகு வளராநின்ற தாமரை மலர் போன்ற சீபாதங்களை என் தலைமேல் வைத்துக்கொள்ளாநின்றேன்.

பார்திகழ என்றது பிரபஞ்சத்தி லுண்டான ஆன்மாக்களுக்கு ஞானம் பிரகாசிக்க எனக்கொள்க. மருதூர் பிறந்த ஊர். திருப்பெண்ணைகடம் ஆசாரிய அபிஷேகஞ்செய்த ஊர். இதனாலே சொல்லியது இந்நூல் மலைவறச் சென்று முடியவேண்டி ஆசாரியரைத் தோத்திரம் பண்ணின முறைமை அறிவித்தது. இந்த இரண்டுங் குருமரபுங் குருதுதியும்.



## நுதலிய பொருள்

7. புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகல்அளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமும்சொற் பொருள்
பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன [போல்
அறத்திறனால் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம். ௭

**(உரை)** புறச்சமயத் தவர்க்கிருளாய் - பதிப்பொருள், புறப்புறச் சமயம் புறச்சமயம் அகப்புறச் சமயமென்னும் மூவகைப் புறச்சமயப் பதினெண்மரும் பாசக்கட்டுடையராகலிற் றிரிபதார்த்த நிச்சய மறியாமையின் அவர்களறிவுக்குத் தோன்றாமல் அந்தகாரத் திரவியமாயும் ; அகச்சமயத் தொளியாய் - அகச்சமய மென்னும் பேதவாதி, பாடாணவாதி, சிவசமவாதி, சங்கிராந்தவாதி, ஈசுர அவிகார வாதி, பரிணாமவாதி, சைவரென்போர்கள் திரிபதார்த்தமுங் கொள்வோராகலிற் பாசநீக்கத்துக் குரியராகலின் அவர்களறிவுக்கு அளவுக்களவாய்த் தோன்றும் பிரகாசத் திரவியமாயும் ; புகலளவைக் களவாகி - ஆக நாற் கூற்றுச் சமயத்தோர்க்கும் அவரவர் கொண்ட அளவைப் பிரமாணங்கட்குத் தக்கதாய் அளவுபட்டு அந்தந்த இடமே அவர்களுக்கு மோட்சத் தானமாய்க் கொடுப்பதாயும் ; பொற்பணி போ லபேதப் பிறப்பிலதாய் - சித்தாந்திகள் முத்தியென்னும் பர முத்தியில் ஒரு பொன் பலபணியானது போல அபேதப்பொருளு மல்லவாய் ; இருள் வெளிபோற் பேதமும் - இருளுமொளியும் போலப் பேதப் பொருளுமல்லவாய் ; சொற்பொருள் போற் பேதாபேதமுமின்றி - சொல்லும் பொருளும் போலப் பேதா பேதப் பொருளுமல்லவாய் ; பெருநூல் சொன்ன அறத் திறனால் விளைவதாய் - இங்ஙனங் கூறிய விசிட்டாத்துவிதம் துவிதாத்துவிதம் கேவலாத்துவிதங்க ளின்றிப் பெரிய சிவாகமத் துணிவாகிய சுத்தாத்துவிதப் பொருளாய் ; உடலுயிர் - உடலு முயிரும் ஒற்றுமை நயத்தா லொன்றுபட்டும் உடல் உயிரா யொழியாது உயிர் உடலா யொழியாது உடல் உடலே உயிர் உயிரேயாய்

9. விரும்பியமந் திராதிகாரம் அர்ச்சனாதி காரம்
மேவுமியோ காதிகாரம் எனச்சமய விசேடம்
வரும்பொருவில் நிருவாண மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
இரங்கடைவில் தொகைபதினொன் றெண்பத்தொன் றைம்பத்
திருநூற்றே டிருபத்து நாலாறு றைந்திற் [தொன்
பரந்தநெறி அறுவகையும் ஒருவிநிலை வரிதாம்
பரபதத்துள் உயிர்விரவப் பயிற்று மன்றே. ௯

(உரை) விரும்பிய என்பதனை ஈரிடமுங் கூட்டுக. விரும்பிய மந்திராதிகாரம் - பரமேசுரனது உபசாரத் திருமேனியாக விரும்பிக் கொள்ளப்பட்ட மந்திரத்திற்கு அதிகாரமாகியும், அர்ச்சனாதிகாரம் - பரமேசுரன் கிருபையாக விரும்பப்பட்ட அர்ச்சனைக்கு அதிகாரமாகியும்; மேவும் யோகாதிகாரம் - வழிநூலாசிரியர் 'அந்தரியாகந் தன்னை முத்தி சாதன' [சிவஞானசித்தியார் ix, 10] மென்றாராகலின் மோட்சஞ் சேருதற்கு ஏதுவான யோகத்திற் கதிகாரமாகியும்; எனச்சமய விசேடம் வரும் - இங்ஙனங் கூறிய மூவகையுஞ் சமயம் விசேடமென்னும் இரண்டு தீக்கையு ளடங்கும்; பொருவில்நிருவாணம் - ஒப்பற்ற நிருவாண தீக்கையாவது; மந்திர . . . மன்றே - ஆறத்துவாவையுஞ் சுத்திசெய்து மனாதீத கோசரமாகிய சிவானந்த போகத்தில் உயிர் விரவும்படி கூட்டுவிக்கும்.

பதினொரு மந்திரமும், எண்பத்தொரு பதமும், ஐம்பத்தோரக்கரமுமாகிய மூன்றத்துவாவும் ஒலிவடிவாயிருக்கும்; ௨௨௪ புவனமும், ௩௬ தத்துவமும், ௫ கலையுமாகிய மூன்றத்துவாவுந் திரவிய வடிவாயிருக்கும்; ஆன்மாக்களனைவருடைய கன்மமுழுவதும் இவ்வத்துவாக்கள் தாரகமாயிருக்கும், சுத்தியடையுங்காலும் அவ்வாறே யாமென்றறிக.

இவ்விருவகை விதித் தீக்கையின் பயன் வேறுபாடுளவோ வென்னில்,

10. கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் உண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கள்



மருவியிடும் உயர்ஞான மிரண்டாம் மாறு
மலமகல அகலாத மன்னு போதத்
திருவருளொன் றென்றதனைத் தெளிய வோதும்
சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே. ௧௦

(உரை) கிரியையென . . . கிளக்கும் - கிரியா விதிப்படி தீக்கைசெய்து உபாயச் சரியை கிரியை யோக மனுட்டித்து முடிந்தால் அதின் பிரயோசனம் பின்பு ஞான விதிப்படி யனுட்டிக்கும்படி கூட்டுவிக்கும்; உண்மைச் சரியைகிரியாயோகத் தன்மையோர்க்கு - ஞானவிதிப்படி உண்மைச் சரியை கிரியை யோக மனுட்டித்தவர்க்குக் காய்ந்த பொன் சூடாறினால் கம்பிக்கு வருவதுபோல்; சாலோக சாமீப சாரூபங்கள் மருவியிடும் - அச்சிவபுண்ணிய முதிர்ச்சி பாகம் வருமளவும் சாலோகாதி பதவி பொருந்தும்; பின்பு ஞானத்தை யடைவர். அற்றாகலினன்றே 'இறப் பிறவத்தான், மருவுவனா ஞானத்தை' [சிவஞானபோதம், viii, 2] என்றார் முதனூலாசிரியரும். அந்த ஞானத்தின் முறை யேதென்னில்—உயர்ஞான மிரண்டாம் - மேலாகிய ஞானம் இரண்டு விதமாயிருக்கும்; மாறு . . . திருவருளொன்று - அனாதியே உயிர்க்குணம்போற் பந்தித்திருக்கிற பாசம் நீங்கும்படி அறிவுக்கறிவாய் விட்டு நீங்காது உடன் நிற்குந் திருவருளொன்று; அற்றாகலினன்றே, 'போதத் திருந்திடுமலமு'மென்றார் எமதாசிரிய ரும்—ஒன்றதனைத் தெளிய வோதுஞ் சிவாகமம் - அந்தத் திருவருளைத் தெளியும்படி போதிக்குஞ் சிவாகமம் ஒன்று; என்றுலகறியச் செப்பு நூலே - அவ்வாறு சரியை கிரியா யோகம் முற்றுதலினாலே பாகம் வந்தவர்களுக்கு இந்நூல் முகமாகத் திருவருள் ஞான விளக்க முண்டாமென் றாகமங்களிற் கூறும்.

## நூல்வழியும் நூற்பெயரும்

11. தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதம்
செப்பினர்பின் பவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற் றவர்கள்திரு வடிகள் போற்றி
விளம்பியநூல் அவையிரண்டும் விரும்பி நோக்கிக்

கருத்திலுறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்துபொது உண்மையெனக் கருதி யானும்
அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறும்
ஆசில்சிவப் பிரகாசம் ஆகு மன்றே. கக

இது நூல் வரலாறு ; பொருள் வெளிப்படை.

**(உரை)** சிவாகமமே யமையாதோ தமிழ்நூலேன் என்பாரைப் பற்ற அருளிச் செய்கிறார் : தெரித்தகுரு முதல்வருயிர் சிவஞான போதஞ் செப்பினர் - தம்பிரான் அருளிச்செய்த சிவாகமத்திற் சிவஞான போதத்திலுள்ள சம்பிரதாயத்தை முன்கூறப்பட்ட ஆசாரியன்மாரில் விசேஷத்துவத்தை யுடைய மெய்கண்ட தேவநாயனார் அருளிச் செய்தார் ; பின்பவர் புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர் - அவர் திருக்கண்சாத்தின நாயன்மாரில் சண்பையர் தலைவநாயனார் பின்பு சிவஞானசித்தி யென்கிற நூலை விரித்தருளிச் செய்தார் ; மற்றவர்கள் திருவடி போற்றி - அந்த இரண்டு நாயன்மார் திருவடிகளைத் துதித்து ; விளம்பிய நூலிவை யிரண்டும் விரும்பி நோக்கி - அந்த நாயன்மாரால் அருளிச்செய்யப்பட்ட அந்த நூல்கள் இரண்டையும் ஆசையோடும் பார்த்து அதிலுண்டான அத்தமும் ; கருத்திலுறை திருவருளும்-ஆன்மாக்களிடத்திலே பொருந்தி நின்று நிகழ்த்துகிற திருவருளும் ; இறைவனூலுங் கலந்து - தம்பிரானார் அருளிச்செய்த சிவாகமத்திலுண்டாகிய பொருளுங் கூட்டி ; பொதுவுண்மையெனக் கருதி - பொது வென்றும் உண்மையென்றும் விசாரித்து ; யானும் - ஒன்றுக்கும் பற்றாத நானும் ; அருத்திமிக வுரைப்பன் - ஆசை மிகுதியாலே ஒரு சாத்திரமாகச் சொல்லுவன்; வளர் விருத்தம் நூறும் - சிறப்பு வளரப்பட்ட விருத்தம் நூற்றையும்; ஆசில் சிவப்பிரகாச மாகுமன்றே - இதற்கு நாமம் குற்றமில்லாத சிவப்பிரகாசம்.

உயர் சிவஞானபோதம் என்றது சிவாகமத்தில் அருளிச்செய்யப்பட்ட திரிபதார்த்த நிர்ணயத்தைப் பன்னிரண்டு சூத்திரத்தினாலடக்கிச் சொல்லுகையினாலெனக் கொள்க. சிவஞானசித்தி விரித்தனர் என்றது அந்த நூல் சொற்சுருங்கி அத்தம் ஆழ்ந்திருக்கையினாலே விரித்துக் கூறினாரெனக் கொள்க. வளர் விருத்தமென்றது பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் அத்தம் மேலே மேலே வளருமென்றதெனக் கொள்க. இதனாற் சொல்லியது ஆகமத்திலுள்ள அத்தமே இந்த மூன்று நூலினுஞ் சொல்லியதென்றும் முன்னூல் வழிநூல் சார்புநூல் என்றும் முறை அறிவித்தது.



## அவையடக்கம்

12. தோன்மையவாம் எனும்எவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா துணிந்த
நன்மையினர் நலங்கொள்மணி பொதியும்அதன் களங்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர் நடுவாந் [கம்
தன்மையினர் பழமைஅழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர்ஏ திலருற் [லரே.
றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனவொன் றி

இது அவையடக்கம் ; பொருள் வெளிப்படை.

**(உரை)** நூல்மாபு கூறி மேல் அவையடக்கம் அருளிச்செய்கிறார் : தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா-பதிபசுபாசத்தின் உண்மையைத்தெரிய வறிவியாத நூல் யாது அது பழைய நூலாமெனினும் நன்மை பயவாது ; இன்று தோன்றிய நூல்எனும் எவையுநீதாகா - பதிபசுபாசத்தின் உண்மையைத் தெரிய அறிவிக்குமாயின் புதிதாகத் தோன்றிய நூலாயினும் அது தீமை பயவாது ; துணிந்த . . . நயந்திடுவர் - தெளிந்த அத்தம் ஆராய்ந்துள்ளவர்கள் நூலின் பழமையும் புதுமையுஞ் சொற்குற்றமுங் கொள்ளார்கள், அதென்போல வென்னில் நல்ல இரத்தினமானது ஒரு நாய்த் தோலிலே கட்டியிருந்தாலும் இரத்தினமறிந்தவர்கள் தோலின் குற்றங் கொள்ளாது மாணிக்கத்தின் நன்மையைக் கைக்கொள்ளுவர், அதுபோல உண்மையே கைக்கொண்டுவிடுவர் நடுவாந்தன்மையினர் ; பழமை யழகாராய்ந்து தரிப்பர் - மத்திமரா யுள்ளவர்கள் உத்தமரைப் போலச் சாத்திரத்தைக் கண்டபொழுதே உண்மையைக் கொள்ள மாட்டார்கள், ஆதலாலே வேதாகமத்தைப் பின்செல்லுகிற நூலென்றும் இந்த நூல் நன்மையை யுடைத்தென்றும் நீர்க்கத்திலே

ஆதலாலும் என்பதை வருவது செல்வது போவதென்னு மூன்றிடமுங்கூட்டுக—உருவமாறிப் போவதாதலானும்-பாவ கன்மந்தீர இந்தச் சரீரம் மாறிப்பூதசரீரத்தைப் பொருந்தி நரகத்துக்குப் போய்த்துக்கத்தைப் புசித்தலானும் ; உருவமாறிச் செல்வதாதலானும் - புண்ணிய கன்மந்தீர இந்தச் சரீரம் மாறிப் பூதசார சரீரத்தைப் பொருந்திச் சுவர்க்கத்திற் சென்று சுகத்தைப் புசித்தலானும் ; உருவமாறி வருவதாதலானும் - பாவபுண்ணியங்களை யீட்டவுஞ் சுகதுக்கங்களை நுகரவும் நரகசுவர்க்க சேடத்தாற் பூதபரிணாம சரீரத்தைப் பொருந்திப் பூமியின்கண் வந்து சுகதுக்கத்தைப் புசித்தலானும் ; இவ்வேதுக்களினாலே மலமுங் கன்மமும் பரிபாகம்வரும், அற்றாகலினன்றே, ‘எல்லாமாய்த் தத்துவங்க ளிசைந்தது..., தொல்லாய கன்ம மெல்லாந் துய்ப்பித்துத் துலைத்தற்கும்...,...பொல்லாத வாண வத்தைப் போக்கவு’ [சிவஞான சித்தியார், ii, 79] மென்றார் வழி நூலாசிரியரும். இதனாற் பிரபஞ்ச மியற்கையன்று ‘நின்றவையு மளித்திடுவ னிமலன்றானே’ என மேற்கொண்டவாறாம். இனிப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாக மாயையுண்டாகலின் அதுவே போதும் இறைவன் எற்றுக்கெனின்—அலைவிலசே தனமாயை யாதலானும் - மாயை சடமாகையினாலே பலவித விசித்திரமான பிரபஞ்சத்தை அஃது உண்டாக்கு மென்பதில்லை யாகலின் ‘நின்றவையுமளித்திடுவ னிமலன்றானே’ யென மேற்கொண்ட வாறாம். இனி ஆன்மாக்கள் அறிவுடையவர்களாமே அவர்களே போதும் இறைவன் எற்றுக்கெனின்—அணுக்க ளுருவடையு மறிவிலாமை யானும்-ஆன்மாக்கள் மல மறைப்புடைய ராகையால் தனுவாதி வந்த பின்பு அறிவதன்றி இன்ன கன்மஞ் செய்தோம் இன்ன தனுவும் இன்ன போகமும் வருமென்று அறியும் அறிவில்லாதவர்களாகையாலும் ‘நின்றவையு மளித்திடுவ னிமலன்றானே’ யென மேற்கொண்ட வாறாம். இனிப் பிரபஞ்சத்திற்குத் துணைக்காரணமாய்க் கன்மமொன் றுண்டாகலின் அதுவே போதும் இறைவன் எற்றுக்கெனின்—நிலவு தொழின் மருவியுரு நிற்றலானும் - கன்மமாவது மனவாக்குக் காய சன்னியமாய்ச் சேதன மாகிய புத்திதாரகமாய் நிற்குமாகலின் அது தனுவாதியைப் படைக்கு மாறில்லை ‘நின்றவையு மளித்திடுவ னிமலன் றானே’ யென மேற்கொண்ட வாறாம். இங்ஙன் கூறிய நாலேதுவாலும் இரு



வகைப் பிரபஞ்சத்திற்கும் இறைவனே முதன்மையென மேற்கொண்டவாறு காண்க. கசு

இதனாற் பிரபஞ்சஞ் சங்கார கர்த்தாவால் முத்தொழிற் படுமென்பது பெற்றாமாயினும் முத்தொழிற்கு மூன்று கர்த்தா உளராகலிற் சங்கார கர்த்தா ஒருவனுமே கர்த்தா வென்பது மிகையாம் போலுமெனின் ஆகாது. அஃது எற்றாலெனின்,

17\. கந்தமலர் அயன்படைக்கும் உலக மெல்லாம்
கண்ணன் அளித் திடும் அவைஎம் கடவுள் தானே
அந்தமுற அழித்திடுவன் ஆத லாலே
அயன் அரியும் அவனதுயர் அதிகா ரத்து
வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்
வருவிப்பன் விகாரங்கள் மருவான் வானின்
முந்திரவி எதிர்முளரி அலர்வுறுமொன் றலர்வான்
முகையாமொன் றொன்றலரு முறையி னாமே. ரு

(உரை) அந்வயம். அவனதுய ரதிகாரத்து - முத்தொழிலினுஞ் சங்காரத்தொழில் உயர்ந்த அதிகாரமாகையாற் சங்கார கர்த்தா ஒருவனுமே கர்த்தா வென்று சொல்லப்படும். அதுவே உயர்ந்த அதிகாரமாதல் யாங்ஙனமெனின் ; உலகமெல்லாங் கந்தமல ரயன்படைக்கும்-பிரபஞ்சமெல்லாம் வாசனையுடைய பதுமாசனத்திருக்கும் பிரமதேவன் படைப்பன்; கண்ணனளித்திடும் - தாமரைக்கண்ணையுடைய விட்டுணு அவையெல்லாங் காவற்றொழில் புரியும் ; அவைஎம் கடவுடானே யழித்திடுவன் - எமது சங்கார கர்த்தாவே அவ்விருவாற் சிருட்டி திதிப்படுவதை அதிக்கிரமித்துச் சங்கரிப்பன் ; ஆதலாலே - ஆகையினாலே; இது உயர்ந்த அதிகாரமாம், அவ்விருவாற் சிருட்டி திதி நடந்துகொண்டிருக்கவும் இவர் சங்கரிப்புத் தொழில் நடப்பது எப்படியெனில்—அயனரியும்அந்தமுற - அவ்விருவரையும் அவராற் றொழிற்படும் பிரபஞ்சத்தையும் ஒன்றாக முடிவுபெறும்படி சங்கரிப்பன் ; வந்தமுறை - அவ்விருவருஞ் சங்காரப்பட்டு முடிந்தால் அந்தப் பிரபஞ்சந் திரும்ப உண்டாவது எப்படியெனில் ; தன்தொழிலே மன்னுவிப்பன் - திரும்ப அவர்களைப் படைத்து அவர்களாலே பிரபஞ்சம் படைக்கச் சங்கற்பிப்பன் ; அவர்களும் முத்தொழிற்பட்டால் ஆன்மவர்க்கமாச்சே அவர்களாற் சர்வஞ்ஞன் செய்யுஞ் சிருட்டி திதி

மலமெனவும் பகர்வரென்ற உம்மையால் அது உபசாரமேயன்றி யுண்மையன்றென்பது தானே போதரும். ௨௦

இனி, அச்சிவசத்தி மும்மலங்களையுந் தத்தந்தொழிலினை யியற்ற ஏவுமாறு கூறுமுகத்தாற் சுத்தமாயையினது இலக்கணங் கூறுவான் தொடங்கினார். சுத்தமாயையாவது ஏனை மாயைகள்போலப் பரிணமித் தொடுங்குவதன்றிப் படங்குடிலானாற்போல விரிந்தொடுங்குவதாய்ச் சிவசத்தி பதிந்து தொழிற்படற்கிடமாயிருப்பதை ஈண்டுப் பாசங்களுட் சேர்த்துக் கூறவேண்டாவாயினும் மாயை மாயேயமலங்களைப் பிரேரிக்குஞ் சிவசத்தி பதிதற்கிடமாகலின் அத்துணைக் காரியமாத்திரமே ஈண்டுக் கூறுவதன்றி அதன் காரணத்துக் கிலக்கணங் கூறாதொழிந்ததெ தென நுண்ணுணர்வினா லறிக. சத்திபேதஞ் சிவபேதங்கள் மேலை 'நீடுபராசத்தி'யென்னுஞ் செய்யுளிற் கூறிப் போந்தமையின் ஈண்டு அத்திருமேனித் தன்மை கூறுவதன்று, சுத்தமாயையிற் பதியுஞ் சத்திபேதத்தாற் படுங் கருமமொன்றுமே கூறுவதாம்.

21. உன்னலரும் பரசிவன்தன் அருளாலே நாதம்
உதிக்கும்இருங் குடிலைதனில் விந்துவரும் நாதந்
தன்னில்அதி னொளிவளரும் சதாசிவராம் அவரில்
தயங்கவரும் ஈசர்வித்தை தனைஅளிப்பர் அதனால்
மன்னுவர்இவ் வகைஐவர் வாய்மையினால் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவும் சூக்குமாதி ஒருநான்கும் என்று
மொழிந்திடுவர் அருங்கலைகள் முதிர்ந்துளோரே. ௩

(உரை) உன்னலரும் . . . குடிலைதனில் - மனாதீதகோசரமாகிய பரமசிவனுடைய பராசத்தியாதி பஞ்சசத்திகள் சங்கற்பரூபமாய்ப் பெரிய சுத்தமாயையிற் பதியவே நாததத்துவமுளதாகும்; விந்துவரும் நாதந்தன்னில் - நாததத்துவத்தினின்றும் விந்துதத்துவமுளதாகும்; அதிலொளிவளருஞ் சதாசிவராம் - விந்து தத்துவத்தினின்றுஞ் சுயம்பிரகாச ஞானமுடைய உத்தியுத்தர்க் கிருப்பிடமாகிய சாதாக்கிய தத்துவந் தோன்றும்; அவரில் தயங்கவரும் ஈசர்வித்தை தனையளிப்பர் - சாதாக்கியத்தினின்றும் ஈசுரதத்துவமும் அதினின்றுஞ் சுத்தவித்தை தத்துவமும் உளவாம்; விளக்கிருந்த தகளியை விளக்கென்பதுபோல ஒற்றுமை நயம்பற்றித் தத்துவங்களையே அதிலிருக்குந் தேவர்களாக உபசரித்தார்—அதனால் - ஆகையினாலே; மன்னுவர் இவ்வகை ஐவர் - இவ்வாறு சிவதத்துவங்களைந்தும் நிலைபெறும்; வாய்மையால் - சிவசத்தி கிருபையால்; முன்னே வந்திடுமென் றுரைசெய்த விந்து - நாத தத்துவத்தினின்றும் உண்டாகுமென்ற விந்துவானது; வழாவகையே முன்னுதவுஞ் சூக்குமாதியொருநான்குமென்று - சூக்குமை முதலாகிய நாலு வாக்குக்களையும் முறை பிறழாமற் றோற்றுவிக்குமென்று; மொழிந்திடுவர் அருங்கலைகள் முதிர்ந்துளோரே - வேதாகமங்களை ஓதி அறுதியிட்டுணர்ந்து அறிவு முதிர்ந்த மகத்துக்களாற் கூறப்படும்.

மாயை கன்மம் மலம் என்னும் மூன்றின் தொழிலாகிய பந்தம், போகம், போத்திருத்துவமென்னும் மூன்றும் மாயேயத்துவாரமாய் விளக்குவிப்பது இச்சிவதத்துவமைந்தும் வாக்குநாலுங் கொண்டு சிவசத்தி செய்யுந் தொழிலாகலின் மேலைச் செய்யுளிற் கூறிய திரோதான சத்தி தொழிலை விளக்குவதே இச்செய்யுளின் கருத்தென்றறிக. அற்றாகலினன்றே 'சுத்தக் கருவிகளைந்துங்கொண் டேசொல்லவத்தையைந்துஞ், சித்திக்கு' [கட்டளைக்கலித்துறை, 37] மென்றார் சிற்றம்பல நாடியாரும். பந்தம் போகம் போத்திருத்துவம் மூன்றும் அவத்தைத் துவாரமாயன்றி நிகழாமை யறிக. ௨௧

இனி மாயாமலத்தினது காரணகாரிய இலக்கணங் கூறுமுகத்தாற் சிவசத்தியின் பெருமை கூறுவான் தொடங்கினார். இது செய்யுட்கடோறும் உள்ளுறை பொருள் மேற்கொள்ளு மாற்றா லறிக.

22. உருவாதி சதுவிதமாய் ஒன்றொன் றொவ்வா
உண்மையதாய் நித்தமாய் ஒன்றாயென்றும்
அருவாகிக் கன்மமார் அணுக்கள் யார்க்கும்
ஆவாரமாய்அசித்தாய் அசலமாகி
விரிவாய தன்செயலின் வியாபியாய் எல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை ஒடுங்க
வருகாலம் உயிர்களெல்லாம் மருவிடமாய் மலமாய்
மன்னியிடும் அரனருளால் மாயை தானே. ௪

(உரை) உருவாதி சது என்பதற் கன்வயம். மாயைதானே - மாயாமலமானது; நித்தமாய் - என்றுங் கெடாததாய்; ஒன்றாய் - ஒருமுத

ஊர்த்துவபாகம் அதோபாகமா யிருதிறப்பட்டுச் சுத்தமாயை அசுத்த மாயை யெனப் பேதப்படு மென்பாரும், சுத்தமாயைபோல அசுத்த மாயையும் அனாதியே ஒருபொருளென்பாரு மிருதிறத்தாசிரியர். இது 'உயிர்மலங் கன்மங் கர்த்தா வுபாதான மைந்' [சுவாமிநாத தேசிகர் தசகாரியம், 8] தென்றும், 'ஏகனனேக னிருள்கரும மாயை யிரண், டாகவிவை யா' [திருவருட்பயன், vi, 2] றென்றும் வரு மாற்றா லறிக. இனி முதல்வனது கிரியாசத்தியே மாயை யென்பாரு முளர். அது போலியென்றொழிக. ௨௫

ஆக நாலு திருவிருத்தங்களால் மாயாமலத்தினது இலக்கணங் கூறிய ஆசிரியர் இனி இரண்டு செய்யுளான் மாயேயமலத்தினது தோற்ற மொடுக்கங் கூறுவான் தொடங்கினார்.

26\. அருத்திமிகும் கலைகால நியதியுடன் வித்தை
அராகம்இவை அனந்தரால் மாயைதனி லாகும்
உருத்திரராற் கலையதனில் பிரகிருதி குணங்கள்
உளவாகும் ஆங்காரம் புந்தியினில் உதிக்கும்
தெரித்தவிது திரிவிதமாந் தைசதவை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்தகுண மனம்புத்தி இந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே.

**(உரை)** அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை யராக மிவை அனந்தரான் மாயைதனி லாகும் - அசுத்தமாயையை அனந்த தேவ நாயனார் தமது சத்தியாற் கலக்கியவிடத்து அதினின்றும் ஆன்மாக்கள் இச்சாஞானக் கிரியைகளை விளக்குவது காரணமாய்க் கலை காலம் நியதி வித்தை அராகமென்னும் பஞ்சதத்துவங்கள் உளவாகும்; உருத்திரராற் கலையதனிற் பிரகிருதி குணங்க ளுளவாகும் - உருத்திரதேவ நாயனார் சத்திகலையிற் பதியவே அதினின்றும் முக்குண ரூபமாகிய பிரகிருதிமாயை யுளதாகும், அந்தப் பிரகிருதி யின் அவ்வியத்தத்திற் புத்திதத்துவம் உண்டாம்; ஆங்காரம் புந்தி யினி லுதிக்கும் - புத்திதத்துவத்தினின்றும் ஆங்கார தத்துவம் உள தாகும்; தெரித்தவிது திரிவிதமாம் - இந்த ஆங்காரம் மூன்றுபாக மாம்; அவையாவையென்னில்—தைசதவை காரி திகழ்தருபூ தாதி யென - தைசதவாங்காரமென்றும் வைகரியாங்காரமென்றும் பூதாதி

கிழமை மாலை 3½-மணி முதல் 6 மணி வரை நடைபெறும். கூட்ட விவரங்கள் துண்டு அறிக்கை மூலம் தெரிவிக்கப்படும்.

6. சமாஜத்தின் சைவத் தேர்வுகள் 1936௵ நவம்பர்௴ 22௳ ஞாயிற்றுக்கிழமை யன்று, சென்னை, வாலாஜாபாத், தஞ்சாவூர் முதலிய இடங்களில் நடைபெறும். தேர்வு நிலைய நுழைவுச் சீட்டுகள் (Hall tickets) மாணவர்கட்கு 16-11-36 ல் தபால்மூலம் அனுப்பப்படும். தேர்வின் முடிபு 10-12-36-ல் "சித்தாந்தம்" பத்திரிகையில் வெளியிடப்படும். தேர்ச்சி பெறுவோர்கட்குப் பட்டமும் பத்திரமும் சமாஜ ஆண்டு நிறைவிழாவில் வழங்கப்படும்.

7. தஞ்சை சைவசித்தாந்த இளைஞர் சங்கம், தனவணிக நாட்டுச் சிவநேசர் திருக்கூட்டம் முதலிய சபைகளிலிருந்து அப்பர் படக்காட்சி விஷயமாக நமது சமாஜத்துக்குச் சில கடிதங்கள் வந்தன. அவற்றை ஆலோசிக்கச் சமாஜ நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று 11-10-36-ல் நடைபெற்றது. அதில் திருவாளர்கள் கீ. தெய்வசிகாமணி முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, நின்றை தங்கவேல் முதலியார் ஆகிய மூவரும வேல்பிக்சர்ஸ் கம்பெனியாரோடு கலந்து பேசித் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இம்மூவரும் ஷை கம்பெனியாரைக் கலந்து ஷை கம்பெனியார் திருவாளர்கள் கா. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ., எம். எல்.,—டி. எம்., கிருஷ்ணசாமி ஐயர் பி. ஏ., பி. எல்., ஆகிய இருவரைக் கொண்டு அப்பர் சரித்திரத்தைப் படத்தில் காட்டவேண்டிய முறையைத் தமிழில் எழுதிச் சிறு புத்தகமாக வெளியிட வேண்டுமென்றும், அதைப் பார்த்து சமாஜமும் பிற சைவசபைகளும் கூறும் கருத்துக்களைக் கவனித்து அதன் பிறகே படக்காட்சி தயாரிக்கப்படல்வேண்டுமென்றும் முடிவு செய்திருக்கின்றனர்.

---

## ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை

### இராயப்பேட்டை

இச்சபையில் ஸ்கந்தர் சஷ்டி உத்ஸவம் 1936௵ நவம்பர்௴ 15௳ முதல் 8 நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறும். திருவாளர்கள் மா. துரைசாமி முதலியார், ச. சச்சிதானந்தம்பிள்ளை, ம. பாலசுப்பிரமணிய முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. வி. உலகநாத முதலியார், ஷையார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகிய அன்பர்கள் முறையே திருப்போரூர் சந்நிதி முறை, ஸ்ரீமத் குமாரசுவாமியம், கந்தாலங்காரம், கந்தானுபூதி, கந்தபுராணம், ஷை, திருமணம் என்பனபற்றி நாளுக்கொருவராகப் பேசுவார்கள். கூட்டம் நாடோறும் மாலை 8 மணி முதல் 10 மணி வரை நடைபெறும்.

உங்கட்கு மிகுந்த நன்மையைப் பயந்திருக்கும். மிகுந்த குறைபாடுடைய நான் சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நேரிய கருத்துக்களை எடுத்துச் சொல்வேன் என்பது வீணாகும். என் அன்பை நினைந்து என் துணிவைப் பொறுக்கவேண்டுகிறேன்.

2. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டு இப்போது இரண்டாண்டுகளாகின்றன. இக்குறுகிய காலத்திற்குள், அது செய்து முடித்திருக்கிற செயல்கள் அதற்குப் பெருமையையே கொடுத்திருக்கின்றன. அதன் உறுப்பினர் கல்விச் செல்வத்தை மாத்திரம் மிகுதியும் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். பொருட்செல்வம் மிக்கார் அதில் போதிய அளவில் சேர்ந்திருந்தால், இவ்விரண்டாண்டுகளுக்குள் சங்கம் இன்னும் சிறப்புடைய பணிகள் பல ஆற்றியிருக்கக்கூடும். இதுவரையில் இரண்டு கலைச் சொல்லாக்க மகாநாட்டைக் கூட்டி, ஆராய்ந்த கலைச் சொற்களை வெளிப்படுத்தி, அவைகளைச் சீர்தூக்கி முடிவுகட்ட ஒரு சொல்லாக்க நிபுணர் கழகத்தையும் சேர்த்துச் சென்ற ஏழு நாட்களாக அல்லும் பகலும் உழைத்து ஒரு முடிபுக்குக் கொணர்ந்த பெருமை ஒன்றே சாலும். இதன்பொருட்டுப் பொதுவகையில் இச் சங்கத்தின் ஆட்சியாளர்களுக்கும் சிறப்புவகையில் உயர்திருவாளர்கள் - இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், சாமி வேலாயுதம் பிள்ளை அவர்கள் ஆகிய இவர்கட்கும் நந் தமிழ்நாடு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

3. இனி, இச்சங்கத்தின் நோக்கங்கள் யாவையெனவும் அவைகளை அடைவதற்கு யாது செய்யப்படல்வேண்டும் எனவும் ஆராய்வோம். சங்கத்தின் விதிகளில் மூன்றாம் விதி சங்கத்தின் நோக்கங்கள் எவையெனக் கணக்கிட்டுச் சொல்லுகின்றது. தமிழின் தூய்மையைக் காத்து அதனை



வளர்த்துப் பெருக்குதலே இச் சங்கத்தின் நோக்கமெனத் தொகுத்துச் சொல்லலாம். நோக்கங்களில் சேர்த்துக் குறிப்பிட்டிருக்கிற ஏனையவெல்லாம் இவ்வொரு எண்ணத்தை ஈடேற்றிக்கொள்ளக் கடைப்பிடிக்க வேண்டிய சாதனங்களே யாகும். மூன்றாம் விதியில் எழுதியிருக்கின்ற கீழ்க்குறித்த சொற்றொடரை அயல்நாட்டானொருவன் படிப்பானானால், அவனுக்கு அது வியப்பைத் தராமல் போகாது. "தமிழிலேயே எண்ணவும், பேசவும், எழுதவும், பழகச் செய்தல்" என்னும் இச் சொற்றொடரை நான் படிக்கும்பொழுது எனக்கு வருத்தமும் வியப்பும் உண்டாகின்றன. நம் தாய்மொழி இந்நிலையிலுள்ளதே என்னும் வருத்தமும், அந்நிலையைக் கண்டும் அதனை நீக்க முயற்சியின்றி வாளா யிருக்கின்றதே நம் தாய்நாடு என்ற வியப்பும் அடைகிறேன். இந்தியாவில் ஏனைய பாகங்களில் உள்ளவர்களைப்போலல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள ஆங்கிலங் கற்ற நம்மனோர் ஒருவர்க்கொருவர் பேசும்போதும், எழுதும்போதும், ஆங்கில மொழியை உபயோகிக்கின்றனர். இது நம்மனோரை ஆங்கில மொழியில் முன்னணியில் நிற்கச் செய்திருக்கின்ற சூழ்ச்சிகளில் ஒன்றாய் நமக்கு ஒரு வழியில் பெருமையைத் தருவதாயினும் இந்தச் செய்கை நாம் வெறுக்கத்தக்கது.

4. உலகத்தில் அறிவு வளர்ந்துகொண்டே போகிறது. நேற்று வரையில் காணாத ஒரு புது அறிவு இன்று தோன்றுகிறது. இந்தப் புத்தறிவு ஏற்கனவே முன்னொரு காலத்தில் உலகிற்குத் தெரிந்திருந்து மறைவுபட்டதாகவுமிருக்கலாம். இருந்தாலும், தற்காலத்திற்கு அது புது அறிவே ஆகும். இப்படி உலகத்தில் அறிவு முதிர முதிர ஒரு நாட்டின் மொழி அதற்கு ஏற்ப வளர்ந்துகொண்டே போதல் வேண்டும். வளர்ச்சியின்றிக் குன்றிக் கிடக்கும் எம்மொழியும் தம் மக்களுக்கு உலகத்தின் அறிவு வளர்ச்சியைத் தர

முடியாது. அது பண்டைய நாளில் சிறப்புடையதாயிருந்திருந்
தால் அப்பெருமையைத் தவிர, அதனால் இப்போது வேறு
பயன் கிட்டாது. அறிவு வளர்ச்சியைத் தரமுடியாமற்
போனால் நாளடைவில் அம்மொழி உருமாறி "நானோ
கானலவோ" என்று ஐயுறுமளவில் சிதைந்துபோம்; அல்
லது போற்றுவாரற்றுப் பேச்சிறந்து மற்றொரு மொழிக்கு
இடங் கொடுத்துத் தனது பெருமையை இழந்துவிடும். நம்
தாய் மொழியின் நிலை இப்போது எப்படியிருக்கின்றதென
இத்தமிழ்ச் சங்கத்தின் விதிகளைப் படிப்பார்க்குப் புலனா
கும். நம்மனோர் இன்னும் நம்மொழியைப் புறக்கணித்து,
உலக ஓட்டத்துடன் ஓடி, நம் மொழியைப் பண்டைநாளை
யொப்ப, முன் அணியில் வைக்க முயற்சி கொள்ளாராயின்,
நம் மொழி ஆக்கம் குன்றிப் போற்றுவாரற்றுப் பின்பட்டுப்
போகுமென்பது திண்ணம். ஆனால் இப்போது சில ஆண்டு
களாகத் தோன்றியிருக்கும் குறிகளிலிருந்து நம் மொழி
இந்நிலையை அடையாதென்று நாம் உறுதியாய் நம்பலாம்.
நான் சிறுவனாயிருந்த காலத்துப் பள்ளியில் தமிழ்ச் சங்கம்
நிறுவுவது மிகக் கடினமாயிருந்தது. இப்போதோ வென்
றால், ஆங்காங்கு அடிக்கடி சொற்பொழிவுகள் செய்யப் பெற்
றும், தமிழ்ச் சங்கங்கள் நிறுவப்பெற்றும் தமிழன்பர்கள்
பெருகி வருகின்றனர். ஆங்கிலங் கற்ற நம்மனோர் தமிழ்த்
தாயினிடம் அன்பு கொள்ள ஆரம்பித்தது தொடங்கித் தமி
ழுக்கு ஒரு புத்துயிர் உண்டாயிருக்கிறது. தமிழ் மாத்திர
மறிந்த பண்டிதர்களின் பெருமையை யெடுத்துச் சொல்ல
நம் ஆங்கில உலகத்தில் ஆளில்லாது போகவே, தமிழின்
பெருமையும் தமிழ்ப் பண்டிதரின் பெருமையும் சில காலம்
மங்கிக் கிடந்தன. தமிழின்கண் இப்போது ஒரு புது
உணர்ச்சி ஏற்பட்டிருப்பதனாலே அம்மொழி முன்னேறி
வளருமென்பதில் ஐயமில்லை.



5. தமிழ் மொழி முன்னணி மொழிகளில் ஒன்
றெனக் கருதப்படவேண்டுமானால், உலகத்தின்கண் சிறந்தன
என்று கொள்ளப்படுகின்ற மொழிகளிலுள்ள உயரிய கருத்
துக்கள் முதநூலாகவோ, வழிநூலாகவோ, வழிநூல் வகையி
லொன்றாய மொழி பெயர்ப்பு நூலாகவோ தமிழில் எழு
தப்படல் வேண்டும். தமிழின்கண் உள்ள உயரிய கருத்துக்
களை அயல் நாட்டு மொழிகளில் மொழி பெயர்த்திடவும்
வேண்டும். அப்போதைக் கப்போது உலகத்தில் தோன்
றும் புது அறிவுகளை எடுத்துச்சொல்லும் நூல்கள் அப்போ
தைக்கப்போதே எழுதப்படல் வேண்டும். புகை வண்டி,
நீராவிக் கப்பல், ஆகாயத் தேர், மோட்டார்கார், இரேடியோ
முதலிய நவீனங்களைக் குறித்து நூல்கள் எழுதப்படல்வேண்
டும். நம் நாட்டின் வரலாறுகளை யல்லாமல் அயல் நாட்டுச்
சரித்திரங்களும் எழுதப்படல்வேண்டும். இவ்விதமே தமிழ
ரின் அறிவை வளர்ப்பதற்கு உலகத்தில் இப்போது தெரிந்
திருக்கும் எல்லாப் பொருள்களைப் பற்றியும் நூல்கள் எழு
தப்படல்வேண்டும். சுருங்கச் சொல்லின் ஆங்கிலமொழியோ,
பிரெஞ்சு மொழியோ, ஜெர்மெனி மொழியோ, தெரிந்தான்
ஒருவன் அம்மொழிகளைக் கற்றதனாலேயே அடையக் கூடிய
அறிவை யெல்லாம், தமிழ் மாத்திரங் கற்ற ஒருவன் அடை
தற்குச் சாதகமாகத் தமிழ் நூல்கள் ஆக்கப்படல்வேண்டும்.

6. நம் நாட்டிற்கு ஆரியர் வருமுன்னரே தமிழர் உயர்
ந்த நாகரிகத்தோடு வாழ்ந்தனரென்றும் அவர்கள் அக்காலத்
திலிருந்த உலக மக்களைப் பார்க்கிலும் மேம்பட்ட அறிவு
உடையவராய் இருந்தனரென்றும் சொல்லப்படுகிறது.
இதன் உண்மை எவ்வாறாயினும் ஆகுக. அது உண்மையாயி
னும் இப்போது ஆரியர் நாகரிகம் எம்மட்டு, தமிழர் நாக
ரிகம் எம்மட்டு என்று வரையறுத்துக்கூறல் இயலாது. தமிழ
ரின் அறிவு வடமொழி நூல்களிலும், ஆரியரின் அறிவு

தென்மொழி நூல்களிலும் எவ்வளவிற்குப் புகுந்திருக்கிறதோ அதைப் பற்றி யாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஒரு மொழியில் காணப்படும் உயரிய கருத்துக்கள் மற்றொரு மொழியில் நூலாக அமைந்திருக்கின்றனவாவென்று நாம் கவனிக்க வேண்டும். பெரும் சுமையைச் சுமக்கவேண்டி யிருக்கிற இந்நாளில் யாவரும் இருமொழியையும் கற்பது முடியாது. இருமொழியையும் கற்பது நன்மையே. ஆனால் முடியாமல் போகிறவர்க்கு ஒரு மொழியிலேயே மற்றொரு மொழியி லிருக்கிற அறிவெல்லாம் கிடைத்தல் வேண்டும். தமிழ் மொழியை நோக்கும்போது, வடமொழியிலுள்ள உபநிடதங்களில் பல, தந்திர அல்லது மந்திர நூல்கள், சோதிட நூல்கள், கணித நூல்கள் முதலிய பல நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படாம லிருக்கக் காணலாம். மேற் சொன்ன கூற்று உண்மையாயின் வடமொழியாருடன் நெடுநாள் அன்பு கொண்ட நாம் அம்மொழியிலுள்ள சிறந்த நூல்களை இதுகாறும் மொழி பெயர்த்துக் கொண்டோமில்லை. சமீப காலத்தில்தான் வால்மீகி இராமாயணமும், வியாச பாரதமும் தமிழில்மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. கலைச்சொல்லாக்க மாநாட்டிற்குத் தலைமை வகித்த சுவாமி விபுலானந்தர் அவர்கள் தமது தலைமை யுரையில், நாடெங்கும் கோவில்கள் கட்டின தமிழர்கள் சிற்பநூலைத் தமிழில் எழுதிவைத்தார்களில்லையென்று சொன்னார்கள். இந்தவிதமாக வடமொழியிலிருந்தும் தமிழில் செய்யவேண்டிய நூல்கள் பல உள. அயல் நாட்டுமொழிகளிலிருந்தும் நாம் எழுத வேண்டிய நூல்களும் மிகுந்திருக்கின்றன.

7. மேற் சொன்ன விதமாகப் புதுநூல்களை உண்டாக்கிக்கொள்ளப் போதுமான வசதி தமிழ் மொழியின் கண் இலது. ஆனதுபற்றி, அதன் எழுத்துக்களின் ஒலிக்குறையை



நிறைவு செய்யப் புது எழுத்துக்களைச் சேர்த்து, வேண்டப்பெறாத எழுத்துக்களை நீக்கி அதனை ஒரு புதுமொழியாக்கினாலொழிய இம் மொழியைச் செம்மைப் படுத்துதல் இயலாது என்று ஒரு சாரார் கூறுவர். இவர் கூற்றுப் பயனற்றது என்பது சில நாளைக்கு முன் “இந்து” பத்திரிகையில் திருவாளர் C. இராஜகோபாலாச்சாரியார் எழுதிய கட்டுரைகளால் நன்குவிளங்கும். ஒரே எழுத்தானது இடத்தை அனுசரித்து ஓசையை அடைகிறது என்பது அவர் எடுத்துக்காட்டிய எடுத்துக்காட்டுகளால் விளங்கும். வடமொழியினின்றும் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் தற்சமமாயோ, தற்பவமாயோ, வழங்கப்படல் வேண்டுமென்று வரையறுத்துக் கூறுகின்றன தமிழிலக்கண நூல்கள். இவைகளைவிடுத்து,வேண்டாவிடத்து வடமொழிஎழுத்துக்களையும், சொற்களையும் அப்படியே பெயர்த்து எழுதுதல் சரியாகாது. இப்படியே அயல் மொழிகளில் காணப்படும் ஓசைகளையெல்லாம் தமிழில் எழுத்தாக்குவது வேண்டப்படாததொன்று. தமிழில் காணப்படுகின்ற ‘ழகரம்’ ஏனைய மொழிகளில் கொண்டு போகப்படாமற் போவதனால், அம்மொழிகள் அடையும் இழுக்கொன்றுமில்லை. ஆங்கிலத்திற் காணப்படுகின்ற ‘எப்’ (F) என்னும் ஒலிக்குறி தமிழில் கொள்ளப்படாமல் போவதனால் குறையொன்றுமில்லை. அந்த ஓசைதிரிந்து தமிழில் வருமானால் அதனால் தமிழுக்கு உண்டாகும் இழுக்கொன்றுமில்லை. நமது நாட்டின் இடுகுறிப்பெயர்களைக் கூட ஆங்கில நாட்டானொருவன் தன் உச்சரிப்புக்குத் தகுந்தபடி மாற்றிக் கொள்கின்றான். ஒரு மொழியினின்று இன்னொருமொழியில் சொற்கள் சேர்க்கப்படும்போது பின்மொழியின் நடைக்கு ஏற்ப, ஓசை திரிந்தும் சொல்திரிந்தும் வருவது குறைவாகாது. தமிழின் கண் இப்போதிருக்கும் எழுத்துக்களைக் கொண்டே உலகத்தி

லிருக்கும் எம்மொழிகளையும் எழுதிவிடுதல் கூடுமென்று காலஞ்சென்ற பெரியார் மாணிக்கநாயக்கர் அவர்கள் எண்ணினார்கள். எழுத்துக்களைச் சேர்க்கவோ கழிக்கவோ வேண்டுவதில்லை. தமிழின் தூய்மையைக் காக்கத் தமிழ் மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

8. பொருளறிவு நூல்களை ஆக்குமிடத்துப் புதியசொற்களை ஆக்கிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும். இதுபற்றி இத்தமிழ்ச் சங்கத்தின் சார்பாகக் கூட்டப்பட்டிருக்கிற கலைச்சொல்லாக்கக் கழகம் ஒரு செம்மையான முறையைக் கைப்பற்றியிருக்கின்றது. ஒருகருத்தை வெளியிட வழக்கத்திலிருக்கிற தமிழ்ச் சொல்லையோ, வழக்கத்தி லிராவிட்டாலும் பண்டைய நூல்களில் காணப்படுகிற தமிழ்ச் சொல்லையோ கையாளுதல் வேண்டும். இப்படிச் சொற்கள் கிடைக்காதவழி ஒரு தமிழ்ச் சொல்லின் அடியாக ஒரு சொல்லை ஆக்க முடியுமானால் அதனைச் செய்து கொள்ளல் வேண்டும். இப்படியும் கிடைக்காத வழி, கருத்து ஆதியில் எம்மொழியிலிருந்து வெளிவந்ததோ அம்மொழியின் சொல்லையே கடன் கோடல் வேண்டும். இப்படி ஒரு புது மொழியை யுண்டாக்கும் போது அது அப்போது புதுமையாகத் தோற்றினாலும், வழக்கத்தில் வரவரப் புதுமை நீங்கிப்பழகின சொல்லாக ஆகிவிடும். கூட்டுறவுச் சட்டத்தை யனுசரித்து விதிகள் எழுத வேண்டியிருந்த நான் புதியனவாகப் புகுத்திய சொற்களை நாளடைவில் கிராமத்துச் சனங்களும் எளிதில் உணர்ந்து கொண்டனர்.

9. மேற்சொன்ன கலைச் சொல்லாக்க மகாநாடு சென்ற ஏழு நாட்களாகச் சென்னைமாநகரில்கூடி, சொற்களை ஆராய்ந்து ஒருமுடிபுக்கு வந்திருக்கிறது. முன் இரண்டுமுறை திருநெல்வேலியில்கூடி, ஆராய்ந்த நிபுணர்களேயல்லாமல் நாட்டின்கண்ணுள்ள திறமை வாய்ந்த மற்றும் பலரும் இம்மகா நாட்டில்

10. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தில் இதுபோது கல்விச்செல்வமாத்திரம் பெற்றிருக்கின்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றும், பொருட்செல்வமிக்கார் சேரவில்லை என்றும் முன்னமே சொன்னேன். பொருட்செல்வமுள்ளார் சேராதவிடத்து உலகில் எக்காரியமும் நடைபெறாது. இச்சங்கத்தின் செயல்கள் இதுவரையில் ஒருவாறு பலனடைந்திருக்கின்றன வென்றால், அதற்குக்காரணம் திருப்பனந்தாள்மடம் காசிவாசி மறைத்திரு சாமிநாதசுவாமி அவர்களின் பேரன்பே ஆகும். அவர்க்குத் தமிழ்நாடு மிகுதியும் கடமைப்பட்டிருக்கிறது. இனி இச்சங்கத்தின் நோக்கம் ஈடேறித் தமிழ்மொழி வளர்ந்து பெருகவேண்டுமானால் திருப்பனந்தாள் சுவாமிகளைப்போலச் செல்வவான்கள் பலர் முன்வரல்வேண்டும். இத்தமிழ்ச்சங்கமானது தாய்ச்சங்கமாக, கிளைச்சங்கங்கள் பல நாடெங்கும் தோன்றல்வேண்டும். முன் சொன்னதுபோல முதல் நூல்களும், வழிநூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் பல ஆக்கப்படல்வேண்டும். இதற்குப்போதிய பொருள் நாட்டு மக்கள் கொடுக்கவேண்டும். இத்தமிழ்ச் சங்கத்தின் நிதி ஆயிரக்கணக்கிலல்ல, இலட்சக்கணக்கில் பெருகவேண்டும். குறைந்தது நான்கு அல்லது ஐந்து இலக்க ரூபாய் சேமிக்கப்படல்வேண்டும். இத்தொகையினைச் சேமித்துவைத்து அதனால் வரும் ஊதியத்திலிருந்து நூல்கள் வெளியாதல் வேண்டும். நூல்செய்வோர்க்கு விலைகொடுத்து வாங்கியோ, அச்சேற்றிக் கொடுத்தோ அல்லது ஏனைய வழிகளிலோ உதவிசெய்தல்வேண்டும். நாட்டுமக்கள் பிரதிபலன் அற்ற வழியில் தமிழ்த்தாயின் தொண்டாற்றப் பொருள் கொடுக்க முன்வராவிடில் வாணிப முறைப்படியேனும் பணம்சேர்க்க முயலல்வேண்டும். அதாவது பங்காளிகள்அடங்கிய "Company" என்று சொல்லக்கூடிய ஒரு கழகத்தை நிறுவி நூல்கள் செய்து விற்பதனால் உண்டாகிய ஆதாயத்திலிருந்து, செலவு



போக, மிகுந்த தொகையைப் பங்கின்பேரில் ஈவாகப் பிரித்துக் கொடுத்தல் என்னும் வாணிப முறையைக் கைப்பற்றியேனும் பணம் சேர்க்கவேண்டும். எம்முறையைப் பற்றியேனும் பணம்சேர்த்தல் இன்றியமையாதது. மிகுந்த பணமில்லாமல் இச்சங்கத்தின் நோக்கம் அடையக்கூடாதது. ஒரு இலக்கமோ, இரண்டு இலக்கமோ, அல்லது ஐந்து இலக்கமோ சேர்ப்பது தமிழ் நாட்டு மக்களுக்குப் பெரிய தொகையாகாது. பலதுளி பெருவெள்ளமாகச் சேர்ந்துவிடும். ஆதலால் நாட்டிலுள்ளவர்கள் பலரும் ஊக்கம் கொள்ளல் வேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையாராதலால், முயற்சியுடையார் எந்தக் காரியமும் சாதித்தல் கூடும். இந்தச் சங்கத்தின் விதிகளைப் படித்துப் பார்த்தால் சாதி, மதம், முதலிய வேறுபாடில்லாமல் இச்சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம் என்பது தெளிவாகும். தமிழ்மொழியின் பற்றொன்றே உறுப்பினருக்கு இருக்கவேண்டிய தகுதியாகும். ஆனது பற்றி இத்தமிழ்ச் சங்கத்தில், நம் நாட்டின்கண் உள்ள யாவரும் பங்கினராகித் தமிழை வளர்க்கலாம். ஏனைய மொழியினரிடம் நமக்கு வெறுப்பில்லை. எவரிடத்தும் இருக்கும் நலத்தினை நாம் கைக்கொண்டு நம்மிடமிருக்கும் நலத்தினை அவர்கட்குக் கொடுக்கும் கொளகையே நம்மிடம் குடிகொண்ட கொள்கை.

" தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் "

என்பதும் நம் மறைமொழி.

11. தமிழறிந்த பெரியீர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சியாளர்களுக்கு மற்றுமொரு முறை என் நன்றியறிதலைத் தெரிவித்து என் பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன்.

# திருவாரூரர்

[பி. தியாகராஜ பிள்ளை, பி.ஏ., எல்.டி.]

## III

### பெற்றோர்

சுந்தரர் இளங்குழந்தையாயிருக்கும்போதே திருநாவலூரையாண்ட ‘நரசிங்கமுனையரையர்’ என்னும் மன்னர் அவரைக் கொண்டுபோய்த் தம் அரண்மனையில் வளர்த்தார். இச்செய்தியைத் திருவாரூரர் தம்திருப்பாட்டில் எங்கேனும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் 17-ம் பதிகத்தில் “நரசிங்க முனையரையன் ஆதரித்தீசனுக் காட்செயுமூர் அணிநாவலூர்’ என்றும், திருத்தொண்டத் தொகையில் “மெய்யடியான் நரசிங்க முனையரையர்க்கடியேன்” என்றும் தம் “வளர்த்ததாதை”க்குச் சிவனிடத்து உள்ள மெய்யடிமைத் திறத்தைப் போற்றியதோடு அவர்க்குத் தம் நன்றியையும் ஒருவாறு கூறினது போல நரசிங்க முனையரையரை அடியவர் கூட்டத்தில் சேர்த்தெண்ணித் தேவாரம் உள்ளளவும் உலகத்தார் அவரை மறவாதிருக்கும்படிச் செய்தார்.

(2) மணம் பேசும் வரைக்கும் முனையரையர் அரண்மனையில் வளர்ந்து வந்தாலும், தம் பெற்றோரை மறந்துவிட்டவர் அல்லர். அப்பர் சுற்றத்தைத் துறந்தவர். அவர் தமக்கு வழி காட்டிய தமக்கையாரைக் கூடத் தம் பாடலில் குறித்ததாகத் தெரியவில்லை. சம்பந்தப் பெருமானே தம் பெயரையும் தாம் பிறந்த குடியின் பெயரையும் ஊரின் பெயரையும் பலகாலும் தம் பாட்டுக்களில் கூறிய போதினும், தம் தாய் தந்தையரின் பெயரைக் கூறியதாகக் காணப்படவில்லை. ஆனால் சுந்தரரோ பல பாட்டுக்களில் தம் பெற்றோரைப் புகழ்ந்து கூறுகின்றார். தம்



முடைய வரலாற்றோடு தம் தாய் தந்தையர் பெயரும் உலகத்தில் என்றும் வழங்கத் தம் பாடல்களில் சேர்த்து விட்ட பெரும்புலவர் இவர் ஒருவரே என்னலாம்.

(3) இப்பொழுது பெற்றோரைக்குறிக்கும் திருப்பாட்டுக்களை ஆராய்வோமாக. 7-ந் திருப்பாட்டில் “ சடையன் சிறுவன் ” என்று தம் தாதையைக் குறித்தார். தந்தைதாய் இருவரையும் சேர்த்து 16-ம்பாட்டில் “நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன் ” என்று அவர்களுடைய சிறந்த பண்புகளையும் ஒருவாறு எடுத்துச்சொன்னார். தந்தையிடத்து மிக்க மதிப்பும் அன்பும் உடையவர் சுந்தரர் என்பதற்கு இக்குறிப்பே சான்றாகும். தந்தையார் நட்பில் சிறந்தவர் என்பதும் நல்லகுணம் வாய்ந்தவர் என்பதும் தெரிகின்றன. இந்நட்புத்திறம் பிள்ளைக்கும் வாய்ந்திருந்தது என்பதற்குச் சுந்தரரோடு ஆரூர்ப்பெருமான் தோழமை பூண்டதும் சேரமான் தோழனானதும் சான்றுகளாம். உட்கலந்த நட்பைத் தம் நண்பர்களிடத்தில் எப்படி காட்டினார் என்பதை அவர் வரலாற்றில் பரக்கக் காணலாம். தம்தாயாரின் மேன்மையையும் இப்பாட்டில் எடுத்துச் சொன்னார். இசைஞானியார் என்னும் பெயர் காரணப் பெயரோ என்று ஐயப்படவும் இடந்தருகிறது. ஏனென்றால் அவ்வம்மையார் இசையில் வல்லவராக இருந்ததனாலன்றோ ஆரூரரும் பெரும் இசைப்புலவராகி விளங்கினார்.

(4) 34, 47-ம் பதிகங்களில் “சடையன்றன் சிறுவன்” என்று மீண்டும் கூறக்காணலாம். 38-ல் “ இசைஞானி சிறுவன் ” என்றார். தம்பெற்றோரைக் குறிக்கும்போது பொதுவாகத் தம்மைச் “ சிறுவன் ” என்ற சொல்லால் குறிப்பது பெற்றோர் முன்னே தாம் எவ்வளவு தாழ்மையும் அடக்கமுமுடையவராக நடந்து கொண்டார் என்பதைத் தெரிவிக்கின்றது. 39-ல் ‘பத்து’ ஆகிய திருத்தொண்டத் தொகையில்

" என்னவனும் அரனடியே யடைந்திட்ட சடையன், இசைஞானிகாதலன் திருநாவலூர்கோன் " என்கிறார். இக்குறிப்பிலிருந்து ஒன்று அறியக்கிடக்கிறது. இப்பதிகம் பாடும்போது அஃதாவது சுந்தரர் பரவையாரை மணந்துகொண்டு திருவாரூரில் தங்கிஇருந்தபோது சடையனார் சிவனடியை யடைந்திருப்பாரோ என்றுகருத இடம்தருகிறது. இப்பாட்டிலேயே தம்மை 'இசைஞானி காதலன்' என்றும் பாடியிருப்பதுநோக்கத்தக்கது. தமதுதாயார் தம்மை எவ்வளவு அருமையோடு வளர்த்து வந்தார் என்பதையும் தாம் அம்மையாரிடத்தில் மிகுந்த அன்பு காட்டினார் என்பதையும் " காதலன் " என்ற இனிமையான சொல்லால் விளக்கினார். இப்படியே 57, 58லும் சடையன்றன் காதலன் என்றார். மேற்குறித்தபாடல்களில் தந்தையின் பெயரையே முன்வைத்துப் பாடியதிலிருந்து ஆரூரர் தாயாரிடத்தில் காண்பித்ததைக்காட்டிலும், மிகுந்த வணக்கம் தந்தையிடத்தில் காட்டினார் என்பதை அறிகிறோம். " தந்தை தாய்ப்பேண் " என்றவிடத்திலும் அது முறையாகக் கொள்ளப்பட்டதன்றோ !

(5) திருத்தொண்டத் தொகையில் ஆரூரர் தமது தாய் தந்தையரைத் திருக் கூட்டத்தில் வைத்து வணங்கவில்லை. வழக்கம்போலத் தாம்இன்னார் புதல்வர் என்று திருக்கடைக்காப்பில் சொல்லும்போது அவர்கள் பெயர்களைக் குறித்தார். ஆனால் பிற்காலத்துப் பெரியோர்கள் அவர்களையும் 63 அடியார்களுடன் தனியடியார்களாகச் சேர்த்துக் கொண்டனர். சைவ சமயத்திற்குப் பேராசிரியராகவிளங்கி, அருமைத்திருப்பாடல்களை உலகிற்கு உதவிய திருவாரூரரைப் பயந்த தாய் தந்தையர்களை உலகினர் என்றும் தெய்வமாகப் போற்றும் பெருமை வாய்க்கப் பெற்றது வியப்பன்று.



(6) 52-ல் 'சித்தர் சித்தம் வைத்த புகழ்ச் சிறுவன்' என்றும், 54 - ல் ' ஞாலந்தான் பாவப்படுகின்ற நான் மறையங்கமோதிய நாவன், சீலந்தான் பெரிதும் மிகவல்ல சிறுவன் வன்றொண்டன் ' என்றும் கூறும் இடங்களில் சித்தர் என்றதும் 'நான்மறையங்க மோதிய நாவன்' என்றதும் சடையனாரையே குறிக்குமோ என்று ஓர் ஐயம் எழுகிறது. சம்பந்தர் போல் சுந்தரர் நான் மறை ஓதியதாக வேறெங்கேயும் குறிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் சேக்கிழார் சொல்வதுபோல், "வேதியர் குலத்திற் றோன்றி, மேம்படு சடையனார் நான் மறையங்கமோதி" மேன்மை அடைந்திருக்கலாம். "சிறுவன்" என்று பின்னே வந்துள்ள சொல்லும் இதனை வலியுறுத்துவதுபோல் தெரிகிறது. ஏனென்றால் சிறுவன் என்று தம்மைத்தனியே கூறிக்கொள்வதில்லை. தந்தைதாயரைக் குறித்தபோதுதான் சிறுவன் என்று தம்மைக் கூறிக்கொள்வது அவரது வழக்கமாக இருந்தது.

(7) 98-ல் 'சடையன் திருவாரூரன்' என்று தமக்கும் சடையனார்க்கும் உள்ள உறவை வெளிப்படையாகச் சொல்லாது பேசுகிறார். இது ஒருதமிழ் வழக்கம். இன்றும் ஒருவர் முழுப்பெயரை யெழுதும்போது, ப. அருணசல முதலியார் என்பதைப் பசுபதி அருணசல முதலியார் என்று துரைத்தனத்தாரும் எழுதுகின்றார். அதன் பொருள் பசுபதி புதல்வர் அருணசலமுதலியார் என்பதே. அஃதேபோல 'சடையன் திருவாரூன்' என்று ஆரூரரும் தம்மைக் கூறிக்கொண்டார்.

# தமிழர் மத வளர்ச்சி

[வித்வான்: அ. மு. பரமசிவானந்தம்]

(மலர் - கூ, இதழ் - எ, உசசு-ம் பக்கத் தொடர்ச்சி)

**நா**யன்மார்களும் ஆழ்வார்களும் வாழ்ந்து தத்தம் மதங்களைப் பரப்பிச் சென்றபிறகு சிலகாலம் சமயக்கிளர்ச்சி இல்லாதிருந்தது. இரண்டொரு நூற்றாண்டுகள் கழித்து மறுபடியும் சமயம் தழைத்தோங்க ஆரம்பித்தது. காழிக்குழந்தையினிடமிருந்து எந்த அற்புத வார்த்தைகள் வெளியாகி உலகை உய்வித்தனவோ அத்தன்மையாகிய உண்மை வாக்குகளே திருவெண்ணெய்நல்லூர் குழந்தை வாக்கிலும் குலவித் தோன்றின. இறைவனது அருட் பொலிவினாலே தோன்றிய மெய்கண்ட தேவர் திருவெண்ணெய்நல்லூரில் சிறந்த சைவப் பொலிவுடன் விளங்கினார். இவர் இயற்றிய சிவஞான போதமே இன்றளவும் சைவர்கள் மத்தியில் சிறந்த சித்தாந்த சாத்திரமெனப் போற்றிப் புகழப்படுகின்றது. பற்றற்ற பரம்பொருளினது பதித் தன்மையினையும், பற்றுள்ள ஆன்மாக்களது பசுத் தன்மையினையும், பாசத் தன்மைகளையும், அப்பாசம் அற்றுப் பரமனை அடையும் பரிசுத்தமான பண்பினையும் பன்னிரண்டு சூத்திரங்களால் விளக்கி உலகுக்குப் பயன் ஈந்த மெய்கண்டநாதன் தன்மையினாலன்றோ சித்தாந்த சாத்திரங்கள் அனைத்தும் மெய்கண்ட சாத்திரம் எனப் பெயர் பெற்றன. இவரது மாணாக்கராகிய அருணந்தி சிவாசாரியர் இருபா இருபஃது எனும் சித்தாந்த சாத்திரம் இயற்றிச் சிறப்புற்றனர்.

சில ஆண்டுகட்குப் பிறகு மற்றை இருசந்தான குரவர்களும் தோன்றினர். மறைஞான சம்பந்த சிவாசாரியரும், அவர் மாணாக்கராகிய உமாபதி சிவாசாரியரும் சைவ சித்தாந்தத் தன்மையினை உலகுக்கு நன்கு விளக்கிப் போந்தனர். இவர்களது குரு சீட சம்பந்தத்தைப் பற்றிப் பல்வேறு கதைகள் வழங்குகின்றன. அவை எவ்வாறாயினும் ஆகுக. அவர்கள் வானவர் கோனும் வளநடம் புரிவோன் வாழ்கின்ற தில்லைப் பதியிடத்தே பன்னாள் வதிந்து சித்தாந்த சாத்திரங்கள் இயற்றிச் சென்றார்கள் என்பது வெளிப்படை. கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் எட்டுச் சித்தாந்த சாத்திரங்களை இயற்றிப் புகழ் பெற்றார். இவரே திருவாவடுதுறை மடத்துத் தலைவர் எனவும் கூறப்படுகின்றார். திருவாவடுதுறை கயிலாய பரம்பரை என்பதில் இவர் எட்டாவதாக வைத்து எண்ணப்படுகின்றார்.

ஏறக்குறைய இக்காலத்திற்குப் பிறகு நம் தமிழ் நாட்டில் மடங்கள் சிறந்தோங்க ஆரம்பித்தன. முகம்மதிய மதமும் நம் மத்தியில் முற்படத் தலைப்பட்டது. அதற்கு முன்பே இது ஈண்டு புகுந்ததாயினும் பல்வேறு காரணங்களால் தற்போது அது அதிகமாகப் பரவியது. சைவமடங்களிலிருந்து பல்வேறு பண்பமை புலவர்கள் தோன்றினர். அன்னார் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்தவராவர். தலபுராணங்கள் இக்காலத்தில் பல எழுதப்பட்டன. பண்டைத் தமிழர்களது பெருமை குறைய ஆரம்பித்தது. தமிழ் நாட்டு மூவேந்தரும் பேரளவிலே நின்றனர். பிற நாட்டு மன்னர்கள் படையெடுப்பு நாட்டில் அதிகமாகக் கிளர்ந்தது. கிருஸ்தவ மதமும் கிளைத்தது. பல வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டன. எனவே தமிழர்களது நாகரிகத்திற்கும் அன்னார் மதத்திற்கும் ஒரு பெரு மாறுதல் ஏற்பட்ட காலமென்றே இதைச் சொல்லலாம்.

திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் ஆகிய மடங்கள் சிறந்தனவாகப் போற்றப்பட்டன. இவைகளில் சைவ பாடங்களைச் செவ்வனே, முறைப்படி பயில்வார்க்குக் கற்பிக்கப் பட்டன. இம் மடங்களிலிருந்து சிறந்த சைவத் தமிழறிஞர்கள் தழைத்தோங்கினர். சிவப்பிரகாசர், வேலையர், கருணைப் பிரகாசர் என்று சொல்லப்பட்ட மூன்று உடன்பிறப்பாளர்களும் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்து உலகுய்யச் செய்தனர். குமரகுருபரர் மூங்கைப் பிள்ளை எனப் பிறந்து செந்திற் செவ்வேள் திருவருள் பெற்று இனியதமிழ்ப் பாக்கள் பாடிய தன்மையினை வியவாதார் யார்? இன்னும் இவர்களைப் போன்ற பலவேறு அறிஞர்கள் இறைவன் நல்லருள் பெற்றவர்கள் இக்காலத்தே தோன்றினர்.

கடைசியாக நமக்கு ஒரு சிலஆண்டுகள் முன் சென்று நோக்குவோம். இக்காலத்தே கிருஸ்துவ மதமே நாட்டுப் பல அறிஞர்களால் போதிக்கப்பட்டுத் தமிழகத்தில் நிலைத்து நிற்கத் தலைப்பட்டது. சைவ பௌத்த மதங்கள் பெரும்பாலும் மறைந்து விட்டன. இடைக் காலத்தே முகலாயர்கள் கொணர்ந்த முகமதிய மதம் தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் அப்படியே நிலைத்து விட்டது. நம் சைவ நூல்களைச் சிலகாலம் சைவ மக்கள் காணாதிருந்த காலமென்றே இதைச் சொல்லலாம்.

இக்காலத்திற்குப் பிறகு யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்களும் வடலூர் இராமலிங்க அடிகளும் தோன்றி, மறைந்து கிடந்த பல்வேறு கொள்கைகளையும் சமயநூல்களையும் பரப்பலானார்கள். இராமலிங்க அடிகளது கனிந்த பாக்கள் கற்றோர்க்கு மாத்திரமன்றி மற்றெல்லா மக்களுக்கும் மனதிடையே புகுந்து ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும் என்பதிற் சந்தேகமில்லை. அவரது அருள்



நலம் கனிந்த பாடல்கள் படிப்போர் மனதினைப் பண்புறச் செய்யும் என்பது நிச்சயம்.

தமிழகத்தில் இக்காலத்தில் அச்சு நிலையங்கள் தோன்ற ஆரம்பித்தன. ஏடுகளிலிருந்த அருந்தமிழ் நூல்களையெல்லாம் ஆறுமுக நாவலரும் பிறரும் நற்புத்தகமாக்கி விற்றுத் தத்தம் கொள்கைகளையும், மொழியையும் மதத்தையும் பரப்பினர். நாவலர் அச்சிட்ட நூல்கள் பல. அவை பெரும்பாலும் சைவ சமய நூல்களாகவே இருக்கின்றன.

இவர்களுக்குப் பிறகு திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் தோன்றித் திருவாவடுதுறை ஆதினத்தே கல்வி பயின்று பல்வேறு சைவசமய நூல்களையும் பிரபந்தங்களையும் இயற்றிச் சென்றார்.

இருபதாம் நூற்றாண்டின் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கிய சுப்பிரமணிய பாரதியாரை எம்மதத்தினரும் மறவாதிருக்கும் வகையில் அவர் பண்பார் பாடல்களைப் பாடிப் புகழ்பெற்றார். சமரசஞானந் ததும்பும் அவரது அரிய தோத்திரப் பாடல்கள் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். அவர் தனித்தனி ஒவ்வொரு மதச் சார்பிலும் நின்று இறைவனைப் பாடும் பாடல்கள் அவ்வம் மதவாதியின் உள்ளத்தைத் தட்டி எழுப்பும் என்பது திண்ணம். இத்தகைய உயர்ந்த கவியாரே நம் தமிழகத்தே கடைசியாக மறைந்த கவிவாணர்.

முடிவாகத் தற்போதுள்ள தமிழகத்தை ஆராய்வாமெனின், அதுபரந்து விளங்கிக் கிடக்கின்ற தன்மைத் தாதலின் அதைப்பற்றி ஈண்டு உரைக்க வேண்டுவதில்லை.

நமக்குத் தெரிந்தவரை பாண்டியன் மாகீர்த்தியின் காலம் தொட்டு இன்றுகாறும் நம் தமிழகத்தே மதம் பரவி வந்த விதம் இதுவாகும். இத்துணைப் பல்வேறு மாறுதல் களுக் கிடையினும், பல நாட்டு மன்னர்கள் படையெடுப்பின்

இடையினும், பலமதக் கொள்கைகள் பரவியதற்கிடையினும் தன் தன்மை குன்றாத உயர்ந்த இச்சைவமதம் என்றும் நிலைபெறுவதாக.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

# கலைச்சொல்லாக்க மகாநாட்டுத் தலைமையுரை

[சுவாமி விபுலாநந்தர்]

**மகா**நாட்டிற்குத் தலைமை வகித்த சுவாமி விபுலானந்தர் அவர்களின் தலைமையுரை வருமாறு:—

சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தாரது பெருமுயற்சியினாலே பலப்பல அறிவுத்துறையில் புலமைவாய்ந்தோரும், உயர்ந்த ஆராய்ச்சித் துறைகளில் முயன்றுழைப்போரும், இளைஞர்க்குக் கல்வி பயிற்றும் சிறந்த தொழிலினை மேற்கொண்டோரும், தமிழ்மொழி வளர்ச்சியில் ஆர்வமிக்கோரும், கல்வியிலாகா பல்கலைக் கழகம் என்றித்தகைய அதிகாரசபையாரால் அனுப்பப்பட்டோரும் பிறரும் ஈண்டுக் குழுமியிருக்கின்றனர்.

## நோக்கங்கள்

தமிழ்மொழி வளர்ச்சியைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு இன்றைக்கு மூன்றாண்டுகட்குமுன்பு நிறுவப்பெற்ற சென்னை மாகாணத்தமிழர் சங்கமானது கலைச்சொல்லாக்கமென்னும் துறையிலே சென்ற மூன்றாண்டுகளாக முயன்று கொண்டிருக்கின்றது. இதுவரையும் செய்த வேலையை மதிப்பிட்டுத் திருத்தஞ் செய்தலும், இனி நடத்தற்குரிய இவையெனத் தீர்ப்பிட்டு முடிவுசெய்தலும் இம்மகாநாட்டின் நோக்கங்களாகும்.



மேனாட்டுத் தொடர்பு ஏற்பட்ட காலம் முதலாக அந்நாட்டின் உயர்வுக்குக் காரணமாயிருக்கின்ற கலைத்துறைகளைத் தம் மொழிப்படுத்த வேண்டுமென்னும் ஆர்வம் இந்தியமக்களிடையே இருந்து வருகின்றது. தொன்று தொட்டுத் தமக்கு உரிமையாக வருகின்ற உண்மை நூல்களின் நிறைவையும் குறைவையும் நன்குணர்ந்த கலைவல்லுநர் குறைவாய துறைகளை நிறைவுசெய்யும் வழிகளைத் தேடிநிற்பது இயல்பேயாம். சயன்ஸ் என்னும் ஆங்கிலமொழி ஒருவாறு நோக்குமிடத்து அறிவுத்துறை யனைத்தினையும் குறிக்கும். அம்மாதிரிக் கலைத்துறை யனைத்தினுக்கும் பொதுவாக வேண்டப் படுவனவாகிய சொற்களை ஆக்கிக்கொள்ளுதல் நலமாகும்.

## சொற்கள் ஆராய்ச்சி

தமிழ் மொழியிலே ஆட்சியிலிருக்கும் சொற்களை ஆராய்ந்து கண்டறிதல் நாம் செய்தற்குரிய முதற் பணியாகும். வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழிகளுக்கும் இலக்கணம் ஒன்றேயென்றே எண்ணுக என்னும் கூற்றினை நாம் முற்றும் ஒப்புக்கொள்ளா விடினும் வடமொழியிலிருந்து எடுத்துத் தமிழான்றோராலே தமிழுருவாக்கி வழங்கப்பட்ட சொற்களைப் பிறமொழிச் சொற்களெனக் கடிந்தொதுக்குதல் மேற்கொள்ளாது, அவைதம்மை ஆக்கத் தமிழ்மொழியாகத் தழுவிக்கொள்வதே முறையாகும். சாதி சமய வேறுபாடின்றி இந்தியநாட்டுப் பேரறிஞர் கலைத்து

றையிலே ஆழப்புகுந்து ஆராய்ந்துகண்ட சிறந்த முடிவுகளை வடமொழியிலெழுதும் வழக்கம் தொன்று தொட்டு இந்த நாட்டிலே இருந்து வருகிறது. இதனால் வழக்கு மொழிகள் கலைத்துறைகளிலே பெருக்கமடையாது ஒழிந்தன. உதாரணமாகச் சிற்பக்கலையினை எடுத்துக் கொள்ளுவோம். தேவர் கோட்டம், மன்னன் கோயில், மக்களில்லம் என்னுமிவைதம்மை யமைக்கும் முறைகளையும் தெய்வச்சிலை யுருவங்களை யமைக்கும் கணித நுட்பங்களையும் பண்டைய தமிழர் நன்குணர்ந் திருந்தன ரென்பதற்குத் தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களே சான்று பகருகின்றன. இவை தம்மையமைக்கும் ஆற்றல் வாய்ந்த சிற்பியர் தமிழ்நாட்டில் இன்னும் உளர். அங்ஙனமாயினும் இக்கலை நுட்பங்களனைத்தினையும் உணர்த்தும் ஆகம நூல்கள் வடமொழியிலேதான் எழுதப்பட்டிருக்கின்றன. அவை தம்மை வழக்கு மொழிகளிலே பெயர்த்தெழுதுதல் சாலவும் வாய்ப்புடைத்து. இம்முயற்சியிலேயே வடமொழி வல்ல தமிழறிஞர் இனிமேலாவது ஈடுபடுவாராக.

## இராஜயோக நூல்

சாங்கியம், யோகம், நியாயம் வைசேஷிகமாகிய நான்கு சாத்திரங்களிலும் கலைநூலுணர்ச்சிக்கு வேண்டிய பொருள் மலிந்து கிடக்கின்றது. பாரதநாடு செய்த அருந்தவப்பயனாகத் தோன்றிய சுவாமி விவேகானந்தரியற்றிய இராஜயோக நூலினை மொழிபெயர்க்குந் தொழிலில் யானீடுபட்டிருந்த காலத்திலே யோக சாஸ்திரத்திற்கு முதனூலாகிய பதஞ்சலி யோக சூத்திர நூலினைத் தமிழில் பெயர்த்தெழுத நேரிட்டது. அம் மொழிபெயர்ப்புச் சுவாமி விவேகானந்தரியற்றிய நூல்களின் தமிழ்மொழி பெயர்ப்பாகிய "விவேகானந்த ஞானதீப" முதற்றொகுதியிலே வெளியிடப்பட்



டிருக்கிறது. அதனைப் படித்த அன்பர் பலர் மிக உயர்ந்த நுண்ணிய கருத்துக்களைத் தூய தமிழிலே எழுதல் கூடும் என்னும் முடிவிற்கு வந்தனர்.

ஓரோ விடத்து ஆட்சிப்பட்ட தமிழ் மொழிப் பதங்களைத் தமிழில் வழங்குதல் குற்றமாகாது. பிங்கலந்தை, திவாகரம், சூடாமணிநிகண்டு என்னும் நிகண்டுகளிலே வந்த பதங்களை எடுத்தாள்வது எவ்வாற்றானும் பொருத்தமுடையதாகும்.

பிற மொழியிலிருந்து எடுத்த பதங்களைத் தமிழில் வழங்குமிடத்து அவைதம்மை எவ்வாறு தமிழாக்கிக்கொள்ளுதல் வேண்டும் என்பதைக் குறித்து ஒரு சில குறிப்புக் கூறுவாம். ஒவ்வொரு மொழிக்கும் சிற்சில சிறப்பியல்புகள் உள. அவை தம்மை மாறுபடாது பாதுகாத்தல் ஆன்றோருக் கியல்பு.

வாங்கு, மேசை, கதிரை என்னும் மொழிகள் ஆங்கிலச் சொற்களின் மொழிபெயர்ப்பாக ஈழநாட்டில் வழங்கப்படுகின்றது. இவைபோர்த்துக்கீச மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்குந் திசைமொழிகளா மென்பதைப் பெரும்பாலார் அறிந்து கொள்வதில்லை. இச் சொற்கள் தமிழுருவுடையவாதலின் வேறுபாடின்றி வழங்கப்படுகின்றன. ஓரேயினப் பொருள்களைக் குறிக்கும் சொற்கள் ஓரேவிகுதி பெற்று நிற்றலும், முரணிய இணைச் சொற்கள் ஓரே வாய்பாட்டால் நடந்து பெரும்பாலும் ஓரேயெதுகையாக நிற்றலும் தமிழ் வழக்கு. ஆம்பல், அலரி, குவளை, முல்லை, வெட்சி என்றித்தகைய பூப்பெயர்கள் இந்நாளில் ஒருமொழி நீர்மையவாக வழங்கப்படினும் இவைதாம் தொழிற் பெயர் விகுதி பெற்ற தொடர்மொழிகளாம் எனக் கொள்ளுதற்கிடமுண்டு. அறம், மறம் எனும் முரணிய வினைச்சொற்கள் ஓரேயெதுகையவாக அமைந்து நிற்றலை நோக்குக.

## இந்தியாவெங்கும் முயற்சி

கலை நூல்களை நாட்டு மொழியிலெழுதும் பெருமுயற்சி இந்தியாவின் பல பாகங்களிலும் நடந்துகொண்டிருக்கின்றது. ஐதராபாத் சமஸ்தானத்தி னாதரவிலே நடைபெறும் உஸ்மானியா சர்வகலாசாலையானது நாட்டு மொழியாகிய உருது பாஷையிலே எல்லாக் கலைத்துறைகளையும் பயிற்றுதற்கு ஏற்பாடுசெய்திருப்பது மிகச் சிறந்த முடிவாகும். இந்தியாவின் பல பாகங்களிலும் உயர்ந்த விஞ்ஞானக்கலை யாராய்ச்சிக்குப் பொதுமொழியாக ஆங்கில மொழியமைத்தலும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஏழைமக்கள்தாமும் எளிதிற் பயின்று கொள்ளவேண்டிய கலைத்துறைகளனைத்தும் நாட்டு மொழியிலமைந்து நிற்பதும் பொருத்தமாகும்.

தொகுத்துரைக்கு மிடத்துக் கலைநூல்கள் நாட்டிற் பரவுதற்கு எவ்வெச் சாதனங்கள் வேண்டப்படுபவோ ஆங்கவற்றைத் தாமதமின்றி ஆக்கித்தருவது அறிஞரது கடனாகும்.

# பண்டைத் தமிழரும் முருகவேள் வழிபாடும்*

[G. கலியாணம், B. A.]

“தாமரை புரையும் காமற் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்

*இது, திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் செய்த ஒரு சொற்பொழிவைத் தழுவி எழுதப்பட்டது.



சேவலங் கொடியோன் காப்ப
ஏமவைகல் எய்தின்றால் உலகே”—குறுந் தொகை.

பண்டைத் தமிழர் முருகவேளை எங்ஙனம் வழிபட்டனர் என்பதைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். தமிழ் நாட்டிலே எக்காலத்திலேனும் தெய்வ வழிபாடு இல்லாமல் இருந்ததென்று சொல்வதற்கில்லை. இக்கூற்றிற்கு இலக்கிய இலக்கண நூல்களே சான்றாகும். மிகப்பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் நால்வகை நிலங்களுக்கும் தெய்வங்கள் கூறப்பட்டிருக்கின்றன. குறிஞ்சிக்குச் சேயோன், முல்லைக்கு மாயோன், நெய்தலுக்கு வேந்தன், மருதத்திற்கு வருணன் இவர்கள் தெய்வங்களாம். சங்கத் தமிழ் நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும், கீழ்க்கணக்கு நூல்களிலும் சிவபெருமான், கண்ணன், பலராமன், முருகவேள் முதலிய தெய்வங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. “பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், வால்வளை மேனி வாலியோன் கோயிலும், நீல மேனி நெடியோன் கோயிலும்” என்ற சிலப்பதிகார அடிகளை நோக்குக. மணிமேகலை யாசிரியர் “நுதல்விழிநாட்டத் திறையோன் முதலா” என்கிறார். கலித்தொகையில் “மழுவாள் நெடியோன் முதல்வனாக” என்று உரைக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் சிவபெருமானையே முதலில் கூறப்படுதல் கூர்ந்து கவனிக்கத் தக்கது. இடத்தில் முதன்மையாகக் கூறப்பட்டிருத்தலே யன்றித் தன்மையிலும் முதன்மையாகக் கூறப்பட்டிருப்பதூஉங் காண்க. அவருடைய அடையாளங்கள், பேர்கள் பல இருந்தும் “பிறவாயாக்கைப் பெரியோன்” என்றார் இளங்கோவடிகள். சங்க இலக்கியங்களில் ‘சிவன்’ என்ற பேர் காணப்படாவிடினும் அவனைக் குறித்து அநேக இடங்களில் விதந்தோதப் பெற்றிருக்கின்றது. அவைகளில் இன்னும் பல

தெய்வங்களைப் பற்றியும் நன்முகக் கூறப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில் கௌமாரம், காணுபத்தியம் போன்ற சமயங்கள் இல்லை. எல்லாம் ஒரு சமயமாகவே இருந்திருக்க வேண்டும்.

தெய்வ வழிபாட்டில் முருகவேள் வழிபாடே பலராலும் கொள்ளப்பட்டிருந்ததென்பது இலக்கியங்களால் காணக் கிடக்கின்றது. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முருகக்கடவுளுக்கு மாத்திரம் சொன்ன ஒரு தனி நூல். பரிபாடல் 70 பாக்களுள் 31 செய்யுட்கள் முருகப்பெருமானையே புகழ்கின்றன. "திருமாற் கிருநான்கு சேவ்வேட்கு முப்பத் தோருபாட்டு" என்னும் செய்யுட் பகுதி காண்க. எஞ்சிய பரிபாடல் பாட்டுக்கள் இருந்தால் அவைகளில் என்னென்ன சொல்லப்பட்டிருக்குமோ அறிகிலோம்.

பழைய தலங்களில் முருகவேளுக்குரிய பதிகள் பல. செந்திலைப் பற்றிப் புறநானூற்றில் கூறப்படுகிறது; படைவீடுகளைப் பற்றியும் திருமுருகாற்றுப்படை விரிவாக எடுத்தாள்கின்றது. அவருக்கு விழாக்கள் கொண்டாடியதைச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பரக்கக் காணலாம். இக்காலத்தில் பிள்ளையார் கோயில் என்றவுடன் விநாயகர் கோயில்தான் நினைவிற்கு வருகின்றது. ஆனல் அக்காலத்தில் பிள்ளையார் என்றால் முருகவேளை இருந்திருக்க வேண்டும். நச்சினார்க்கினியர் உரைகளில் பிள்ளையார் என்று முருகனை யாண்டும் கையாண்டிருக்கிறார். மக்கள் முதன் முதலில் மலைகளில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் ஆராய்ச்சி முடிபு. அதனால் மலைநாடான குறிஞ்சிக்குக் கடவுள் முருகனாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அவருக்குப் பொது முழுமுதன்மை பழைய இலக்கியங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.



சங்க நூல்கள் சிவபெருமானை ஆல்கெழு கடவுள், ஆல் அமர் செல்வன் என்று கூறுகின்றன. முருகப் பிரானை "ஆல்கெழுகடவுள் செல்வ" என்று திருமுருகாற்றுப்படை கூறும். இன்னும் ஆல் கெழு செல்வக்குமரன், மால்மருகன், கொற்றவைசிறுவன், பழயோள் குமரன், மலைமகள் மகன் என்று சங்க நூல்களில் வரக் காண்கிறோம்.

முருகன் திருவுருவம் எவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது? "காஅய் கடவுள் சேய்" என்று கலித் தொகையிலும், "செய்யன், சிவந்த ஆடையன்," "இளஞாயிறு" என்று திருமுருகாற்றுப் படையிலும், "செவ்வேள்," "உடையும் ஒலியலும் செய்யை," "ஞாயிற்றேர் நிறத்தகை நளினத்துப் பிறவியை," "நெடியாய்" என்று பரிபாடலிலும், "தாமரை புரையும் காமர் சேவடிப் பவளத்தன்ன மேனித் திகழ் ஒளிக்குன்றியேய்க்கும் உடுக்கை" என்று குறுந்தொகையிலும் இன்னோரன்னவாறு உரைக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு ஆறுதலைகளும், பன்னிரண்டு கைகளும் உண்டென்பதை "மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத் தோள்" என்றும், "அறுமுகத் தாறிருதோள்" என்றும் கூறுமாற்றால் உணரலாம்.

செவ்வேளின் கொடி, ஊர்தி, படை முதலியவைகளான சேவல், மயில், ஆட்டுக்கிடா, வேல் இவைகளைப் பற்றிப் பழந் தமிழ் நூல்களில் அநேக இடங்களில் வருவது யாவரும் அறிந்ததே. எடுத்துக் காட்டாகச் சில கூறுதும். "சேவலங் கொடியோன்" என்று குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலும், "மணிநிற மஞ்ஞையோங்கிய புட்கொடிப்பிணிமுக மூர்ந்த வெல்போ ரிறைவ," "மா தபுத்த வேலோய்," "குன்றமுடைத்த வொளிர்வேலோய்" என்று பரிபாடலிலும், "மணிமயி லுயரிய மாறு வென்றிப் பிணிமுக வூர்தி

யொண் செய்யோனும்'' என்று புறநானூற்றிலும் வருகின்றன.

குமரக் கடவுளைப் பண்டைத் தமிழர் எவ்வாறு வழிபட்டனர் என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. ஈர ஆடையுடன் பூசனை புரிந்தனர் என்பதைத் திருமுருகாற்றுப்படையில் ''புலராக் காழகம் புலர உடீஇ'' என்ற கூற்றால் அறியலாம். மேலும் அந்நூலிலேயே ''ஆறெழுத்தடக்கிய'' மந்திரம் செபித்தனர் என்றும் காணக்கிடக்கின்றது. ''கறையில் கார்மழை பொங்கியன்ன நறையினறும் புகை நனியமர்ந்தோயே'' என்ற பரிபாடற் பாட்டில் தூபம் போடுவதைக் குறித்திருக்கிறது. இன்னும் மணியடித்தல், பூத்தூவல், பண்பாடல் இவைகள் பண்டைக் காலத்தில் வழிபடு முறைகளாக அறிகிறோம்.

முருகப்பெருமான் திருவருளுக்குப் பாத்திரமாகாதவர் எத்திறத்தினர் என்பதையும், அவரை வேண்டிக் கொள்வதென்ன என்பதையும் கீழ்வரும் பரிபாடல் செய்யுளால் அறிக :—

''செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோருஞ்
சேரா வறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத் தயரி யோரும்
மறுபிறப் பில்லெனு மடவோருஞ் சேரார்
நின்னிழல் அன்னோர் அல்ல தின்னோர்
சேர்வ ராதலின் யாஅமி ரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனு மூன்று
முருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே.''

அதாவது தீயநெஞ்சத்துச் சினமுடையோரும், அறத்தின் கண் சேராத புகழில்லாதவரும், கூடாவொழுக்கத்தால் தவநெறி பிறழ்ந்தவரும், இப்பிறப்பினுகர்ச்சியேயுள்ளது மறுபிறப்பில்லை யென்போரும் முருகன் திருவடி



நீழல் எய்தார்; மற்றையோர் சேர்வர். ஆதலால், அவரை வேண்டிக் கொள்வது யாதெனில் பொன், பொருள், அவைகளால் நுகரப்படும் இன்பம் இவைகளன்று. வீடு பயக்கும் அருளும், அதனையுண்டாக்கச் செய்யும் அன்பும், இவ்விரண்டால் வரும் அறமுமாகிய மூன்றுமே. அப் பரிபாடலிலேயே மற்றோரிடத்து நின்னை யாங்கள் அடுத்து அடுத்து வழிபடுவதன் பயன் மேலும் மேலும் நின்புகழினும் பலவாக அவ்வழிபாடுகள் தாமேயாகுக'' என்று பொருள்படக் கூறியிருத்தலுங் காண்க.

முருகவேள் வழிபாட்டிற்கும், சிவவழிபாட்டிற்கும் பேதம் ஒன்றுமில்லை. இவைகளிரண்டும் ஒன்றுதான். ''சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையும்'', ''மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே'' என்ற திருமுருகாற்றுப் படையடிகட்கு உரையெழுதுங்கால் நச்சினார்க்கினியர், ''தென்னன் பெருந்துறையான் காட்டாதன வெல்லாங் காட்டிச் சிவங் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி,'' ''பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர் விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ'' என்ற திருவாசகப் பகுதிகளை மேற்கோள்களாகக் காட்டியிருக்கின்றனர். ஆதலின் அன்பர்களே! யாம் ஆல்கெழு கடவுட் செல்வனின் அடி பணிந்து உய்வோமாக.

# அறிவியல் நூல் ஆராய்ச்சி

[திரு. நே. த. கிருஷ்ணசாமி]

**ஷா**யிலர் மாத்தியூஸ் எழுதிய 'அறிவியற் கலைகள் மத ஒழுக்கத்தை ஆதரிக்கின்றன' (Science Justifies the Religious Life) என்னும் கட்டுரையின் சாரம் :—

மதஒழுக்கம் என்றால் என்ன? பண்டைநாள் முதல் நாம் அனுசரித்துவரும் பழக்கமே. ஒவ்வொருவருடைய

பிறந்த இடத்திற்கேற்ப அவருடைய வாழ்க்கையில் அவ்வொழுக்கம் தானாகவே வளர்கிறது. நாம் காணவேண்டுவது என்ன? அறிவியற் கலையால் இவ்வொழுக்கம் அதிகரிக்கப்படுகிறதா? இதை நீடித்து நாம் அனுஷ்டிக்கலாமா? என்பவைகளே.

அறிவியல் ஆராய்ச்சியால் கடவுள் இருக்கிறார் என்பதைக் கருவிகள் மூலமாகக் காட்ட முடியுமா? என்று கேட்பதாகச் சிலர் நினைத்தல் கூடாது. மத வளர்ச்சிக்கு அறிவியற் கலை உதவுகிறது. நம்மைச் சுற்றியுள்ள அண்டங்களின் ஆராய்ச்சியும் அவ்வண்டங்களின் சக்திக் கேற்றபடி மனிதவாழ்வு அமைந்திருப்பதையும் உற்றுநோக்கும் போது அறிவியற் கலை எவ்வளவுதூரம் மதஒழுக்கத்துக்குத் துணைபுரிகிறதென்பதை நாம் அறிகிறோம். இதை முற்றும் ஆராய மூன்று பிரிவாகப் பிரித்துக் கொள்ளல் நலம். முதலாவதாகத் தற்போதைய ஆராய்ச்சிகள் கடவுள் நம்பிக்கையற்றவரை எப்படிக் கடவுளிடம் பூரணநம்பிக்கை கொள்ளும்படி மாற்றியதென்பதையறிதல் வேண்டும். இப்போது அறிவியற் கலைகள் எதுபற்றிக் கூறுகின்றன? நமது பூமியைச் சுற்றிக் காற்று பரவியிருக்கிறதென்பது யாவராலும் மறுத்தற்கு முடியாத ஒன்றாகும். அக்காற்றும் பூமியிலிருந்து உயரப்போகப்போக அழுத்தும்சக்தியில்குறைந்து கொண்டே போகிறதென்பதை நாம் பிறர் சொல்லாமலே அறிவோம். எப்படி? சென்ற சில நாட்களுக்கு முன்னர் இமயகிரி பர்வதத்தின் ஓர் உச்சியைக் காணச்சென்ற ஒரு கூட்டத்தவர் பட்டபாடுகள் எத்தனை; பலப்பல. அவற்றிற்குக் காரணமென்ன? போதியகாற்றின்மையே யாகும். பூமியைச் சுற்றிச் சுமார் ஐம்பது மைல் வரையில் காற்று இருப்பதாக ஆராய்ச்சியில் வல்லுநர் கூறுகிறார். ஆகாயம் ஐம்பதுமைல் உயரத்தோடா முடிந்து விடுகிறது? அதற்கப்பாலுள்ள இடைவெளியில் என்ன இருக்கிறது. அப்பாகம் ஆங்கிலத்தில் ஈதர் (Ether) என்று அழைக்கப்படுகிறது. இப்பாகத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர் பலவாறு கூறுகின்றனர்.



உலகத்தில் ஒரு வஸ்துவுக்கு எவ்வாறு எடை உண்டாகிறது? பல அணுக்கள் சேர்ந்ததே ஒரு வஸ்துவாகும். இவற்றில் ஒவ்வோர் அணுவும் பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்படுகிறது. அதனாலேயே வஸ்துவுக்கு எடை ஏற்படுகிறது. இவ்வாறு உள்ள பல அணுக்களும் வெளி சக்தியால் அழுத்தப் படுகின்றன. இது நமது அறிவுக்கும், யோசனைக்கும் எட்டக் கூடியதாகும். இதேயன்றி அறிவியல் நூல் வல்லார் வேறு சில உண்மைகளைக் கூறுகிறார். அவை நமது அறிவுக்கு எட்டாததாலேயே அவை பொய்யென்று கூறலாமா? ஒரு வஸ்துவிலுள்ள பல அணுக்களுள் ஒவ்வொன்றும் இடம் விட்டு இடம்மாறி சுழன்று கொண்டே இருக்கிறதென அவர் கூறுகிறார்; இவ்வணுவும் பல பிரிவுகளாகப் பிரிக்கக் கூடுமெனவும் அந்நுண்ணிய பிரிவுக்கு எலெக்ட்ரான் (Electron) என்றும் கூறப்படுகிறது. அவைகளுக்குள்ளும் ஒருவித சுழற்சி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு நமது சாதாரண அறிவுக் கெட்டாவகையில் உலகில் பல நிகழ்ச்சிகள் இயற்கையாக இருக்கின்றன. அதனால் நமது கண்களுக்குத் தோன்றும் பொருள்களைக் கண்டே இவைகளைப் படைக்க ஓர் ஆண்டவன் வேண்டுவதில்லையென்று கூறல் பொருந்தாததாகும். இவைகளையெல்லாம் இயக்கும் சக்தி ஒன்று இருக்கிறதென்பதை எவரும் மறுத்தல் முடியாது. அச்சக்தியைப் பலர் பலபெயரால் வழங்கலாம். அதுபற்றி ஒரு விதத் தடையும் இல்லை.

இரண்டாவதாக வானசாஸ்திரத்தைப் பார்ப்போம். நமது பூமி சூரியனைச் சுற்றிவருகிறது. சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது. இதர கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இது நமது சூரியனைப்பற்றிய சரித்திரமாகும். நமது கண்ணுக்குத் தெரியும் ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு சூரியர். அந்தந்தந்த சூரியருக்குத் தனித் தனியே மண்டலங்கள் உண்டு. இவ்வாறு கோடிக் கோடிக் கணக்காக இருக்கும் நக்ஷத்திரங்கள் கோடிக் கோடிக் கணக்கான சூரிய மண்டலங்களாகும். இச்சூரிய மண்டலங்களும் ஒன்றோடொன்று சுழன்று கொண்டிருக்கின்றன. அதுவல்லாமல் இவையனைத்தும்

ஒன்று சேர்ந்து ஆகாயவழியே ஒரு குறித்ததிசை நோக்கிப் பிரயாணம் செய்கின்றன. பெரிய அண்டத்திலிருந்து அணுவின் சிறிய பாகமாகிய நியூக்ஸியஸ்வரையில் சுழற்சியே இருந்துவருகிறது.

மூன்றாவதாக அறிவியல் சாஸ்திரத்தில் நாம் என்ன உண்மைகளைக் காண்கிறோம் என்பதைக் கவனித்தல் அவசியமாகும். நாம் எங்கும் சட்டத்தையும் வரம்பையுமே காண்கிறோம். ஒரு கட்டுப்பாட்டுக் கடங்கியே எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இக்கட்டுப்பாடு சிறிய வஸ்துவிலிருந்து பெரிய அண்டம் வரை நிகழ்கிறது. ஆதலின் 'நெபுலா'வின் (Nebulae) அமைப்பிலிருந்து இவ்வண்ட சராசர இயக்கத்தையும், பாறைகளின் வளர்ச்சியைக் கொண்டு நமது பூமியின் சரித்திரத்தையும் கூறிவிடலாம்.

இறுதியாக நாம் அறியவேண்டுவது என்ன? கடவுளை மதத்தத்துவ நூல்களில் மட்டும் நாம் காண்கின்றோமில்லை. அறிவியல் நூல் வல்லார் இவ்வண்டப் பொருள்கள் ஒவ்வொன்றிலும் கடவுளின் அம்சத்தையும், ஆணையையும் காண்கிறார். இக் கண்கொண்டு கடவுளை நோக்கும் ஒருவன் கடவுளை எங்குங் காண்கிறான். இந்நோக்கோடேயே ஆன்றோர் கடவுள் எங்கும் இருக்கிறார் எனக்கூறினர்.

முடிவாக அறிவியல் நூல் ஆராய்ச்சி மதத்தின் உண்மைகளை உறுதிப் படுத்துகிறதென்பதோடமையாது, அக்கண் கொண்டு பார்க்கும் போதே கடவுளின் முழுத் தோற்றத்தையும் நாம் காணக்கூடுமென்று கூறுவது சாலச் சிறந்ததாகும்.



முத்தியில் ஆன்மா நின்றனுபவிக்குமென்பதற்குப் பிரமாணம் உண்மை விளக்கத்தில்,

"முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவணு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடன் கண்டுகொளப் பா" [51]

என்றும், சித்தியாரில், "உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்குமுரித்தே" [xi, 10] என்றுஞ் சொன்னது இப்பொருளைப் பற்றியெனவறிக.

தன்னது போ னந்தப் பெருங்கட லதனு ளாரா வின்ப மளித்து என்றதற்கு அருட் சமுத்திரத்திலே விளையப்பட்ட இன்பத்தை எனக்குக் கடாட்சித்து அருளி என்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் ஏதென்னில் சித்தியாரில்,

"சித்தாந்தத் தேசிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து" [viii, 16]

என்பது கண்டுகொள்க.

உள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற வள்ளன்மை காட்டி என்றதற்குச் சிவன் உள்ளும் புறம்பும் நிறைந்து நிற்பனென்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் திருவாசகத்திலே,

"உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த யோகமே"
[பிடித்தபத்து, 1]

என்பது கண்டுகொள்க.

இனி, மலரடி யருளிய மன்ன னெங்கோன் என்றதற்குத் தாமரை மலர் போன்ற சீபாதத்தைக் கடாட்சித்தருளினவனென்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் [திருவாசகம்] திருவெம்பாவையில்,

"செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை" [17]

என்பது கண்டுகொள்க.

இனி, அருளா லயத்தன் என்பதற்கு அருளே கோயிலாக எழுந்தருளியிருக்கப்பட்டவனென்று பொருள் கூறியதேதென்னில்,சிவன்

தனதருளாகிய சத்தி யுடம்பாக எழுந்தருளி யிருக்கையாலென் வறிக. இதற்குப் பிரமாணம் திருவாசகத்தில்,

"உடையா ணடுவு ணீயிருத்தி" [கோயின்மூத்த திருப்பதிகம், 1]

என்றும்,

"முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்குந்தான் முளையா னன்றே"
[சித்தியார், i. 68]

என்றும், சிவப்பிரகாசத்தில்

"நீடுபரா சத்திநிக ழிச்சா ஞான
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி" [i, 2]

என்றும், சித்தியாரில் "காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்" [i 41] என்றும் வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க.

இனி, மல முதலாயின மாய்க்கு மென்றதற்கு ஆணவமல முதலாயின வெல்லாத்தையும் சேதனம் பண்ணினவனென்று பொருள் கூறிய தேதென்னில், அந்த ஆணவ மலமானது மற்றுள்ள மலங்களெல்லாத்தினும் பிரதானமா யிருக்கையினாலென அறிக. இதற்குப் பிரமாணம் போற்றிப்பஃறொடையில்,

"முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை" [124]

என்பதும், தத்துவ விளக்கத்தில்,

"கதிதரு காழிமன் காட்டுமெய்ப் பாசங்கள் மூன்றவைதாம்
பொதிதரு மாணவம் போகஞ்செய் கன்மமு மாயையுமா
முதியது தானொன்று முன்பினில் லாதது சேதனங்க
ணதிக மறைப்பன வாயிர கோடி விருத்திகளே" [19]

என்பதுங் கண்டுகொள்க.

இனி, உலகவுயிர்களுக் கெல்லா மொருகண்ணே என்றதற்கு சர்வான்மாக்களுக்கும் ஓர் அறிவாக நின்று அறிவிக்கிறவ னென்றதேதென்னில் ஆதித்த னொன்றா யிருந்தும் பல கண்களுக்குங் காட்டாக நின்றதுபோல வென்றறிக. இதற்குப் பிரமாணம் சித்தியாரில், "கண்கட், கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்" [v, 9] என்பது கண்டுகொள்க.



இங்ஙனம் வியாக்கியை செய்யப்பட்ட இந்த இருபாவிருபதென்னும் நூலுக்குச் செய்யுட்கள்தோறும் ஆசாரியரைச் சீஷன் கேட்க
வினவுக்கு விடையமாக ஆசாரியர் அருளிச் செய்யப்பட்ட சொற்களை யெல்லாம் மீளவுஞ் சீஷன் மறுத்த மொழியாக வருகையால்
ஆசாரியர் அருளிச்செய்த பொருள்களெல்லாங் கீழ்ப்பட்டுச் சீஷன்
சொல்லே மேற்பட்டு வருமதைப் பொருளெனக் கொள்வாருமுளர்.
அது சித்தாந்தப் பொருளுக்கு விரோதமாமென வறிக. அப்படி
யானால் வேறு பொருள் கொள்ளும் வழி எங்ஙனே யென்னில்
ஆசாரியர் அருளிச் செய்ததெல்லாஞ் சத்தியப் பொருளாகவும் சீஷன்
மறுத்ததெல்லாம் அசத்தியமாகவுங் கொள்ளுகையே வழக்கென
அறிக. அப்படிப் பொருள்கொள்ளுமிடத்து மற்றுமுண்டான நூல்
களை ஓதியறிந்து குருமுகாந்தரமாகக் கேட்டறிந்து சம்பிரதாயம்
வந்த சித்தாந்திகளுக் கொழியத் தற்போதங் கொண்டறிவார்க்கு அறி
யப்படாததென வறிக. அப்படி ஆசாரியர் சொற் சத்தியமுஞ் சீஷன்
சொல் அசத்தியமுமாமென் னுங் கருத்தைப்பற்றி இந்நூலுக்கு வியாக்
கியை யெழுதினது ஏதென்னில் 'கண்ணகன்' ஞாலத்து என்னும்
முதலகவலிலே 'சீறியருளல் சிறுமையுடைத்தா'லென்று சீஷன் கூறி
யதற்கு உத்தரமாக ஆசாரியர் அறியாது கூறினை அபக்குவபக்குவக்
குறிபார்த்தருளினங் குருமுதலா யென்ற பதத்துக்குப் பொருள் நாம்
சொன்ன அர்த்தங்களை நீ மாறுபாடாகக் கொள்ளுகையாலே நாம்
கோபித்துக்கொண்டோமென்று ஆசாரியர் திருவுளம் பற்றுகை
[கூறியதாகப் பொருட்படுத்தினதும் இப்பொருள் பற்றியென்றறிக.
ஆகை]யாலே ஆசாரியர் திருவுளம்பற்றினதே சத்தியம் அந்த ஆசாரி
யர் வாக்கியத்திற்குச் சாத்திர சம்மதி யெழுதினதினாலும் ஆசாரியர்
திருவுளம் பற்றினது சத்திய மென்கிறதைக் குருமுகாந்தரமாகக்
கேட்டு அனுபவத்தாற் கண்டுகொள்க.

இனி, இந்த வியாக்கியையும் இந்தச் சாத்திரத்திலுள்ள வினா
விடையத்துக்குச் சாத்திர சம்மதியும் திருவாவடுதுறை நமசிவாய
பண்டார மரபிலே வேலப்ப பண்டாரத்தின் சீஷன் நமச்சிவாயத்
தம்பிரான் [எழுதியது]. அம்பலவாணன் திருவடி வாழ்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## திருவதிகை-மனவாசகங்கடந்தார்

அருளிச்செய்த

# உண்மை விளக்கம்

# மூலமும் உரையும்*

### காப்பு

வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மை விளக்கம் உரைசெய்யத்—திண்மதம்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம்.

(உரை) வண்மை...உரைசெய்ய—வளப்பத்தைத்தருகின்ற ஆகம நூலிலே பரமேசுவரன் அருளிச்செய்துவைத்த பதிபசுபாசங்களாகிய முப்பொருளின் உண்மைவழுவாமல் இவ்வுண்மைவிளக்கநூலிலே விளக்குதற்பொருட்டும்,—பந்தம்அற - பாசங்கள் நீங்குதற்பொருட்டும்,—திண்மதம்...ஐங்கரனை - செக்கர்வானம்போன்ற திருமேனியினையும், யானைமுகத்தினையும், தொந்திவயிற்றினையும், ஐந்து கரங்களையுமுடைய விநாயகக்கடவுளை,—புந்தியுள் வைப்பாம் - சித்தத்தில் வைத்துத் தியானஞ் செய்வாம்.

### நூல்

போய்காட்டிப் பொய்யகற்றிப் போதாநந் தப்பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய் விண்ணப்பம்—பொய்காட்டா

*குறிப்பு :—இந்நூலாசிரியர் மெய்கண்டதேவருடைய மாணாக்கருள் ஒருவர். இவரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைத்தில. இந்நூலுக்கு இப்பதவுரையும் வேறொரு பொழிப்புரையும் உண்டு. உரையாசிரியர்கள் பெயர் பிரதிகளில் துலங்கவில்லை.



மெய்யா திருவெண்ணெய் வித்தகா சுத்தவினு
ஐயாநீ தான்கேட் டருள். ௧

(உரை) பொய் காட்டி...மெய்கண்டாய் - பக்குவர்க்குத் தேகாதிப் பிரபஞ்சத்தைப் பொய்யென விளக்கி, அப்பொய்யை நீக்கி, அறிவிலே ஆநந்தசொரூபமாயிருக்கிற உண்மையை விளக்கும் மெய்கண்டநாதனே,—பொய்காட்டா...வித்தகா - அபக்குவர்க்குப் பொய்யைவிளக்காத சத்தியத்தை யுடையவனே, திருவெண்ணெய்நல்லூரிலே எழுந்தருளியிருக்கின்ற ஞானாசாரியனே,—ஐயா-ஐயனே,—சுத்தவினு விண்ணப்பம் நீதான் கேட்டருள் - அடியேனது சுத்தவினுவாகிய விண்ணப்பத்தினை நீ திருச்செவி சாத்தியருளவேண்டும்.

ஆறாறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாறா வினையேது மற்றிவற்றின்—வேறாகா
நானேது நீயேது நாதன்நடம் அஞ்செழுத்துத்
தானேது தேசிகனே சாற்று. ௨

(உரை) ஆறாறு தத்துவம்ஏது - முப்பத்தாறு தத்துவம்யாது,—அன்றேதான் மாறா ஆணவம் ஏது - அநாதியேவிட்டுநீங்காத ஆணவமலம்யாது,—வினை ஏது - வினையாது,—மற்று இவற்றின் வேறாகா நான் ஏது - இம்மலங்களுக்கு வேறாகாமல் ஒன்றுபட்டிருக்கும் என்னுடைய சொரூபம்யாது,—நீ ஏது - உன்னுடைய சொரூபம் யாது,—நாதன் நடம் (ஏது) - பரமேசுவரனுடைய திருநடம்யாது,—அஞ்செழுத்துத் தான் ஏது - பஞ்சாக்கரத்தின் உண்மையாது,—தேசிகனே சாற்று - குருமூர்த்தியே நீ அருளவேண்டும். ௨

உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்றனக்கு
வள்ளல்அரு ளால்அன்று வாய்மலர்ந்து—தெள்ளியசீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆநந்த
யோக நிகழ்புதல்வா உற்று. ௩

(உரை) ஆநந்தயோகம் நிகழ்புதல்வா - விளங்குகின்ற ஆநந்தயோகத்திலே (அடங்கிநிற்கும்) மாணவகனே,—வள்ளல் அருளால் அன்று வாய்மலர்ந்து சொன்ன சீர் ஆகமங்கள் உள்ளபடி தெள்ளிய அடைவிலே - பரமசிவன் கருணையினாலே அநாதியே திருவாய்மலர்ந்தருளிய சிறந்த ஆகமங்களிலே யுள்ளபடி செவ்வியமுறையாக,—உன்

றனக்கு - உனக்கு,—இத்தை உரைக்க உற்றுக்கேள் - இதனையாஞ் சொல்ல நீ நன்குகேட்பாய். ௩

நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி
ஏற்கும்அனல் முக்கோணம் எப்போதும்—ஆர்க்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாய மாம்இவற்ருல் உற்று. ௪

**(உரை)** பூமி நாற்கோணம் - பிருதிவியானது நாலுகோணமாயிருக்கும்,—புனல் மதியின்பாதி நண்ணும் - அப்புவானது அர்த்த சந்திரனைப் போன்றதாயிருக்கும்,—அனல் முக்கோணம் ஏற்கும் - தேயுவானது மூன்றுகோணமாயிருக்கும்,—கால் எப்போதும் அறுகோணம் ஆர்க்கும் - வாயுவானது எக்காலமும் அறுகோணமாயிருக்கும்,—ஆகாயம் வட்டம் - ஆகாயமானது வட்டமாயிருக்கும்,—ஆன்மா உற்றுஉறு காயம் இவற்ருல்ஆம் - ஆன்மாவுக்குப் பரிணமமாய்ப் பொருந்துவதால் சரீரம் இத்தூல பஞ்சபூதங்களினின்றும் உண்டாம்.

பொன்பார் புனல்வெண்மை பொங்கும்அனல் சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம்—என்பார்
எழுத்து லவரயஅப் பாராதிக் கென்றும்
அழுத்தமதாய் நிற்கும் அது. ௫

**(உரை)** பார்பொன்-பிருதிவியானது பொன்னிறமாயிருக்கும்,—புனல்வெண்மை-அப்புவானது வெள்ளைநிறமாயிருக்கும்,—பொங்கும் அனல் சிவப்பு - மிகுகின்ற தேயுவானது சிவந்தநிறமாய் நிற்கும்,—வன்கால் கருமை - வலிய வாயுவானது கருமைநிறமா யிருக்கும்,—வளர் வான்தூமம் - மிகுந்த ஆகாயமானது புகைநிறமா யிருக்கும்,—என்பார் - என்று பெரியோர் சொல்லுவார்,—பாராதிக்கு ல வ ர ய அ எழுத்து - பிருதிவி முதலியவற்றிற்கு (முறையே) லகாரமும் வகாரமும் ரகாரமும் யகாரமும் அகாரமும் ஆகிய எழுத்து,—என்றும் அழுத்தமதாய் நிற்குமது - எப்போதும் பலமாய்ப்பொருந்தி நிற்கும். ௫

குறிகுலிசம் கோகநதம் கொள்சுவத்தி குன்ற
அறுபுள்ளி ஆரமுத விந்துப்—பிறிவின்றி
மண்புனல்தீக் கால்வானம் மன்னும்அடை வேயென்(று)
ஒண்புதல்வா ஆகமம் ஓதும்.



**(உரை)** ஒண் புதல்வா - நல்ல மாணவகனே,—மண் புனல் தீ கால்வானம்-பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் ஆகிய இவற்றிற்கு,—அடைவே - முறையே,—குறி குலிசம் கோகநதம் கொள் சுவத்தி குன்ற அறுபுள்ளி ஆர் அமுத விந்து - அடையாளம் வச்சிரமும் தாமரைப்பூவும் பொருந்திய சுவத்திகமும் குறையாத அறுபுள்ளியும் பொருந்திய அமுத விந்துவும்,—பிறிவின்றி மன்னும் என்று ஆகமம் ஓதும் - நீங்காது நிலைபெறுமென்று சிவாகமஞ் செப்பும். ௬

பாராதி ஐந்துக்கும் பன்னும்அதி தெய்வங்கள்
ஆரார் அயனாதி ஐவராம்—ஓரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்கால் தோற்றமுதல் ஐந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார். ௭

**(உரை)** பாராதி ஐந்துக்கும் பன்னும் அதிதெய்வங்கள் ஆர் ஆர் - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் ஐந்துக்குஞ் சொல்லப்பட்ட அதி தேவதைகள் பொருந்திய யாவர் எனின்,—அயனாதி ஐவராம் - (முறையே) பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரரும் மகேசுவரரும் சதாசிவரும் என ஐந்து பேராம்,—சொல்லுங்கால் அவர்க்கு ஓரோர் தொழில் - சொல்லுமிடத்து அவருக்கு ஒவ்வொரு தொழிலேயாம்,—தோற்ற முதல் ஐந்தும் பழுது அறவே பண்ணுவர் காண் பார்-(அவர்) சிருஷ்டி திதி சங்காரந் திரோபவம் அநுக்கிரகமாகிய ஐந்தும் குற்றமறச் செய்வார்களென்று அறிவாயாக. ௭

படைப்பன் அயன்அளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்பன் உருத்திரனும் சொல்லில்—திடப்பெறவே
என்றுந் திரோபவிப்பர் ஈசர் சதாசிவரும்
அன்றே அநுக்கிரக ராம். ௮

**(உரை)** அயன் படைப்பன் - பிரமா சிருஷ்டிப்பன்,—பங்கயக் கண்மாயன் அளிப்பன் - செந்தாமரை மலர்போலுங் கண்ணையுடைய விஷ்ணு இரக்ஷிப்பன்,—சொல்லில் உருத்திரனுந் துடைப்பன் - சொல்லுமிடத்து உருத்திரமூர்த்தி சங்கரிப்பர்,—திடப்பெறவே ஈசர் என்றுந் திரோபவிப்பர் - நிச்சயமாக மகேசுவரமூர்த்தி எக்காலமுந் திரோபவம் பண்ணுவர்,—அன்றே சதாசிவரும் அநுக்கிரகராம் - அநாதிதொடங்கிச் சதாசிவமூர்த்தி அநுக்கிரகம் பண்ணுபவராம். ௮

மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமாம்
ஒண்கனல்சுட் டொன்றுவிக்கும் ஓவாமல்—வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கில் ஆகாயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து. ௯

**(உரை)** மண் கடினமாய்த் தரிக்கும் - பிருதிவியானது விடயங்களிலே கடினகுணத்தைக் கொடுத்துக்கொண்டு நிற்கும்,—வாரி குளிர்ந்தே பதமாம் - அப்புவானது விடயங்களிலே நெகிழ்ந்த குணத்தைக் கொடுத்துக்கொண்டு நிற்கும்,—ஒண்கனல் சுட்டொன்றுவிக்கும் - ஒள்ளிய தேயுவானது விடயங்களிலே சுட்டொன்றுதலைப் பண்ணிக்கொண்டு நிற்கும்,—வண் கால் ஓவாமற் பரந்து சலித்துத் திரட்டும் - வளப்பத்தையுடைய வாயுவானது நீங்காது பரந்து சலித்து விடயங்களைத் திரட்டும்,—பார்க்கில் ஆகாயம் நிரந்தரமாய் நிறைந்து நிற்கும் - விசாரிக்குமிடத்து ஆகாயம் நிரந்தரமாய் நிறைந்து விடயங்களுக்கெல்லாம் இடங்கொடுத்துக்கொண்டு நிற்கும். ௯

உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்றனக்குக்
கள்ளமிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில்—மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே யாம். ௧௦

**(உரை)** உன்றனக்கு உள்ளபடி மா பூதம் ஓதினோம் - உனக்கு உண்மையாகப் பஞ்சமகா பூதங்களுஞ் சொன்னோம்,—கள்ளமிகும் ஐம்புலனும் மெள்ளவே கட்டுரைக்கில் - கள்ளமிகுந்த பஞ்சவிடயங் களை மெல்லச் சொல்லுமிடத்து, ஓசை பரிசம் உருவஞ் சுவை நாற்றம் ஆசை தரும் ஐம்புலனேயாம் - சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் ஆகிய இவை ஆசையைத் தருகின்ற அவ்வைம்புலன்களாம். ௧௦

ஞானேந் திரியங்கள் நன்றா உரைக்கக்கேள்
ஊன மிகுபூதம் உற்றிடமா—ஈனமாம்
சத்தாதி யைஅறியும் தானம் செவிதோல்கண்
அத்தாலும் மூக்கென் றறி. ௧௧

**(உரை)** ஞானேந்திரியங்கள் நன்றா உரைக்கக்கேள் - ஞானே திரியங்களை நன்றாகச் சொல்லுகிறோங்கேள்,—ஊனம் உற்று மிகு பூதம் இடமா - குறைவு பொருந்தி மிகுகின்ற பஞ்சபூதங்களிடமா ன்று,—ஈனமாஞ் சத்தாதியை அறியும் - (அவை) தாழ்வாகிய சத் ாதி விடயங்களை அறியும்,—தானம் செவிதோல் கண் அத்தாலு மூக்கென்று அறி - (அவற்றிற்குத்) தானம் சுரோத்திரம் துவக்கு ட்சு அந்தச்சிகுவை ஆக்கிராணமென்று அறிவாய். ௧௧

வானிடமா நின்றுசெவி மன்னும் ஒலியதனை
ஈனமிகுந் தோல்கால் இடமாக—ஊனப்
பரிசம் தனைஅறியும் பார்வையிற்கண் அங்கி
விரவிஉரு வங்காணு மே. ௧௨

**(உரை)** வானிடமா நின்று செவி மன்னும் ஒலியதனை (அறி யும்)—ஆகாயத்தினிடமாக நின்று சுரோத்திரம் பொருந்திய சத்தத் தை யறியும்,—காலிடமாக (நின்று) ஈனமிகுந் தோல் ஊனப் பரிசந்தனை அறியும்—வாயுவினிடமாக நின்று ஈனத்துவமிக்க தொக்கு குறைவுடைய பரிசத்தையறியும்,—அங்கி விரவிப் பார்வை யிற்கண் உருவங்காணுமே - தேயுவினிடமாக நின்று பார்வையினை யுடைய சட்சு உருவத்தை யறியும். ௧௨

நன்றாக நீரிடமா நாஇரதந் தான்அறியும்
பொன்றா மணம்மூக்குப் பூவிடமா—நின்றறியும்
என்றோது மன்றே இறைஆ கமம்இதனை
வென்றார்சென் றாரின்ப வீடு. ௧௩

**(உரை)** நன்றாக நீரிடமா (நின்று) நா இரதந்தான் அறியும் - நன்மையாக அப்புவினிடமாக நின்று சிகுவை இரசத்தையறியும், —பொன்றாப் பூவிடமா நின்று மூக்கு மணம் அறியும் - கெடாத பிருதிவியினிடமாகநின்று ஆக்கிராணங் கந்தத்தையறியும்,—என்று இறை ஆகமம் அன்றே ஓதும் - என்று சிவாகமங்களிலே அநாதியே சொல்லும்,—இதனை வென்றார் இன்பவீடு சென்றார் - இந்தப் பஞ் சேந்திரியங்களை நிக்கிரகம் பண்ணினவர்களே ஆனந்த வீட்டினை அடைந்தார். ௧௩

கண்ணுதல்நூ லோதியிடும் கன்மேந் திரியங்கள்
எண்ணும்வச னாதிக் கிடமாக—நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னு குதம்உபத்த
மாக்கருது நாளு மது. ௧௪

**(உரை)** வாக்குப் பாதம் பாணி மன்னு குதம் உபத்தமாக்கருதும் கன்மேந்திரியங்கள். வாக்குப் பாதம் பாணி பொருந்திய பாயு உபத்தமாகக் கருதுகின்ற கன்மேந்திரியங்கள் ஐந்தும்,—எண்ணும் வசனாதிக்கு இடமாக நாளுமது நண்ணியிடும் - மதிக்கின்ற வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆனந்தமுமாகி யவற்றிற்கு இடமாக நாடோறும் பொருந்தும் என்று,—கண்ணுதல்நூல் ஓதியிடும் - சிவாகமம் செப்பும். ௧௪

வாக்காகா யம்இடமா வந்துவச னிக்குங்கால்
போக்காரும் காற்றிடமாப் புல்கிஅனல்—ஏற்கும்
இடுங்கை குதநீ ரிடமா மலாதி
விடும்பா ரிடம்உபத்தம் விந்து. ௧௫

**(உரை)** ஆகாயம் இடமா வாக்கு வந்து வசனிக்கும் - ஆகாயமிடமாக நின்று வாக்குப்பொருந்தி வார்த்தை சொல்லும்.—காற்று இடமாக் கால் போக்கு ஆரும் - வாயுவினிடமாக நின்று பாதம் கமனஞ் செய்யும்,—அனல் புல்கி கை இடும் ஏற்கும் - தேயுவினிடமாக நின்று பாணி இடுதல் ஏற்றல் செய்யும்,—நீரிடமாக் குதம் மலாதி விடும் - அப்புவினிடமாக நின்று பாயுமலசலங்களைப் பிரித்தல் செய்யும்,—பாரிடம் உபத்தம் விந்து (விடும்) - பிருதிவியினிடமாக நின்று உபத்தம் விந்துவை விடுத்து ஆனந்தஞ் செய்விக்கும். ௧௫

அந்தக் கரணம் அடைவே உரைக்கக்கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம்—சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்தங்
குற்றது சிந்திக்கும் உணர். ௧௬

**(உரை)** அந்தக்கரணம் அடைவே உரைக்கக்கேள் - அந்தக்கரணங்களை முறையே சொல்லக்கேள்,—அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் சிந்தை இவை - அம்மனமும் புத்தியும் அகங்காரமும் சித்தமுமாகிய இவையாம்,—பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து அங்கு உற்றது சிந்திக்கும் உணர் - (அவற்றுள் மனம்) பற்றியதனை (ப்புத்தி) நிச்சயித்து (அகங்காரமும்) பலமுறை (அபிமானித்து) எழுந்து (சித்தம்) அங்கே யுற்றதனைச் சிந்திக்குமென்று அறிவாய். ௧௬



ஓதியிடும் நாலாறும் உற்றான்ம தத்துவமென்(று)
ஆதி அருள்நூல் அறையுங்காண்—நீதறவே
வித்தியா தத்துவங்கள் தம்மை விளம்பக்கேள்
உத்தமனே நன்றா உனக்கு. ௧௭

**(உரை)** ஓதியிடும்...அறையுங்காண் - சொல்லப்பெற்ற இருபத்து நாலும் பொருந்தி ஆன்ம தத்துவமாமென்று சிவாகமநூல் சொல்லும்,—உத்தமனே வித்தியாதத்துவங்கள் தம்மை உனக்கு தீது அறவே நன்றா விளம்பக்கேள் - உத்தம மாணாக்கனே! வித்தியாதத்துவங்களை உனக்குக் குற்றமற நன்றாகச் சொல்லக்கேளாய். ௧௭

காலம் நியதி கருதும் கலைவித்தை
ஏலஇரா கம்புருட னேமாயை—மால்அறவே
சொன்னோம் அடைவாகச் சொன்னஇவை தன்னுண்மை
உன்னி உரைக்கும்நாம் உற்று. ௧௮

**(உரை)** காலம்...மாயை-காலமும் நியதியும் கருதுகின்ற கலையும் வித்தையும் பொருந்த இராகமும் புருடனும் மாயையுமாம்,—மால் அறவே அடைவாகச் சொன்னோம் - (இவற்றை) மயக்கமற முறையாக (உனக்கு)ச் சொன்னோம்,—சொன்ன இவைதன் உண்மை உற்று உன்னி நாம் உரைக்கும் - கூறிய இவற்றின் உண்மையை உற்றுநோக்கி (இனி) நாம் சொல்லுவோம். ௧௮

எல்லை பலம்புதுமை எப்போதும் நிச்சயித்தல்
அல்லல் தருங்கிரியை ஆன்மாவுக்(கு)—ஒல்லை
அறிவாசை ஐம்புலனும் ஆரவருங் காலம்
குறியாய் மயக்கென்று கொள். ௧௯

**(உரை)** எல்லை பலம் புதுமை - காலதத்துவமானது கழிகாலத்தெல்லையையும் நிகழ்காலத்துப் பலத்தையும் எதிர்காலத்துப் புதுமையையும் பொருத்துவிக்கும்,—எப்போதும் நிச்சயித்தல் - நியதிதத்துவமானது எந்தக்காலமும் கன்மத்தை இவ்வளவென்று நிச்சயம் பண்ணி நிறுத்தும்,—அல்லல் தருங் கிரியை - கலையானது ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குக் கிரியையை யெழுப்பும்,—ஆன்மாவுக்கு ஒல்லை அறிவு - வித்தியா தத்துவமானது ஆன்மாவுக்குச் சீக்கிரத்திலே அறிவை யெழுப்பும்,—ஆசை - இராகதத்துவமானது

பெற்ற பதார்த்தங்களைச் சிறிதாக்கிப் பெறுதலிலே இச்சையை யுண்டாக்கும், இப்படியெல்லாம் ஆயுருங் காலம் - ஆன்மா பஞ்சேந்திரிய விஷயங்களைச் சகாலமில்லாமல் புசிக்க வருகின்ற அவகாரத்தில் புருட தத்துவமானது அவ்விஷயத்திலே பழக்குவிக்கும்,—குறியாய் மயக்கஞ் செய்ய மோகமானது ஒன்றை நினைக்கவொட்டாமல் மயக்கஞ்செய்யுமென்றறிவாயாக. க௯

வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்
சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள்—நித்தமாம்
சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவந்தற்
சத்திசிவங் காணவைகள் தாம். உ0

(உரை) வித்தியா........கேள் - வித்தியாதத்துவங்கள் ஏழுஞ் சொன்னோம் சுத்தமாயிருக்கிற சிவதத்துவங்கள் ஐந்தையுஞ் சொல்லுகிறோம் கேள்,—நித்தமாம்...தாம் - அவை நித்தியமாயிருக்கிற சுத்த வித்தை ஈசுரம் பின்கூறும் சாதாக்கியம் நன்மையாகிய சத்தி சிவம் என்றறிவாயாக. உ0

சுத்தவித்தை ஞானமிகும் தொன்மையாம் ஈசுரந்தான்
அத்தன் தொழில் அதிகம் ஆக்கியிடும்—ஒத்தல்இவை
சாதாக்கியமென்றும் சத்தி சிவங்கிரியை
ஆதார ஞானஉருவாம். உக

(உரை) சுத்தவித்தை.........ஆக்கியிடும் - சுத்தவித்தை ஞான மேலிட்டுக் கிரியை குறைந்திருக்கும், பழைமையாகிய ஈசுவரதத்துவ மானது சிடன் ஞானங் குறைந்து கிரியைமேலிட்டிருக்கும்,—சாதாக்கியம் இவை ஒத்தல் - சாதாக்கிய தத்துவம் ஞானமுங்கிரியையும் ஒத்திருக்கும்,—என்றும் சத்தி கிரியை சிவம் ஆதார ஞானவுருவாம் - எப்போதும் சத்தி தத்துவம் கிரியையாயிருக்கும் சிவதத்துவம் ஆதாரஞானமாயிருக்கும். உக

ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக
மாறா மலமிரண்டும் வாசொல்லக்—கூறில்
அறியாமை ஆணவம்நீ யானசுக துக்கம்
குறியா வினையென்று கொள். உஉ



(உரை) ஆறாறு தத்துவமும் அடைவாகச் சொன்னோம் - முப்பத்தாறு தத்துவங்களையும் முறையாகச்சொன்னோம்,—மாறா மலம் இரண்டும் சொல்லவா - விட்டுநீங்காமலிருக்கின்ற ஆணவமலத்தையும் கன்மமலத்தையும் சொல்லுகிறோங்கேள்,—கூறில் அறியாமை ஆணவம் - சொல்லுமிடத்து அறியாமையைப் பண்ணிக்கொண்டு நிற்பது ஆணவமலம்,—சுகதுக்கங் குறியா நீயான வினையென்று கொள் - சுக துக்கமொன்றையும் நினையாமல் நீ தானாயிருப்பது காமே கன்மமல மென்றறிவாயாக. உஉ

ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
மாறா அருளால் வகுத்துரைத்தீர்—வேறாக
என்னை எனக்கறியக் காட்டீர் இவைகண்டேன்
உன்னரிய தேசிகரே உற்று. உங

(உரை) உன்னரிய தேசிகரே - நினைத்தற்கரிய ஆசாரியரே,—ஆறாறுதத்துவமும் - முப்பத்தாறு தத்துவத்தையும்,—ஆணவமும் - ஆணவமலத்தையும்,—வல்வினையும் வலிய கன்மமலத்தையும்,—மாறா அருளால் வகுத்து உரைத்தீர் - விட்டு நீங்காத கிருபையினாலே வகுத்தருளிச்செய்தீர்,—இவை கண்டேன் - இம்மலங்களைத் தரிசித்தேன்,—வேறாக என்னை எனக்கு அறியக்காட்டீர் - (இனி) இந்தமலங்களுக்கு வேறாகாமல் ஒன்றுபட்டிருக்கின்ற என்னுடைய சொரூபத்தையும் அருளிச் செய்யவேண்டும். உங

நன்றா உரைக்கக்கேள் நல்லசித்தின் முன் அசித்திங்(கு)
ஒன்றாது சித்தசித்தை ஓராது—நின்றிவற்றை
அன்றே பகுத்தறிவ தான்மாவே என்றுமறை
குன்றாமல் ஓதுங் குறித்து. உச

(உரை) நன்றா உரைக்கக்கேள் - நீகேட்ட ஆன்மதரிசனத்தை நன்றாகச் சொல்லுகிறோங்கேள்,—நல்லசித்தின் முன் அசித்து இங்கு ஒன்றாது - நல்லசித்தாகிய சிவத்தின்முன்னே அசித்தாகிய பாசம் நில்லாது,—சித்து அசித்தை ஓராது - சித்தாகிய சிவத்துக்கு அசித்தாகிய பாசத்தை அறியவேண்டுவதில்லை,—இவற்றை அன்றே நின்று பகுத்தறிவது ஆன்மாவே - சித்தாகிய சிவத்தையும் அசித்தாகிய பாசத்தையும் அநாதியிலே பொருந்தி விசாரித்தறிவது ஆன்மாவே,

என்று மறை குன்றாமல் குறித்து ஓதும் - என்று சிவாகமங்களிலே குன்றாது சுட்டிச் சொல்லும்.

உச

தத்துவங்கள் ஆறாறும் தம்மைத்தாம் என்றறியா
எத்தன்மை என்னில் இயம்பக்கேள்—சுத்தமாம்
ஆறு சுவையும் அறியாது தன்னைத்தான்
கூறில் அவைஇவைபோற் கொள்.

உரு

(உரை) தத்துவங்கள்......கேள்—முப்பத்தாறு தத்துவங்களும் ஜடமாகையினாலே தம்முடைய சொரூபத்தைத் தாமறியா, எந்த முறைமையென்று கேட்கிறாயானால் சொல்லுகிறோங்கேள்,—சுத்த மாம்...கொள் - சுத்தமாயிருக்கிற அறுவகைச்சுவையுந் தன்னுடைய சொரூபத்தைத் தானறியாது, சொல்லுமிடத்து, முப்பத்தாறு தத்து வங்களுஞ் சுவைகளைப்போலத் தம்முடைய சொரூபத்தைத் தாமறியா.

உரு

ஆறு சுவையும் அருந்தி அவைதம்மை
வேறொருவன் கூறியிடும் மேன்மைபோல்—ஆறாறும்
ஒன்றொன்றா நாடிஉணர்ந் தோதில்அதில் உற்றறிவாய்
நின்றபொருள் தானேகாண் நீ.

உசு

(உரை) ஆறு சுவையும்...மேன்மைபோல் - அறுவகைச் சுவை யும் புசித்துக் கைக்கிறது கார்க்கிறது கூர்க்கிறது துவர்க்கிறது புளிக் கிறது இனிக்கிறதெனக் கண்டுணர்ந்து ஒருவன் சொல்லுகிற முறை மைபோல,—ஆறாறும் ஒன்றொன்றா நாடி உணர்ந்து - முப்பத்தாறு தத்துவங்களையும் ஒன்றொன்றாக விசாரித்தறிந்து,— ஓதில் - சொல்லுமிடத்து,—அதில் உற்று அறிவாய் நின்ற பொருள்தானே காண் நீ - அம்முப்பத்தாறு தத்துவங்களிலும் பொருந்தி அறிந்து வருகிற அறிவுகாண் நீயாகிய ஆன்மா.

உசு

குன்றா அருளாலே கூறினீர் என்வடிவு
பொன்றாத நும்முருவம் போதியீர்—நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமா போலே உனதறிவின்
நண்ணிஅறி வித்திடுவோம் நாம்.

உஎ

(உரை) குன்றா அருளாலே......போதியீர் - கெடாதகிருபை யினாலே அடியேனுடைய சொரூபத்தை அருளிச் செய்தீர், கெடாத



தேவரீருடைய சொரூபத்தையும் அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும்,—நின்று...போலே - ஆதித்தப் பிரகாசமானது கண்ணுக் குப் பதார்த்தங்களைக் காட்டிக்கொண்டு நிற்பதுபோல,—நாம் உனது அறிவின் நண்ணி அறிவித்திடுவோம் - நாம் உனதறிவிலே பொருந்திநின்று அறிவித்து வருவோம்.

உஎ

அன்றியுங்கேள் ஆன்மாவால் ஆய்ந்தறியும் ஐம்பொறிகள்
இன்றி அறியா இவையென்ன—நின்றதுபோல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன்னறிவில்
மேவாமல் மேவினோ மே.

உஅ

(உரை) அன்றியுங் கேள் - அல்லாமலுஞ் சொல்லுகிறோங் கேள்,—ஆன்மாவால் ஆய்ந்தறியும் ஐம்பொறிகள் இன்றி அறியா இவையென்ன - ஆன்மாவினாலே நன்றாக அறிந்து காரியப்பட்டு வருகிற பஞ்சேந்திரியங்களும் ஆன்மாவினாலேயறிந்து காரியப்பட்டு வருகிறோமென்றறியா,—நின்றது போல் - அங்ஙனம் நின்ற பஞ்சேந் திரியங்கள்போல்,—நாமே உன்னறிவில் மேவாமல் மேவி - நாம் உன்னறிவிலே பொருந்தாமற் பொருந்தி நின்று,—ஓவாமல் உன்னை உணர்த்துவோம் - விட்டு நீங்காமல் உனக்கறிவிப்போம் (அதனை நீ அறியாய்)

உஅ

அக்கரங்கட் கெல்லாம் அகரஉயிர் நின்றாற்போல்
மிக்க உயிர்க்குயிராய் மேவினோம்—எக்கண்ணும்
நில்லா இடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமம்ஓதும் நாடு.

உகூ

(உரை) அக்கரங்கட்கெல்லாம் அகரவுயிர் நின்றாற்போல் - ஏனைய எல்லா அக்கரங்கட்கும் அகரமாகிய அக்கரம் உயிராய் நின்றது போல்,—மிக்க உயிர்க்கு உயிராய் மேவினோம் - சர்வான்மாக்களிடத்தி லேயும் அறிவுக் கறிவாய்ப் பொருந்தி நின்றோம்,—எக்கண்ணும் நில்லாவிடத்து உயிர்க்கு அறிவு நில்லாதென்று - சடசித்துக்க ளெல்லாவற்றினும் கர்த்தா நிறைந்து நின்றறிவித்தா லல்லது உயிர் அறியாதென்று,—நல்லாகமம் ஓதும் நாடு - சிவாகமங்களிலேசொல்லு மென்று விசாரித்தறிவாயாக.

உகூ

நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத் தஞ்செழுத்தால
உற்றுருவாய் நின்ருடல் உள்ளபடி—பெற்றிடநான்
விண்ணூர் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணூர் அருளாலே சாற்று. ௩௦

(உரை) நற்றவத்தோர் தாம் காண - நல்ல தவத்தையுடைய ஆன்மாக்கள் தரிசிக்கத் தக்கதாக,—நாதாந்தத்து அஞ்செழுத்தால் உருவாய் உற்று நின்ருடல் - நாதமுடிவிலே சிவபிரான் பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு நிருத்தஞ்செய்கிற முறைமையை,—உள்ளபடி நான் பெற்றிட - உண்மையாக அடியேன் தரிசிக்கத் தக்கதாக,—விண்ணூர் பொழில்வெண்ணெய் மெய்கண்டநாதனே - ஆகாயத்தை அளாவியிருக்கின்ற சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரே திருப்பதியாகக் கொண்டெழுந்தருளியிருக்கிற மெய் கண்ட தேவனே,—தண்ணூர் அருளாலே சாற்று - குளிர்ந்த கிருபை யினூலே அருளல் வேண்டும். ௩௦

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே
அவாயமற நின்ருடு வான். ௩௧

(உரை) எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே நட்டம்-எட்டு மிரண்டு முருவாயிருக்கிற யகாரமாகிய ஆன்மாவினிடத்திலே செய்யும் நடனத்தை,—புதல்வா நவிலக்கேள் - மாணவகனே சொல்லக் கேள்,—சிட்டன் - பரமசிவன்,—சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே அவாயம் அற நின்று ஆடுவான் - சிகாரமாதிபஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு ஆன்மாக்கள் பிறவியறத்தக்கதாக நிருத் தஞ் செய்வன். ௩௧

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். ௩௨

(உரை) ஐயனே நல் அம்பலத்தான் ஆடும் படிகேள் - மாணவகனே பொன்னம்பலமுடையான் நிருத்தஞ்செய்கிற முறைமையைச் சொல்லுகிறேன் கேள்,—நாடுந் திருவடியிலே நகரம் - நாடாநின்ற ஸ்ரீபாதத்திலே நகாரமாகவும்,—கூடும் உதரம் மகரம் - பொருந்தப் பட்ட திருவுந்தியிலே மகாரமாகவும்,—வளர் தோள் சிகரம் - வளரா நின்ற திருத்தோளிலே சிகாரமாகவும்,—பகரு முகம் வா - சொல்லப் பட்ட திருமுகத்திலே வகாரமாகவும்,—முடியப்பார் - திருமுடியிலே யகாரமாகவும் கொண்டருளித் திருநிருத்தஞ் செய்வானென்று விசாரித்தறிவாயாக. ௩௨



சேர்க்கும் துடிசிரகஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். ௩௩

(உரை) ஆர்க்குந் துடி சேர்க்குங் (கரம்) சிகரம் - ஒலிக்கின்ற டமரகமேந்திய ஸ்ரீ அத்தத்திலே சிகாரமாகவும்,—சிக்கனவீசுகரம் வா - நன்ருக வீசிய ஸ்ரீ அத்தத்திலே வகாரமாகவும்,—அபயகரம் யகரம் - அமைத்த ஸ்ரீ அத்தத்திலே யகாரமாகவும்,—பார்க்கில் அங்கி இறைக்கு நகரம் - பார்க்குமிடத்து அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத் திலே நகாரமாகவும்,—முயலகனார் தங்கும் அடிக்கீழ் மகரமதுதான் - முயலகனை மிதித்த ஸ்ரீபாதத்திலே மகாரமாகவும் கொண்டருளித் திருநிருத்தஞ் செய்வானென்றறிவாயாக. ௩௩

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்—ஆங்காரம்
அற்ருர் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்ருர் பிறப்பற்ருர் பின். ௩௪

(உரை) ஓங்காரமே நற்றிருவாசி - பிரணவந்தானே நல்ல திருவாசியாகவும்,—உற்று அதனில் நீங்கா எழுத்தே நிறை சுடராம் - பொருந்தி அப்பிரணவத்தைவிட்டு நீங்காத பஞ்சாக்கரமே நிறைந்த உள்ளொளியாகவும்,—ஆங்காரம் அற்ருர் அறிவர் - யானென தென்னுஞ் செருக்கற்றவர்கள் அறிவார்கள்,—அணி அம்பலத்தான் ஆடல் இது பெற்ருர் பின் பிறப்பு அற்ருர் - அழகிய திருவம்பலத்தான் செய்யும் நிருத்தமாகிய இதனைத் தரிசித்தவர்களே பின்பு சநநமரண மற்றவர்கள். ௩௪

தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. ௩௫

(உரை) துடியதனில் தோற்றம் - டமாகமேந்திய ஸ்ரீ அத்தத்திலே சிருஷ்டியாகவும்,—அமைப்பில் தோயும் திதி - அமைத்த ஸ்ரீ அத்தத்திலே ஆன்மாப் பொருந்தும் இரக்ஷையாகவும்,—சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - சொல்லப்பட்ட அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்திலே மலசங்காரமாகவும்,—ஊற்றமா ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் - உறுதியாக ஊன்றிய மலர்போலும் பொருந்திய ஸ்ரீ பாதத்திலே பிரபஞ்சத்தை மறைக்குந் திரோதமாகவும்,—நான்ற மலர்ப் பதத்தே முத்திநாடு-தூக்கியமலர்போலும் ஸ்ரீ பாதத்திலே அநுக்கிரக முத்தியாகவும் திருக்கூத்துச் செய்வனென்று விசாரித்தறிவாயாக.

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதம் தான். ௩௬

(உரை) மாயைதனை உதறி-டமாகமேந்திய ஸ்ரீ அத்தத்தினாலே மாயையை நீக்கி,—வல்வினையைச் சுட்டு - அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்தினாலே கன்மமலத்தைச் சுட்டு,—மலஞ் சாய அமுக்கி-ஊன்றிய ஸ்ரீ பாதத்தினாலே மலமேலிடாமல் அழுத்தி,—அருள்தான் எடுத்து தூக்கிய பாதத்தினாலே அருளே தனுவாகநிறுத்தி,—நேயத்தால் ஆநந்த வாரிதியில் ஆன்மாவைத்தான் அழுத்தல்தான் - கிருபையினாலே அமைத்த ஸ்ரீ அத்தத்தினாலே ஆநந்தவெள்ளத்திலே ஆன்மாவை அழுத்துவது தான்,—எந்தையார் பாதந்தான் - எம்முடைய பிதாவாகிய பரமேசுவரனுடைய திருக்கூத்து முறைமை- ௩௬

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும்—ஆநந்தம்
மொண்டருந்தி நின்றாடல் காணும்அருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து. ௩௭



(உரை) அந்தமோன மாமுனிவர் மும்மலத்தை மோசித்து - முடிவான மௌனமுடைய ஞானிகள் கர்த்தாவினுடைய கிருபையினாலே மூன்று மலங்களையு நீக்கி,—தான் அந்தமானஇடத்தே தங்கியிடும் - ஆன்மபோத முடிந்தவிடத்திலே உதயமாகும்,—ஆநந்தம் மொண்டு அருந்தி நின்று ஆடல்காணும் - ஆநந்தவெள்ளத்தை முகந்துகொண்டநுபவிப்பதுதான்,—அருள் மூர்த்தியாக்கொண்ட திருவம்பலத்தான்கூத்து - ஆன்மாக்களை இரக்ஷிக்கவேண்டுமென்னும் காருண்ணியமே திருமேனியாகக்கொண்ட திருவம்பலத்தான் திருநிருத்தஞ் செய்யும் முறைமையாம். ௩௭

உரைஉணர்வுக் கெட்டா ஒருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகள்தான் பாதி—பரையிடமாக்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு. ௩௮

(உரை) உரை உணர்வுக் கெட்டா ஒருவன் - மனவாக்குக் காயங்களுக்கெட்டாத ஒப்பற்ற பரமேசுவரன்,—மிகு பஞ்சாக்கரத்தால் கருணை உருக்கொண்டு - மேலான பஞ்சாக்கரத்தினாலும் கருணையினாலும் திருமேனிகொண்டு,—பரை இடமா - பராசத்தியாகிய திருவம்பலமிடமாகநின்று,—பாதி வரைமகடான் காணும்படியே - பாதியாகிய மலையரையன்மகள் காணும்படிக்கு,—ஆடல் பேணுமவர்க்குப் பிறப்பு உண்டோ-திருக்கூத்தை விரும்பினவர்களுக்குப் பின்பு பிறவியில்லையாம். ௩௮

நாதாந்த நாடகத்தை நன்றாய் அருள்செய்தீர்
ஓதீர் எழுத்தஞ்சும் உள்ளபடி—தீதறவே
அஞ்செழுத்தீ தாகில் அழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச அருட்குருவே சாற்று. ௩௯

(உரை) நாதாந்தநாடகத்தை நன்றாய் அருள்செய்தீர்-தத்துவாதீதமாயிருக்கிற திருக்கூத்து முறைமையை நன்றாய் அருள்செய்தீர்; அஞ்செழுத்தீதாகில் அழியுமெழுத்தாய்விடுமோ ஓதீர் - பஞ்சாக்கரமெழுத்துகளிலே யொன்றாயிருக்குமாகில் அழிகிற எழுத்துக்களாமோ, தஞ்ச அருட்குருவே-புகலிடமாயிருக்கிற கிருபையுடைய தேசிகனே, தீதறவே எழுத்தஞ்சும் உள்ளபடிசாற்று - குற்றமற்றபஞ்சாக்கரத்தினுண்மையை யுண்டானபடியே அடியேனுக் கருள்செய்யவேண்டும்.

உற்ற குறிஅழியும் ஓதுங்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது—மற்றதுகேள்
ஈசனருள் ஆவி எழிலார் திரோதமலம்
ஆசில் எழுத் தஞ்சின்அடை வாம். ௪௦

(உரை) ஓதுங்கால் - சொல்லுமிடத்து,—உற்றகுறி அழியும் - பொருந்தப்பட்ட எழுத்துகளுடைய குறிகளழியும்,—பாடைகளிற் பொருள்தான் சற்றுஞ் சலியாது - பதினெண்பாஷைகளிலே உண்டானபொருள்கள் சற்றுங்கெடாது,—மற்றது கேள் - ஆதலால் அப் பஞ்சாக்கரத்தினுண்மையைச் சொல்லுவோங் கேள்,—ஈசன் அருள் ஆவி எழில் ஆர்திரோதம் மலம் ஆசில் அஞ்சு எழுத்தின் அடைவாம் சிவன் அருள் ஆன்மா அழகுபொருந்திய திரோதம் மலம் ஐந்துங் குற்றமில்லாத பஞ்சாக்கரத்தின் பொருண்முறைமையாம். ௪௦

சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம்—இவனின்று
நம்முதலா வோதிலருள் நாடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று. ௪௧

(உரை) சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும் அவன் அஞ்சு எழுத்தின் அடைவாம் - சிவன் அருள் ஆன்மா திரோதம்-மலம் ஐந்தும் பரமேசுவரனுடைய பஞ்சாக்கரத்தின் பொருள் முறைமையாயினும்,—இவன் நின்று - பக்குவப்பட்ட ஆன்மாநின்று,—நம்முதலா ஓதில் அருள் நாடாது - நகாரமுதலாக உச்சரிக்கில் அருள் பொருந்தாது,—சிம்முதலா நீ சென்று ஓது அருள் நாடும் - சிகாரமுதலாக நீ பொருந்தி உச்சரிப்பாயானல் அருள் பொருந்தும்.

அண்ணல் முதலா அழகார் எழுத்தைந்தும்
எண்ணில் இராப்பகலற் றின்பத்தே—நண்ணி
அருளான் அதுசிவத்தே யாக்கும் அணுவை
இருளா னதுதீர இன்று. ௪௨

(உரை) அண்ணல் முதலா அழகார் எழுத்து ஐந்தும் எண்ணில் - சிவமுதலாகச் சொல்லும் பொருளுடைய அழகு பொருந்திய அக்கரம் அஞ்சையும் (இடை விடாது) தியானித்தால்,—அருளானது நண்ணி - அருளானது பொருந்தி,—அணுவை இன்று இருளானது



தீர இராப்பகல் அற்ற இன்பத்தே சிவத்தே ஆக்கும் - ஆன்மாவை இப்போது மலவிருள் நீங்கும்படி கேவல சகலங்கள் நீங்கிய விடத்தே ஆனந்த வுருவத்தையுடைய சிவத்தின் கண்ணே சேர்க்கும். ௪௨

ஆதி மலம்இரண்டும் ஆதியாய் ஓதினல்
சேதியா மும்மலமுந் தீர்வாகா—போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே. ௪௩

(உரை) ஆதிமலமிரண்டு மாதியா யோதினற் சேதியாமும்மலமுந்தீர்வாகா - ஆதியாகிய நகாரமும் மலமாகிய மகாரமும் இரண்டுமடியாகவுச்சரித்தால் உறுதியாக மும்மலமுநீங்கி ஆன்மாவருளைப் பொருந்திப் பேரின்பவாழ்வை யுறமாட்டாது. உறுமுறைமை கூறுமிடத்து, மாறிவிதிப்படி யோதஞ்செழுத்தும் (ஓதினல்) போதமதிப்பரிதா மின்பத்தே வாழலாம் - நகாரமுதலாக வுச்சரிக்கு முறைமையைமாறிச் சிவமுன்னக அத் திருவெழுத் தஞ்சையும் விதிப்படியுச்சரிக்க ஆன்மபோதத்தால் மதித்தற்கரிதாகிய பேரின்பவாழ்வியெய்தி வாழலாம் நீயுஞ்சிவமுன்னக வுச்சரிப்பாயாக. ௪௩

அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும்—அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் யாவைக்கு மப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும். ௪௪

(உரை) அண்ணல் அருமறையும் ஆகமமும் அஞ்செழுத்தே - பரமேசுவரன் அருளிய அரிய வேதாகமங்களும் பஞ்சாக்கரமே,—ஆதிபுராணம் அனைத்தும் அஞ்செழுத்தே - முதன்மைபெற்ற புராணங்களனைத்தும் பஞ்சாக்கரமே,—ஆநந்த தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம் மோனந்த மாமுத்தியும் அஞ்செழுத்தே - ஆனந்த நடனமும் தத்துவாதீதமாகிய மௌனமா யிருக்கும் பரமுத்தியும் பஞ்சாக்கரமே ௪௪

முத்தி தனைஅடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை இசையிற்றின்—ஒத்த
இரதமணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவரென் றோதும் விதி. ௪௫

**(உரை)** முந்து பழம் போது அங்கி வித்தகமாம் வீணை இவையிற்றின் ஒத்த இரதம் மணம் வெம்மை எழில் நாதம்போல. முதிய பழமும் மலரும் அக்கினியும் விசித்திரமாகிய வீணையும் ஆகிய இவற்றின் (முறையே) இணங்கிய இரதமும் மணமும் வெம்மையும் அழகிய ஓசையும் போல.—முத்திதனை அடைந்தோர் விரவுவர் என்று விதி ஓதும் - பாமுத்தியைப் பெற்றவர் இரண்டறச் சிவத்திற் கலந்திருப்பரென்று வேதாகமங்கள் விதியாகச் சொல்லும். ௪௫

தத்துவங்க ளெல்லாம் சகசமா ஆன்மாவிற்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல்—முத்திதனிற்
சித்தமல மற்றார் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமா ஓதியிடுந் தான். ௪௬

**(உரை)** பெத்தத்தில் தத்துவங்க ளெல்லாம் ஆன்மாவிற் சகசமா நிற்கின்ற பெற்றிபோல் - பெத்ததசையிலே தத்துவங்களெல்லாம் ஆன்மாவினிடத்திலே இரண்டறநிற்கு முறைமைபோல,—முத்திதனிற் சித்த மலம் அற்றார் செறிந்திடுவரென்று சத்தியமா மறை ஓதியிடுந் தான் - முத்திதசையிலே சகசமல மற்றவர்கள் சிவனிடத்திலே இரண்டறப் பொருந்தி நிற்பார்களென்று சத்தியமாக வேதாகமங்கள் சொல்லும் ௪௬

ஆதவன்தன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோல்—நாதாந்தத்(து)
அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்தின்பக்
கண்ணில் அழுந்தியிடும் காண். ௪௭

**(உரை)** ஆதவன்றன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி பேதம் அறநிற்கின்ற பெற்றிபோல் - ஆதித்தப்பிரகாசத்தின் முன்னே சந்திரப்பிரகாசமானது இரண்டறநிற்கு முறைமைபோல,—நாதாந்தத்து அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்து - தத்துவாதீதமாயிருக்கின்ற சிவபிரான் திருவடியிலே ஆன்மாப்பொருந்தி,—இன்பக் கண்ணில் அழுந்தியிடுங்காண் - பேரின்பத்திலே இரண்டறப் பொருந்துமென்றறிவாயாக. ௪௭

சென்றிவன்றான் ஒன்றில் சிவபூ ரணம்சிதையும்
அன்றவன்றான் ஒன்றும் எனில் அந்நியமாம்—இன்றிரண்டும்



அற்றநிலை யேதென்னில் ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கொள். ௪௮

**(உரை)** இவன்றான் சென்று ஒன்றில் சிவபூரணஞ் சிதையும் - ஆன்மா சிவனைச்சென்று பொருந்துவனாகில் சிவனுக்குப் பூரணத்துவமில்லையாக வேண்டும்,—அவன்றான் ஒன்றுமெனில் அன்று அந்நியமாம் - சிவன் ஆன்மாவைச்சென்று பொருந்துவனாகில் அப்போது ஆன்மா வேறாயிருக்கவேண்டும்,—இரண்டும் அற்ற நிலை ஏதென்னில், இரண்டு முறைமையுமல்லாமல் நின்ற நிலை எங்ஙனமெனில்,—இன்று ஆதித்தன் அந்தன் விழிக்குற்றம்அற நின்றதுபோற் கொள் - இப்போது அந்தகனுக்குப் படலநீங்கின காலத்து ஆதித்தவொளியுங் கண்ணொளியும் இரண்டறக் கலந்து நின்றாற்போலுமெனக் கொள்வாய். ௪௮

வாக்கு மனமிறந்த வான்கருணை யாளன்உருத்
தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா—நீக்காப்
பதியினைப்போல் நித்தம் பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு. ௪௯

**(உரை)** வாக்கு மனம் இறந்த வான் கருணையாளன் உருத்தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா - மனவாக்குக்களுக் கெட்டாத அருளே வடிவாய் உலகத்திலே தாக்கற்று - நிற்கும் ஒப்பற்ற கர்த்தாவே,—நீக்காப்பதியினைப்போற் பசுபாசம் நித்தமென்றாய் - விட்டு நீங்காமலிருக்கும் பதியினைப்போற் பசுவும்பாசமு நித்தியமென் றருளிச்செய்தாய்,—கதியிடத்தும் மூன்றினையுங் காட்டு - முத்தியிலும் அம்மூன்று முதலும் அழியாமல் நிற்கிற முறைமையை அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும். ௪௯

முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅநு போகத்தைத் துய்த்தல்அணு—மெத்தவே
இன்பங்கொ டுத்தல்இறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள்அப் பா. ௫௰

**(உரை)** முத்திதனில் மூன்றுமுதலும் மொழியக்கேளப்பா - அப்பனே முத்தியிலும் பதிபசுபாசமூன்று முதலுமழியாமல் நிற்கிற

முறைமையைச் சொல்லுகிறோங்கேள்,—சுத்தவநுபோகத்தைத் துய்த்தலனு - பேரின்பத்தைப் புசிக்கிற தான்மா,—மெத்தவேயின்பங் கொடுத்த விறை - பேரின்பத்தை மிகுதியுங் கொடுக்கிறது கத்தா, இத்தைவிளைவித்தல்மலம் - பேரின்பத்தை மேன்மேலும் விளைக்கிறது மலம்,—அன்புடனே கண்டுகொள் - அன்பினாலே யறிவாயாக.

அப்பாஇம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள்—ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறில்இவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண். ௫௧

(உரை) இம்முத்திக்கு அழியாத காரணந்தான் அருளாலே செப்பாய் அப்பா செப்பக்கேள் - இப்பாமுத்திக்கு அழியாத ஏதுவைக் கருணையினாலே அருளென்ற மாணவகனே சொல்லக்கேளாய்,—ஒப்பில்' குருலிங்கவேடமெனக் கூறில் - (அக்காரணம்) ஒப்பில்லாத குருலிங்கசங்கம வழிபாடென்று (சிவாகமம்) செப்புமானால்,—இவை கொண்டார் - இம்முப்பொருளின் வழிபாட்டை உண்மையாகக் கொண்டவர்,—கரு ஒன்றி நில்லார்கள் காண் - கருப்பத்திலே பொருந்திப் பிறந்திறவார்களென்று அறிவாய். ௫௧

கற்று மனம்போல் கசிந்து கசிந்தேஉருகி
உற்றுசான் லிங்கம் உயர்வேடம்—பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார். ௫௨

(உரை) கற்று மனம்போற் கசிந்து கசிந்தே உருகி உற்று - ஈன்றணிமையகன்றையுடைய பசுவைப்போலப் பெரிதுங் கசிந்துருகி அமைந்து,—ஆசான் லிங்கம் உயர் வேடம் பற்றுக - சிவதேசிகரையும் சிவலிங்கப்பெருமானையும் உயர்ந்த சிவவேடத்தாரையும் பொருளாகக்கொண்டு,—முத்தித்தலைவர் முழுமலத்தை மோசிக்கும் பத்திதனில் நின்றிடுவர் பார்-சீவன்முத்தியில்நிற்குந் தலைவரும் மலவாசனை முற்றும் ஒழித்தற் கேதுவாகிய அன்புசெய்யும்வழியே ஒழுகுவர் (ஆதலால் நீயும் அவ்வன்பின் வழியை) நோக்குவாய். ௫௨



வாழ்ந்தேன் அருட் கடலே வற்றுப் பவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதினியில்—சூழ்ந்து விடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே
உண்மைத் தவப்பயனே உற்று. ௫௩

(உரை) சூழ்ந்துவிடா வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே - (மெய்யன்பர்) சூழ்ந்துநீங்காத திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருக்கின்ற சுவேதவனப்பெருமாளென்னும் பிள்ளைத் திருநாமத்தையுடைய மெய்கண்டதேவனே,—அருட்கடலே - கிருபாசமுத்திரமே,—உண்மைத் தவப்பயனே - உண்மையாகிய சரியை முதலிய தவத்தினர்க்குப் பயனாயுள்ளவனே,—வற்றுப் பவக்கடலில் வீழ்ந்தேமேதினியில் அலையாமல் உற்று வாழ்ந்தேன் - வற்றுதலிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து உலகவியலிற் சுழலாது (முத்திக்கரையாகிய உனது திருவடியை) அடைந்துவாழ்ந்தேன். ௫௩

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச் செய்த

# சிவப்பிரகாசம் மூலமும் சிந்தனையுரையும்*

## பாயிரம்

### காப்பு

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும்ஆனை கழல்காளும் மறவாமல்
அளியாளும் மலர்தூவும் அடியார்கள் உளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

(உரை) ஒளியான திருமேனி - ஞானப் பிரகாசமாய்ச் சிவனுக்குத் திருமேனி தானேயாய்த் தாதான்மியமாகிய பராசத்தியினின்றும்; உமிழ்தானம் மிகமேவு - ஆன்மாக்களனைவரையும் மோட்சத்து ளடைத்தருள வேண்டுங் காருண்ணியத்தா லுண்டாகிய இச்சை ஞானங் கிரியை யென்னு மூன்று சத்தியும் மிகுதியும் பொருந்துகையினாலே; களியார வரும் ஆனை - இம்மூன்று சத்தியோடுங் கூடிய கெர்ச்சிதம் பொருந்திய ஆதிசத்தி யென்னும் யானையினது; கழல் - யானெனதென்பதற்ற விடமாய்ப் பத்தர்க்கு எய்ப்பினில் வைப்பென உதவும் முத்தித்தாளை; காளும் மறவாமல் - முதல்வன் காட்டியுங் கண்டும் உபகரித்துவரும் பெரிய உதவியைக் குறித்து ஒருபொழுதும்

* உமாபதி சிவாசாரியர் வரலாறு, சிவப்பிரகாசம் முதலிய எட்டு சாத்திரங்களின் வரலாறு, அவற்றின் உரைகளின் வரலாறு, உரையாசிரியர் வரலாறு முதலியவற்றை முகவுரையிற் காண்க.



மறவாமற் கருதிக்கொண்டு; அளியாளும் மலர்தூவும் அடியார்கள் - அன்பு, கொல்லாமை, இந்திரிய நிக்கிரகம், வாய்மை, பொறை, அருள், அறிவு, தவம் என்னும் இவ்வட்டபுட்பங்களாற் சதாகால பூசை செய்யுந் தொண்டர்களுக்கு; உளமான வெளியாகும் - அறிவுந் தொழிலும் மற்றும் முதல்வனதேயாகும்; ஆகவே—வலிதாய வினை கூட நினையாவே - மூன்று குற்றம், மூன்று குணம், மூன்று மலம், மூன்றவத்தையென்று நின்று செய்யும் இருவினையாய் உயிர்ச்சார்பு பொருட்சார்பென்றும் அகப்பற்று புறப்பற்றென்றும் பெயரையுடைத்தாய், எல்லா அனத்தங்கட்குங் காரணமாயுள்ள மூலமலத்தின் காரிய வேறுபாட்டாற் புகழவாப் பொருளவாவென்னும் பெயர் படைத்த இருவினைகளும் முன்புபோல வந்து பொருந்தா, அவர்களும் அவ்வாறு சதாகாலபூசை செய்வதால் முதல்வனை மறந்து நினையார்கள்.

"எட்டிக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்றார், விட்டா ருலக" [திருவுந்தியார், 24] மென்பதுமிது. திருவருளுக்கு ஆதிசத்தியென்பது ஓர் இடுகுறிப்பெயர். "திருவருள்வா ரணத்தின் றிருவடி" யென்றார் எமது ஆசிரியரும். இது இந்நூற் கருத்து முழுவதும் உடலோடுள்ளடக்கி ஒரு பொருள் மேற்கொண்ட சிறப்புப்பாயிரம்.

கழல்காளும் மறவாம வென்னவே தெரிசனமும், உளமான வெளியாகுமென்னவே சுத்தியும், வலிதாய வினைகூட நினையாவே என்னவே ஆன்மலாபமுங் கூறியவாறும்; தசகாரியம் பத்தும் ஞானம்பற்றல் பணிநீத்தல் நேயத்தழுந்தலென்னுந் தரிசனஞ் சுத்தி லாபம் மூன்று ளடங்கியவாறும்; ஒளியான திருமேனியெனவே சிவரூபமும், உமிழ்தான மிகமேவுகளியார வருமியானை யெனவே சிவதரிசனமும், கழல்காளு மறவாம லளியாளு மலர்தூவு மடியார்களுள மான வெளியாகு மெனவே சிவயோகமும், வலிதாய வினைகூட நினையாவே யெனவே சிவபோகமுங் கூறியவாறும்; இவை நாலோடேனையவெல்லாம் உடனிகழ்ச்சியாமாறும் நுண்ணுணர்வினு லறிக. யாமும் அவ்வாறு செய்வோமென்பது கருத்து. இச்சைஞானங் கிரியை மூன்றையும் மூன்று மதமாகவும் இவையுடைய சத்தியை யானையாகவும் உருபகஞ் செய்தார் விக்கினங் காத்தற்குரிய விநாயகத் துதியு மாம்பொருட்டு.

## நடராசர்

1. ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தி யாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றல் செய்வாம். க

(உரை) ஓங்கொளியாய் - சுயம்பிரகாசமான பேரொளியாகிய பரமசிவன், அருள் - உயிர்களிடத்துள்ள காருண்ணியத்தினாலே, ஞானமூர்த்தி யாகி - பஞ்சசத்தி மூர்த்திமா னாகி; உலகமெலாம் . . . காண - அசேதனப் பிரபஞ்சங்களைச் சத்தரூபம் அத்தரூபமென் றிரு விதமாகப் படைத்துச் சேதனப் பிரபஞ்சங்களை யிரட்சித் தருளா நின்ற சிவகாமசவுந்தரி திருக்கண் சாத்தியருள; தேங்கமழும் . . . வைத்து-தேனும் வாசனையும் விளங்கிய கொன்றை மாலிகையையும் அர்த்தசந்திரனையுங் கங்காபரமேசுவரியையுஞ் சர்ப்பத்தையும் பகைதீர்த்து நீண்ட திருச்சடாபாரத்திற் றரித்து; நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க - ஆன்மாக்களால் விட்டு நீங்குதற்கரிய மூலமலபந்தம் நீங்கும்படிக்கு; மன்றுள் நின்று-திருச்சிற்றம்பலத்தினக ணெழுந்தருளி நின்று; இமையோர் துதிசெய்ய - தேவர்கள் தோத்திரஞ் செய்து வழிபட; நிருத்தஞ் செய்யும் பூங்கமல மலர்த்தாள்கள் - தூல சூக்கும பரமென்னு மூவகைப் பஞ்சகிருத்தியங்களும் நடக்கும்படி ஆனந்த நிருத்தஞ் செய்யுந் தாமரை மலர்போலுந் திருவடிகளை; சிரத்தின் . . . செய்வாம் - எமது சென்னியினுஞ் சிந்தையினும் பொருந்த வைத்து வந்தித்து வணங்குவாம்.

"உச்சியாய் மென்றசையா யோடாகி மூளையாய், நச்சியா வெண்டலையா யீர்மயிர்பேன் - மொச்சிரா, வாள்வைத்த கண்ணி மணவாளன் மன்றிணடத், தாள்வைத்த வென்றன் றலை"யென்றும், " அஞ்சு விரலாய்க் குதியா யகம்புறமாய், விஞ்சுககமாய்ச்சிவந்து



மெல்கியிரா-அஞ்சா, துலைமீது வெண்ணெயென வுள்ளுருக்கு மென்றன், றலைமீது வைத்தசிவன் றாள்" என்று மிருப்பதால் உயிருக்குத் தலையுஞ் சிந்தையு மிவை யென்றுஞ் சிவனுக்குத் தாள் முதலியன இவையென்றுங் குருமுகமா யறிக. ஓங்கொளியா யென்பதனாற் சொரூப லட்சணமும், அருண்ஞான மூர்த்தியாகி யென்பதனால் தடத்த வுண்மைத் திருமேனி லட்சணமும், உமையம்மை காணத் தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை திகழரவம் வளர்சடைமேற் சேர வைத் தென்பதனால் அத்துவாமூர்த்தியென்னும் உபசாரத் திருமேனி லட்சணமும், மன்றுணின் றென்பதனால் உலகெலாமாய லட்சணமும், இமையோர் துதிசெய்ய வென்பதனால் வேறாகிய லட்சணமும், நிருத்தஞ் செய்யுமென்பதனால் உடனாகிய லட்சணமும், நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்கவென்பதனால் இவ்வகைத் திருமேனிகட்குக் காரணமும் பயனும் உடலோடுள்ளடக்கி யொரு பொருள்மேற் கொண்டவாறு காண்க.

## சிவகாமியம்மை

2. பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானம் கிரியைபர போக ரூபம்
தருங்கருணை உருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்கள் தாங்க
விரிந்தஉபா தானங்கள் மேவி ஒன்றாய்
விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்(து)
அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். உ

(உரை) பரந்த - சர்வவியாபியாகிய சிவனுடனே அக்கினிக்கு வெம்மையும் நீர்க்குத் தட்பமும்போல் விரவி வியாபித்திருக்கிற; பரா பரை - பராசத்தி; பரபோக ரூபந் தருங்கருணை - ஆன்மாக்களுக்கு மேலாகிய சிவானந்த போகத்தைச் சுதந்தரமா யனுபவிக்கும்படி கொடுக்குங் காருணியத்தினாலே; ஆதி - ஆதிசத்தி யென்றும் ஆக்கினைசத்தி யென்றும் திரோதானசத்தி யென்றும் இடுகுறிப் பெயர் புனைந்து சிவசங்கற்ப சொரூபமாய்; பரனதிச்சை - பரமசிவனது இச்சாசத்தியென்றும்; பரஞானம் - பரமசிவனது ஞானசத்தியென்றும்; கிரியை - பரமசிவனது கிரியாசத்தியென்றும்; உருவாகி - பரம

சிவனுக்குத் திருமேனியாகி; விரிந்த உபாதானங்கள் மேவி-விரிவினையுடைய உபாதானத் திரயங்களிற் சங்கற்ப ரூபமாய்ப் பொருந்தி; விசுத்தாசுத்தத் தனுகரண புவனபோகங்கள் தாங்க - சுத்தம் மிசிரம் அசுத்தமென்னு மூவகைத் தனுகரண புவனபோகங்களை அது அது தானுகச் சுமக்கச் சங்கற்பித்து நின்றும் ; ஒன்ருய்-சிவசங்கற்ப வேறுபாட்டாற் சத்தி பல்பேதப்பட்டினுந் தான் ஒரு முதலேயாய் ; விமலமாய் - மலரகிதசொரூபமாய் ; ஐந்தொழிற்கும் வித்தாய் - பஞ்சகிருத்தியங்களுந் தனது சன்னிதானத்தை யின்றியமையாத மூலகாரணமாய் ; ஞாலத்து அரந்தை கெட - சேதனப் பிரபஞ்சங்களெல்லாந் துயர்தீரும் பொருட்டு; மணிமன்றுள் - இரத்தின சபை யென்னும் இடுகுறிப் பெயருடைத்தாய்ச் சிற்சத்தி சொரூபமாகிய திருவம்பலத்தின் கண்ணே ; ஆடல் காணும் அன்னை - ஆனந்த நிருத்தந் தரிசித்தருளுஞ் சிவகாமியம்மை ; அருட் பாதமலர் சென்னி வைப்பாம் - கிருபை பொருந்திய தாமரை போலுந் திருவடிகளை எமது முடிக்கு அணிகலமாகத் தரித்துக் கொள்வாம்.

"தேசுமலி பொதுஞானச் செவ்வொளியும் ஈசனரு நடத் தொழிலும்" என்பதனுல், மணிமன்றும் அதனுள் ஆடல்காணும் அன்னையும் நுண்ணுணர்வா லறிக. மணிமன்றுள் நிருத்தஞ் செய்யும் பூங்கமல மலர்த்தாளும், மணிமன்று ளாடல்காணு மன்னையருட் பாதமலரும் மணிமன்றும் இவைஇவை யென்பது குருமுகமா யறிக. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

### விநாயகர்

3\. *நலந்தரநூல் இருந்தமிழின் செய்யுட் குற்றம்
நண்ணுமை இடையூறு நலியாமை கருதி
இலங்குமிரு குழையருகு பொருதுவரி சிதறி
இணைவேல்கள் இகழ்ந்தகயற் கண்ணியொடும் இறைவன்
கலந்தருள வரும்ஆனை முகத்தான் மும்மைக்
கடமருவி யெனநிலவு கணபதியின் அருளால்
அலர்ந்துமது கரமுனிவர் பரவவளர் கமலம்
அனையதிரு வடியிணைகள் நினைதல் செய்வாம். ௩

இது விநாயகத் தோத்திரம். இதன் பொருள் வெளிப்படை.

(உரை) நலந்தர...கருதி - இந்நூலுக்கு எல்லா நன்மையுமுண்டாம்படியும் பெரிய தமிழின் பாட்டுக்குப் பஞ்சவதிகாரக் குற்றம் பொருந்தாமலும் இந்நூல் செய்து முடியுமளவும் ராசிக தெய்விகங்களால் ஒரு விக்கினம் வாராமையும் விசாரித்து ; இலங்குமிரு...ஆனைமுகத்தான் - விளங்கப்பட்ட பெரிய மகரக் குழையளவுஞ் சென்று மோதிச் செவ்வரி பரந்து தனக்குவமையாகச் சொல்லப்பட்ட வேல்களைப் பழித்த கயல்போன்ற கண்ணினை யுடையாளோடும் பரனேதான் கூடியருள எழுந்தருளின ஆனைமுகத்தினையுடைய; மும்மை . . . னருளால் - மூன்று மதங்களும் மலையிலேநின்றும் அருவி பாய்ந்தாற்போல விளங்குகிற மூத்தநயினர் அனுக்கிரகத்தினுலே; அலர்ந்து . . . செய்வாம் - முனிவராகிய வண்டுகள் சூழ்ந்து தோத்திரம் பண்ணி நிறம் வளராநின்ற தாமரை மலர் போன்ற சீபாதங்களை நினையா நின்றேன்.

கயற்கண்ணியொடு மிறைவன் கலந்தருள வருமானை முகத்தானென்றது ஞானக்கிரியைகளே திருமேனி யெனக் கொள்க. மூன்று மத மென்றது சாத்துவித ராசத தாமதமெனக் கொள்க. இதனுற் சொல்லியது இந்நூல் செய்து முடியுமளவும் இராசிக தெய்விகங்களினுலே இடையூறு வாராமல் விக்கினேசுரனை வழிபட்ட முறைமை அறிவித்தது.

### முருகக் கடவுள்

4\. வளநிலவு குலஅமரர் பதியாய் நீல
மயிலேறி வரும்ஈச னருள்ஞான மதலை
அளவில்பல கலைஅங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அண்ணல்விற லெண்ணு

*இச்செய்யுள் முதலிய நான்கு செய்யுள்களுக்கும், மேல்வரும் 11, 12 செய்யுள்களுக்கும் சிந்தனையுரையில் உரையில்லை. பொருள் வெளிப்படை யென்று குறிக்கப்பட்டுளது. திருநெல்வேலியிலிருந்து கிடைத்த வேறுரைப்பிரதியிற் காணும் உரை இங்குத் தரப்படுகின்றது. விவரம் முகவுரையிற் காண்க.

உளமருவு சூரனுரம் எனதிடும்பை ஓங்கல்
ஒன்றிரண்டு கூறுபட ஒளிதிகழ்வே லுகந்த
களபமலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மல ரடியிணைகள் சிந்தை செய்வாம்.

இது சுப்பிரமணிய தோத்திரம். இதன் பொருள் வெளிப்படை.

(உரை) வளநிலவு குலவமரர் பதியாய் - புதுமை விளங்காநின்ற தேவர்கள் கூட்டத்துக்குக் கர்த்தாவுமாய்; நீலமயி . . . மதலை - நீலநிறத்தையுடைய மயில்வாகனத்திலே யெழுந்தருளி வாராநின்ற தம்பிரானுர் தந்தருளும் ஞான வடிவான பிள்ளை; அளவில்பல . . . மண்ணல் - எண்ணிறந்த பல கலை ஞானங்களையும் நாலு வேதங்களையும் ஓதியுணர்ந்த அகத்தியமாவிருஷிக்கு வேத வியாக்கியானத்தை அருளிச்செய்த சுவாமி; விற லெண்ணு . . . கந்தன் - தன்னுடைய வெற்றியை விசாரியாத மனத்தையுடைய சூரனது மார்பையும் என்னுடைய பிறவிக் கிலேசத்தையும் அசுரனொதுங்கின கிரவுஞ்சபர்வதத்தையும் இவை யொன்றிரண்டு கூறும்படி விளங்காநின்ற வேலைத் திருவுள்ளத்தடைத்துக் குறமகள்தனது களபம் பொருந்திய அழகிய முலைத் தளங்களிலே முயங்கியருளிய சுப்பிரமணியனுடைய; அடியிணைகள் சிந்தை செய்வாம்-செந்தாமரைமலர்போன்ற இரண்டு ஸ்ரீபாதங்களையும் நினையாநின்றேன்.

கந்தன் மலரடியிணைகள் சிந்தை செய்தலும் நலந்தரநா விருந்தமிழின் செய்யுட்குற்ற நன்றுமை யிடையூறு நயவாமை கருதியெனப் பொருள் கூட்டுக. இடும்பை யிரண்டுபட என்றது தம்மைவிட்டு அன்னியமாக என்றதெனக் கொள்க. சுப்பிரமணியனென்றது வாலப்பிரமசாரியெனக் கொள்க. இதனுற் சொல்லியது இந்நூல் செய்து முடியுமளவும் இடையூறு வாராமலெனக் கொள்க. இவை இரண்டும் வழிபடு தெய்வ வணக்கம்.

### சந்தான பரம்பரை

5. தேவர்பிரான் வளர்கயிலை காவல் பூண்ட
திருநந்தி அவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்

162357

திருவாளர் - ஆசிரியர், அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "தாயு
மானவரும் சைவ சித்தாந்தமும்" என்ற தத்துவம்பற்றியும், திரு
வாளர் - கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியர் அவர்கள்
"மன நலமும் மனித நிலையும்" என்பது பற்றியும், "கம்பனும்
அனுமனும் என்பதுபற்றியும், குகஸ்ரீ கிருபானந்தவாரி அவர்கள்
"திருப்புகழ்" என்ற பொருள் குறித்தும் அரிய விரிவுரைகளாற்றப்
பொன்விழா இனிது நிறைவேறியது. இவற்றிற் கிடையே இரண்
டாம் நாளில் பொன்விழா நினைவுக் குறியாகச் "சித்தாந்தப் பொன்
மொழி" என்ற சீரிய நூல் சபை யமைச்சர் திருவாளர் வித்துவான்
ம. பெரியசாமிப் பிள்ளையவர்களால் எழுதி வெளியிடப்பெற்றது.

பொன்விழா நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தபோதிலும்
தலைமை தாங்கிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் மூன்று திங்கள் இத் திருச்சி
நகரில் வதிந்தருளி, நகரின் பல்வேறிடங்களிலும், திருவானைக்கா,
பூவாளூர் முதலிய வெளியூர்களிலும் அன்பர்களது வேண்டுகோட்
கிணங்கி ஏறக்குறைய ஐம்பது பெருஞ் சொற்பொழிவுகளாற்றியது
பெரிதும் போற்றத்தக்கதாகும். சபையின் பொன்விழா நிகழ்ச்சியா
லும் சுவாமிகளது சைவ சமயம் பற்றிய பெருஞ் சொற்பொழிவுகளா
லும் இந் நகரிலும் அதனை யடுத்துள்ள ஊர்களிலும் ஒரு புத்
துணர்ச்சியும் சைவத்தின்பால் கரைகடந்த பற்றும் நிலவுகிறதென்
பது மிகையாகாது. சைவ அன்பர்களே யன்றி வைணவ அடியவர்
களும் சுவாமிகள் வாயால் நம்மாழ்வார் வைபவம், கம்ப ராமாயணம்
முதலிய அரும்பொருள்களைக் கேட்டுப் பெருமகிழ் வெய்தினர்.

சென்ற 19-6-1936ல் பொன் விழாவின் பொருட்டு எழுந்தரு
ளிய சுவாமிகள் மூன்று திங்களுக்குப் பிறகு 20-9-1936ல் விடியற்
காலையில் திரிசிரபுரத்தை அரிதின் நீங்கித் திருப்பராய்த்துறை,
குளித்தலை, கரூர் முதலிய பதிகளின் வழியாகப் பழனித் திருத்
தலத்துக்கு எழுந்தருளியுள்ளார்கள்.

ம. பெரியசாமிப் பிள்ளை,
27—9—36
அமைச்சர்,
திரிசிரபுரஞ் சைவ சித்தாந்த சபை, திருச்சி

---

## சைவ சித்தாந்த இளைஞர் சங்கம் தஞ்சை

### அப்பர் படக் காட்சிக்கு ஆதரவு

இச்சங்கத்தின் வாராந்தரக் கூட்டமானது 19-9-36சனிக்கிழமை
மாலை 5 மணிக்கு மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில் தேவார ஆசி
ரியர் முத்துக்குமாரசாமிப் பிள்ளை தலைமையில் கூடிற்று. அதுபோது
தி. சு. சம்பந்தசாமி என்பவரால் அடியிற் கண்ட தீர்மானம் பிரேரே
பிக்கப்பட்டு அமைச்சர் S. சபாபதிப் பிள்ளை என்பவரால் ஆமோ
திக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

"பல ஊர்களில் கூடிய ஜைனர்கள் கூட்டத்தில் அப்பர் படக்
காட்சி பிடிப்பதைக் கண்டித்தும் திருவிளையாடற் புராணம், பெரிய
புராணம் முதலியவைகளில் கூறுவது போன்ற சரிதங்கள் நடந்த
தாக யாதொரு சான்றும் கிடைக்கவில்லை யெனப் பேசியிருக்கிறார்கள்.
இதைக் காண மிக வியப்பாகவே யிருக்கிறது. சேக்கிழார் அப்ப

பல. திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், நெற்றிக் கண்ணைக் காட்டியும் குற்றம் குற்றமே என்று வெற்றி பேசிய வீர சுதந்தரப் புலவர் நமது நக்கீரர். அப் புலவர் பெருமான், தனது அல்லலை அகற்ற அன்பு ததும்பப் பாடிய அருமை நூல் நம் திருமுருகாற்றுப்படை. அந் நூலில், ஆறு திருப்பதி அமர்ந்தவன் என்பதைக் குறிப்பதாக ஆறு பிரிவுசெய்து, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், ஆவினன்குடி, ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாய்க் குறிக்கப்படும் திருப்பரங்குன்றம், "கூடற் குடவயின் அமைந்த குன்றம்" என்று குறிக்கப்படுதல் கொண்டே திருப்பரங்குன்றம் எனக் கொள்ளுமாறு அமைத்தனர். அன்றி, நூலின் அகச்சான்றாக அக் குன்றப் பெயர் குறிக்கப்பெறவில்லை. இரண்டாம் பதியாகிய திருச்செந்தூரும் அலைவாய் எனக் குறிக்கப்படுகின்றது. அதனை, "நாமனார் அலைவாய்" என உரைகாரர் ஆசிரியர் நச்சினார்க்கினியர் விளக்குகிறார். அதிலும் திருச்செந்தூர் எனக் குறிக்கப்படவில்லை. மூன்றாம் திருப்பதி திருஆவினன்குடி என்பது. அது திரு - இலக்குமி, ஆ - காமதேனு, இனன் - சூரியன், கு - பூமி, டி - இடி என்னும் இவர்களால் பூசிக்கப்பெற்றது இத்தலம். 'சித்தன்வாழ் வென்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடி என்று பெயர் பெற்றதென்றுமாம்' என்பது நச்சினார்க்கினியர் உரை. இப் பெயர் மட்டும் நக்கீரர் வாய்மொழியினாலே கிடைக்கின்றது. ஆனால், இத் தலம் பழனிமலை அடிவாரத்தில் அமைந்திருக்கின்றது. ஆவினன்குடியே முருகன் தலமாய் அன்று குறிக்கப்பட்டிருப்பினும், பழனிமலை மீதிருக்கும் ஆண்டவனுக்கே பல சிறப்புக்களும் இன்று நடைபெறுகின்றன. பழநியாண்டவனை வேண்டியே பத்தர்கள் வந்தாலும் அடி



வாரத்திருக்கும் ஆவினன்குடியானையும் அடிவணங்கிச் செல்வர். இப்பழநி என்பதைச் சிறப்பிக்கும் அத்தல புராண வரலாற்றில், பழம் நீ, என்பது மருவி, பழநியாயிற்று என்றனர். அவ்வரலாறு சிவபெருமான், தன்கையிலிருந்த மாங்கனியை விரும்பிய கந்தனையும், கணபதியையும் உலகை யார் விரைவில் வலம் வருபவரோ, அவரே இக்கனி பெறுதற்குரியர் என்றனர். கணபதியார் எல்லாவுலகங்களின் வடிவாயும் எழுந்தருளியிருக்கின்ற இறைவனையே சுற்றி மாங்கனியைப் பெற்றனர். இது கண்ட கந்தன் மனம் வருந்தி இம்மலையுற்றான். அப்போது சிவபிரான், குழந்தாய், "பழம் நீ அன்றி வேறு இல்லையே; என் மன வருத்தம்" என்று இன்மொழி புகன்றார். அதுவே, பழநி என்று ஆயிற்று என்பர். ஆனால், ஆராய்ச்சி முறையில் ஆழ்ந்து காண்பார் அம்மலைக்குப் பெயர் பொதினி என்பதே பொருத்தம் என்றலை ஒப்புவர். ஆகவே, அப்பழநியே கந்தனது முக்கிய க்ஷேத்திரமாக வழங்கப்படுகின்றது. நான்காவதாக, ஏரகம் என்னும் பதி குறிக்கப்படுகிறது. அஃது இன்று சுவாமிமலை என வழங்கும் திருப்பதியே எனக் காணப்படுகின்றது. ஆனால், நச்சினார்க்கினியர் ஏரகம் என்பது மலைநாட்டகத்தொரு திருப்பதி எனக்குறித்தனர். நாம் ஏரகம் என்று வழங்கும் சுவாமிமலை இருக்கும் நாடோ மலை நாடன்று, சோணாடே என்பதை மறுத்தற்கில்லை. இந் நிலையில், மலைநாட்டில் ஏரகம் என்று ஒரு திருப்பதி உளதோ என ஆராய்வதும் ஐயம் தீர ஒரு வழியாகும். ஐந்தாவது, குன்றுதோறாடல் என்பது. இது பல மலைகளையும் குறிப்பதாய்க் காணப்படுகின்றது. இதில் ஆறு திருப்பதி எனக் கூறுமுறையை ஒப்பும் வகையில் ஐந்தாவதனை மட்டும் பல மலைகளாய்க் கூறினர் என்பது பொருத்தமாய்த் தோன்றவில்லை. அதுவும், ஒரு திருப்பதியாய்க் கூறியிருக்க வேண்டு

வதே பொருத்தம் என நினைக்கிறேன். அன்றி, ஆறுவதானது பழமுதிர்சோலை என்பது. இதற்கும் நச்சினார்க்கினியர் பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையுடையோன் என உரை விரித்தனரல்லாது விளக்கமானபேர் குறித்துக் காட்டினாரில்லை. திருமாலிருஞ் சோலை என வைணவ நூல்களிற் குறிக்கும் தலமும் இப் பழமுதிர்சோலை என்ற தலமும் ஒரே இடத்திலிருந்து ஒரு மூர்த்தி மறைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது மக்கள் எண்ணம். இப்போது இங்கிருக்கும் மூர்த்தி திருமாலாகவே திருவிழாக் கொண்டாடுகின்றனர். அவ்வாறாயினும் இப்பதியில், ஓரே பீடத்தில் மூலவர் இருதேவியருடன்நின்ற திருக்கோலங் கொண்டருளி யிருக்கிறார் என்றும், அப்படியிருப்பது முருகன் தலங்களிலன்றி வேறெங்கும் அக்கோலமில்லை என்றும், இத்தலத்துக் காவற்காரராய் முருகன் படைத்தலைவராகிய வீரவாகுதேவர் இருப்பதாலும் கோயில் முன்னணியில் பதினெட்டாம்படிக் கருப்பண்ணசாமி கோயில் கொண்டிருப்பதாலும் இக்கோலங்கள் திருமாலின் திருக்கோயிலுக்குப் பொருத்தமின்றாதலின் இப்போது திருமாலின் திருக்கோயிலாய்த் திகழ்வதே முருகன் ஆலயம் என்றும் பலரால் எண்ணப்படுகின்றது. மேலும், இக்கோயிலில் பெருமாளுக்கு உள்ள அழகர் என்ற பேர் முருகனுக்கும் சோமசுந்தரர்க்கும் பொதுப் பெயரே. முருகு - அழகு. சுந்தரம் - அழகு. (சோமசுந்தரர் - உமையுடன் கூடிய அழகன்) இவை பொருந்திய உரை. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் (அச்சிட்ட பதிப்பு) திவ்ய தேசங்களின் பிரபாவங்களைச் சொல்லுமிடத்து இக்கோயில் விமானம் சோமசுந்தர விமானம் என்றும், கிரியின் பெயர் விருஷபகிரி யென்றும் சொல்லப்படுகிறது. விருஷபகிரி உண்டாய காரணம் திருவிளையாடலின் பின்வரும் பாட்டால் தெளியலாகும்.



“வினையற வந்திறைஞ்சும் எழில் மழவிடையை நோக்கி
மனமகிழ்ந் தளிகளோடு மதிதவழுயர்வி னோடும்
இனிமையிற் கிடத்தி நாமமிடப வெற்பென்னப் போந்த
தனுவொடுங் கிடந்த தோங்கத் தண்டலை மலையதாகி”

இதனால் சிவசம்பந்தமான கோயிலின் சின்னங்கள் இக்கோயிலில் அமைந்திருக்கின்றன எனத் தெரிகிறது. பெரியாழ்வார் திருமொழியிலும்,

“கோவலர்கள் கோவிந்தனை குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவொலி பாடி நடம்பயில் மாலிருஞ்சோலை மலையதே”

“புனத்தினைக் கிள்ளிப் புதுவலிகாட்டியுன் பொன்னடி வாழ்கென்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில்மா லிருஞ்சோலை எந்தாய்”

என்றும், மற்றும் பல திருவாய் மொழிகளிலும் இவ்வாறே பாடினர். ஆகவே, இக்கோயில் குறிஞ்சி நிலத்திருப்பதாய்க் குறிப்பிக்கப்படுகின்றது.

முருகாற்றுப்படையிலும், பழமுதிர்சோலைப் பகுதியின் முதலில், முருகனுக்குக் குறிஞ்சி நிலமக்கள் படையலிடும் செய்தியேதான் முதலில் குறிக்கப்படுகின்றது. குறிஞ்சி நிலமுழுதும் முருகனுக்குரிய இடமாதலாலும் குறவர்கள் முருகனைக் குலதெய்வமாகக் கொண்டவர்களாகையாலும் புனத்தினைக் கிள்ளிப்புதுவலி செய்து முதலில் அம்முருகனுக்கே படையல் போடும் வழக்கத்தை இங்கே திருமாலிருஞ்சோலைக் கடவுளுக்கே அமைத்துப் பாடியிருப்பதால், இக்கோயிலிலுள்ள மூலவர் முருகனாயிருந்ததுவே உண்மை என ஊகிக்கவேண்டுவதாயிருக்கிறது. இன்றைக்குச் சுமார் 300 வருடத்துக்கு முன், கவி பாலசுப்பிரமணியக் கவிராயர் பாடிய பழநி புராணத்துக் கிரிச்சருக்கத்தில்,

“கண்ணோ ராயிர மேற்கொண்டு காண்பரி தாமெம்
அண்ணல் தாரையி லுதித்த கண்ணி ரண்டுடையோன்

விண்ணுறுத கார்மேனியன் வீற்றிருப் பதுபூந்
தண்ணறுவுமிழ் பழமுதிர் சோலை வேதண்டம்"

என்று பன்னிரு கண்களுடைய வேலாயுதமூர்த்தியும் மேகம் போல் மேனியுடைய மாயவனும் இப்பழமுதிர் சோலைமலையில் வீற்றிருக்கிறார்கள் என்றுஞ் சொல்லப்பட்டிருப்பது முன் கொண்ட கருத்துக் கிசைபுடைத்தாயிற்று. ஆகவே, வேலவன் மாலவனாய் மாறிய நிலைமை 300 வருடத்துக்கு முன்னிருக்கவேண்டும். ஆயினும், ஆராய்ந்து உண்மையை உறுதிப்படுத்து முறையில் புராணிகர் நுழையாமல், இருந்த நிலைமையும் இப்போதிருக்கும் நிலைமையும் எடுத்துக் கூறும் வகையில் கவிராயர் நின்றுவிட்டார். பின்னும் திருவேங்கடத்தை,

"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து"

—இயற்பா 3-ம் திருவந்தாதி 63-ம் பாட்டு.

என்று பாடி யிருத்தலும் காண்க. திவ்வியப் பிரபந்தத்தில் பூதத்தாழ்வார் அருளிச் செய்த இயற்பா இரண்டாம் திரு அந்தாதியில்,

"வெற்பென்றிருஞ் சோலை வேங்கட மென்றிவ் விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மையைப் போல்"

எனப் பாடியிருக்கிறார். இதனால், திருவேங்கடமும் பழமுதிர்சோலை மலையும் (முருகனுக்குரியதாயினும்) தம்முடையதென்று கோவிந்தப் பெருமாளும் மதிக்கிறார் என்று ஆழ்வார்கள் திருவாய் மொழியினின்றே ஏற்படுவதால் இவ்விரண்டு தலங்களிலுள்ள மூலவர்களுக்கு இரண்டு தேவர்களின் சின்னங்கள் அமைந்திருப்பதாகக் குறிக்கின்றது.



நம்மாழ்வாரும் வைகுந்தமடையத் திருவுளம் கொண்டு பாடிய கடைசித் திருவாய்மொழியில், கோவிந்தனை, "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" எனப் பாடியிருக்கிறார். இம்மாதிரி திரிமூர்த்தி சொரூபமாகவே அமைந்து பெருமாள் வீற்றிருக்கும் கோயில்கள் இருப்பதும் வெளிப்படை. இத்தலத்துச் சோமசுந்தர விமானம் தூலலிங்கமாகவும், எதிரில் விருஷபகிரி நந்தியாகவும் அமைந்து இருப்பதால் சிவதல இலக்கணங்கள் பொருந்தி யுள்ளன. ஆகையால் சேயவன் மாயவனாய் மாறியிருக்க வேண்டு மென்பதில் சந்தேகமில்லை. திருமாலிருஞ்சோலை மலைப்பெருமான் குறவர்களால் பூசிக்கப் பெறுவது காரணமாகவே அவருக்குக் "கள்ளழகர்" என்ற இழிசிறப்புப் பெயர் அமைந்திருக்கவும் காண்கிறோம். நம்மாழ்வாரும் தம் திருவாய் மொழிப் பிரபந்த முடித்த காலத்தில் தலங்கள் சம்பந்தப்பட்டமட்டில்,

"திருப்பேர் நகரான் திருமா லிருஞ்சோலை
பொருப்பே யுறைகின்ற பிரா னின்று வந்து
இருப்பே னென்றென் னெஞ்சம் நிறையப்புகுந்தான்
விருப்பே பெற்றமுத முண்டு களித்தேனே"

என்று திருமாலிருஞ் சோலை மலையைத் துதித்துப் பாடினார். அவ்வண்ணம், திருமுருகாற்றுப்படையிலும் நக்கீரதேவர் அத்தலத்தையே முடிவாய் மோட்ச நிர்ணயம் பண்ணும் அமயத்துப் பாடியிருத்தலும் காண்க. ஆனால், மாலவன் வேலவனாய் மாறப் பொருத்தங்கள் மட்டும் பல. காட்டு நிலத்துக்குரியவன் கண்ணன்; மேட்டு நிலத்துக்குரியவன் முருகன். காடும் மலையும் நெருங்கியதொடர்புடையதே யன்றோ? வேலனும் கண்ணனும் பாலலீலையாளர்கள். இருபால் தேவியரமைந்த ஒருபான்மையுடையார்கள். வானப் பறவையில் வன்னக் கருடனைவாகனமாய்க் கொண்டவன் கண்ணன். கானப்பறவையில் கவின் மிகுமயிலை வாகனமாய்க்

கொண்டவன் கந்தன். மாமனும் மருகனும் பெண்பால் நண்பு செய்வதில் பெருஞ் சாகசாமர்த்திய சாலிகள். வனமான் கருதி நடந்தவர் திருமால். புனமான் கருதித்தொடர்ந்தவர் குகப்பெருமான். இலங்கை வீரனைச் சங்கரித்த வந்தல் இராமன். கலங்கச் சூரனைச் சங்கரித்த அண்ணல் கந்தன். பெருமையுடைய குரிசில்களைச் சிறப்பிக்க உவமையாக இந்த இருவருமே புலவர்களால் எடுத்தாளப் பெறுவர். பெருமாள் என்ற பெயர் இருவர்க்கும் பொது. தேவர்கள் துயர் தீர்த்தவர் திருமால் - மூவர்கள் துயர் தீர்த்தவன் முருகன் என்பவை பல அமைந்த பொருத்தங்களாம். அது கொண்டே, உண்மைமறைய விட்டுவிடுதல் நலம் அன்று என்பது என் தாழ்ந்த எண்ணம். அன்பர்கள், ஆய்ந்து உண்மைகாண்பார்களாக.

வாகீச முனிவர் அருளிய

# ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும்

(திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவோத்தூர்)

## 7. அகவல்

கண்ணுதல் அண்ணல் விண்ணவர் பணியக்
காளம் ஆண்ட வாளவிர் அங்களத்(து)
எரிமருள் ஈர்ஞ்சடை மதிமுகிழ் அணிந்த
உம்ப ரீசர் உம்பன், "வெம்புறு
பிறவிப் பேரிடர்க் கறையுறு பகுவாய்
உரகத் தாரெயி றுறவீழ்ந்(து), அறவ!
அஞ்சினம், அளியம்," என அமரரும் முனிவரும்,



வெஞ்சினப் பிறவி நஞ்சுக அளித்த*
அருமறை யெவையும் திருமிகு ஞானம்,
இலங்கொளி யோகம், நலங்கிளர் கிரியை
சரியை யென்ற விரிதரு பாதம்†
கறையறு மறைமுறை நெறியின்
அறைய மற்றவோ அறிகதில் அமர்ந்தே.

இது, சிவபிரான் அருளிச்செய்த திவ்வியாகமங்கள் சதுர்ப்பாதமாயிருக்கும்; இவையிற்றைச் சொல்ல அறிக என்றது.

உரைப்பாடம் :—கண்ணுதலும், உம்பனுமாகிய பரமன் அமரரும் முனிவரும், "அறவ, பிறவியுரகத்து, பேரிடர்க்கறையுறு எயிறுஉற, வீழ்ந்து அஞ்சினம் அளியம்" என (வேண்ட), அளித்த அருமறை யெவையும், ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற பாதமாம். (இவற்றை) நெறியின், அறைய அமர்ந்து அறிக என்பது.

உரை :—நெற்றியிலே கண்ணையுடைய தலைவனும், தேவர்கள் பணிந்து வேண்டியதனால், கரிய விடத்தை யுண்டருளிய ஒளி விளங்கும் அழகிய கழுத்தினையும், நெருப்புப்போன்ற நிறத்தையுடைய குளிர்ந்த சடையின்கட் பிறைச் சந்திரனையும் உடைய, தேவர்கட்குத் தேவர்களாயுள்ளார்க்கும் மேம்பட்ட தேவதேவனுமாகிய பரமன், "வெதுப்புகின்ற பிறவியாகிய பாம்பு, பெரிய துன்பமாகிய நஞ்சு பொருந்திய அகன்ற வாயிற் பற்கள் அழுந்தக் கடிப்பதால் சோர்வுற்று, அறவோய்! யாம் பெரிதும் அஞ்சினோம்; அருள்பாலிக்க வேண்டும்" என்று வேண்ட, வெவ்விய சினத்தையுடைய பிறவிப் பாம்பின் விடமாகிய துன்பம்

*நஞ்சுக விரித்த என்றும், †சரியையென வுரை விசிதரு பாதம் என்றும் பாடம். தடித்த சொற்களை நிரலே கூட்டி அகவற் கருத்தினை அமைய அறிக.

கெடுமாறு உபதேசித்தருளிய அரிய மறைகள் யாவும், சிவ போகத்துக் கேதுவாகிய ஞானமும், சிவபரஞ்சுடரைத் தரிசித்தற் கேதுவாகிய யோகமும், சிவநெறியாகிய நலத்தைப் பயப்பிக்கும் கிரியை சரியையும் என்று வகுத்து மேலும் நந் நான்காக விரித்துக் காணப்படும் பாதங்களாகும். இவற்றைக் குற்றமற, ஆகமங்களிற் கூறிய நெறிப்படியே கூற, விரும்பிக் கேட்பாயாக.

அண்ணல், உம்பன் என்னும் ஒரு பொருள் குறித்த வேறு பொருட் கிளவிகள் அளித்த (8) என்னும் பெயரெச்சவினை கொண்டன. காளம், நஞ்சு ஆகுபெயர். கரிய மிடற்றின்கண் கரிய ஒளி கிளர்ந்து விளங்குவதனால், "வாளவிர் அங்களம்" என்றார். "கருங்கதிர் விரிக்குமேனிக் காமரு குழவி" என்று சேக்கிழார் பெருமானும் கூறுவர். காளமாண்ட களம் அந்தணரால் பரவப்படும் அழகுடைமை பற்றி, "அங்களத்து" (2) எனப்பட்டது. "அக்கறை மறைநுவல் அந்தணர் ஏத்தவும் படுமே" (புறம், கடவுள்) என்றார் பாரதம் பாடிய பெருந்தேவனாரும். எரி, ஈண்டு நிறத்தின் மேற்று. மருள், உவமவுருபு. கங்கை தங்கிய செஞ்சடையாகலின், "ஈர்ஞ்சடை" எனப்பட்டது. பிறைமதி என்றற்கு "மதிமுகிழ்" என்றார், சடைக்கு அணியாய் விளங்குதலின். "உம்பர் ஈசர் உம்பன்" (4) என்றதற்கு, "தேவர்களுக்கு மேலாகிய பிரமவிட்டுணுக்களுக்கும் கருத்தாவான பரமசிவன்" என்று பழைய வுரைகாரர் கூறுவர். உம்பன், பரமன்.

இனி, "வெம்புறு" (4) என்பது முதல் "அளியம்" (7) என்பது வரை அமரர் முனிவர்களின் கூற்று. வினையின் பயனாய், பின்னும் அவ்வினை விளைவுக்கேதுவாய், நிலையாதவற்றிற் பற்று உண்டுபண்ணி, அந்நிலையாதது நிலையாதொழியுந் தோறும் நீங்காத துன்பத்தைச் செய்து வருத்துவதால், பிற



வியை, "வெம்புறு பிறவி" யென விசேடித்தார். "செல்
வழிச் செல்வுழி மெய்ந்நிழல்போல" (அகம். ) பிறவித்
துன்பமும், அப்பிறவி தொடருந் தொறும் தொடருந்
தொறும், உயிரைப்பற்றி வருத்துவதால், "பகுவாய் உர
கத்து" நஞ்சொடு உவமித்தார். பற்றிய உயிரை விடாது
பற்றிய வண்ணமே நிற்கும் பண்புடைமை தோன்ற,
"பகுவாய் உரகம்" (5. 6) என்றார். அறமுதலிய செய்தும்,
விரத முதலிய காத்தும் பிறப்பற முயல்வார்க்கு ஓரா வழி
அவாத் தோன்றி நிலைபெற்று, அப்பிறவித் துன்பத்தைச்
செய்தலால், அவ்வவாவினை எயிறாக்கி, அதனால் பிறவி நீங்
காமை யுணர்த்தற்கு "ஆர் எயிறு உற" (6) என்றும், அத
னால் பிறப்பறுத்தற்கண் செயலறுதலின், "வீழ்ந்து"
என்றும் கூறினர். தம்மால் விலக்க மாட்டாமையின்,
"அஞ்சினம்" (7) என்றும், விலக்க வேண்டுதலின், "அளி
யம்" என்றும், அது செய்தல் பரமனுக்கு அறமாதலின்
"அறவ" என்றும் கூறி அமரரும் முனிவரும் வேண்டுவா
ராயினர். வேண்ட என்பது சொல்லெச்சம்; "சொல்லெ
னெச்சம் முன்னும் பின்னும், சொல்லளவல்ல தெஞ்சுத
லின்றே" (தொல். சொல். 441) என்ப.

"வெம்புறு பிறவி" என்றாராகலின், அவ்விலக்கணையே
சிறப்ப, பரமன் செயலினும், "வெஞ்சினப்பிறவி" யென
விதந்தார். அதன் பயனாகிய பேரிடரை அவர்கள் விடத்
தொடு உவமித்தமையின், அதனை உடன்பட்டுத் தழீஇயது
தோன்ற "நஞ்சு" என்றும், அப்பிறவி யேதுவாகவே,
பிறவா நிலை யெய்துவிக்க வேண்டி அதற்குத் தொடர்ச்சி
யான இடர் கெடுப்பான் அளிக்கின்ற மறையென்பது எய்த,
"நஞ்சுக அளித்த மறை" (8 - 9) என்றும், அரிது பெறு
சிறப்பினவாகலின், "அருமறை" என்றும், அம்மறை தாமும்

பல திறத்தவாயினும் எல்லாம் அடங்க, "அருமறை யெவையும்" என்றும் கூறினர்.

எல்லையின்றிப் பெருகும் சிவபோகத்தைத் தரும் பெரும் பொருளாதலின், "திருமிகு ஞானம்" (9) என்றும், சிவ பரஞ்சுடரின் திவ்யமங்களச் செம்மை யொளியினை அகத்துக் கண்கொண்டு தரிசித்தனுபவிக்கும் அறிவுநெறியாகலின், "இலங்கொளி யோகம்" (10) என்றும், "பிறப்பிறப்புக்கட் சேறுவாகாது, அவற்றிற்கு மாறாய்ச் சிவபோக சிவதரிசனச் செம்மை நெறியினை நல்கும் சீரிய செய்கைகளாகலின், "நலங்கிளர் கிரியை சரியை" (10-11) என்றும் கூறினர். இப்பாதங்கள் நான்கும் ஒவ்வொன்றும் தனித்தனி நந்நான்காக விரியும் சால்புடைய வென்றற்கு, தொகையும் மூற்றும்மையுந்தாராது "விரிதருபாதம்" என விசேடித்தொழிந்தார். அவை விரியுமிடத்து, சரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும், கிரியையிற் சரியை, கிரியை யோகம், ஞானம் எனவும், யோகத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும், ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞானம் எனவும் உண்மை நோக்கினவும், உலகப் பயன் நோக்கினவும் எனவிரியும். இனிச் சரியை முதலியவற்றின் இயல்பினை ஆசிரியர் ஸ்ரீமாதவச் சிவஞானமுனிவர் விளங்கவுரைத்திருக்கின்றனர். அது வருமாறு :—(மாபாடியம் : சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு : பக். 471).

"சரியை முதலியவற்றின் இயல்பு என்னையெனிற் கூறுதும். அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான் உயிர்கள் சோபான முறையான் உணர்ந்து உய்தற் பொருட்டுத் தூலமாகவும், சூக்குமமாகவும், அதிசூக்குமமாகவும் மூவடிவங் கொண்டருளும் முறைமையும் அவ்வடிவங்களின் வழிபடும் முறைமையும் வேதாகமங்களில் அவனால் வகுத்தருளிச் செய்யப்பட்டனவாகலான், அம்



மூவகை வடிவின் வைத்துப் பக்குவ முறைமையான் மேம்பட்டுநிகழும் நுண்ணுணர் வின்மையின் சகளமாகிய தூலவடிவமாத்திரத்தைப் பொருள் என்றுணர்ந்து காயத்தொழில் மாத்திரையான் ஆகமத்தின் விதித்தவாறு வழிபடுவது சரியை.

"அஃது அடிப்பட்டுவரவர நிகழும் பக்குவவிசேடத்தான், நுண்ணுணர் வுடையராய் சகள நிட்களமாகிய சூக்கும வடிவமே பொருள், சகளவடிவம் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி என்று இவ்வாறுணர்ந்து, புறத்தொழிலானும் அகத்தொழிலானும் விதித்தவாறே வழிபடுவது கிரியை.

"அஃது அடிப்பட்டுவரவர நிகழும் பக்குவவிசேடத்தான், அதிநுட்பவுணர்வுடையராய், நிட்களமாகிய அதிசூக்குமவடிவமே பொருள், சகளமும் சகளநிட்களமும் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி என்று இவ்வாறுணர்ந்து, அகத்தொழில் மாத்திரையான், ஆண்டைக்கு விதித்தவாறே வழிபடுவது யோகம்.

"மூன்றும் இவ்வாறு முறையே அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ முதிர்ச்சியானே உள்ளவாறு, உணர்வு விளங்கி, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பே சொரூபம், எனைச் சகள முதலிய மூன்றும் தூலாருந்ததி நியாயமாக அதனை யுணர்தற் பொருட்டும் வழிபடுதற் பொருட்டும் கொண்ட திருமேனி என்று இவ்வாறுணர்ந்து, காயத்தொழில், மனத்தொழில் இரண்டனையும் கைவிட்டு, கேட்டல் முதலிய அறிவுத் தொழில் மாத்திரையான் வழிபடுவது ஞானம்."

இம்மறைகள் குறையற்ற பரமனால் அருளப்பட்டனவாகலின், "குறையறு மறை" எனப்பட்டது. இனி, "பிறவி நஞ்சக அளித்த அருமறை" யென்று முற்கூறிய

தனையே வற்புறுத்துவார், "கறையறுமறை" யென்றார் என்றுமாம். இவை தாமும் உயிர்களின் பக்குவ விசேட நோக்கி உணர்த்தப்படும். இயல்புடைய வென்றதற்கு, "முறை நெறியின்" என்றும், கடாவிடை முகத்தால் இந்நெறியினை உணர்த்தும் குறிப்பினராயினமை தோன்ற, "அறைய" என்றும், யாவராலும் எளிதில் உணர்த்தவும், உணரவும் பெறாத அருமை தோன்ற, "அறிகதில் அமர்ந்தே" என்றும் கூறினார். அறிவிக்கின்ற காலத்து மனத்தைச் சிதறவிடாது ஒரு நெறிப்படுத்தி ஓர்ந்துணர்க என்பதுபட நிற்றலின், 'தில்லைச் சொல்' காலங் குறித்து வந்ததாம்; "பெற்றாங்கு அறிதில்லம்ம இவ்வூரே" (குறுந். 14) என்றாற் போல.

இனிப் பழைய வுரைகாரர், "அருமறை யெவையும்"(9) என்றதில் மறை யென்றது "மூலசிவாகமங்கள்" என்றும், "எவையும்" என்றது உபாகமங்கள் பலவற்றையும் என்றும், "இலங்கொளியோகம்" (10) என்றதற்கு, "மேதாதி யுன்மனாந்த தரிசனமாகிய பேரொளியையுடைய யோகபாதம் என்றும் கூறுவர். மேதாதி உன்மனாந்தமாவன, மேதா, ஆர்க்கீச, விஷ, விந்து அர்த்தசந்திர, நிரோதி, நாத, நாதாந்த, சத்தி, வியாபினி, வியோமரூபி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உந்மனை எனப்பதினாறும். இவற்றைத் தரிசிக்கும் யோகத்தைச் சோடசகலாப்பிராசாத யோகம் என்பர்; இவற்றின் விபரத்தைப் பௌஷ்கராகமத்திற் காண்க என்பர் சைவத் திரு. சேற்றூர் - ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள். மற்று, அரோ என்பன அசை. தில்லைச் சொல்லையும் பழைய வுரைகாரர் அசை யென்றே கொள்வர்.

### பாயிரத் திருவகவல் முதற்குறிப்பு

"வெண்டிரை திங்கள் விரிகதிர் அருளுரை
மந்தரம் கண்ணுதல் எழும் பாயிரம்."

பாயிரம் முற்றும்

வாகீச முனிவன் திருவடி வாழ்க.

# இந்து மகா சபையில் சங்கராச்சாரியரின் தலைமையுரை

டாக்டர் குர்த்கோடி யென்னும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் லாகூரில் நிகழ்ந்த இந்துமகா சபையின் ஆண்டு விழாவில் தலைமை வகித்துக் கூறிய பேருரையிற் காணப்படும் சில குறிப்புக்கள் வருமாறு:—

### இந்துமதச் சிறப்பு

இந்து மதத்திற்குரிய சிறப்பு, அது ஒருவருடைய கொள்கையாக இல்லாமல் மிகப் பரந்து, எல்லாக் கொள்கைகளையும் தன்னிடத்தே சமரச நோக்கத்தோடு அடக்கிக் கொண்டிருப்பதே யாகும். மற்றைய மதக் கொள்கைகள் இத்தகைய பரந்த நோக்குடையனவல்ல. இந்து தருமம் ஒரு சட்ட திட்டத்திற்குட்படாது எல்லா மக்கட்கும் எல்லாக் காலத்தும் எவ்விடத்தும் பொருந்தக் கூடிய இயற்கையையுடையது. இம்மதத்திற் கூறப்பட்டுள்ள சீவான்ம பரமான்ம நிலைகளும் எல்லா அறிஞர்களாலும் ஒப்பத்தக்கனவாகும்.

### மதச் சண்டைகள்

கடவுள் உருவுடைப் பொருளுமன்று, அல்லாத பொருளுமன்று. இந்துக்களாகிய நாம் கடவுளிடத்தில் உருவ நிலையையும், உருவமில்லாத நிலையையும் காண்கிறோம். அப்பொருள் இவ்விரு நிலையையுங் கடந்தே விளங்குகிறது. இஃதறியாத பிறமதக் கொள்கையினர் கடவுளுக்கு உருவமுண்டென்னுங் கொள்கையை வெறுக்கிறார்கள். கடவுள் நாமரூபங்களைக் கடந்திருப்பினும், வழிபாடு செய்தற் பொருட்டுச் சில உருவங்களைக் கடவுளுக்கு அறிகுறியாக அமைத்துக் கொள்வது பகுத்தறிவுடையவர்களால் ஒப்பக் கூடியதாகும்.

உருவ நிலையை மறுத்துப் போராடும் பிற மதத்தினரும் ஒரு புத்தகம், மசூதி, மாதாகோயில், குரு என்று ஏதாவதொன்றைக் கொண்டே யிருக்கின்றார்கள். குற்றமற்ற இவ்வற்ப அபிப்பிராய பேதத்தை முன்னிட்டுச் சமயத்தின் பெயரால் போர் புரிந்து இரத்தத்தையுஞ் சிந்துவது மிகவும் பரிதபிக்கத்தக்கதாகும். இன்னும் தூய்மையுள்ள குரானில் மசூதியின் முன்னர் வாத்தியங்கள் வாசிக்கக் கூடாதென்னுங் கட்டளை யிருந்தால் அதைக் கொண்டுள்ள மதத்தினர் அதற்குக் கீழ்ப்படிய வேண்டியதே. ஆனால் அவர்கள் இந்துக்களை, இந்துஸ்தானமாகிய இந்நாட்டிலே, சந்தடி நிறைந்த தெருக்களிலே, இந்து மதக் கொள்கையின்படிச் செய்யப் பெறும் திருவிழாக் காலங்களிலே வாத்தியம் வாசிக்கக் கூடாதெனத் தடுத்துப் போர் புரிவதன் காரணத்தை அறியக் கூடவில்லை. அடிக்கடி ஏற்படும் இச்சச்சரவு நாணத்தக்கதே. மக்களெல்லோருக்கும் பொருத்தமுள்ள இந்து சமயக் கொள்கைகளைப் பிற மதத்தினரும் உணருமாறு செய்தால் மாத்திரமே இச்சச்சரவுகளுக்கு இடமில்லாம லிருக்கும். இந்நோக்கத்தை நிறைவேற்ற இந்துக்கள் விழித்தெழல் வேண்டும்.

## தீண்டாமை

தீண்டாமை இப்போது இருக்கக் காரணமில்லை. அஃது உண்டாவதற்குக் காரணமாக இருந்த நிலைமைகள் இப்போது இல்லை. மகா பாரதத்திலே "சமயம் பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும்; மற்றவர்கள் செய்வதையே நாமும் செய்வதென்பது அதன் பொருளன்று. காலத்திற்குத் தக்கவாறு சமயம் இருத்தல் வேண்டும்." என்றும், ஸ்ரீ சங்கரர் அருளிய கீதை பாஷ்யத்திலே "காரணங் காண முடியா விடத்தேதான் சாஸ்திரத்தைக் கொள்ள வேண்டும்" என்றும் கூறும் அரிய உபதேசங்களை அறியாத சிறு கூட்டத்



தினரே தீண்டாமையை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாளுக்கு நாள் தம் தொகையில் குறைந்து கொண்டேதான் போகிறார்கள். தீண்டாமை சீவகாருண்யத்திற்கு விரோதமாக விருக்கிறதென்றும், அது கருதியாவது தீண்டாதார்க்கு அவர்களுடைய உரிமையை வழங்க வேண்டுமென்றும் சிலர் சொல்லுவதை யான் ஒப்புக் கொள்ளவில்லை. தீண்டாதாருடைய நிலைமைக்கு இரங்கி நான் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று கூறவில்லை; அவர்கள் இனிமேல் தீண்டாதாராக விருக்கக் காரணமில்லையென்றே அத்தீண்டாமையை ஒழிக்கச் சொல்லுகிறேன். ஆகவினாற்றான் 'ஹரிஜனங்கள்' என்னும் பெயரை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அப்பெயர் தருமத்தையும் இரக்கத்தையுமே குறிக்கிறது. மேலும் பெயர் மாற்றத்தினாலேயே தீண்டாமை ஒழிந்துவிடாது.

## மதமாற்றம்

தீண்டாதார் சீக்கியராகலாமென்னும் விடயம் யோசிக்கப்படுகிறது. தங்களுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவே சீக்கியர்களாக விரும்பும் தீண்டாதார் அவ்வாறே செய்யலாம். நாஸிக்கில் கோவில் நுழைவிற்காகச் சத்தியாக்கிரகம் நிகழ்ந்தபோது தீண்டாதாருடைய பொறுமையற்ற தன்மையையும், சனாதனிகளுடைய பிடிவாதத் தன்மையையுங் கண்டேன். ஆகலின் அத்தீண்டாதார் தங்களுக்குள்ளாகவே ஒரு பிரிவை அமைத்துக் கொள்ளலாமென்றும், இல்லாவிட்டால் இந்து மதத்தினரில் தீண்டாமையை ஒழித்த ஒரு பிரிவினரோடு சேர்ந்து விடலாமென்றும் டாக்டர் அம்பேத்காருக்குக் கூறினேன்.

இந்து மதத்திற் பிறந்தவர்களே இந்துவாகலின் பிற மதத்தினரை இம்மதத்தில் சேர்த்துக்கொள்ளல் கூடாதென

இந்துமதத் தலைவர்கள் சில நூற்றாண்டுகளாகக் கொண்டிருந்த தவறான கொள்கையினால் அவர்கள் இந்துசமூகத்திற்கே பெரு நஷ்டத்தை விளைத்தார்கள். ஒரு பகுதியினர் இன்னும் அக் கொள்கையை விடவில்லை. இது பொருந்தாது. இந்து மதத்தில் ஒருவரை என்றும் வற்புறுத்திச் சேர்த்துக் கொள்ளவில்லை யென்பதுண்மையே. பண்டைக் காலத்திருந்த ஆரியர்கள் அன்னியரைத் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் அது ஆடம்பரச் சடங்குகளின்றியும் மெதுவாகவும் நிகழ்ந்ததாகலின் அதனைப் பலர் அறியவில்லை. இப்போது இந்துக்கள் பிறமதத்தினரைச் சேர்த்துக் கொள்ள முயல வேண்டாம். அவர்களே விரும்பி வருவார்களானால் அவர்களை மாத்திரம் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால், இந்துக்களாகப் பிறந்தும் அவர் தம் அறியாமையாலோ அல்லது நம் அசட்டையினாலோ பிற மதங்களைத் தழுவியவர்களைத் திரும்பவும் இந்துமதத்திற் சேர்த்துக் கொள்ள இடைவிடா முயற்சி செய்து உறுதியாக உழைக்க வேண்டுமென வற்புறுத்துகிறேன். இத்தொண்டை இந்து மஹா சபை கைக்கொள்ள வேண்டும். இன்னும், பிறப்பினால் மாத்திரமல்லாமல் பின்னர்த் தழுவிக்கொண்டதனாலும் இந்துவானவர்கள் யாவரும் சேர்ந்ததே இம் மஹா சபையாகு மென்பதைச் சபையார் நினைவு கூர்தல் வேண்டும்.

## இந்து மகா சபையின் கடமை

இந்து மதம் ஓர் உயிருள்ள பலமான மதமாகவிருந்து உலக முழுவதுமுள்ள மக்களுடைய நன்மைக்காக உழைக்க வேண்டுமானால், இந்து சமூகம் திருத்தி யமைக்கப்படல் வேண்டும். இந்து தருமத்தை உயிர் நிலையாகக் கொண்டும் அறிவியல் ஆராய்ச்சியை ஆதரித்தும் சொல்லிலும் செயலிலும் ஒத்துழைக்கப் போதிய மன வன்மையையும் உடல் வன்மையையும், மக்கள் பெறச் செய்தல் வேண்டும். இம் மாறுதலை உண்டாக்கவல்லது இந்துமகா சபையேயாம்.

மா. து.

# திருக்குறளுண்மை

[கா. ஆலாலசுந்தரம் பிள்ளை]

எழுத்துக்களைப்போல் உள்ளது உலகம். அஃதாவது
உயிரெழுத்து மெய்யெழுத்து என இருவகை. அஃதேபோல்
இயங்கியற் பொருள் நிலையியற் பொருள் எனவும், உயிருள்
பொருள் உயிரில் பொருள் எனவும், அசையும் பொருள்
அசையாப் பொருள் எனவும், தாபர சங்கமங்கள் எனவும்
சொல்லப்படும் பெயருள்ளனவாய்க் காணப்படும் சராசரங்
கள் இருவகைத்து.

இனி இயங்குந் தன்மையுடைய உயிரெழுத்தும் இயங்
காத் தன்மையுடைய மெய்யெழுத்தும் அகரம் என்னும்
ஓரெழுத்து அவற்றுடன் கலந்து இயங்கவும் அசங்கவும்
செய்வதனால் அவ்விருவகை எழுத்தும் அவ்விரு தன்மை
யும் பெறுதல்போல் சரங்களாகிய ஆன்மாக்களும் அசரங்க
ளாகிய மூவகை மாயைகளும் பகவனாகிய இறைவன் ஒரு
வன் கலந்து ஆன்மாக்களை அறியுஞ் செயலிலும் மாயை
களைத் தனுகரண புவனபோகங்களாகக் காரியப்படுஞ் செய
லிலும் தலைப்படச் செய்வதனால் அவ்விருவகை உலகமும்
அவ்விரு தன்மையையும் பெறுகின்றன. ஆகவே, இருவகை
எழுத்தும் அகரத்தை முதலாகவுடையது போல் இருவகை
யுலகமும் ஆதிபகவனை முதலாகவுடைத்து என்று கூறிற்று.

அகரம் போன்ற ஆதிபகவன் என்னை இலக்கணமுடை
யவனெனின்,—வாலறிவன் (மெய்யறிவினை யுடையவன்),
வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன், இருள் சேரா
இருவினையும் சேராதவன், பொறி வாயில் ஐந்தவித்த
வன், அறவாழியந்தணன், தனக்குவமையிலாதான், எண்
குணத்தான்.

ஆதிபகவனாகிய இறைவனை அகரம் போன்றவனென்று
முன்னர்க் கூறியிருத்தலால் 2-வது செய்யுளில் மெய்யறிவன்
என்றார். எனவே, அறிவுடை ஆன்மாக்களை (மெய் உறுப்பு

முதலியவற்றோடு கூட்டி) போகங்களை யனுபவிக்கும் வகை
யான் அவ்வான்மாக்களுடைய அறிவினை விளங்கச் செய்யும்
மெய்யறிவினையுடையவன் (ஆன்மாக்களுக்குள்ள மெய்யினைப்
போல் அல்லாமல் அறிவினையே திருமேனியாகவுடையவன்)
என்றார்.

ஆன்மாக்கள் போகவழியான் அறிவு விளங்க வருங்
காலத்து அப்போகங்களை அனுபவித்தற்கு ஐம்பொறிகள்
வாயிலாகவுள்ளனவாகலானும் அவ்வாயிலின் வழியாக அறிய
வரும் சத்தமுதலிய ஐந்து விஷயங்களும் தோன்றுத
லானும் அவையிற்றில் அவாவானது ஒன்று செல்லுத
லானும் செல்லுங்கால் வேண்டுதல் வேண்டாமை என்கிற
ஒரு விகற்பமும் அவ்விகற்பத்தான் இருள்சேர் இரு
வினையும் உண்டாகலினானும் இவ்வெண் வகையினும் சென்று
சென்று வருதலாகிய மனம் துணைக் காரணமாய் நிற்றலின்
அம்மனமாகிய நெஞ்சத்தின்கண் வாலறிவன் ஏகி நிற்பவன்
என்றார்.

அறிவாகிய திருமேனியுடையவனுக்கு (1) வேண்டுதல்
வேண்டாமையும் (2) இருவினையும் (3) ஐம்பொறிவாயிலும்
(4) அவாவும் இல்லையாகலான் அவன் தனக்குவமையில்லாத
வனாய்ப் பூமலரில் வசிப்பது போல் ஏகியிருப்பவனாயினான்.

அங்ஙனமிருந்து அறவாழியனாய் ஆன்மாக்களுக்குப்
பிறவாழி (பொருள் இன்பங்களைக்) கொடுப்பவனாய் அங்ஙனங்
கொடுக்கு முறையில் (1) தன் வயத்தனாதல் (2) தூயவுடம்
பினனாதல் (3) இயற்கையுணர்வினனாதல் (4) முற்றுமுணர்தல்
(5) இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குதல் என்னும்
ஐவகைக் குணங்களால் ஆன்மாக்களுக்குப் பந்தத்தை நுகர்
வித்துப் பின் அப்பந்தத்தை நீக்கி (1) பேரருளுடைமை
(2) முடிவிலாற்றலுடைமை (3) வரம்பிலின்பமுடைமை என்
னும் முக்குணங்களான் முத்தியின்பத்தைத் தந்து பிறவிப்
பெருங் கடலைக் கடக்கச் செய்வன் என்று பத்துக் குறளாற்
கூறினார்.

(இது பதி இலக்கணம்)



இனிப் பசு விலக்கணம்:—இவைகளில் கூறிய முறை
எங்ஙனமெனின், (1) வேண்டுதல் வேண்டாமை (2) இருள்
சேர் இருவினையும் உடையனாதல் (3) அவற்றான் பொறிவாயி
லின் வழியே செல்லும் ஐந்து அவாவினையுடையனாதல் (4)
மனக் கவலை யுடையனாதல், (5) பொருள் இன்பங்கள் கை
கூடப் பெறாது வருந்தல், (6) அவ்வருத்த மிகுதியான்
கொள்ளத் தகும் குணமிலனாய்ப் போதல், (7) குணமிலனா
கவே எண் குணத்தானது அடியைச் சேர்வதற்கின்றிப்
பிறவிப் பெருங் கடலில் ஆழ்ந்து கிடப்பன் என்றதேயாம்.

இனிப் பாச விலக்கணம்:—வேண்டுதல் வேண்டாமை
முதல் குணமிலனாய்ப் போதல் ஈறாகக் கூறிய எழுவகையுமே
யாம். இவ்வெழுவகையும் பாசவிலக்கணமாயின் முன் இவற்
றைப் பசுவிலக்கணம் என்றுகூறியது பொருந்துமோ எனின்
பொருந்தும். என்னை ? பசுக்கள் சார்ந்ததன் வண்ணமாக
இருத்தலை யன்றித் தனக்கென ஓரிலக்கணம் இலர். இதனை
லன்றே பசுக்களைச் சார்போதமுடையவரென்றது.

அதுவேயுமன்றி அவர்களைச் சதசத்தர்கள் என்று கூறி
யிருத்தலால் அதனுண்மையை இனிப் பேசுவாம்.

இவ்வதிகாரத்தில் (1) வாலறிவன் நற்றாள் என்றும்,
(2) தனக்குவமை யில்லாதான் தாள் என்றும், (3) அறவாழி
யந்தணன் தாள் என்றும், (4) எண்குணத்தான் தாள் என்
றும் நான்கு குறளில் கூறியுள்ளார்.

முதலில் கற்றதனால் என்றதனால் கேட்டலும் மனக்
கவலை என்றதனால் சிந்தித்தலும், பிறவாழி என்றதனால்
தெளிதலும், வணங்குதல் என்றதனால் நிட்டையும் கூடுவ
தாகிய முயற்சியைக் குறித்ததென்க.

இந்நால்வகை முயற்சியும் கூடினார்க்குப் பிறவிக் கடலைக்
கடத்தவல்லதாகிய அவனடி நெஞ்சமாகிய மலர்மிசைக் கண்
பொருந்தியிருக்கும் தன்னுருவைக் காட்டி யாண்டும்இடும்பை
இலவாகச் செய்யும் அவ்வுண்மை யுணர்தற்குப் "பிறவிப்
பெருங் கடல்........இறைவனடி." என்றும் "மலர்மிசை யேகி

னுன் மானடி'' என்றும், ''வேண்டுதல் வேண்டாமையிலா னடி'' என்றும் மூன்று குறளிற் கூறியுள்ளார்.

தாள் என்பது - முயற்சி என்னும் பொருளைத் தருத லால் கேட்டலாதி நான்கினையும் செய்ய வேண்டுமென்று குறித்தற்கு நான்கு திருக்குறளில் தாள் என்னும் பதத்தை யும் அந்நால்வகை முயற்சியும் கைகூடினார்க்கு இறைவனடி யானது நெஞ்சத்தின்கண் ஆதாரமாய் நின்று எங்கும் துன் பங்களை யொழித்துத் தன்னை வணங்கச் செய்யும் பயனைக் குறித்தற்கு மூன்று குறளில் அடி என்னும் பதத்தையும் அமைத்துக் கூறினார்.

---

## திருக்குறள்—கடவுள் வாழ்த்து

உலகிற்கு முதற்கடவுளாக வுள்ளவர் பகவான் என்னுந் திருநாமமுடையவர். அவர் எப்படி முதற்கடவுள் என்றால், எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலா யிருப் பதுபோல் முதற் கடவுளாக வுள்ளவர் என்று முதற் குறளிற் கூறினார்.

அக்கடவுள் ஞான சொருபமாக இருப்பவர் என்பது தோன்ற வாலறிவன் என்றார் என்றும், அறிவினா யிருத்த லால் அம் மெய்யறிவினை யறிதற்குக் கல்வியறிவு வேண்டு மாதலால் கல்வியறிவைக் குறித்தும் அம் மெய்யறிவினைக் குறிக்கும் கல்வி ஆகம நூலேயாகலான் ஆகம அறிவென் றும், அவ்வாகம அறிவால் மெய்யறிவாய் விளங்குங் கட வுளை அறிந்தபின்னர் அவருடைய நற்றாளைத் தொழுதலே பயன் என்றும் இரண்டாவது குறளிற் கூறினார்.

மெய்யறிவினா யிருக்கும் அக்கடவுளுக்கு அறிவு வடிவாயிருக்கும் நெஞ்சமே இடமென்றும் அந்த நெஞ்சினிட மிருந்தும் அவன் காணப்படாமையால் அவனைக் காணும் பொருட்டு அவனை இடைவிடாது நினைத்தால் மலரின்கண் வெளிப்படும் மணமும் தேனும்போல் இனிமையுடன்



வெளிப்படுவான் என்றும் இடைவிடாது நினையாமற்போனால் வெளிப்படா அரும்பினிடத்திருக்கும் மணமும் தேனும் திருத்தல்போல் வெளிப்படாதிருப்பான் என்றும், ஆகலான் இடைவிடாது நினைத்தால் நெஞ்சமாகிய மலர் அன்பினால் மலருமென்றும், அங்ஙனம் மலருங்காலத்து அந்நெஞ்சினுள் ளிருக்கும் இறைவன் வெளிப்படுவானென்றும் மூன்றாவது குறளிற் கூறினார்.

இம்மூன்று பாட்டானும் உலகிற்கு முதற்கடவுள் ஒரு வன் உண்டென்றும், அவன் மெய்யறிவாய் விளங்கும் ஞான சொரூபி என்றும், அவன் அறிவெனப்படும் உயிர்களது நெஞ்சத்தினிடத்து அரும்பின்கண் மணமும் தேனும் வெளிப்படாதிருத்தல்போல் வெளிப்படாதிருப்பன் என் றும், அப்படி வெளிப்படாதிருக்குங் கடவுளை இடைவிடாது நினைத்தால் அரும்பொழிந்த மலரின்கண் மணமும் தேனும் வெளிப்படுதல்போல் வெளிப்படுவனென்றும் கூறப்பட்டது.

மணம் என்பது கடவுள்; தேன் என்பது அவ னது நற்றாள்; ஆதாவது அவனது இனிய அருள்.

கடவுளது மாணடியை இடைவிடாது நினைப்பவர் எல்லா வுலகிற்கு மேலாகிய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வாரென்று கூறியதனால் அவ்வாழ்வினைக் கூட்டாது தடுப்பன மூன்று. அவை வேண்டுதல் வேண்டாமை, இருள்சேர் இருவினை, மெய்வாய்கண்மூக்குசெவி என்னும் பொறிகளை வாயிலாகவுடைய ஐந்தாசை இம்மூன்றுமேயாம். இம்மூன்றும் ஆணவம் கன்மம் மாயை என்னும் இம் மும் மலங்களும் உயிர்களிடத்து உண்மையால் ஆணவமலமானது வேண்டுதல் வேண்டாமையையும், கன்ம மலமானது நல்வினை தீவினை என்னும் இருவினைகளையும், மாயா மலமானது பொறிகளின் வழியே செல்லும் ஐந்து ஆசைகளையும் விளை வித்து மேனிலமாகிய வீட்டில் உயிர்களைச் செல்லவொட் டாது கீழ்நிலமாகிய இந் நிலவுலகிற் பிறப்பினின்றும் மாறாது வாழச் செய்யும்.

ஆகலான் நெஞ்சமென்னும் அரும்பில் மறைந்து நின்ற
கடவுளை அன்பினாலே அந்நெஞ்சத்தினின்றும் வெளிப்படக்
கண்டு அவ்வறிவாய் விளங்கும் ஞான சொரூபி எனப்படும்
நிஷ்கள வடிவினையுடைய கடவுளை இடைவிடாது நினைக்கவே
அக்கடவுள் மேலே சொல்லிய மும்மலங்களையும் ஒழித்தற்கு
உயிர்கள் நினைக்கும் வடிவோடு வெளிவருவான். அங்ஙனம்
வந்த அவனிடத்து வேண்டுதல் வேண்டாமையைச் செய்யும்
ஆணவமலம் இல்லையாகையினால் அவனடியைச் சேர்ந்தால்
(இடைவிடாது நினைத்தால்) எப்பிறவியிலும் வேண்டுதல்
வேண்டாமையைச் செய்து துன்பப்படுத்துவதாகிய ஆணவ
மலம் ஒழியும் என்று நான்காவது குறளிற் கூறினார்.

கடவுளுக்குரிய குணங்களில்லாதவர்களாகிய கடவுளரை
முதற் கடவுளுக்குரிய குணங்கள் இவர்களும் உடையரெனக்
கருதி அவர்களை வாயினாற்புகழாது முதற் கடவுளுக்குரிய
குணங்கள் முற்றவுமுடைய முதற்கடவுளை வாயினால் இடை
விடாது புகழ்ந்து சொல்வாராயின் உயர்திணைப் பிறவிகளையும்
அஃறிணைப் பிறவிகளையும் மாறிமாறி கொடுத்து வருவ
தாகிய நல்வினை தீவினைகளைச் செய்விப்பதாகிய கன்மமலம்
ஒழியும் என்று ஐந்தாவது குறளிற் கூறினர்.

நெஞ்சமாகிய உள்ளத்தின்கண் நிஷ்களவடிவத்தையும்
கட்புலனாற் காணப்படுவதாயிருக்கும் சகள வடிவத்தையும்
இடைவிடாது நினைத்தும் அவ்விருவடிவாயிருக்கும் அம்முதற்
கடவுளதுபொருள் சேர்ந்தபுகழை இடைவிடாது வாழ்த்தியும்
வருங்கால் நினைத்தலும் வாழ்த்தலுமாகிய இச் செயல் கூடுவ
தற்கு முன்னுள்ளதாகிய ஆசையானது ஐம்பொறி வழியிலே
சென்று சென்று உயிர்கள் நிற்க வேண்டிய ஒழுக்கநெறியில்
அவ்வுயிர்களை நிற்கவொட்டாது மயக்குவதாகிய மாயாமல
மானது இம்மாயாமலமில்லாத முதற் கடவுளால் நியமிக்கப்
பட்ட ஒழுக்கவழியில் நிற்கவரும். வருங்கால் ஐந்தாசையை
விளைவிக்கு மாயாமலமானது ஒழியுமென்று ஆறுவது குறளிற்
கூறினர்.



இம் மூன்றுபாட்டானும் முதற்கடவுள் ஆணவமுதலிய
மும்மலங்களும் வேண்டுதல் வேண்டாமை முதலியன
வாகக் கூறப்பட்ட அம்மும்மலங்களின் காரியங்களும்
இல்லாதவனென்றும், அக்கடவுளால் விதிக்கப்பட்டநெறியே
நல்லொழுக்க நெறி என்றும், உயிர்கள் மும்மலங்களையும்
மும்மலங்களின் காரியங்களையும் உடையவரென்றும், அவற்
றால் இடைவிடாது வேண்டுதல் வேண்டாமையினும் நல்
வினை தீவினைகளினும் ஐந்தாசைகளினும் அலைந்துழன்று
துன்பப்படுகின்றவர்களென்றும், அத்துன்பத்தை நீக்கிக்
கொள்வதற்கு முதற் கடவுளை நெஞ்சத்தின்கண் இடை
விடாது நினைந்திருத்தல் போல் வெளியே ஆலய முதலிய
வற்றிற் காணப்படும் உருவங்களிடத்தில் அன்போடு இடை
விடாது நினைத்தால் ஆணவமலமும் அதன்காரியமாய் வருந்
துன்பமும் ஒழியும் என்றும், கடவுளது பொருள் சேர்ந்த
புகழை வாக்கினால் எப்பொழுதும் போற்றினால் கன்மமல
மும் அதன்காரியமாகிய நல்வினை தீவினையான்வரும் துன்பங்
களும் ஒழியும் என்றும், கடவுளது ஒழுக்க வழியில் மெய்
வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும் நின்றால்
மாயாமலமும் அதன் காரியமாய் வரும் துன்பங்களும் ஒழியு
மென்றுங் கூறியவாறும்.

முதற் கடவுளல்லாத திருமால் முதலாகச் சொல்லப்
பட்ட எல்லாக் கடவுளரும் வேண்டுதல் வேண்டாமையுடை
யராயும் நல்வினை தீவினைகளைச் செய்பவராயும் ஐந்தாசை
களை அழிக்காதவராயும் உள்ளவர் என்பதை அவரவர்
புராணங்களினாலேயே அறியக்கிடத்தலான் அவர்களையெல்
லாம் மும்மலங்களையும் அவற்றின் காரியங்களையும் இல்லாத
வனாய் வால் அறிவனாய் மலர்மிசையேகினனாய் இருக்கும்
முதற் கடவுளோடு ஒப்பாகச் சொல்வதற்கு ஓரிலக்கணமும்
வெளிப்படாமையான் அம்முதற் கடவுளைத் தனக்குவமையில்
லாதவனென்றும் மேலே சொல்லிய ஐந்தாசைகளிலும்
தலைப்பட்டுழல்வதாகிய மனமானது காமம் வெகுளிமயக்க
மென்னும் இம்மூன்றினுட்பட்டு கவலை யடைந்திருக்கலால்

அக்கவலையானது மேற் சொல்லிய தனக்குவமையில்லா தானது தாளை இடைவிடாது நினைவார்க்கு இடைவிடாது வருத்துவதாகிய காம முதலிய மூவகைக் கவலையை நீக்கக் கூடுமென்றும் அவன் தாளை நினையாதார்க்கு ஒருவாற் றானும் நீக்குதலுண்டாகாது என்றும் ஏழாவது குறளிற் கூறினர்.

உயிர்களுக்கு மனக்கவலை யுண்டாக்குவதற்குக் காரணம் பொருள் இன்பம் என்னும் இருவகையினையும் தாங்கள் எண் ணியவாறு அடையவும் அனுபவிக்கவுமில்லாமல் போகின்ற படியால் என்றும் அப்பொருளும் இன்பமும் அறத்தாலன்றி அவை முற்றுப்பெறுதென்றும் அந்தத் தருமவடிவமாய் நிற்ப வன் மேலே சொல்லிய முதற்கடவுளா யிருத்தலால் அவன் தாளை இடைவிடாது நினைப்பின் பொருளும் அடையவரும் இன்பமும் அனுபவிக்கவரும் என்றும் அவன் தாளை இடை விடாது நினைந்து வாழாராயின் பொருளின்பங்களைப்பற்றிய காம வெகுளி மயக்கங்கள் நீங்காவென்றும் எட்டாவது குறளிற் கூறினர்.

அம்முதற் கடவுள் மும்மலமற்றவனும் தனக்குவமை யில்லாதவனும் அறவாழியந்தணனும் இருப்பதேயன்றித் 1தன் வயத்தனாதல் 2தூயவுடம்பினனாதல் 3இயற்கையுணர் வினனாதல் 4முற்றும் உணர்தல் 5இயல்பாகவே பாசங்களில் நீங்குதல் 6பேரருளுடைமை 7முடிவிலாற்றலுடைமை 8வரம்பி லின்பமுடைமை என்று எண்ணப்பட்ட எண்குணங்களை யுடையவனுமிருப்பவன் என்றும் கூறப்பட்டிருத்தலால் அவனது தாளைத் தலையால் வணங்கவேண்டுமென்றும் வணங்காமற் போனல் அக்கடவுளைக் காணாத கண் முதலிய ஐம்பொறிகள் எப்படிப் பயனில்லை யென்று சொல்லப் படுமோ அவை போலும் இதுவும் பயனில்லை என்றும் ஒன்ப தாவது குறளிற் கூறினர்.

இம்மூன்று திருக்குறளானும் முதற்கடவுளாகிய இறைவனை நினைத்தவர்க்கு யாண்டும் இடும்பையில என்றதுபோல் நினை யாதார்க்கு மனக் கவலை மாற்றல் அரிதென்றும், வாழ்த்தின



வர்க்கு இருள்சேர் இருவினையும்சேரா என்றதுபோல் வாழ்த் தார்க்கு இருவினைக்குக் காரணமாகிய பொருளின்பங்களை நீத் தல் அரிதென்றும், அவனது ஒழுக்க நெறியில் நின்றவர் நீடு வாழ்வார் என்றதுபோல் தலையால் வணங்குதலாகிய ஒழுக்க நெறியில் நில்லாதவர் ஒருவாற்றானும் பயன்படாதவரா யழிவ ரென்றுங் கூறப்பட்டன.

எனவே, இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங் கலும் செய்யா திருப்பது குற்றமாமென்றும் அக்குற்றத் தால் பொருளின்பங்கள் எண்ணியவாறே நிரம்பப் பெறாது மனக் கவலை யடைந்திருப்ப ரென்றுங் கூறியவாறும்.

தனக்குவமை யில்லாதானும் அறவாழியந்தணனும் எண்குணமுடையானும் உள்ள இறைவன் அடி என்னும் புணையைச் சேர்ந்தவர் பிறவி என்னும் பெருங் கடலை நீந்து வர். அவ்வடியைச் சேராதவர் பிறவி யென்னும் கடலைச் சேர்ந்து அக்கடலை நீந்தமாட்டாராய் அப்பிறவி என்னும் கட லுள்ளே ஆழ்ந்து விடுவர் என்று பத்தாவது குறளிற் கூறினர்.

கடலானது மிக்க ஆழமுடையதாயும் நீங்காத பல அலை களையுடையதாயும் இருத்தல்போல இப்பிறவி என்னும் கட லும் மிக்க ஆழமுடைத்தாய் வேண்டுதல் வேண்டாமை நல் வினை தீவினை என்னும் பல அலைகளை மிகுதியாக உடைத்தா யிருத்தலால் பிறவிப் பெருங் கடலென்னும் கடல் ஆழத்தை யும் பல அலைகளையும் பல உடைத்தாயிருப்பினும் ஒரு புணை யைப் பற்றிக் கொண்டார் அக்கடலின் கரையைச் சேர்தல் எளிதாதல்போல எண்குணமுடைய இறைவனது அடியைத் தன்மனத்தே பற்றி இடைவிடாது நினைந்தால் பிறவிப் பெருங்கடலினின்றும் நீங்கிப் பிறவாமையாகிய முத்திக் கரையை எளிதாகச் சேரலாமென்றும் கூறியவாறும்.

இவ்வதிகாரத்தால் முதற்கடவுள் திருநாமம் பகவான் என்றும் அவனது வடிவம் மும்மலங்களின் சம்பந்தமற்ற மெய்யறிவாகிய ஞான சொரூபமென்றும், அவனது குணம் எண்குணமென்றும்,அவனது செய்கை அவரவர் செய்யுந் தரு மங்களை ஏற்றுக்கொண்டு அத் தருமங்களுக்கேற்றபடி

பொருளையும் இன்பத்தையுங்கொடுக்குஞ் செயலென்றும், அவனிருக்கும் இடம் அன்புடையவர்களது நெஞ்சமென்றும் நெஞ்சிலிருக்கும் அக்கடவுளை உள்ளத்தினிடத்திலும் அவரவர் வேண்டுகோளின்படி உலகத்தினிடத்தில் காணப்படும் வடிவங்களிடத்திலும் அன்புடையராய் ஐம்புல வழியிற் செல்லும் ஐந்தாசைகளையுங் கெடுத்து கடவுளால் விதிக்கப்பட்ட ஆகம நூல் வழியில் நின்று அதிற் கூறியுள்ளபடி அக் கடவுளை இடைவிடாது நினைத்தும் அக்கடவுளது பொருள் சேர்ந்த புகழை இடைவிடாது வாழ்த்தியும் தலையால் வணங்கியும் வருவார்க்குப் பிறவி என்னும் பெருங்கடலில் அலைகள்போலுள்ள வேண்டுதல் வேண்டாமை நல்வினை தீவினை ஐந்தாசை · அவ்வாசைகள் செல்லும் பொருளின்பங்கள் என்னும் இவைகள் மனத்தின் கண்ணே தங்கி இடை விடாமல் கவலைப்படுத்துவதாகிய அக் கவலையை மாற்றி மெய்ப் பொருளையும் பேரின்பத்தையும் கொடுத்துத் தன்னடி யாகிய அருளைப்பற்றுவித்து பிறவியாகிய பெருங்கடலைக் கடக்கச் செய்து முத்தி என்னும் வீட்டில் வாழ்தலாகிய நித்யவாழ்வைத் தந்தருள்வனென்றுங் கூறியவாறும்.

இவ்வுண்மையான் முதற் கடவுளைத் தனக்குவமையில்லாதான் என்றார். எனவே பிறவிக் கடலில் பொய்ப் பொருளைப் பற்றியும் சிற்றின்பங்களைப் பற்றியும் கவலைப்படுகின்ற மனக் கவலையை யொழித்து அருளைப் பற்றுவித்துப் பிறவிக் கடலைக் கடப்பித்து எல்லா நிலங்களுக்கு மேலாகிய முத்தி நிலமிசை வாழச் செய்தலாகிய இப்பொருளுடைமையும் முடிவிலாற்ற லுடைமையும் இம்முதற் கடவுளொழிந்த ஏனைய கடவுளர்க்குச் சிறிதுமில்லை என்பது துணியவேண்டித் தனக்குவமையில்லாதான் என்றார்.

# பிரார்த்தனையின் நலம்

[உதவிப் பத்திராசிரியர்]

இப்பொருள் குறித்து லண்டன்மா நகரில் கூடிய சமயக் காங்கரஸில் கல்கத்தா அரசாங்கக் கல்லூரித் தத்துவ நூல் போதகாசிரியர் மஹேந்திரநாத் சர்க்கார் அவர்கள் செய்த விரிவுரையின் சாரம் வருமாறு:—

பிரார்த்தனை மனிதனைத் தெய்வமாக மாற்றுகிறது. பிரார்த்தனையே தெய்வத் தன்மையின் தொடக்கம். அது கடவுளை நேரே உணரச் செய்கிறது.

தனக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை அறிகிறவனே மேம்பட்ட மனிதன். பிறகு அம்மனிதன் மேலும் மேலும் கடவுள் நிலையை அடைகிறான். அந்நிலையே நமது குறிக்கோளாகும்.

மனிதன் செருக்கை யொழித்துத் தெய்வத்தின் தன்மையை நாடினாலொழிய அவனிடத்தில் தெய்வத் தன்மை அரும்பாது. தெய்வ நிலையிலுள்ள அமைதியே நமக்குப் புதிய வலிவைக் கொடுக்கிறது; நம்முடைய குறைபாட்டினின்றும் நம்மை மீட்கிறது; உண்மை, அழகு, தூய்மை, நன்மை முதலியவற்றை நல்குகிறது.

கடவுளின் கடந்த தன்மையைக் கண்டுணர்ந்தாலொழிய நம் வாழ்க்கையிற் காணப் பெறும் ஐயந்திரிபுகள் நீங்கா. தத்துவ சாத்திரம் இந்நிலையை அறிவு மாத்திரத்தில் உணரத் துணை செய்யும்; நேரே காணத் துணை புரியாது. உண்மையில் துணையாக இருப்பது பிரார்த்தனையே. அறிவு நம்பிக்கையைத் தருகிறது. நம்பிக்கை சந்தேகத்தை ஒழிக்கிறது. விருப்பத்தைத் தணிப்பதால் உண்டாகும் திருப்தியால்

வருகிற இன்பத்தைக் காட்டிலும் மிகுதியான இன்பத்தைப் பிரார்த்தனை நமக்கு நல்குகிறது.

நம்முடைய தாழ்ந்த நோக்கங்களை அடைவதற்காகச் செய்யும் பிரார்த்தனை உண்மையான பிரார்த்தனை யாகாது. அத்தகைய பிரார்த்தனை நம்முடைய சிறுமையை நீக்காது; ஒளியைத் தாராது; தக்க துணையாகவும் இராது. ஆகலின், நம்முடைய சுயநல விருப்பங்களுக்காகக் கடவுளை வேண்டுதல்கூடாது. கிறிஸ்து தன்னைப் பின்பற்றியவர்களை நோக்கி, "நீங்கள் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளாமல் கடவுளை அடைதல்கூடாது" என்றார். ஆகலின், தெய்வத் தன்மை நம்மிடத்தில் வருவதற்கு நாமே கருவிகளாக இருக்க வேண்டும். நமக்கு வேண்டுவனவற்றிற்குத் தெய்வத்தைக் கருவியாகக் கொள்ளல் கூடாது.

அன்போடு உலகத்தில் தெய்வத்தன்மையைப் பரப்ப முயலுகிறவனிடத்தில் மனிதத் துன்பங்கள் அணுகா. அரசனுக்கு மேலான ஆளுந்தன்மை, இவ்வுலக வாழ்க்கையில் அடையமுடியாத இன்பம், விவேகத்தால் அடையப் பெறாத ஒளி, தத்துவ விஞ்ஞானக் கலைகளால் அடையக் கூடாத அறிவு, எங்கும் காண இயலாத சாந்தம் ஆகிய எல்லாவற்றையும் தெய்வத்தன்மை தரும்.

உண்மையான பிரார்த்தனை நம்மைக் கடவுளிடத்தில் கலக்கச் செய்யும். கடவுளுடைய தூய ஆவி நம்முடைய ஆவியில் இறங்கும். அப்போது தான் தெய்வ இயல் நமக்கு விளங்கும்; நம் நிலையும் செம்மைப்படும்; நடத்தையும் ஒழுங்காகும். ஆகலின், நம்மில் தெய்விக உணர்வும், தெய்வ சம்பந்தமும், தெய்வத்தைப்போல் ஆகுந் தன்மையும் உண்டாவதே பிரார்த்தனையின் முடிந்த பலனாகும். இத்தகைய மனித அநுபவத்தின் உச்சியில் தான் மனிதனிடத்தில்,



தத்துவ நூல்கள் கூறும் பரம் பொருளின் உணர்வும், கிறிஸ்தவர்கள் கொண்ட இறுதி நிலையும், புத்தர்களுடைய நிருவாணமும், இந்துக்கள் சொல்லும் துரிய நிலையும் உண்டாகின்றன. ஆனால் மனிதன் இக்கடந்த நிலையில் இருக்க முடியாது. கிறிஸ்துவும் புத்தருங் கூட அதில் நீண்ட காலம் இல்லை. பெரியோர்களும் அநுபவ உரைகளைப் படித்து உணர்வோர் தம் அகத்தே முடிந்த முடிவாகிய இக் குறிக்கோளை உணர்ந்து அனுபவிப்பர்.

இப்போது எங்கும் சடங்குகளையே பார்க்கிறோம்; உண்மைச் சமயமே காணப்படவில்லை. உண்மைச் சமயத்தின் சத்தியையும் இன்பத்தையும் மனிதன் அநுபவிக்கவில்லை. ஏனெனின், சமயம் ஒரு பொறுமைப் பெண். அப்பெண் குற்றங்குறைகளைச் சிறிதும் பொறுப்பதில்லை. தெய்வத்தன்மையின் உண்மையை உணர்ந்து இன்பமுற வேண்டுமானால் நம்பாலுள்ள தெய்வத்தன்மை தளரவேண்டும். வேற்றுமைகள் எல்லாம் ஒழிய வேண்டும். தெய்வத்தன்மையான இக் கூட்டுறவை உடலோடிருப்பவர்களோடும் இல்லாதாரோடும் அடையலாம். மறைந்த பெரியோர்கள் இன்னும் இருந்தே நமக்கு உதவுகிறார்கள்.

இந்நிலையில் சமயங்களிலுள்ள வேற்றுமைகளும் குறுகிய நோக்கங்களும் நினைவுக்குவரும். பெரியோர்களுடைய வாழ்க்கையின் அநுபவத்தால் அவை பறக்கும். விதிகளும் சட்டங்களும் ஆன்மாவினின்றும் உண்டாகவில்லை. தெய்வத் தன்மையை மறந்தவர்களிடமிருந்தும் அல்லது அதனைக் காணாதாரிட மிருந்துமே அவை உண்டாம்.

இந் நேரான தெய்வ சம்பந்தமும் அதனாற் பெறும் நலன்கள் எல்லாமும் பிரார்த்தனையினாலேயே பெறப்படுகின்றன. தெய்வ சம்பந்தத்தை மக்கள் எல்லோரும்

பெறுவதற்காகவே எல்லாச் சமயப் பெரியோர்களும் துணை புரிய முயன்றார்கள். தெய்வானுபவம் அதனைப்பெற்ற எல்லார்க்கும் ஒரு படித்தாகவேயுள்ளது. இத் தெய்வ சம்பந்தத்தைப் பெறுதற்குரிய சாதனங்கள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்றை வற்புறுத்திச் சொல்லப்பெற்றாலும் கருமம், பக்தி, ஞானம் என்னும் அவை எல்லாம் ஒன்றே. சீவன் முக்தர்களுடைய தொடர்பு இதனை நன்கு விளக்கும். முக்தர்கள் தாம் பெற்ற தெய்வ இன்பத்தைப் பரவச்செய்து மக்களை உயர்த்தவே மக்களுக்கிடையில் வருகிறார்கள். கடவுளை படைத்துக் காத்து அருளுகிறார். மக்களை அறியாமையாகிய இருட்டினின்றும் கைதூக்கிவிடுவதே அவ்வருளாம். இது இடைவிடாது நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. இவ்வருள் நேராகவேனும் அல்லது வாழ்க்கையில் தான் பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெறுகவென உவந்தளிக்கும் முக்தர்கள் மூலமாகவேனும் வரும். ஆகலின், எல்லாச் சமயங்களிலும் ஊடுருவியுள்ள தெய்வத்தன்மையை உணரப் பெறுதலே வாழ்க்கையின் முடிந்த நோக்கமாகும்.

## சந்தா அறிக்கை

1936ஆம் டிசம்பர்மீ 31உக்குள் தங்கள் சந்தாவை மணியார்டர் செய்யாதவர்கட்கு 1937ஆம் ஜனவரி இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும்.



மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவிலருள் மறைஞான சம்பந்தர் இவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே. ரு

இது குருபாரம்பரிய தோத்திரம். இதன் பொருள் வெளிப்படை.

**(உரை)** தேவர்பிரான் திருநந்தி - தேவர்களுக்குக் கத்தாவாகிய சிறீகண்ட பரமேசுரன் எழுந்தருளியிருந்துள்ள மிக்க கயிலாயத் திருமலையைக் காக்கிறது விரதமாகப் பூண்ட சிறீநந்திகேசுரதேவ நாயனார்; *அவர்கணத்தோர் . . . தரிசனிகள் - அவர் திருவடியைப் பெற்ற இருஷிகளில் ஒப்பில்லாத ஞானச்செல்வத்தையுடையராய்ப் பூமியிலே எழுந்தருளின சத்தியஞான தரிசனிகள்; அடிசேர் பரஞ்சோதி மாமுனிகள் - இவரது சீபாதத்தைப் பெற்ற இருஷிகள் பரஞ்சோதி மாமுனிகள்; பதியா . . . திறலார் - சிறப்புமிக்க திருவெண்ணெய் நல்லூரைத் திருப்பதியாகவுடைய மெய்கண்டதேவ நாயனார்; மாறா விரவுபுக ழருணந்தி - அவருடைய திருவடியைப் பெற்று ஒழியாத புகழைக் கலந்த அருணந்திதேவ நாயனார்; விறலார் . . . சம்பந்தர் - அவருடைய திருவடியைப் பெற்று முறைமையின்வரு நாயன்மாரில் இந்திரியங்களைச் செயித்த வெற்றியையும் ஞானச் செல்வத்தையுமுடையராய் நீங்காத அருளையும் பெற்ற மறைஞான சம்பந்த நாயனார்; இவரிச் . . . தன்மை யோரே - இவர்கள் இச் சந்தானத்து எம்மை யடிமையாக ஆளுந் தகுதியை யுடையோர்கள்.

மெய்கண்ட திறலாரென்பது சத்தியத்தைத் தரிசித்த சாமர்த்தியத்தை யுடையவரெனக் கொள்க. இதனாற் சொல்லியது இந்த அத்தம் பாரம்பரியமாக வந்ததென்னும் முறைமை அறிவித்தது.

*அவர் கணத்தோர் செல்வர் சனற்குமார முனிவர் என்று சில உரைகளில் காணப்படுவது சம்பிரதாயத்தை ஒட்டியுளது. குருமரபு கூறுவோர் நந்திகேசுரர்க்கும் சத்தியஞானதரிசனிகட்கும் இடையே சனற்குமார முனிவர் பெயரைக் கூறுதலை முறையாகக் கொள்வர்.

## குருவணக்கம்

6. பார்திகழ வளர்சாம வேதம் மல்கப்
    பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை யாண்ட
    சைவசிகா மணிமருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில்புடைசூழ் மதின்மீதே மதியம்
    கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
    திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம்.

இது குரு தோத்திரம். இதன் பொருள் வெளிப்படை.

(உரை) பார்திகழ-பூமிவிளங்க; வளர் சாமவேதம் மல்க-ஆயிரஞ் சாகைகளாக விரிந்த சாமவேத அத்தியாயம் நிற்க; பராசர மாமுனி மரபு பயில - பராசரப் பிரமரிஷி கோத்திரந் தழைக்க; ஞான . . . . . சைவசிகாமணி - ஞானவுறவைத் தர எழுந்தருளி ஒன்றுக்கும் பற்றாத என்னை அடிமையாகக் கொண்டருளின சைவசமயத்துக்கு ஓர் அபிஷேக மாணிக்கம்; மருதத்தலைவன் - மருதூருக்குக் கத்தா; அந்தண் . . . மறைஞான சம்பந்தன் - அழகினையும் குளிர்ச்சியினையும் மேகத்தினையும் பொருந்திய சோலைப்பக்கங்களிலே சூழ்போந்த பெரிய மதிண்மீதே சந்திரனோடாமல் நெடிய கொடியினது கைகள் தகையுஞ் சிறப்பினையுடைய திருப்பெண்ணை கடத்துச் சிறப்பு விளங்காநின்ற மறைஞானசம்பந்த நாயனார்; எந்தை-என்னுடைய சுவாமியுடைய; திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம் - அழகு வளராநின்ற தாமரை மலர் போன்ற சீபாதங்களை என் தலைமேல் வைத்துக்கொள்ளாநின்றேன்.

பார்திகழ என்றது பிரபஞ்சத்தி லுண்டான ஆன்மாக்களுக்கு ஞானம் பிரகாசிக்க எனக்கொள்க. மருதூர் பிறந்த ஊர். திருப்பெண்ணைகடம் ஆசாரிய அபிஷேகஞ்செய்த ஊர். இதனால் சொல்லியது இந்நூல் மலைவறச் சென்று முடியவேண்டி ஆசாரியரைத் தோத்திரம் பண்ணின முறைமை அறிவித்தது. இந்த இரண்டுங் குருமரபுங் குருதுதியும்.



## நுதலிய பொருள்

7. புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
    புகலளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமும்சொற் பொருள்
    பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன [போல்
அறத்திறனால் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
    அறிவொளிபோல் பிறிவரும்அத் துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
    சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றும். ௭

(உரை) புறச்சமயத் தவர்க்கிருளாய் - பதிப்பொருள், புறப்புறச் சமயம் புறச்சமயம் அகப்புறச் சமயமென்னும் மூவகைப் புறச்சமயப் பதினெண்மரும் பாசக்கட்டுடையாராகலிற் றிரிபதார்த்த நிச்சய மறியாமையின் அவர்களறிவுக்குத் தோன்றாமல் அந்தகாரத் திரவியமாயும்; அகச்சமயத் தொளியாய் - அகச்சமய மென்னும் பேதவாதி, பாடாணவாதி, சிவசமவாதி, சங்கிராந்தவாதி, ஈசுர அவிகார வாதி, பரிணாமவாதி, சைவரென்போர்கள் திரிபதார்த்தமுங் கொள்வோராகலிற் பாசநீக்கத்துக் குரியராகலின் அவர்களறிவுக்கு அளவுக்களவாய்த் தோன்றும் பிரகாசத் திரவியமாயும்; புகலளவைக் களவாகி - ஆகநாற் கூற்றுச் சமயத்தோர்க்கும் அவரவர் கொண்ட அளவைப் பிரமாணங்கட்குத் தக்கதாய் அளவுபட்டு அந்தந்த இடமே அவர்களுக்கு மோட்சத் தானமாய்க் கொடுப்பதாயும்; பொற்பணி போலபேதப் பிறப்பிலதாய் - சித்தாந்திகள் முத்தியென்னும் பரமுத்தியில் ஒரு பொன் பலபணியானது போல அபேதப்பொருளு மல்லவாய்; இருள் வெளிபோற் பேதமும் - இருளுமொளியும் போலப் பேதப் பொருளுமல்லவாய்; சொற்பொருள் போற் பேதாபேதமுமின்றி - சொல்லும் பொருளும் போலப் பேதாபேதப் பொருளுமல்லவாய்; பெருநூல் சொன்ன அறத் திறனால் விளைவதாய் - இங்ஙனங் கூறிய விசிட்டாத்துவிதம் துவிதாத்துவிதம் கேவலாத்துவிதங்களின்றிப் பெரிய சிவாகமத் துணிவாகிய சுத்தாத்துவிதப் பொருளாய்; உடலுயிர் - உடலுமுயிரும் ஒற்றுமை நயத்தாலொன்றுபட்டும் உடல் உயிராயொழியாது உயிர் உடலாயொழியாது உடல் உடலே உயிர் உயிரேயாயி

னும் உடலுக்கு ஓர் உண்டியை யூட்டுமிடத்து அஃது உடலுண்ட தென்றும் உயிருண்டதென்றும் பிரிக்கப்படாமையின் உயிர் உடலே யாயும் அஃதல்லவாயு மிருப்பது போலவும்; கண் அருக்கன் - கண் ணும் ஆதித்தனும் பேதப்பொருளாயினுங் கண் ஒரு விடயத்தை யறியுமிடத்துக் கண்ணொளி ஆதித்தனொளியோடு விரவியல்லது காட்சிப்படாமையிற் கண்ணொளி கண்டதென்றும் ஆதித்தனொளி கண்டதென்றும் பிரிக்கப்படாதிருந்துங் கண்ணொளி ஆதித்தனொளி யாகாது, ஆதித்தனொளி கண்ணொளியாகாது, ஆதித்தனொளி கண் ணொளியோடு விரவிக் காட்டியும் அதனோடு விரவாது இருளை நீக்கி யும் நிற்பது போலவும்; அறிவொளிபோல் - ஒரு விடயத்தைக் காணுமிடத்து ஆன்மசிற்சத்தி இந்திரிய ஞானத்தோடு விரவியல்லது காட்சிப்படாதிருந்தும் மானதம் தன்வேதனை யோகம் அனுமானம் உரை முதலிய காட்சியிற் செல்லுங் காலத்து அதைப் பிரிந்து வேறு யும் அதுவாயு மிருக்கும் ஆன்மசிற்சத்தியை அவ்விந்திரிய ஞானத் தோடு விரவிக் காட்சிப்படுங் காலத்து அது அறிந்ததென்றும் இது அறிந்ததென்றும் பிரிக்கப்படாததுபோலவும்; பிறிவரும் அத்துவித மாகுஞ் சிறப்பினதாய் - இவ்வாறு மூவிதமாய் அபேதம் பேதம் பேதாபேதங்களின் பொதுமையாயும் உலகெலாமாகி வேறாயுடனு மாய் நிற்பது கலப்பினால் ஒன்றாயும் பொருட்டன்மையால் வேறாயுஞ் செயற்றன்மையால் உடனாயும் நிற்குஞ் சுத்தாத்துவித நயத்தை; வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறன் - தத்துவமசி யெனும் வேதாந்த மகாவாக்கியத்தின் தெளிவுபோதமாகிய சைவசித் தாந்த வெற்றிப்பாட்டை; இங்குத் தெரிக்கலுற்றாம்-இந்த நூலின்கட் கேவல சகல சுத்தமென்னும் மூன்றவத்தையு ளடக்கித் தொகை வகை விரியென்னு முத்திறப்படுத்திச் சொல்லத் தொடங்குவாம்.

‘பொதுவதனி, லத்துவித மாத லகண்டமுந் தைவம்’ [சிவஞான போதம், xii, 5] என்றார் முதனூலாசிரியரும்.

இந்நூல் கோடற்குரிய அதிகாரிகள் யாரென்னில்,

**தீட்சாக்கிரமம்**

8. மூவகைஆ ருயிர்வர்க்கம் மலத்தார் கன்ம
மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமாம் எனவுருவாய் வந்து நாதன்
திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்



பாவனையால் மிகுநூலால் யோகப் பண்பால்
பரவிவரும் அவுத்திரியாற் பாச நாசம்
மேவஅரு ளுதவும்அவுந் திரியிரண்டு திறனும்
வியன்கிரியை ஞானமென விளம்பு மாறே. அ

(உரை) மூவகை ஆருயிர்வர்க்கம் - ஆன்மவர்க்கங்கள் அனைவரும் மூவகையு ளடங்குவர்; மலத்தார் - ஆணவமலபந்த மொன்றும் உடைய விஞ்ஞானகலரென்றும்; கன்மமூல மலத்தார் - மூலமலம் கன்ம மலமென்னும் இருவித பந்தமுமே யுடைய பிரளயாகல ரென்றும்; மூன்று முடையார் - ஆணவம் காமியம் மாயை யென்னும் மும்மல பந்தமு முடைய சகலரென்றும்; அன்றே - இம்மூவகையும் அநாதியே அவர்கள் பந்தப்பட்ட முறைமை; இவர்களிற் சகலராயுள்ளவர்களுக்கு —தீவகமாமென வுருவாய் வந்து நாதன்-பாசமோசனமாகிற பக்குவம் வந்த விடத்துப் பரமேசுரனே ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி வந்து; திருநோக்கால் - சட்சுதீக்கையினாலும்; பரிசத்தால் - பரிசதீக் கையினாலும்; திகழும் வாக்கால் - உபதேச வாசக தீக்கையாலும்; பாவனையால் - தன்னைப்போல் பாவிக்கும் பாவனா தீக்கையினாலும்; மிகுநூலால் - ஆகமதீக்கையாலும்; யோகப் பண்பால் - அறிவிலே கலப்பிக்குஞ் சையோக தீக்கையாலும்; பரவிவரும் அவுத்திரியால் - விரிந்து விளங்கும் ஔத்திரிதீக்கையாலும்; பாசநாசமேவ அருளுத வும் - இவ்வேழு விதமாகிய தீக்கைகளினாலேயும் மூவகைப் பாசமும் நிவிர்த்தி செய்து திருவடியிலே கூட்டும்; அவுத்திரி இரண்டு திற னும் - அவுத்திரி தீக்கை யொன்றும் இரண்டு விதியுடைத்தாயிருக் கும்; அது ஏதென்னில் - வியன்கிரியை - புறம்பே குண்டமண்டலாதி யிட்டுச் செய்யுங் *கிரியா விதியொன்றும்; ஞானம்-அறிவிலே தேடிக் கொண்டு செய்யும் ஞானவிதி யொன்றும்; என விளம்புமாறே - இவ் விரண்டு விதியையுடையது அவுத்திரிதீக்கை.

‘ அழிவிலாக் கிரியையினா லாதல்சத்தி மத்தா லாத ’ [சிவஞான சித்தியார், viii, 6] லென்றார் வழிநூலாசிரியரும்.

இத்தீக்கையின் முறையும் பயனும் ஏதென்னில்,

*கிரியாவதி ஞானவதி யென்பன சாத்திர வழக்கு.

9. விரும்பியமந் திராதிகாரம் அர்ச்சனுதி காரம்
மேவுமியோ காதிகாரம் எனச்சமய விசேடம்
வரும்பொருவில் நிருவாண மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
இரங்கடைவில் தொகைபதினென் றெண்பத்தொன் றைம்பத்
திருநூற்றே டிருபத்து நாலாறு றைந்திற் [தொன்
பாரந்தநெறி அறுவகையும் ஒருவிநினை வரிதாம்
பாபதத்துள் உயிர்விரவப் பயிற்று மன்றே. ௯

(உரை) விரும்பிய என்பதனை ஈரிடமுங் கூட்டுக. விரும்பிய மந்திராதிகாரம் - பரமேசுரனது உபசாரத் திருமேனியாக விரும்பிக் கொள்ளப்பட்ட மந்திரத்திற்கு அதிகாரமாகியும், அர்ச்சனுதிகாரம் - பரமேசுரன் கிருபையாக விரும்பப்பட்ட அர்ச்சனைக்கு அதிகாரமாகியும்; மேவும் யோகாதிகாரம் - வழிநூலாசிரியர் 'அந்தரியாகந் தன்னை முத்தி சாதன' [சிவஞானசித்தியார் ix, 10] மென்றாராக லின் மோட்சஞ் சேருதற்கு ஏதுவான யோகத்திற் கதிகாரமாகியும்; எனச்சமய விசேடம் வரும் - இங்ஙனங் கூறிய மூவகையுஞ் சமயம் விசேடமென்னும் இரண்டு தீக்கையு ளடங்கும்; பொருவில்நிரு வாணம் - ஒப்பற்ற நிருவாண தீக்கையாவது; மந்திர . . . மன்றே - ஆறத்துவாவையுஞ் சுத்திசெய்து மனதீத கோசரமாகிய சிவானந்த போகத்தில் உயிர் விரவும்படி கூட்டுவிக்கும்.

பதினொரு மந்திரமும், எண்பத்தொரு பதமும், ஐம்பத்தோரக்கர முமாகிய மூன்றத்துவாவும் ஒலிவடிவாயிருக்கும்; உ௨௪ புவனமும், ௩௬ தத்துவமும், ௫ கலையுமாகிய மூன்றத்துவாவுந் திரவிய வடிவாயிருக் கும்; ஆன்மாக்களனைவருடைய கன்மமுழுவதும் இவ்வத்துவாக்கள் தாரகமாயிருக்கும், சுத்தியடையுங்காலும் அவ்வாறே யாமென்றறிக.

இவ்விருவகை விதித் தீக்கையின் பயன் வேறுபாடுளவோ வென் னில்,

10. கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் உண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கள்



மருவியிடும் உயர்ஞான மிரண்டாம் மாறு
மலமகல அகலாத மன்னு போதத்
திருவருளோன் றென்றதனைத் தெளிய வோதும்
சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே. ௧௦

(உரை) கிரியையென . . . கிளக்கும் - கிரியா
தீக்கைசெய்து உபாயச் சரியை கிரியை யோக
விதிப்படி
மனுட்டித்து முடிந்தால் அதின் பிரயோசனம் பின்பு ஞான
விதிப்படி யனுட்டிக்கும்படி கூட்டுவிக்கும்; உண்மைச் சரியைகிரி
யாயோகத் தன்மையோர்க்கு - ஞானவிதிப்படி உண்மைச் சரியை
கிரியை யோக மனுட்டித்தவர்க்குக் காய்ந்த பொன் சூடாறினுல்
கம்பிக்கு வருவதுபோல்; சாலோக சாமீப சாரூபங்கள் மருவியிடும் -
அச்சிவபுண்ணிய முதிர்ச்சி பாகம் வருமளவும் சாலோகாதி பதவி
பொருந்தும்; பின்பு ஞானத்தை யடைவர். அற்றாகலினன்றே 'இறப்
பிறவத்தான், மருவுவனு ஞானத்தை' [சிவஞானபோதம், viii, 2]
என்றார் முதனூலாசிரியரும். அந்த ஞானத்தின் முறை யேதென்
னில்—உயர்ஞான மிரண்டாம் - மேலாகிய ஞானம் இரண்டு
விதமாயிருக்கும்; மாறு . . . திருவருளொன்று - அனு
தியே உயிர்க்குணம்போற் பந்தித்திருக்கிற பாசம் நீங்கும்படி
அறிவுக்கறிவாய் விட்டு நீங்காது உடன் நிற்குந் திருவருளொன்று;
அற்றாகலினன்றே, 'போதத் திருந்திடுமலமு'மென்றார் எமதாசிரிய
ரும்—ஒன்றதனைத் தெளிய வோதுஞ் சிவாகமம் - அந்தத் திருவரு
ளைத் தெளியும்படி போதிக்குஞ் சிவாகமம் ஒன்று; என்றுலகறியச்
செப்பு நூலே - அவ்வாறு சரியை கிரியா யோகம் முற்றுதலினுலே
பாகம் வந்தவர்களுக்கு இந்நூல் முகமாகத் திருவருள் ஞான விளக்க
முண்டாமென் றாகமங்களிற் கூறும்.

## நூல்வழியும் நூற்பெயரும்

11. தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதம்
செப்பினர்பின் பவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற் றவர்கள்திரு வடிகள் போற்றி
விளம்பியநூல் அவையிரண்டும் விரும்பி நோக்கிச்

கருத்திலுறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்துபொது உண்மையெனக் கருதி யானும்
அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறும்
ஆசில்சிவப் பிரகாசம் ஆகு மன்றே. கக

இது நூல் வரலாறு ; பொருள் வெளிப்படை.

(உரை) சிவாகமமே யமையாதோ தமிழ்நூலேன் என்பாரைப் பற்ற அருளிச் செய்கிறார் : தெரித்தகுரு முதல்வருயிர் சிவஞான போதஞ் செப்பினர் - தம்பிரான் அருளிச்செய்த சிவாகமத்திற் சிவஞான போதத்திலுள்ள சம்பிரதாயத்தை முன்கூறப்பட்ட ஆசாரியன்மாரில் விசேஷத்துவத்தை யுடைய மெய்கண்ட தேவநாயனார் அருளிச் செய்தார் ; பின்பவர் புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர் - அவர் திருக்கண்சாத்தின நாயன்மாரில் சகலையர் தலைவநாயனார் பின்பு சிவஞானசித்தி யென்கிற நூலை விரித்தருளிச் செய்தார் ; மற்றவர்கள் திருவடி போற்றி - அந்த இரண்டு நாயன்மார் திருவடிகளைத் துதித்து ; விளம்பிய நூலிவை யிரண்டும் விரும்பி நோக்கி - அந்த நாயன்மாரால் அருளிச்செய்யப்பட்ட அந்த நூல்கள் இரண்டையும் ஆசையோடும் பார்த்து அதிலுண்டான அர்த்தமும் ; கருத்திலுறை திருவருளும்-ஆன்மாக்களிடத்திலே பொருந்தி நின்று நிகழ்த்துகிற திருவருளும் ; இறைவனூலுங் கலந்து - தம்பிரானார் அருளிச் செய்த சிவாகமத்திலுண்டாகிய பொருளுங் கூட்டி ; பொதுவுண்மையெனக் கருதி - பொது வென்றும் உண்மையென்றும் விசாரித்து ; யானும் - ஒன்றுக்கும் பற்றாத நானும் ; அருத்திமிக வுரைப்பன் - ஆசை மிகுதியாலே ஒரு சாத்திரமாகச் சொல்லுவன் ; வளர் விருத்தம் நூறும் - சிறப்பு வளரப்பட்ட விருத்தம் நூற்றையும் ; ஆசில் சிவப்பிரகாச மாகுமன்றே - இதற்கு நாமம் குற்றமில்லாத சிவப்பிரகாசம்.

உயர் சிவஞானபோதம் என்றது சிவாகமத்தில் அருளிச்செய்யப்பட்ட திரிபதார்த்த நிர்ணயத்தைப் பன்னிரண்டு சூத்திரத்தினுள்ளடக்கிச் சொல்லுகையினாலெனக் கொள்க. சிவஞானசித்தி விரித்தனர் என்றது அந்த நூல் சொற்சுருங்கி அர்த்தம் ஆழ்ந்திருக்கையினாலே விரித்துக் கூறினாரெனக் கொள்க. வளர் விருத்தமென்றது பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் அர்த்தம் மேலே மேலே வளருமென்றதெனக் கொள்க. இதனாற் சொல்லியது ஆகமத்திலுள்ள அர்த்



தமே இந்த மூன்று நூலினுஞ் சொல்லியதென்றும் முன்னூல் வழிநூல் சார்புநூல் என்றும் முறை அறிவித்தது.

## அவையடக்கம்

12. தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா துணிந்த
நன்மையினர் நலங்கொள்மணி பொதியும்அதன் களங்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர் நடுவாங் [கம்
தன்மையினர் பழமைஅழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர்ஏ திலருற் [லரே.
றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனவொன் றி

இது அவையடக்கம் ; பொருள் வெளிப்படை.

(உரை) நூல்மரபு கூறி மேல் அவையடக்கம் அருளிச்செய்கிறார் : தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா-பதிபசுபாசத்தின் உண்மையைத்தெரிய வறிவியாத நூல் யாது அது பழைய நூலாமெனினும் நன்மை பயவாது ; இன்று தோன்றிய நூல்எனும் எவையுந் தீதாகா - பதிபசுபாசத்தின் உண்மையைத் தெரிய அறிவிக்குமாயின் புதிதாகத் தோன்றிய நூலாயினும் அது தீமை பயவாது ; துணிந்த நயந்திடுவர் - தெளிந்த அர்த்தம் ஆராய்ந்துள்ளவர்கள் . . . நூலின் பழமையும் புதுமையுஞ் சொற்குற்றமுங் கொள்ளார்கள், அதென்போல வென்னில் நல்ல இரத்தினமானது ஒரு நாய்த்தோலிலே கட்டியிருந்தாலும் இரத்தினமறிந்தவர்கள் தோலின் குற்றங் கொள்ளாது மாணிக்கத்தின் நன்மையைக் கைக்கொள்ளுவர், அதுபோல உண்மையே கைக்கொண்டுவிடுவர் நடுவாந்தன்மையினர் ; பழமை யழகாராய்ந்து தரிப்பர் - மத்திமரா யுள்ளவர்கள் உத்தமரைப் போலச் சாத்திரத்தைக் கண்டபொழுதே உண்மையைக் கொள்ளமாட்டார்கள், ஆதலாலே வேதாகமத்தைப் பின்செல்லுகிற நூலென்றும் இந்த நூல் நன்மையை யுடைத்தென்றும் தீர்க்கத்திலே

ஆராய்ந்து கொள்ளுவார்கள் ; தவறுநலம் . . . இன்மையினார் - குணமும் குற்றமும் பொருளிடத்திலே பொருந்தின முறைமையை ஆராய்ந்தறியமாட்டாத அதமரா யுள்ளவர்கள் ; பலர்புகழி லேத்துவர் - நூலின் பயனறிந்த உத்தமர்கள் கொண்டாடில் கூடியிருந்து கொண்டாடியும் ; ஏதிலருற் றிகழ்ந்தனரே லிகழ்ந்திடுவர் - இந்நூல்தன்னைப் பொருத சிலர் இகழ்ந்துரைக்குமிடத்தும் அதற்குப் பொருந்தி ஒக்க இகழாநிற்பர்கள் ; தமக்கென வொன்றிலரே - நன்று தீதென்றதற்குத் தமக்கென ஓரறிவிலாமையால்.

எவையு நன்றாகா என்றதுகொண்டே பழைய நூல்களிற் குற்றங் குறையுமெனக் கொள்க ; எவையுந் தீதாகா என்றது கொண்டே புதிதாயுள்ள நூல்களில் குற்றம் மிகுமெனக் கொள்க. தமக்கென வொன்றிலரென்றது முற்செனனத்திலே தங்களுக்கென்று ஒரு தவமில்லாதவரெனக் கொள்க. இதனாற் சொல்லியது இந்நூல் கொள்ளுமிடத்து உத்தமர் கொள்ளும் முறைமையும் மத்திமர் கொள்ளும் முறைமையும் அதமர்கொள்ளு முறைமையுந் தோன்ற அவையடக்கமருளிச்செய்த முறைமையினை அறிவித்தது.

# பொது அதிகாரம்

## முதற் சூத்திரம்

### பதி இலக்கணம்

'பலகலையு மெண்ணரிது' என்றும், 'முதற்பதி யானே'யென்றும் 'முதற் கருத்துச் சங்கரனே முத'லென்றும், 'முன்னவன் வடநூ லோக்கி' யென்றும் நமதாசிரியரனைவரும் 'தெரித்த குருமுதல்வ' ரென்னுஞ் செய்யுட் கருத்துடைய நூலாசிரியர் கருத்துப்படியே திருவுளம்பற்றியதாகலின் அவ்வாறு முதனூல் வழிநூலோடொத்துச் சூத்திர வொழுங்குப்படிக்கே யுரைசெய்ய வேண்டுவதாகலின் பலகலை நீடிங்குலகங் கந்தமேற்ற இவ்வாறும் இறைவனிலக்கணம் கூறும் முதற் சூத்திரம். அவையாவன :

13\. பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும்அரு உருவின்றிக் குணம்குறிக ளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆநந்த உருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே.

(உரை) பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதி பசு பாசந் தெரித்தல் - பல கலைஞானங்களும் இருபத்தெட்டாகமங்களும் நாலு வேதமும் முதலிய யாவையுஞ் சொல்லும் பொருளெல்லாம் பதிபசுபாசக் கிரமங்களைத் தெரித்துக் கூறுவதாம் ; திரிபதார்த்தங்களிருக்கவும் முந்தப் பதியைக் கூறுவ தேதென்னில்—பதிபரமே - முப்பொருளினும் பதியே மேலாகிய பொருளாகலிற் சொன்னது ; அது தான் - பதிப்பொருளே மேலாகியது யாங்ஙனமென்னில்; நிலவு மரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி - அருவம் உருவம் அருபாருபமென்னும் மூவகையி லொரு குறியுமின்றி முக்குணங்களில் ஒரு குணமுமின்றி யிருத்தலால் பரமென்று சொன்னது ; இவ்விரண்டு

லட்சணமும் பசுவுக்கு முளவாகலின் இதனுற் பதியே பரமாவ தே தென்னில்—நின்மலமா யேகமாய் - பதி மலரகிதனுகவும் ஒரு முத லாயு மிருப்பதாலும் பசு மலசகிதனுய்ப் பலமுதலா யிருப்பதாலும் பதியே பரமென்று சொன்னது ; ஏகமாயென்பதை யீரிடமும் கூட்டுக—ஏகமாய் நித்தமாகி - பதியைப்போலப் பாசமும் ஒருமுத லாயும் நித்தியமாயுமிருக்கவும் பதியே பரமாவ தேதென்னில் ; அலகிலுயிர்க் குணர்வாகி - பாசம் எண்ணிறந்த உயிர்களறிவினும் ஞான திரோதகத் திரவியமாயிருக்கவும் பதிப்பொருள் அந்தப் பாசத்தை நீக்கும்படி உயிர்தோறும் அறிவுக்கறிவா யிருத்தலாற் பதியே பரமென்று சொன்னது ; இவ்வாறு மேலாகிய பதிப்பொரு ளுக்குத் தற்சொரூப மேதென்னில்—அசலமாகி-பூரணமாகி; அகண் டிதமாய் - கண்டிக்கப்படாததாய் ; ஆனந்த வுருவாய் - இன்பமே சொரூபமாய் ; அன்றிச் செலவரிதாய் - சேதனப் பிரபஞ்சத்திற்கும் அசேதனப் பிரபஞ்சத்திற்குந் தன்னையன்றி அறிவுந் தொழிலும் இல்லையாய் ; செல்கதியாய் - பக்குவான்மாக்க ளனைவருஞ் சுதந்திர மாய்ப் புசித்தும் அற்பமுங் குறைபாத வரம்பிலின்பமாய் ; சிறிதாகி- அணுவோரண்டமாம்படி நேர்மையும் ; பெரிதாய் - அண்டமோ ரணுவாம்படி பெருமையு முடைத்தாய் ; திகழ்வது தற்சிவமென்பர் தெளிந்து ளோரே - இவ்வாறு விளங்குவது சுத்த சிவமென்று தற்றெரிசனப்பட்டுள்ள மகத்துக்கள் திருவுளம்பற்றுவார்கள்.

தூல சூக்கும சூனியமில்லாததாய்க் குணங் குறி யில்லாததாய், நின்மலமாய் அசலமாய் ஒன்ருய் அகண்டாகார சச்சிதானந்தாத்துவய பரிபூரண பரஞ்சோதியாகிய சிவம் பஞ்சகிருத்தியஞ் செய்வதெப்படி யென்னில்,

14. நீடுபரா சத்திநிகழ் இச்சா ஞானம்
நிறைகிரியை தரஅதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு உருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்து வாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரண புவன போகம்
பீடுபெற நிறுவிஅவை ஒடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றியாமே.





(உரை) நீடுபராசத்தி - சிவனிடத்தில் அக்கினிக்கு உட்டணம் போலப் பிரிவற்றிருக்குஞ் சத்தியாவது ஒன்ருய் நித்தியமாய் எல்லாத் தையும் வியாபிக்கிற ஞானரூபமாய்த் தன்மரூபமா யிருக்கும் ; நிகழிச் சாஞானம் . . . திருவுருவமாகி-இந்தச் சத்தி காரிய பேதத்தால் பரா சத்தி முதல் அனேகவித பேதப்படும், சிவனுஞ் சத்திபேதத்தால் சத் தர் உத்தியுத்தர் பிரவிருத்தரெனப் பேதப்படுவர், சத்தியை நோக்கின் சத்தாகிறவர் காரியந் தொடங்காமலிருக்கிறவர், சத்திகலை யற்றிருப் பவர், ஆகையால் இவர் நிட்களர், இவர்க்கு ஞானமே திருமேனி, இவ ர்க்கு லயரென்றுஞ் சாந்தரென்றும் பெயர் ; கூடுமொளி வளர்குடிலை மேவி - பரையாதி பஞ்ச சத்திகள் சங்கற்பரூபமாய்ச் சுத்தமாயையிற் பதியவே ; பலகலை நவின்று நாதவிந்துவாதி - சத்தரூபமாகிய நாத விந்துக்களும் அத்தரூபமாகிய நாதவிந்து வென்னுஞ் சத்திதத்து வஞ் சிவதத்துவங்களும் விந்துவிற் சாதாக்கிய தத்துவமும் படைப்பர், இது சத்தர் சன்னிதான சிருட்டி. அவ்விடத்துண்டாகிய பஞ்ச மந்திரங்களைத் திருமேனியாக வுடையவர் உத்தியுத்தர், இவர் பாசகலை களில்லாமற் சத்திகலைகளுடனே கூடி யிருக்கிறவராகையாற் சகள நிட்களர், இவர்க்குச் சதா சிவரென்றும் போகரென்றும் பெயர், சத்த ரால் விந்து நாதரூபமாய் வந்த அபரஞானத்தை வேதாகமங்களாய்ப் பிரித்து அனுக்கிரகித்துச் சாதாக்கியத்தினின்றும் ஈசுரதத்துவமும் அதினின்றுஞ் சுத்த வித்தை தத்துவமும் படைத்து ஈசுரதத்துவத் திருக்கும் அனந்தர் முதலிய அட்டவித்தியேசுருக்குத் தனுகர ணதியும், சுத்தவித்தையிலிருக்குஞ் சத்தகோடி மகாமந்திரங்கட்குத் தனுகரணுதியும், இத்தத்துவங்களில் உறைவோர்க்குத் தனுகரணுதி யும் படைப்பர், இது உத்தியுத்தர் சன்னிதானச் சிருட்டி. இனிப் பிரவிருத்தராகிறவர் காரியம் பண்ணத் தொடங்கிய சத்தியையுடைய வராகையாற் கிரியாசத்தி யதிகமும் ஞானசத்தி குறையவுமுடையவர், இவர் பாசகலைகளுடன் கூடியிருக்கையாற் சகளர், இவர்க்கு ஈசரென் றும் அதிகாரரென்றும் பெயர்; மாயைமேவி . . . யொடுக்கும் - இவர் அசுத்தமாயையைத் தமது சத்தியாற் கலக்கி முப்பத்தொரு தத்துவ மும், ஏனையோர்க் கெல்லாந் தனுகரணுதி முதலிய வெல்லாம் வினை யளவு நிலைபெறும்படி படைத்து நிறுத்தி யொடுக்குவர், இது பிர விருத்தர் சன்னிதானச் சிருட்டி ; மேனி . . . பெற்றியாமே -

திருமேனி யிங்ஙனங் கூறிய முறையே நிட்களம், நிட்களசகளம், சகளமென மூவகைத்தா யுண்டு.

இவ்வாறு மூவகைத் திருமேனியுண்டாகில் அது படைப்பார் யாரோ வென்னில்,

15. ஈங்கிதுஎன் றதுகடந்த இயல்பி னாலும்
ஈறுமுதல் நடுவொன்று மிலாமை யாலும்
ஓங்கிவளர் ஞானமயன் ஆத லாலும்
உண்மைபிறர்க் கறிவரிய ஒருமை யாலும்
தாங்கரிய வெறுப்பினொடு விருப்பு மெல்லாம்
சார்வரிய தனிமுதல்வன் ஆத லாலும்
நீங்கலரும் உயிர்க்குயிராய் நிற்ற லாலும்
நிறுத்திடுவன் நினைந்தஉரு நிமலன் தானே. ௫

(உரை) ஈங்கிது என்பதற்கு அந்வயம். 'நிறுத்திடுவன்நினைந்தவுரு நிமலன்றானே' என்பதனை யாண்டும் கூட்டுக. நிறுத்திடுவன் நினைந்த வுரு நிமலன் றானே - கர்த்தா நின்மலனாகையால் தனக்கு வேண்டுந் திருமேனியைச் சுவேச்சையால் எடுத்துக் கொள்வன் இதற்கு வேறே ஒரு கர்த்தா வேண்டுவதில்லை; அதற்கு ஏது என்னையெனில்—ஈங்கிது . . . மிலாமையாலும் - இவ்விடத்து இதுவென்று சுட்டி யறிதற்கு அப்பாற்பட்டவனாகையாலும் முதல் நடுவிறுதியில்லாதவனாகையாலும்; தனக்கு வேண்டியவாறே திருமேனி யெடுத்துக் கொள்வனென்னில் இவ்விரண்டு தன்மையும் உயிர்களுக்கும் உளவாகலின் அவர்களுக்கும் அவ்வாறன்றி இவர் தனுவாதி கூட்டுவானேனெனில்—ஓங்கி வளர் ஞானமய னாதலானும் - பதி பேரறிவுடையவனாகையாலும் பசு சிற்றறி வுடையனாகையாலும்; உண்மை பிறர்க்கறிவரிய ஒருமையானும் - பதி தனது உண்மையைப் பிறராலறிதற்கரிய பெருமையுடையனாகையாலும் பசுவுக்கு அஃதின்மையானும்; தாங்கரிய...ஆத லானும் - பதி விருப்பு வெறுப்புக்கள் சாராத ஒப்பற்றவனாகையாலும், பசு விருப்பு வெறுப்புக்கள் பொருந்துகிற சிறுமையுடையவனாகையாலும்; நீங்கலரும்...நிற்றலானும்-பதி உயிர்கள் தன்னை விட்டு நீங்குமாறின்றி ஏகநிலையாய்ச் சர்வான்மாக்களுக்கும் உயிர்க் குயிராய் நின்று அறிவிக்கிற சுயம்பிரகாச ஞானக் கிரியைகளுடையனாகையாலும், பசுக்கள் பதியை விட்டுப் பாசத்திற் பந்தித்துத் தமக்கொரு வியஞ்சகத்தை



யின்றி அறிவுந் தொழிலுமில்லாத சிறுமையுடையராகையாலும் பசுக்களுக்கு அவ்வாறு தேக மெடுப்பது கூடாது; நிறுத்திடுவ னினைந்த வுரு நிமலன்றானே - கர்த்தாவுக்கே அவ்வாறு திருமேனி கொள்ளுஞ் சுதந்தரம் உண்டு.

முதற்கண் சொரூப லட்சணமும் நடுவில் தடத்த லட்சணமுங் கூறி இறுதியில் இவ்விருவகைக்கும் பிறர் கூறுந் தடை விடைகளாற் பதியுண்மைக்கு ஆகமப்பிரமாணம் அனுபவப் பிரமாணங்களை மூன்று செய்யுளால் வலியுறுத்தி இனி யுலகின்மேல் வைத்து அனுமானப் பிரமாணத்தால் மேல் அது வலியுறுத்துவான் தொடங்கினர்.

பிரபஞ்சத்திற்கு வேறே ஒரு கர்த்தா வேண்டுமோ இயற்கை நித்தியமென்றாற் படும் இழுக்கென்னை யெனின்,

16. உலகமெலாம் ஒருவனோ டொருத்தி ஒன்றென்(று)
உளதாகி நின்றளவில் ஒடுங்கும் பின்னும்
மலமதனால் உளதாகும் உருவ மாறி
வருவதுபோ வதுசெல்வ தாத லாலும்
அலைவில்அசே தனமாயை ஆத லாலும்
அணுக்களுரு அடையும்அறி விலாமை யாலும்
நிலவுதொழில் மருவிஉரு நிற்ற லாலும்
நின்றவையும் அளித்திடுவன் நிமலன் தானே. ௪

(உரை) நின்றவையு மளித்திடுவ னிமலன்றானே - கர்த்தாவே பிரிவற நின்று உண்டாக்குவதன்றி இயற்கை யன்று; அஃது எற்றாலெனின்—உலகமெலாம் - அசேதனப் பிரபஞ்சங்களெல்லாம்; ஒருவனோடொருத்தி யொன்றென்று - ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றுஞ் சுட்டவைப்பட்டு; உளதாகி நின்றளவி லொடுங்கும் - சிருட்டிப்பட்டுந் திதிப்பட்டுங் கால வரையறையிற் சங்காரப்படும்; நின்ற பிரபஞ்ச நின்றொழியாது சங்காரப்படுவது ஏதென்னில், கன்மமலம் பரிபாக மாதற்பொருட்டுச் சங்காரப்படும், சங்காரப்பட்ட பிரபஞ்சம் மீள உண்டாவதேதென்னில்—பின்னுமல மதனா லுளதாகும் - முன் பிரபஞ்ச முண்டானது மலபரிபாகங் காரணமா யாகலின் பின்னும் அக்காரணத்தால் உண்டாகும், அசேதனப் பிரபஞ்சங் காரியப்படுவதிற் சேதனப் பிரபஞ்சத்திற்கு மலபரிபாகங் கன்மபரிபாக முண்டாதல் யாங்ஙனமென்னில்; உருவமாறி

ஆதலாலும் என்பதை வருவது செல்வது போவதென்னு மூன்றிடமுங்கூட்டுக—உருவமாறிப் போவதாதலானும்-பாவ கன்மந்தீர இந்தச் சரீரம் மாறிப்பூதசரீரத்தைப் பொருந்தி நரகத்துக்குப் போய்த்துக்கத்தைப் புசித்தலானும்; உருவமாறிச் செல்வதாதலானும் - புண்ணிய கன்மந்தீர இந்தச் சரீரம் மாறிப் பூதசார சரீரத்தைப் பொருந்திச் சுவர்க்கத்திற் சென்று சுகத்தைப் புசித்தலானும்; உருவமாறி வருவதாதலானும் - பாவபுண்ணியங்களை யீட்டவுஞ் சுகதுக்கங்களை நுகரவும் நரகசுவர்க்க சேடத்தாற் பூதபரிணாம சரீரத்தைப் பொருந்திப் பூமியின்கண் வந்து சுகதுக்கத்தைப் புசித்தலானும்; இவ்வேதுக்களினாலே மலமுங் கன்மமும் பரிபாகம்வரும், அற்றாகலினன்றே, 'எல்லாமாய்த் தத்துவங்க ளிசைந்தது..., தொல்லாய கன்ம மெல்லாந் துய்ப்பித்துத் துலைத்தற்கும்...,...பொல்லாத வாண வத்தைப் போக்கவு' [சிவஞான சித்தியார், ii, 79] மென்றார் வழி நூலாசிரியரும். இதனாற் பிரபஞ்ச மியற்கையன்று 'நின்றவையு மளித்திடுவ னிமலன்றானே' என மேற்கொண்டவாறாம். இனிப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாக மாயையுண்டாகலின் அதுவே போதும் இறைவன் எற்றுக்கெனின்—அலைவிலசே தனமாயை யாதலானும் - மாயை சடமாகையினாலே பலவித விசித்திரமான பிரபஞ்சத்தை அஃது உண்டாக்கு மென்பதில்லை யாகலின் 'நின்றவையுமளித்திடுவ னிமலன்றானே' யென மேற்கொண்ட வாறாம். இனி ஆன்மாக்கள் அறிவுடையவர்களாமே அவர்களே போதும் இறைவன் எற்றுக்கெனின்—அணுக்க ளருவடையு மறிவிலாமை யானும்-ஆன்மாக்கள் மல மறைப்புடைய ராகையால் தனுவாதி வந்த பின்பு அறிவதன்றி இன்ன கன்மஞ் செய்தோம் இன்ன தனுவும் இன்ன போகமும் வருமென்று அறியும் அறிவில்லாதவர்களாகையாலும் 'நின்றவையு மளித்திடுவ னிமலன்றானே' யென மேற்கொண்ட வாறாம். இனிப் பிரபஞ்சத்திற்குத் துணைக்காரணமாய்க் கன்மமொன் றுண்டாகலின் அதுவே போதும் இறைவன் எற்றுக்கெனின்—நிலவு தொழின் மருவியுரு நிற்றலானும் - கன்மமாவது மனவாக்குக் காய சன்னியமாய்ச் சேதன மாகிய புத்திதாரகமாய் நிற்குமாகலின் அது தனுவாதியைப் படைக்கு மாறில்லை 'நின்றவையு மளித்திடுவ னிமலன் றானே' யென மேற்கொண்ட வாறாம். இங்ஙன் கூறிய நாலேதுவாலும் இரு-



வகைப் பிரபஞ்சத்திற்கும் இறைவனே முதன்மையென மேற்கொண்டவாறு காண்க. ௧௬

இதனாற் பிரபஞ்சஞ் சங்கார கர்த்தாவால் முத்தொழிற் படுமென்பது பெற்றாமாயினும் முத்தொழிற்கு மூன்று கர்த்தா உளராகலிற் சங்கார கர்த்தா ஒருவனுமே கர்த்தா வென்பது மிகையாம் போலுமெனின் ஆகாது. அஃது எற்றாலெனின்,

17. கந்தமலர் அயன்படைக்கும் உலக மெல்லாம்
கண்ணன் அளித் திடும்அவைஎம் கடவுள் தானே
அந்தமுற அழித்திடுவன் ஆத லாலே
அயன்அரியும் அவனதுயர் அதிகா ரத்து
வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்
வருவிப்பன் விகாரங்கள் மருவான் வானின்
முந்திரவி எதிர்முளரி அலர்வுறுமொன் றலர்வான்
முகையாமொன் றொன்றலரு முறையி னாமே. ௫

(உரை) அந்வயம். அவனதுய ரதிகாரத்து - முத்தொழிலினுஞ் சங்காரத்தொழில் உயர்ந்த அதிகாரமாகையாற் சங்கார கர்த்தா ஒருவனுமே கர்த்தா வென்று சொல்லப்படும். அதுவே உயர்ந்த அதிகாரமாதல் யாங்ஙனமெனின்; உலகமெல்லாங் கந்தமல ரயன்படைக்கும்-பிரபஞ்சமெல்லாம் வாசனையுடைய பதுமாசனத்திருக்கும் பிரமதேவன் படைப்பன்; கண்ணனளித்திடும் - தாமரைக்கண்ணையுடைய விட்டுணு அவையெல்லாங் காவற்றொழில் புரியும்; அவைஎம் கடவுடானே யழித்திடுவன் - எமது சங்கார கர்த்தாவே அவ்விருவராற் சிருட்டி திதிப்படுவதை அதிக்கிரமித்துச் சங்கரிப்பன்; ஆதலாலே - ஆகையினாலே; இது உயர்ந்த அதிகாரமாம், அவ்விருவராற் சிருட்டி திதி நடந்துகொண்டிருக்கவும் இவர் சங்கரிப்புத் தொழில் நடப்பது எப்படியெனில்—அயனரியும்அந்தமுற - அவ்விருவரையும் அவராற் றொழிற்படும் பிரபஞ்சத்தையும் ஒன்றாக முடிவுபெறும்படி சங்கரிப்பன்; வந்தமுறை - அவ்விருவருஞ் சங்காரப்பட்டு முடிந்தால் அந்தப் பிரபஞ்சந் திரும்ப உண்டாவது எப்படியெனில்; தன்தொழிலே மன்னுவிப்பன் - திரும்ப அவர்களைப் படைத்து அவர்களாலே பிரபஞ்சம் படைக்கச் சங்கற்பிப்பன்; அவர்களும் முத்தொழிற்பட்டால் ஆன்மவர்க்கமாச்சே அவர்களாற் சர்வஞ்ஞன் செய்யுஞ் சிருட்டி திதி

வாறு நாலு தொழிலுங் கருணையேயாகவும் அவற்றோடு முரணி அனுக்கிரகமெனத் தனியே ஒரு தொழில் எதுக்கெனில்—போற்றலரும் அருள் அருளே - நால்வகைத் தொழிலும் பாசநீக்கமே யாயினும் பாகம் வந்த மலமும் மலபாகமாம் பொருட்டுத் தோன்றிய முறையானன்றிப் பக்குவமுறையாற் புசித்தெஞ்சிக் கிடந்த கன்மமலமும் இவற்றிற்கு வாயிலாகிய மாயேய மலமும் ஆசிரியர் ஞானசத்தி கிரியாசத்தியாலன்றி இந்த நால்வகைத் தொழிலினுங் கெடாதாகலின் இம்முறையே பருவமடைந்த விடத்து இவை யெல்லாம் நீங்கும்படி சர்வானுக்கிரகம் பண்ணுவதே அனுக்கிரகமாகலின் அவற்றோடு முரணுதலின்றிக் கருணையேயாம்; 'அரும்பருவ மடைதலுமே யாசானாகித், தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத் துகளறுத்திங் கத்துவாத் துடக்கறவே சோதித், தேன்றவுடற் கன்மமனுபவத்தினா லறுத்திங் கினிச்செய்கன்ம மூலமலம் ஞானத்தா விடிப்ப' [சிவஞானசித்தியார், viii, 10] னென்றார் வழிநூலாசிரியரும். அனுக்கிரகமும் பொது சிறப் பென்றிரு விதப்படுமோ வெனில்—அன்றி மற்றுப் புகன்றவையும் அருளொழியப் புகலொணாதே - முன்சொன்ன நாலு கிருத்தியமும் இதுபோல அனுக்கிரகமேயன்றிப் பொதுவென்று ஒரு தொழிலையுஞ் சொல்லக் கூடாது.

இப்பஞ்ச கிருத்தியங்கள் கேவல சகல சுத்தமென்னும் அவத்தா பேதத்தாற் பர சூக்கும தூலமென்னும் மூவிதப்படுமாறும் அவற்றதுண்மையும் அவத்தை பதினெட்டாமாறும் அவை தோறும் இறை செய்யும் ஐவகைத் தொழிலும் ஈண்டு விரிப்பிற் பெருகுமாகலிற் குருமுகமாய் அறிக. ஆக ஆறு திருவிருத்தங்களாற் பதியுண்மைக்கு இலக்கணங் கூறு முகத்தால் ஐந்தொழிலாற் போந்த பயன் கூறிப் பசுபாசங்களது உண்மையும் ஒருவாறு தெரித்துணர்த்திய தறிக. ௧௮

---

இச்சூத்திரத் தொடக்கத்திலுள்ள மேற்கோள்கள்.

'பலகலையு மெண்ணரிதும்'—சுவாமிநாத தேசிகர் தசகாரியம், 20.
'முதற் பதியானே'— ஷெ ஷெ, 18.
'முதற் கருத்துச் சங்கரனே முதல்'—
தக்ஷிணாமூர்த்தி தேசிகர் ஷெ, 3.
'முன்னவன் வடநூனோக்கி'—அம்பலவாணதேசிகர் ஷெ, 55.

---

# இரண்டாஞ் சூத்திரம்

இனி இரண்டாஞ் சூத்திரத்திற் கூறப்படுவன வெல்லாம் முப்பத்திரண்டு செய்யுளாற் றெரித்துணர்த்தப் புகுந்த ஆசிரியர் முதற்கட் பசு லட்சணங் கூறு முகத்தாற் கேவல சகல சுத்தங்கட்குத் தொகை கூறுவான் தொடங்கினார்.

'முற்றுமற்றி னத்துவித முப்பொருளு' [தக்ஷிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், 3] மென்றும், 'ஐந்து முன்னத்து விதமிரண்டே' [சுவாமிநாத தேசிகர் தசகாரியம், 18] யென்றும் வருவனவே ஈண்டுத் தொகை வகை விரிவாய்த் தொகுத்தும் விரித்தும் ஒரு பொருண்மேற் கொள்ளுமாறு நுண்ணுணர்வினா லறிக. 'இருள்மலத்தி னழுந்தி' என்பதீறாகவும், 'போக்குவர வுடைத்தா' யென்பதீறாகவும், 'பாதமுற்றிடு'மென்ப தீறாகவும் முக்கூறாய் இச்செய்யுள் கேவல சகல சுத்தங்கட்குத் தொகையாகவே பொருள்படுமாறு காண்க. இவ்வாறே 'அறிவில' னென்றெடுத்து 'மலத்தினோடும் வியாபி' [சிவஞானசித்தியார், iv, 38] யென்று முடித்தும், 'உருவினை' யென்றெடுத்துத் 'திரிதரு' [சிவஞானசித்தியார், iv, 39] மென்று முடித்தும், 'இருவினைச் செயல்களொப்' பென்றெடுத்துப் 'பாதம் பெறுவ' [சிவஞானசித்தியார், iv, 40] தென்று முடித்துங் கேவல சகல சுத்தங்கட்குத் தனித்தனி பத்து லட்சணந் தொகை கூறினார் வழிநூலாசிரியரும். இச்செய்யு ளொன்றே ஏனை எண்பத்தொரு செய்யுட்கும் ஊடுருவி நின்று ஒருபொருள்மேற் கொள்ளுமாறு குருமுகமா யறிக.

## பசுவியல்பு

19. எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தின் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக் கிடான யாக்கை
அண்ணலரு ளால்நண்ணி அவைஅவரா யதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம் [ர்.
உற்றிடும்நற் பசுவருக்கம் எனஉரைப்பர் உணர்ந்தோ

(உரை) எண்ணரிதாய் - ஆன்மாக்கள் அனேகமாய்; நித்தமாய் - என்றுங் கெடாத பொருளாய்; இருண்மலத்தின் அழுந்தி - ஆணவமலசையோகராய் அறியாமையே தாமாயிருக்கும்; அது கேவலம்—

இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை அண்ணலருளால் நண்ணி - அவ்விடத்து ஆர்ச்சிக்கும் இருவினைப் புசிப்புக் கேதுவான சரீரங்களைக் கர்த்தாவினுடைய கிருபையினாலே பொருந்தி; அவை அவரா யதனால் - அந்தச் சரீரமே தாமாகிய ஏதுவினாலே; அலகில்நிகழ் போகங்க ளருந்தும் - எண்ணிறந்த போகங்களை ஆர்ச்சித்துக்கொண்டு புசிக்கும்; ஆற்றாற் புண்ணிய பாவம் புரிந்து - புசிக்கச் செய்தே கேட்டிலுற்பத்தியாய்த் தோன்றும் இதாகிதங்களே புண்ணிய பாவங்களாய்ச் சஞ்சிதமெனக் கட்டுப்படும்; போக்குவரவுடைத்தாய் - அப்புண்ணிய பாவங்கட்குப் பயனாகிய சுகதுக்கம் புசித்தல் ஏதுவாகச் சுவர்க்க நரகங்கட்கும் அவத்தைகளினும் போக்குவரவுடைத்தாய் ஏகதேசப்படும்; இது சகலம்—புணருமிருள் மலபாகம் பொருந்தியக்கால் - இதனால் அனாதிசையோகமாகிய மலம் பரிபாகம் வந்தகாலத்து; அருளால் - ஆசாரியர் அனுக்கிரகத்தினாலே; உண்ணிலவும் ஒளியதனால் இருளகற்றி - அறிவுக்கு ளறிவாய் விளங்குந் திருவருள் ஞானவிளக்கத்தால் அறியாமை நீங்கி; பாதமுற்றிடும் - கர்த்தாவினுடைய திருவடியிற் பொருந்துவார்கள்; நற்பசுவருக்கமென உரைப்பர் உணர்ந்தோர் - பசுபாசங்களிரண்டிற் சித்தாகிய ஆன்மவர்க்கங்களென்று உண்மையறிவுடையோராற் கூறப்படும்.

இதனால் ஆன்ம லட்சணங் கூறுமுகத்தாற் கேவல சகல சுத்தங்களிற் படும் பாகுபாடும் பயனும் உடன்கூறியவாறும். கக

'பலகலையாகமவேதம்' யாவையும் 'பதிபசுபாசந் தெரித்த'லென்று மூன்றுள் அடக்கிச் சத்துச்சித்தானந்தமாகலின் முதற்கட் பதிக்கும், சத்துச்சித்தாகலின் இரண்டாவது பசுவுக்கும் இலக்கணங்கூறி எஞ்சிநின்ற பாசத்திற்கு இலக்கணங் கூறப் புகுந்த ஆசிரியர் பஞ்ச பாசங்களையுந் தெரித்துணர்த்துமுகத்தாற் கேவல சகல சுத்தங்கட்கு வகையும் விரிவுந் தொகுத்துரைப்பான் தொடங்கினார்.

## பாசவியல்பு

20\. ஏகமாய்த் தம்கால எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருளொளிர இருண்ட
மோகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாய்அறிவு முழுதினையும் மறைக்கும்



பாகமாம் வகைநின்று திரோதாயி சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வர்அது பரிந்து
நாகம்மா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்கும் தானே. உ

**(உரை)** ஏகமாய் - ஒரு முதலாய்; தங்கால எல்லைகளின் மீளும் எண்ணரிய சத்தியதாய் - தனது காலவரையறையிற் பாகப்படும் எண்ணிறந்த சத்திகளையுடையதாய்; இருளொளிர இருண்ட மோகமாய் - பேரந்தகாரவிருளையும் ஊழிக்காலத்துக் கதிரொளி யென்னும் படி மிகவும் இருண்ட அவாவே சொரூபமாய்; 'மருளவா மனத்த னாகி மயங்கினேன்' [தேவாரம், தனித்திருநேரிசை, ii, 1] னென்றார் அப்பர் நாயனாரும், 'அவாவெள்ளக் கள்வனேனை' [திருவாசகம், திருச்சதகம், 24] யென்றார் வாதவூரடிகளும். 'அவாவென்ப தெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும்வித்' [திருக்குறள்,361] தென்றார் நாயனாரும்—செம்பினுறு களிம்பேய்ந்து - செம்பினிடத்துக் களிம்புபோல் ஆன்மாக்களிடத்து அனாதிசையோகமாய்; நித்த - என்றுங் கெடாத பொருளாய்; மூலமலமாய் - மூலமலமென்று பெயரையுடைத்தாய் மும்மலங்கட்குங் காரணமாய்; அறிவு முழுதினையும் மறைக்கும் - ஆன்மஞானத்தில் வியாப்பியமாய் ஞானதிரோதகத் திரவியமாய் நிற்பது மூலமலம்; அற்றாகலினன்றே 'போதத்திருந் திடுமலமு' மென்றும், 'மூலமலத்தா லாணவமெந்த' மென்றுங் கூறி யது எமதாசிரியன்மாரும்—பாகமாம் . . . பகர்வர் - இம் மூலமலத்தின் காரியமாகிய மூன்றுமலம் மூன்றவத்தையென்று நின்று செய்யும் இருவினைகளிற் பதிந்து மும்மலங்களையும் பாகம் வருவிக்குஞ் சிவ சத்தியையும் மலமென்றுபசரித்துக் கூறப்படும்; அற்றாகலினன்றே 'ஆணையி னிருவினையி' னென்றும், 'இருவினை முதல்வனாணையி' [சிவஞானபோதம், ii] னென்றுங் கூறினார் முதனூலாசிரியரும், 'மும்மலங்க டத்தந் தொழிலினை யியற்ற வேவுந், தூயவன் றனதோர் சத்தி' [சிவஞானசித்தியார், ii, 87] யென்றார் வழிநூலாசிரியரும். திரோதானசத்தியை மலமென்பது உபசாரமாகில் அதனுண்மை யாதோ வெனில்—அது பரிந்து . . . தானே - அத் திரோதானசத்தி ஆன்மாக்களுக்கிரங்கி அவர்களைப் பரமேசுவரன் திருவடியிற் சேர்ப் பிக்குங் காருணியமே தனதுள்ளுறையாய் இரட்சிக்கும்.

மலமெனவும் பகர்வரென்ற உம்மையால் அது உபசாரமேயன்றி யுண்மையன்றென்பது தானே போதரும். ௨௦

இனி, அச்சிவசத்தி மும்மலங்களையுந் தத்தந்தொழிலினை யியற்ற ஏவுமாறு கூறுமுகத்தாற் சுத்தமாயையினது இலக்கணங் கூறுவான் தொடங்கினார். சுத்தமாயையாவது ஏனை மாயைகள்போலப் பரிணமித் தொடுங்குவதன்றிப் படங்குடிலானாற்போல விரிந்தொடுங்குவதாய்ச் சிவசத்தி பதிந்து தொழிற்படற்கிடமாயிருப்பதை ஈண்டுப் பாசங்களுட் சேர்த்துக் கூறவேண்டாவாயினும் மாயை மாயேயமலங்களைப் பிரேரிக்குஞ் சிவசத்தி பதிதற்கிடமாகலின் அத்துணைக் காரியமாத்திரமே ஈண்டுக் கூறுவதன்றி அதன் காரணத்துக் கிலக்கணங் கூறாதொழிந்ததென நுண்ணுணர்வினா லறிக. சத்திபேதஞ் சிவபேதங்கள் மேலை 'நீடுபராசத்தி'யென்னுஞ் செய்யுளிற் கூறிப் போந்தமையின் ஈண்டு அத்திருமேனித் தன்மை கூறுவதன்று, சுத்தமாயையிற் பதியுஞ் சத்திபேதத்தாற் படுங் கருமமொன்றுமே கூறுவதாம்.

21\. உன்னலரும் பரசிவன்தன் அருளாலே நாதம்
உதிக்கும்இருங் குடிலைதனில் விந்துவரும் நாதந்
தன்னில்அதி னொளிவளரும் சதாசிவராம் அவரில்
தயங்கவரும் ஈசர்வித்தை தனைஅளிப்பர் அதனால்
மன்னுவர்இவ் வகைஐவர் வாய்மையினால் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவும் சூக்குமாதி ஒருநான்கும் என்று
மொழிந்திடுவர் அருங்கலைகள் முதிர்ந்துளோரே. ௩

(உரை) உன்னலரும் . . . குடிலைதனில் - மனுதீதகோசரமாகிய பரமசிவனுடைய பராசத்தியாதி பஞ்சசத்திகள் சங்கற்பரூபமாய்ப் பெரிய சுத்தமாயையிற் பதியவே நாததத்துவமுளதாகும்; விந்துவரும் நாதந்தன்னில் - நாததத்துவத்தினின்றும் விந்துதத்துவமுளதாகும்; அதிலொளிவளருஞ் சதாசிவராம் - விந்து தத்துவத்தினின்றுஞ் சுயம்பிரகாச ஞானமுடைய சத்தியுத்தர்க் கிருப்பிடமாகிய சாதாக்கிய தத்துவந் தோன்றும்; அவரில் தயங்கவரும் ஈசர்வித்தை தனையளிப்பர் - சாதாக்கியத்தினின்றும் ஈசுரதத்துவமும் அதினின்றுஞ் சுத்தவித்தை தத்துவமும் உளவாம்; விளக்கிருந்த தகளியை



விளக்கென்பதுபோல ஒற்றுமை நயம்பற்றித் தத்துவங்களையே அதிலிருக்குந் தேவர்களாக உபசரித்தார்—அதனால் - ஆகையினாலே; மன்னுவர் இவ்வகை ஐவர் - இவ்வாறு சிவதத்துவங்களைந்தும் நிலைபெறும்; வாய்மையால் - சிவசத்தி கிருபையால்; முன்னே வந்திடுமென் றுரைசெய்த விந்து - நாத தத்துவத்தினின்றும் உண்டாகுமென்ற விந்துவானது; வழாவகையே முன்னுதவுஞ் சூக்குமாதியொருநான்குமென்று - சூக்குமை முதலாகிய நாலு வாக்குக்களையும் முறை பிறழாமற் றோற்றுவிக்குமென்று; மொழிந்திடுவர் அருங்கலைகள் முதிர்ந்துளோரே - வேதாகமங்களை ஓதி அறுதியிட்டுணர்ந்து அறிவு முதிர்ந்த மகத்துக்களாற் கூறப்படும்.

மாயை கன்மம் மலம் என்னும் மூன்றின் தொழிலாகிய பந்தம், போகம், போத்திருத்துவமென்னும் மூன்றும் மாயேயத்துவாரமாய் விளக்குவிப்பது இச்சிவதத்துவமைந்தும் வாக்குநாலுங் கொண்டு சிவசத்தி செய்யுந் தொழிலாகலின் மேலைச் செய்யுளிற் கூறிய திரோதான சத்தி தொழிலை விளக்குவதே இச்செய்யுளின் கருத்தென்றறிக. அற்றாகலினன்றே 'சுத்தக் கருவிகளைந்துங்கொண் டேசொல்லவத்தையைந்துஞ், சித்திக்கு' [கட்டளைக்கலித்துறை, 37] மென்றார் சிற்றம்பல நாடியாரும். பந்தம் போகம் போத்திருத்துவம் மூன்றும் அவத்தைத் துவாரமாயன்றி நிகழாமை யறிக. ௨௧

இனி மாயாமலத்தினது காரணகாரிய இலக்கணங் கூறுமுகத்தாற் சிவசத்தியின் பெருமை கூறுவான் தொடங்கினார். இது செய்யுட்கடோறும் உள்ளுறை பொருள் மேற்கொள்ளு மாற்றா லறிக.

22\. உருவாதி சதுவிதமாய் ஒன்றொன் றொவ்வா
உண்மையதாய் நித்தமாய் ஒன்றா யென்றும்
அருவாகிக் கன்மமார் அணுக்கள் யார்க்கும்
ஆவார மாய்அசித்தாய் அசல மாகி
விரிவாய தன்செயலின் வியாபியாய் எல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை ஒடுங்க
வருகாலம் உயிர்களெல்லாம் மருவிடமாய் மலமாய்
மன்னியிடும் அரனருளால் மாயை தானே. ௪

(உரை) உருவாதி சது என்பதற் கன்வயம். மாயைதானே - மாயாமலமானது; நித்தமாய் - என்றுங் கெடாததாய்; ஒன்றாய் - ஒருமுத

லாய்; என்றும் அருவாகி - எக்காலமும் அப்பிரமேயப் பொருளே யாகி; கன்மமார் . . . ஆதாரமாய் - கன்மத்தை ஆர்ச்சித்துக் கொண்ட உயிர்களுக் கெல்லாம் அது புசித்தற்கு ஆதாரமாய்; அசித்தாய் - சடமாய்; அசலமாகி - போக்குவரவில்லாததாய்; விரிவாய தன்செயலின் வியாபியாய் - தன் செயலாகிய முப்பத்தொரு தத்துவத்தும் வியாபகத்தை யுடைத்தாய்; எல்லாம் - இவ்வெழுவகை யிலக்கணங்களையுமுடைய அசுத்தமாயையானது; உருவாதி . . . உண்மையதாய் - சித்தாவதற்கு மாறுபட்டு உருவாதியாய்த் தோன்றி மறைவதாய், ஒன்றாவதற்கு மாறுபட்டுத் தனுகரண புவன போகங்களாகிச் சதுவிதமாய், என்றும் அருவாவதற்கு மாறுபட்டு உருவாதியாய், கன்மத்தைத் தானே யார்ச்சித்தவர்களுக்கும் ஆதாரமாவதற்கு மாறுபட்டு, 'எல்லாமாய்த் தத்துவங்க ளிசைந்தது . . . தொல்லை கன்மமெல்லாந் துய்ப்பித்துத் தொலைத்தற் கும்பின், தில்லாமை முற்றுவித்து நீக்கவ' [சிவஞானசித்தியார், ii. 79] மென்றார் வழிநூலாசிரியராகலின், கன்மகாசத்திரவியமாகவும், அசித்தாவதற்கு மாறுபட்டுச் சித்துப்போலச் செயற்படுவதாயும், அசலமாகி விரிவாய தன்செயலில் வியாபியாவதற்கு மாறுபட்டு உருவாதி சதுவிதமாய் கசிதேசப்பட்டும் இவ்விலக்கணங்கள் காரண காரியங்களில் ஒன்றோடொன்றொவ்வாத சுபாவமாவ தெதென்னில்; அரனருளால் - சிவசத்தி சங்கற்பவல்லபத்தால் விடமாறும்; விரித்தவகை - இவ்வாறு சிவசத்தி சங்கற்பித்து மாயை விரித்து விளங்கிய தென்னகாரணத்தாலெனின்; புரிந்தடைவின் மேவி - ஆன்மாக்களாற் சித்தகன்மத்துக் கீடாக இவ்வாறு பேதப்பட்டுப் பொருந்தும்; அவை ஒடுங்க வருகாலம் - பாகப்பட்ட கன்மம் புசித்துத் தொலைந்த காலம் அந்த மாயை நிற்கும் முறை யேதென்னில்; உயிர்களெல்லாம் மருவிடமாய் - அநுதிகேவல நீக்கம் வந்து தன்னிடத்திற் பந்தமான உயிர்கள் மாறி அந்தக் கேவலத்திற் புகாமல் தரிப்பதற்கு ஓர் ஆதாரமாம்; மலகன்மங்கட்குப் பகைப்பொருளாகிய மாயையையும் மலமென்ப தேதென்னில்—மலமாய் மன்னியிடும் - குணத்தன்மையில் மலகன்மங்கட்குப் பகைப்பொருளாய் அவற்றைச் சேதிப்பதாயும் குணித்தன்மையில் அவைகட்கு உறவாய்ப் போகம் போத்திருத்துவங்களிற் பந்தம் விளைத்து மலமாயும் நிற்கும்.



கலையாதி தத்துவங்கள் ஆணவத்தைச் சிறிது நீக்குதல், கன்மத்தை நிச்சயம் பண்ணுதல், அறிவை விளக்குதல் முதலிய தொழில் செய்வனவாதலின் அது சித்தாகிய பதி செய்யுந் தொழில் இது செய்வதால் மாயை சடமாயிருந்துஞ் சித்துப்போலச் செயற்படுதல் யாங்ஙனமெனை மலைவற்க. மேலைச் செய்யுளிற் பந்தம் போகம் போத்திருத்துவம் மூன்றும் அவத்தைத் தவாரமாய் நிகழுமெனக் கூறிய தாற் பந்தநிகழ்தல் மாயையின் குணதன்மமெனை மயங்கற்க; மாயையின் குணிதர்மமே ஆண்டு நிகழுமெனக் கூறியது. எல்லாப் பொருட்கும் குணகுணி சுபாவங் குருமுகமாயறிக. மலகன்மங்கட்கு உறவுத் திரவியமான மாயை குணத்தன்மையில் அவற்றிற்குப் பகைப்பொருளாய் அவ்விரு மலங்களையுஞ் சேதித்து நிற்பது 'மலங்க டந்தர் தொழிலினை யியற்ற வேவுந், தூயவன் றனதோர் சத்தி' சங்கற்பத்தின் பெருமையாதலின் அது தெற்றென வுணர்க. ௨௨

என்ற ஒரு திருவிருத்தத்தால் ஆகமப்பிராமாணம் அநுபவப் பிரமாணங்களால் மாயையிலக்கணமுஞ் சிவசத்தியின் பெருமையுங் கூறிய ஆசிரியர் இனி இவ்வாறு ஓர் இறைவனும் மாயையும் உளவோ இலவோ வென்னும் ஐயம் நீக்குமுகத்தால் அநுமானப் பிரமாணத்தால் மேல் அது வலியுறுத்துவான் தொடங்கினர்.

23. என்னையிது எனில்உலகுக் குபாதான மில்லை
இறைவனல தெனின்அசித்துச் சித்தினிடத் துதியா
மன்னியுள தேல்முதல்வன் என்கொல் என்னின்
மாயைதான் அசித்துருவாய் மருவ மாட்டா(து)
அன்னவனும் இதுவொழிய ஆக்க மாட்டான்
அசத்தனும் எனின்அதுவும் அவன்போல் நித்தம்
முன்னவன்அவ் வசித்தைவிரித் தெவையும் ஆக்கும்
முதன்மைஅது கொடுத்ததென மொழிந்தி டாரே. ௫

(உரை) என்னையிதுவெனில் - இந்த மாயை எதுக்காக உள்ள தெனில்; உலகுக் குபாதானம் - அசேதனப் பிரபஞ்சங்கள் உண்டாகைக்கு முதற்காரணமாயிருக்கும்; இல்லை யிறைவனல தெனில் - மேலே 'உலகமெலா'மென்னுஞ் செய்யுளில் இருவகைப் பிரபஞ்சத்திற்கும் முதல்வனே மூலகாரணமெனப் பெறப்படுதலின் அவனுக்கு வேறாய் ஒரு மாயை வேண்டுவதில்லையெனில்; அசித்துச் சித்தி

னிடத்துதியா - சடமாயிருக்கிற அசேதனப் பிரபஞ்சஞ் சித்தாயிருக்
கிற சிவனிடத்திலே யுண்டாகாது, சடமாய் ஒரு மாயை முதற்
காரணமாகவேண்டும் ; மன்னியுளதேல் முதல்வ னென்கொல் என்
னில் - இவ்வாறு ஒரு மாயை முதற்காரணமா யுளதாகில் அதுவே
போதும் அதைவிட வேறே கர்த்தா எற்றுக்கெனின் ; மாயைதான்
அசித்துருவாய் மருவமாட்டாது - மாயையோ சடமாகையினாலே
அது தானே தனுவாதியாய்ப் பொருந்தமாட்டாது ; அன்னவனும்
. . . அசத்தனும் எனில் - கர்த்தாவும் இந்த மாயையில்லா
விடிற் பிரபஞ்சத்தை யுண்டாக்கமாட்டானாகலின் அப்போது பல
வீனனேயா மென்னில்; அதுவும் அவன்போல் நித்தம் - அந்த மாயை
யும் அந்தக் கர்த்தாவைப்போல் அழியாத பொருளாகையால் ; முன்ன
வன் அவ் வசித்தைவிரித் தெவையும் ஆக்கும் - கர்த்தா தனக்கு வேண்
டும்போதெல்லாம் அந்தச் சடத்தைச் செயற்படுத்தி ஆன்மாக்க
ளுக்குத் தனுவாதிகளைப் படைக்கும் ; முதன்மை - ஆனால் அந்த
மாயை இருப்பதினாலே கர்த்தாவுக்குக் கிருத்தியம் நடப்பதால் அது
கொடுத்த முதன்மையே யாகவேண்டுமெனின் ; அது கொடுத்த
தென மொழிந்திடாரே - காரணகாரிய வேறுபாடு உணர்ந்தோர்கள்
அந்த மாயைக்குக் கர்த்தா முதன்மை கொடுத்தானென்று சொல்லுவ
தன்றிக் கர்த்தாவுக்கு மாயை முதன்மை கொடுத்ததென்று சொல்
லார்களாதலாற் பலகீனனல்லன்.

'முதன்மையது கொடுத்ததென மொழிந்திடா'ரென்றமையால்
அவன் கொடுத்த முதன்மை யென்பது தானே போதரும். மாயைக்கு
அவன் கொடுத்த 'முதன்மை யாதோ வெனில் அது உண்மையதி
காரத்திற் கூறப்படும். சிவசத்தியின் பெருமை கூறியது ஈண்டுங்
காண்க. ஈண்டு இரண்டு திருவிருத்தத்தால் மாயையுண்மைக்கு இலக்
கணங் கூறிய ஆசிரியர் இனி அது காரியப்படுதற்குக் காரணங் கூறு
முகத்தால் மேல் அது வலியுறுத்துவான் தொடங்கினர். ௨௩

பிரபஞ்ச முண்டாதற்கு மலபரிபாகங் காரணமென்று மேலே
'ஏற்றவினை' யென்னுஞ் செய்யுளிற் பெறப்படுதலின் அக்காரணத்
தால் முதல்வன் தனதிச்சைவழியே பிரபஞ்சந் தோற்றுவிப்பனோ
அன்றோ வென்னும் ஐயம் நீக்குதற்கு எழுந்தது இச்செய்யுளென்ப
தாம்.



24. படைத்ததொரு படியின்றிப் பறவைபசு நரராய்ப்
பண்ணியதென் முன்னைவினைப் பான்மை யென்பர்
அடுத்தவினை உளதாயின் இறையேன் என்னில்
அசேதனம்மற் றவைஆவிக் கமைத்த தாகும்
எடுத்தவினை உருவுருவ தாயிரேல் தானே
இருவினைக்குத் தக்கஉடல் எய்து மென்னில்
சடத்திரளும் அகர்த்தாவாய் அறிவொன் றில்லாத்
தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே. ௬

(உரை) படைத்ததொரு . . . பண்ணியதென் - மல
பரிபாகங் காரணமாக முதல்வன் செய்யும் அனாதி சிருட்டியில்
ஒரு வடிவாகப் படையாமல் நரர் பட்சி மிருக தாபரங்களாய்ப்
பலவிதமாகப் படைத்தற்கு ஏது காரணமெனில் ; முன்னை வினைப்
பான்மை யென்பர் - கேவலத்தின்கண் அவர்கள் ஆர்ச்சித்த இரு
வினைப் பேதங் காரணமா மென்று சொல்வார்கள் ; அனாதி சிருட்டி
யிற் பேதப்படும் முறைமை விவகரிப்பதாகலின் ஈண்டுக் கூறப்
படும் முன்னைவினையைக் காமியமலத்தின் காரியமாய் மனவாக்குக்
காய சென்னியமாய்த் தோன்றும் இதாகிதங்களாலுள்ள புண்ணிய
பாவங்களென்று மலையற்க. மூலமலத்தின் காரியமாய் மூன்று மலத்
திற்கும் முன்னையதாய் மூன்றுமலம் மூன்றவத்தை யென்று நின்று
செய்யு மிருவினையையே ஈண்டு முன்னை வினையெனக் கூறியதென்
றறிக. இது தொண்டர்சீர் பரவுவாராகிய அருண்மொழித்தேவர்
'யாக்கைதன் பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற' [பெரிய
புராணம், கண்ணப்ப. 154] வென்பதனானும், 'இருவினை தானிவை
மும்மல மீங்கிவை' யென்பதனானுங் காண்க. 'இருவினை மும்மலப்
பழவல்லிரு' ளென்று ஞானாமிர்தத்தாரும், 'தன்னை யறிந்திடுந் தத்
துவ ஞானிகள், முன்னை வினையின் முடிச்சவிழ்ப் பார்கள், பின்னை
வினையைப் பிடித்துப் பிசைவர்கள், சென்னியில் வைத்த சிவனரு
ளாலே' [திருமந்திரம், 2611] என்று திருமூலதேவரும் உரைத்தா
ராகலின் இதனுண்மை குருமுகமாயறிக—அடுத்தவினை யுளதாகி
லிறையே னென்னில் - பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாக
மூலமலமும் அது பலதிரப்படுதற்குக் காரணமாக இருவினையும் உண்
டாயிருக்க அவற்றிற்கு வேறாக முதல்வன் எற்றுக்கெனின் ; அசே

தனம் - அவையெல்லாஞ் சடமாகையினுலே கர்த்தாவேணும்; அவை சடமாயினுஞ் சுகதுக்க ரூபமாய்க் காரியப்படக் கண்டோமே என் னில்—மற்றவையாவிக் கமைத்ததாகும் - அவை ஆன்மாக்களுக்காய் அவ்வாறு முதல்வன் கூட்டித் தொழிற்படுத்தினதாயிருக்கும்; எடுத்த வினை . . . மென்னில் - இங்ஙனங் கூறப்பட்டு அவர்கள் ஆர்ச் சித்த வினைப்பிரகாரமுள்ள சரீரத்தைப் பொருந்துகிறது ஆன்மாக்க ளாமே அவ்வினை சடமாயினும் அவர்கள் சித்தாகலின் அவர்கள் தானே சுகதுக்கம் புசித்தற்கேற்ற தனுவை யெடுத்துக் கொள்ளுவ ரென்றாற் படும் இழுக் கென்னையெனின்—சடத்திரளும் - சட மாகிய மாயை கன்மங்களும்; அகர்த்தாவாய் - கர்த்தாவல்லவாய் ; அறி வொன்றில்லாத் தன்மையனும் - வியஞ்சகத்தையின்றித் தனக்கென அறியுஞ் சுதந்தரவறிவில்லாத ஆன்மாவும்; கூட ஒரு சங்கையின்றே- சிவசத்தியையின்றி இவைகள்தானே கூடித் தொழிற்படுவதற்கோர் செயலுமில்லை.

ஈண்டுஞ் சிவசத்தியின் பெருமை கூறியவாறு காண்க. உ௯

'உருவாதி'யென்னுஞ் செய்யுளில் மாயையினதிலக்கணங் கூறி யதி லெஞ்சுதல்பற்றி இம்மாயைதான் ஆதியோ அனாதியோ, ஆதி யாகில் நித்தியமென்பது பொருந்தாது அனாதியாகில் கர்த்தாவாற் கன்மத்தளவு கூட்டப்பட்டதென்பது பொருந்தாது, இது யாதோ வென்னும் ஐயத்தின்கண் நிகழும் ஆசங்கை நீக்குமுகத்தால் இனம் பற்றி மும்மலங்கட்குங் காரண பந்தமுண்மை கூறுதற்கு எழுந்தது வருஞ் செய்யுளென்பது.

25. அல்லல்மிக உயிர்க்கிவைதான் அணைத்த தீசன்
அருவினைகள் அருந்துதற்கோ வினையோ அன்றிச்
சொல்லிவரு மாயையோ அணுவை முந்தச்
சூழ்ந்ததெனும் உரைமுதலோர் தொடக்கி லார்பால்
ஒல்லைவரு மெனின்உள தாம் உயிருண் டாவே
உளதுமலம் மலமுளதா ஒழிந்த வெல்லாம்
நெல்லின்முளை தவிடுமிபோல் அநாதியாக
நிறுத்திடுவர் இதுசைவம் நிகழ்த்து மாறே. எ

(உரை) அந்வயம். ஈசன் - கர்த்தா ; காருண்ணியத்தாற் பாசநீக் கப்புகுந்தவிடத்து—உயிர்க்கிவைதான் அணைத்தது - மாயையை ஆன்



மாக்களுக்குக் கூட்டியது; அல்லல்மிக அருவினைகள் அருந்துதற்கோ-
கொடிய வினைகளை ஆர்ச்சித்துக்கொண்டு புசித்து மிகவுந் துக்கப்படு
தற்கோ முன் ஆர்ச்சித்த வினை புசித்துத்தொலைந்து சுகப்படுதற்கோ;
வினையோ - முன்னைவினையென்றிங்ஙனம் கூறிய இருவினையோ ;
அன்றிச் சொல்லிவரு மாயையோ - வினையினளவு காரியப்படுமென்
றிங்ஙனஞ் சொல்லிய மாயையோ; அணுவை முந்தச் சூழ்ந்ததெனும்
உரை - ஆன்மாவின் முன்னே பந்தப்பட்டது யாதென்று நீ கேட்
கில் ; முதலோர் தொடக்கிலார்பால் ஒல்லை வருமெனின் உளதாம் -
அனாதியே மூலமல பந்தமில்லாதிருந்து அவர்களிடத்தில் இது வந்து
பொருந்திற்றென்றும் எல்லா அனத்தங்கட்கும் முதல்வனே மூல
காரணமென்றுஞ் சைவரிலொரு சாரார் கூறுங் கூற்றாகில் அதற்கு
முற்பிற்பாடு கூறவரும்;ஆனால் சித்தாந்தமேதென்னில்—உயிருண்டா
வே உளதுமலம் - உயிருள்ளபோதே இருவினை மும்மலங்கட் கெல்
லாங் காரணமாகிய மூலமலம் அனாதி பந்தமாயுள்ளது ; மலமுளதா
ஒழிந்த வெல்லாம் - ஏனை இருவினை மும்மலமென்று கூறப்படு
வன வெல்லாம் மூலமலத்தின் காரியமாகையாலே ; நெல்லின் முளை
தவிடுமிபோல் அநாதியாக - நெல்லினிடத்து முளை தவிடுமிகளெல்
லாம் வித்துத் தன்மையுள் ஒன்றா யடங்கி யிருந்து பின்பு முற்பிற்
பாடின்றிக் காரியப்படுவது போல; நிறுத்திடுவர் இதுசைவர் நிகழ்த்து
மாறே - மும்மலமும் அனாதி பந்தமென்று சைவாகமங்க ளுணர்ந்தோ
ராற் கூறப்படும்.

அற்றாகலினன்றே 'மூலமல மொன்று தானங்கள் இரண்டு மூலமலத்தா லாணவ பெந்த' மென்றார் எமதாசிரியரும். 'மூல மலத்தாற் சானு மாயை, கருமத் தளவிற் றருமுரு விறைவ' [சங்கற்ப நிராகரணம், v, 32] னென்றார் நூலாசிரியரும். மூலமலமென ஆண் டாண்டுக் கூறப்படுவன வெல்லாம் இருவினை மும்மலங்கட்குக் காரண மாகிய மூலமலத்தையேயாம். ஓரோரிடங்களில் இயைபு பற்றி ஆணவ மலத்தையும் மூலமலமென் றுபசரித்துக் கூறப்படும். இது நுண்ணு ணர்வா லறிக. 'விந்துவின் மாயை யாகி மாயையி னவ்வி யத்தம், வந்திடு' [சிவஞானசித்தியார், i, 19] மென வழிநூலாசிரியர் கூறிய தின் பொருள் உள்ளவா றுணராது சுத்தமாயையின் காரியமே அசுத்தமாயை யென்பாருமுளர். இனி மாயையென்ப தொன்றே

ஊர்த்துவபாகம் அதோபாகமா யிருதிறப்பட்டுச் சுத்தமாயை அசுத்த மாயை யெனப் பேதப்படு மென்பாரும், சுத்தமாயைபோல அசுத்த மாயையும் அநாதியே ஒருபொருளென்பாரு மிருதிறத்தாராசிரியர். இது 'உயிர்மலங் கன்மங் கர்த்தா வுபாதான மைந்' [சுவாமிநாத தேசிகர் தசகாரியம், 8] தென்றும், 'ஏகனனேக னிருள்கரும மாயை யிரண், டாகவிவை யா' [திருவருட்பயன், vi, 2] றென்றும் வருமாற்று லறிக. இனி முதல்வனது கிரியாசத்தியே மாயை யென்பாருமுளர். அது போலியென்றொழிக. உரு

ஆக நாலு திருவிருத்தங்களால் மாயாமலத்தினது இலக்கணங் கூறிய ஆசிரியர் இனி இரண்டு செய்யுளான் மாயேயமலத்தினது தோற்ற மொடுக்கங் கூறுவான் தொடங்கினார்.

26\. அருத்திமிகும் கலைகால நியதியுடன் வித்தை
அராகம்இவை அனந்தரால் மாயைதனி லாகும்
உருத்திரராற் கலையதனில் பிரகிருதி குணங்கள்
உளவாகும் ஆங்காரம் புந்தியினில் உதிக்கும்
தெரித்தவிது திரிவிதமாந் தைசதவை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்தகுண மனம்புத்தி இந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே.

(உரை) அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை யாராகமிவை அனந்தரான் மாயைதனி லாகும் - அசுத்தமாயையை அனந்த தேவ நாயனார் தமது சத்தியாற் கலக்கியவிடத்து அதினின்றும் ஆன்மாக்கள் இச்சாஞானக் கிரியைகளை விளக்குவது காரணமாய்க் கலை காலம் நியதி வித்தை அராகமென்னும் பஞ்சதத்துவங்கள் உளவாகும்; உருத்திராற் கலையதனிற் பிரகிருதி குணங்க ளுளவாகும் - உருத்திரதேவ நாயனார் சத்திகலையிற் பதியவே அதினின்றும் முக்குண ரூபமாகிய பிரகிருதிமாயை யுளதாகும், அந்தப் பிரகிருதியின் அவ்வியத்தத்திற் புத்திதத்துவம் உண்டாம்; ஆங்காரம் புந்தியினி லுதிக்கும் - புத்திதத்துவத்தினின்றும் ஆங்கார தத்துவம் உளதாகும்; தெரித்தவிது திரிவிதமாம் - இந்த ஆங்காரம் மூன்றுபாகமாம்; அவையாவையென்னில்—தைசதவை காரி திகழ்தருபூ தாதியென - தைசதவாங்காரமென்றும் வைகரியாங்காரமென்றும் பூதாதி

கிழமை மாலை 3½-மணி முதல் 6 மணி வரை நடைபெறும். கூட்ட விவரங்கள் துண்டு அறிக்கை மூலம் தெரிவிக்கப்படும்.

6. சமாஜத்தின் சைவத் தேர்வுகள் 1936௵ நவம்பர்௴ 22௳ ஞாயிற்றுக்கிழமை யன்று, சென்னை, வாலாஜாபாத், தஞ்சாவூர் முதலிய இடங்களில் நடைபெறும். தேர்வு நிலைய நுழைவுச் சீட்டுகள் (Hall tickets) மாணவர்கட்கு 16-11-36 ல் தபால்மூலம் அனுப்பப் படும். தேர்வின் முடிபு 10-12-36-ல் "சித்தாந்தம்" பத்திரிகையில் வெளியிடப்படும். தேர்ச்சி பெறுவோர்கட்குப் பட்டமும் பத்திரமும் சமாஜ ஆண்டு நிறைவிழாவில் வழங்கப்படும்.

7. தஞ்சை சைவசித்தாந்த இளைஞர் சங்கம், தனவணிக நாட்டுச் சிவநேசர் திருக்கூட்டம் முதலிய சபைகளிலிருந்து அப்பர் படக்காட்சி விஷயமாக நமது சமாஜத்துக்குச் சில கடிதங்கள் வந்தன. அவற்றை ஆலோசிக்கச் சமாஜ நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று 11-10-36-ல் நடைபெற்றது. அதில் திருவாளர்கள் கீ. தெய்வ சிகாமணி முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, சின்றை தங்கவேல் முதலியார் ஆகிய மூவரும வேல்பிக்சர்ஸ் கம்பெனியாரோடு கலந்து பேசித் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இம்மூவரும் ஷெ கம்பெனியாரைக் கலந்து ஷெ கம்பெனியார் திருவாளர்கள் கா. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ., எம். எல்.,—டி. எம்., கிருஷ்ணசாமி ஐயர் பி. ஏ., பி. எல்., ஆகிய இருவரைக் கொண்டு அப்பர் சரித்திரத்தைப் படத்தில் காட்டவேண்டிய முறையைத் தமிழில் எழுதிச் சிறு புத்தகமாக வெளியிட வேண்டுமென்றும், அதைப் பார்த்து சமாஜமும் பிற சைவசபைகளும் கூறும் கருத்துக் களைக் கவனித்து அதன் பிறகே படக்காட்சி தயாரிக்கப்படல்வேண்டு மென்றும் முடிவு செய்திருக்கின்றனர்.

---

## ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை

### இராயப்பேட்டை

இச்சபையில் ஸ்கந்தர் சஷ்டி உத்ஸவம் 1936௵ நவம்பர்௴ 15௳ முதல் 8 நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறும். திருவாளர்கள் மா. துரைசாமி முதலியார், ச. சச்சிதாநந்தம்பிள்ளை, ம. பாலசுப்பிர மணிய முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. உலகநாத முதலியார், ஷெயார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகிய அன்பர்கள் முறையே திருப்போரூர் சந்நிதி முறை, ஸ்ரீமத் குமார சுவாமியம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தபுராணம், ஷெ, திரு மணம் என்பனபற்றி நாளுக்கொருவராகப் பேசுவார்கள். கூட்டம் நாடோறும் மாலை 8 மணி முதல் 10 மணி வரை நடைபெறும்.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.



# உள்ளுறை

அத்துவாக்கட்டளை — இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை—சோமசுந்தர தேசிகர் ... ௨௩௫
அப்பர் தேவாரச் சிறப்பு—G. கலியாணம் பிள்ளை ... ௩௨௧
அம்மையார் ௸ ... ௮௯
அவத்தை தெரிசனம் ... ௩௯0
அளவை யட்டவணை ... ௩௮௫
அறிவியல் நூல் ஆராய்ச்சி—கே. த. கிருஷ்ணசாமி ... ௩௪௯
இந்துமகா சபையில் சங்கராச்சாரியரின் தலைமையுரை ... ௩௬௭
இறை இருப்பில் நம்பிக்கை—உதவிப் பத்திராசிரியர் ... ௧௭௮
ஒரு வேண்டுகோள் ... ௩௧௧
கடிதப் போக்குவரவு—காரியதரிசி ... ௨௯௯
கலைச்சொல்லாக்க மகாநாட்டுத் தலைமையுரை—சுவாமி விபுலாநந்தர் ... ௩௪0
காஷ்மீரச் சைவம்—இளஞ் சைவப்புலவர்—அ. முத்துக் குமாரசுவாமி ... ௧௭௬
சமயக்கல்வி—கோவைக்கிழார் ... ௧௧௬
சமயச் செய்திகள்—உதவிப் பத்திராசிரியர் ௯௫, ௧௨௪, ௧௫௭, ௧௯0, ௨௨௧, ௨௫௪, ௨௮௬
சமயத்தின் அவசியம்—P. பொன்னரங்க முதலியார் ... ௧௨௯
சமயமும் பௌதிகக் கலையும்—மா. துரைசாமி முதலியார் ௧௩௮
சமாஜ முப்பதாவது ஆண்டு விழா—உதவிப் பத்திராசிரியர் ௭௧
" " G. கலியாணம் பிள்ளை ௫௭
சிவராத்திரி வழிபாடு—உதவிப் பத்திராசிரியர் ... ௯0
சீவகாருண்யம்—கச்சிமுனிசாமி உடையார் ... ௧௮0
சைவஇளைஞர் மகாநாட்டுத் தலைமையுரை—G. கலியாணம் பிள்ளை ... ௧௧
சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 30-ம் ஆண்டு அறிக்கை ௪௮
" கணிதபரிசோதனை அறிக்கை ... ௫௪
" வரவு செலவு கணக்குத் தொகுப்பேடு ௫௩
" 31-ம் ஆண்டு உத்தியோகஸ்தர்கள் ... ௫௫
சைவத்தேர்வு வினாக்கள்—அநுபந்தம்
சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமையுரை—பண்டிதை அசலாம்பிகை அம்மையார் ... ௨௩
சைவர் முன் நிற்கும் பணி—C.M. இராமச்சந்திர செட்டியார் ... ௨௫௭
ஞானபாநு—உதவிப் பத்திராசிரியர் ... ௨௧௭
ஞானாமிர்த மூலமும் விளக்க உரையும்—ஔவை - சு. துரைசாமிப் பிள்ளை ௧௪௩, ௨௬௯, ௩௬0
தமிழர் மத வளர்ச்சி—அ. மு. பரமசிவாநந்தம் ௨0௭, ௨௩௯, ௩௩௬

தலைமைப் பேருரை—சுவாமி விபுலாநந்தர் ... க
தலைமையுரை—கீ. தெய்வசிகாமணி முதலியார் ... ௩௨௧
திருக்குற ளுண்மை—கா. ஆலாலசுந்தரம் பிள்ளை ... ௩௭௧
திருநீலகண்ட நாயனார் சரித்திர நுட்பம்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௧௯௮
திருநீற்றின் சிறப்பு—S. A. அமிர்தகடேஸ்வரம் பிள்ளை ... ௧௮௯
திருமுருகன் இளமை வனப்பு—சுவாமி விபுலாநந்தர் ... ௧௬௧
திருவஞ்சைக்களத்தில் சோதித்திருநாள் கொண்டாட்டம் P. தியாகராஜ பிள்ளை ... ௨௮௨
திருவடியும் திருமுடியும்—பொன்னம்பல சிவம் ... ௩௦௫
திருவாரூரர்—P. தியாகராஜ பிள்ளை ௨௧௯, ௨௪௭, ௩௩௨, ௪௧௨
திருவெம்பாவைக் கருத்து—மா. வே. நெல்லையப்ப பிள்ளை ௩௯௯
தில்லைச்சிற்றம்பலப்பெருமான் திருக்கோயிலில் பொறிக்கப்பெற்றுள்ள வெண்பாக்கள்—வை. சுந்தரேச வாண்டையார் ... ௨௧௫
திறப்புப் பேருரை—கீ. தெய்வசிகாமணி முதலியார் ... ௩௩
அஞ்சலும் அயிலலும்—P. பொன்னரங்க முதலியார் ... ௩௯
தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 52-ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி ... ௯௨
தேடிக் காணும் அநுபவம்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... [illegible]
தொல்காப்பியமும் சைவமும்—சுவாமி விபுலாநந்தர் ... ௧௧௩
நமது சமாஜ வெளியீடுகள்—காரியதரிசி ... ௧௦௪
நமது முன்னேற்றம்—பத்திராசிரியர் ... ௯௫
நாமார்க்குங் குடியல்லோம்—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ... ௨௨௫
நீலகண்டயாழ்—உதவிப்பத்திராசிரியர் ... ௧௧௩, ௧௪௨
பஞ்சாட்சரத்தின் பெருமை—K. V. சிவசுப்பிரமணியன் ... ௩௯௪
பண்டைத் தமிழரும் முருகவேள் வழிபாடும்—G. கலியாணம் ... [illegible]
பிரார்த்தனையின் நலம்—உதவிப் பத்திராசிரியர் ... ௩௭௧
மகோற்சவம்—வண்ணை. வை. ஆ. சர்மா ... ௪௯௪
முத்திநிலை—இலக்கண விளக்க ஆசிரியர் பாரம்பரை—சோமசுந்தர தேசிகர் ... ௨௦௨
முருகன் திருத்தலங்கள்—பொன். சாமிநாத தேசிகர் ... [illegible]
மெய்ம்மையின் மேன்மை—ச. சச்சிதாநந்தம் பிள்ளை ... ௯௭
விநாயக உருவ உண்மைப்பொருள்—க. முனிசாமி உடையார் ... ௨௫௧
விரதங்களும் உத்ஸவங்களும்—ம. சுவாமிநாத சிவாசாரியார் ... ௨௮௯
வேதநெறி—இளஞ் சைவப் புலவர் மணிவாசகம் ... ௨௪௪
ஸ்ரீ இராமகிருஷ்ணரும் இயற்கை உணர்வும்—மா. துரைசாமி முதலியார் ... ௧௭௪


Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.


| மலர் ௯ | தாது ஆண்டு மார்கழித் திங்கள் 1936ஆம் டிசம்பர்மீ | இதழ் ௧௨ |
|---|---|---|


## அளவை யட்டவணை*

அளவைப் பிரமாணமாவது: பிரத்தியட்சம், அநுமானம், சத்தம், அபாவம், அர்த்தாபத்தி, உவமானம் ஆக ௬. பாரிசேஷம், சம்பவம், ஐதிகம், சகசம் ஆக ௪. ஆக ௧௦. இவைக்கு மேலுமளவைகளுள; அவைக ளெல்லாம் பிரத்தியட்சம், அநுமானம், சத்தமென்கிற மூன்றிலு மடங்கும். பிரத்தியட்சமாவது ஐயக்காட்சி, திரிவுக்காட்சி, சவிகற்பக் காட்சி, நிருவிகற்பக் காட்சி, இந்திரியக் காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக் காட்சி யென்று எட்டு விதமாக விருக்கும். இதில் ஐயக் காட்சி: குற்றியோ மகனோ, சிப்பியோ வெள்ளியோ, பாம்போ பழுதையோ, ஆணோ பெண்ணோ, சினையோ பாலோ இவைபோலப் பலவுமுள.

*இது அரசாங்கக் கையெழுத்துப் பிரதிகள் நிலையத்திலுள்ள எட்டுப் பிரதியிலிருந்து திருவாளர் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்களால் அன்பு கூர்ந்து எழுதி யுபகரிக்கப்பட்டது.—**பத்திராசிரியர்.**

திரிவுக் காட்சி: குற்றியை மகனென்றல், மகனைக் குற்றியென்றல். இப்படி மற்றவையுங் கொள்க. சவிகற்பக் காட்சி: நாமம் சந்தனம், சாதி மலர்க்காய், குணம் வாசனை, கிரியை அரைபடல், பதார்த்தம் கட்டை ஆக ரு.

நிருவிகற்பக் காட்சி: பதார்த்தமாகுங் கட்டையொன்றே யறிதல். ஆக சு-ம் இந்திரியக் காட்சி. ஆன்மா, ஆன்மாவினுடைய அறிவு, பஞ்சேந்திரியத்தி லொன்று, முச்சுடர் முதலான பிரகாசம் ஒன்று, ரூப முதலானதில் ஒன்று ஆக இவ்வைந்தையும் பற்றிக் கொண்டு ஐயந்திரிவு விகற்பமில்லாம லறிவதெனக் கொள்க. மானதக் காட்சி: சத்தாதிவிடயங்கள் சோத்திராதி பஞ்சேந்திரியங்களினாலே வந்தபின்பு ஆத்மாவினிடத்தில் வருவதெனக் கொள்க. தன் வேதனைக் காட்சி: இன்பதுன்பங்களை இராகாதி தத்துவங்கள் ஆத்மாவினுடைய அறிவுக்குக் கொடுத்த தெனக் கொள்க. யோகக் காட்சி: தியான சமாதிகளினாலே மும்மலங்களுடைய பெலத்தை வாட்டி அன்னிய தேசங்களிலும் நிகழ்கால மல்லாத காலங்களிலே உள்ள பொருள்களையெல்லாம் மயக்கமில்லாம லறிதலெனக் கொள்க. ஆக ச. ஆகப் பிரத்தியட்சக் காட்சி யெட்டுங் கண்டு கொள்க.

அநுமானமாவது: கண்ணினாலே காணப்பட்டு விட்டு நீங்காம லிருக்கிற ஏதுவினாலே கண் காணாத பொருளைத் துணிந்தறிதல்; அது தான் சுவார்த்த மென்றும் பரார்த்த மென்றும் இரண்டு விதமாக இருக்கும். அதில் சுவார்த்த வநுமானமாவது: பட்சம், சமபட்சம், விபட்சம் என்கிற மூன்றில் ஓரிடத்தில் சகச ஏது, காரிய வேது, அநுபலத்தியேது என்கிற மூன்றிலோ ரேதுவினாலே அந்த ஏதுவையுடைய பொருளைத் துணிந்தறிதல். பரார்த்த அநுமானமாவது: முன் சொன்னவைகளினாலே தானறிந்த படிக்குப் பிறருக்குத் தெரியச் சொல்லி யறிவித்தல்; இப்படி யறிவித்



தல் அன்னுவயமென்றும் வெதிரேகமென்று மிருவகைப்படும். அன்னுவயமென்கிற சொல்லுக்குப் பொருளைக் கூட்டுகிறது. வெதிரேக மென்கிற சொல்லுக்குப் பொருளைத் தள்ளுகிறது. பட்ச மூன்றிற் பட்சமாவது கண்காணாத பொருளிருக்குமிடம். சமபட்சமாவது உவமை சொல்லுகிற இடம். விபட்சமாவது அந்தப் பொருள்களில்லாத விடம். பட்சத்திலேயும் சமபட்சத்திலேயும் பொருளுண்டு; விபட்சத்திலே பொருளில்லை. சகசவேதுவாவது ஒரு சொற்குப் பல பொருளிருந்தால் வினை, சார்பு, இனம், இடமுதலானவைகளினாலே பல பொருளையும் விட்டு ஒரு பொருளிலே துணிதல். அது எப்படி யென்னில் 'மாப்பூத்தது' 'மாவீழ் கொச்சி,' 'மாவும் நாயும் வளர்ந்தன,' 'மாமறு மார்பன்' என்பது போல. காரியவேதுவாவது கண்கண்ட புகையினாலே கண்காணாத நெருப்புண்டென்று துணிதல். அநுபலத்தியேதுவாவது சரீரத்திலே குளிரில்லாதபடியினாலே பனிப் பெய்யவில்லை யென்று துணிதல் என அறிக. அன்னுவயமாவது கண்கண்ட புகையினாலே கண்காணாத நெருப்பைத் துணிதற்கு அடுக்களையுவமானஞ் சொல்லுதல். வெதிரேகமாவது நெருப்பில்லாத இடத்துப் புகையில்லை யென்று துணிதற்குத் தாமரைத்தடாகத்தையுவமை சொல்லுதல். இப்படிப் பட்சம், ஏது, அன்னுவயம், வெதிரேகம் இந்த நான்கினும் மலையிலே நெருப்புண்டென்கை. இப்படியன்றிப் பிரதிக்கினை, ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் ஆக வைந்தினாலும் நெருப்புண்டென்றறியலாமென்று துணிவு சொல்வாருமுளர்.

முதனாள் பூவையும் பரிமளத்தையும் பிரத்தியட்சமாகக் கண்டவன் மறுநாள் பூவைக்காணாமல் வாசனையினால் இன்ன பூவென்று நிச்சயித்தல் காட்சியாலநுமானம். ஒருவன்சொல்லுகிற வசனத்தினாலே அவனுக்கறிவுண்டென் றறிகிறது

துரியாதீதமாவது : நாபித்தானத்திலே பிராணவாயு நிற்கப் புருடன் மோகினி வடிவாகக் கொண்டு ஒன்றுமற இயமானனுக மூலாதாரத்திலே கிடப்பதுவாம். ஆகக் கீழாலவத்தை ௫-ம் சொல்லப்பட்டது. மேலாலவத்தை தெரிசனமிருக்கும்படி : பரமாதீதம், பரமதுரியம், பரமசுழுத்தி, பரமசொப்பனம், பரமசாக்கிரம் ஆக ௫.

இதில் பரமாதீதமாவது : நாதமிடமாக நின்று அந்தப் புருடனை மூலாதாரத்திலே தரிசிப்பது. பரமதுரியமாவது : நாதமும் விந்துவுமாக நின்று புருடனையும் பிராணவாயுவையும் நாபித்தானத்திலே தரிசிப்பது. பரமசுழுத்தியாவது : நாதமும், விந்துவும், சாதாக்கியமு மாகநின்று புருடனையும், பிராணவாயுவையும், சித்தத்தையும் இதயத்தானத்திலே தரிசிப்பது. பரமசொப்பனமாவது: நாதமும், விந்துவும், சாதாக்கியமும், மயேசுரமுமாக நின்று சத்தாதிகள் - ௫, வசனாதிகள் - ௫, வாயுக்கள் - ௰, கரணம் - ௪, புருடன் - ௧ ஆக ௨௫ கருவிகளையுங் கண்டத் தானத்திற் றெரிசிப்பது. பரம சாக்கிரமாவது: சிவதத்துவம் - ௫ மாக நின்று சத்தாதி - ௫, வசனாதி - ௫, வாயு - ௰, கரணம் - ௪, புருடன் - ௧, ஞானேந்திரியம் - ௫, கன்மேந்திரியம் - ௫ ஆக ௩௫ கருவிகளையும் லலாடத் தானத்திலே தரிசிப்பதுவாம். ஆக மேலாலவத்தை ௫-ம் சொல்லப்பட்டது.

இனிக் கேவலாவத்தை தரிசனமிருக்கும்படியாவது : ஆணவ மலத்தாலே மறைக்கப்பட்டுக் கிடந்த இடம். இனி, சகலாவத்தை தரிசனமிருக்கும்படியாவது : கருவிகளுடனே கூடி அதீதமாய் மலத்திலே பொருந்தியிருந்தவிடம். இனி, சுத்தாவத்தை தெரிசனமிருக்கும்படி : சகலத்திற் கருவிக் கூட்டத்தையு மொழிந்து ஒன்றினு நோக்காமல் தானல்லவென்று நீங்குவதுமாம். ஆகத்தெரிசனமான அவத்தை ௧௧.



இனி, நின்மலவவத்தை தரிசிக்கும்பொழுது பஞ்சமலங்களையுந் தெரிசிக்க வேணும். அவையாவன : ஆணவம், மாயை, கன்மம், மாமாயை, திரோபவம் ஆக ௫. இதில் ஆணவமாவது : சிவ இழப்பு. மாயையாவது : தனுகரண புவன போகங்களாய்க் காரியப் படுத்தியாயிருக்கும். கன்மமாவது: புண்ணிய பாவமெனப் பேர் பெற்றுச் சுகதுக்கமாக இருக்கும். மாமாயை யாவது : பஞ்சகர்த்தாக்களுக்கும் வடிவமாய்த் தேகாதிப் பிரபஞ்சத்தைப் பிரேரியா நிற்கும். திரோபவமாவது : மறைத்து மாயாபோகங்களிலே மிகவும் ருசிப்பிக்கும். ஆகப் பஞ்சமலங்களையுங் கண்டுகொள்ள.

இனி, நின்மலவவத்தை தெரிசனமிருக்கும்படி : நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் ஆக. ௫.

இவ்வாறு பஞ்சமலங்காட்டி ஞானசக்தியினிடமாய்ப் பூரண போதமாய் நின்றவிடம் நின்மல சாக்கிரம். பூரண போதமாய் நிருவிகாரம் பிறக்கப் பரைக்கு முதலான இடம் சொப்பனம். ப[ை]ர போகத்திற் றற்போதமற வழுந்துதல் சுழுத்தி. பரபோகத்தி லழுந்தி யந்த வசமாயிருக்கப்பரமானந்தத்துக்கு முதலாதல் துரியம். பரமானந்தச்சுட்டறப் பரமானந்தமாதல் நின்மலாதீதம். ஆக நின்மலவவத்தை ௫-ம் கண்டுகொள்க.

ஆக அவத்தை ௨௪-ம் இவ்வாறு தரிசித்தவன் சீவன் முத்தன். இனி இந்தச்சீவன் முத்தனுக்குப் பஞ்சசத்திகளும் பஞ்சமலங்களுங் கழன்றதற்குத் தெரிசனம் : வரலாறு. மாயாபோகத்தில் முன்பு நின்ற இடம் மாய்கையால் திரோதாயி நட்டம். இவனுக்குக்கன்ம வொப்புப்பிறக்கையினுற் பஞ்சகிருத்திய மொழிய மாயை நட்டம். அவனவளது வெனு முன்னிலைச் சுட்டொழிகையினுற் கன்மசக்தி நட்டம்.

தங்களுடன் சேர்ந்து தாமரைத் தடாகத்துக்கு முழுக வரும்படி விளித்த செயலைக் கண்டறிந்தார். அடிகள் தாம் கண்டறிந்த கன்னிப்பெண்கள் செயலை உருவகமாக அமைத்து அழிக்கப்பட்ட உலகத்தை மீளப் படைக்கத் தொடங்குஞ் சிவசத்தியின் செயலை இந்தத் திருவெம்பாவைப் பதிகத்திற் பாடுகின்றார்.

## திருவெம்பாவைக் காலவிளக்கம்

மக்களாகிய நாம் இவ்வுலகில் வாழும் வாழ்நாளைப் பகலும் இரவும் சேர்ந்த நாளை ஒருமையாக வைத்து கணக்கிடுகின்றோம். ஒவ்வொருநாளும் பூமி தன்னைச் சுற்றியும் ஞாயிற்றைச் சுற்றியும் வருவதனால் உண்டாகிறது. அவ்வாறு சுற்றுங்கால் பூமிமேல் ஞாயிற்றின் ஒளிபடுங்காலம் பகலாகவும், படாதகாலம் இரவாகவும் அமைகிறது. ஆதலின் ஒவ்வொரு நாள் இரவும் சிவசத்தியினது சங்கார காலத்தையும் ஒவ்வொரு நாட் பகலும் சிவசத்தி உலகத்தை மீளப்படைத்து நிலைத்து நிற்கச் செய்யும் திதிக் காலத்தையும், இரவு விடிகிறதற்கு முன்னே விடியற்காலமாகிய அஞ்சு நாழிகைக் காலம் சிவசத்தி உலகத்தை மீளப்படைக்கத் தொடங்கும் அவதாரத்தையும் குறிக்கின்றன. இங்ஙனம் நாளை ஒருமையாக வைத்துத் தைத்திங்கள் முதல் ஆனித் திங்கள் வரை கணக்கிடப்படும் உத்தராயண காலம் தேவர்களுக்கு ஒரு நாளின் கண்ணுள்ள பகலாகும்; ஆடித் திங்கள் முதல் மார்கழித் திங்கள் வரை கணக்கிடப்படும் தக்ஷிணாயன காலம் இரவாகும். இங்ஙனம் கணக்கிடப்படுதலில் மக்களுடைய மார்கழித் திங்கள் முழுவதும் தேவர்களுடைய இரவு காலத்தில் ஆறில் ஒரு பகுதியாகிய விடியற்காலமாகிறது. இந்த விடியற்காலத் தொடக்கத்தில் மக்கள் துயில் நீங்கி நாட்கடனாற்றத் தொடங்குதலால், அக்காலம் பள்ளி எழுச்சிக் காலம் (துயில் நீங்கி எழுகிற காலம்) என்று கூறப்படுகிறது. சைவர்கள் துயில் நீங்கி எழுந்ததும் சிவபெருமானை வழிபடுங்காற் கூறும் தோத்திரப் பாட்டுகளாக அமையும்படி அடிகள் பத்துப்பாட்டுக்கள் அடங்கிய திருப்பள்ளி எழுச்சிப் பதிகம் பாடியருளினர். ஆகலின் படைப்புத் தொழிலைப் பராசத்தியிற் றோன்றிய வைந்தவ சத்திகளாகிய சிவசத்திகள் தொடங்கும் அவதாரம், மக்களுடைய விடியற்காலமாகிய திருப்பள்ளியெழுச்சி எனக் குறிக்கப்படுகிற அவதாரம் தேவர்களுக்கு விடியற்காலமாகிய மார்கழித் திங்களாற் குறிக்கப்படுகின்றது. கூத்தப் பெருமான் சிறப்பாக நடனஞ் செய்கிற மார்கழித் திங்கள் திருவாதிரையும் அதற்கு முன் ஒன்பது நாட்களும் ஞாயிற்றின் ஒளி திங்கள் வழியாய் நாம் வாழும் பூமியின்கண் மிகுதியாக விளங்கும் காலமாதலின், மார்கழி விழாநாட்களாகிய அக்காலத்தில் திருவெம்பாவைப் பாட்டுகள் மாத்திரம் ஒவ்வொரு சைவனும் ஆன்மார்த்தமாகச் செய்யும் சிவவழிபாட்டிலும் கோவிலிற் பொதுவாகச் செய்யப்படும் பரார்த்த வழிபாட்டிலும் ஓதுதற்குரியனவாகக் கருதப்பட்டு அம்முறை நீண்டகாலமாக நமது தமிழ் நாட்டில் நடைபெற்று வருகிறது.



## திருவெம்பாவைக் கருத்து விளக்கம்

சிவமும் சத்தியும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி இரண்டற அத்துவிதமா யியைந்து நிற்கும். சர்வசங்கார காலத்தில் உலகம் ஒடுங்கியிருக்கும்பொழுது சத்தி சிவத்தில் ஒடுங்கியிருக்கும். அப்பொழுது சுத்தமாயை அசுத்தமாயைகளும் காரணமாத்திரையாய் ஒடுங்கி நிற்கும். ஆணவ மலமறைப்பு முற்றிலும் நீங்காத உயிர்களுடைய கேவல நிலையைச் சிவபெருமான் கண்டு சகியாது இரக்கங்

அமளியின்மேல் நின்றும் - மலர் நிறைந்த படுக்கையினின்று எழாமல் அதன்மேல் நிலையாகப் படுத்துக்கொண்டும்,புரண்டு-உருண்டும், இங்ஙனம் ஏதேனுமாகாள் கிடந்தாள் - இப்படி யாதொரு பயனையும் அடையாதபடி தூங்கிப் படுக்கையின் மேற் கிடக்கின்றாள் என்னே என்னே - இத்தன்மை தான் என்ன ? (நாங்கள் அறிய முடியவில்லை.) எந்தோழி பரிசு இதுவே - எங்கள் தோழியினுடைய தன்மை இதுதானோ ? எம்பாவாய் - எங்கள் பிரியமான நங்கையே, ஏல் ஓர் - நாங்கள் சொன்னவற்றை ஏற்றுக்கொண்டு இவ்வாறு தூங்கிக் கொண்டிருப்பது சரியா என்று நினைத்துப் பார்.

(விளக்க உரை) இதில் மனோன்மணி சர்வபூததமனியைத் துயிலுணர்த்தி அவளுடைய தொழிலைச் செய்யும்படி ஏவுகின்றாள். வாள்தடங்கண் மாதே - வாள் + தடம் + கண் = வாட்டடங்கண். வாள்—என்பது ஒளி—கண்ணானது, ஏனைய நான்கு பொறிகள்போல் அல்லாது சேய்மைக் கண்ணுள்ள பொருளிடத்துஞ் சென்று அறியும் ஒளி வலியுடையதாதலின் வாட்கண் என்றார்—தடம்—பரப்பு—விசாலம். வாள்தடம் கண் என்றதனால் புறத்தே தொலையிற் சென்றும் அகத்தே அகன்றும் அறியும் அறிவுடையவள் என்பது குறிப்பிடப்பட்டது. இத்தகைய அறிவுடைய நீ அக்கண்ணை வளரும்படி விட்டுத் தூங்கல் தகுதியாமா என்பது குறிப்பிப்பார், வாட்டடங்கண்மாதே என்று அடிகள் முதற்கண் விளித்தார்.

அரும் ஆதியும் அந்தமும் இல்லாச்சோதி - சோதி அறிதற்கு அருமையாதலின் அருஞ்சோதி என்றும் பிற சோதிகளுக்கெல்லாம் சோதியாயிருத்தலின் பெருஞ் சோதி என்றும் அடிகள் கூறினார். அருமை இங்கே இன்மை என்னும் பொருள் தந்து நின்றது. சோதியானது தோற்றக் கேடுகளில்லாது என்றுமுள்ளதா யிருத்தலின் ஆதியும் அந்தமுமில்லாச் சோதி என்றார். திருஞானசம்பந்த அடிகள்



துஞ்சுநாடுறந்து தோற்றமுமில்லாச் சுடர்விடு சோதி (1-41-4) என்று கூறியது காண்க.

யாம் பாடக் கேட்டேயும் - இந்தச் சோதி (ஒளி)யைச் சார்ந்து உயிர்கள் மலத்தொடக்கு நீங்கவேண்டியவைகளாதலின் அந்தச் சோதியைப் பாடுதல் ஆணவமல நீக்கத்திற்குக் காரணமாயிருத்தல் பற்றிச் சோதியை யாம் பாட என்றார்.

துயிலுதல் ஆணவமலத்தில் அழுந்தலையும் துயிலுணர்த்தல் ஆணவமலப்பற்றை விட்டு நீக்குதலையும் குறிக்கின்றன. "நேசாய வீசனு நீடாண வத்தரை—யேசாத மாயா டன்னூலே எழுப்புமே" என்று திருமந்திரம் 2163-வது பாட்டில் திருமூலர் கூறுதல் காண்க. கன்னிப் பெண்கள் ஒருவரொருவரை எழுப்பி உணர்த்துதல் ஒன்பது வைந்தவ சக்திகளும் ஒருவரையொருவர் அவரவர் தொழில் செய்யுமிடங்களாகிய தத்துவங்களுக்குரிய ஆன்மாக்களுடைய ஆணவ மலமறைப்பை நீக்குதலைக் குறிக்கிறது. பாட என்பது பாடுதலால் என்ற பொருளில் வந்தது. அதாவது யாம் பாடுதலாலுண்டாகும் ஒலிகள் கேட்டேயும்—என்பது கேட்கத்தக்க அவ்வளவு உரத்த ஒலியாயிருப்பினும் என்ற பொருளில் வந்தது. கேட்டுக்கொண்டிருப்பினும் என்று பொருள் கொள்வது பின் சொல்லப்படுகிற வளருதியோ என்பதற்கும் வன்செவியோ நின்செவிதான் என்பதற்கும் முரணாயிருக்கும். துயிலுணருமுன் கேட்பது முடியாது ஆதலின்—வளருதியோ - கண்வளருதியோ என்பது வளருதியோ என்று தலைக் குறைந்து வந்தது.

நின்செவி வன்செவியோ - வன்செவி என்பது கேட்காத செவி செவிட்டுச் செவி, மாதேவன் வார்கழல்கள் - 'மாதேவன்' முதல் 'ஈதே எந்தோழி பரிசு' வரை வீட்டுக்கு வெளியே நிற்கிற கன்னிப் பெண்களிலொருத்தி வீட்டுக்குள்ளிருக்கிற பெண்ணைப் பற்றிப் பிறபெண்களிடம் சொன்ன

இத்துன்பத்திற்குச் சங்கிலியார் காரணமாதலால் தம் துன்பத்தைக்கடவுளர்க்கு எடுத்துக்கூறுகையில் சங்கிலியாரையும் உடன் கூறினார். 54-ல் "கட்டனேன் பிறந்தேன் உனக்காளாய்க் காதற் சங்கிலி காரணமாக, எட்டினால் திகழும் திருமூர்த்தி யென்செய்வான் அடியேன் எடுத்துரைக்கேன்" என்றும் "என்னிடர் யார்க்கெடுத் துரைக்கேன்" என்றும் சொல்லி வருந்துகிறார். தமக்கு இடர்தந்தபோதிலும் உயிர்த்தோழமை பூண்ட ஆரூர்ப்பெருமான்மேல் தமக்குள்ள அடங்கா அன்பு முன்னிழுக்க வடதிருமுல்லைவாயிலை அடைந்து பாடுகையில் (69-ல்) "தண்பொழில் ஒற்றிமாநகருடையாய் சங்கிலிக்காவென் கண்கொண்ட பண்ப! படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே" என்று தம் கண்ணைப் பறித்துக் கொண்டதற்குச் சங்கிலியார்தாம் காரணம் என்பதைச் சொல்லி முறையிட்டார்.

9. 46-ம் பாட்டில் தம் இருதுணைவிகளுக்கும் தமக்கும் சிவனே பற்றுக்கோடு என்று அவர் எண்ணியிருந்ததைப் " பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரையுடையேன், உண்மயத்தவுமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்" என்று பாடிவெளியிட்டார். இதில் பரவையார் பண்மயமான மொழியில் பேசும் பெருமாட்டி என்று கூறுவதினால் திருவாரூர்ப் பிறந்த இவ்வம்மையார் இசையிலும் தேர்ந்து இருப்பாரோ என்ற ஐயம் எழுகிறது.

10. இப்படியாக இருமனைவிகளையும் பல தெய்வப் பாடல்களில் பாடிவைத்தார். பிறரைப்போல் தாமாக ஒரு பெண்ணைக் கலவியின்பத்திற்காகத் தேடிக் கொண்டிருந்தால் கடவுளைப் பாடும் பாடல்களில் அவர்களைச் சொல்லநேராது. ஆனால் சிவபிரானே இடைநின்று தமக்கு இப்பெண்களைக் கிடைக்கச் செய்ததால் அத்தெய்வ மகளிரும் தேவாரத்தில் நிலை பெற்று விளங்கி, அன்பர்கள் வாயினால் அவர்கள் பெயர் பலமுறை சொல்லப்படும் பெரும் பேறு பெற்றனர்.



யாங்காரமென்றும் பெயராம்;இவ்வாங்காரம் மூன்றும் முன்சொன்ன பிரகிருதியின் அவ்வியத்தமாகிய முக்குணங்களையும் புணரும்—திருந்தியசாத் துவிதம் விரித்தகுணம்-தைசதவாங்காரஞ் சாத்துவித குணத்தைப் புணரவே ; மனம்புத்தி . . . விரிந்தே - அவ்விடத்தில் மனமும் ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்தும் தோன்றும்.

ஈண்டுக் கூறப்படும் அனந்ததேவ நாயனாராவது உருத்திரதேவ நாயனாராவது பிரவிருத்தரால் அதிட்டிக்கப்படும் அணுபட்ச கர்த்தாக்களன்றிச் சம்புபட்சமன்றென வுணர்க. ஈண்டுத் தோற்றுவது அசுத்த மாயையில் அஞ்சு தத்துவமுங் கலையிலொன்றும் ஆக ஆறும் புருட தத்துவத்துடன் கூட்டி எழும் வித்தியாதத்துவமெனப் பெயராம். பிரகிருதியி னவ்வியத்தத்திற் றோன்றும் புத்தியும் அவ்வியத்தத்திற் றோன்றுங் குணமும் புத்தியிற்றோன்றும் ஆங்காரமுஞ் சாத்துவித தைசதபுணர்ச்சியிற் றோன்றும் மனமும் ஆக நாலும் அந்தக்கரணமென்பார் இவர் ; மனத்தின் றொழில்விகற்பமே சித்தமென்பார். இனிப் புத்தி தத்துவத்தோடு அவ்வியத்தத்திற் றோன்றியது சித்தமென்றும் அது கூட அந்தக்கரணம் நாலென்றும் குணதத்துவத்தை அறுபது வகையில் மூன்றாகச் சேருமென்றுஞ் சொல்வாருமுளர். இவர் அறுபது வகையில் ஏடணைமூன்றுங் கொள்ளாதாராம். இனி ஆங்காரத்தை அந்தக்கரணத்தி லொன்றாகவும் அறுபது வகையில் மூன்றாகவுங் கூட்டிய முறையே குணத்தையும் அந்தக்கரணத்தி லொன்றாகவும் அறுபதுவகையில் மூன்றாகவுங் கூட்டிச் சித்தத்தை மனத்துள் அடக்கி ஏடணை மூன்றுந் தள்ளிச் சரிக்கட்டிக் கொள்வாருமுளர். ஆன்மதத்துவம் உச-ல் இங்ஙனங் கூறிய அந்தக்கரணம் நாலும் மனத்தோடு தோன்றிய ஞானேந்திரியமைந்தும் போக நின்ற பதினைந்து தத்துவமுந் தோன்றும் முறையும் இவையெல்லாம் ஒடுங்கும் முறையுங் கூறுதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பதாம். உகூ

27. மன்னியகன் மேந்திரிய மானஇரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவரும் சத்தம்
தன்னைமுத லாகியதா மதமிகுமாத் திரையின்
தருமிதனில் வான்அநிலம் அனல்புனல்மண் சத்தம்

தலைமைப் பேருரை—சுவாமி விபுலாநந்தர் ... ௧
தலைமையுரை—கீ. தெய்வசிகாமணி முதலியார் ... ௩௨௧
திருக்குறளுண்மை—கா. ஆலாலசுந்தரம் பிள்ளை ... ௩௭௧
திருநீலகண்ட நாயனார் சரித்திர நுட்பம்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௧௬௮
திருநீற்றின் சிறப்பு—S. A. அமிர்தகடேஸ்வரம் பிள்ளை ... ௧௮௬
திருமுருகன் இளமை வனப்பு—சுவாமி விபுலாநந்தர் ... ௧௯௧
திருவஞ்சைக்களத்தில் சோதித்திருநாள் கொண்டாட்டம் P. தியாகராஜ பிள்ளை ... ௨௮௨
திருவடியும் திருமுடியும்—பொன்னம்பல சிவம் ... ௩௦௫
திருவாரூர்—P. தியாகராஜ பிள்ளை ௨௧௯, ௨௪௭, ௩௩௨, ௪௧௨
திருவெம்பாவைக் கருத்து—மா. வே. நெல்லையப்ப பிள்ளை ... ௩௧௯
தில்லைச்சிற்றம்பலப்பெருமான் திருக்கோயிலில் பொறிக்கப்பெற்றுள்ள வெண்பாக்கள்—வை. சுந்தரேச வாண்டையார் ... ௨௧௩
திறப்புப் பேருரை—கீ. தெய்வசிகாமணி முதலியார் ... ௩௩
துஞ்சலும் துயிலலும்—P. பொன்னரங்க முதலியார் ... ௩௧௬
தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 52-ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி ... ௬௨
தேடிக் காணும் அநுபவம்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௪௩௯
தொல்காப்பியமும் சைவமும்—சுவாமி விபுலாநந்தர் ... ௧௧௩
நமது சமாஜ வெளியீடுகள்—காரியதரிசி ... ௧௦௪
நமது முன்னேற்றம்—பத்திராசிரியர் ... ௬௫
நாமார்க்குங் குடியல்லோம்—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ... ௨௨௫
நீலகண்டயாழ்—உதவிப்பத்திராசிரியர் ... ௧௧௩, ௧௪௨
பஞ்சாட்சரத்தின் பெருமை—K. V. சிவசுப்பிரமணியன் ... ௩௧௪
பண்டைத் தமிழரும் முருகவேள் வழிபாடும்—G. கலியாணம் ... ௩௪௪
பிரார்த்தனையின் நலம்—உதவிப் பத்திராசிரியர் ... ௩௮௧
மகோற்சவம்—வண்ணை. வை. ஆ. சர்மா ... ௪௧௮
முத்திநிலை—இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை—சோமசுந்தர தேசிகர் ... ௨௦௨
முருகன் திருத்தலங்கள்—பொன். சாமிநாத தேசிகர் ... ௩௫௩
மெய்ம்மையின் மேன்மை—ச. சச்சிதாநந்தம் பிள்ளை ... ௯௭
விநாயக உருவ உண்மைப்பொருள்—க. முனிசாமி உடையார் ... ௨௫௧
விரதங்களும் உத்ஸவங்களும்—ம. சுவாமிநாத சிவாசாரியார் ... ௨௮௯
வேதநெறி—இளஞ் சைவப் புலவர் மணிவாசகம் ... ௨௪௪
ஸ்ரீ இராமகிருஷ்ணரும் இயற்கை உணர்வும்—மா. துரைசாமி முதலியார் ... ௧௭௪



Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்


# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானதுந வாணியைஉள் நாடு.


| மலர் ௯ | தாது ஆண்டு மார்கழித் திங்கள் 1936ஆம் டிசம்பர்மீ | இதழ் ௧௨ |
|---|---|---|


## அளவை யட்டவணை*

அளவைப் பிரமாணமாவது: பிரத்தியட்சம், அநுமானம், சத்தம், அபாவம், அர்த்தாபத்தி, உவமானம் ஆக ௬. பாரிசேஷம், சம்பவம், ஐதிகம், சகசம் ஆக ௪, ஆக ௧௦. இவைக்கு மேலுமளவைகளுள; அவைகளெல்லாம் பிரத்தியட்சம், அநுமானம், சத்தமென்கிற மூன்றிலு மடங்கும். பிரத்தியட்சமாவது ஐயக்காட்சி, திரிவுக்காட்சி, சவிகற்பக் காட்சி, நிருவிகற்பக் காட்சி, இந்திரியக் காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக் காட்சி யென்று எட்டு விதமாகவிருக்கும். இதில் ஐயக் காட்சி: குற்றியோ மகனோ, சிப்பியோ வெள்ளியோ, பாம்போ பழுதையோ, ஆணோ பெண்ணோ, சினையோ பாலோ இவைபோலப் பலவுமுள.

*இது அரசாங்கக் கையெழுத்துப் பிரதிகள் நிலயத்திலுள்ள ஏட்டுப் பிரதியிலிருந்து திருவாளர் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்களால் அன்பு கூர்ந்து எழுதி யுபகரிக்கப்பட்டது.—பத்திராசிரியர்.

திரிவுக் காட்சி: குற்றியை மகனென்றல், மகனைக் குற்றி
யென்றல். இப்படி மற்றவையுங் கொள்க. சவிகற்பக் காட்சி:
நாமம் சந்தனம், சாதி மலர்க்காய், குணம் வாசனை, கிரியை
அரைபடல், பதார்த்தம் கட்டை ஆக ரு.

நிருவிகற்பக் காட்சி: பதார்த்தமாகுங் கட்டையொன்றே
யறிதல். ஆக ச-ம் இந்திரியக் காட்சி. ஆன்மா, ஆன்மாவி
னுடைய அறிவு, பஞ்சேந்திரியத்தி லொன்று, முச்சுடர் முத
லான பிரகாசம் ஒன்று. ரூப முதலானதில் ஒன்று ஆக இவ்
வைந்தையும் பற்றிக் கொண்டு ஐயந்திரிவு விகற்பமில்லாம
லறிவதெனக் கொள்க. மானதக் காட்சி: சத்தாதிவிடயங்கள்
சோத்திராதி பஞ்சேந்திரியங்களினாலே வந்தபின்பு ஆத்மாவி
னிடத்தில் வருதலெனக் கொள்க. தன் வேதனைக் காட்சி:
இன்பதுன்பங்களை இராகாதி தத்துவங்கள் ஆத்மாவினுடைய
அறிவுக்குக் கொடுத்த லெனக் கொள்க. யோகக் காட்சி:
தியான சமாதிகளினாலே மும்மலங்களுடைய பெலத்தை
வாட்டி அன்னிய தேசங்களிலும் நிகழ்கால மல்லாத காலங்
களிலே உள்ள பொருள்களையெல்லாம் மயக்கமில்லாம லறித
லெனக் கொள்க. ஆக ச. ஆகப் பிரத்தியட்சக் காட்சி யெட்
டுங் கண்டு கொள்க.

அநுமானமாவது: கண்ணினாலே காணப்பட்டு விட்டு
நீங்காம லிருக்கிற ஏதுவினாலே கண் காணாத பொருளைத்
துணிந்தறிதல்; அது தான் சுவார்த்த மென்றும பரார்த்த
மென்றும் இரண்டு விதமாக இருக்கும். அதில் சுவார்த்த
வநுமானமாவது: பட்சம், சமபட்சம், விபட்சம் என்கிற
மூன்றில் ஓரிடத்தில் சகச ஏது, காரிய வேது, அநுபலத்தி
யேது என்கிற மூன்றிலோ ரேதுவினாலே அந்த ஏதுவை
யுடைய பொருளைத் துணிந்தறிதல். பரார்த்த அநுமான
மாவது: முன் சொன்னவைகளினாலே தானறிந்த படிக்குப்
பிறருக்குத் தெரியச் சொல்லி யறிவித்தல்; இப்படி யறிவித்



தல் அன்னுவயமென்றும் வெதிரேகமென்று மிருவகைப்
படும். அன்னுவயமென்கிற சொல்லுக்குப் பொருளைக் கூட்டு
கிறது. வெதிரேக மென்கிற சொல்லுக்குப் பொருளைத்
தள்ளுகிறது. பட்ச மூன்றிற் பட்சமாவது கண்காணாத
பொருளிருக்குமிடம். சமபட்சமாவது உவமை சொல்லுகிற
இடம். விபட்சமாவது அந்தப் பொருள்களில்லாத விடம்.
பட்சத்திலேயும் சமபட்சத்திலேயும் பொருளுண்டு; விபட்
சத்திலே பொருளில்லை. சகசவேதுவாவது ஒரு சொற்குப்
பல பொருளிருந்தால் வினை, சார்பு, இனம், இடமுதலான
வைகளினாலே பல பொருளையும் விட்டு ஒரு பொருளிலே
துணிதல். அது எப்படி யென்னில் 'மாப்பூத்தது'
'மாவீழ் நொச்சி,' 'மாவும் நாயும் வளர்ந்தன,' 'மாமரு
மார்பன்' என்பது போல. காரியவேதுவாவது கண்கண்ட
புகையினாலே கண்காணாத நெருப்புண்டென்று துணிதல்.
அநுபலத்தியேதுவாவது சரீரத்திலே குளிரில்லாதபடி
யினாலே பனிப் பெய்யவில்லை யென்று துணிதல் என
அறிக. அன்னுவயமாவது கண்கண்ட புகையினாலே கண்
காணாத நெருப்பைத் துணிதற்கு அடுக்களையுவமானஞ்
சொல்லுதல். வெதிரேகமாவது நெருப்பில்லாத இடத்
துப் புகையில்லை யென்று துணிதற்குத் தாமரைத்தடாகத்
தையுவமை சொல்லுதல். இப்படிப் பட்சம், ஏது, அன்னு
வயம், வெதிரேகம் இந்த நான்கினும் மலையிலே நெருப்புண்
டென்கை. இப்படியன்றிப் பிரதிக்கினை, ஏது, திட்டாந்தம்,
உபநயம், நிகமனம் ஆக வைந்தினாலும் நெருப்புண்டென்ற
றியலாமென்று துணிவு சொல்வாருமுளர்.

முதனாள் பூவையும் பரிமளத்தையும் பிரத்தியட்சமாகக்
கண்டவன் மறுநாள் பூவைக்காணாமல் வாசனையினால் இன்ன
பூவென்று நிச்சயித்தல் காட்சியாலனுமானம். ஒருவன்சொல்
லுகிற வசனத்தினாலே அவனுக்கறிவுண்டென் றறிகிறது

# அவத்தை தெரிசனம்*

அவத்தைகள் இருபத்து நான்கு. அவையாவன:— பிரேரகவத்தை - க; மத்தியாலவத்தை - ரு; கீழாலவத்தை - ரு; மேலாலவத்தை - ரு; சகலாவத்தை-க; கேவல அவத்தை - க; சுத்தாவத்தை - க; நின்மலாவவத்தை - ரு. ஆக உச.

இதிற் பிரேரகாவத்தையாவன: சிவதத்துவம் - ரு; கலாதிகள் - எ; கரணங்கள் - ச; பொறிகளிற் சோத்திரம் - க; பூதங்களிலாகாசம் - க. ஆக உஅ கருவி கூடிச் சத்தத்தைக் கேட்கிற அவதரம். மற்ற இந்திரியத்தினும் இப்படிக் கண்டு கொள்க.

மத்தியாலவத்தையாவன: சாக்கிரத்திலதீதம் சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சாக்கிரம் ஆக ரு.

சாக்கிரத்திலதீதமாவது முன்பு கண்டவனை இப்பொழுதறியாம லிருப்பது. துரியமாவது புருட தத்துவத்துடனே பிராணவாயுவுங் கூடி யறியுமாபோலே யறிந்து மறியாமலு மிருப்பது. சுழுத்தியாவது புருடனும் பிராணவாயுவுஞ் சித்தத்துடனே கூடியவனைக் கண்[ட]போது நிகழ்தல். சொப்பனமாவது சத்தாதி - ரு; வசனாதி - ரு; வாயு - க0; கரணம் - ச; புருடன் - க; ஆக உரு கருவியுடனே கூடி அவனைக் கண்டவிடம் நிகழ்தல்.

சாக்கிரத்திற் சாக்கிரமாவது சத்தாதி - ரு, வசனாதி - ரு, வாயு - க0, கரணம் - ச, ஞானேந்திரியம் - ரு, கன்மேந்திரியம் - ரு, புருடன் க ஆக ஙரு கருவியுடனே கூடி யவனை யறிந்து கட்டிக் கொள்ளத் தாற்பரியம் பண்ணுதல்.

*இது அரசாங்க கையெழுத்துப் பிரதிகள் நிலையத்திலுள்ள ஏட்டுப் பிரதியிலிருந்து திருவாளர் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்களால் அன்பு கூர்ந்து எழுதி யுபகரிக்கப்பட்டது.—பத்திராசிரியர்.



முன் சொன்ன பிரேரக அவத்தைக் கருவி கஅ-ம்கூடக் கூடியவனுடைய நாம சாதி குணங் கிரியை யெல்லாம் பகுத்தறிந்து சந்தேகந் தீர்ந்து கட்டிக் கொண்ட விடம் பிரேரக அவத்தையி லொழிந்து அறுதிப்பாடில்லை யென்று கண்டு கொள்க.

கீழாலவத்தை தெரிசன மிருக்கும்படி: சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் ஆக ரு. இதில் சாக்கிரமாவது: தத்துவம் ஙசா - ல் பூதம் - ரு, புருடனீங்கலாகக் கலாதி - சா, சிவதத்துவம் - ரு ஆக கசா - ம், நீங்க நின்ற சத்தாதி - ரு, ஞானேந்திரியம் - ரு, கன்மேந்திரியம் - ரு, அந்தக்கரணம் - ச, புருடன் - க ஆக உ0 - ம், புறநிலையில் பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆகத்தசவாயு க0-ம், வசனகமனதான விசர்க்க ஆனந்தம் ஆக ரு-ம் ஆக ஙரு கருவியுடனேகூடி ஆத்மா லலாடத்தானத்திலே காணுக்காட்சியுங் கேளாச் செவியுமாக நின்ற அவதரம்.

சொப்பனமாவது:—ஞானேந்திரியம் - ரு, கன்மேந்திரியம் - ரு ஆக க0 - ம் லலாடத்தானத்திலே நிற்க நின்ற உரு - கருவிகளுடனே கூடிக் கண்டத்தானத்திலே நின்று ஆனையேறி மாலைசூடக் காண்கிற அவதரம். சுழுத்தியாவது: சத்தாதி-ரு, வசனாதி-ரு, சித்தநீங்கலாகக் கரணம் ங, பிராணவாயு நீங்கலாக வாயு - கூ, ஆக உஉ கருவிகளும் கண்டத்தானத்திலே நிற்க, சித்தமும் பிராணவாயுவும் புருடனுமாக மூன்று கருவிகளும் இதயத்தானத்திலே நிற்கப் பிராணவாயுவுடனே புருடன் நாபித்தானத்திலே சரீரங்காவலாய் நின்று சந்திக்கப்படும்.

துரியாதீதமாவது : நாபித்தானத்திலே பிராணவாயு
நிற்கப் புருடன் மோகினி வடிவாகக் கொண்டு ஒன்றுமற
இயமானனைக மூலாதாரத்திலே கிடப்பதுவாம். ஆகக் கீழால
வத்தை ௫-ம் சொல்லப்பட்டது. மேலாலவத்தை தெரிசன
மிருக்கும்படி : பரமாதீதம், பரமதுரியம், பரமசுழுத்தி,
பரமசொப்பனம், பரமசாக்கிரம் ஆக ௫.

இதில் பரமாதீதமாவது : நாதமிடமாக நின்று
அந்தப் புருடனை மூலாதாரத்திலே தரிசிப்பது. பரம
துரியமாவது : நாதமும் விந்துவுமாக நின்று புரு
டனையும் பிராணவாயுவையும் நாபித்தானத்திலே தரிசிப்
பது. பரமசுழுத்தியாவது : நாதமும், விந்துவும், சாதாக்கி
யமு மாகநின்று புருடனையும், பிராணவாயுவையும், சித்தத்
தையும் இதயத்தானத்திலே தரிசிப்பது. பரமசொப்பன
மாவது: நாதமும், விந்துவும், சாதாக்கியமும், மயேசுரமு
மாக நின்று சத்தாதிகள் - ௫, வசனாதிகள் - ௫, வாயுக்கள்-
௧௦, கரணம் - ௪, புருடன் - ௧ ஆக ௨௫ கருவிகளையுங் கண்
டத் தானத்திற் றெரிசிப்பது. பரம சாக்கிரமாவது: சிவதத்
துவம் - ௫ மாக நின்று சத்தாதி - ௫, வசனாதி - ௫, வாயு -
௧௦, கரணம் - ௪, புருடன் - ௧, ஞானேந்திரியம் - ௫, கன்
மேந்திரியம் - ௫ ஆக ௩௫ கருவிகளையும் லலாடத் தானத்
திலே தரிசிப்பதுவாம். ஆக மேலாலவத்தை ௫-ம் சொல்
லப்பட்டது.

இனிக் கேவலாவத்தை தரிசன மிருக்கும்படியாவது :
ஆணவ மலத்தாலே மறைக்கப்பட்டுக் கிடந்த இடம். இனி,
சகலாவத்தை தரிசனமிருக்கும்படியாவது : கருவிகளுடனே
கூடி அதிதமாய் மலத்திலே பொருந்தியிருந்தவிடம். இனி,
சுத்தாவத்தை தெரிசன மிருக்கும்படி : சகலத்திற் கருவிக்
கூட்டத்தையு மொழிந்து ஒன்றினு நோக்காமல் தானல்ல
வென்று நீங்குவதுமாம். ஆகத்தெரிசனமான அவத்தை ௧௧.



இனி, நின்மலவவத்தை தரிசிக்கும்பொழுது பஞ்சமலங்
களையுந் தெரிசிக்க வேணும். அவையாவன : ஆணவம்,
மாயை, கன்மம், மாமாயை, திரோபவம் ஆக ௫. இதில்
ஆணவமாவது : சிவ இழப்பு. மாயையாவது : தனுகரண
புவன போகங்களாய்க் காரியப் படுத்தியாயிருக்கும். கன்ம
மாவது: புண்ணிய பாவமெனப் பேர் பெற்றுச் சுகதுக்கமாக
இருக்கும். மாமாயை யாவது : பஞ்சகர்த்தாக்களுக்கும்
வடிவமாய்த் தேகாதிப் பிரபஞ்சத்தைப் பிரேரியா நிற்கும்.
திரோபவமாவது : மறைத்து மாயாபோகங்களிலே மிகவும்
ருசிப்பிக்கும். ஆகப் பஞ்சமலங்களையுங் கண்டுகொள்ள.

இனி, நின்மலவவத்தை தெரிசன மிருக்கும்படி :
நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி,
நின்மல துரியம், நின்மல துரியாதீதம் ஆக. ௫.

இவ்வாறு பஞ்சமலங்காட்டி ஞானசக்தியினிடமாய்ப்
பூரண போதமாய் நின்றவிடம் நின்மல சாக்கிரம். பூரண
போதமாய் நிருவிகாரம் பிறக்கப் பரைக்கு முதலான இடம்
சொப்பனம். ப[ரை]ர போகத்திற் றற்போதமற வழுந்துதல்
சுழுத்தி. பரபோகத்தி லழுந்தி யந்த வசமாயிருக்கப்பரமா
னந்தத்துக்கு முதலாதல் துரியம். பரமானந்தச்சுட்டறப்
பரமானந்தமாதல் நின்மலாதீதம். ஆக நின்மலவவத்தை
௫-ம் கண்டுகொள்க.

ஆக அவத்தை ௨௪-ம் இவ்வாறு தரிசித்தவன் சீவன்
முத்தன். இனி இந்தச்சீவன் முத்தனுக்குப் பஞ்சசத்தி
களும் பஞ்சமலங்களுங் கழன்றதற்குத் தெரிசனம் : வர
லாறு. மாயாபோகத்தில் முன்பு நின்ற இடம் மாய்கையால்
திரோதாயி நட்டம். இவனுக்குக்கன்ம வொப்புப்பிறக்கையி
னாற் பஞ்சகிருத்திய மொழிய மாயை நட்டம். அவனவளது
வெனு முன்னிலைச் சுட்டொழிகையினாற் கன்மசக்தி நட்டம்.

# துஞ்சலும் துயிலலும்

[P. பொன்னரங்க முதலியார்]

துஞ்சுதல் என்றால் உறங்குவது என்று சாதாரணமாக நமது நூல்களில் உரை எழுதி யிருப்பதைப் பார்த்தால் அதற்கும் துயிலுக்கும் பேதம் இல்லை என்றே பலர் அபிப்பிராயப்படக் கூடும். ஆனால் துஞ்சுதல் வேறு துயிலுதல் வேறு என்று அறிந்து கண்ட அப்பர் சுவாமிகள் திருவாக்கால் அறியலாம்.

“துஞ்சும் போதும் துயிலின்றி எத்துவார்” ஆகவே துஞ்சுபவன் துயின்றாலும் துயில்வன் அல்லது துயிலாதிருப்பினும் இருப்பன் என்னும் கருத்து அவர் வாக்கால் புலனாகிறது. துயிலும் நிலை தன்னை மறந்து சுழுத்தியில் நிற்கும் நிலை. துஞ்சுதலோ உணர்வோடும் துரிய நிலையில் இருக்கக் கூடிய நிலை. துஞ்சுபவன் துயில்பவனைப் போல இருப்பன். ஆனால் உணர்வோடும் இருப்பதால் அவன் விரைவில் ஜாக்கிர (விழிப்பு) நிலைக்குவரக் கூடும். துயில்வதோ தன் உணர்வின்றி ஒன்றும் அறியக்கூடாத நிலையில் இருப்பது; அச்சமயம் நாம் நம்மைக் காத்துக் கொள்ளக் கூடாத நிலையில் இருக்கிறோம். ஆகவே துயிலைத் தடுப்பது அவசியம் என்று ஆன்றோர் கருதுவர். அதற்குப் பூதிசாதனம் சிறந்தது என்று திருஞானசம்பந்த சுவாமிகள் வாக்கால் அறிகிறோம். “துயிலைத் தடுப்பது நீறு” என்னும் சொற்றொடர் அவர் அருளிய திருநீற்றுப் பதிகத்தில் மிளிர்கிறது. அவர் மற்றொரு இடத்தில் துஞ்சுதலைப் பற்றிக் கூறுகிறார்.

“துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன அஞ்செழுத்துமே.”

என்பதை நாம் கவனிக்க வேண்டி யிருக்கிறது. துயிலைத்
தடுக்கும்படி போதிப்பவரே துஞ்சலை ஐந்தெழுத்து ஜெபத்
திற்கு உரியதாக்குவது துஞ்சுவதின் பெருமையையும் துயி
லின் இழிவையும் விளக்குகிறது. துயில் உண்மையாகவே
அருவருக்கத் தக்கது என்று உணர்ந்தோர் “தூக்கம் ஒழிந்
தது” என்று நாம் மேலான நிலையை அடைந்தபோது சந்
தோஷப் படுகிறார். “காயம் நிலையல்ல என்று கண்டால் உறங்
குவரோ தூய அருள் பற்றால் தொடர்வார் பராபரமே”
என்று தாயுமானவரும் போதிக்கிறார். “தூங்கி விழித்
தென்ன பலன் தூங்காமல் தூங்கும் பாக்கு கண்டால்
அன்றோ பலன்காண் பராபரமே” என்றும் அவர் அனுபவிக்
கிறார். “நித்திரையும் பாழ்த்த நினைவும் அற்று.......” என்று
பிறிதோரிடத்தில் கூறுகிறார். “நித்திரைவிட்டு நினைவோ
டிருப்பார்க்கு முத்திரை எதுக்கடி” என்று குதம்பைச்சித்
தர் பாடியிருக்கிறார். திருவாசகத்தில் திருவெம்பாவையில்
“கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே”
என்ற கட்டளை பிறந்திருக்கிறதை நாம் நினைவில் வைக்க
வேண்டும்.

பாமர ஜனங்கள்கூட இரவில் ஆறு மணிக்கு மேல்
தூங்க வேண்டியதில்லை என்பது அறிஞர் அபிப்பிராயம்.
ஜார்ஜ் மெரிடித் என்பவர் “ஓர் ஆடவன் ஆறு மணி நேர
மும், ஒரு பெண்மணி ஏழு மணி நேரமும், ஒரு மணமகன்
எட்டு மணி நேரமும் தூங்கலாம்” என்று (Amazing
Marriage என்னும் நூலில்) கூறி யிருக்கிறார். அருட்பா
நித்திய ஒழுக்க இயலில் நாலு மணி நேரம் தூக்கம் சாலும்
என்று கூறி யிருக்கிறது. நாம் உண்ணும் உணவு ஜீரணித்து
உடம்போடு ஒன்றுவதற்கு நாலு மணி நேரம் போதும்

என்பது மேனாட்டறிஞர் அறிந்த உண்மை. மேலும் இரவு 12 மணிக்கு முன் சரியாய் இரண்டு மணி நேரம் தூங்கினால் போதும் என்கின்றனர். மகம்மதிய சக்ரவர்த்தி அக்பரும் " தூக்கம் நன்மை தரும்; ஆனால் அதிக தூக்கம் ஒழிக்கத்தக்கது " என்று கூறுகிறார். நாலடியாரில் ஒரு பாட்டு "தூக்கத்துள் தூங்கி" என்று தொடங்குகிறது. தூக்கம் உள்ளவர்கள் தூங்கவேண்டியது அவசியம். அப்போது அவர்கள் தங்கள் வருத்தத்தை நீக்கிக்கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிக தேக உழைப்புள்ளவர்களும், அதிக மூளை வேலை செய்பவர்களும் குறைந்தது நாலு மணி நேரமேனுந் தூங்குவது அவசியமே. அவர்களும் தூங்கி எழுந்தபிறகு தூங்காமல் தூங்கி நிற்கும் சும்மாயிருக்கு நிலையில் நிற்கப் பழகிக்கொள்ளலாம். "சோறுண்டு தூங்கிப் பின் சும்மா யிருக்கச் சுகமுமுண்டே " என்னும் பட்டினத்தடிகளின் வாக்கைக் கவனித்தால் தூங்கின பிறகு சும்மா யிருப்பது சுகத்திற்கு ஏது என்று அறியலாம். " பசித்திரு, தனித்திரு, விழித்திரு " என்றும் பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கலாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியலில் " துஞ்சல் " என்றால் " பொய்த்துயில் " என்று உரை கூறப்பட்டிருக்கிறது. திருமாலும் ஆலிலையில் பொய்த்துயில் கொண்டிருப்பதாக நம் புராணங்கள் கூறுகின்றன. ஆகவே, நாம் நித்திரையில் வீணாய் இரவு முழுமையும் கழிக்காமல் சிறிது நேரம் மனோ மௌனத்தில் அல்லது சோகம் பாவனையிலாவது கழிக்கப் பழகிக்கொள்வோமாக.

# திருவெம்பாவைக் கருத்து

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

## திருவெம்பாவைச் சொற்றொடர் விளக்கம்

திருவெம்பாவை என்பது மாணிக்கவாசக அடிகள் தாம் பாடிய திருவாசக நூலின்கண்ணுள்ளதோர் பதிகம். அது இருபது பாட்டுகளை யுடையது. ஒவ்வொரு பாட்டின் இறுதியும் எம்பாவாய் என்ற சொற்றொடர் கொண்டு முடிதலால் இப்பதிகம் திருவெம்பாவை என்ற பெயராற் குறிக்கப்படுகின்றது. திருவெம்பாவை என்ற சொற்றொடர் திரு, எம், பாவை, என்ற மூன்று சொற்களால் ஆகியது. திரு, என்பது அருள்; எம், என்பது எங்கள் என்ற பொருள் படுகிற பன்மைப் பொதுப்பெயர்; பாவை என்பது சித்திரப் பதுமை போன்ற பெண்பாவை என்ற சொல். ஆய் என்ற விளியுருபேற்றுப் பாவாய் என்று விளிப்பெயராயிற்று. பதிகம் முதல் ஒன்பது பாட்டுக்களிலும் கன்னிப் பெண்கள் சிலர் தம் வீட்டினுள்ளே துயிலும் பெண் ஒருத்தியை விளித்துக் கூறுதலால் பாவாய் என்று ஒருமையிலும், பெண்கள் சிலர் சேர்ந்து கூறுதலால் எம் என்று பன்மையிலும் கூறியது பொருத்தமுடைமை அறிக. இப்பதிகம் சிவபெருமானது அருட்செயலைக் கூறுதலின் எம்பாவை என்பதனுடன், திரு என்ற அடைமொழி சேர்த்துக் கூறப்படுகின்றது. மாணிக்கவாசக அடிகள் திருஅண்ணாமலைத் திருப்பதியில் தங்கியிருந்தபொழுது மார்கழித்திங்கள் விடியற்காலத்தில் அங்கே உள்ள கன்னிப்பெண்கள் சிலர் சேர்ந்து தங்களை யொத்த ஒரு கன்னிப்பெண், கண்துயிலும் ஒவ்வொரு வீட்டுக்கு முன்னே போய் அவளை அவள் படுத்திருக்கும் அமளியிலிருந்து எழுந்து கதவைத் திறந்து வந்து

தங்களுடன் சேர்ந்து தாமரைத் தடாகத்துக்கு முழுக வரும் படி விளித்த செயலைக் கண்டறிந்தார். அடிகள் தாம் கண்டறிந்த கன்னிப்பெண்கள் செயலை உருவகமாக அமைத்து அழிக்கப்பட்ட உலகத்தை மீளப் படைக்கத் தொடங்குஞ் சிவசத்தியின் செயலை இந்தத் திருவெம்பாவைப் பதிகத்திற் பாடுகின்றார்.

## திருவெம்பாவைக் காலவிளக்கம்

மக்களாகிய நாம் இவ்வுலகில் வாழும் வாழ்நாளைப் பகலும் இரவும் சேர்ந்த நாளை ஒருமையாக வைத்து கணக்கிடுகின்றோம். ஒவ்வொருநாளும் பூமி தன்னைச் சுற்றியும் ஞாயிற்றைச் சுற்றியும் வருவதனால் உண்டாகிறது. அவ்வாறு சுற்றுங்கால் பூமிமேல் ஞாயிற்றின் ஒளிபடுங்காலம் பகலாகவும், படாதகாலம் இரவாகவும் அமைகிறது. ஆதலின் ஒவ்வொரு நாள் இரவும் சிவசத்தியினது சங்கார காலத்தையும் ஒவ்வொரு நாட் பகலும் சிவசத்தி உலகத்தை மீளப்படைத்து நிலைத்து நிற்கச் செய்யும் திதிக் காலத்தையும், இரவு விடிகிறதற்கு முன்னே விடியற் காலமாகிய அஞ்சு நாழிகைக் காலம் சிவசத்தி உலகத்தை மீளப்படைக்கத் தொடங்கும் அவதாரத்தையும் குறிக்கின்றன. இங்ஙனம் நாளை ஒருமையாக வைத்துத் தைத்திங்கள் முதல் ஆனித் திங்கள் வரை கணக்கிடப்படும் உத்தராயண காலம் தேவர்களுக்கு ஒரு நாளின் கண்ணுள்ள பகலாகும்; ஆடித் திங்கள் முதல் மார்கழித் திங்கள் வரை கணக்கிடப்படும் தக்ஷிணாயன காலம் இரவாகும். இங்ஙனம் கணக்கிடப்படுதலில் மக்களுடைய மார்கழித் திங்கள் முழுவதும் தேவர்களுடைய இரவு காலத்தில் ஆறில் ஒரு பகுதியாகிய விடியற் காலமாகிறது. இந்த விடியற்காலத் தொடக்கத்தில் மக்கள் துயில் நீங்கி நாட்கடனாற்றத் தொடங்குதலால், அக்காலம்



றுஞ் சுத்தப் பிரபஞ்சங்களைச் சந்நிதி மாத்திரையில் தோற்று வித்துத் தொழில் செய்தலும், அதன்பின் தூல அதிகார நிலையில் நின்று அனந்தேசன், உருத்திரன், மால், நான் முகன் ஆகியஇவர்களை அதிட்டித்து நின்று, அசுத்தமாயையி னின்று மிசிரப் பிரபஞ்சத்தையும், பிரகிருதிமாயையினின்று அசுத்தப் பிரபஞ்சத்தையும் தோற்றுவித்துத் தொழில் செய் தலும் திருவெம்பாவைப் பதிகத்திற் கூறப்பட்டனவென் றறிக.

திருவெம்பாவையில் 'ஆதியும் அந்தமும்' என்ற முத லாவது பாட்டு மனோன்மனிச் சத்தியின் திருவாக்காய் சர்வ பூததமனிச்சத்தியைப் பிரேரித்து உணர்த்துகின்றது. 'பாசம் பரஞ்சோதி' என்ற இரண்டாவது பாட்டு, சர்வபூததமனிச் சத்தியின் திருவாக்காய்ப் பலப்பிரமதனிச்சத்தியைப் பிரே ரித்து உணர்த்துகிறது. 'முத்தன்ன வெண்ணகையாய்' என்ற மூன்றாவதுபாட்டு பலப்பிரமதனிச்சத்தியின் திருவாக்காய்ப் பலவிகரணிச்சத்தியைப் பிரேரித்து உணர்த்துகிறது. 'ஒண் ணித்தில நகையாய்' என்ற நான்காவது பாட்டு பலவிகரணிச் சத்தியின் திருவாக்காய்க் கலவிகரணி சத்தியைப் பிரேரித்து உணர்த்துகின்றது. 'மாலறியா நான்முகனும்' என்ற ஐந்தா வது பாட்டு கலவிகரணிச் சத்தியின் திருவாக்காய்க் காளிச் சத்தியைப் பிரேரித்து உணர்த்துகிறது. 'மானேநீநென்னலை' என்ற ஆறாவது பாட்டு காளிச்சத்தியின் திருவாக்காய் ரௌத் திரிச்சத்தியைப் பிரேரித்து உணர்த்துகிறது. 'அன்னே இவை யுஞ் சிலவோ' என்ற ஏழாவது பாட்டு இரௌத்திரி சத்தி யின் திருவாக்காய்ச் சேட்டைச் சத்தியைப் பிரேரித்து உணர்த்துகின்றது. 'கோழி சிலம்பச் சிலம்பும்' என்ற எட் டாவது பாட்டு சேட்டைச் சத்தியின் திருவாக்காய் வாமைச் சத்தியைப் பிரேரித்து உணர்த்துகின்றது. இந்தப் பாட்டில் சேட்டை சத்தி வாமையைப் பார்த்து 'ஆழியா னன்புடமை

யாமாறும் இவ்வாறோ' என்று தன்னை அதிட்டித்து நிற்கு திருமாலினிடத்தில், துயின்று கொண்டிருக்கும் வாமை அன் பில்லை என்று கூறுவது பொருத்தமாயிருத்தலை அறிக. இன் 'முன்னைப் பழம்பொருட்கும்' என்ற ஒன்பதாவது பாட்டி லிருந்து இருபதாவது பாட்டு முடிய பன்னிரண்டு பாட்டு களிலும் ஒன்பது சத்திகளுடம் ஒன்று சேர்ந்து சிவபெரு மானை நோக்கிப் பாடுகின்றன.

## முடிவுரை

இங்ஙனம் ஒன்பது சத்திகளும் மேலே கூறப்பட்ட வாறு முறையே ஒன்றனை ஒன்று பிரேரித்து உணர்த்த உலகத்தைப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் நடை பெறுதற்குச் சிவபெருமானே முழுமுதல் தலைவன். இக் கருத்துப்பற்றி யன்றோ திருநாவுக்கரசு அடிகள் "ஆட்சி உலகை உடையாய் போற்றி" (271—4) "உலகை நடுங்கா மற் காப்பார் தாமே" (250—8) என்றும், "கண்ணாய், உல குக்கு நின்றாய் போற்றி" (269—11) என்றும் கூறியருளி னர். சிவபெருமானுடைய தலைமையில் நடைபெறுகிற இந்த ஆட்சி உள்ஆட்சி (Inner Government) என்று கூறப் படும். புற உலகில் அரசியற் பணியாளர் பிரேரித்து நடைபெறும் ஆட்சி யெல்லாம் இதற்கு ஒருவாறு ஏகதேச மானபடியாய் அமைந்துள்ளது :—உள்ளாட்சி எவ்வாறு அருளைத் துணையாகக்கொண்டு உயிர்களுடைய இன்ப நலத் தின்பொருட்டு இறைவனால் நடத்தப்பெறுகிறதோ, அவ் வாறே புற ஆட்சியில் அரசரும் அரசியற் பணியாளரும் அருளைத் துணையாகக் கொண்டே குடிமக்கள் இன்ப நல மடையும்படி ஆட்சிசெய்தல் வேண்டும். இக்காலத்திலுள்ள புற ஆட்சிகள் பொருட் பேற்றை முதன்மையாகக் கொண்டு



அருளை மறந்து நடத்தப்பெறுதலால் அமைதியின்மையும் துயரும் உண்டா யிருக்கின்றன. புற வாட்சிகள் செவ்வி தாய் நடைபெறுமாறு இறைவன் அருள்புரிவாராக.

---

"ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியை யாம்
பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல்நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனுமாகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்"

(பதவுரை) வாள்தடங்கண்மாதே - ஒளி பொருந்திய பரந்த கண்களையுடைய பெண்ணே, அரும் - (மலத்தொடக் குள்ளவர்) அறிதற்கு முடியாத, ஆதியும் அந்தமும் இல்லா பெரும் சோதி - முதலும் முடிவுமில்லாத பேரொளிப் பொருளாகிய சிவபெருமானைப்பற்றி, யாம் பாடக் கேட்டே யும் - நாங்கள் பாடுதலால் (எழும் ஒலிகள்) நின்செவிகளிற் புகுந்து அவற்றை நீ கேட்கும் வலியுடையவளாயிருந்தாலும், வளருதியோ - (அவ்வொலிகளை நீ கேளாதிருந்து யாது காரணத்தினாலோ) தூங்குகின்றாயோ அல்லது, நின்செவி வன்செவியோ - நினது செவிகள் அவ்வொலிகளைக் கேட்க மாட்டாத செவிட்டுச் செவிகளோ, மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய் வீதிவாய்க் கேட்டலும் - நாங்கள் சிவபெருமானுடைய நீண்ட கழல்களை அணிந்துள்ள திருவடிகளை வாழ்த்திப் பாடிக் கொண்டு வருகிற ஒலிகள் தெருவிலும் (தெருவிலுள்ள வீடுகளிலும்) சென்று கேட்குந் தரத்தனவா யிருப்பினும், விம்மி விம்மி மெய்ம் மறந்து - மூச்சுவிட்டுக் கொண்டு தனது உடலை மறந்து, போது ஆர்

அமளியின்மேல் நின்றும் - மலர் நிறைந்த படுக்கையினின்று எழாமல் அதன்மேல் நிலையாகப் படுத்துக்கொண்டும், புரண்டு-உருண்டும், இங்ஙனம் ஏதேனுமாகாள் கிடந்தாள் - இப்படி யாதொரு பயனையும் அடையாதபடி தூங்கிப் படுக்கையின் மேற் கிடக்கின்றாள் என்னே என்னே - இத்தன்மை தான் என்ன ? (நாங்கள் அறிய முடியவில்லை.) எந்தோழி பரிசு இதுவே - எங்கள் தோழியினுடைய தன்மை இதுதானோ ? எம்பாவாய் - எங்கள் பிரியமான நங்கையே, எல் ஓர் - நாங்கள் சொன்னவற்றை ஏற்றுக்கொண்டு இவ்வாறு தூங்கிக் கொண்டிருப்பது சரியா என்று நினைத்துப் பார்.

(விளக்க உரை) இதில் மனோன்மனி சர்வபூததமனியைத் துயிலுணர்த்தி அவளுடைய தொழிலைச் செய்யும்படி ஏவுகின்றாள். வாள்தடங்கண் மாதே - வாள் + தடம் + கண் = வாட்டடங்கண். வாள்—என்பது ஒளி—கண்ணானது, ஏனைய நான்கு பொறிகள்போல் அல்லாது சேய்மைக் கண்ணுள்ள பொருளிடத்துஞ் சென்று அறியும் ஒளி வலியுடையதாதலின் வாட்கண் என்றார்—தடம்—பரப்பு—விசாலம். வாள் தடம் கண் என்றதனால் புறத்தே தொலையிற் சென்றும் அகத்தே அகன்றும் அறியும் அறிவுடையவள் என்பது குறிப்பிடப்பட்டது. இத்தகைய அறிவுடைய நீ அக்கண்ணை வளரும்படி விட்டுத் தூங்கல் தகுதியாமா என்பது குறிப்பிப்பார், வாட்டடங்கண்மாதே என்று அடிகள் முதற்கண் விளித்தார்.

அரும் ஆதியும் அந்தமும் இல்லாச்சோதி - சோதி அறிதற்கு அருமையாதலின் அருஞ்சோதி என்றும் பிற சோதிகளுக்கெல்லாம் சோதியாயிருத்தலின் பெருஞ்சோதி என்றும் அடிகள் கூறினார். அருமை இங்கே இன்மை என்னும் பொருள் தந்து நின்றது. சோதியானது தோற்றக் கேடுகளில்லாது என்றுமுள்ளதா யிருத்தலின் ஆதியும் அந்தமுமில்லாச் சோதி என்றார். திருஞானசம்பந்த அடிகள்



பள்ளி எழுச்சிக் காலம் (துயில் நீங்கி எழுகிற காலம்) என்று கூறப்படுகிறது. சைவர்கள் துயில் நீங்கி எழுந்ததும் சிவ பெருமானை வழிபடுங்கால் கூறும் தோத்திரப் பாட்டுகளாக அமையும்படி அடிகள் பத்துப்பாட்டுக்கள் அடங்கிய திருப் பள்ளி எழுச்சிப் பதிகம் பாடியருளினர். ஆகலின் படைப் புத் தொழிலைப் பராசத்தியிற் றோன்றிய வைந்தவ சத்தி களாகிய சிவசத்திகள் தொடங்கும் அவதாரம், மக்களுடைய விடியற்காலமாகிய திருப்பள்ளியெழுச்சி எனக் குறிக்கப்படு கிற அவதாரம் தேவர்களுக்கு விடியற்காலமாகிய மார்கழித் திங்களாற் குறிக்கப்படுகின்றது. கூத்தப் பெருமான் சிறப் பாக நடனஞ் செய்கிற மார்கழித் திங்கள் திருவாதிரையும் அதற்கு முன் ஒன்பது நாட்களும் ஞாயிற்றின் ஒளி திங்கள் வழியாய் நாம் வாழும் பூமியின்கண் மிகுதியாக விளங்கும் காலமாதலின், மார்கழி விழாநாட்களாகிய அக்காலத்தில் திரு வெம்பாவைப் பாட்டுகள் மாத்திரம் ஒவ்வொரு சைவனும் ஆன்மார்த்தமாகச் செய்யும் சிவவழிபாட்டிலும் கோவிலிற் பொதுவாகச் செய்யப்படும் பரார்த்த வழிபாட்டிலும் ஓது தற்குரியனவாகக் கருதப்பட்டு அம்முறை நீண்டகாலமாக நமது தமிழ் நாட்டில் நடைபெற்று வருகிறது.

## திருவெம்பாவைக் கருத்து விளக்கம்

சிவமும் சத்தியும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத படி இரண்டற அத்துவிதமா யியைந்து நிற்கும். சர்வசங் கார காலத்தில் உலகம் ஒடுங்கியிருக்கும்பொழுது சக்தி சிவத்தில் ஒடுங்கியிருக்கும். அப்பொழுது சுத்தமாயை அசுத்தமாயைகளும் காரணமாத்திரையாய் ஒடுங்கி நிற்கும். ஆணவ மலமறைப்பு முற்றிலும் நீங்காத உயிர்களுடைய கேவல நிலையைச் சிவபெருமான் கண்டு சகியாது இரக்கங்

கொண்டு அவ்வுயிர்கட்குப் பொதுவாக அருள் செய்ய வேண்டும் என்னும் கருத்துக்கொண்டபொழுது அவனிடம் ஒடுங்கியிருந்த சிவசக்தி பிரிந்து, பிரிந்தாலும் வேறு காதபடி சிவத்தோ டியைந்து நிற்கிறது. இந்தப் பெயர்நிலையில் சிவசத்தி பராசத்தி எனப் பெயர் பெறும். பராசத்தி மாயையோடு தொடர்பு படாது உயிர்கட்கு மறைப்புச் சிறிதும் இல்லாத ஞானமாகும். இந்தப்பராசத்தி உயிர்கட்கு சிறப்புவகையால் ஐந்தொழில் குறித்து இச்சாஞானக்கிரியாசத்திகளாய்த் தொழில் செய்யும் அவதாரத்தில் திரோதான சத்தி அல்லது ஆதி யென்ற பெயர் பெறுவள். இந்த ஆதி சத்தியாகிய அபரசத்தியானது உயிர்கட்கு மலபரிபாகத்தின் பொருட்டுப்பிராரத்த கன்மத்தைக் கொடுக்க வேண்டுமென்ற சமமான ஞானமும் கிரியையும் உருவமுமுடையவளான பொழுது, மனோன்மனி என்ற பெயர் பெறுவள். அபரசத்தி என்பது மாயையுடன் இயைந்து உயிர்கட்கு மறைத்தலைச் செய்யுஞ் சத்தி. இந்த அபரசத்தி உயிர்கட்கு மலபரிபாகத்தின் பொருட்டுப் பிராரத்தகன்ம பலன்களைப் புசிப்பிக்கும்படி கொடுத்தற்கு அவற்றை ஒன்றொன்றாய் மறைத்துக் கொடுக்க வேண்டுமென்று இச்சை கொண்ட அவதரத்திற் றோன்றிய செயலையும் உருவத்தையும் உடையளானபொழுது மகேசை என்ற பெயர் பெறுவள். இந்த அபரசத்தி உயிர்கட்கு இளைப்பொழிக்கவேண்டிக் கன்மத்தை மாறிக்கொடுக்க வேண்டுமென்ற அவதாரத்திற் சங்காரத் தொழிலையும் உருவத்தையுமுடையவளான பொழுது இரௌத்திரி என்றபெயர் பெறுவள். இந்த அபரசத்தி, பிராரத்த கன்மத்தை அறியச் செய்தற்கு உயிர்கட்கு அந்தக் கரணம் முதலிய கருவிகளை நிறுத்த வேண்டுமென்ற திதித் தொழிலையுடையவளான பொழுது இலக்குமி என்ற பெயர் பெறுவள். இந்த அபரசத்தி உயிர்கட்குப் பிராரத்த



கன்மத்தை அறியுந் தொழிலை நிறுத்துதற்குத் தாரகமாக அந்தக்கரண முதலிய அறிகருவியைக் கொடுக்க வேண்டுமென்ற அவதாரத்திற் றோன்றிய படைப்புத் தொழிலையும் உருவத்தையும் உடையவளான பொழுது வாணி என்ற பெயர் பெறுவள்.

மேலே கூறியவாற்றால் சத்தி ஒன்றே உயிர்கட்கு ஐந்தொழில் செய்தல் குறித்து வேறு வேறு தொழில்களைச் செய்யும்பொழுது வேறு வேறு பெயர்கள் பெறுவள் என்பது தெளிவாகும். இச்சத்திகளை அதிட்டிக்கும் சத்திமான்களும் முறையே சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், நான்முகன் என்று வெவ்வேறு பெயர்கள் பெற்று நிற்பர். இச்சத்திகள் தொழில் செய்யும் இடங்களும் வெவ்வேறு தத்துவங்களாகவேயிருக்கும். சத்தி, சத்தி தொழில் செய்யும் இடம், சத்தியை அதிட்டித்து நிற்குஞ் சத்திமான் ஆகிய மூன்றும் எப்பொழுதும் ஒன்றோடொன்றியைந்து நிகழும். சிவபெருமானுடைய பொதுவியலுண்மையை அறியாதார், மூர்த்திகளுக்கு வேறுபாடு கற்பித்து அவர் பெரியர் இவர் பெரியர் என்று கூறிப்பிணங்கி யிடர்ப்படுவர். உலகிற்கு முழுமுதற் கடவுள் ஒருவனே என்ற உண்மையை அவர் அறியார் போலும்.

மேலே கூறப்பட்ட சக்திகள் தொழில் வேறுபாடு பற்றி மூவகைச் சத்திகளாகவும் எண்வகைச் சத்திகளாகவும் ஒன்பது வகைச் சத்திகளாகவும் இன்னும் பல்வேறு வகைப்பட்டு நிற்குஞ் சத்திகளாகவும் கூறப்படும். அச்சத்திகளோடு புணர்ந்து நிற்குஞ் சிவமும் அவை தொழில் செய்யுமிடங்களாகிய தத்துவங்களும் வெவ்வேறுபெயர் பெற்று நிற்கும். இவ்வேறுபாடுகள் அனைத்தும் இலயம், போகம், அதிகாரம் என மூன்றுயடங்கும். இலயம், போகம், அதி

காரம் என்பனபற்றி அறிய விரும்புகிறவர்கள் சிவஞான
பாடியம் சமாஜப் பதிப்பு 303—307. பக்கங்கள் பார்க்க.

திருவெம்பாவையிற் குறிக்கப்பட்ட சக்திகள் ஒன்
பது. அவை மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி,
பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, சேட்டை,
வாமை என்பன. இந்த ஒன்பது சக்திகளையும் புணர்ந்தும்
அதிட்டித்தும் நிற்குஞ் சத்திமான்கள் முறையே சதாசிவன்
ஆன்மமூர்த்தி அல்லது சர்வபூததமனர், சூரியமூர்த்தி அல்
லது பலப்பிரமதனர், சந்திரமூர்த்தி அல்லது பலவிகரணர்,
ஆகாய மூர்த்தி அல்லது கலவிகரணர், வாயு மூர்த்தி
அல்லது ஈசானர், தேயு மூர்த்தி அல்லது உருத்தி
ரர், அப்புமூர்த்தி அல்லது பீமர், பிருதிவிமூர்த்தி அல்
லது வாமதேவர் என்னும் பெயர்கள் பெறுவர். பிருதிவி
மூர்த்தி அராகதத்துவம் வரையிலும், அப்புமூர்த்தி கால
தத்துவம் வரையிலும், தேயுமூர்த்தி சுத்ததத்துவம் வரை
யிலும், வாயுமூர்த்தி ஈசுவரதத்துவம் வரையிலும் ஏனைய
நான்கு மூர்த்திகளும் சிவதத்துவம் வரையிலும் வியாபித்
துள்ளனர் என்றும் சைவநூல்கள் கூறுகின்றன. இப்பாகு
பாடு சிவபெருமானது போகநிலையைக் குறிக்குஞ் சதாசிவ
மூர்த்தியின் சத்தியாகிய மனோன்மனி முதலாகத் தொடங்கிச்
சிவபெருமான் அத்துவிதமாய்க் கலந்துநிற்கும் உயிர், சூரியன்,
சந்திரன், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவியாகிய எட்டு
உருவங்களையும் ஆதாரமாகக் கொண்டது. இதனால் சிவபெரு
மான் போக நிலையில் சதாசிவ மூர்த்தியாய் நின்று, உயிர்கள்
கேவல நிலையினின்று நீங்கிப் புனருற்பவமாமாறு குறித்துத்
தாலவிச்சா ஞானக் கிரியைகளோடு சேர்ந்து சுத்த மாயையி
னின்று சுத்தப் பிரபஞ்சத்தையும், அசுத்த மாயையினின்று
அசுத்தப் பிரபஞ்சத்தையுந் தோற்றுவித்தலும், அதன்பின்
சூக்கும அதிகார நிலையில் மகேசனாய் நின்று விந்துவினின்



மக்கள் சுற்றம் தமக்கு நேர்ந்த இன்னல் இடையூறுகள்
எல்லாவற்றையும் தமது திருப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.
அவருடைய பாடலைப் படித்தால் அவர் வரலாற்றையும்
படித்ததுபோ லாகிவிடும். ஏனெனில் இவ்விரண்டும்
ஒன்றாகப் பின்னிக்கொண்டு கிடக்கின்றன. மேலும் கடவுள்
பொருளாகப்பாடிய பாடல்களில் தம் காதற்கிழத்திகளைப்
பற்றி எடுத்துச் சொன்னதை நோக்க வியப்பு உண்டாகும்.

2. அவர் கையாண்ட இம்முறையால் ஒன்று தெரியக்
கிடக்கின்றது. இவர் தமக்கு என்ன குறை நேர்ந்தாலும்
அவற்றை இறைவன் பால் தெரிவித்துப் போக்கிக் கொள்
வார். இக்குறைகளைத் தீர்த்த அருட்கடல் தமக்குச் செய்த
அருளினை நினைந்து நினைந்து மகிழ்ந்து பாடுவார். உலகப்
பொருள்களைக்கூட சிவபெருமானிடத்தில் வேண்டிப் பெற்
றாரே யொழிய மக்கள் எவரையும் இரந்து தமக்கு இன்னது
வேண்டும் என்று கேட்டதாகத் தெரியவில்லை.

3. பெண்காரணமாகவும், தமக்குப் பரவையாரை
யும் சங்கிலியாரையும் மனைவியாக்க வேண்டும் என்று கடவு
ளையே வேண்டிக் கொண்டார். வேண்டுவார் வேண்டின
அளிக்கும் சிவபெருமானே, தமக்குப் பெற்றோர், உற்றார், எவ
ரும் சிவபெருமான் என்று கொண்ட ஆரூரர்க்கு மணம் பேசி
இவ்விருவரையும் மனைவியாக்கினர். இச்செய்திகள் அவர்
பாட்டுகளின் வழியாகவே யறியலாம்.

4. 51-ம்பத்தில் "என்னுடைய தோழனுமாய் யான்
செய்யுந் துரிசுகளுக்குடனாகி, மாழையொண் கண் பரவை
யைத் தந்தாண்டானை மதியிலா ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்னாரூரிறைவனையே" என்று பரவையாரைத் தாமடைந்
தது சிவன் றுணைக்கொண்டே என்று உலகினர்க்குத் தெரி
வித்தார். இப்பேர்ப்பட்ட உதவியைச் செய்த ஆரூரிறை
வனைப் பிரிந்திருந்த தம்மை "மதியிலா ஏழை" என்று

இழித்துக் கூறிக் கொண்டு வருந்தினர். இப்பாடலிலே ஆரூ
டைய நம்பி பரவையார் அழகில் ஈடுபட்டவர் என்பது
தெரிய "மாழையொண் கண்பரவை" என்று அவ்வம்மை
யாருடைய அழகும் ஒளியும்பொருந்திய கண்களைப் புகழ்ந்
தார். இளமையில் தவநெறியில் திருப்பி விடப்பட்ட தம் உள்
ளத்தை முதல்முதல் கொள்ளை கொண்டது இம்மாழை
யொண்கண் அல்லவா? பரவையாரைப் பேசும்போது
அதை மறப்பரோ?

5. தம்மைச் சார்ந்த மனைவியார்க்கு வேண்டியவைகளை
யும் கடவுளை தரும்படி விரும்புகிறார். பரவையார் செய்யும்
அடியார் விருந்திற்கு வேண்டிய உணவையும் பொருள்களை
யும் கடவுள் வழியாகவே பெற்றார். அப்படியே குண்டையூர்
நெல்லைத் திருவாரூர் கொண்டு போகச் சிவபெருமானை ஆள்
தரும்படி கேட்டார். 20-ல் "குரவமருங் குழலாள்உமை
நங்கையோர் பங்குடையாய், பரவை பசிவருத்தம் அது நீயும்
அறிதியன்றே" என்று உமையைப் பக்கத்தில் வைத்திருக்
கிறபடியால் பெருமானே! மனைவிகள் பசித்தால் கணவர்கள்
பொறார் என்பது நீர் அறிந்து ஈயும் என்னும் பொருள்
ஒலிக்கும்படியாயும் "பாக்கும் அரவல்குலாள் பரவையவள்
வாடுகின்றாள்" என்று பரவையார் வாடுவதைத் தெரியும்படி
யாகவும் பாடினர்.

6. பின்னும் ஆரூரர் திருமுதுகுன்றத்தில் சிவபெரு
மான் தந்த பொன்னை முத்தாற்றில் இட்டு ஆரூர்த் திருக்
குளத்தில் வந்து இருப்பதாகப் பரவையார்க்குச் சொல்லவும்
இருவரும் சென்று பரவையார் கரையில் நிற்க ஆரூரர்
குளத்தில் இறங்கித் தேடினர். காணமையால் 25ல் "பரவை
யார் வருத்தம் தீரப் பொன்னைத் தருவீர்" என்று பல
தடவை எம்பெருமானை வேண்டுகிறார். இத் தருவாயில்



பரவையாருடைய ஒவ்வொரு உறுப்புக்களையும் சிறப்பித்துப்
பாடினர்.

"மின்செய்த நுண்ணிடையாள் பரவை" என்று
அம்மையார் ஒடுங்கிய இடையைப் புகழ்ந்தார். "இவள்
முகப்பே என்செய்தவா றடிகேள்" என்று சிவபெருமான்
தமக்கு அருளியவண்ணம் பொன்னைத் தாராமை கண்டு,
தம்மைப் பரவை முன்னே என்ன செய்தீர் என்று தமக்கு
நேர்ந்த பழிப்பைக் குறிக்கின்றார். "வம்பமருங் குழலாள்
பரவை' என்று அவர் கூந்தலைப் போற்றினர். மைத்தாருந்
தடங்கண்" "கொங்கை நல்லாள் பையாரும் மரவேர் அல்கு
லாள்" "படியாரும் இயலாள்" "பந்தணவும் விரலாள்
பரவை" "விரைசேருங் குழலாள்" "பூத்தாருங் குழ
லாள்" என்று கண் கொங்கை அல்குல் குழல் விரல் இயல்
முதலியவைகளை எடுத்துக் கூறினர். இதிலிருந்து பரவை
யார் இயற்கை யழகில் மிகுந்தவர் என்றும் ஆரூரர் அவ்
வழகில் ஈடுபட்டிருந்திருந்தனர் என்றும் நன்கு தெரிகிறது.
பொன் வேண்டினதெல்லாம் இவ்வம்மையார் வாடுதல்
காரணமாகத்தான். அவர் நகையாடாமல் இருக்கவே "இவள்
தன் முகப்பே தந்தருளீர்" பொன்னை என்று வேண்டினர்.

7. சங்கிலியார். 45-ல் "சங்கிலி மென்றோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருளதே"
என்று தாம் சங்கிலியாரிடத்தில் பெற்ற வின்பம் சிவனரு
ளால் கிடைத்தது என்று நன்றி பாராட்டுகின்றார். 51-ல்
"நாயேனைப் பொருட்படுத்துச் சங்கிலியோ டெனைப்
புணர்த்த தத்துவனைச் சழக்கனேன், எங்குலக்கப் பிரிந்
திருக்கேன் என்னாரூர் இறைவனையே" என்று தம்மைச் சங்
கிலியாரோடு மணப்பித்தவரும் சிவபெருமானே என்று
குறித்து அவரை விட்டுத் தம்மால் பிரிந்து இருக்க முடியாத
தன்மையை எடுத்துக் காட்டினர்.

8. சங்கிலியார்க்குத் தாம் செய்த சூழல் தவறி திரு
வொற்றியூர் எல்லையைக் கடத்தலும் கண்ணொளிமறைந்தது.

இத்துன்பத்திற்குச் சங்கிலியார் காரணமாதலால் தம் துன்பத்தைக் கடவுளார்க்கு எடுத்துக்கூறுகையில் சங்கிலியாரையும் உடன் கூறினார். 54-ல் "கட்டனேன் பிறந்தேன் உனக்காளாய்க் காதற் சங்கிலி காரணமாக, எட்டினும் திகழும் திருமூர்த்தி பொன்செய்வான் அடியேன் எடுத்துரைக்கேன்" எனவும் "என்னிடர் யார்க்கெடுத் துரைக்கேன்" என்றும் சொல்லி வருந்துகிறார். தமக்கு இடர்தந்தபோதிலும் உயிர்த் தோழமை பூண்ட ஆரூர்ப்பெருமான்மேல் தமக்குள்ள அடங்கா அன்பு முன்னிழுக்க வடதிருமுல்லைவாயிலை அடைந்து பாடுகையில் (69-ல்) "தண்பொழில் ஒற்றியூருடையாய் சங்கிலிக்காஎன் கண்கொண்ட பண்ப! படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே" என்று தம் கண்ணைப் பறித்துக் கொண்டதற்குச் சங்கிலியார்தாம் காரணம் என்பதைச் சொல்லி முறையிட்டார்.

9. 46-ம் பாட்டில் தம் இருமனைவிகளுக்கும் தமக்கும் சிவனை பற்றுக்கோடு என்று அவர் எண்ணியிருந்ததைப் "பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரையுடையேன், உண்மயத்தவுமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்" என்று பாடிவெளியிட்டார். இதில் பரவையார் பண்மயமான மொழியில் பேசும் பெருமாட்டி என்று கூறுவதினால் திருவாரூர்ப் பிறந்த இவ்வம்மையார் இசையிலும் தேர்ந்து இருப்பாரோ என்ற ஐயம் எழுகிறது.

10. இப்படியாக இருமனைவிகளையும் பல தெய்வப் பாடல்களில் பாடிவைத்தார். பிறரைப்போல் தாமாக ஒரு பெண்ணைக் கலவியின்பத்திற்காகத் தேடிக் கொண்டிருந்தால் கடவுளைப் பாடும் பாடல்களில் அவர்களைச் சொல்லாரே. ஆனால் சிவபிரானே இடைநின்று தமக்கு இப்பெண்களைக் கிடைக்கச் செய்ததால் அத்தெய்வ மகளிரும் தேவாரத்தில் இடம் பெற்று விளங்கி, அன்பர்கள் வாயினால் அவர்கள் பெயர் பலமுறை சொல்லப்படும் பெரும் பேறு பெற்றனர்.



ஆஞ்ஞாடுறந்து தோற்றமுமில்லாச் சுடர்விடு சோதி (1-41-4) என்று கூறியது காண்க.

யாம் பாடக் கேட்டேயும் - இந்தச் சோதி (ஒளி)யைச் சார்ந்து உயிர்கள் மலத்தொடக்கு நீங்கவேண்டியவைகளாதலின் அந்தச் சோதியைப் பாடுதல் ஆணவமல நீக்கத்திற்குக் காரணமாயிருத்தல் பற்றிச் சோதியை யாம் பாட என்றார்.

துயிலுதல் ஆணவமலத்தில் அழுந்தலையும் துயிலுணர்தல் ஆணவமலப்பற்றை விட்டு நீங்குதலையும் குறிக்கின்றன. "கேசாய விசனு நீடாண வத்தரை—யேசாத மாயாடன்றூலே எழுப்புமே" என்று திருமந்திரம் 2163-வது பாட்டில் திருமூலர் கூறுதல் காண்க. கன்னிப் பெண்கள் ஒருவரொருவரை எழுப்பி உணர்த்துதல் ஒன்பது வைத்தவ சத்திகளும் ஒருவரையொருவர் அவரவர் தொழில் செய்யுமிடங்களாகிய தத்துவங்களுக்குரிய ஆன்மாக்களுடைய ஆணவ மலமறைப்பை நீக்குதலைக் குறிக்கிறது. பாட என்பது பாடுதலால் என்ற பொருளில் வந்தது. அதாவது யாம் பாடுதலாலுண்டாகும் ஒலிகள் கேட்டேயும்—என்பது கேட்கத்தக்க அவ்வளவு உரத்த ஒலியாயிருப்பினும் என்ற பொருளில் வந்தது. கேட்டுக்கொண்டிருப்பினும் என்று பொருள் கொள்வது பின் சொல்லப்படுகிற வளருதியோ என்பதற்கும் வன்செவியோ நின்செவிதான் என்பதற்கும் முரணாயிருக்கும். துயில் உணருமுன் கேட்பது முடியாது ஆதலின்—வளருதியோ - கண்வளருதியோ என்பது வளருதியோ என்று தலைக் குறைந்து வந்தது.

நின்செவி வன்செவியோ - வன்செவி என்பது கேட்காத செவி செவிட்டுச் செவி, மாதேவன் வார்கழல்கள் - 'மாதேவன்' முதல் 'ஈதே எந்தோழி பரிசு' வரை வீட்டுக்கு வெளியே நிற்கிற கன்னிப் பெண்களிலொருத்தி வீட்டுக்குள்ளிருக்கிற பெண்ணைப் பற்றிப் பிறபெண்களிடம் சொன்ன

கூற்றாக நாம் கொள்ளல்வேண்டும். 'ஏதேனு மாகாள் கிடந்தாள்' என்று படர்க்கையிற் கூறுதலும் 'ஈதே எந்தோழி பரிசு' என்று கூறுதலும் முன்னிலையில் 'யாம் பாடக் கேட்டேயும்' என்று சொன்ன பின்பு 'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய் வீதிவாய்க் கேட்டிலுமே' என்று கூறுதலும் அவ்வாறு கொள்ளுதல் பொருத்தமுடைத்தென்பதை நன்கு விளக்கும்.

விம்மி விம்மி மெய்ம்மறந்து - விம்முதல் என்பது ஏங்குதல். அது இங்கு தூங்கும்பொழுது மூச்சை உள்ளே வாங்குதலாலும் வெளியே விடுதலாலும் உண்டாகும் ஏங்குதலைக்குறிக்கிறது. மூச்சை உள்ளே வாங்கும் பொழுது வயிறு வீங்கலும், மூச்சை வெளியே விடும்பொழுது வயிறு குழிதலும் உண்டாகின்றன.

விழித்த பின்பே அழுதல் முடியுமாதலாலும் பின்னே மெய்ம்மறந்து என்று வருதலாலும் அழுதல் என்ற பொருள் பொருந்தாது. விம்மி விம்மி என்பது அடுக்குத் தொடர்.

ஏதேனும் ஆகாள் கிடந்தாள் - கண் விழித்து வீட்டுக் கதவைத் திறந்து தங்களுடன் சேர்ந்து சோதியைப் பாட வரவில்லையாதலின் ஏதேனும் ஆகாள் என்றார். என்னே என்னே அடுக்குத் தொடர்.

எந்தோழி பரிசு ஈதே - ஈதே என்பதிலுள்ள 'ஏ' இதுவா என்னும் வினாப் பொருளில் வந்தது. பரிசு—தன்மை.

எம்பாவாய் ஏல் ஓர் - எம்பாவாய்—எங்களுடைய பிரியமான தோழிப் பெண்ணே. பாவாய் என்பதற்கு எங்கள் கண்ணுள்ளிருக்கின்ற பாவை போன்றவளே என்று பொருள் உரைப்பினும் அமையும். எம்பாவாய், வீட்டினுள்ளே இருந்து கதவைத் திறந்து வெளியே வந்த கன்னிப் பெண்ணைப் பார்த்து வீட்டு முன்னிற்கின்ற கன்னிப் பெண்கள் சொல்லிய விளி மொழியாகும்.



ஏல் ஓர்—ஏல் ஏற்றுக்கொள் (Admit) ஓர்—ஆராய்ந்து பார் (Consider attentively and decide). சிலர் இவை இரண்டும் அசை நிலைகள் என்று கூறுகிறார்கள்.

அவை அசை நிலைகள் என்று தொல்காப்பியம் நன்னூல் இலக்கணங்களிற் கூறப்படவில்லை. ஓரும் என்பதும் உம் என்பதும் அசைகளாகக் கூறப்பட்டிருத்தலேயன்றி ஓர் என்பது அசை நிலையாகக் கூறப்படவில்லை. நாம் அவற்றை அசை நிலையாகக் கொண்டாலும் ஈண்டைக் கேற்பப் பொருள் சிறக்கவில்லை. மனோன்மணி, சாதாக்கிய தத்துவத்திற் றொழில் செய்யுஞ் சிவசக்தி. அச்சிவசத்தி தனக்குக் கீழேயுள்ள தத்துவங்களில் தொழில் செய்தற்குரிய சர்வபூததமனிச் சத்தியைப் பார்த்து "நீ நான் சொல்லும் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு ஆராய்ந்து துணிந்து உனது தத்துவ எல்லைக் கண்ணுள்ள ஆன்மாக்களுக்கு வேட்கை அறிவு செயல்கள் விளங்கும்படி தொழில் செய்" என்று ஏல் ஓர் என்பனவற்றிற்குப் பொருள் கொள்ளுதலே இப்பாட்டிற்கு ஏற்புடைத்தாய சிறப்புப் பொருளாம். ஓரறிவுரையைக் கேட்பார் அதனை ஆராய்தற்குமுன் அதனைப் பற்றுள்ளமின்றி (Prejudice) மனதிலே ஏற்றுக்கொள்ளுதல் இன்றியமையாது வேண்டப்படுதலின் அடிகள் முதற்கண் 'ஏல்' என்று கூறிப் பின் 'ஓர்' என்று கூறியருளினர். ஓர்தலின்றித் தத்துவங்களிலே தொழில் செய்யும் சக்திகளுக்கும் ஆன்மாக்களுக்கும் அருளொளி விளக்கமுண்டாகாதாதலின் அடிகள் ஓர் என்று கூறினர். "ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே" என்று அடிகள் சிவபுராண அகவலில் கூறியது காண்க.

ஏல் ஓர் என்ற இரண்டு சொற்களுக்கும் மேலே கூறப்பட்ட பொருள்களே முதல் எட்டுப் பாட்டுகளுக்கும் சமா

ஜப் பதிப்புத் திருவாசக உரையிலும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அதில் 8-வது பாட்டு முதல் 20-வது பாட்டு வரையிலுள்ள பாட்டுக்களில் வரும் ஏல் ஓர் என்பன அசை நிலைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவ்விடங்களிலும் இப் பொருள்களே பொருத்தமுள்ளன என்று கூ-வது பாட்டு உரையிற் கூறப்படும்.

“ லோகோபகாரி ”

# திருவாரூரர்

[பி. தியாகராஜ பிள்ளை பி.ஏ., எல்.டி.]

## IV

## சுந்தரரும் அவரைச் சார்ந்தாரும்

### (அ) இருமனைவியர்கள்

“ பேருரும் பரவைமனப் பிணக்கறவெம் பெருமானை
ஊருரும் பலபுகல வோரிரவிற் றூதனெனத்
தேருருந் திருவாரூர்த் தெருவுதொறு நடப்பித்தாய்
ஆரூர ! நின்பெருமை யயன்மாலு மளப்பரிதே.”

—இராமலிங்க அடிகள்

ஆரூரர் முன் சொன்னபடி தம்பாடல்களில் தாய் தந்தையர்களையும் தம்மை வளர்த்த அரசனையும் குறித்த தல்லாமல், தமக்கு நாடோறும் இன்பம் அளித்த பெண்பாலார் இருவராகிய பரவையார் சங்கிலியார் பெயரையும் தேவாரத்தில் தமிழர் என்றும் மறவாமல் இருக்கும்படி இடையிடை நுழைத்து வைத்தார். இம்முறைமை மற்றெந்தப் புலவரும் கைக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆரூரருடைய வாழ்க்கையே பலபல பாடல்கள் செய்ததற்குக் காரணமாகவும் இருந்தது. அதனால்தான் அவர் தம்மனைவி



விகாரத்தாற் றோன்றிய பூதத்துக்கு உத்தியுத்தாகிற சதாசிவாதி தெய்வமாவது யாண்டையதென் றொழிக. மண்முதற் சிவமீறாகிய முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அதிதேவதைகள் அணுபட்சமென்றும், அதிஷ்டான அதிஷ்டேயக் குறியாற் சாதாக்கிய தத்துவமளவும் சம்புபட்சமென்று உபசரித்துக் கூறப்படுமென்பதுஞ் சிவாகமத் துணிவாகலின் இது குருமுகமா யறிக. அணுபட்சங்களிற் சங்கற்ப ரூபமாய்ச் சிவசத்தி பதிந்து அதிட்டிக்கு முகத்தாற் பஞ்ச கிருத்தியமும் நடப்பதால் அது சிவசத்தி செய்யுங் கிருத்தியமேயாம். ‘மடற்கமல நறும்பொகுட்டி லாசிருக்குஞ் செந்துவர்வாய் மயிலே யுன்றன், கடைக்கணருள் பெற்றன்றோ மணிவண்ண னுலகமெலாங் காவல் பூண்டான், படைத்தனன்நான் முகக்கிழவன் பசுங்குழவி மதிமிலைச்சும் பரமன் றானுந், துடைத்தனன்’ னென்றும், ‘கரியுரி யாடைக்கடவுளுங் கார்நிற வண்ணங் கொண்ட, அரிபிர மாவு நின்னுசனைக்கா’ லென்றும் வருமாற்றானு மறிக—ஒடுக்கம் உதித்த அடை வெனஉரைப்பர் உணர்ந்து ளோரே - ஆக மூவகை மாயேயம் முப்பத்தாறும் ஒடுங்குங்காலந் தோன்றின முறையி லொடுங்குமென்று அறிவுடையோராற் கூறப்படும்.

‘தத்துவ மெண்மூன் றுஞ்சென் றான்மதத் துவத்தொ டுங்கு’ [சிவஞான சித்தியார், ii, 72] மென்று ஒரு செய்யுளால் ஒட்டிக் கூறினார் வழிநூலாசிரியரும். ஈண்டு மாயேயமலத்திற் கிலக்கணங் கூறப்புகுந்த ஆசிரியர் அதன்குணங் குறிகளெல்லாந் தொகுத்தும் விரித்தும் முன்னர் அவத்தை முகத்தாற் கூறுவது குறித்து ஈண்டுத் தோற்றமொடுக்க மொன்றே கூறி யொழிந்தார். ௨௭

இனிக் கன்ம மலத்தினது இலக்கணம் நான்கு செய்யுளாற் றெரித்துணர்த்துவான் தொடங்கினார்.

28. நண்ணியிடும் உருவதனுக் கேதுவாகி
நானாபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரும் ஆதலால் அனாதி யாகிப்
பலவாகி அணுக்கடொறும் படர்வ தாகி
எண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்றும்
இயல்பினதாய் மதிகதமாய் இருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலு மாறே. ௧௦

**(உரை)** நண்ணியிடும் உருவதனுக் கேதுவாகி-ஆன்மாக்களுக்குச் சரீரம் வந்து பொருந்துதற்குக் காரணமாய்ச் சுகதுக்க ரூபமாய்ப் பிராரத்தமெனப் பெயர் பெற்று அதிசூக்கும கன்மமாயும்; நானுபோ கங்களாய் - பலவிதமான புசிப்புக்களாகப் பாகப்படுத்தற்குக் காரணமாய்ப் புண்ணிய பாவரூபமாய்ச் சஞ்சிதமெனப் பெயர் பெற்றுச் சூக்குமகன்மமாயும்; நாசோற்பத்தி பண்ணி - பிராரத்தம் புசித்துத் தொலையுமிடத்தே உடன் தோற்றமாய் இதாகித ரூபமாய் ஆகாமியமெனப் பெயர் பெற்றுத் தூலகன்மமாகியும்; வருமாதலால் - இவ்வாறு தூல சூக்கும பரமாய் ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தமென மூவகையாய்ப் பிரவாகானாதியாய் வருதலால்; அனாதியாகி - மூலமலத்தின் காரியமாய் ஆணவமலம்போல் அனாதிபந்தமாய்; அற்றாகலினன்றே 'நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்பும்'போல 'மலகன்ம மன்றுளவா' [சிவஞானபோதம், ii, 7] மென்றார் முதனூலாசிரியரும். 'கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கு' [சிவஞான சித்தியார், ii, 39] மென்றார் வழிநூலாசிரியரும் - பலவாகி அணுக்கள் தொறும் படர்வ தாகி-இனம்பற்றி மும்மலத்தி லொன்றா யெண்ணப்பட்டும் அநேக ஆன்மாக்களிடத்துந் தனித்தனி அனேக பேதமாய்ப் பந்தப்படுங் குணத்திரவியமாகியும்; எண்ணிவரு மனவாசகன்மத்தா லியற்றும் இயல்பினதாய்-கன்மநாசத்தைக் குறித்து வந்த மனவாக்குக் காயங்களால் மேன்மேலும் ஈட்டப்படுஞ் சுபாவத்தையுடையதாய்; அற்றாகலினன்றே 'நில்லாமை முற்றுவித்து நீக்கவும்' 'தொல்லாய கன்மமெல்லாந்' துலைக்கவும் 'எல்லாமாய்த் தத்துவங்களிசைந்த' [சிவஞானசித்தியார், ii, 79] தென்றார் வழிநூலாசிரியரும்—மதிகதமாய் - பிரளயகாலமட்டும் புத்திதாரகமாயிருந்து; இருபயனும் பாவபுண்ணியமாய் - மூவித கன்மங்களும் ஒன்றாய்ச் சுகதுக்க விளைவு செய்யும் புண்ணிய பாவமாகிய சஞ்சிதமே சொரூபமாய்; புலர்காலை மாயை மேவிப் பொருந்தும் - குணந்தமான மத்திமப் பிரளய காலத்தில் மாயை தாரகமாகப் பொருந்தியுமிருக்கும்; இது கன்மமலம் புகலு மாறே - இவ்வாறு காரணத்தில் எழிலக்கணமுங் காரியமுகத்திற் றிரிவிதமாயு மிருப்பது கன்மமலம்.

புலர்கால மென்பதற்குச் சிருட்டி காலமெனப் பொருள் கூறுவாரு முளர். சிருட்டிகாலமெல்லாம் புத்திதாரகமாவதும், புத்தித் தத்துவங் காரணத்தி லொடுங்குங்கால் அதனோடுங்கூடப் பிரளயகாலத்து



யாங்காரமென்றும் பெயராம்;இவ்வாங்காரம் மூன்றும் முன்சொன்ன பிரகிருதியின் அவ்வியத்தமாகிய முக்குணங்களையும் புணரும்—திருந்தியசாத் துவிதம் விரித்தகுணம்-தைசதவாங்காரஞ் சாத்துவித குணத்தைப் புணரவே; மனம்புத்தி . . . விரிந்தே - அவ்விடத்தில் மனமும் ஞானேந்திரியமாகிய சோத்திராதிக ளைந்தும் தோன்றும்.

ஈண்டுக் கூறப்படும் அனந்ததேவ நாயனாராவது உருத்திரதேவ நாயனாராவது பிரவிருத்தரால் அதிட்டிக்கப்படும் அணுபட்ச கர்த்தாக்களன்றிச் சம்புபட்சமன்றெனவுணர்க. ஈண்டுத் தோற்றுவது அசுத்த மாயையில் அஞ்சு தத்துவமுங் கலையிலொன்றும் ஆக ஆறும் புருட தத்துவத்துடன் கூட்டி எழும் வித்தியாதத்துவமெனப் பெயராம். பிரகிருதியி னவ்வியத்தத்திற் றோன்றும் புத்தியும் அவ்வியத்தத்திற் றோன்றுங் குணமும் புத்தியிற்றோன்றும் ஆங்காரமுஞ் சாத்துவித தைசதபுணர்ச்சியிற் றோன்றும் மனமும் ஆக நாலும் அந்தக்கரணமென்பார் இவர்; மனத்தின் றொழில்விகற்பமே சித்தமென்பார். இனிப் புத்தி தத்துவத்தோடு அவ்வியத்தத்திற் றோன்றியது சித்தமென்றும் அது கூட அந்தக்கரணம் நாலென்றும் குண தத்துவத்தை அறுபது வகையில் மூன்றாகச் சேருமென்றுஞ் சொல்வாரு முளர். இவர் அறுபது வகையில் எட்டைமூன்றுங் கொள்ளாதாராம். இனி ஆங்காரத்தை அந்தக்கரணத்தி லொன்றாகவும் அறுபது வகையில் மூன்றாகவுங் கூட்டிய முறையே குணத்தையும் அந்தக்கரணத்தி லொன்றாகவும் அறுபதுவகையில் மூன்றாகவுங் கூட்டிச் சித்தத்தை மனத்துள் அடக்கி எட்டை மூன்றுந் தள்ளிச் சரிக்கட்டிக் கொள்வாருமுளர். ஆன்மதத்துவம் உச-ல் இங்ஙனங் கூறிய அந்தக்கரணம் நாலும் மனத்தோடு தோன்றிய ஞானேந்திரியமைந்தும் போக நின்ற பதினைந்து தத்துவமுந் தோன்றும் முறையும் இவையெல்லாம் ஒடுங்கும் முறையுங் கூறுதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பதாம். உகூ

27\. மன்னியகன் மேந்திரிய மானஇரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவரும் சத்தம்
தன்னைமுத லாகியதா மதமிகுமாத் திரைபின்
தருமிதனில் வான்அநிலம் அனல்புனல்மண் சத்தம்:

முன்ன தனில் வெளியாதி ஒன்றொன் றாகும்
முறையிலுறும் இருமையயன் முடிவா முன்னே
உன்னுசதா சிவராதி அதிபதிகள் ஒடுக்கம்
உதித்தஅடை வெனஉரைப்பர் உணர்ந்து ளோரே.

(உரை) அந்வயம். மன்னியகன் மேந்திரிய மான வாக்காதி - ஆன்மாவுக்கு அந்தக்கரணத்திடமாய்ச் சீவித்த இச்சையும் ஞானேந்திரியத் திடமாய்ச் சீவித்த ஞானமும் உன்முகமாய்க் கிரியை மேலிட்டு நிலைபெறுதற் கிடமாகி அக் கிரியை சீவிக்கும் இந்திரியமான வாக்காதி ஐந்தும்; இராசதம் வைகாரி சேர் மருவி வரும் - இராசத குணத்தில் வைகரியாங்காரஞ் சென்று மருவவே அவ்விடத்துண்டாகும்; சத்தந் தன்னைமுத லாகிய மிகு மாத்திரை தாமதம் பின் தரும் - கிரியை சீவித்தற்குக் காரணமாகிய தன்மாத்திரை யென்னுஞ் சத்தாதிகளைந்தும் தாமதகுணத்திற் பூதாதியாங்காரம் புணரவே அவ்விடத்துண்டாகும்; இதனில் - இந்தச் சத்தாதி ஐந்தினும்; வான் அநிலம் அனல்புனல்மண் - ஆகாசமுதற் பிருதிவி ஈறாகப் பூதமைந்தும்; சத்த முன்னதனில் . . . முறையிலுறும் - சத்தத்தில் ஆகாயமும் பரிசத்தில் வாயுவும் ரூபத்தில் தேயுவும் ரசத்தில் அப்புவும் கந்தத்திற் பிருதிவியுந் தோன்றும்; இருமை அயன் . . . அதிபதிகள் - பிருதிவிமுதல் ஆகாயமீறாகப் பூதமைந்திற்கும் பிரமாமுதற் சதாசிவர் ஈறாக ஐந்து அதிதேவதைகள் உளராம்; ஆக ஆன்ம தத்துவம் ௨௪ கண்டுகொள்க. ஈண்டுக் கூறப்படும் அதிதேவதைகள் அணுபட்சமன்றிச் சம்புபட்சமன்றென்றுணர்க. 'நீடு தேவர் நிலைகளும் வேண்டிடி, ஞடு மைம்பெரும் பூதமு நாட்டுவ, கோடி கோடி குறட்சிறு பூதங்க' [பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, 6] ளென்றும், 'அருள்மேவி லொருஅரும்பும் படைத்தளிக்கு மகிலாண்டத் தொகுதிகளே' யென்றும் இருப்பதால் அதிதேவதைகளை அணுபட்சமென்றல் யாதோவென மலையற்க. பிரம விட்டுணு இரண்டும் அணுபட்சமென்றும் ஏனைய மூன்றுஞ் சம்புபட்சமேயன்றி அணுபட்சமன்றென்றுங் கூறுவாருமுளர். அசுத்த மாயையில் அனந்ததேவராற் கலக்குண்ட பாகத்திற் றோன்றிய கலையில் உருத்திரதேவராற் கலக்குண்ட பாகத்திற் றோன்றிய பிரகிருதியிற் குணங்கார சையோகத்தாற் றோன்றிய சத்தாதியிற் கிரியையின்



மாயையை மேவுதலுமே கன்மத்திற் கிலக்கணமன்றி வேறில்லை யென்பது சிவாகமத்துணிவாகலின் இது குருமுகமாயறிக. 'புலர்ந்து போன காலங்கள் புகுந்துநின்ற திட'' [திருவாசகம், பிரார்த்தனைப் பத்து, 1] ரென்று புலர்தலைக் கழிதல்மே லேற்றிக் கூறினார் வாதவூரடிகளும். ௨௮

இனிக் கன்மங்கள் பரிணமிப்பது இத்துணைவிதமென்றும் அது பாகப்படுமாறும் அது சேறற்கு வாயிலும் அது புசிக்குமாறுங் கூறுமுகத்தால் பிராரத்த கன்மத்தை வலியுறுத்தற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

29. கன்மநெறி திரிவிதம்நற் சாதிஆயுப் போகக்
கடனெனவரு மூன்றும் உயிரொன்றிற் கலத்தல்
தொன்மையது மூல்லதுண வாகா தானும்
தொடங்கடைவின் அடையாதே தோன்று மாறித்
தன்மைதரு தெய்விகமுற் பௌதிகம்ஆன் மிகமாம்
தகையிலுறும் அசேதனசே தனத்தாலும் சாரும்
நன்மையொடு தீமைதரு சேதனனுக் கிவணூண்
நாடில்அதன் ஊழ்வினையாய் நணுகுந் தானே. ௧௧

(உரை) கன்மநெறி திரிவிதம்-'நண்ணியிடும் உருவதனுக் கேதுவாகிய பிராரத்தஞ் சுகதுக்கரூபமாயிருக்கினும் அது பரிணமிக்கும் ஊகந் தனித்தனி மூன்று விதமாயிருக்கும்; அது எதென்னில் - நற்சாதியாயுப் போகக் கடனெனவரும் - சுகமானது நல்லசாதி தீர்க்காயுள் வெகு போகமென மூவிதமாகவுந் துக்கமானது தீய சாதி அற்பாயுள் அற்ப போகமென மூவிதமாகவும் வரும்; மூன்றும் உயிரொன்றிற் கலத்தல் தொன்மை - இவ்வாறு இருவகை மூவிதமும் அநாதியே உயிரோ டொன்றா யிருந்தும் நல்லதிருக்கத் தீயது முன் வரவுந் தீயதிருக்க நல்லது முன் வரவுமாவது அவர்கள் ஆர்ச்சித்த முறைமையோவெனில்; அது மூல்லதுண . . . மாறி - கன்மங்கள் வன்மையென்மையால் அவை பாகப்பட்டமுறையாற் புசித்துத் தொலைவதொழிந்து தோன்றிய முறையிற் புசிக்க வாரா அவை புசிக்க வருந் துவாரமேதென்னில்; தன்மைதரு . . . தகையிலுறும்-தெய்விகத்தினாலும் ஆன்மாக்களாலுஞ் சடத்தினாலுமாக மூவிதப்படும், அவர்கள் தன்மைக்குத் தக்கது நடத்துந் தெய்விகமும் ஏனையதுபோல்

முன்னிலைக்கு வருமோவெனில்; அசேதன சேதனத்தாலுஞ் சாரும்-
சடசித்தென் றிரண்டுமே முன்னிலையாகத் தெய்விகஞ் சார்ந்தே
கூட்டுவிக்கும் ; இவண் ஊண் நாடில் - கன்மம் புசித்தலாவது சுக
துக்க மிரண்டு மறிவதே யாகலின் இறைவனறிந்து சடசித்து முன்
னிலையாய்க் கூட்டுவிக்கவும் அவனுக்கின்றி யதன்பின் பறியும் உயி
ருக்கே புசிப்பென்று கூறுவதேதென்னில்; நன்மையொடு தீமைதரு
சேதனனுக்கு - உயிர்செய்யும் இதாகிதங்களை இயல்பாக அறிந்து
அவற்றிற்கேற்ற சுகதுக்கத்தைக் கூட்டுவிக்கிற முதல்வன் அறியும்
போது விருப்பு வெறுப்பாக ஒன்றையும் அறியான், ஆகையால் அவ
னுக்கு அது புசிப்பாவதில்லை ; அதன் ஊழ்வினையாய் நணுகுந்தானே-
ஆன்மா அறிவிடத்து யாவையும் விருப்பு வெறுப்பாகவே அறிவா
னாகலின் அவ்விருப்பு வெறுப்பே கன்ம மலமென்று பெயராய்ச் சஞ்
சித பிராரத்தாகாமிய மூன்றிற்குங் காரணமாம்.

பிராரத்த கன்மத்தை வலியுறுத்து முகத்தாற் றிரிவித கன்மங்
கட்கும் மூலமாகிய கன்மமல மிதுவெனக் கூறியது நுண்ணுணர்வினால்
அறிக. நன்மை தீமைகளை இயல்பாகவும் அறிந்து அறிவிக்கும்பொருட்
டாகவும் அறிந்து இவனறியும் பொருட்டாகவும் அறிகிற முதல்வ
னது சுத்தாத்துவித நயத்தை விசாரிக்கில் ‘நன்மையொடு தீமைதரு
சேதன’னென்னுஞ் சொல்லே பதியை நோக்கின பொருளை மேற்
கொண்டுநிற்பதன்றிப் பசுவை நோக்கலின்மையின் அச்சொற்குப்
பசுவின் மேலேற்றிப் பொருள்கோடல் யாண்டையதென் றொழிக.

இனி ஆகாமிய கன்மத்தை வலியுறுத்து முகத்தாற் கன்மமல
மிதுவென்பதூஉம் அதன் காரியமாகிய திரிவித கன்மங்களது தோற்ற
முற் பிற்பாடுகளுங் கூறுவான் றொடங்கினார்.

30. மேலைக்கு வருவினை எதென்னில் அங்கண்
விருப்புவெறுப் பெனஅறிஅவ் விளைவும் எல்லாம்
மூலத்த வினைப்பயில்வாம் என்னின் நாம்என்
முற்றிஅதன் பயன்உனக்கு முளைக்கு மென்பர்
ஞாலத்து வினைகள்இரு திறனாகும் புந்தி
நண்ணாத வினைநணுகும் வினையெனவொன் றிரண்டாம்
எலத்தான் இதம்அகித மாம்இதனால் வழுவா(து)
எய்திடும் புண்ணியபா வங்க ளென்றே. ௧௨



**(உரை)** மேலைக்கு வருவினை எதென்னில் - பாகப்பட்ட கன்மம்
புசித்துத் தொலைந்தால் அதன்மேலும் வினையுண்டாவ தேதென்
னில் ; அங்கண் விருப்புவெறுப் பெனஅறி - மூலகன்மமாகிய விருப்பு
வெறுப்புத் தீராதிருப்பதால் அந்தப் பிராரத்தம் புசிக்கச்சே ஆகா
மிய கன்மமுளவாம் ; அவ் விளைவும் எல்லாம் மூலத்த வினைப்பயில்வாம்
என்னில் நாம்என் - திரிவித கன்மங்கட்கும் மூலமாய் விருப்பு
வெறுப்பென்ப தொரு கன்மமல முளதாகில் யானெனதெனப்படும்
ஆணவமலமே கன்மமலத்தைச் செலுத்துமென்ப தேதென்னில் ;
முற்றி அதன் பயன்உனக்கு முளைக்கு மென்பர்-ஆணவமலமே விருப்பு
வெறுப்பைச் செலுத்த அதுகாரணமாய்த் திரிவித கன்மமு முளவாகு
மென் றறிவுடையோராற் கூறப்படும் ; அற்றாகலினன்றே ‘பிடித்
தானது கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது’ என்றார் எமதா
சிரியரும்—ஞாலத்து வினைகள் இரு திறனாகும்-ஆன்மாக்கள் ஆர்ச்சிக்கப்
படும் ஆகாமியம் இதமும் அகிதமு மென் றிருவிதமாம்; புந்தி நண்ணாத
வினைநணுகும் வினையெனவொன் றிரண்டாம் - அவ்விரண்டுந் தனித்
தனி புத்திபூருவம், அபுத்திபூருவமென் றிரண்டாக விரிந்து நால்
வகைப்படும் ; திரிவித கன்மத்தினும் முந்தியது யாதென்னில்—எலத்
தான் இதம்அகித மாம் - கன்மமலமாகிய விருப்பு வெறுப்பினின்றும்
முதற்கண் இதாகிதங்களாகிய ஆகாமியமுளவாம் ; இதனால் வழுவா
தெய்தியிடும் புண்ணியபா வங்க ளென்றே - அவ்வாகாமியம் இவனை
விட்டு நீங்காமற் புண்ணியபாவங்களாகிய சஞ்சிதமாய்ச் சேரும்.

திரிவித கன்மத்தி லிரண்டுந் தோன்று முறை சொல்லவே சுக
துக்கமாகிய பிராரத்தம் அவ்விரண்டுக்கும் பின்தோன்று மென்பது
தானே போதருதலின் அது கூறாதொழிந்தார் நூலாசிரியர். ௩0

இனி, சஞ்சிதகன்மத்தை வலியுறுத்து முகத்தால் அவ்வினை
யின் தோற்றமும் அஃதொடுங்குமாறும் அதற்குபாயமுங் கூறுதற்
கெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

31. உற்றதொழில் நினைவுரையின் இருவினையும் உளவாம்
ஒன்றொன்றால் அழியாதூண் ஒழியா தொன்னின்
மற்றவற்றின் ஒருவினைக்கோர் வினையால் வீடு
வைதிகசை வம்பகரும் மரபின் ஆற்றப்

பற்றியது கழியும்இது விலையால் ஏற்கும்
  பான்மையுமாம் பண்ணுது பலிக்கும் முன்னம்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி சேரும்
  சேராதங் கதுமேலைத் தொடர்ச்சி யாமே. ௩௧

(உரை) உற்றதொழில் . . . உளவாம் - கன்ம சாசத்தைக் குறித்து உயிர்களிடத்து முதல்வனாற் பொருத்தப்பட்ட மனவாக்குக் காயங்களினாற் பிராரத்தம் புசிக்கச்சே எழாநின்ற இதாகிதமே புண்ணிய பாவமாகத் திரண்டு சஞ்சித கன்மமெனப் பெயராம்; ஒன்றொன்றால் அழியாது - ஒரு புண்ணியத்தினாலே ஒரு பாவம் அழியாது; ஊண் ஒழியாது - புண்ணியத்துக்குச் சுகமும் பாவத்துக்குத் துக்கமும் பிராரத்தமாகப் பாகப்பட்டுப் புசித்தாலொழிந்து தீராது; உண்ணின் - அவ்வாறு சுகதுக்கமாகப் பாகப்படுதற்கு முன்னமே அந்தப் புண்ணிய பாவத்தை நீக்குதற்கு உபாயம் விசாரிக்கில்; மற்றவற்றின் - புண்ணிய பாவமாகிய இரண்டில்; ஒரு வினைக்கோர் வினையால் விடும் - ஒரு சஞ்சித பாவத்துக்கு ஓர் ஆகாமிய இதத்தால் விடுதல் பிறக்குமாறு; வைதிக - வேதத்தும்; சைவம் - ஆகமத்தும்; பகரும் - இவ்விரண்டினும் அதற்குப் பரிகாரவிதி முதல்வனாற் கூறப்படும்; மரபின் ஆற்றப் பற்றியது கழியும் - அந்த முறையை விசாரித்து இன்ன பாவத்துக்கு இன்ன பரிகாரஞ் செய்யக்கடவோமென்று சங்கற்பித்துக் கொண்டு செய்தால் அந்தக் கன்மந் தீரும்; இது விலையால் ஏற்கும் பான்மையுமாம் - அது செய்தற்கு யோக்கிய னல்லாவிடிற் செய்வோரிடத்துத் திரவியங் கொடுத்துக்கொள்ளினுந் தான் செய்ததுபோலாம்; பண்ணுதும் பலிக்கும் - தன்னை யறியாமற் பிறரேனுந் தன்னைக் குறித்தோரிடங்களிற் செய்தாலும் அதுவுந் தான் செய்ததுபோலாம்; இனி இது முழுவதும் நீக்குமுறை எப்படியென்னில்—முன்னஞ் சொற்றரு நூல்வழியின் - சங்கரனையடையும் நன்மார்க்கம் நூல் [சிவஞானசித்தியார், viii, 22] என்றார் வழிநூலாசிரியருமாகலின், இறைவன் கூறிய மூலாகமப்படி சரியை கிரியாயோக முற்றுதலான விடத்து; வரின் - முதல்வனே ஆசாரியராகத் திருமேனி கொண்டுவந்தால்; மிகுதி சேரும் - அநாதி மறைப்பாகிய மூலமலமும் அதுசார்பாய்த் தோன்றும் ஆகாமிய வினையும் முதல்வனது ஞான சத்தியினாற் தீரும்; அது பாகம் வரும்படி சுக



துக்க விளைவுக் கேதுவாகிய சஞ்சித வினையும் அதற்காதாரமாகிய மாயை மாயேயமும் அத்துவா சுத்தியோடொன்றாய் முதல்வனது கிரியாசத்தியா னீங்கற்பாலதேயாம். அற்றாகலினன்றே 'தோன்றிநுகராதவகை முற்செய் கன்மத் துகளறுத்திங் கத்துவாத் அடக்கறவே சோதித்' [சிவஞானசித்தியார், viii, 10] தென்றார் வழிநூலாசிரியரும்—அங்குச் சேராது - சத்திநிபாதம் பிறந்து குருவருள் பதியாதவிடத்துச் சஞ்சித கன்மம் நீங்காது; அது - அந்த வினைக்கீடாகிய செனனமரண துன்பம்; மேலைத் தொடர்ச்சியாமே - மேன்மேலுந் தொடர்ந்து வரும்.

'முன்னஞ் சொற்றருநூல் வழியின்வரி' னென்றதற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது, 'வைதிக சைவம் பகரு மரபினாற்ற' வென்றதற்குச் சொன்ன பொருளையே இதற்கும் பொருளெனக் கூறுவாருமுளர். அது கூறியது கூறுங் குற்றமுமாம். அது தோற்றமொடுக்கஞ் சொல்லி வந்த துறைமுற்றுங் கூறாது இடையே வழுவுதலாற் குன்றக் கூறலுமாமாதலால் நூலாசிரியர் கருத்து அவ்வாறன்றென வுணர்க. இதனாற் சஞ்சிதகன்மத்தை வலியுறுத்து முகத்தாற் பிரிவித கன்மத்திற்குந் தோன்று முறை ஒடுங்கு முறை கூறியவாறு நுண்ணுணர்வா லறிக. ௩௧

ஈண்டு நான்கு செய்யுளாற் கன்மமலத்தினது காரண காரிய விலக்கணங் கூறிய ஆசிரியர் இனி ஒரு செய்யுளால் மேற்கூறிப் போந்தவை யெல்லாம் அனுவதித்துக் கொண்டு பாசமாவது இத்துணைப்பகுதி யென்பதூஉம், அதன் றொழி லிதுவென்பதூஉந் தொகுத்துக் கூறுவான் தொடங்கினார்.

32. மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
  மூலஆணவம்ஒன்று முயங்கி நின்று
பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று
  பகர்மாயை ஒன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
  செயலாரு மாமாயைத் திரட்சி ஒன்றென்(று)
ஆகமலம் ஐந்தென்பர் ஐந்தும் மாறு(து)
  அருளென்ப தரிதென்பர் அறிந்து ளோரே. ௩௨

(உரை) மோகமிக . . . ஆணவமொன்று - ஆன்மாக்கடோறும் அநாதிசையோகமாய் அவாவே சொரூபமாய் நிற்கும்

மூலமலத்தின் காரியமாகி மிகுதியும் மயக்கத்தைச் செய்யும் ஆணவ
மல மொன்று ; முயங்கிநின்று பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று -
மும்மலத்துக்கும் அனுகூல சத்துருவாய் நின்று சேட்டிப்பித்
துப் பாகப்படுத்துஞ் சிவசத்தியை மலமென் றுபசரித்துக் கூறப்
படுந் திரோதாயி யொன்று ; பகர்மாயை ஒன்று - உருவாதி சது
விதமாப் பந்தஞ் செய்யுமென்று மேலே கூறப்பட்ட மாயைமல
மொன்று ; படர் கன்ம மொன்று - உயிர்தோறும் விருப்பு வெறுப்பு
ரூபமாய்ப் பொருந்தப்பட்ட கன்மமல மொன்று ; தேகமுறு கரண
மொடு - உயிர்தோறும் தனித்தனி வேறு வேறு முப்பத்தாருய்த்
தூலசூக்குமமென் றிருவகைத் தனுவாகியும் உட்கரணம் புறக்கரண
மென் றிருவித கரணமாகியும் ; புவன போக - ஏகநிலையாக முப்பத்
தாறு விதமாய் நிலைபெற்றுப் புவனமாகியும் போகமாகியும் ; செய
லாரு மாமாயைத் திரட்சி யொன்று-இவ்வாறு அசாதாரணம் சாதா
ரணமென் றிருவிதமாய் அனேகங் கூட்டரவாய் விரிந்து தொழிற்
படும் பெரிய மாயேயமல மொன்று ; ஆகமலம் ஐந்தென்பர் - இவ்
வாறு ஐந்துவித பாசமென்று சொல்லப்படும் ; அற்றாகலினன்றே
'இம்மல மூன்றி னோடு மிருமல மிசைப்ப னின்னு' [சிவஞானசித்தி
யார், ii, 86] மென் றெடுத்துக்கொண்டு மாயையின் காரியத்தை
மாயேயமல மென்றார் வழிநூலாசிரியரும். ஆகமங்களிற் சாமானிய
மாய் ஓரோரிடங்களில் ஒரியைபுபற்றிக் கூறும் வசனங்களைப்பற்றி
மாயேய மலத்தை மாயையி னடக்கி வயிந்தவ மோர் மலமெனக்
கூறுவாரு முளர். வயிந்தவமாவது அசுத்த மாயைபோலப் பரிண
மிப்பதின்றிப் படங்குடிலாவதுபோல விரிந்தொடுங்குவதாகலானும்
அது மாயேயமலம் முப்பத்தாறு விதமெனக் கூறுவதில் ஐந்து வகை
யாய் அதனோடு சேர்ந்துவருமாகலானுஞ் சுத்த மாயையில் மலரகித
னுக்கன்றி மலசகிதனுக்குத் தொழிலின்மையானும் வழிநூலாசிரி
யர்க்குத் திருநாமஞ் சகலாகம பண்டிதராகையானும் அந்நூலைப்
பகைத்துப் பொருள்கோடல் மிகையாமென் றொழிக. அந்நூற்குச்
சித்தாந்த சிரோமணியாகிய நமது சிவஞானச் செல்வராற் செய்யப்
படும் பொழிப்புரையில் அது வரையறுத் துரைசெய்ததுங் காண்க.
அற்றேற் காரண காரியங்கட்குத் தம்முட் பேத மின்மையின்
மாயேய மலமு மாயையினடங்கவுமாகுமேயென்னில், மும்மலங்களினு
மியைந்துநின் றேவுஞ் சிவசத்தி பராசத்தியி னடங்குமாயினுந்



என்று அழைத்தார். அதனாலேயே பதினொராந் திருமுறை
யில் இறைவனது திருமுகப் பாசுரத்திற்குப் பிறகு
அம்மையாருடைய பதிகங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அம்
மையார்,

> "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
> சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
> மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
> எஞ்ஞான்று தீர்ப்ப திடர்."

என்று தாம் அனுபவித்த விதத்தை அப்படியே பாடினர்.

அம்மையார் காலத்திற்குச் சிறிது காலங் கழித்தே தமி
ழகத்தில் சமயக்கிளர்ச்சி தோன்றலாயிற்று என்னலாம். 7-ம்
நூற்றாண்டின் தொடக்கமே சமயம் வளர்வுற்றகாலம். அதிலி
ருந்துதொடர்ந்த இரண்டல்லது மூன்று நூற்றாண்டுகளில்,
சமயகுரவர்களும்,பலநாயன்மார்களும்,ஆழ்வார்களும்இருந்து
சமயத்தை வளர்த்தார்கள். பலஅரசர்களும் (சிங்கணன் என்
னும் சோழ அரசன் முதலியோர்) சமயத் திருப்பணிகள்
செய்து சிறப்புற்ற காலமும் இதுவே யாகும். வைணவ ஆழ்
வார்கள் முதன் மூவரும் இருந்தனர். காழிப் பதியில் வந்
துதித்து இறைவனது அருளால் மூன்றும் வயதிலேயே
ஆசீர்வதிக்கப் பெற்று, தேவாரமாகிய இனிய மொழிகளால்
அவ்விறைவனை யேத்தித் துதித்த திருஞான சம்பந்தர் 7-ம்
நூற்றாண்டின் முதற் பாகத்தில் இருந்தார். அவர், தம்
காலத்திலிருந்த கூன்பாண்டியனது கூனைப்போக்கி, நீற்றைத்
தடவி அப்பாண்டியனை நின்ற சீர் நெடுமாறனாக்கினார். அவர்
பாடிய பாடல்களில் [1]இயற்கை வர்ணனைகளும், இறைவனது

---

குறிப்பு:—அவர் பலபாடி இருப்பினும் ஈண்டு உதாரணத்திற்
காக இரண்டு தருகிறேன்.

[1](க) ஆறுடு சடைமுடியன் அனலாடு மலர்க்கையன் இமயப்பாவை [ல்
கூறுடுதிருஉருவன் கூத்தாடுங் குணமுடையோன்குளிருங்கோயி

படவே அறிவு விளக்க மேற்கொள்ளுமாகையினாலே ; மூன்றவத்தை
யாதோவென்னில்—கேவல சகல சுத்தமென வுணர்க - கேவலமென்
றுஞ் சகலமென்றுஞ் சுத்தமென்றுங் கூறப்படும் ; கேவலாவத்தையி
னும் பாச நீங்குமோவெனில்—ஈங்குவரும் - கேவலத்தில் அதீதத்தி
னின்றே அஞ்சவத்தைப்படினுஞ் சகலாவத்தையினுஞ் சுத்தாவத்தை
யினுமே பாச நீக்கமுறுமாயினும் ஆண்டு அதிசூக்கும பஞ்சகிருத்திய
வுண்மையிற் பாசநீக்க முண்டென்றே கூறப்படும். அற்றாகலினன்றே
'கேவல மலத்தி னுண்மை' [அம்பலவாண தேசிகர் தசகாரியம், 7]
யென்றார் எமது ஆசிரியரும். அதனியல் ஏதோவெனில்—இன்றி
என்பதனை யாண்டுங் கூட்டுக.—கலாதியொடு இன்றி - கலாதியாகிய
போக சாண்டங்களோடு செயற்கை யில்லாதவனாய் ; குறியின்றி -
இச்சையில்லாதவனாய் ; உருவமின்றி - தேகமில்லாதவனாய் ; ஒன்று
மின்றி - ஒன்றினுஞ் சுதந்தரமின்மையிற் கர்த்தா அல்லனாய் ; மல
மன்றியொன்று மில்லையெனு மியல்பாய் - மலமேயா யிருத்தலாற்
செயல்களில்லாதவனாய் ; ஆங்கறிவை அறிவரியன் - அவ்விடத்துந்
தன்னைவிட்டு நீங்காது உடனாயிருக்கு மறிவை யறிதற்கு ஞானமில்
லாதவனாய் ; அறிகருவி அணையா - குணாதி போக்கிய காண்டங்க
ளோடுஞ் செயற்கை யில்லாதவனாய் ; அற்றாகலி னன்றே 'அராகாதி
குணங்களோடுஞ், செறிவில' [சிவஞான சித்தியார், iv, 38] னென்
றார் வழிநூ லாசிரியரும் ; இருண்மருவும் . . . வகையின்றி -
மலத்தைவிட்டு நீங்குதற்கோர் எதுவுமின்றி மலமேயாய் நிற்றலால்
இருளில் அலர விழித்திட்ட விழி பதார்த்தமொன்றையு மறியாத
முறைமைபோலப் போகத்திற் கொள்கையில்லாதவனாய் ; நித்த -
தோற்றக் கேடுக ளில்லாதவனாய் ; வியாபகமாய் - ஏகதேசத் தன்மை
யில்லாதவனாய் ; அங்கண் . . . நூலே - இங்ஙன மின்மைகூறிய
பத்துக் காரியமு மில்லாதவனாய் இருண்மலத்தி லழுந்தி நிற்பது கேவ
லாவத்தையென்று சிவாகமங்களிற் கூறப்படும்.

ஈண்டுத் தோற்றக் கேடுகளென்றது அறிதற்றொழிலின்மேற்று.
ஏகதேச மென்றது சுட்டுணர்வின்மேற்று. குறியின்றி யென்பதற்
கிச்சை யில்லாதவனெனப் பொருள்கூறியது, இச்சையைத் தொழிற்
படுத்துங் கலாதியோடு சார்வாய் வைத்தலானும், வழிநூலில் 'அறி
வில னமூர்த்த' [சிவஞான சித்தியார், iv, 38] னென்னுஞ் செய்யு
ளிற் குறியிலனென்பதற்கு எமது சிவஞானச் செல்வர் பொருள்



மேயபின்நற் றன்னுருவம் விளங்காமை விளக்கும் [ள்
மிகும்உலகந் தனில்என்னில் இவைவிடுங்கால் உணர்வு
தோயுநெறி இலதாதல் அறியாமை யெனநீ
சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே. கஎ

(உரை) அந்வயம். மாயைமுத . . . முதலெனவே - இரண்டு
மலமே யுள்ளனவென்போரிடத்தில் மாயை முந்தினதோ கன்மம் முந்
தினதோவென்று ஒருவன் கேட்கப் புகுமாயின் ; பனைவிதை மரபின்
மயங்கும் - பனை முந்தினதென்றும் அதன் விதை முந்தினதென்
றுங் கூற அறியாது மயங்கும் முறைபோலாகு மாகையால் இவ்விரண்
டுக்குங் காரணமாக மலமென ஒரு பொருளுண்டென்றே கூறவேண்டி
வரும் ; அது நிற்க—மன்னுஞ் சுத்தற்கும் மலம் எய்துநெறி யென்
சொல் - முன்பே பேரறிவுடையனா யிருக்குஞ் சுத்தனை இந்த மலங்
கள் வந்து பொருந்தக் காரணம் ஏதென்னில்; அதனியல்பாயின்-அது
சுத்தனிடத்திலே வந்து பொருந்துவதே இயல்பென்றால் ; முத்தி
யென்பதென் - அப்போது ஒருவரும் மோட்சமடைவார்க ளென்ப
தில்லை;அது மீண்டும்மீண்டும் வந்து பொருந்துமாகையால்இவ்விரண்டு
மலத்திற்கும் வேறாய் அனாதி பந்தமாய் ஒருமல முண்டென்றே கூற
வேண்டிவரும்—மற்றிவை நிற்க - இந்த எதுவும் நிற்க ; இருங்கலாதி
புணர்வாய் மேயபின் - கலையாதி தத்துவங்கள் இச்சா ஞானக்
கிரியைகளை விளக்கி அறிவைக் கொடுக்குமிடத்து ; நற்றன்னுருவம்
விளங்காமை - அப்போது தனக்குள்ள பேரறிவு பிரகாசியாதிருப்பா
னேன் ; விளக்கும் மிகும்உலகந் தனில்என்னில்-கலையாதிகள் பேரறி
வைத் தடைபடுத்திச் சுட்டுணர்வை விளக்குமென்னில் ; இவை
விடுங்கால் உணர்வுள் தோயுநெறி இலதாதல் - கலையாதி தத்துவங்கள்
நீங்கினவிடத்து ஒன்றையு மறியாதிருப்பானேன் ; அறியாமை -
அது அறியாமையென்று சொல்லப்படும் ; என நீ சொல்லியது மல
மென்பர் துணிந்துளோரே-நீ அறியாமையென்று சொன்னதுண்டே
அதுவே ஆணவ மலமென்றும் அதனுண்மையே கேவலாவத்தை
யென்றுஞ் சிவாகமத்துணி வுணர்ந்தோரால் கூறப்படும்.

இங்ஙனம் அனுமானப் பிரமாணத்தால் இரண்டு விதமாகவும்,
அனுபவப் பிரமாணத்தால் ஒருவிதமாகவுங் கூறி, ஆக மூன்று விதத்தா
லும் அயிக்கவாதசைவர் கூற்றிற் கிழுக்குண்மை கூறுமுகத்தால்

ஆணவ மலத்தினதுண்மை சாதித்து மேல் அது வலியுறுத்தியவாறு ...ண்ணுணர்விலு லறிக. ௩௫

இனி, ஆணவமலத்திற்குங் கேவலத்திற்குந் தம்முள் வேற்றுமை பெரிது முளதாதல் கூறுமுகத்தால் அம்மலத்தின் றொழில் வலிமை கூறி மேல் அது வலியுறுத்துதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. அங்ஙனம் அறியாமையென்று சொன்னதை மலமென்பதே நியமமாய்க் கொள்ளாது கேவலமே யென்றாலும் அல்லது உயிரின் குணமே யென்றாலும் படும் இழுக்கென்னையெனின்,

36. அந்நியபா வனைவைஉணர்த்தி அநந்நியமாய் நிறைந்த
அறிவறியா மையினானும் அருள்நிலவும் காலம்
தன்னில்அவ னேயாவு மாய்நின்ற தொன்மை
தாமுணர்த லானும்உயிர் தானெனவொன் றிலதாய்
மன்னியிடும் மலமாயை கன்மங்கள் மாறி
வந்திடும்இங் கிதுவழுவா ததனினால் மனத்தால்
உன்னரிய திருவருளை ஒழியமலம் உளதென்(று)
உணர்வரிதாம் அதனுண்மை தெரிவரிதாம் உனக்கே.

(உரை) அன்னியமா னவைஉணர்த்தி - கேவலத்தில் அறியாமையே சொரூபமாயிருந்த ஆன்மாவிற்குச் சகலத்தில் தனக்கன்னியமாயிருக்கிற அறிபதார்த்தத்தைச் சுட்டுணர்வால் விபரீத வுணர்வை விளக்குதலாற் கேவலம் நீங்குதலானும்; அநந்நியமாய் நிறைந்த அறிவறியா மையினானும் - அறிவுக்கறிவாய் வியஞ்சகமாய் நின்றறிவித்து இரண்டறநிற்குந் திருவருளை அப்போது அறியவொட்டாமல் மறைத்திருக்கையால் அறியாமை நீங்காமையானுங் கேவலத்திற்கு வேறாக மலமுண்டென்றே கொள்ளப்படும்; ஆகில் உயிர்க்குணமென்னலாமோ வெனில் - அருணிலவும் . . . முணர்தலானும் - உயிர்க்குணமாகில் ஒரு நாளும் நீங்காதிருக்கவேணும் அவ்வாறின்றி 'இருவினைச் செயல்க ளொப்பிலீசன்றன் சத்திதோயக் குருவருள் பெற்' [சிவஞான சித்தியார், iv, 40]ற காலத்து அந்த அறியாமை நீங்கித் தன்னிவிரண்டற்ற முதல்வ 'னுலகெலாமாகி வேறா யுடனுமாய்' [ஷ ii, 1] நின்ற முறைமையை அறிதலானும் உயிர்க்குணத்துக்கு வேறாக மலமுண்டென்றே கொள்ளப்படும்; அவ்வாறாய் ஒரு மலம் நின்று செய்யுங் கிரமமேதென்னில்—உயிர் தானெனவொன் றிலதாய்



கூறிய வாற்றானுமென் றறிக. இப்பத்துக் காரியமு மில்லாத இடங் கேவலம், அவையுண்டான இடஞ் சகலம், உண்டானவை நீங்கின இடஞ் சுத்த மென்றறிக. அற்றாகலினன்றே 'அறிவில னமூர்த்த' னென்றெடுத்துப் பத்துக் காரியமு மின்மை கூறினார் வழிநூலாசிரியரும். கலாதி, குணாதி, இச்சை, ஞானம், கிரியை, உருவம், முதன்மை, போகப்பற்று, அறிதற் றொழிலுண்டாத லொடுங்குதல், சுட்டுணர்வு ஆகப் பத்துக் காரியமுமில்லாம லிருப்பதே கேவலம். ஈண்டுக் கூறப்படுங் கேவலம் அநாதி கேவலமாகலிற் 'கேவ லந்தன்னுண்மை' [சிவஞான சித்தியார், iv, 37] யெனக் கூறிய கேவலம் இதுவென மலையற்க. கேவலமாவது, அநாதிகேவலம், காரண கேவலம், காரியகேவலம், நித்தியகேவலம், பிரளயகேவல மென்றைவகைப்படும். இதில் முன்னையது மலத்தினுண்மை; பின்னையது அதிசூக்கும பஞ்ச கிருத்தியவுண்மை; மூன்றாவது சாக்கிரத்தினின் றைந்தவத்தைப் படுமாறிகலிவருங் கேவலத்துண்மை; நான்காவது அதீதத்தினின்றே ஐந்தவத்தைப்படுந் தன்னுண்மை; ஐந்தாவது பிரளயகாலத்தில் மாயையி லொடுங்குமுண்மை யென்றிவ்வாறு கேவலலக்கணங்களைப் பிணங்காது மலைவறக் கொள்க. இனிச் சகலத்தினுஞ் சுத்தத்தினும் ஆண்டாண்டுப் படுங் கேவலங்களி னுண்மைகள் ஈண்டு விரிப்பிற் பெருகுமாகலின் அவற்றைக் குருமுகமா யறிக. ௩௩

பிரபஞ்சத்திற்கு வேறாக இறைவனில்லை யென்றும், உயிர்களில்லையென்றும், கன்மமில்லையென்றும், மாயையில்லை யென்றுஞ் சாதித்துத் தடைவிடைகளால் ஆண்டாண்டு வலியுறுத்திய ஆசிரியர் ஆணவமலத்தை அவ்வாறு தடைவிடைகளாற் சாதியாதொழிந்தமையின் ஆணவமல மென்பதொரு பொருளுண்டோ இல்லையோ வென்னுமையத்தின்கண் அயிக்கவாதசைவர் மதம்பற்றி நிகழும் ஆசங்கை நீங்குமுகத்தால் ஆணவமலத்தினுண்மை மூன்று செய்யுளாற் சாதித்துக் கேவலாவத்தையை வலியுறுத்துவான் தொடங்கினார்.

34. இன்மைமலம் மாயைகன்மம் என்றிரண்டே இறைதான்
இலங்குபல உயிர்களும்முன் புரிந்தஇரு வினையின்
தன்மைகளால் எவர்களுக்குந் தனுகரண புவனம்
தந்திடும்இங் கிதனாலே இருபயனுஞ் சார்ந்து

கன்மமெலாம் நேராக நேராதல் மருவக்
கடவுள் அருளாலெவையுங் கழித்திடுவன் அதனாற்
பின்மலமா னவைஅணுகா பெருகொளிமுன் புளதே
பெற்றிடுமென் றித்திறமென் பேசு மாறே. கசூ

**(உரை)** இன்மைமலம் - ஆணவமலமென ஒரு பொருளுண் டென்பதில்லை; மாயைகன்மம் என்றிரண்டே - மாயாமலம் கன்ம மலம் என்றிரண்டுமே யுள்ளன; இறைதான்-கர்த்தாத்தான் இயல்பாக அறிந்து; இலங்குபல வுயிர்களும் - அறிவுள்ளனவாகிய சர்வான்மாக் களும்; முன் புரிந்தஇரு வினையின் தன்மைகளா லெவர்களுக்குந் தனுகரண புவனம் தந்திடும் - முன்னே ஆர்ச்சித்த வினைக்குப் பின் னாலே தனுகரண புவனமூன்றுங் கொடுக்கும்; இங் கிதனாலே யிரு வினைப் பயனுஞ் சார்ந்து - அந்தத் தனுகரண புவனத்துவாரமாக வினைக் கீடாகிய சுகதுக்க மிரண்டும் பொருந்தும்; கன்மமெலா நேராக-இவ் வாறு புசித்து வரவே கன்மபரிபாகம் பிறந்து; நேராதல் மருவ - சத்திநிபாதம் பதிந்தவிடத்து; கடவுளரு ளாலெவையுங் கழித்திடு வன் - முதல்வன் தனது திருவருளினாலே மாயை கன்மங்களையெல் லாம் நீக்குவிப்பன்; அதனாற் பின்மலமா னவைஅணுகா - ஆதலால் முன்புபோலத் திரும்ப மாயை கன்மங்கள் வந்து பொருந்தா; அவை பொருந்தா தொழியவே—பெருகொளிமுன் புளதே பெற்றிடு மென்று-அநாதியே தனக்குள்ளபேரறிவு பிரகாசித்து அந்த அறிவிலே கலந்துவிடுமென்று பெரிய அயிக்கவாத சைவாகமங் கூறியிருக்கவும்; இத்திறமென் பேசு மாறே - அவ்வாறின்றி யதற்கு வேறா யொரு மலமும் அதனால் ஓர் அவத்தையு முண்டென்பதற்கு ஏது காரணம்? எனவே, அயிக்கவாத சைவர் கூறியதி லிழுக்கென்னை யென்பது கருத்து.

இனி அயிக்கவாத சைவர் கூற்றிற் கிழுக்குண்மை கூறுமுகத் தால் ஆணவமலத்தின துண்மை சாதித்துக் கேவலாவத்தையை வலி யுறுத்தற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௩௫

35. மாயைமுத லெனவினையின் பான்மைமுத லெனவே
மன்னுபனை விதைமரபின் மயங்கும்மலம் சுத்தற்(கு)
ஏயுநெறி யென்கொல்அதன் இயல்பாயின் முத்தி
என்பதென்மற் றிவைநிற்க இருங்கலாதி உணர்வாய்



மன்னியிடும் மலம் - அறிவே சொரூபமான உயிரை மறைத்து உயி ரொன் றொரு முதலை வேறு காணப்படுமாறின்றி உயிர்க்குணமே போலப் போதத்திலே நிலைபெற்று நிற்குமது மலமெனப்படும்; கேவ லத்திற்கும் இந்த மலத்திற்கும் வேற்றுமை ஏதெனில்; மாயை கன்மங் கள் மாறி வந்திடும் - கேவலமானது மாயை கன்மங்களாலே நீக்கப் பட்டு மாறிமாறி வரும்; இங்கிது வழுவாது - இந்த மலமானது மாயை கன்மங்களாற் கேவலம் நீங்கின காலத்தும் அந்த மாயை கன் மங்களையுந் தன்னோ டியைத்துக்கொண்டு விபரீத வுணர்வை விளக்கி நிற்பதன்றி நீங்காது; வழிநூலாசிரியரும் 'மாயை கொடு மலமொழிப் பன் முன்னே' [சிவஞானசித்தியார், ii, 52] என்று வரையறை செய்திருக்கவும் ஈண்டு இவ்வாறு கூறியது ஏதென்னில் உவர்சாணி கள் புடைவையிலுள்ள அழுக்கொடு சேர்ந்து அதை நீங்குந் தன்மை செய்விப்பதன்றி நீங்கி யொழியாதவாறுபோல மாயை கன்மங்களும் மலத்தொடு கூடி மலமாகவே நின்று அது நீங்குந் தன்மைக்குப் பாகம் வருவித்து அது நீங்குங்கால் அதனோடு தானுங் கூடவே நீங்குமென் றறிக. அற்றாகலினன்றே 'குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத், திரிமலமறுத்' [சிவஞானசித்தியார், iv, 40] தென் றார் வழிநூலாசிரியரும்—ஆதலினால் - கேவலம் சகலத்தாலே நீங்கும், இந்த மலம் கேவல சகல மிரண்டினும் பாகப்பட்டுச் சுத்த மொன் றினுமே நீங்கும். இதுவே அவற்றுட் பேதமென்றறிக—மனத்தா லுன் னரிய திருவருளை யொழிய - வாக்கு மனாதீத கோசரமாகிய முதல்வ னது திருவருளை உயிர் அறியாதபடி மறைத்ததுமன்றி; மலமுள தென்று உணர்வரிதாம் - மலமென்று ஒரு பொருளுண்டென்று தன்னையுங் காட்டாது; அற்றாகலினன்றே 'இருபொருளுங் காட்டா திது' [திருவருட்பயன், iii, 3] வென்றார் நூலாசிரியரும்—அத னுண்மை தெரிவரிதாமுனக்கே - பசுஞான நீங்கினா லன்றி அந்த மலத்தினுண்மையை அறியக் கூடாது.

இதனாற் கேவலத்துக்கும் மலத்துக்கும் பேதங் கூறுமுகத்தால் உயிர்க் குணத்துக்கு வேறாக மலமுண்டென்னச் சாதித்து அதன் றொழில் வலிமை கூறுவதோடு உடனிகழ்ச்சியாய்க் கேவலத்தியல்பு வலியுறுத்தியவாறு காண்க. ௩௬

இந்நான்கு செய்யுளில் முதற்கணொன்றாற் கேவலத்தின் வகை யும் அதன்பின் மூன்றாலும் அதன் விரிவுங்கூறிய ஆசிரியன் இப்

**(உரை)** அந்வயம். பைசந்தி உயிரிற் சேர்ந்து வந்தடைந்து - இனிப் பைசந்தி வாக்கானது உந்தித் தானத்திற் பிராணவாயுவோடுங் கூடவந்து பொருந்தி; பின்னமாய் - சூக்குமை வாக்காற் பிறந்த நாதத்தைப் பிராணவாயுவால் உந்தச் சன்னபின்னமாகச் சிதறி; வன்னங்கள் தோற்றம் வரும் அடைவு படவொடுக்கி - அது அக்கரங்களாகப் பிரிந்து தோன்றுமுறை பாகப்படுமளவில் அதைத் திரட்டி; மயிலண்டசலம்நேர் - மயில்முட்டை பஞ்ச வன்னங்களையும் உருத்தெரியா தடங்கிய முறைபோல் அக்கரங்களை யுருத்தெரியாத நாதரூபமாய் அடக்கிக் கொண்டு; சிந்தைதனி லுணர்வாகும் - இருதயத்தானத்தில் அறிவு பரிணமிக்கும்படி வந்து சேரும்; மத்திமைதான் - இனி மத்திமை வாக்கானது; வருமவை மருவும் உரு எவையுந் தெரிந்து - பைசந்தி வாக்காற் பின்னப்பட்டுத் திரண்டுவந்த நாதத்தை அட்சர ரூபங்களாக ஒழுங்குபெற நிறுத்தி; முந்தியிடும் . . . முழங்கியிடும் - அவைகளைப் பிராணவாயுவோடுங்கூடச் செலுத்திக்கொண்டு அறிவுருபமாய்ப் பரிணமித்துச் செவியிற் கேளாமல் ஓசை முழக்கமாய்க் கண்டத் தானத்தைப் பொருந்தும்; வைகரியில் உதானன் பந்தமுறும் - இனி வைகரிவாக்கானது உதானவாயுவோடுங் கூடப் பொருந்தி; உயிரணைந்து . . . தானே - மத்திமை வாக்காற் றோன்றிய பிராணவாயுவோடுங்கூடக் கண்டத்தானத்தில் வந்த மொழிகளைச் செவிக்குக் கேட்பதாய்க் கன்மத்துக் கீடாக நினைந்த பொருளடங்கிய மொழியாகச் சேர்த்துத் தோற்றுவிக்கும்.

இச்சை ஞானங்களை அகத்தே நின்று விளக்குந் தத்துவங்களை முற்கூறாது புறத்தே சிவிக்கும் வாக்கை முற்கூறியது எதெனை மலையற்க. சிவசத்தி அதிதேவதைகளைச் செலுத்த அதிதேவதைகள் சிவதத்துவங்களைச் செலுத்தச் சிவதத்துவங்கள் நாலுவாக்கையுஞ் செலுத்த வாக்குமூலமாக ஞானக்கிரியைகள் விளங்குவதாகலின் இது அனுபவத்தால் அறியற்பாலதேயாம். அற்றாகலினன்றே 'மூவகையணுக்க ளுக்கு முறைமையாய் விந்து ஞான, மேவின தில்லை யாகில் விளங்கிய ஞான மின்றாம்' [சிவஞானசித்தியார், i, 26]மென்றார் வழிநூலாசிரியரும்.

௫௮

இனிச் சிவசத்தி சித்துக்குணர்வுஞ் சடத்துக்குச் செயலுங் கொடுக்குமிடத்து அதற்கு வேறாய் நின்றோ உடனாய் நின்றோ செய்



விக்குமென்னும் ஐயத்தின்கண் நிகழும் ஆசங்கை நீக்குமுகத்தால் மாயேய மலங்களையேவுந் தன்மைகூறிச் சிவசத்தியின் பெருமையறிவிக்குமிடத்து உயிர்களோடுடனாய் நின்றறிவிக்கு மென்பதில்லை வேறாக நின்றே இவைகளைச் செயற்படுத்துதல் மாத்திரையே, உயிரறியுந் தன்மை யுண்டுபோலுமெனின்,

39\. இத்தகைமை இறைஅருளால் உயிர்அறியும் அறிவுக்(கு)
ஈடாக வாடாதே ஈரிரண்டில் உரைத்த
வித்தைமுதல் ஐவரான் விளங்கு ஞானம்
மேவியிடும் எனஉரைப்பர் அசுத்த மாயை
வைத்தகலை தான்மூல மலம்சிறிதே நீக்கி
மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப்
புத்திதரு வித்தையிடை நின்றறிவை உயிர்க்குப் [தே.
பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்

**(உரை)** இறைஅருளால் உயிரறியும்-உடனாகநின்றன்றி வேறாக நின்றறிவித்தல் கொண்டு உயிரறியாது; அதென்போலவெனில், விளக்கொளி கண்ணொளிக்கு வேறாக நின்று இருளை நீக்கியும் உடனாக நின்று கண்ணொளியோடு விளக்கொளியும் விரவிப் பதார்த்தங்களினுஞ் சென்று பற்றினாலல்லது விளக்கிலிருக்குங் கண்ணொளி தானே தனித்து இருளிலிருக்கும் பதார்த்தத்தை யறியாத முறைமை போலாம். அற்றாகலினன்றே 'அன்னிய மிலாமை யானு மறிவினுணிற்ற லானு, முன்னிய வெல்லா முண்ணின் றுணர்த்துவ னாத லானு' [சிவஞானசித்தியார், vi, 8]மென்றார் வழிநூலாசிரியரும்; 'காணவன்றே, பூண்கின்ற வண்ணல்தன் போதமல் லாதில்லை' [கட்டளைக் கலித்துறை, 4] யென்றார் சிற்றம்பல நாடியாரும். ஆனால் உடனாகநின் றறிவித்தலே போதும் வேறாக நின்றறிவித்தல் வேண்டாவெனின்—அறிவுக்கீடாக-உடனாகநின் றறிவை விளக்கிச் செலுத்தி அந்த அறிவு புறத்தே சென்றறிதற்தாக; ஈரிரண்டில் . . . உரைப்பர் - இங்ஙனங் கூறிய முறையே நாலு வாக்குக்களையும் ஐந்து சிவதத்துவங்களையுஞ் செயற்படுத்தியதனால் அறிவு பிறக்குமென்று சொல்லப்படும்; ஆகவே, உடனாயும் வேறாயு மிருவிதமாகச் சிவசத்தி நின்றறிந் தறிவித் துபகரித்தாலன்றி உயிரறியாதென மேற்கொண்டவாறாம். அற்றாகலினன்றே 'உள்ளும் புறம்பு மொழிவின்றி நின்றவன்

ளன்மை காட்டி' [இருபாவிருப., 20] யென்றும், 'அறிதரு சிவனே யெல்லா மறிந்தறி விப்ப' [சிவஞானசித்தியார், v, 1] னென்றுங் கூறி னார் வழிநூலாசிரியரும். 'காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்' னென் றும், 'அவனுமவற்றது விடையத்தை யுணருமென்றது' [சிவஞானபோ தம், xi] என்றுங் கூறினார் முதனூலாசிரியரும். காலவாக்குந் தொழிற் படிவிடத்து ஞானக் கிரியைகள் விளக்குமுறை எதென்னில்—அசுத்த மாயை யைத் திகலை தான்மூல மலஞ்சிறிதே நீக்கி - மேற் கூறிப் போந்த அசுத்த மாயா காரியமாய் அனந்ததேவராற் றோன்றிய கலை யானது ஆணவமலத்தைச் சிறிது நீக்குவிக்கும்; வாயில்களின் பயிலை - பஞ்சேந்திரியத் துவாரமாய்ச் சத்தாதி விடய ரூபமாய் வருஞ் சுகதுக்கத்தை; புத்திதர - பிரகிருதி மாயாகாரியமாய் உருத்திரதேவ ராற் றோன்றப்பட்டுப் பிரணவ பஞ்சாக்கரத்தாற் பஞ்ச கர்த்தாக்களா லேவப்பட்டுவரும் அந்தக்கரணங்களுட் புத்தித்தத்துவமானது சுகதுக் கத்தை நிச்சயம் பண்ணினவிடத்து; வித்தையிடை . . . லனைபுணரும் - கலையோடு தோன்றிய வித்தையானது ஆன்மாவுக் கும் புத்திக்கும் நடுவே நின்று சுகமிது துக்கமிது வென்றறியும்படி ஆன்மஞானத்தை விளக்குவிக்கும்; இதுவே ஞானஞ் சிவிக்குமுறை மையாம்—புனித சத்தி புணர்ந்தே - ஆணவத்தை நீக்கவும் ஆன்ம ஞானத்தை விளக்கவும் சுகதுக்கத்தை நிச்சயிக்கவுமாகிய தொழில் சிவசத்தியின் தொழிலேயாம் அனைத் சடமாகிய தத்துவங்களைச் செயற்படுத்தி அந்தத் தத்துவத் துவாரமாய்ப் புறம்பே நின்று அறி வித்தும் ஆன்மாவினுள்ளே நின்று இவைகளில் ஆன்மாவைச் செலுத்தி உடனாய்நின் றறிவித்தும் நிற்பது சிவசத்தியேயாம். ௩௯

இச்சா ஞானக் கிரியா சொரூபனுவ தெப்படி யென்னில் உயிர் அநாதி மறைப்புடைய றுதையால் ஞான முதித்ததின்பின் அந்த ஞானத்து ளடங்கிய இச்சையன்றி இச்சைவழி ஞானமில்லை யென் பது 'எத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி' யென வரு மாற்றா லறிக. அவையாவன:

40. பேசரிய அராகந்தம் கன்மத்துக் கீடாப்
 பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும் நியதி
தேசமிகும் அரசர்தரும் ஆணை செய்தி
 செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்கை போல



நேசமுறு தம்கன்மம் நிச்சயித்து நிறுத்தும்
 நிகழ்காலம் கழிகாலம் எதிர்கால மென்றே
ஓசைதர வருங்காலம் எல்லைபலம் புதுமை
 உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே. உஉ

(உரை) அராகந்தம் . . . பெருகுவிக்கும் - அராக தத்துவ மானது ஈசுர தத்துவத்தா லியக்கப்பட்டுக் கன்மத்தளவி லறிந்த ஞானத்தின் வழியே இச்சையைத் தொழிற்படுத்தும்; நியதி . . . நிறுத்தும் - இனி நியதி தத்துவமானது ராசாக்கினைபோல நின்று இச்சையைப் பாகப்படுத்தி ஆர்ச்சித்த கன்மத்தளவில் கிரியையை நிச்சயம்பண்ணி நிறுத்தும்; பேசரிய இறைசத்தி யுடனாய் நின்றே - இவ்வாறு இச்சாஞானக் கிரியா சொரூபனுதற்கு வாக்கு மனாதீத கோசரமாகிய சிவசத்தி மூன்றுபேத சத்தியாகி வேறாயும் உடனாயும் நின்று செலுத்தும்; நிகழ்காலம் . . . உறுவிக்கும் - ஓசையென் பது ஞானத்திற் கேதுவாகிய வாக்கின் மேலாய் ஞானத்தை யுணர்த்தி நின்றது—காலமானது ஞானத்தை விகற்பித்துக் கழி காலத் தெல்லையையும் எதிர்காலப் பலத்தையும் நிகழ்காலப் புதுமை யையும் விளக்குவிக்கும்; ஆக அஞ்சு தத்துவங்களுந் தொழிற்படலே ஆன்மாப் போகத்திற் கொள்கையுடைய னுவன்.

அத் தத்துவங்களுக்குப் போக காண்டமெனப் பெயர்புனைந்த தும் இத் தொழிலை நோக்கியெனக் கொள்க. ௪௦

41. ஐவகையால் உறுபயன்கள் நுகரவருங் காலம்
 அதுபுருட தத்துவமென் றறைந்திடுவர் அறிந்தோர்
மெய்வகைய கலாசத்தி தனின் இதற்கும் சுத்தி
 மேவியிடும் வகைதானும் விரும்பிய நூல் விளம்பும்
செய்வகையின் தொடர்ச்சியினுத் தோன்றுவிக்கும் குணத்தின்
 சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமாம் அவைதாம்
இவ்வகையிற் சாத்துவித ராசததா மதமாய் [தே.
 இயம்புவர்கள் ஒன்றிரண்டு குணம்இயற்கை உடைத்

(உரை) ஐவகையால் உறுபயன்கள் நுகரவருங் காலம்-கலை வித்தை அராகம் நியதி காலமென் றைந்து தத்துவங்களாலும் இச்சை ஞானங் கிரியை விளங்கிப் போகத்திற் கொள்கையுடையனுன அவதரத்துப் புருட தத்துவமென் றொருமல முண்டாம்; அதுபுருட தத்துவமென்

றமைந்திடுவ ரறிந்தோர்-ஆண்டு விளங்கிய போதநிலைக்குப் புருட தத்
துவமெனப் பெயர் அறிவுடையோராற் கூறப்படும்; அற்றாகலினன்றே
'போதநிலை முடிந்தவழி புக்கொன்றி யுடனுறை' [பெரியபுராணம்,
திருஞானசம்பந்தர், 1253] றென்றார் அருண்மொழித் தேவரும்;மெய்
வகைய . . . விளம்பும்-சுத்தாவத்தை யனுட்டானங் கைகூடுங்காலத்து
ஞானசாரியரால் அக்கலை முதலிய அத்துவாசுத்தி யடையுமிடத்துப்
புருட தத்துவமுஞ் சுத்தியடையு முறைமை சிவாகம விரிவிற் கூறப்
படும்; ஆறத்துவாவுஞ் சுத்தியடையுமிடத்துப் போகத்திற் கொள்கை
யுடையனாதல் செய்யும் புருட தத்துவமலந் தீருமதுவே புருடன்
சுத்தியடைதலாம்—செய்வகையின் தொடர்ச்சி-போகத்திற் கொள்
கையுடையனானபோது இச்சைஞானங்கிரியைகள் புறத்துச் சேலிக்கு
முறைமை எங்ஙனமெனின்; இங்குத் தோன்றுவிக்குங் குணத்தின்
சேர்வுபுரி பிரகிருதி - இத்தக் குணதத்துவமானது அனந்ததேவரால்
சுத்தமாயையிற் றோன்றுங் கலையினின்றும் உருத்திரதேவராற் றோன்
றிய பிரகிருதி மாயையானது ஆன்ம தத்துவத்திற்குக் காரணமாய்க்
குணத் திரட்சியாய்ப் பரிணமிக்கும்; திரிகுணமாம் . . . ராசததா
மதமாம் - அந்தக் குணதத்துவமானது பதார்த்தச் சார்வால் சாத்து
விதம் இராசதந் தாமதமென்று மூன்று குணமாகும்; இயம்புவர்கள்
. . . உடைத்தே - அவைமூன்றுந் தனித்தனி யிரண்டு குணங்
களை இயல்பாக வுடைத்தா யிருக்குமென் றறிவுடையோராற் கூறப்
படும்.

முறையே திரிகுணமுந் திரிபதார்த்தச் சார்வாக இருக்குமென்
பது அவ்வக்குணக் கிரியைகளினு லறியப்படும். அற்றாகலினன்றே
'குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிதமே யாக, விந்துவார்
சடையா னடிமா னந்த வெல்லையில் தனிப்பெருங் கூத்தின், வந்தபே
ரின்ப வெள்ளத்திற் றிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தா'
[பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், 106] றென்றார்
அருண்மொழித் தேவரும். அவ்வக் குணக் கிரியைகள் முன்னர்ச்
செய்யுளிற் கூறப்படும்.

சுக

இனி முக்குணங்களும் ஆன்மாவின் ஞானக்கிரியை இரண்டி
னுந் தனித்தனி மேலிட்டுத் தத்தங் குணங்களை விளக்கு முகத்தாற்
றனித்தனி இருவிதப்படுவது கூறுமுகத்தால் அதன் றொழில்களைப்
பிரித்துக் கூறுதற்கு எழுந்தது வருஞ் செய்யுளென்பதாம்.



42. அலகில்குணம் பிரகாசம் லகுதைவியா பிருதி
அடர்ச்சிமிகுங் கவுரவம்அ நியமம்இவை அடைவே
நிலவிவிடும் மும்மூன்றும் உயிரொன்றில் கலந்தே
நிற்கும்இவை நிறைபுலனின் பயன்எவையும் கவரும்
குலவிவரு போகங்க ளிடமாய் மாறாக்
குறைவில்ஒளி யாய்அலகில் புலனிடத்தில் ஒருமை
பலவகையும் உடையதாய்ப் பரனருளாற் புந்தி
பஞ்சாசற் பாவகமும் பரிணமிக்குந் தானே. ௨௪

(உரை) அலகில் குணம் - குற்றமில்லாத பதிச்சார்வான சாத்து
வித குணமானது; பிரகாசம் - ஆன்மஞானத்தில் மேலிட்டபோது
யாதொன்றை யறியுமிடத்துக் கூர்மையாக அறியும்படி ஞானத்
தைத் தடையில்லாது விளக்கும்; லகுதை - கிரியையின் மேலிட்ட
போது யாதொன்றைச் செய்யுமிடத்து மடிமை தோன்றா துன்முக
மாய் மகிழ்ச்சியை விளக்கும்; வியாபிருதி - இனிப் பசுச்சார்வான
இராசத குணமானது ஞானத்தின் மேலிட்டபோது விடயங்களில்
விரைந்து பற்றும்படி ஞானத்தைச் செலுத்தும்; அடர்ச்சி - கிரியை
யின் மேலிட்டபோது விடய பதார்த்தங்களை முழுவதுந் தனதாக
முயலும்படி செலுத்தும்; கவுரவம் - இனிப் பாசத்தின் சார்வாகிய
தாமதகுணமானது ஞானத்தின் மேலிட்டபோது யாதொன்றையறி
யப் புகுமளவில் மமதை மேலிட்ட மடிமையைச் செலுத்தி அறிவைக்
கீழ்ப்படுத்தும்; அநியமம் - இனிக் கிரியையின் மேலிட்டவிடத்து
யாதொன்றை முயற்சிக்கினும் மடிமையுள்ளீடாய விபரீதத்தை
நியமித்துத் துக்கத்தை அறிவிற் செலுத்தி நிற்கும்; இவை யடைவே
நிலவிவரும் - இந்த ஆறு குணமுந் தனித்தனி திரிவித குணத்தின்
காரியமாய் ஞானக்கிரியைகளின் மேலிட்டு நிற்கும்; மும்மூன்று முயி
ரொன்றிற் கலந்தே நிற்கும் - சாத்துவிதஞ் சுகவிளைவுக் கேதுவுந்
தாமதந் துக்கவிளைவுக் கேதுவும் இராசதம் இருதலைக்கும் உடனியைந்
தும் இவ்வாறு ஒன்பது குணமாக இச்சை ஞானங் கிரியைகளிற்
கலந்து மேலாடிநிற்கும்; இவை நிறைபுலனின் பயனெவையுங் கவ
ரும் - ஆன்மா இந்தக் குணத்தில் மிகுத்த குணமே சொரூபமாய்ச்
சத்தாதி விடயங்களை யறியும்; புந்தி குலவிவரு போகங்க ளிடமாய் -
புத்திதத்துவமானது சஞ்சிதத்தினின்றும் பாகப்பட்டு எதிர்ந்த சுக
துக்கங்கள் வந்து சார்வதற்கு ஓரிடமாய்; அலகில் புலனிடத்தில்

மாரூக் குறைவிலொளி யாய் - சத்தாதி விடயங்களை அறியப் புகுதற்குத் தடையில்லாத ஞானரூபமாய்; பலவகையும் ஒருமை உடையதாய் - பலவிதமாய் நிகழும் ஐயங்களை நீக்கிப் பதார்த்தத்தை நிச்சயித்தற்கு ஒருமைப்பாடுடையதாய்; பஞ்சாசற் பாவகமும் - சஙு௦ விதப் பாவகஞானமாய்; பரிணமிக்குந்தானே - அது சடமாவதற்கு இவ்வாறு ஞானமுளதோவெனில்; பானருளால் - சிவசத்தி சங்கற்பத்தால் இவ்வாறு செயற்படும். ௪௨

43. ஆனதனு வதனிலுறும் அநிலனையும் இயக்கி
   ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய்
யானலது பிறரொருவர் எனையொப்பார் புவியின்
   இல்லையெனும் இயல்பினதாய் இந்திரியம் புலன்கள்
தாம்நுகரும் அளவில்அதில் முந்தியுறும் இச்சை
   தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியும் தந்து
மானதமா னதுநிற்கும் சிந்தைநினை வையம்
   வந்துதரு மனமொழிய வகுப்பொணாதே. ௨௫

(உரை) ஆங்காரம் - ஆங்கார தத்துவமானது; ஆனதனு வதனிலுறும் அநிலனையும் இயக்கி - கன்மம் புசித்தற்காக உண்டாகிய தனுநிலைபெறும்படி தசவாயுக்களையுஞ் செலுத்திக்கொண்டு; நீங்காத அகந்தைக்கு வித்தாய் - விட்டு நீங்குதற்கரிய ஆணவமலக் கிரியைக்கு மூலமாய்; யானலது . . . இயல்பினதாய் - தன் குற்றத்தை அறியாது அபிமானஞ்செய்து தன்னை மிகவும் மதித்தற் கிடமாய்; இந்திரியம் . . . முந்தியுறும் - இந்திரியங்களில் விடயம்வந்து பொருந்துமளவில் ஆன்ம சிற்சத்தி அவ்விடயத்தை மோதும்படி முந்திச் செலுத்திக்கொண்டு நிற்கும்; மானதமானது - இனி மனதத்துவமானது; இச்சை தானுருவாய் - ஈசுர தத்துவத்தா லியக்கப்படும் அராக தத்துவத்தாற் செயற்பட்டு இச்சை சீவித்தற் கிடமாய்; சங்கற்ப சதாகதியுந் தந்து நிற்கும் - யாதொரு விடயத்திலும் வெகு விரைவாய்ப் பற்றிச் சங்கற்பங்களை விளைத்து நிருவிகற்பக் காட்சியை விளக்கி நிற்கும்; சிந்தைநினை . . . வகுப்பொணாதே - மனத்தோடிரண்டற்று மனத்தின் தொழில் வேறுபாட்டாற் சித்தமெனப் பெயர்பெறுஞ் சித்தமானது மனத்தாற் சங்கற்பித்த நிருவிகற்பக் காட்சியைக் கலக்கி ஐயம் விளைத்து நிருவிகற்ப மிரண்டிற்கும் இடைநிலத்தே விகற்பக் காட்சியை விளைத்து நிற்கும் அதுவும் மனத்தின் தொழிலென்றே கூறப்படும். ௪௩

அந்தக்கரணங்கள் நான்கில் மனம் இச்சை சீவித்தற்கும், புத்தி ஞானம் சீவித்தற்கும், குணங் கிரியை சீவித்தற்கு மிடமாம். ஆங்காரம் யானெனதென்று விகற்பித்துப் போதத்தை எழுப்பி நிற்றற் கிடமாம். சித்த மனத்துளடங்கும். ஆக நாலினுந் தோற்றமுறையாற் குணம் முதன்மையாயினுந் தொழில்முறையால் மனமே முதலாய்க் கொண்டு மனாதியென்று அந்தக்கரணத்திற்குப் பெயர் வழங்கப்படும். இவைகள் இவ்வாறென் றுணர்த்திய ஆசிரியர், இனி இந்தக் கிரியைகள் புறத்துச் சேறற்குத் துவாரமிவையென்பதுஞ் சென்றாற் பெறும்பய னிவை யென்பதும் உணர்த்து முகத்தால் வினை இருபது தத்துவங்களுஞ் செயற்படுமாறு கூறுவான் தொடங்கினார்.

44. சொன்னமுறை செவிதுவக்கு நோக்கு நாக்குத்
   துண்டம்இவை ஐந்திற்கும் தொகுவிடய மாக
மன்னியசத் தப்பரிச ரூபரச கந்தம்
   மருவியிடும் இவைஅடைவே வாக்குப் பாதம்
பின்னர்வரு பாணிமிகு பாயுவினோ டுபத்தம்
   பேசலுறும் ஐந்திற்கும் பிறங்கொலிகொள் வசனம்
உன்னரிய கமனதா னவிசர்க்கா னந்தம்
   உற்றதொழில் பெற்றிடுவ துண்மை யாமே. ௨௬

(உரை) சொன்னமுறை . . . ஐந்திற்கும் - சோத்திராதி ஞானேந்திரிய மைந்திற்கும் முறையே; தொகுவிடய . . . மருவியிடும் - ஆன்மா இந்த இந்திரியங்களில் நிலைபெற்று லறியும் விடயமாகச் சத்தாதி ஐந்தும் பொருந்தும்; இவை அடைவே - இந்த முறைமை பொருந்தித் தொழிற்பட்டால்; வாக்குப் பாதம் . . . ஐந்திற்கும் - வாக்காதியென்று சொல்லிய கன்மேந்திரிய மைந்திற்கும்; பிறங்கொலிகொள் . . . யாமே - வசனாதி ஐந்தும் பொருந்துந் தன்மையுண்டாம். ௪௪

45. முந்தியஐம் பூதங்கள் வானாதி யாக
   முயங்கியநற் செவிநாசி கண்ணாமெய்ம் முறையால்
இந்தவயி னின்றுவரும் ஐம்புலனும் உயிர்தாம்
   எய்தும்வகை தம்முருவின் இலங்கியிடும் புறத்து

வந்தடைய இடங்கொடுக்கும் நிரந்தரமாய் வானம்
வாயுமிகச் சலித்தெவையுந் திரட்டுந்தீ வெம்மை
தந்தவைசுட் டொன்றுவிக்கும் நீர்குளிர்ந்து பதமே
தரும்உரத்துத் தரிக்கும்இது தரணி தானே. ௨௭

(உரை) முந்தியஐம் பூதங்கள் வாறுதி யாக - முன்னே சொல்லப்பட்ட பூதங்கள் ஆகாசமுதலனைத்தும்; முயங்கியதற் . . . ளின்று - சோத்திரமுத லைந்திந்திரியங்களினும் பொருந்திநின்று; வரும் ஐம்புலனும் . . . இலங்கியிடும் - அவ்விந்திரியங்களில் வந்து சேரும் விடயத்தை ஆன்மா அறியும்படி தத்தமுருவாகிய இந்திரியங்களினின்று பகுத்தறிவித்து நிற்கும்; புறத்தும் - இவ்வாறு அகத்தே தொழிற்படுவதுமன்றிப் புறத்தே சாதாரண ரூபமாகவும் நின்று; வந்தடைய இடங் கொடுக்கும் நிரந்தரமாய் வானம் - ஆகாசமானது நிரந்தரமாக நின்று எவைக்கும் இடங் கொடுத்துத் தானும் அவ்விடத்து இருப்பு விடாது தன்னிலக்கணம் மற்றவையோடுங் கலவாது நிற்கும்; வாயுமிகச் சலித்தெவையுந் திரட்டும் - வாயுவானது சலிக்குங் குணமுந் திரட்டுந் தொழிலு முடைத்தா யிருக்கும்; தீ வெம்மை தந்தவைசுட் டொன்றுவிக்கும் - தேயுவானது சுடுங்குணமும் ஒன்றுபடுத்துந் தொழிலு முடைத்தாயிருக்கும்; நீர் குளிர்ந்து பதமே தரும் - அப்புவானது குளிருங் குணமும் பதந்தருந் தொழிலு முடைத்தாயிருக்கும்; உரத்துத் தரிக்குமிது தரணி தானே - பிருதிவியானது உரக்குங் குணமுந் தரிக்குந் தொழிலு முடைத்தாயிருக்கும்; நிரந்தரமாயென்னுஞ் செய்யுட்சொல் யாண்டு மியைந்து பொருள் விளங்குவதாற் பஞ்ச பூதங்களும் வியாபகமாம்.

பூதங்களுக்கு வியாபகங் கூறவே ஏனைய தத்துவங்களனைத்தும் வியாபகமென்பது தானே போதரும்.

46. இந்நிரையில் ஐந்துசுத்தம் ஏழ்சுத்தா சுத்தம் ௪௫
எண்மூன்றும் அசுத்தமெனும் இவைமுப்பத் தாறும்
மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடுந் துயர்தாம்
மருவும்உரு நிலையழிய வரும்பொழுது வரியார்



பன்னகம்அண் டசம்கனவு படர்வகையே முன்னம்
பகர்வரும் கலாதிநிலை பரவியசூக் குமமாம்
தன்உருவில் அணைந்துபயன் அருந்திஅரன் அருளால்
தரையினிடை வருமென்று சாற்று நூலே. ௨௮

(உரை) இந்நிரையில் - சுத்த மிசிரம் அசுத்தமாக மூவிதமுடைய வாய் அசாதாரண தத்துவஞ் சாதாரண தத்துவமென் றிரு வேறாய் அனேகங் கூட்டரவாய்த் தனுகரணமாகவும் புவனபோகமாகவும் விளங்கிய தத்துவங்களனைத்தும்; ஐந்துசுத்த . . . முப்பத்தாறும் - சுத்தம் ஐந்தும் சுத்தாசுத்தம் ஏழும் அசுத்தம் இருபத்து நாலுமாக முப்பத்தாறு வகையில் அடங்கும்; மன்னிய தத்துவங்களிடை - மலம் போகஞ் செய்யவும் மாயை பந்தஞ் செய்யவும் ஆகிய மூன்று மலத்தின் சத்திகளும் மாயேய மலமாகிய தத்துவங்களிடமாக நிலைபெற்று அம்மல சத்திகளையுந் தன்னையு மேவும்பொருட்டுத் திரோதான சத்தி சங்கற்ப ரூபமாக நிலைபெறுதற் கிடமாகிய தத்துவக் கூட்டங்களிலே; மயங்கி - ஆன்மாவின் அறிவு ஏகதேசப்படுகையால்; நெடுந் துயர்தாம் மருவும் - நெடுங்காலம் பெரிய துயரமாகிய செனனமரண துக்கத்தைப் பொருந்தும்; உருநிலை - சரீரத்தை நிறுத்திக்கொண்டிருக்கும் பிராரத்த கன்மமானது; அழிய - புசித்துத் தொலைந்தவழி; வரும்பொழுது - வேறே சுவர்க்கநரகங்களிற் புசிக்குஞ் சுகதுக்கம் பாகப்பட்டு எதிர்ந்தவுடனே; வரியார் பன்னகம் - சர்ப்பந் தோலுரித் தேகுவது போலும்; அண்டசம் - பறவை முட்டையை நீங்கிச் செல்வதுபோலும்; கனவு - புருடன் தூல தேகத்தை விட்டுச் சூக்கும தேகத்தைப் பொருந்திக் கனவின் பயனறிவதுபோலும்; படர்வகையே - இந்த மூன்று முறையே போல; முன்னம் பகர்வருங் கலாதிநிலை - மேற் கூறிப்போந்தவாறே கலையாதி பஞ்ச கஞ்சுகத்தாற் புருடனாகியவன்; பரவிய சூக்குமமாந் தன்உருவில் அணைந்து - தூலவுடம்பு போலக் கெட்டொழியாது சிருட்டிகாலமுதற் சர்வசங்கார காலமட்டும் நிலைபெற்றுத் தனக்காதாரமாயுள்ள சூக்கும தேகத்திலே நின்றும் பூதசாரசரீரம் பூதசரீரங்கள் தனக்குள்ள புசிப்பளவு வரவே அவற்றைப் பொருந்திக்கொண்டு; பயனருந்தி - சுவர்க்க நரகங்களிற் சுகதுக்கங்கள் புசித்து; அரன் அருளால் . . . நூலே - மீண்டுஞ் சிவசத்தி சங்கற்பத்தாற் பூமியின்கண்

அந்தச் சூக்கும வுடம்போடே வந்து கருப்பாசயத்திற் பொருந்துவ னென்று சிவாகமங்களுட் கூறப்படும்.

பன்னக மண்டசங் கனவு மூன்றுஞ் சரீரத்திரிவும் இடத்திரிவும் அறிவுத் திரிவுமென்று மூன்றாய்க் கூறுவாருமுளர். 'அரவுதன் றோ லுரிவு மக்கனவும் வேறு, பரகாயம் போய்வருமப் பண்பு' [சிவஞான போதம், ii, 9] மென்ற மூன்றுந் தூலவுடம்பு நீங்குதற்கும், 'குடா காய வாகாயக் கூத்தாட்' [டிை, டிை, டிை]டுச் சூக்குமவுடம்பு நீங்கு தற்கும் உவமையென முதனூலாசிரியர் கருத்தறிந்தியற்றுஞ் சிவ ஞான பாடியத்துக்கும், 'பன்னக மண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர், தன்னுதோல் முட்டை யாக்கை துறந்துசெல் வதுபோ' [சிவஞானசித்தியார், ii, 38]லென்ற வழிநூலாசிரியர் கருத்தறிந்தியற் றும் பொழிப்புரைக்கும் பகையாது மூன்றுஞ் சரீரத்திரிவென்றே பொருள்கொள்வது சிறப்பாம். அன்றியும் ஈண்டுச் சரீரத்திரிவு கூறத் துணிந்து நூலாசிரியர் இச்செய்யுள் முகத்து மூன்றையும் ஒன்றுக்கே யுவமை காட்டியதன்றி இடத்திரிவு அறிவுத்திரிவு ஈண்டுக் கூறப் புகுந்திலரென்பது இச்செய்யுள் நோக்கத்தானு மறிக. சூக்கும வுடம்பினின்றே தூலவுடம்பு வருமென்பது 'தூலமா முருவி னுக்குச் சூக்கும முத'லென்றும், 'விதிப்படி சூக்கு மத்தே யுருவரு'மென்றும், 'மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேகின் றென்னிற், கூறிய சூக்கு மத்தா' [சிவஞானசித்தியார், ii, 50, 49, 47] மென்றும் வழி நூலாசிரியர் விரித்தோதியவாற்றால் ஈண்டு விரித்திலர். அஃது ஆண்டுக் காண்க.

இனி மாறிப் பிறத்தல் சுவர்க்க நரகங்கட்கேகுதல் மாத்திரைக்கே யன்றித் தரையினிடை வருதல் அவ்வச்சார்பிலே தோன்றுதல் மர புடைத்தென்று நிகழும் ஐயம் நீக்குமுகத்தாற் செனன மரணத் துன் பம் இத்துணைப் பெரிதாகிய கொடிய துயரமென்பது விளக்குதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பதாம். ௪௯

47. தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கின்
ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்ப தென்றும்
ஊர்வபதி னைந்தமரர் பதினொன்றே நிலவா



மாற்றருநீர் உறைவனநற் பறவைகள்நாற் காலி
மன்னியிடும் பப்பத்து மானிடர்ஒன் பதுமா
ஏற்றியொரு தொகைஅதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே. ௨௯

(உரை) தோற்றியிடும் - அரனருளாற் றரையினிடை வருங்கால் அவ்வச் சார்பிலே வருவதேயன்றி ஈண்டு மாறுதல் பொருந்த முடைத்தன்று போலுமெனின்; அண்டசங்கள் - முட்டையினும்; சுவேதசங்கள் - வேர்வைகளினும்; உற்பீசம் - வித்துக்களினும்; சரா யுசங்கள் - பைகளினும்; நான்கிற் பாரில் துதைந்துவரும் - இந்த நான்கு தோற்றங்களினும் பூமியினிடத்தும் மாறிமாறிப் பிறந்துவரு மன்றி அவ்வச் சார்பிற்றேன்று மென்பதில்லை; இவற்றின் பேதங்க ளாவன—ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்பதென்றும்-தாபராதிகள் வித்தினிடத்துப் பத்தொன்பது நூறாயிர பேதமென்றும்; ஊர்வ பதினைந்து - ஊர்வனசாதிகள் பதினைந்து நூறாயிரமென்றும்; அமரர் பதினொன்றே நிலவா - தேவர்கள் வர்க்கம் பதினொரு நூறாயிர மென்றும்; மாற்றருநீர் உறைவன-நீர்வாழுஞ் சாதிகளும்; நற் பறவை கள் - பறவைச்சாதிகளும்; நாற்காலி - மிருகசாதிகளும்; மன்னியிடும் பப்பத்து-இந்த மூன்று வகை யோனியும் தனித்தனி பத்து நூறாயிர மென்றும்; மானிடர்ஒன்பதுமா - மானுடவர்க்கம் ஒன்பது நூறா யிரமென்றும்; ஏற்றியொரு . . . றெடுத்தே - ஆக எழுவகையினும் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதமும் மாறிமாறிக் கொள்ளி வட்டங் கறங்கோலைபோலத் திரிப்பின்றிப் பிறந்துழல்வதாம். ௪௭

48. இனையபல பிறவிகளின் இறந்துபிறந் தருளால்
இருவினைகள் புரிந்தருந்தும் இதுசகலம் அகலா
முனம்மருவும் இருபயனும் ஒருகாலத் தருந்த
முந்துறுக ருந்துபயன் அந்தமுற வந்த
வினையும்எதிர் வினையும்முடி வினைஉதவு பயனால்
நேராக நேராதல் மேவும் கால்முற்
சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே. ௫௦

(உரை) இனையபல . . . இதுசகலம் - மேற் கூறிப்போந்த எண்பத்துநான்கு நூறாயிரம் யோனியினுஞ் சிறைபட்டு மாறிமாறிப் பிறந்து நல்வினை தீவினைகளை ஆர்ச்சிப்பதும் பாகப்பட்ட வினைகளைப் புசிப்பதுமா யுழல்வதே சகலாவத்தையாம்; ஆகப் பதினொன்றேகால் விருத்தங்களாற் சகலாவத்தையின் வகைப்பத்திலக்கணமும் அதன் விரிவுகளுங் கூறிய ஆசிரியர் இனி ஒன்றேமுக்காற் செய்யுளாற் சுத்தாவத்தையின் வகை தொகுத்துக் கூறுவான் தொடங்கினார்—அருளால் - சிவசத்தி சங்கற்பத்தினாலே; ஒருகாலத்து அகலா முனம்மருவும் இருபயனும்-முன் காலங் கடந்து அனாதிபந்தமாயுள்ள இருவினையின் காரியமாய் விட்டு நீங்குதற்கரிய சஞ்சித கன்மமும்; அருந்த . . . வினையும்-புசிக்கிற முறைமைக்குப் பாகப்பட்டுச் சஞ்சிதமாகிய புண்ணியபாவத்தின் பயனாய்ப் புசித்தழிவதாக வந்த பிராரத்த கன்மமும்; எதிர்வினையும் - அந்தப் பிராரத்த நாசத்தில் உற்பத்தியாகும் ஆகாமிய கன்மமு மாகிய மூவகையும்; முடி வினைஉதவு பயனால் - சன்மார்க்கத்திற் கேதுவாகிய சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே முடிந்து; நேராக - இருவினை யொப்பு வந்தவிடத்து; நேராதல் மேவுங்கால் - மலபரிபாகம் பிறந்த காலத்து; முற் சினமருவு . . . மன்றே - முன் மலசத்திகளை ஏவி நின்ற திரோதான சத்தி காருணியத்தினாலே திருவருளாய்ப் பிரகாசிக்கும்.

திரிவிதகன்ம முடிதலாவது அதன் சத்தி கெட்டு ஆசாரியர் ஞானசத்தி கிரியாசத்திகளால் நீங்குந் தன்மை யுண்டாதல். இருவினை யொப்புக்கு வகை குருமுகமா யறிக. புண்ணிய பாவமிரண்டு மேற்றக் குறைச்சலின்றித் துலையொத்த விருவினையொப் பென்பாரும், அசுவமேதயாகப் புண்ணியப் பலனும் பிரமகத்திப் பாவப்பலனும் ஒருகாலத்துப் பாகப்படவே இரண்டும் புசியாது நசிக்குமென்றும் இவ்வாறு கன்மமெல்லாஞ் சமனாக ஏககாலத்திலே பாகப்பட்டுப் புசியாது நசித்தொழிதலே இருவினை யொப்பென்பாரும் இவ்வாறு தத்தமக்கு வேண்டியவாறெல்லாங் கூறுவாருமுளர். அதுவெல்லாம் போலியென்பது சிவஞானபாடியத்து இனிது விளங்கும். ஈண்டுக் கூறியது சிவபுண்ணிய முதிர்ச்சியால் இருவினையொப்பு வருமென்றும் மலபரிபாகத்தால் சத்திநிபாதம் வருமென்று மாதலால் ஒன்றுக்கொன்று காரணமாதல் நுண்ணுணர்வா லறிக.



உ

சிவமயம்.

3-மணி] சை. பு—1936—2. [மார்க்கு 100.

1. (a) பின் வருவனவற்றிற்குக் குறிப்புக்கள் வரைக:—

உளதில தென்றலின், அந்நியநாத்தி, சகசமலம், கலை, சதசத்து.

(b) பின் வருவனவற்றிற்கு உரைதருக:—

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ளம்
இலாடத்தே யைந்தவத்தை யெய்தும்—இலாடத்தே
அவ்வவ் விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றின் நீங்கலது வாங்கு.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னுள் இருத்தலால்—தன்னுணரும்
நேசத்தார் தம்பால் நிகழும் நதிநெய்போல்
பாசத்தார்க் கின்றும் பதி.

2. ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யாந்துணையான், தண்கடனீருப்புப்போல், இங்குளிவாங் குங்கலம்போல மலர் மணம்போல் தொக்கு—இவ்வுவமானங்கட்கு உவமேயங் காட்டித் தெளிவுறுத்துக.

3. சிவஞான போதத்து ஒன்பதாஞ் சூத்திரத்தினை வரைக. அஃது எவ்வியலைச் சார்ந்தது? யாது காரணம் பற்றி? அச்சூத்திரப் பொருளைப் பகுத்துணர்த்தும் அதிகரணங்கள் யாவை?

4. (a) மானதக்காட்சியின் இலக்கணம் யாது?

(b) மூவகைப் பக்கங்களையும் உதாரணங் காட்டி விளக்குக.

(c) தேவாசிரியன், உழவாரப்படை, கரண்டமலிதடம் பொய்கை, தமிழாளியார், காமசாரிகள் — இவற்றிற்குப் பொருள் வரைக.

6. (a) கொல்லாமை என்ற அதிகாரத்தின் வைப்புமுறை யாது? அதற்குரிய காரணம் யாது.

(b) வேண்டாமை யென்னுஞ் செருக்கு எதனைப் பயக்கும்? செருக்கு என்பதன் பொருளையுணர்த்தி இலக்கணமுங் கூறுக.

(c) 'சோகாப்பர்'—பொருள்யாது? இதனையொத்த இரண்டு சொற்களைத்தருக.

7. (a) அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
இன்புற் றார் எய்துஞ் சிறப்பு

இதன் பொருளைத் தெளிவுறுத்துக.

(b) ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு

இதற்கு விசேடவுரை வரைக.

(c) புறத்துறுப் பெல்லாமெவன் செய்யும் யாக்கை
யகத் துறுப்பன் பிலவர்க்கு

இதற்குப் பிறர்கூறும் உரையாது?
பரிமேலழகர்க்கு அஃதுடம்பாடாகாமை எக்காரணம் பற்றி?

(d) 'அந்தணர்'—இது எதுப்பெயராதல் யாங்ஙனம்? வேதாந்தத்தை அணவுவார என்று பொருள் கூறுதல் பொருந்துமா? ஆராய்க.

8. (a) சோதகன், போதகன், முத்திகன்—இவர்கள் யாவர்?

(b) சத்திதீக்ஷை என்பது யாது?

(c) சமயி, புத்திரகன், சாதகன்—இவர்களின் இலக்கணம் யாது?

(d) சிவனைக்குருவாக என் என்னுதல் கூடாது?

9. (a) விட்டுணுபதி, சட்டிதி, சாந்திகம், மௌட்டிகம், காமதம்—பொருள் கூறுக.

(b) திசிதனி னீராடற்க—இவ்விதிபற்றிய விலக்குக்கள் யாவை?

(c) பிச்சைகள் எத்தனை வகைப்படும்? அவற்றின் இயல்புகள் யாவை?

(d) சைவர் எத்தனை வகைப்படுவர்? விவரிக்க.

உ

சிவமயம்.

**2½-மணி] இ. சை. பு—1936—2. [மார்க்கு 100.**

1. ஐந்துபூதங்களின் உருவம், நிறம், தன்மை, தொழில் முதலியவற்றை உண்மைவிளக்கம் என்றநூல் எவ்வாறு விவரிக்கின்றது? கன்மேந்திரியங்களிலும் ஞானேந்திரியங்களிலும் இவை எவ்வாறு தொழிற்படுகின்றன? (15 மார்க்கு)

2. முப்பத்தாறு தத்துவங்களை முறையாக எண்ணிட்டுக் கூறுக. (10 மார்க்கு)

3. அம்பலவன் திருவுருவத்தில் பிரணவமும் ஐந்தெழுத்தும் இருத்தலை விளக்குக. (10 மார்க்கு)

4. பலரைப் புணர்ந்து திருட்பாவைக் குண்டென்றுங் கணவர்க்குந்தோன்றாத கற்பு; கண்டபடியே கண்டு காணாமை காணாமற் கொண்டபடியே கொண்டிரு: புலனடக்கித் தம்முதற் கட்புக்குறுவர் போதார் தலனடக்குமாமைதக—இவற்றின் பொழிப்புரையும் கருத்தும் வரைக. (15 மார்க்கு)

5. பொற்பணிபோல பேதப்பிறப்பிலதாயிருள் வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றி—இதன் கருத்தைத் தெளிவாக விவரிக்க. (15 மார்க்கு)

அகம்புற மென்றிரண்டா லர்ச்சனை புரியுமிந்தச்
சகத்தினிலிரண்டு மின்றித்தமோ மயமாகி யெல்லா
மிகழ்ந்திட மகிழ்ந்து வாழுநீர்மையார்போல ஞானம்
நெகிழ்ந்தகம் புறமெனுத செம்மையார் நன்மையாரே

இதன் பொழிப்புரையும் கருத்தும் எழுதுக. (10 மார்க்கு)